தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 119

தொல்காப்பியம்

எழுத்ததிகார மூலமும்
நச்சினார்க்கினியர் உரையும்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

சரசுவதி மகால் வெளியீட்டு எண். 119.

தொல்காப்பியம்

எழுத்ததிகார மூலமும், நச்சினார்க்கினியர் உரையும்.

பதிப்பாசிரியர் ;

பண்டித. வித்துவான்

திரு. இரா. கோவிந்தசாமி பிள்ளை

ஓய்வு பெற்ற சரசுவதி மகால் நூலகத் தமிழ் ஆராய்ச்சியாளர்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

1993] ❋ [விலை : ரூ 55

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற் பெயர்	:	தொல்காப்பியம்
பதிப்பாசிரியர்	:	பண்டித, வித்துவான் இராம. கோவிந்தசாமி பிள்ளை
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால்
வெளியீட்டு எண்	:	119
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு
வெளியீட்டுநாள்	:	நவம்பர், 1993
தாள்	:	14.2 கிலோ சேஷசாயி
நூல் அளவு	:	21x14 செ.மீ
பக்கங்கள்	:	566
படிகள்	:	1200
எழுத்து	:	12 புள்ளிகள்
அச்சிட்டோர்	:	லக்ஷ்மி பிரிண்டர்ஸ் தஞ்சாவூர்-9
புத்தகக்கட்டு		முழு காலிகோ
பொருள்	:	இலக்கணம்
ல	:	ரூ. 55-00

இரண்டாம் பதிப்பின் வெளியீட்டாளர் முகவுரை

இலக்கண, இலக்கிய வளம் மிகுந்த நமது 'என்றுமுள தென்றமிழ்' மொழியில் தொன்மையான பேரிலக்கண நூலாக விளங்குவது 'தொல்காப்பியம்' ஆகும்.

தொல்காப்பியரால் இயற்றப்பெற்ற தொல்-காப்பியம் ஒல்காப் பெரும்புகழ் உடையது. எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பெரும் பகுப்புகளைக் கொண்ட இவ்விலக்கண நூலுக்குப் பற்பல அறிஞர் பெருமக்கள் உரை வரைந்துள்ளனர். தொல்காப்பி-யத்தின் எழுத்ததிகாரத்திற்கு 'உச்சிமேற்புலவர்-கொள் நச்சினார்க்கினியர்' செய்துள்ள உரை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

1967-ஆம் ஆண்டு, சரசுவதிமகால் நூலகத்தால், தொல்காப்பிய எழுத்ததிகார மூலம் நச்சினார்க்கினியர் உரையுடன் முதற்பதிப்பாக வெளியிடப்பெற்றது. அந்நூல் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிக்கொணரப்படுகின்றது.

இந்நூலின் முதற்பதிப்பினைச் சிறப்பான முறையில் உருவாக்கித் தந்தவர், அமரர் பண்டித வித்துவான் உயர்திரு இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்களாவார்.

இந்நூலினை இரண்டாம் பதிப்பாக வெளிக்கொணரத் தேவையான நிதியுதவியை நல்கிய நடுவண் அரசுக்கு எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இந்நூலினை நன்முறையில் அச்சிட்டு அளித்துள்ள தஞ்சாவூர் இலக்குமி அச்சகத்தினருக்கு எனது பாராட்டுகள்.

இரண்டாம் பதிப்பாக வெளிவரும் இந்நூலினைத் தமிழ்கூறு நல்லுலகம் வரவேற்றுப்பயன் கொள்ளும் எனும் நம்பிக்கையைப் புலப்படுத்தி மகிழ்கின்றேன்.

தஞ்சாவூர்
21-11-93

இ. வேங்கடாசலம், இ. ஆ
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு),
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

சரித்திர வரம்புக் கெட்டாத முதற்சங்க இடைச்சங்க காலங்களில் சீரும் சிறப்புமுற்று விளங்கிய தமிழ் மொழியில் பண்டை இலக்கியங்கள் யாவும் கடலால் விழுங்கப் பட்டு மறைந்தன என்பது தமிழின் முதுமையறிந்தோர் கூறும் மரபு. இதைப் பகருமிடத்துக் காலஞ்சென்ற தாக்ஷிணாத்திய கலாநிதி மகாமகோபாத்தியாய டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்கள் ஒருசுவையான கற்பனை கூறுவதுண்டு. கடலை முற்றிலும் விழுங்கினார், அகத்திய முனிவர் என்று புராணம் கூறும். அந்தப் பழியைத் தீர்த்துக்கொள்ள எண்ணி முத்தமிழ் முனிவராகிய அகத்தியரால் பேணி வளர்க்கப்பெற்ற தமிழ் இலக்கியத்தை முற்றிலும் விழுங்கியதுபோலும் கடல் என்று ஐயரவர்கள் கூறுவார்கள். இற்றைக்கு எஞ்சியிருக்கும் பண்டைச் சங்கத் தமிழிலக்கியம் முற்றிலும் கடைச் சங்க இலக்கியங்களேயாகும் என்பது தமிழின் சரித்திர மறிந்தோர் கண்ட முடிவு. அவற்றுளெல்லாம் மிகவும் பழமை வாய்ந்ததும், சிறப்பு மிகுந்ததும் தொல்காப்பியமே என்பது ஐயப்பாடற்ற உண்மை. தொல்காப்பியம் மிகப் புராதனமான பேரிலக்கணமாக இருப்பதுமட்டுமன்றி, அதற்குப்பின் தோன்றிய இலக்கண, இலக்கிய நூல்களுக்குத் தாய் நூலாகவும் பண்டைத் தமிழ் மக்களின் உயர்ந்த பண்பாடுற்ற வாழ்க்கையைக் காட்டும் ஒரு கண்ணாடியாகவும் அமைந்துள்ளது. எழுத்துக்களாலமைவது சொல். சொற்களால் விளக்கப்படுவது பொருள். ஆகவே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று மூன்று பிரிவுகளையுடைய தொல்காப்பிய

நூல் தமிழ் மொழியின் எல்லா நிலைகளையும், முற்றிலும் கூறும் ஒப்பற்ற நூலாகும்.

செழிப்பு நிறைந்த செந்நெல் கொழிக்கும் கழனிக்கு நாற்புறமும் வேலி போலவும், தண்மையும் இனிமையும் பொருந்திய நீர் வெள்ளமிட்டோடும் ஆற்றிற்கு இருபுறமும் தடம் போலவும், பொருளின் செழிப்பும், சொல்லின் இனிமையும் மிகுந்த இலக்கியமென்னும் மொழிப்பெருக்கு கரை புரண்டு ஓடிச்சிதறாமல் குறித்த வழியிற் சென்று செயல்படுதற்கு இலக்கணம் இன்றியமையாததாகும். முன்னிருந்த இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு, அவற்றிலிருந்து தோன்றிய சேயாகவும், பின்வரும் இலக்கியங்களைத்தோற்றுவித்துவளர்க்கும்தாயாகவும் அமைந்திருப்பது இலக்கணம். அம்முறையில் தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய இயற்றமிழாசிரியர்கள் தொல்காப்பியம் காட்டிய வழியையே பின்பற்றியதுபோல, அந்நூலுக்கு எடுத்துக்காட்டாக நூல்கள் பல தமிழ் மொழியில் இருந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். தொல்காப்பியத்தில் காணப்பெறுகின்ற, "என்மனார், என்மனார் புலவர்" போன்ற சொற்கள் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன. அந்நூல்கள் இன்று காணப்படவில்லையாயினும் ஆராய்ச்சித்திறனால் அவற்றிற் சிலவேனும் கிடைக்கப்பெறும் நன்னாளே தமிழ் நாட்டின் பொன்னாளாகும்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்றநான்குஉரையாசிரியப் பெருமக்களும், மற்றும் பலரும் உரை தந்திருப்பினும் அவற்றுள் நச்சினார்க்கினியர் வகுத்த உரை தனிச்சிறப்பு வாய்ந்தது. இவ்வுரையுடன் கூடியதொல்காப்பியம்முன்னமேயே சிலரால் பதிப்பிக்கப்பட்டிருப்பினும், எங்கள்சரசுவதி மகால் நூல்நிலையத்திலுள்ள M. 623,626(a)(b) என்னும் எண்களையுடைய ஓலைச்சுவடிகளில், மற்றைப் பதிப்பு

களில் இல்லாத பல அரிய பாட பேதங்களும், விளக்கப் பகுதிகளும் காணப்பட்டமையின், அவ்வேட்டுச் சுவடிகளை ஆதாரமாய்க்கொண்டு இந்தப் பதிப்பை வெளியிடலா யிற்று. இதன் முதற் பகுதியாகச் சொல்லதிகாரம் இந்நூலகத்து 93-ஆவது வெளியீடாக 1962-ஆம் ஆண்டில் வெளியாயிற்று. தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஏற்பட்ட தாமதத்தால் இந்நூலின் இரண்டாவது பகுதி யாக எழுத்ததிகாரத்தை இப்பொழுது தமிழன்னையின் திருவடிகளிலே சமர்ப்பிக்கின்றோம்.

இந்நூலைத் திறம்படப் பதிப்பித்தும், இன்றியமை யாத பின் இணைப்பு முதலியவைகளைச் சேர்த்தும் இதனை வெளியிடும் பணியைத் திறம்படப் புரிந்த பண்டித வித்துவான் திரு. **இராம. கோவிந்தசாமி பிள்ளை** அவர்களுக்கு இந்நூலகத்தின் நன்றி பெரிதும் உரியதாகும்.

இந்நூலையும், இதுபோன்ற பல அரிய நூல்களை யும் சரசுவதி மகால் நூலகத்திலிருந்து வெளியிடப் பொரு ளுதவி செய்கின்ற தமிழக அரசாங்கத்துக்கு எங்கள் நிருவாகக் குழுவின் நன்றியை இங்குக் குறிப்பிடுவது எங்கள் கடமையாகும்.

சரசுவதி மகால்
நூல் நிலையம்,
தஞ்சை 14-11-1967.

O. A. **நாராயணசாமி**,
கௌரவ காரியதரிசி.

பதிப்புரை.

தொல் - எழுத்து - நச்சினார்க்கினியம்

திருத்தாண்டகம்.

வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவன்அவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன்
றானே.

— அப்பர்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம் என்பது பனம்பாரனார் பாயிரமாகும். இந் நல்லுலகத்தே என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டவனாகிய மலையத்தகத்திய மாமுனிவர் முதன் முதலில் முத்தமிழும் விரவிய முழு நூல்கண்டு அதற்கு அகத்தியம் எனப்பெயர் சூட்டினார் என்பர். முன்னூற்கும் மலயமுனி தன்னூற்கும், என்னும் அடிகளால் மலயமா முனிவர் நூல் காண்டற்கு முன்னரும் தண்டமிழ் நாட்டில் தலைசிறந்த நூல்களிருந்தனவெனல் புலனாம். இவ் வகத்திய முனிவர்பால் பாங்குறப் பயின்றவர் பன்னிருவ ராவர். அவருள் தொல்காப்பியர்,

'ஆனாப்பெருமை யகத்தியன் என்னும்
அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்'

எனப் பன்னிருபடலப் பாயிரத்துட் சிறப்பித்தோதப் பெறுவர்.

முதனூலாகிய அகத்தியத்திற்கு வழிநூல் கண்டனர் தொல்காப்பியர். தொல்காப்பிய மரபியலில் முதனூற்கும் வழிநூற்குமே இலக்கணம் காணப்பெறுகின்றது. புடை நூலுள் மும்மை நூற்களுக்கும் இலக்கணம் இயம்பப் பெற்றுள்ளது.

இத்தொல்காப்பியமானது எழுத்தும் சொல்லும் பொருளும் என மூப்பெரும் பகுதியினையுடைத்து. எழுத் தாவது எழுப்பப்படுவதால் எழுத்து எனப்பட்டது.

"உந்தி முதலா முந்துவளித் தோன்றித்
தலையினு மிடற்றினும் நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழும் நாவு மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்வகை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும்"

என்பது இந்நூல் பிறப்பியலில் கண்டது. எழுத்தென்றது யாதனை எனின் கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்து நிற்கும் ஒலியையாம். இஃது ஒலிவடிவம் வரிவடிவம் என விரு வகைத்தாம்.

"மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே"

என்பது கொண்டும் துணியப்பெறும். உரு என்றது மனன் உணர்வாய் நிற்கும்கருத்துப்பொருள். முதலும்சார்புமாகிய [illegible]த்துக்களைக்கொண்டு நூன்மரபு முதலிய ஒன்ப

தியல்களை ஓதிகாரமாகப் பகுத்துள்ளார். இவ்வதிகாரம் நன்கறிந்து சொல்லதிகாரம் உணர்தல்கூடும். இவ்வெழுத்ததிகாரத்திற்கு இளம் பூரணர் உரை கண்டுள்ளார். அஃது அச்சுவாகனம்ஏறிவெளிப்போந்துளது. இவ்வெழுத்ததிகாரவுரையும் மழவை மகாலிங்கையர் அவர்களும் யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களும் பதிப்பித்துள்ளனர். சில ஆண்டுகட்கு முன்னர் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகமும்பதிப்பித்துள்ளது. இந்நூலுரைகளைப் பெரிதும் ஆய்ந்து நல்லுரைகண்டு பதிப்பித்தவர் புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர் அவர்கள் ஆவர். அவர்கள் எழுத்து, சொல், பொருள், அதிகாரங்கள் ஆகிய மூன்றினையும் பதிப்பித்துள்ளனர். அங்ஙனம் இருட இத்தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியம் சரசுவதி மஹால் நூல் வெளியீடாக வரற்கியைபு என்னை எனில்,

அவற்றிடைக் காணப்பெறாத பல பாடாந்தரங்கள் காணப் பெறலானும் நச்சினார்க்கினியாருரையில் சொல் வகை செய்யப் பெறாது ஏட்டில் கண்டவாறே வரல் வேண்டுமெனும் கருத்துண்மையானும். இவ்வேடுகள் நாளடைவில் சிதைந்துவிடல் கூடுமாகையால் அவ் வேட்டின்கண் உள்ளவாறே வெளிவரின் தொல்காப்பிய உரைகளைத் துருவியாய்வார்க்குப் பெரிதும் பயன் படும் என்னும் நோக்கானும் நூல்நிலையக் கண்காணிப் பாளர் ஆணையானும் அச்சிற்பதிக்கலாயிற்று. நூல் நிலையத்தில் உள்ள சுவடிகள் பலவுள. அவற்றுள், எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் இரண்டுமுள சுவடி எண் 623 ஆம். இதுவே சிதிலமும் ஒடிவும் இராமபாணத் தொளையும் இல்லாததாயுடையது. இதனையும் ஏனைய ஒருசில ஏட்டுப்பிரதிகளையும் உற்றுநோக்கிப் படி எடுத் துக்கொண்டும் மழவை மகாலிங்கையர், சி. வை. தாமோதரம் பிள்ளை, சி. கணேசையர் முதலினோர் தம் அச்சுப்பிரதிகளையும் உடன் நோக்கிக்கொண்டும் ஒரு வாறாச் செப்பஞ்செய்து பதிப்பிக்கலாயிற்று.

இதற்குறுதுணையாய் நின்று படியெடுத்தல் ஒப்பு நோக்கல் செய்தவர் நூல்நிலையப்படியெடுக்கும்பண்பினர் திரு ப. இராசரத்தினம் அவர்கள் ஆவர். அச்சிற்பதிப் பிக்கும் போழ்துடனிருந்து திருத்தம் முதலிய பணி புரிந்தவர் என் மாணவியும் புதல்வியும் ஆகிய வித்துவான் திருவளர்செல்வி கோ. திலகவதியார் ஆவர். இவர்கள் எல்லாம் நலன்களுடன் நீடூழி வாழ்கவென வாழ்த்து கின்றேன்.

இந்நூலை விரைந்தச்சாக வேண்டுமெனத் தூண்டிப் பேரூக்கம் தந்தருளிய ஷை நூல்நிலையக் கௌரவ காரியதரிசிதிருமிகு.உ.அ.நாராயணசாமிஐயர்பீ.ஏ.பி எல். அவர்கட்குஉளமார்ந்த நன்றியும் வணக்கமு முரித்தாகுக.

இந்நூற்குப் பொருளுதவிபுரிந்த தமிழக அரசினர் அவர்கட்கு நன்றிசெலுத்தியமைகின்றேன்,

உற்றார் இலாதார்க் குறுதுணையாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமையுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்கு கிளர்ஒளி வானகம் தான்கொடுக்கும்
அற்றார்க்கு அரும்பொருள் காண்க ஐயாறன்
அடித்தலமே.

எனும் அப்பர் பெருமான் அருள் வாக்கின்படி ஒன்றுக்கும் பற்றா அடியேனையும் அகலை முதிர்ந்தநிலையில் இத் தொண்டில் ஈடுபடுத்தி முற்றுவித்தருளிய முழுமுதற் கடவுளின் திருவடித் தாமரைகளை முடிமேற்சூடி வணங்கியமைகின்றேன்.

இங்ஙனம்,
பண்டிதவித்துவான்
இரா.கோவிந்தசாமி பிள்ளை
முன்னாள் தமிழ்ப்பேராசிரியர்
சரபோசிமன்னர் சரசுவதிமஹால் நூல்நிலையம்

தஞ்சாவூர்
பிலவங்க கன்னித்திங்கள்
7—10—67

முகவுரை



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

(திருமூலர்)

உற்றிருந்த உணர்வெலா மானாய் நீயே
உற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளின் நல்லாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்டன் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ

(அப்பர்)

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும்செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவின் நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே

(குமரகுருபரர்)

மண்திணிந்த நிலனும், தீமுரணிய நீரும், வளித்தலை இய தீயும், விசும்புதைவருவளியும், நிலன் ஏந்திய விசும்பும் என்னும் ஐம்பெரும் பூதக்கலப்பாலாகிய இந்நிலவுலகில்

இயங்கியற்பொருளும், நிலையியற் பொருளும் என விரு-வகைத்தாம், இவை உயிர்ப்பொருளும், உயிரில்பொருளும் எனவிருபாற்றாக் கோடலுமொன்று. உயிரொடுற்ற நிலைத்திணை இயங்குதிணை அறிவு வகையான் அறுவகைப்படும். இவற்றினை உயர்திணை, அஃறிணை யெனப்பகுத்து, உயர்திணைப் பொருளே விழுமிது என மெய்ந்நூல் விளம்பா நிற்கும். இவற்றுள் மக்கட்பிறப்பே ஆறறிவுற்றுத் திகழ்வது. கீழ்ப்போன அறிவுடையன வாகிய ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர்கள் பூதபரிணாமத்தால் உற்ற உடலங்களுக் கேற்ப உணர்வாய் உற்று மனவுணர்வற்று நிற்கும். மன வுணர்வுற்ற மக்கட் பிறப்பினர்தாம் தக்கவின்ன தகாதன வின்ன என்று ஒக்கவுன்னும் மன உணர்வுடையராய், இறைவனாலருளியனவும் இறைவன் அருள்பெற்ற நிறை மொழி மாந்தராஅல் அருளியனவுமாகிய முதனூல் வழிநூல் களை யுள்ளவாறுணர்ந்து அவற்றில் கூறப்பட்ட அறமுத னாற்பொருளையும் நன்கினிதாப்பெற்றுப் பெறலரும் பேறுறுவர் என்பது சான்றோர் துணிவு.

உடல்—சடம், உயிர்சித்து. இவ்விரண்டன் கூட்டமே காட்சிப் பொருளாய்த் திகழ்வது உடலாரும், உயிராரும் ஒன்றுபட்ட விடத்தே உணர்வு மிளிர்கின்றது. ஆண் உடலுடன் உற்ற உயிர் ஆண் எனவும், பெண் உட லோடுற்ற உயிர் பெண் எனவும் படும். இவற்றினை ஆடூ -, மகடூஉ என்பர். இதனை யுயர்திணையின்பாற் படுத்தியே இயல் நூலார் ஆண், பெண் பலர்என முப் பாற்று ஆக்கி ஆட்சி செய்து, வழக்கும் செய்யுளும் என இருவகைப்படுத்தியுள்ளமை ஆயற்பாற்றாம்.

ஈர்வபதினொன்றாம் ஒன்பதுமாநுடம் என்பதனை யுமுற்றுநோக்கிப் பார்த்தல் வேண்டும். ஒன்பதுநூறாயிர யோனி பேதங்களுடையவர் மக்கட் பிறப்பினர். இவர்கள் தம் மனக்கருத்தைப் பிறர்க்கறிவித்தற்கும் அவர்தம்மனக்

கருத்தைத் தாம் அறிந்து கோடற்கும் கருவியாயமைந்தது மொழியாம். மொழி பலதிறப்படும். முன்னர் மூவறு மொழியுளும் எனவும். பத்தோடு ஒன்பது பாடை எனவும் வருவனகொண்டு பதினெட்டும், பத்தொன்பதும் ஆகக் கொள்வர். நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளையுடைய விக்காலத்தே எம்மொழியினும் விழுமிதாக்கொள்வது எது வென்றுன்னல் வேண்டும். விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கியனவற்றை யொழித்தலும் அறமென்பர். நூல் களால் அறுதியிட்டுரைப்பதே யறமாகும். இவ்வறம் இல் லறம், துறவறம் என விருவகைத்தாம். இந்நெறி நின்றவர் இகபர வின்பமுற்று முத்தியுறுவர்.

ஒலிவடிவு மொழிக்குறுப்பாகும்.

"மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியுநின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்கும் கருணை செய்தானே"

என்பதும்

"பண்டித ராவர் பதினட்டுப் பாடையும்"

என்பதும்

திருமூலர் திருவாக்காகும்.என்று மக்கள் பேசத் தொடங்கி னரோ அன்றுமுதல் நாகரிகம் வளர்ச்சியுறத் தொடங் கிற்று. உரைச்செய்யுளும், பாச்செய்யுளும் என இருவகை யாக இலக்கியங் கண்டனர்,இதன்பண்பே இலக்கணமாம், இலக்கணம் என்பது தன்மையெனும் பொருட்டாம். எழுத் தின் றன்மையும், சொற்றன்மையும், பொருட்டன்மையும் எனமூன்றாக்கி அவற்றிடை ஐந்தியல்கொண்டு பெருநூல் கண்டனர், திரணதூமாக்கினி யெனும் காரணப் பெய ருடைய தொல்காப்பிய முனிவர். இவரைப் பனம்பாரனார் கண்ட பாயிரத்தில் "ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்" எனச்சிறப்பித்துக் கூறல் நன்காயற் பாலதாம். பண்டைக்

காலத்தில் பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதிப் புரந்து வந்தனர் நூல்களை. இவ்வருந் தொண்டினைப் புலவர்பெருமக்களைக்கொண்டு தமிழ்ப் புரவலராகிய குறுநிலமன்னரும் பெருநிலமன்னரும் மேற்கொண்டு சீர்த்தியுற்றனர். நம்நாட்டில் தலைசிறந் தோங்கிய மொழி தமிழ்மொழி. இம்மொழியில் இலக்கண காலம், இலக்கிய காலம், இதிகாசகாலம், புராணகாலம், தோத்திர சாத்திரகாலம் ஆகப் பரிணமித்து நூல்கள் பல்கலாயின.

சமணர்கள் தம் சமயக்கொள்கையினைப் பரப்புவதன் மூலமாகத் தண்டமிழ் நூல் பல யாத்தனர். அவை நிகண்டு, இயல்நூல், காப்பியம் முதலியனவாம், கிருத்துவப்பாதிரியாரும் அங்ஙனமாகவே தொன்னூல் விளக்கம் (இயல்) தேம்பாவணி (இலக்கியம்) ஆயவை கண்டுளார். பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்-கீழ்க்கணக்காகிய நூல்களுக்கு இயல்நூலாக அமைந்தது தொல்காப்பியம் எனும் பேரியல் நூலேயாகும். இதன் அடிப்படையிலேயே வள்ளுவப் பெருந்தகையும் திருக்குற ளெனும் பெருநூல் கண்டுள்ளனர். தொல்காப்பிய இயல்நூலைத் தழுவியே யாத்துள்ளனர் என்பதற்குப் பரிமேலழகர் ஆண்டாண்டு எடுத்தாளும் எடுத்துக்காட்டுக் களே போதிய சான்றாகும். வள்ளுவனாரும் ''அகர முதல எழுத்தெல்லா மாதி – பகவன் முதற்றே யுலகு'' என முதற்பாத் துவங்கி 1330-ஆவது குறட்பா ''ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்—கூடி முயங்கப்பெறின்'' என முற்றுவிக்கின்றார். தொல்காப்பியம் முதற்சூத்திரம் ''எழுத்தெனப்படுவ. அகரமுதல, னகரவிறுவாய், முப்பஃ தென்ப சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே'' என்பதாம். இந்நூற்பா நுவல்வது முதல் எழுத்து முப்பது என்றும், உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு என்றும், முப்பதின் முதல் நின்றியங்குவது அகரம் என்றும் இறுதி யில் நின்று ஒளிர்வது னகரமெய் என்றும், அகரத்தையும் னகரத்தையும் ஒன்றுபடுத்தின் அன் என்றும், இறுதி நிலையதாம் என்றும் இஃது உயர்திணையில்

ஆண்பாலை யுணர்த்தும் என்றும் இவ்வாடவனே (புருடன்) நாற்பொருளை நன்காய்ந்து பற்றுபவன் என்றும் மக்கட்குறுதியென உயர்ந்தோரான் எடுக்கப் பட்ட பொருள் நான்கு. அவற்றினையே வள்ளுவனார் மாநிலத்திற்கு வழங்குவான் வேண்டி நூல் செய்தமைத் தனர் என்றும் பலவாறாகத் துருவியாய்ந்துரைத்துள்ள னர். இம்மு மதுரைத் தமிழ்ச்சங்கத்து மு. ராகவையங்கார் சுவாமிகள் வெளியிட்ட திருக்குறளுரை யாலறியக் கிடக் கும். தமிழ்மொழியிற் றலைசிறந்த இயல் நூல் தொல் காப்பியமும் தலைசிறந்த இலக்கியம் திருக்குறளும் ஆகத் திகழ்கின்றனவெனல் பல்லோர்கண்ட முடிபு.

இத்தொல்காப்பியப் பேரியல் நூலின் வழித்தாயே, வீரசோழிய முதலிய நூல்கள் வெளிப்போந்துள. அவை வருமாறு.

வீரசோழியம்:- இந்நூல் பொன்பற்றி தாவலன் என்னும் புத்தமித்திரனார் இயற்றியதாம். இந்நூற்குரை கண்டார் பெருந்தேவனாராவர். இந்நூல் கட்டளைக் கலித் துறைச் செய்யுளால் ஆயது. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையுடையது. வட மொழி இயலினையும் பெரிதுந்தழுவி ஐந்தியலும் ஒருங்கே உரைக்கப்பட்டுள்ளது. இருமொழியும் பெருகவுணர் வதற்கு வாய்ப்புடைத்தாயுள தெனல் ஒருதலை. இந்நூல் செய்தகாலம் சமணகாலம் என்பர். வீரராசேந்திரன் எனவும், விக்ரமசோழன் எனவும் பெயர் வழங்கிய வீர சோழன் காலத்தில் அவன்கீழ்ப் பொன் பற்றியூரில் சிற்ற ரசு புரிந்த புத்தமித்திர அரசனால் எழுதப்பட்டு அவ்வீர சோழனது பெயர் வகிக்கப்பெற்றது என்பர். கந்தபுராண நூலுக்கு முந்திய தென்பதுமுண்டு. இந்நூலாசிரியரும் உரையாசிரியரும் சமணசமயத்தினராய், ஒரே காலத்தவ ராவர். தொல்காப்பிய இயலையும், காவியாதரிசன இயலையும் பின்பற்றியது இந்நூலாம். நூற்றெண்பத்

தொரு கட்டளைக்கலித்துறையாலாயது என்பது பின் வருஞ் செய்யுளாலறியக் கிடக்கும்.

''தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் றான்மொழிந்த படிவீர சோழியக் காரிகை நூற்றெண்பஃதோ டொன்றின் திடமார் பொழிப் புரையைப் பெருந்தேவன் செகம்பழிச்சக் கடனாகவே நவின்றான் தமிழ்க் காவலிற் கற்பவர்க்கே''

குட்டித்தொல்காப்பியம் எனப்பெறும் இலக்கண விளக்கம்:

இந்நூலையும் உரையையும் இயற்றியவர் திருவாரூர் வைத்தியநாத நாவலர் ஆவர். வைத்தியநாத தேசிகர் எனவும் கூறப்பெறுவர். இது நூற்பா வென்னும் சூத்திரயாப்பாற் செய்யப்பட்டது. இந்நூல் இற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாகும். இவர் மாணாக்கர் படிக்காசுப் புலவர் முதலியோராவர். நன்னூல் சின்னூல் காரிகை அகப்பொருள் முதலிய வற்றிற்குப் பிற்பட்டது. ஆனால் ஐந்திலக்கணமும் ஒருங்கே யுரைக்கும் பெற்றியுற்றது. எழுத்தும் சொல்லும் நன்னூல் போலவும், பொருளதிகாரம் தொல்காப்பியம் போன்றும யாக்கப்பட்டுள்ளது. பலவேறுபாடு முடையது. 941 சூத்திரங்களையுடையது. நன்னூல் முதலிய நூல்களின் சூத்திரங்களை முன்னோர் மொழி பொருளைப் பொன்போலப் போற்றியனவாம்.

தொன்னூல் விளக்கம் : இதனை யாத்தவர் வீரமாமுனிவர் என்னும் கிறித்துவப் பாதிரியாராவர். இஃதும் ஐந்திலக்கணங்களை யறைவது.

முத்துவீரியம் : இது ஐந்திலக்கணங்களையும் முற்றவுணர்த்துவது. நூற்பாயாப்பால்யாக்கப்பட்டது. ஆயிரத்தைந் நூற்றறுபத்துமூன்று சூத்திரங்களை யுடையது. உறையூர் வித்துவான் முத்துவீர உபாத்தியாயராற் செய்யப்பட்டுக் கருத்தனாற் பெயர்தாங்கியுள்ளது. இதற்குரைகண்டார் திருப்பாற்கடனாதன் கவிராயர் ஆவர். முன்னூல்களின் இயலும் பின்னூல்களின் இயலும் ஒருங்கே தழுவியதாகும்.

சுவாமிநாதம் என்னும் நூல் விருத்தயாப்பால் ஐந்திலக்கணமும் ஒருங்குடையது; சாமி கவிராசரால் செய்யப்பட்டது. இருநூற்றுப்பதினாறு விருத்தங்களையுடையது. ஓலைச்சுவடியிலுள்ளது.

இரண்டிலக்கணங்களையுடைய நூல்கள்

நேமிநாதம்: இஃது வெண்பா யாப்பாலாயது. குணவீரபண்டிதரால் இயற்றப்பட்டது. தென்மயிலாபுரிநீனிறக் கடவுள் நேமிநாதர் தம் பெயராற் செய்தமைத்தமையான் நேமிநாதம் எனப்பெயர்த்தாயிற்றாம். எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் இரண்டற்கும் வெண்பா தொண்ணூற்றேழாகும். ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலத்துத்திரிபுவனதேவன் என்னும் சோழன்காலத்தது என்பர். இதற்குச் சின்னூல் என்னும் பெயர் உள்ளது. இதற்குப் பழைய வுரை ஒன்றுள்ளது. தொல்காப்பியம் என்னும் நூலையே தழுவி இயல்களுக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நன்னூல்: இந்நூல் எழுத்து சொல் என்னும் இரண்டிலக்கணங்களைச் சூத்திரயாப்பாற் செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பலருரை பகர்ந்துள்ளனர். பிற்காலத்திலக்கணங்களுள் மிகச்சீரிதென்றும் பலரும் பாராட்டுகின்றனர். நானூற்றறுபத்திரண்டு சூத்திரங்களையும் பத்தியல் களையுமுடைய இந்நூலையே பிற்காலத்தவர் பலரும் விரும்பிக் கற்பவராயினர். பவணந்தி என்னும் சமண முனிவரால் அமராபரணசீயகங்கன் வேண்டச் செய்யப்பட்டது என்பர். ஐந்திலக்கணம் செய்யப்பட்டது என்றும் பின்னைய மூன்றும் மறைந்தனவாம் என்றும் கூறுகின்றனர்.

ஒவ்வோர் இலக்கணத்தை யுரைப்பனவாய நூல்கள் இரண்டாவன: களவியலுரை, நாற்கவிராச நம்பி யகப்பொருள் விளக்கவுரை-மாறனகப்பொருள் முதலியனவாம்; நூற்பாவினால் இயற்றப்பட்டன.

புறப்பொருள் வெண்பா மாலையுரை இது ஐயனாரி தனாராற் செய்யப்பட்டது. இது நூற்பாவும், எடுத்துக் காட்டும் கொளுவும் உடையது. எடுத்துக்காட்டுக்கள் வெண்பாவால் யாக்கப்பட்டுள்ளன. பன்னிருபடலமும் அன்னதேயாம், புறப்பொருள் வெண்பா மாலையின் முதனூலாகும்.

யாப்பிலக்கணத்தைக் கூறுவன யாப்பருங்கலக்காரி-கையும் யாப்பருங்கல விருத்தியும் ஆம். இவற்றினை யாத்தவர் அமிதசாகரனா ராவர். உரையாசிரியர் குண சாகரனார் என்பர். முன்னது கட்டளைக்கலித்துறைச் செய்யுளாலும் பின்னது சூத்திர யாப்பாலும் ஆயவையாம்.

அணியியல் ஒன்றே கூறுநூல்கள், தண்டியலங்கார வுரை, மாறனலங்காரவுரை ஆயவையாம். தண்டியாசிரியர் தண்டியலங்காரத்தையும், பெருமாள் கவிராயர் மாறன லங்காரத்தையும் இயற்றியுள்ளனர். இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாயுள்ளது தொல்காப்பியம் எனும் பெருநூலே யாம்.

சின்னூலாகிய நேமிநாதச் சிறப்புப்பாயிரம் ஒன்று இதனைப் பெரிதும் வலியுறுத்தா நிற்கும். அது வருமாறு

வெண்பா

தொல்காப் பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற்கொண் டோடும் படகுஎன்ப—பல்கோட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லுங் குணவீர
நேமிநா தத்தின் நெறி.

என்பதாம்.

இங்ஙனமாக அகத்தியனார் கண்ட முதனூலாகிய அகத்தியத்தின்கண் இயல், இசை, நாடகம், எனும் முத்தமிழும் விரவி யிருந்தனவென்றும் இதற்கு முன்னரும் தண்டமிழினியநூல்உண்டென்றும்முற்துநூல்கண்டு முறை படவெண்ணியென்றும், இசையும் நாடகமும்நாற்பொருள் பயக்குநடை நெறித்தாகியநூல்களின்முட்டறுத்தற்கேற்ற

கருவியாகாமையின் அவற்றினை யொரீஇ முட்டறுத்தற் கருவியாகிய இயற்றமிழினையே மூன்றுறுப்படக்கிய பிண்டமாக் கொண்டு ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒன்பது ஒன்பதியல்களாக இருப்பத்தேழு இயல்களை யுடைத்தாய்த் தொல்காப்பியமென நாமம் புனைந்து யாக்கப்பட்டதென்றும் புலவராயினார் பலபடப் பகர்வர். எழுத்ததிகாரத்திற் குரைகண்டார் இளம்பூரணனாரும், நச்சினார்க்கினியருமே யாவர். இவ்வுரை நூல்கள் மழவை மகாலிங்கையர் அவர்களாலும் யாழ்ப்பாணம் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்களாலும் அச்சிற் பதிப்பிக்கப் பெற்றுள்ளன பின்னர்ச்சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத் தார்பதிக்கலாயினர் இளம்பூரணராகிய உரையாசிரியரை நச்சினார்க்கினியர் பெரிதும் போற்றித் தழுவியே உரை கண்டுள்ளார் என்பது ஆய்வார்க்கு நன்கு புலனாம்.

தொல்காப்பியப் பாயிரவிருத்தி என ஒரு ஆய்வுநூல் சிவஞான முனிவர் செய்துள்ளனர். சண்முகனார் பாயிர விருத்தி யுரையெனும் பெருநூலும் வெளிப்போந்துள்ளது. இவ்விரு நூல்கட்கும் முன்னர்ச் சுவாமிநாத தேசிகர் என்பவரால் இலக்கணக்கொத்துரையென ஒருநூல் யாக்கப்பெற்றுள்ளது. இவ்விலக்கணகொத்துரையானது "தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவை" எனப் பெரிதும் தொல்காப்பியப் பேரியனூலைப் போற்றியுள்ளது. இந் நூற்களை நன்காய்ந்தறியின் இந்நூலின் பெற்றிமை யினை முற்றவும் ஒருவாறுணர்தல்கூடும்.

ஆகவே தொல்காப்பியர் எழுப்பப்படுதலின் எழுத்தா னாம் ஒலியைக்கொண்டு முதல் எழுத்தும் சார்பு எழுத்தும் எனத் தொகை வகைசெய்து அதன் விரிவாகக் கருவியும் செய்கையும் கொண்டு ஒன்பதியல்களைப் பதிவுசெய்துள் ளனர். நூன் மரபு முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாக உள்ள அவற்றிடைக் காணப்படுவனவற்றுள் சிலவருமாறு :—

இத்தொல்காப்பியம் எழுத்த திகாரம் ஒன்பதியல்களை யுடைத்தாகமிளிர்கின்றது. இவ்வொன்பது பிரிவுகட்கும் இயல் எனப்பெயர் சூட்டினர். நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு எனவும் நூன்மரபு,மொழிமரபு இவ்விரண்டனையும் அடுத்துப் பிறப்பியல் புணரியல்களை வைத்து, அடுத்துத்தொகைமரபு என ஒன்றனை வைத்தது அதன் பின்னர் உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் எனப் பாகுபாடு கண்டுள்ளார்.

நூல்மரபு, மொழிமரபு என்பன யாவையென நோக்கும்போது காணப்பெறுபவை நூல்என்பது காரணப்பெயர். நூல் போறலின் நூல் என்றார்.மரபுதொன்றுதோடு நெறியினை மயங்காதுரைப்பது.

"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்
செப்பினரப்படிச் செப்புதல் மரபே." என்பது

இலக்கணம். இந்நெறியில் நச்சினார்க்கினியர் இவ்வோத்து என்னுதலிற்றோவெனின் அதுவும் அதன் பெயர் உரைப்பவே அடங்கும் எனவும்,

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் இத்தொல்காப்பியமென்னும் நூற்கு மரபாம் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்துணர்த்தினமையின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று எனவும், மொழிமரபு எனக்காரணப் பெயர்த்தாயிற்று எனவும், பிறப்பு இயல் இவ்வோத்து எழுத்துக்களுடைய பிறப்பு உணர்த்துதலின் பிறப்பியல் என்னும் பெயர்த்தாயிற்று எனவும்,புணரியல்:- மொழி மரபிற்கூறிய மொழிகளைப் பொதுவகையால் புணர்க்கு முறைமை எனவும், தொகைமரபு:- உயிர்ஈறும் புள்ளிஈறும் மேலை அகத்து ஒத்தினுள் முடிக்கும் வழி ஈறுகடோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஒரே ஓர் சூத்திரங்களால் தொகுத்து முடிப்பு கூறினமையின் தொகைமரபு என்னும்

பெயர்த்தாயிற்று எனவும், உருபியல் :- உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உருபு இயல் என்னும் பெயர்த்தாயிற்று எனவும், உயிர் மயங்கு இயல் :- உயிர்ஈறு நின்று வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக்கணங்களோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உயிர்மயங்கு இயல் என்னும் பெயர்த்தாயிற்று எனவும், புள்ளிமயங் கியல் :- நிறுத்த முறையானே உயிர் ஈறு புணர்த்துப் புள்ளி ஈறு வன்கணத்தோடும் சிறுபான்மை ஏனைக்கணங் களோடும் புணருமாறு கூறலின் இவ்வோத்துப் புள்ளி மயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று எனவும், குற்றிய லுகரப் புணரியல் :- இவ்வோத்துக் குற்றியலுகரம் என்று கூறப்பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும், எண்ணுப் பெயர் முதலியவற்றோடும் புணரும் முறைமை உணர்த்தி னமையில் குற்றியலுகரப்புணரியல் என்னும் பெயர்த் தாயிற்று எனவும், அடைவுடன் அவதாரிகை கூறியுள்ள மையை ஆய்வுழி

> ''ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானும்
> இனமொழி கிளந்த ஒத்தி னானும்
> பொதுமொழி கிளந்த படலத் தானும்
> மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்''
>
> (செய்யுளியல்)

எனு நூற்பாவின்படி ஒருநெறிப்பட புணர்க்கப்படும் தன்மையுடையன எனவுரலால் மரபு, இலக்கணம், முறைமை, தன்மை, இயல், ஒத்து என்பன ஒரு பொருட் கிளவி என்பது பெறப்படும். ஆதலின் இந்நூலாசிரியர் ஒத்துகட்கு மரபு எனவும் இயல் எனவும் பெயர் சூட்ட லாயினர். இப்பெற்றியினை முற்றவெடுத்து நச்சினார்க் கினியர் ஆங்காங்கு அமைவுபடுத்திச் செல்கின்றனர். உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு ஆய்தம் ஒன்று குற்றிய லிகரம் குற்றியலுகரம் இரண்டு ஆக முப்பத்து மூன்று மாகக் கொண்டு மொழிமுத லெழுத்துக்களிவை முதலியுதி

யெழுத்துக்கள் இவைஎன அறுதிபிட்டுச் செல்லும் தொல் காப்பிய எழுத்ததிகாரத்தில்,

> "ஒரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
> இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

என மொழி வகை கூறப்படுகின்றது. பிற்காலத்து நூலாசிரியர், ஒருமொழி தொடர்மொழி எனவுரைத்து மொழிகட்குப்பதமெனப் பெயர் தரித்துச் செல்லலாயினர். இத்தொல்காப்பியமோ பண்டைத் தண்டமிழ்மரபு பிற ழாது முதலெழுத்து சார்பு எழுத்துகட்கு ஏற்பப் புணரி யலும் வகுத்துள்ளமை ஆய்ந்துணரற்பாலது. இன்னோ ரன்ன நற்றிறம் பலவுள. இத்துணைச் சிறப்பிற்றாய இந்நூலுரையினை ஏட்டிலுள்ளவாறே படியெடுத் தச்சிற் பதிப்பிக்கும் பேறு கிட்டியது எல்லாம்வல்ல இறையருளே யாம். இந்நூல் விரைவில் வரல் வேண்டும் என ஊக்கி யருளிய நூல் நிலையத்துக் கௌரவ காரியதரிசி யவர் கட்கு நன்றி செலுத்துங்கடப்பாடுடையேன்.

இங்ஙனம்,

பிலவங்க
ஐப்பசித்திங்கள்
18—10—67

பண்டித வித்வான்
இராம. கோவிந்தசாமி
பிள்ளை,
ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்.



தொல்காப்பியர் வரலாறு

தொல்காப்பியம் என்னும் இப்பேரியல் நூலைச் செய்தவர் தொல்காப்பிய முனிவர். இவர் சமதக்கினி முனிவரின் புதல்வராவர். திரணதூமாக்கினியார் என்னும் இயற்பெயர் பூண்டவர். இக்குறிப்பு இந்நூற்பாயிரத்துள் "சமதக்கினி யாருழைச் சென்று அவர் மகனார் திரண-தூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு" என்று நச்சினார்க் கினியர் கூறுதலான் அறியக்கிடக்கின்றது. இன்னும் அப்பாயிரத்துள் "தொல்காப்பியன்" என்பதற்குப் பழைய காப்பியக் குடியிற் பிறத்தலின் தொல்காப்பியன் என்று பெயராயிற்று என்று கூறுதலானே காப்பியக் குடியிற் பிறந்தவரென்பதும், சமதக்கினி புதல்வர் என்பதனானே அந்தணர் குலத்தினரென்பதும் அறியத்தக்கன. சமதக் கினி புதல்வர் என்றதனானே பரசுராமர் இவர் உடன் பிறந்தவராவர் என்பதும் நன்கு புலனாகும்.

இராமாயணத்துள்ளே பரசுராமர் இராமபிரானோடு போரை விரும்பிச்சென்று அவருக்குத் தோற்றதாகவும் அவருக்கு மிக முந்தினவராகவும் அறியப்படுதலினாலும், இராமரால் சீதாபிராட்டியாரைத் தேடும்படி யனுப்பப் பட்ட குரங்குப்படை இடைச்சங்கமிருந்த கபாட புரத்தை யடைந்து சென்றதாக அறியப்படுதலினாலும், இடைச் சங்கப் புலவர்களாயிருந்தோர் அகத்தியனார் தொல்-காப்பியனார் முதலாயினோர் என்றும் இறையனாரகப் பொருளுரை முதலியவற்றானறியப் படுதலினாலும்தொல் காப்பியரும் இராமபிரான் காலத்திற்கு மிக முந்தியவர் என்பதும் தொல்காப்பியரிருந்து பல்லாயிர மியாண்டுகள் தமிழ்ப்பணி செய்தனர் என்பதும் அறியத் தக்கனவாம்.

ஆயினும் இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சிக்காரருள் ஒருசாரார் மூவாயிரமாண்டென்றும் ஆறாயிரமாண் டென்றும், இங்ஙனம் பலவாறாகக் கூறுகின்றனர். தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையாசிரியர் இராவ்பகதூர் சி வை. தாமோதரம் பிள்ளையவர்கள் அப்பொருளதிகாரப் பதிப்புரையின்கண் பன்னீராயிரம் ஆண்டுகளுக்குக் குறையாதென்று கூறியிருக்கின்றனர். தமிழிலக்கிய வரலாறு எழுதிய கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்கி.மு. எழுநூறாண்டுகளுக்குப் பிற்படாதென்கின் றனர். எவ்வாறு கூறினும் இவர்காலம் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு மிக முற்படுமன்றிப் பிற்படாது.

இனி, இடைச்சங்கத்தார்க்கு இந்நூல் இலக்கணமாக இருந்ததென அறியப்படுதலானே முதற்சங்கத் திறுதியில் இத்தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பது ஆராய்ந்துணரத் தக்கது.

இவர் ஆரியமொழியாகிய வடமொழியையும் நன்கு பயின்றுள்ளார் என்பது "ஐந்திரநிறைந்த தொல் காப்பியன்" என்பதனான் அறியத்தக்கது. இவர் அகத்தியனாரோடு தென்னாடுபுக்க பின் அவர்பாற் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று அவருடைய முதன் மாணாக்கராய் விளங்கினர். அகத்தியர்பால் இவருடன் கற்றவர்கள் (1) அதங்கோட்டாசிரியர் (2) பனம்பாரனார் (3) செம்பூட்சேய் (4) வையாபிகர் (5) அவிநயனார் (6) காக்கைபாடினியார் (7) துரா லிங்கர் (8) வாய்ப்பியர் (9) கழாரம்பர் (10) நற்றத்த னார் (11) வாமனனார் என்னும் பதினொருவராவர். தொல்காப்பியர் முதலாகப் பன்னிருவர் அகத்தியர்பால் ஒருங்கு கற்றனர் என்பது

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவர்ன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளானும்

"வீங்குகட லுடுத்த வியன்கண்மா ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு வீளக்கீர்கென்
வானோ ரேத்தும் வாய்மொழிப் புல்புக
ழானாப் பெருமை அகத்திய னென்னு
மருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"

என்னும் பன்னிரு படலச் செய்யுளானும் அறியப்படும்.

இவரால் இயற்றப்பட்ட இத்தொல்காப்பிய மென்னும் நூலுக்கு உரை செய்தோராகத் தெரியப்பட்டவர் இளம்பூரணர், கல்லாடர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் என்னுமிவ்வாவர், சேனாவரையரும், தெய்வச்சிலையாருமே சொல் அதிகாரத்திற்கு மாத்திரமே உரை செய்தனர். இத் தொல்காப்பியமென்னும் சீரிய ஏட்டுப் பிரதியினை உள்ளவாறே படியெடுத்துப் பதிப்பிக்க வேண்டுமெனும் ஆணையினை மேற்கொண்டு பதிப்பிக்கலாயிற்று. இதன் கண் சில நூற்பாக்கட்குக் கடைச்சங்க நூல்களிற்கூடஎடுத் துக்காட்டுக்கள் இல்லாமையினை நோக்கும்போது இதன் பழமை எத்துணைஎன்பதனைநாம் அறிந்துகொள்ளலாம். பன்னிரு படலத்துள் ஒருபடலமும் இவராற் செய்யப்பட்ட

தென்பர். இவரைப்பற்றிய பழைய உண்மைச் சரிதங்கள் கிடைக்கப்பெறாமையால் நன்குவிரித்துவரையப்பட்டிலது. பிற்காலத்தில் தொல்காப்பியத் தேவர் எனப் பெயரிய புலவர் ஒருவர் இருந்தனர். இவரைத் திருப்பாதிரிப்புலியூர் கலம்பகம் பாடியவராவர் என்பர். விரிவான செயல்களை யாரும் எடுத்து எழுதினாருமில்லை. காலத்தாற் றொன்மையினையுடையவர் என்பது மாத்திரம் நன்கறிந்து கொள்ளற் பாலதாகும். நலம்.

சிறைவான் புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென் சிந்தை
யுள்ளும்
உறைவார் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண்
டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ வன்றியேழிசைச் சூழல்
புக்கோ
இறைவாதடவரைத் தோட்கென்கொலாம் புகுந்
தெய்தியதே.

(திருச்சிற்றம்பலக் கோவையார்)

தூக்கும் பனுவற்றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை
தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச்செல்வமும் தொண்டர்செந்நாவி-
னின்று
காக்குங் கருணைக்கடலே சகல கலாவல்லியே.

(சகலகலாவல்லிமாலை)

நச்சினார்க்கினியர் வரலாறு

நந்தமிழ் நாட்டிற் பண்டைத் தண்டமிழ்ப் புலவரால் இயற்றப்பட்ட இலக்கண விலக்கிய நூல்கட் குரைகண்டார் பலராவர். அவருள் இலக்கண விலக்கியங்கட்குப் பேருரைகண்ட பெரியார் நச்சினார்க்கினியர் என்பது. ''உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரெ''னக் கொண்டாடல் கொண்டுறுதியாகும்.

செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கிய உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் பாண்டி வளநாட்டிலே மதுரா புரியிலே பிறந்தவர். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்பதுபோல மதுரை நச்சினார்க்கினியரென்றும் வழங்குவது கொண்டுறுதியாகும். அஃது ''கரைபெற்றதோர் பஞ்ச லட்சணமான'' என்னும் பாண்டிமண்டலச் சதகச் செய்யுளானும் ''வண்டிமிர் சோலை மதுரா புரிதனில் — எண்டிசை விளங்க வந்தவாசான்'' என்னும் உரைப்பாயிரச் செய்யுள்களானும் தெளிவாகும்.

இவர் பாரத்துவாச கோத்திரத் துதித்தவர். பார்ப்பன மரபினர். அஃது, இவர் எழுதிய உரைகளின் இறுதியில் ''பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று'' எனக் கூறப்படலானும் ''மதுரை நச்சினார்க்கினியர் மாமறையோன்'' என்னும் உரைப்பாயிரச் செய்யுட் பகுதியானும் உணரப்படும்.

இவர் சமயம் சைவமாகும். ''ஓரெழுத் தொருமொழி'' [தொல் மொழிமரபு—12] என்னுஞ் சூத்திரவுரைக்கண் ''திருச்சிற்றம்பலம்'' ''பெரும்பற்றப் புலியூர்'' என்னும் சிவதலங்களின் திருப்பெயரினைக் குறிப்பிடலானும் தம் முரையகத்துத் திருவாசகம், திருக்கோவையார் முதலிய

சைவத் திருமுறைகளிலிருந்து மேற்கோள் காட்டலானும்: திருமுருகாற்றுப்படை யுரையகத்துக் கூறிய சில பகுதி களானும் அது துணியலாகும்.

இவர் தந்தையார் பெயர் இதுவெனத் துணிதற்குத் தக்க ஆதாரம் யாதுமின்று.

இவர் திருப்பெயர் நச்சினார்க்கினியர் என்பதாகும். அது சிவபெருமானுக்குரிய திருநாமங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அக்கூற்றிற்கு
"இச்சையான் மலர்கள் தூவி யிரவொடு பகலுந் தம்மை நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச் சுரவனாரே"

[திருநாவுக்கரசர் திருநாகேச்சுரம் தேவாரம்]

"நச்சினார்க் கினியாய் போற்றி யெனத்துதி நவிலுங் காலை" [காஞ்சிப் புராணம்] என்பன வாதாரமாகும்.

இவர் தமிழ்மொழியை நன்குகற்றுத் தேறிப் புலமை வாய்க்கப்பெற்றவர். இலக்கண இலக்கிய நூல்களிலே யன்றி ஏனைய கலைகளிலும் நிரம்பிய வறிவு படைத் தவர். ஆரிய மொழியாகிய வடமொழிப் பயிற்சியும் பெரிதுமுடையவர். அஃது தொல்காப்பிய முதலிய நூல் கட் கிவரெழுதிய உரைகளிடையே ஏனைய கலைகள் தொடர்பாக வரும் பகுதிகட்கெழுதிய சிறப்புரைகளானும் இன்னும் அவ்வுரையகத்து வேதம், வேத அங்கங்கள் இவற்றினின்று பல பொருள்களை யெடுத்துக்காட்டிச் சேறலானும் நன்கு புலனாகாநிற்கும். இவர்க்குத் தமிழ்க் கற்பித்தவாசிரியர் ஆவாரியாவரெனத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

இவர் தாமாகப் புத்தம் புதுவதாக வேறு தனி நூல் ஒன்றும் இயற்றினதாகவும் தெரியப்பட்டிலது. இவர் தம் வாழ்நாள் முற்றுமே பண்டைத் தண்டமிழ் நூல் கட்குரை யெழுதுவதிலேயே பெரிதும் கழிவதாயிற்று.

இந்நூலுரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் தம்மால் உரை காணப்பட்டனவாகிய தொல்காப்பியம் (இயனூல்) பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தா மணி, குறுந்தொகை யிருபஃது செய்யுள் ஆகிய (இலக்கிய நூல்) என்பனவாகும். அவை வருமாறு :-

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ் — சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே."

என்னுமுரைப்பாயிர வெண்பாச் செய்யுளாலறியக் கிடக்கும்.

இவர் சொல்நயம் (பதசாரம்) எழுதுவதிலும், சொன் முடிபு பொருண்முடிபு காட்டுவதினும் விளங்காத பகுதி களை யெடுத்தினிதா நன்கு விளக்குவதிலும், போதிய மேற்கோள்களைக் கொண்டு ஆளுவதிலும், நூலாசிரியரின் கருத்தினையுணர்ந்து உரைகாண்டலினும், ஏனையுரை யாசிரியர்களைக் காட்டிலும் பேராற்றல் பெரிதுமுடைய வர். இளம்பூரண ருரையினைப் பெரிதும் தழுவியே யுரை காண்டலால் அவர்பால் இவருக்கிருக்கும் பெருமதிப்புப் புலனாகும். தமிழ்மொழியில் இவரைப் போன்றியாரும் பலநூல்களுக்குரை கண்டிலர். இவரை, வடமொழியுரை யாசிரியர் மல்லிநாத சூரிக்கொப்பிட்டுரைப்பர்.

இவர் தம் காலவரையறை வருமாறு :-

இவர்தம் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டாகு மென்பர். அது, இந்நச்சினார்க்கினியர் உரையிடத்துப் பேராசிரியருடைய கூற்றுக்களை மறுக்கும் மறுப்புரைப் பகுதிகள் காணப்பெறலானும், பேராசிரியர் தம் உரைக் கண் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் மேற்கோளாகக் காணப்படலானும் நாயனார் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி

யெனக் கல்வெட்டுக்களாற் றுணியப் பட்டிருத்தலானும் திருமுருகாற்றுப்படை திருமுறைகளுளொன்றாகச் சேர்க்கப்பட்ட காலம் இராசராசன் காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகலானும் அந்நூலுரையகத்து (தி. மு. ஆ. படையுரை) இச்சிறப்புச்செய்தியொன்றுங் கூறப்படாமையானும் எட்டாம் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற்றாண்டிற்குமிடையுற்ற காலமே இவருடைய காலமாதல் கூடுமெனக் கருதப்படலானும் ஒருவாறு புலனாகுமென்பர். ஆகவே ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இப் லவர் பெருமான் இலக்கண விலக்கியநூல்கட் குரைகாணும் பேராற்றலும், திருமுருகப் பெருமான் றிருவருண் முற்றப் பெற்றமையும் உடைய செந்தமிழ்ப் பேராசிரியர் ஆவர் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்கதாகும் என்பதொருதலை.

நச்சினார்க்கினியர்

(ஆசிரியப்பா)

பாண்டி நாடே பழம்பதி யாவுடை
தென்மது ராபுரி நன்னகர் வந்தோன்
தொல்காப் பியமுதல் பல்காப் பியக்கடல்
பருகி யார்ந்த பாரத் துவாச
கோத்திரத் துதித்த சாத்திரக் கலைஞன்
பரங்குன் றமர்ந்தருள் பரம தயாளன்
தேவ குஞ்சரி திருமண வாளன்
பாத தாமரை ஏதமில் லுளத்து
வைத்தீரீ இ நாளும் வழிபடும் வள்ளல்
அங்கமும் மறையும் பங்கமின் றுணர்ந்தோன்
தருக்க மாதிய தரமுற வாய்ந்தவன்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியனென்
றேவரும் பராவுறும் எழிலுறு நாமம்
பூண்ட புனிதன் பொழுது போக்கெல்லாம்
தண்டமிழ் மொழிக்கே கொண்டு பணித்தவன்
இப்பெற் றியன்செய் இலக்கண விலக்கிய

நூலரை நயத்தினை நுண்மா னுழைபுல
மீக்கூர் புலவரே மேதகக் காண்குவர்
கற்றறிந் தவர்புகழ் கலித்தொகை யென்னு ம்
பெருநூலுரையின் பெருமையா ரறிகுவர்
அகப்பொருட் காமுரை யாய்ந்தாய்ந் தெழுதும்
வன்மை தனக்கே வாய்க்கப் பெற்றவன்
சிந்தா மணியெனுந் திருத்தகு மாமுனி
செய்பெருங் காப்பியத் திப்பிய நூற்குச்
சமய வுரைசெய் சதுரப்பா டுற்றோ
நற்றமிழ் நக்கீ ரன்செய் யாற்றுப்
படையெனு முறைக்கொரு பரிவுரையாத்த
நீர்மை தனக்கு நிகர்தா னுண்டோ?
முந்துநூல் கண்ட செந்தமிழ்ப் புலவரைத்
தெய்வ மாக்கொளும் திருத்தவ முடையோன்
இப்பெருந் தொண்டர்தம் இயல்புண ராதோர்
குறைகளைக் கூறும் கொள்கைய ராவர்
இந்நெறி யுற்ற செந்நெறி யாளர்
பல்புகழ் பாரில் பரவி நிற்றலை
கண்டின்புறுக காசினியோ ரென
விண்ணப் பித்தேன் மிகமிகப் போற்றியே
வாழ்க தமிழ்மொழி வாழ்க மாநிலமே

சுபம்



இத்தொல்காப்பிய முழுமைக்கு முரை வகுத்த புலவர் நச்சினார்க்கினியர் இயல்நூற்புலமையோடு பலவிலக்கியங் கட்கு நல்லுரைகண்டவராவர். சைனகாப்பியமாகிய சீவகசிந்தாமணி யுரையிற் பற்பலவிடங்களில் திருவாசக முதலிய திருமுறைகளை மேற்கோளாகக் காட்டி அமைதி யாக உரை தந்துள்ளமையும் அச்சைன சமய நுட்ப முணர்ந்துள்ளமையும் பயில்வார்க் கினிதுபுலனாம். பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படையிற் பற்பல விடங்களில் பெருநயமுடன் உரை கண்டுள்ளனர். ஒருசில வருமாறு:-

'ஒருமுகம்'

"குறவர் மடமகள் கொடிபோல் துயர்பின்
மடவரல் வள்ளியொடு நமையமர்ந்தன்று"

ஒருமுகம் குறவருடைய மடப்பத்தையுடைய மகளாகிய வல்லிபோலும் இடையினையுடைய வள்ளியுடனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று. மடவால் நகையெனக் கூட்டித் தனக்கு ஓர் அறியாமைத் தோன்றும் தன்மை யுடைத்தாகிய நகை என்று கூறுக அவளொடு நகை-யமர்தலின் அறியாமை கூறினார். காமநுகர்ச்சி இல்லாத இறைவன் இங்ஙனம் நகை அமர்ந்தான் உலகில் இல் வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க.

அது,

"தென்பா லுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தாள் பெரும்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேல் பேதாயிரு நிலத்தோர்
விண்பாலி யோகேய்தி வீடுவர்காண் சாழலோ"

என்பதனானுணர்க வெனவும்

"ஒருகை மார்பொடு விளங்க
ஒருகை தாரொடு பொலிய"

முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறி உரையிறந்த பொருளை யுணர்த்துங்காலத்து ஒருகை மார்போடே விளங்கா நிற்க.

ஒருகை மார்பின் மாலை தாழ்ந்ததனோடேசேர்ந்து அழகு பெற என்றது இறைவன் மோன முத்திரை யத்தனாய்த் தானாயேயிருந்துகாட்ட ஊமைத்தசும்புள் நீர் நிறைந் தாற்போல் ஆனந்தமயமான வொளி மாணாக்கர்க்கு நிறைதலின் அதற்குரிய மோன முத்திரை கூறிற்று.

"தன்னை உன்னி என்னை யாக்கிய போழ்தே
யான் அவன் ஆயினேன்"

என்பதனான் உணர்க.

இக்கைகள் எஞ்சிய பொருள்களை விளக்கி முகத் திற்கு ஏற்றவாறுணர்க எனவும்

பெரும்பாணாற்றுப் படையில்

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி"

(இதன்பொருள்) தன்னை யொழிந்த நான்குபூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே தோன்றிப் பரந்த இருளை விழுங்கா நின்று, மறைந்த பகற்பொழுதை உலகத்தே தோற்று வித்து எழுதலைச் செய்யும் பல கிரணங்களையுடைய கனலி எனவும் வருவன கொண்டினிதுணரக் கிடக்கும். இவர்தம் தத்துவப் புலமை,

"வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூ தத்தின் கைப்பொங்கும்
ஊனுள் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறத்து முள்ளன்என்ப"

எனக் கம்பநாடரும் கழறுவர். இங்ஙனமாகப் பத்துப் பாட்டில் பலவிடங்களிற் பதசாரமும் உவநயமும் உலகியல் விளக்கமும் இயைய உரைத்துள்ளனர். கலித் தொகையிற் பலவிடங்களில் உள்ளுறை உவமம் இறைச்சிப் பொருள் நயங்களை விளக்கியுள்ளமையும் போற்றுமிடமாகக் காணப்பெறும்.

''தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்தும்
எல்லார்க்கும் ஒப்ப இனிதுரைத்தான் — சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக் கண்டு'

எனவும்,

''பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினாற் றிசையும் உண்ணு மமிழ்தென
வெழுநா வெச்சின்
மெச்சிநாள் நாளும் விண்ணோர் மிசைகுவர் வேத போதன்
நச்சினார்க் கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர்
நல்லோர்''

எனவும்,

''கரைபெற்ற தோர்பஞ்சலட்சண மானதொல்
காப்பியமும்
தரைமுற்றும் போற்றிய சிந்தாமணியும் தமிழ்ச்
சங்கத்தின்
நிரைபெற்றுயர் பத்துப்பாட்டும் விளங்க நிசவுரையை
வரைநச்சி னார்க்கினி யன்னையன் பாண்டிய
மண்டலமே''

(பாண்டிமண்டலசதகம்)

எனவும் வரும்செய்யுட்களான் இவர்பெருமை புலனாம்.

இவர் சைவசமய மரபுடை யந்தணராவர். இவருடைய பெயர் சிவபெருமானுடைய திருநாமமாகவே எண்ணப்படுகின்றது.

''கச்சைசேர் அரவர் போலும் கறையணி மிடற்றர் போலும்
பிச்சைகொண் டுண்பர் போலும் பேரரு ளாளர் போலும்
இச்சையான் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க்கு இனியர் போலும் நாகவீச் சுரவ னாரே''

(திருநாவுக்கரசர்)

பச்சிலை பழம் போதேனும் பறித்திட்டுப் பத்திசெய்
வோர்க்கு
எச்சமில் இருமைப் பேறும் அளித்தருள் இறைவ போற்றி
முச்சக முதலே போற்றி முலைச்சுவட் டணியாய் போற்றி
நச்சினார்க் கினியாய் போற்றி யெனத்துதி நவிலும் காலை
(காஞ்சிப்புராணம்)

இப்பாடல்கள் இவர்க்குப் போந்த பெயரினை நன்கு வலியுறுத்தும்.

இவர் பழைய செய்யுட்களையேனும் அவற்றின் கருத்தையேனும் உரைநடையாக எழுதுவதுண்டு.

அறுவர்தந் நூலும் அறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறான நீக்கி — மறுவரவின்
மாசா ரியனாய் மறுதலைச்சொன் மாற்றுதலே
ஆசா ரியனது அமைவு.

என்றபடி நூலின் சமயத்தையும் நூலாசிரியருடைய கொள்கையையும் அவர் கருத்தையும் அறியவேண்டிய அளவு உழைத்தறிந்து அவற்றிற்கேற்பவே உரை எழுதுதல் இவருக்கியல்பு.

தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாகமம் முதலிய பலநூல்களிலிருந்தும் அவற்றின் உரைகளிலிருந்தும் பலஅரிய பொருள்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி விளக்கிப் போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்வதுடன் பலவகையான கலைகளினும் பயிற்சியுள்ளவரென்று சொல்லுவதற்கு இடமுண்டு. இவை பெரிதும் உ. வே. சாமிநாத அய்யர் அவர்களுடைய பதிப்பிற் கண்டவை. வாழிய நச்சினார்க்கினியர்.

வாழிய தமிழகம்

பரமனையே பாடுவார்

தொகுத்த வடமொழி தென்மொழியா தொன்று தோன்றி
யதே
மிகுத்த இயல்இசை வல்ல வகையில் விண்தோயு தெற்றி
வகுத்த மதில்தில்லை அம்பலத்தான்மலர்ப்பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்லோர் என்பர் உத்தமரே.

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உத்தமத் தானத்து அறம்பொருள் இன்பமொடி யெறிந்து
வித்தகத் தானத் தொருவழிக்கொண்டு விளங்கச் சென்னி
மத்தம் வைத்தான் திருப்பாத கமலமலர் இணைக்கீழ்ச்
சித்தம் வைத்தார் என்பர் வீடுபேறு எய்திய செல்வர்களே.

(நம்பியாண்டார் நம்பி)

நூல்உரை ஆசிரியர்களைப்பற்றிய ஒரு சிறு குறிப்பு.

நூலாசிரியர்கள் பெரும்பாலும் இறையருள் பெற்ற பெருந்திருவினர்களாகத் திகழ்ந்துள்ளனர். இறைவனும் இறைவனருள் பெற்றுள்ளவர்களுமே முதனூல், வழிநூல், புடைநூல், எதிர்நூல்களை யாத்தனர். இந்நூல்களுட் சில வேற்று மொழிகளிலிருந்தும் மொழி பெயர்த்தியாக்கப் பெற்றவையும் உள். மொழிபெயர்ப்பானவை பெரும் பாலும் அந்நூலாசிரியர் கொள்கையும் தம்நாட்டு மரபும் அவற்றிடைச் சேர்த்தியாக்கப் பெற்றுள். முதனூல் வழிவழி நூல்களும் அவ்வக்கால வழக்கும் ஒழுக்கமும் பற்றி யாசிரியர் கருத்தும்

தழுவியியற்றியிருக்கப்பெறும். புடைநூல்கள் அவ்விருவர் தம் கொள்கைகளையுந் தழுவி வெவ்வேறான கருத்துக்கள் செறியப்பெற்றுத் திகழும்.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே என்றாங்கு''

இறந்தன விடுத்து எதிரது தழீ இயே அமையப்பெற்ற நூல்களும் பலவுள. இப்பெற்றியுற்ற நூல்களின் நிறனை நுண்மாணுழைபுல மீக்கூர்ந்த புலவராயினார் ஆய்ந்தாய்ந்து நாட்டுமக்கட்கு வாட்டமற எடுத்துரைப்பர். ஆகவே நம் செந்தமிழ் மொழிக்கணுள்ள நூல்கள் இயலும், இலக்கியமும், சாத்திரமும், தோத்திரமும், காப்பியமும், புராணமும், இதிகாசமும், நீதிநூல்களும் ஆகப் பல்கிப் பல வகையிலும் நன்னெறி நவில்வனவாயின. பொதுவாக அனைத்து நூல்களும் அறைவன மக்கட்குறுதிப் பொருள்களையேயாம். அவ்வுறுதிப் பொருள்கள் அறனும் பொருளும், இன்பமும், வீடு பேறுமாம்.

நூற்பயன் நுவலும் ஆசிரியர்

''அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே''

என வற்புறுத்தலாயினர். ''நரற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி'' என்பதுமதுவாம். பல்கலை கற்கப் பண்டிதனாவான் எனும் பழமொழிக்கிலக்காய்ப் பலகலைகளையும் பயின்ற பண்பினரே நூலுரைகாணும் நோன்மையாளராவர். இவர் நல்லாசிரியர்பாற் பலகலையும் கண்ணுங் கருத்துமாகப் பயின்றிருத்தல் வேண்டும். இவர்கள் தம் நல்லிளமைக் காலத்தே.

''உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றுத்
தலையாயின ராகவந்த பின்''.

தெய்வமென்பதோர் சிந்தையினராய் வள்ளுவர் கடைப்பிடிக்கக்கூறிய அன்புடைமையாதி பத்துடைமை களும் பற்றினராய் நூலாசிரியர் சீலமறிந்தன்னவாறு உரையியற்றி யுலகிற்குபகாரிக்கு முதாரமுடையராய் இருத்தல் வேண்டும்.

''ஈத லிசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை யுயிர்க்கு''

என்பதை யொருமித்த மனத்திடைவைத்துப் பொருளை வறியவர்க்கு வழங்குவதுபோல நூற்பொருளை அறிவில் வறியவராயினார்க்கன்புகொடுதவல் வேண்டும் எனும் அமைதியோடு பண்டுரை கண்டுவந்தனர். அந்நெறியிற் காலச்சிறந்தவர் நச்சினார்க்கினியராவர் என்பது நாம் எடுத்துக்கூறல் வேண்டுமோ ? ஒருமொழி கற்றவன் ஊமை என்பதனையுணர்ந்து பண்டையாசிரியர் பன் மொழியுங்கற்றுப் பண்டிதராய் விளங்கினர். தொல்காப் பியத்திற்கு முதன் முதலில் உரை கண்டவர் இளம்பூரணர் ஆவர். இவர் பின்னர் உரைகண்டவரால் உரை ஆசிரியர் எனப்போற்றும் ஏற்றமுற்றனர். சிலப்பதிகாரத் திற்குரைகண்ட அடியார்க்குநலலார் திறனும் இப் பெற்றித்தேயாம். பேராசிரியர் எனப் பெயர் பெற்ற திறனை நோக்கும்போது அவர்பெருமை இத்தணைத் தென வறிதற்கியலாது. சேனாவரையரும், கல்லாடரும் ஒவ்வொரு பகுதிக்குரைகண்டுசீர்த்தி செறியப்பெற்றனர்.

''பத்துப் பாட்டாதி மனம்பற்றினார் பற்றுவரோ''

எனச் சிறப்பித்தோதப்பெறும் பத்துப்பாட்டிற்குப் பேருரை கண்டபெருமை மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க் கினியரை நச்சி வந்தடைந்ததாகும். இங்ஙனமாக நூலாசி ரியரும் உரையாசிரியரும் நம் தமிழகத்தில் புகழுடம்பெய்தி னார் பலராவர், இப்புலவரைப்பற்றிய வரலாற்று நூல்களைக் கொண்டு கண்டறிவார்களாக. தலம்

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்.

பொருளடக்கம்

1. முன்னுரை
2. பதிப்புரை
3. முகவுரை
4. நூலாசிரியர் உரையாசிரியர் வரலாற்றுக் குறிப்பு முதலியன
5. எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியருரையுடன் 1முதல் 386 பக்கம் வரை.

இயல்கள்		பக்கம்
1. நூன்மரபு	...	1
2. மொழிமரபு	...	54
3. பிறப்பியல்	...	88
4. புணரியல்	...	101
5. தொகைமரபு	...	136
6. உருபியல்	...	169
7. உயிர்மயங்கியல்	...	190
8. புள்ளிமயங்கியல்	...	252
9. குற்றியலுகரப்புணரியல்	...	323
6. பின் இணைப்பு	...	387
7. நூற்பா முதற்குறிப்பகராதி	...	423
8. எடுத்துக்காட்டு அகராதி	...	444
9. அருஞ்சொல் விளக்க அகராதி	...	478
10. நூற்பா நுவலும் பொருளகராதி	...	498
11. மொழிமுதல் இறுதிநிலை எழுத்துக்கள்	...	523

—

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியம்.

(கடவுள் வணக்கம்)

வெண்பா.

மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான - நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தென் னுள்ள
முருகவிட்டு நின்ற வொளி.

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

சிறப்புப்பாயிரம்

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்

தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னயிந்திர நிறைந்த
தொல்காப் பியனெத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்பது பாயிரம்.

எந்நூ லுரைப்பினுமந்நூற்குப் பாயிரமுரைத்துரைக்க வென்ப திலக்கணம்,

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே,

என்றாராகலின்

பாயிர மென்றது புறவுரையை. நூல்கேட்கின்றான் புறவுரை கேட்டாற் கொழுச் சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறு போல, வந்நூலினிது விளங்குதலிற் புறவுரை கேட்டல் வேண்டும்

என்னை ?

'பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும்'

(என்றாராகலின்) என்றலின்.

அப்பாயிரந்தான் றலையமைந்த யானைக்கு வினை யமைந்த பாகனைப் போலவுமளப்பரிய வாகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவு மந்நூற்கின்றி யமையாச் சிறப்பிற்றா யிருத்தலினிது கேளாக்காற் குன்று முட்டிய குரீஇப் போலவுங் குறிச்சிபுக்க மான் போலவும் மாணாக்கனிடர்ப்படுமென்றுணர்க.

அப்பாயிரம்

'பொதுவுஞ் சிறப்புமென விருவகைத்து
அவற்றுள்.
பொதுப்பாயிர மெல்லா நூன்முகத்து முரைக்கப்படும்'

அதுதானான்கு வகைத்து.

ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபென
வீரிரண் டென்ப பொதுவின் றொகையே

என்னு மிதனானறிக.

ஈவோர் கற்கப் படுவோருங் கற்கப் படாதோருமென விருவகையர், அவருட் கற்கப்படுவோர் நான்கு திறத்தர்.

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்ன
ருலைவி லுணர்வுடையோ ரே'

என்னு மிதனுள்

மலையும் நிலமும்

'மலையே
யளக்க லாகாப் பெருமையு மருமையு
மருங்ககல முடைமையு மேறற் கருமையு(ம்)
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி
நிலத்தி னியல்பே நினைக்குங் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங் கமைந்தபின்
விளைதல் வண்மையும் போ(ய்) ச்சார்ந் தோரை
யிடுதலு மெடுத்தலு மின்னண மாக
வியையக் கூறுப வியல்புணர்ந் தோரே'

பூ

'பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலு நாற்ற முடைமையுங்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு நெகிழ்தலுங்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலு
முவமத் தியல்பி னுணரக் காட்டுப'

துலாக்கோல்

'துலாக்கோ லியல்பே தூக்குங் காலை
மிகினுங் குறையினு நில்லா தாகலு
மையந் தீர்த்தலு நடுவு நிலைமையோ
டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே''

என நான்குங் கண்டு கொள்க.

'இனிக் கற்கப்படாதோரு நான்கு திறத்தர்
கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப'

இதனுட்,

கழற்பெய் குடமென்பது, கொள்வோருணர்வு சிறிதா யினுந் தான்கற்றதெல்லா மொருங்குரைத்தல். மடற்பனை யென்பது, பிறராற்கிட்டுதற்கு அரிதாகியினிதாகிய பயன் களைக் கொண்டிருத்தல். முடத்தெங்கென்பது, ஒருவர் நீர் (வார்க்கப்) வார்ப்பப் பிறர்க்குப் பயன்படுவது போல ஒருவர்வழிபடப் பிறர்க்குரைத்தல். குண்டிகைப் பருத்தி யென்பது, சொரியினும் வீழாது சிறிதுசிறிதாக வாங்கக் கொடுக்கு மதுபோலக் கொள்வோனுணர்வு பெரிதாயினுஞ் சிறிது சிறிதாகக் கூறுதல்.

(இனி)

''ஈத லியல்பே யியல்புறக் கிளப்பிற்
பொழிப்பே யகல நூட்ப மெச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்

புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையிற்
றிகழ்ந்த வறிவினன் றெய்வம் வாழ்த்திக்
கொள்வோ னுணர்வகை யறிந்தவன் கொள்வரக்
கொடுத்தன் மரபெனக் கூறினர் புலவர்''

இதனானறிக.

இனிக் கொள்வோருங் கற்பிக்கப்படுவோருங் கற்பிக்கப்படாதோருமென விருவகையர். அவருள் கற்பிக்கப்படுவோரறுவகையர்.

அவர்தாம்,
''தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருணனி கொடுப்போன் வழிபடு வோனே
யுரைகோ ளாளனோ டிவரென மொழிப''

இதனானறிக,

இனி யிவர் தன்மை,

அன்னங் கிளியே நன்னிற நெய்யரி
யானை யானே றென்றிவை ராபலேக்
கூறிய கொள்ப குணமாண் டோரே

இதனானறிக,

இனிக் கற்பிக்கப் படாதோ ரெண்வகையர்.

(வெண்பா)

மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வ
னடுநோய்ப் பிணியாள னாறாச் சினத்தன்
றடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலா தார்.

எனவிவர்

தொல்காப்பியம்

இவர் தன்மை
குரங்கெறி விளங்கா யெருமை யாடே
தோணி யென்றாங் கிவையென மொழிப

இதனானறிக,

இவருட் களங்கடியப் பட்டார்

(வெண்பா)

''மொழிவ துணராதார் முன்னிருந்து காய்வார்
படிறு பலவுரைப்பார் பல்கா னகுவார்
திரிதரு நெஞ்சத்தார் தீயதே யோர்ப்பார்
கடியயப்பட் டாரவையின் கண்''

இனிக், (கோடன் மரபு)

''கோடன் மரபு கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
முன்னும் பின்னு மிரவினும் பகலினு
மகலா னாகி யன்பொடு புணர்ந்தாங் (கெழிலிக்)
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்று
காசற வுணர்ந்தோன் வாவென வந்தாங்
கிருவென விருந்தே டவிழெனச் சொல்லி
சொல்லெனச் சொல்லி செல்லெனச் சென்று
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச் (ஏட்டின்முரிவு)
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை சேட்டவை வல்ல னாகிப்
போற்றிக் கோட லதுவதன் பண்பே
எத்திற மாசா னுவக்கு மத்திற
மறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே''

பாயிரம்! எழுத்ததிகாரம்

‘ செவ்வன் றெரிகிற்பான் மெய்நோக்கிக் காண்கிற்
-பான்
பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதுங் காதலான்
றெய்வத்தைப் போல மதிப்பான் றிரிவில்லா
னிவ்வாறு மாண்பு முடையார்க்(ற்)குரைப்பவே
செவ்விதின் னூலைத் தெரிந்து’

‘வழக்கி னிலக்கண மிழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்த
லாசாற் சார்ந்தவை யமைவரக் கேட்ட
லம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தலென் றின்னவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்’’

அனைய னல்லோன் (கேட்குவ னாயின்) கொள்ளுவ
-னாயின்
வினையிலு(னு)ழப்பொடு பயன்றலைப் படாஅன்’
அனைய னல்லோன் அம்மர பில்லோன்
கேட்குவ னாயிற் கொள்வோ னல்லன்

இவ்வாற்றானுணர்க

இம் மாணாக்கன் முற்ற வுணர்ந்தானாமாறு,

‘‘ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே’’
‘‘முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்
ஆசா னுரைத்தவைய மைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும்
அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபால்
செவ்விதி னுரைப்ப வவ்விரு பாலு
மையறு புலமை மாண்புநனி யுடைத்தே
பிறர்க்குரை யிடத்தே நூற்கலப் பாகுந்
திறப்பட வுணருந் தெளிவி னோர்க்கே

(இவற்றான் அறிக) பொதுப்பாயிர முற்றிற்று.

இனிச் சிறப்புப்பாயிரமாவது, தன்னாலுரைக்கப்படும் நூற்கின்றியமையாதது. அது பதினொருவகையாம்.

'' ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே

காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே

இப்பதினொன்று மிப்பாயிரத்துள்ளே பெறப்பட்டன

இனிச் சிறப்புப் பாயிரத் திலக்கணஞ் செப்புமாறு.

பாயிரத் திலக்கணம் பகருங் காலை
நூனுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
யாசிரிய மானும் வெண்பா வானு
மருவிய வகையா னுவறல் வேண்டும்

இதனானறிக,

நூல்செய்தான் பாயிரஞ் செய்யிற் றன்னைப் புகழ்ந்தானாம்.

**தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினுந்
தான்றற் புகழ்த றகுதி யன்றே.**

என்றாராகலின்,

பாயிரஞ்செய்வார் தன்னாசிரியருந் தன்னோடொருங்கு -கற்ற வொருசாலை மாணாக்கருமெனவிவர். அவருளி நூற்குப்பாயிரஞ் செய்தார் தனக்கொருசாலை மாணாக்கராகிய பணம் பாரனார்.

பாயிரம்] எழுத்ததிகாரம்

இதன் பொருள்:-வடவேங்கடந் தென்குமரியாயிடை -வடக்கின்கண் வேங்கடமுந் தெற்கின்கட் குமரியுமாகிய (அ) வ்விரண்டெல்லைக்குள்ளிருந்து, தமிழ் கூறு நல்லுல கத்து வழக்குஞ் செய்யுளுமாயிருமுதலின் தமிழைச்சொல்லு நல்லாசிரியரதுவழக்குஞ் செய்யுளுமாகிய (அ)வ்விரண்டை யுமடியாகக் கொள்ளுகையினாலேசெந்தமிழியற்கைசிவணி யநிலத்தொடு முந்து நூல் கண்டு-அவர்கூறுஞ் செந்தமிழி யல்பாகப் பொருந்திய செந்தமிழ் நாட்டிற்கியைந்த வழக் கோடே முன்னை யிலக்கணங்க ளியைந்த படியை முற்றக் கண்டு,முறைப்படவெண்ணி-அவ்விலக்கணங்களெல்லாஞ் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர்க் கறியலாகாமை யின் யானித்துணைவரையறுத்துணர்த்துவலென் றந்நூல் களிற் கிடந்தவாறன்றி யதிகார முறைமையான் முறை மைப்படச் செய்தலையெண்ணி,எழுத்துஞ் சொல்லும் பொ ருளு நாடி- அவ்விலக்கணங்களு ளெழுத்தினையுஞ் சொல் லினையும் பொருளினையு மாராய்ந்து, போக்கறு பனுவல் -பத்து வகைக் குற்றமுந் தீர்ந்து முப்பத் திருவகை யுத்தி யோடு புணர்ந்த விந்நூலுள்ளே, மயங்கா மரபினெழுத்து முறை காட்டிப் புலந்தொகுத்தோனே-அம்மூவகை யிலக்க ணமு மயங்கா முறைமையாற் செய்கின்றமையி னெழுத்தி லக்கணத்தை முன்னர்க் காட்டிப் பின்னரேனையிலக்கணங் களையுந் தொகுத்துக் கூறினான், நிலந்தருதிருவிற் பாண்டிய னவையத்து- மாற்றாரதுநிலத்தைக் கொள்ளும் போர்த் திருவினையுடையபாண்டியன்மாகீர்த்தியவையின் கண்ணே அறங்கரைநாவினான்மறை முற்றியவதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து-அறமே கூறு நாவினையுடைய நான்கு வேதத்தினையு முற்றவறிந்த வதங்கோடென்கின் றவூரி(னா)லாசிரியனுக்குக் குற்றமற வாராய்ந்து கூறி, மல்குநீர் வரைப்பி னயிந்திர நிறைந்த தொல்காப்பியனெ னத் தன்பெயர் தோற்றி-கடல் சூழ்ந்தவுலகின் கண்ணேய

யிந்திர வியாகாணத்தை நிறைய வறிந்த பழைய காப்பிய க்குடியிலுள்ளோனெனத்தன்பெயரை மாயாமனிறுத்திபல் புகழ்நிறுத்த படிமையோனே-பலபுகழ்களையு மிவ்வுலகின் கண்ணே மாயா மனிறுத்திய தவ வேடத்தையுடையோ னென்றவாறு.

இருந்து தமிழைச்சொல்லுமென்க;கொள்ளுகையினா லே பொருந்திய நாடென்க. கண்டெண்ணி யாராய்ந்து தன்னூலுள்ளே தொகுத்தானவன்யாரெனின் அவையின் கண்ணே கூறியுலகின்கண்ணேதன்பெயரை நிறுத்திப்புக ழையு நிறுத்திய படிமையோனென்க.

இப்பாயிரமுஞ் செய்யுளாதலி னிங்ஙன மாட்டுறுப்பு நிகழக் கூறினார். இதற்கிங்ஙனங்கண்ணழித்தலுரையாசி ரியர் கருத்தென்ப தவ்வுரையா னுணர்க.

இனி மங்கல மரபினிற்காரியங்கள் செய்வார்வடக்குங் கிழக்குநோக்கியுஞ்சிந்தித்துச்செய்வாராதலின்மங்கலமாகி யவடதிசையையுமுற்கூறினார்இந்நூனின்றுநிலவுதல்வேண் டித் தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார்தெற்கு மேற்கு நோக்கியுஞ்சிந்தித்துஞ்செய்வராதலிற்றென்றிசை பிற்கூனார். நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந்தவஞ் செய்து வீடுபெற்ற மலையாகலானு மெல்லா ரானு மறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினார் இவ்விரண்டினையுங்காலையே யோதுவார்க்கு நல்வினை யுண்டாமென்று கருதி யிவற்றையே கூறினார்

இவையிரண்டுமகப்பாட் டெல்லையாயின. என்னைக் குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு, கடல் கொண்டதாகலின்கிழக்கு மேற்குங் கடலெல்லையாக முடி தலின் வேறெல்லை கூறாராயினார்.வேங்கடமுங்குமரியும் யாண்டைய தென்றால் வடவேங்கடந்தென் குமரியென வேண்டுதலின் விளங்கக்கூறினார்.

பாயிரம்] **எழுத்ததிகாரம்**

உலகமென்பது பலபொருளொரு சொல்லாகலி னீண் டாசிரியரை யுணர்த்திற்றுலக மவரையே கண்ணாக வுடை மையின் என்னை ?

'' வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான''

என மரபியலிற் கூறுதலின், அவ்வுயர்ந்தோராவார் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாருந்தலைச்சங்கத்தாரு முதலியோர். உலகத்து உலகத்தினுடையவென விரிக்க.

வழக்காவது சிலசொற் பிறந்த வக்காலத் திஃ தறத்தை யுணர்த்திற் றிஃது பொருளை யுணர்த்திற், றிஃதின்பத்தை யுணர்த்திற் றிஃது வீட்டை யுணர்த்திற் றென்றுணர்விப்பது.

செய்யுளாவது, பாட்டுரை நூலே யென்னுஞ் செய்யு ளியற் சூத்திரத்தாற் கூறிய வேழு (நிலமு) மற முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது. முதலினென்றது முதலுகையினாலே யென்றவாறு.

எழுத்தென்ற தியாதனையெனின், கட்புலனாகா வுரு வுங் கட்புலனாகிய வடிவு முடையவாய்வேறு வேறு வகுத் துக்கொண்டு, தன்னையே யுணர்த்தியுஞ் சொற்கியைந்து நிற்குமோசையையாம். கடலொலி, சங்கொலி முதலிய வோசைகள் பொருளுணர்த்தாமையானும், முற்கு வீளை யிலதை முதலியன பொருளுணர்த்திற்றேனு மெழுத்தா காமையானுமவை யீண்டுக் கொள்ளாராயினார். ஈண்டுரு வென்றது மன னுணர்வாய் நிற்குங் கருத்துப்பொருளை; அது செறிப்பச் சேறலானும் செறிப்ப வருதலானு மிடை யெறியப் படுதலானு மின்பத்துன்பத்தை யாக்கலானு முருவு முருவுங் கூடிப்பிறத்தலானு (அ-பி.) முந்தி முதலா கத் தோன்றி யெண் வகை நிலத்துப் பிறந்து கட்புலனாந்

தன்மையின்றிச் செவிக்கட் சென்றுறு மூறு வுடைமையா னும், விசும்பிற் பிறந்தியங்குவ தோர் தன்மையுடைமை யானுங், காற்றின் குணமாயதோர் வன்மை மென்மை யிடைமை கோடலானு முருவேயாயிற்று. இதனைக் காற் றின் குணமேயென்றலிவ்வாசிரியர்கருத்து. இதனைவிசும் பின் குணமென்பாரு முளர்.

இவ்வுரு, உருவுருவாகியெனவும் உட்பெறுபுள்ளியுரு வாகும்மே' யெனவுங் காட்சிப் பொருட்குஞ் சிறுபான்மை வரும்.

வடிவாவது கட்புலனாயே நிற்கும். அது வட்டஞ் சதுர முதலிய முப்பத்திரண்டினு ளொன்றை யுணர்த்தும். மனத் தானுணரு நுண்ணுணர் வில்லோருமுணர்தற் கெழுத்துக் கட்கு வேறுவேறு வடிவுங்காட்டி யெழுதப்பட்டுநடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவு முடையவாயிற்று. இதற்கு விதி யுட்பெறு புள்ளி யுருவாகும்மே யென்னுஞ்சூத்திர முதலிய னவாம். இவற்றாற் பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார். ''எகர வொகரத் தியற்கையு மற்றே'' எனவடி வும் (உயிர்க்கும்) சிறுபான்மை (வடிவு) கூறினார்.

இனித் தன்னை யுணர்த்து மோசையாவதுதன் பிறப் பையும் மாத்திரையையுமே யறிவித்துத் தன்னைப்பெற நிகழுமோசை.

சொற்கியையு மோசையாவது ஒரெழுத்தொருமொழி முதலியவாய் வருமோசை.

இனிச் சொல்லென்றதியாதனையெனின், எழுத்தினா னாக்கப்பட்டிருதிணைப் பொருட்டன்மையையு மொருவ னுணர்தற்கு நிமித்தமா மோசையை. இவ்வுரைக்குப் பொ ருள் சொல்லதிகாரத்துட் கூறுதும், ஈண்டு டறலள என் னுஞ் சூத்திரமுதலியவற்றான்மொழியாகமயங்குகின்றனவு

வவ்வாக்கத்தின் கணடங்குமென்றுணர்க, எழுத்துச்சொல் லிற்கவயவமாதலினதனை முற்கூறியவயவியாகிய சொல் லைப் பிற்கூறினார்.

இனிப் பொருளென்றதியாதனை யெனின் சொற்றொ டர் கருவியாக வுணரப்படு மறம் பொருளின்பமுமவற்றுது நிலையின்மையாகிய வறுகைப் பொருளுமாம் அவை பொ ருளதி காரத்துட் கூறுதும்.

வீடு கூறாரோவெனின் அகத்தியனாருந் தொல்காப் பியனாரும்வீடு பேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின் றன்மைதமிழாற்(இலக்கணத்தாற்)கூறாரென்றுணர்கஅது

'' அந்நிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப ''

என்பதனா னுணர்க. இக்கருத்தானே வள்ளுவனாருமுப்பா லாகக் கூறி மெய்யுணர்தலா (வீடுபேற்றிற்கு) னிமித்தங் கூறினார்.

செந்தமிழ் செவ்விய தமிழ்

மூந்து நூலாவன, அகத்தியமும், மாபுராணமும். பூத புராணமும், இசைநுணுக்கமும் அவற்றுட் கூறிய விலக்க ணங்களாவன. எழுத்துச் சொற்பொருள் யாப்புஞ் சந்தமும் வழக்கியலு ம ர சி ய லு மமைச்சியலும் பார்ப்பனவியலுஞ் சோதிடமுங் கந்தருவமுங் கூத்தும் பிறவுமாம்.

புலமென்ற திலக்கணங்களை

பனுவ லென்ற தவ்விலக்கணங்க ளெல்லா மகப்படச் சென்றதோர் குறியை யிதனுட் கூறுகின்ற வுரைச் சூத்தி ரங்களானு மரபியலானு முணர்க.

பாண்டியன் மாகீர்த்தி யிருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தா னாதலினவனு மவனவையி னுள்ளோருமறி வுமிக்கிருத்தலினவர்கள் கேட்டிருப்ப வதங்கோட்டாசிரியர்

கூறிய கடாவிற்கெல்லாங் குற்றந்தீர விடை கூறுதலின் ' அறிறப , என்றார் (விடை கூறினார்).

அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி நீர் தொல்காப்பியன் செய்தநூலை கேளற்கவெனக் (வென்று) கூறுதலானுந் தொல்காப்பியனாரும் பல்காலுஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமெனக் கூறுதலானு மிவ்விருவரும் வெகுளாம லிந்நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக் கருதி யவர் கூறிய குற்றத்திற் (கடாவிற்) கெல்லாம்விடை கூறுதலினிறப வென்றார் அறிறபத் தெரிந்து என்றார்.

அவர்கேளற்கவென்றற்குக் (கேளன்மி னென்றற்குக்) காரணமென்னையெனின், தேவரெல்லாருங்கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை யுயர்ந்ததற் ககத்தியனாரே யாண்டிருத்தற் குரியரென்றவரை வேண்டிக்கொள்ள வவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கை யாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்றவர் மகனார் திரண தூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தியனாருழைச் சென்றவருடன் பிறந்த குமரியாரை (உலோபாமுத்திரையாரை)யவர்கொடுப்ப நீரேற் றிழிதிப் பெயர்ந்து துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண்ணரசர் பதினெண்மரையும் பதினெண் குடிவேளிருள் ளிட்டானரையு மருவாளரையுங்கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப்பொதியின் கண்ணிருந் திராவணனைக்கந்தருவத்தாற் பிணித் திராக்க தரையீண் டியங்காமைவிலக்கித்திரண தூமாக்கினியாராகிய தொல் காப்பியன்ாரைநோக்கி நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக வெனக் கூற வவருமெம்பெருமாட்டியை யெங்ஙனங் கொண்டு வருவலென்றார்கு முன்னாகப் பின்னாக நாற்

கோல் நீளமகல நின்றுகொண்டு வருக வென்றார்க் கவரு மங்ஙனங் கொண்டு வ ரு வ ழி வையை நீர்கடுகிக் குமரி யாரை யீர்த்துக் கொண்டு போயவழித் (போகத்) தொல் காப்பியனார் கட்டளை யி ற ந் து சென்றோர் வெதிர்ங் கோலை மு றி த் து நீட்டவதுபற்றி யேறினார். அ து, குற்றமென்றகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பிய னாரையுஞ் சு வ ர் க் க ம் புகாப்பீரெனச் சபித்தாரவரும் யாங்களொரு குற்றஞ் செய்யாதிருக்கவு மெ ங் க ளை ச் சபித்தமையா னெம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பீரென வகத்தியனாரையுஞ் சபித்தா ரதனாலவர் வெகுண்டாரா தலினவன் செ ய் த நூலைக் கே ளே ற் க வென்றார் (வென்றாரென்க)

ந ா ன் கு கூறுமாய் மறைந்த பொருளு முடைமையி னான் மறையென்றார். அவை தயித்திரியமும் பௌடிக மும் தலவகாரமும் சாமவேதமும் பெ ள டி க மும். இனி இருக்கு மெசுருந் சாமமு மதர்தணமு மென்பாரு முளர். அது பொருந்தாது இவரிந்நூல் செய்த பி ன் ன ர் வேத வியாதர் சில்வாழ்நாட் (சின்னாட்) ப ல் பி ணி ச் சிற்றறி வினோ ரு ண ர் த ற் கு நான்கு கூறாகச் (இவற்றைச்) செய்தாராகலின்.

முற்கூறிய நூ ல் க ள் போல வெழுத்திலக்கணமுஞ் சொல்லிலணக்கணமு மயங்கக் கூறாது வேறோ ரதிகார மாகக் கூறினாரென்றற் கெழுத்துமுறை காட்டியென்றார்.

வரைப்பின் கண்ணே தோற்றி நிறுத்தின வென்க. இந்திரனாற் செய்யப்பட்ட தயிந்திரமாயிற்று.

பல்புகழாவன அயிந்திர நிறைதலு மகத்தியத்தின் படிமை—தவவேடம்.

பின்னரிந்நூலே (பின் இந்நூல்) வழங்கச் செய்தலு மகத்தியனாரைச் சபித்த பெருந்தன்மையு மைந்தீ நாப்பணிற்றலும் நீர்நிலை நிற்றலும் பிறவுமாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம்.

வடவேங்கடந் தென்குமரி யென்பது கட்டுரை வகையானெண்ணொடு புணர்ந்த சொற்சீரடி. 'ஆயிடை' என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி. தமிழ்கூறுநல்லுலகத் தென்பது முட்டடி யின்றிக் குறைவு சீர்த்தாயசொற்சீரடி. இங்ஙனஞ் சொற்சீரடி முன்னக் கூறினார் (முற்கூறினார்) சூத்திரயாப்பிற்கு இன்னோசை பிறத்தற்கு (என்னை) பாஅ வண்ணஞ் சொற்சீர்த்தாகி நூற்பாற் என்றலின்பயிலும் ஏனையடிகளெல்லாஞ் செந்தூக்கு.

வடவேங்கடந் தென்குமரி யெனவே யெல்லையும் எழுத்துஞ் சொல்லும் பொருளுமெனவே (பொருளும் நாடியெனவே) நுதலிய பொருளும் பயனும் யாப்பும், முந்து நூல் கண்டெனவே வழியு, முறைப்படவெண்ணி யெனவே காரணமும், பாண்டியனவையத் தெனவே காலமுங் களமு மிறபத் தெரிந்தெனவே கேட்டோருந் தன்பெயர் தோற்றியெனவே யாக்கியோன் பெயரு நூற்பெயரும் பெறப்பட்டன.

தொல்காப்பியமென்பது மூன்றுறுப்படக்கிய பிண்டம். பொருள் கூறவே யப்பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமு மடங்கிற்று. நூறு காணங் கொணர்ந்தானென்றாலவை பொதிந்த கூறையுமவையென வடங்குமாறு போல.

இனி இவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாருமுளராலெனின் வேங்கடமுங் குமரியு மெல்லையாக

வுடைய நிலத்திடத்து வழங்குந்தமிழ் மொழியினைக் கூறு நன்மக்கள் வழக்குஞ் செய்யுளு மென்றாற் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந் தமிழ் நாடு பன்னிரண்டினும் வழங்குந் தமிழ் மொழியினைக் கூறுவாரை நன்மக்களென்று பொருடருதலானுமவர் கூறும் வழக்குஞ் செய்யுளுங் கொண்டெழுத்துஞ் சொல்லும் பொருளுமாராய்ந்தாரெனின் அகத்தியற்கு மாறாகத் தாமுதனூல் செய்தாரென்னும் பொருடருதலானுமங்ஙனங் கொடுந்தமிழ் கொண்டிலக்கணஞ் செய்யக்கருதிய வாசிரியர்குறைபாடுடைய வற்றிற்குச் செந்தமிழ் வழக்கையுமுந்துநூலையுமாராய்ந்து முறைப்பட வெண்ணினாரெனப்பொருடருதலானு மது பொருளன்மை யுணர்க. இன்னுமுந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணியென்ற தனானேமுதல்வன் வழிநூல் செய்யுமாற்றிற் கிலக்கணங்கூறிற்றிலனேனும் அவன் அந்நூலெண்ணியென்றதனானே முதல் (அவன் நூல்) செய்த முறைமை தானே, பின்பு வழிநூல் செய்கின்றாற் (செய்வார்க்) கிலக்கணமென்று கருதி யிவ்வாசிரியர் செய்யுளியலு மரபியலு (அந்நூல்) நூல்செய்யுமிலக்கணமு மதற்குரையுங் காண்டிகையுங் கூறுமிலக்கணமுங் கூறிய வதனையே யீண்டுக் கூறினாரென்றுணர்க. அவையவ் வோத்துக்களானுணர்க.

''யாற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்து வீழ்வென்
றாவென நான்கே கிடக்கை முறையே''

'பொழிப்பே யகல நுட்ப மெச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்ன னான்கே''

''அவற்றுட்
பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை
நாடிற் றிரிபில வாகுதல் பொழிப்பே''

தன்னூன் மருங்கினும் பிறனூன் மருங்கினுந்
துன்னிய கூடாவின் புறந்தோன்றும் விகற்பம்
பன்னிய வகல மென்மனூர் புலவர்

'ஏதுவி னுங்கவை துடைத்த (னு) நுட்பம்'
'துடைத்துக் கொள்பொருளே யெச்ச மென்ப

அப்புல மிறப வறிந்து முதனூற்
பக்கம் போற்றும் பயன்றெரிந் துலகந்
திட்ப முடைய தெளிவர வுடையோ
னப்புலம் படைத்தற் கமையு மென்ப'

'சூத்திர முரையென் னுயிரு நிறத்தினும்
பாற்படத் தோற்றல் படைத்த லென்ப
நூற்பய னுணர்ந்த நுண்ணி யோரே.

இவற்றை விரித்துரைக்க.

'பாயிரத்தின் பொழிப்புரை ஒருவகையான்
முடிந்தது.

பாயிர முற்றும்.'

(சிறப்புப்பாயிர முற்றிற்று.)

க

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியம்

க. நாகன்மதரு

எழுத்தெனப்படுவ
அகரமுத
னகர விறுவாய் முப் ::தென்ப
சார்ந்துவரன் மரபின் முன்றலங் கடையே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகார மென்ன பெயர்த்தோ வெனின் (எழுத்தி லக்கண முணர்த்தினமை) காரணத்தா னெழுத்ததிகார மென்று பெயராயிற்று (மென்னும் பெயர்த்து) எழுத்தை யுணர்த்திய வதிகாரமென விரிக்க. அதிகார(ம்)-முறைமை.

எழுத்துணர்த்து மிடத் தெனைத்து வகையா னுணர்த்தினாரோவெனின் எட்டு வகையானு மெட்டிறந்த பல வகையானு முணர்த்தினார் என்க.

எட்டு வகைய வென்பார் கூறுமாறு:— எழுத்தினைத் தென்றலு மின்ன பெயரின வென்றலு மின்ன முறைமை யினவென்றலு மின்ன வளவின வென்றலு மின்ன பிறப் பின வென்றலு மின்ன புணர்ச்சியின வென்றலு மின்ன வடிவின வென்றலு மின்ன தன்மையன வென்றலு மென வெண்வகைய வென்ப. இவற்றுட் டனின்மையும் வடிவு நமக்குணர்த்த லாகாமையி னாசிரிய ரீண்டுரைத்திலர். எனைய விடத்தினுட் (விதனுட்) பெறுதும்.

எழுத்தினைத் தென்றலைத் தொகைவகை விரியானு ணர்க. முப்பத்து மூன்றென்பது தொகை. உயிர் பன் னிரண்டும் உடம்பு பதினெட்டும் சார்பிற் றோற்ற மூன் றும் அதன்வகை. அ ள பெ டை யே ழும் உயிர்மெய் யிருநூற்றொருபத்தாரும் அவற்றோடுங் கூட்டி இருநூற் றைம்பத்தாறென்றல் விரி.

இனி யெழுத்துக்களது பெயரு முறையுந் தொகையு மிச்சூத்திரத்தாற் பெற்றாம். வகை 'ஔகார விறுவா' யென்றதனானும் னகார விறுவா யென்பதனானு 'மவை தாங் குற்றிய லிகரங் குற்றிய லுகர' மென்றதனானும் பெற்றாம். 'விரி' குன்றிசை மொழிவயி' னென்றதனா னும் 'புள்ளியில்லா' வென்பதனானும் பெற்றாம்.

அளவு அ வ ற் று ள், ' அ இ உ ' என்பதனனும் 'ஆ ஈ ஊ' என்பதனானும் 'மெய்யி னளவே யரையென மொழிப' என்பதனானும் 'அவ்வியனிலையு மே ன மூன்றே' என்பதனானும் பெற்றாம்.

பிறப்பு பிறப்பியலுட் பெற்றாம்.

புணர்ச்சி 'உயிரிறு சொன்மு' னென்பதனானு 'மவற்று ணிறுத்த சொல்லி' னென்பதனானும் பிறவாற்றானும் பெற்றாம்.

இனி எட்டிறந்த பல்வகைய வென்பார் கூறுமாறு:— எழுத்துக்களது கு றை வு ங் கூட்டமும் பிரிவு மயக்கமும் மொழியாக்கமும் நிலையுமினமு மொ ன் று பலவாதலுந் திரிந் தகன்றிரிபது வென்றலும் பிறிதென்றலு மதுவும் பிறிதுமென்றலு நிலையிற் றென்றலும் நிலையா தென்ற லும் நிலையிற்று நிலையாது மென்றது மின்னோ ரன்ன பலவுமாம்.

குறைவு—'அ ரை ய ள வு கு று க ல்' 'ஔளபாகு' மென்பனவற்றாற் பெற்றாம்.

'கூ ட் ட ம் மெய்யோடியையினும்' 'புள்ளியில்லா' என்பனவற்றாற் பெற்றாம்.

பிரிவு 'மெய்யுயிர் நீங்கின்' என்பதனாற் பெற்றாம்.

மயக்கம் 'டறலள' வென்பது முதலாக 'மெய்ந்நிலை சுட்டி' னென்ப தீறாகக் கிடந்தனவற்றாற் பெற்றாம்.

மொழி யாக்கம் 'ஓரெழுத்தொருமொழி' என்பதனாற் பெற்றாம். அவ்வோரெழுத்துக்களை ஒருமொழியாக்குத லின் ; (அவ்வெழுத்துக்களை ஒருமொழியாக்குதலின்)

நிலை 'பன்னீருயிரும்' 'உயிர்மெய்யல்லன' உயிரெள 'ஞண நமன' என்பனவற்றான் மொழிக்கு முதலா மெழுத்து மீறா மெழுத்தும் பெற்றாம்.

இனம் ' வல்லெழுத்தென்ப ' ' மெல்லெழுத்தென்ப ' ' இடையெழுத்தென்ப, ' ஔகார விறுவாய் , ' னகாரவிறுவாய்' என்பனவற்றாற் பெற்றாம். இவற்றானே, யெழுத்துக்களுருவாதலும் பெற்றாம். இவ்வுருவாகிய வோசைக்கிவ்வாசிரியர் வடிவு கூறாமை யுணர்க. இனி வரி வடிவு கூறுங்கான் மெய்க்கே பெரும்பான்மையும் வடிவு கூறுமாறுணர்க.

ஒன்று பலவாதல், 'எழுத்தோரன்ன' வென்பதனாற் பெற்றாம்.

திரிந்ததன்றிரிபது வென்றல், 'தகரம் வருவழி' யென்பதனானும் பிறாண்டும் பெற்றாம்.

பிறிதென்றல் 'மகரவிறுதி' 'னகரவிறுதி' (னகாரவிறு) என்பனவற்றாற் பெற்றாம்

அதுவும் பிறிது மென்றல் 'ஆறனுருபினகரக்கிளவி' என்பதனாற் பெற்றாம்.

நிலையிற் றென்றல் 'நிறுத்த சொல்லினீறா' கென்பதனாற் பெற்றாம்.

நிலையாதென்றல் நிலை மொழியதீற்றுக்கணின்றும் வரு மொழியது முதற்கணின்றும் புணர்ச்சி தம்முளியல்பா

தல் (தம்முள் இயல்பாதல்) அது 'மருவின்றொகுதி' யென் பதனாற் பெற்றாம்.

நிலையிற்று, நிலையாது, மென்றல் 'குறியதன் முன் னரு' மென்பதனாற் கூறிய அகர 'மிராவென் கிளவிக் ககரமில்லை' யென்பதனாற் பெற்றாம்.

இக்கூறிய விலக்கணங்கள் கருவியுஞ் செய்கையுமென விருவகைய.

அவற்றுட் கருவிப் புறப்புறக்கருவியும் புறக்கருவியு மகப்புறக் கருவியு மகக்கருவியுமென நால்வகைத்து, நூன் மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி மொழிமரபு புறக்கருவி புணரியலகப்புறக் கருவி, எகர ஒகரம் பெயர்க்கீறாகா வென்றாற் போல்வன வகக்கருவி.

இனிச் செய்கையும் புறப்புறச் செய்கையும் புறச் செய் கையும் அகப்புறச் செய்கையும்அகச் செய்கையுமென நால் வகைத்து, 'எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே' யென் றாற்போல்வன புறப்புறச் செய்கை 'லன வென் வரூஉம் புள்ளி முன்னர்' என்றாற் போல்வன புறச்செய்கை 'உகர மொடு புணரும் புள்ளியிறுதி யென்றாற் போல்வன வகப் புறச் செய்கை தொகைமரபு முதலிய வோத்தினுள் விின்ன வீறின்ன வாறு முடியுமெனச் செய்கை கூறுவன வெல்லா. மகச்செய்கை (இவ்விகற்பமெல்லாந்தொகையாகஉணர்க)

இவ்வோத் தென்னுதலிற்றோவெனின், அ து வு ம் அதன் பெயருரைப்பவே யடங்கும்.

(இவ்வோத்தென்னபெயர்த்தோவெனின்)இத்தொல் காப்பிய மென்னு நூற்கு மரபாந் துணைக்கு வேண்டுவன வற்றைத் தொகுத் துணர்த்தினமையி னுன்மரபென்னும் பெயர்த்தாயிற்று.

நூலென்றது நூல் போறலின் நூலென் றொப்பினா னாயதோர் ஆகுபெயராம். அவ்வொப் பாயவா றென்னை யெனின் குற்றங்களைந் தெஃகின (பன்னுனைப் பஞ்சி கனை யெல்லாங்

கைவன் மகடூஉத் தூய்மையும் நுண்மையு முடையவாக ஓரிழைப்படுத்தினாற் போல 'வினையி னீங்கி விளங்கிய வறிவ' னாலேவழுக்களைந்து எஃகிய விலக்கணங்களை யெல்லா முதலு முடிவு மாறுகோளின்றாகவுந் தொகையி னும் வகையினும் பொருண்மை காட்டியு முரையுங் காண் டிகையு முன்னின்ற கலவு மீரையுங் குற்றமுமின்றி முப்பத் திருவகை யுத்தியோடு புணர்வு (ஈரைந்தழகுபெற முப்பத் திரண்டு தந்திர வுத்தியோடு புணரவும்)

மொருபொரு ணுதலிய சூத்திரத்தானு
மினமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானு
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானு

மொரு நெறிப்படப் புணர்க்கப் படுந்தன்மை யுடைமையா னூலோ டொப்புமை யுடையவாயிற்று. (தன்மையுடை மையா னென்க) மரபி, லக்கணம், முறைமை, தன்மை, யென்பன வொருபொருட் கிளவி.

ஆயினூலென்ற தீண்டு மூன்றதிகாரத்தினையு மன்றே? இவ்வோத்து மூன்றதிகாரத்திற்கு மிலக்கண மாயவா றென்னை யெனின் எழுத்துக்களது பெயரு முறையு மிவ்வதிகாரத்துக்குஞ் செய்யுளியற்கு மொப்பக் கூறியது. ஈண்டுக்கூறிய முப்பத்து மூன்றனை.

யவ்வோத்தினுட் பெயர் வேறு கொடுத்து வாங்கின வற்றைப் பதினைந்தாக்கி யாண்டுத் தொகை கோடலிற் றொகை வேறாம். அளவு செய்யுளியற்கு மிவ்வதிகாரத் திற்கு மொத்தவளவும் மொவ்வாவளவு முளவாகக் கூறியது குறிற்கும் நெடிற்குங் கூறிய மாத்திரை இரண்டிடத்திற்கு மொத்தவளவு. ஆண்டுக் கூறுஞ் செய்யுட் களவுகோடற் கீண்டைக்குப் பயன்றாராத வளபெடை கூறிய தொவ்வா வளபு. அது "அளபிறந் துயிர்த்தலு" மென்னுஞ் சூத்தி ரத்தோடு (ஆண்டு) மாட்டெறியு மாற்றா னுணர்க.

தொல்காப்பியம்

இன்னுங் குறிலு நெடிலு மூவகையினமு மாய்தமும் வண்ணத்திற்கும் மிவ்வதிகாரத்திற்கு மொப்பக் கூறியன. குறைவுமிரண்டற்கு மொக்குங் கூட்டமும் பிரிவு மயக்கமு மிவ்வதிகாரத்திற்கே கூறியன. 'அம்மூவாறு' மென்னுஞ் சூத்திரமுதலியவற்றா னெழுத்துக்கள் கூடிச் சொல்லாமாறுங், கூறுகின்றமையிற்சொல்லதிகாரத்திற்கு மிலக்கண மீண்டுக் கூறினாராயிற்று. இங்ஙனம் மூன்றதிகாரத்திற்கு மிலக்கணங்கள் கூறுதலினிவ் வோத்து நூலினதிலக்கணங் கூறியதாயிற்று. நூலென்றது: தொல்காப்பியமென்னும் பிண்டத்தை. அவ்விலக்கணங்கடா (இவ்வோத்திலக்கணங்கடா) மெழுத்துக்களதுபெயரு முறையுந்தொகையு மளவுங் குறைவுங்கூட்டமும் இனமும் பிரிவுமயக்கமுமாம். ஏனைய, விவ்வதிகாரத்துளேனையோத்துக்க ளுணர்த்துப.

அற்றே லஃதாக, இத்தலைச் சூத்திர மென்னுதலிற் றோவெனின் எழுத்துக்களது பெயரு முறையுந் தொகையு முணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) எழுந்தெனப்படுப-எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, அகரமுத னகர விறுவா முப்பஃதென்ப -அகரமுதலாக னகரமீறாகக்கிடந்த முப்பஃதென்று சொல்லுவராசிரியர், சார்ந்து (வரல்மரபின் மூன்றலாய்) கடையே -சார்ந்து வருதலைத் தமக்கிலக்கணமாகவுடையமூன்றுமல்லாத விடத்தென்றவாறு.

எனவே யம் மூன்றுங் கூடிய வழி முப்பத்து மூன்றென்பர் (ப) அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ, க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-ழ்-ள்-ற்-ன் எனவரும் 'எனப்படுப' வென்றதுசிறப்பித்துணர்த்துதலானளபெடையுமுயிர்மெய்யு மித்துணைச் சிறப்பின்று. அவ்வோசையுணர்வார்க்குக் கருவியாக வரிவடிவுஞ் சிறப்பில்லாத வெழுத்தாகக் கொள்ளப்படும்.

அகரமுதலாதலாரியத்திற்கு மொக்குமேனு மீண்டுத் தமிழெழுத்தே கூறுகின்றா ரென்பதுணர்தற்கு 'னகரவிறு வா' யென்றார்.

படுப எனப் படுத்த லோசையாற் றொழிற் பெயராகக் கூறப்படும். பகரமும்வகரமுமீண்டு நிற்றற்குத் தம்முள் ஒத்த வுரிமைய வெனினு மெழுத்தெனப்படுவ வெனத்தூக் கற்று நிற்குஞ் சொற் சீரடிக்குப் படுபவென்பதின் னோ சைத்தாய் நிற்றலி னீண்டுப்படுபவென்றே பாடமோதுக. இதுஅன்பெறாதஅகரவீற்றுப் பலவறி சொல்.

அகர ன்கர மென்வே பெயருங் கூறினார்.

எழுத்துக்கட் கெல்லா மகர முன்னாதற்குக்(முதலா தற்குக்) 'காரணமெப்யினியக்க மகரமொடு சிவணு' மென் பதனற் கூறுப. வீடுபேற்றிற்குரிய வாண்மகனை யுணர்த் துஞ் சிறப்பால் னகரம் பின் வைத்தார். இனி யேனை யெ ழுத்துக்கட்குங் கிடக்கை முறையாயினவாறு கூறுதும்.

குற்றெழுத்துக்களை முன்னாகக் கூறி யவற்றிற்கின மொத்த நெட்டெழுத்துக்களை யவற்றின் பின்னாகக் கூறி னார், ஒரு மாத்திரை கூறியே யிரண்டு மாத்திரை கூற வேண்டுதலின். அன்றி, யிரண்டை மூற் கூறினாலோ வெ னினாகாது. ஒன்று நின்றதனோடு பின்னருமொன்று கூடி யே யிரண்டாவதன்றி யிரண்டென்ப தொன்றின்றாதலின்; இதனா னொன்றுதான் பல கூடி யே யெண் விரிந்த தென்றுணர்க.

இனி, யகரத்தின் பின்னிகர மெண்ணும் பிறப்பும் பொ ருளுமொத்தலின் வைத்தார். இகரத்தின் பின்னருகரம் வைத்தார். பிறப்பொவ்வாவேனும் ,அ இ உ அம்மூன்றுஞ் சுட்' டெனச் சுட்டுப்பொருட்டாய்நிற்குமினங்கருதி, அவை ஐம்பாற் கண்ணும் பெரும்பான்மை வருமாறுணர்க. எகர

மதன் பின் வைத்தார் அகர இகரங்களோடு பிறப்பொப்பு மை பற்றி, ஐகாரத்திற்கினமாகிய குற்றெழுத்தின்றேனும் பிறப்பொப்புமைபற்றியேகாரத்தின்பின்ன ரைகாரம்வைத் தார், ஐகார வௌகாரங்கட்கினமாகிய குற்றெழுத்தின் றேனும் பிறப் பொப்புமைபற்றி ஏகார வோகாரங்களின் பின்னர் ஐகாரவௌகாரம் வைத்தார்ஒகரம்நொஎனமெய் யோடு கூடிநின்ற ப்லதுதானாகவோ ரெழுத் தொருமொ ழி யாகாத சிறப்பின்மை நோக்கி (ஐகாரத்தின்) பின் வைத் தார், அ, இ, உ, எ, என்னுமந் நான்கும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எக்கொற்றன் எப்பொருளா யினும் என மெய்யோடு கூடாமற்றாமிடைச் சொல்லாய் நின்றாயினு மேல்வரும் பெயர்க ளோடு கூடிச் சுட்டுப் பொருளும் வினாப் பொருளுணர்த்துவதல்லது தானாகப் பொருளுணர்த்தா தென்றுணர்க (வினாப்பொருளும் உணர்த்தும்) ஒகரம் மெய்யோடு கூடியே தன்பொருள் உணர்த்து வதல்லது தானாகப்பொருளுணர்த்தாதென்று ணர்க. இன்னும் அ, ஆ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, ஔ, என் பன தம்முள்வடிவுமொக்கும் இ, ஈ, ஐ, தம்முள் வடிவொவ் வா. இன்னுமிவை யளபெடுக்குங்கா னெட்டெழுத்தோடு குற்றெழுத்திற் கோசை யியையு மாற்றாலு முணர்க. இனிச் சுட்டு நீண்டு ஆகார ஈகார ஊகாரங்களாதலானும்க பொருளொக்கும், புணர்ச்சியொப் புமையுயிர் மயங்கயலிற் (மயங்கியலிற்) பெறுதும். இம்முறை வழுவாமன் மேலா -ஞுமாறு முணர்க.

இனிக் ககார ஙகாரமுஞ், சகார ஞகாரமும், டகார ணகாரமுந், தகார நகராமும், பகார மகாரமுந், தமக்குப் பிறப்புஞ்செய்கையு மொத்தலின் வல்லொற்றிடையே மெல் ஒற்றுக் கலந்து வைத்தார். முதனாவுமுதலண்ணமு மிடை -நாவு மிடையண்ணமு நுனிநாவு நுனியண்ணமும் இதழி -யைதலுமாகிப் பிறக்கின்ற விடத்து முறைமை நோக்கி யவ்வெழுத்துக்களைக் க-ச- ட- த- ப- ங- ஞ- ண- ந- மவென வம்முறையே வைத்தார். பிறப்பொப்புமையானும் னகாரம்

றகாரமாய்த் திரிதலானும் றகாரமும் னகாரமுஞ் சேரவைத்தார். இவை தமிழெழுத்தென்ப தறிவித்தற்குப் பின்னர் வைத்தார் இனியிடையெழுத்துக்களில் யகாரமுன் வைத்தார். அதுவு முயிர்கள் போல மிடற்றுப் பிறந்த வளி (அண்ணஞ்) கண்ணுற்றடையப் பிறத்தலின். ரகாரமதனோடு பிறப்பொவ்வா வேனுஞ் செய்கையொத்தலினதன் பின் வைத்தார். லகாரமும் வகாரமுந் தம்மிற் பிறப்புஞ் செய்கையும் ஒவ்வாவேனும் கல்வலிது செல்வலிது என்றாற் போலத் தம்மிற் சேர்ந்து வருஞ்சொற்கள் பெரும் பான்மை யென்பது பற்றி லகாரமும் வகாரமுஞ் சேரவைத்தார். ழகாரமும் ளகாரமுமொன்றானு மியையின் றேனும் ''இடையெழுத்தென்ப யரல வழள'' வென்றாற் சந்த வின்பத்திற் கியைபுடைமை கருதிச் சேரவைத்தார் போலும்.

அகரம் உயிரகரமு முயிர் மெய்யகரமுமென இரண்டு. இது ஏனையுயிர்கட்கு மொக்கும். எனவே, ஒரு யிர் பதினெட்டாயிற்று.

இவ்வெழுத்தெனப்பட்ட வோசையை யருவென்பா ரறியாதாரதனை யுருவென்றே கோடும். அது செறிப்பச் சேறலரனும் செறிப்ப வருதலானு மிடையெறியப் படுதலானுஞ் செவிக்கட் சென்றுறுதலானு மின்பத் துன்பத்தையாக்குதலானு முருவுமுருவுங் கூடிப்பிறத்தலானுந் தலையுமிடறு நெஞ்சு மென்னு மூன்றிடத்து நிலைபெற்றுப் பல்லுமிதழு நாவு மூக்குமண்ணமு முறப்பிறக்கு மென்றமையானு முருவேயாம் அருவேயாயினிவ்விடத்துக்கூறியன வின்மையுணர்க. அல்லதூம் வன்மை மென்மை யிடைமை யென்றோதினமையானு முணர்க. உடம்பொடு புணர்த்தலென்னு மிலக்கணத்தானிவ்வோசை யுருவாதனிலை பெற்ற தென்றுணர்க. அதற்குக்காரண முன்னர்க் கூறினாம்.

இவ்வெழுத்துக்களின், உருவிற்கு வடிவு கூறாராயினார். அது முப்பத்திரண்டு வடிவினுளின்ன வெழுத்திற் கின்னவடிவெனப் பிறர்க் குணர்த்துதற் கரிதென்பதுகருதி.

அவ்வடிவாராயு மிடத்துப் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம். குழலகத்திற் கூறிற் குழல் வடிவுங் குடத்தகத்துக் கூறிற் குடவடிவும், வெள்ளிடையிற் கூறி லெல்லாத் திசையும், நீர்த்தரங்கமும் போலவும்.

''எல்லா மெய்யு முருவுருவாகி'' யெனவு ''முட்பெறு புள்ளி யுருவாகும்மே'' எனவு ''மெய்யினியற்கை புள்ளி யொடு நிலையல்'' எனவுஞ் சிறுபான்மை வடிவுங் கூறுவர். அது வட்டஞ் சதுர முதலியன முப்பத்திரண்டினுளொன்றை யுணர்த்துமனத்தானுணரும் நுண்ணுணர்வில் லோருமுணர்தற் கெழுத்துக் கட்கு வேறு வேறு வடிவுங்காட்டி யெழுதப் பட்டு நடத்தலிற் கட்புலனாகிய வரிவடிவுமுடையதாயிற்று. பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினார். உயிர்க்கு வடிவின்மையி 'னெகர ஒகரத், தியற்கையு மற்றேயெனச்' சிறுபான்மை உயிர்க்கும் வடிவு கூறினார்.

2 ''அவை தாங்
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன.''

இது மேற்சார்ந்து வருமென்ற மூன்றற்கும் பெயரு முறையு முணர்த்துகின்றது.

(இ-ள்) அவைதாம் ... மேற்சார்ந்து வருமென்றவை தாம், (மெனப்பட்டவைதாம்) குற்றியலிகரங் குற்றியலுகர மாய்த மென்ற முப்பாற் புள்ளியும் ... குற்றியலிகரமுங் குற்றிய லுகரமுமாய்த மென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவுமாம், எழுத்தோரன்ன ... அவையு முற்கூறிய முப்பதெழுத்தோடொரு தன்மையவாய் வழங்கு மென்றவாறு.

முற்கூறிய விரண்டு மும்மை தொக்கு நின்றன. இகர உகரங் குறுகி நின்ற(ன), விகாரவகையாற் புணர்ச்சிவேறு படுதலின், இவற்றை, இங்ஙனங் குறியிட்டாட லெல்லார்க்கு (குறியிட்டாளுநல்லார்க்கும்) மொப்பமுடிந்தது சந்தனக்கோல் குறுகினாற் பிரப்பங்கோலாகாதது போல, வுயிரின் குறுக்கமு முயிரேயாம். இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும். பொருள் வேற்றுமையும்பற்றி வேறோரெழுத்தாக வேண்டினார்.

இவற்றுட் குற்றியலுகரத்தை [குற்றியலுகரம்] நேர் அசையு நிரையசையுமாக்கிச் சீர்களைப் பலவாக்குமாறு செய்யுளியலுளுணர்க.

ஆய்தமென்ற வோசைதான டுப் புக் கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பதுணர்த்துதற் காய்தமென்ற முப்பாற் புள்ளியுமென்றார். அதனையிக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப. இதற்கு வடிவு கூறினாரேனையொற்றுக்கள் போல வுயிரேறா தோசைவிகாரமாய் நிற்பதெ[ர]ன்றாதலின். எழுத்தியறழா வோசைகள் போலக் கொள்ளினுங் கொள்ளற்க. (என்றற்கு) வெழுத்தேயா (மென்றார்) மென்றற்கிதனைப் புள்ளி வடிவிற்றெனவே யெனையெழுத்துக்களெல்லாம் வரிவடிவினவாதல் பெற்றாம்.

முன்னிற்(ன்ற) சூத்திரத்தாற் சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே எழுந்தெனப்படுவ முப்பஃதென்பவெனவே சார்ந்துவரன்மரபின்மூன்றுமே சிறந்தன வேனைய முப்பதுமவ்வாறு சி(ற)ந்திலவெனவும், பொருடந்துநிற்றலினதனை விலக்கிச் சிறந்த முப்பதெழுத்தோடிவையு மொப்ப வழங்கு மென்றற் கெழுத்தோரன்ன வென்றார்.

இப்பெயர்களேபெயர். இம்முறையேமுறை தொகையு மூன்றே. இம்மூன்று பெயரும் பண்புத்தொகை.

''அவைதா'' மாய்தமென்ற, வென்பன சொற்சீரடி எனவுணர்க.

3 '' அவற்றுள், அ, இ, உ,
எ, ஒ என்னு மப்பா லைந்து
மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இது முற் கூறியவற்றுட் சிலவற்றிற் களவுங் குறியுங் கூறுகின்றது. (உணர்த்துதலுதலிற்று)

(இ-ள்) அவற்றுள் - முற்கூறிய முப்பதெழுத்தினுள், அ, இ, உ, எ, ஒ என்னும் அப்பாலைந்தும் அகர இகர உகர எகர என்று கூறப்படு மக்கூற்றைந்தும் (அப்பகுதிக ளைந்தும்) ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப ஒரோ வொன்றோரளவாக வொலிக்குங் குற்றெழுத்தென்னும் குறியினையுடைய வென்று கூறுவர் புலவரென்றவாறு. இக்காரணப்பெயர்மே லாளுமா றாண்டுணர்க.

தமக்கினமாயவற்றின்கணல்லது, குறுமை நெடுமை கொள்ளப்படாமையி ளைவிற்பட்டமைந்ததாம் குற்றெழுத் திற்குறிய (அளவிற்பட்டு அமைந்தனவாங் குற்றெழுத் திற் தறிகி) மெய்யரைமாத்திரைபெற்ற தேனுங் குற்றெழுத் தெனப்பெயர் பெறாதாயின (தாயிற்று) ஒரு மாத்திரை பெற்றமெய் தமக்கினமாக வின்மையின் குற்றெழுத் தென் பது பண்புத்தொகை.

இனி இசைப்பது மிசையும் வேறாக வுணரற்க. அது பொருட்டன்மை.

அவற்றுள் அ இ உ என்பன சொற்சீரடி.

4 ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ வென்னு மப்பா லேழு
மீரள (பி) விசைக்கு நெட்டெழுத் தென்ப.
இதுவுமது.

(இ-ள்) ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ, என்னும் அப்பாலே ழும் ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வென்று கூறப்படுமக்கூற்றே ழும் (சொல்லப்படுமக்கூற்றேழும்) ஈரள பிசைக்கு நெட்டெ ழுத்தென்ப. ஒரோவொன் றிரண்டு மாத்திரையாகவொ லிக்கு நெட்டெழுத்தென்னுங் குறியவென்பு (குறியினையு டையவென்று) கூறுரவாசிரிய ரென்றவாறு.

எனவே யளவுங் காரணக் குறியு மிங்ஙன முணர்த்தி மேலாள்ப. ஐகார ஔகாரங்கள் குறிய வெழுத்தினெடிய வாதற்குக் குற்றெழுத்தாகிய வினந் தமக்கின்றேனு மாத்திரை யொப்புமையா னெட்டெழுத்தென்றார்.

'ஆ ஈ ஊ ஏ ஐ' என்பனவற்றைச் சொற் சீரடியாக்குக.

5 மூவள விசைத்த லோரெழுத் தின்றே.

(இ-ஃது) இது ஐயமகற்றியது. ஓரெழுத்து மூவளவாயு மிசைக்குங் கொல்லோ வென்றையப் படுதலின்.

(இ-ள்) ஓரெழுத்துமூவளவிசைத்தலின்று ஓரெழுந்தே நின்று மூன்று மாத்திரையு மிசைக்கு மென்றவாறு,

எனவே, பலவெழுத்துக்கூடிய விடத்து மூன்று மாத் திரையும் நான்கு மாத்திரையு மிசைக்கு சென்றவாறு.

எனவே பெரும்பான்மை மூன்று மாத்திரையே பெறு மென்றார் (புலவர்) பலவெழுத்தெனவே நான்(கு) மாத்தி ரையும் பெறுதல் பெற்றாம். 5

6 நீட்டம் வேண்டி னவ்வள வுடைய
கூட்டி யெழூஉத லென்மனார் புலவர்

இது மாத்திரை நீளுமாறு கூறுகின்றது.

(இ-ள்) நீட்டம் வேண்டின் - வழக்கிடத்துஞ் செய்யுளிடத்து மோசையும் பொருளும் பெறுதல் காரணமாக விரண்டு மாத்திரை பெற்ற வெழுத்தம் மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவராயின் அவ்வள (பு) டைய கூட்டியெழுஉத லென்மனார்புலவர்தாங்கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்காக்கூட்டியம்மாத்திரைகளை யெழுப்புக வென்று கூறுவராசிரிய ரென்றவாறு.

கூட்டியெழுப்புமாறு ''குன்றிசை மொழி'' 'ஐ ஔ என்னும் என்பனவற்றா னெழுவகைய (த்தெனக்) வெனக் கூறுப.

உதாரணம் : ஆ, அ, ஈ, இ, ஊ, உ, ஏ, எ, ஐஇ,ஓஒ ஔஉ எனவரும். இவை மூன்று மாத்திரை பெற்றன. இவைதா ''நெட்டெழுத்தேழேயோரெழுத்தொருமொழி'' என்றவந் நெட்டெழுத்துக்களே யள (ப) வெடுத்தலிற் சொல்லாத லெய்தினஇனியளபெடை ''யசைநிலையாகலு முரித்தே'' யென்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தா னெழுத்தாந் தன்மையு மெய்திற்று.

இதுதானியற்கை யளபெடையுஞ்,செய்யுட்குப் புலவர் செய்து கொண்டசெயற்கை யளபெடையுமாய்ச் சொற்றன்மை யெய்தி நின்றலகு பெறுமாறுங் குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் போல வெழுத்தாந்தன்மை யெய்தி யலகு பெறாது நிற்குமாறு மச் சூத்திரத்தானுணர்க எனவே) வெழுத்தாந் தன்மையு முடைமையி னளபெடையோடுகூடியெழுத்து நாற்பானென்றலும் பொருந்திற்று. ஒற்றளபெடை செய்யுட்கே வருதலி னீண்டுக் கூறாராயினார்.

அவ்வள(பு)வுடையவெனப் பன்மையாகக் கூறியவதனானிவரும் நான்குமாத்திரையுங் கொண்டார். என்னை? இவ்வாசிரியரை முந்து நூல் கண்டென்றாராகலின் மாபுராணத்து.

''செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளவு(பு)
மையப்பா டின்றி யணையுமா - மைதீரொற்
றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமே லொற்ற ளவு(பு)ங் கொள்''

என்ற சூத்திரத்தானவர் கொண்ட நான்கு மாத்திரை யுமிவ்வாசிரியருக்கு நேர்தல் வேண்டுதலின்; அது செறா அஅய் வாழியநெஞ்சு, தூஉஉத் தீம்புகைத்தொல்விசும்பு, 'பேளர்த்துங்கொல்' 'இலாஅ அர்க்கில்லைதமர்' 'விரா அஅய்ச்செய்யாமைநன்றுளனச்சான்றோர்செய்யுட்களெல் லாம்நான்(கு)மாத்திரை பெற்று நின்றன. அன்றி மூன்று மாத்திரை பெற்றனவே லாசிரியத்தளை தட்டுச் செப்பலோ சை கெடுமாயிற்று. இங்ஙன மளபெடாது நின்றாசிரியத்த ளைதட்டுநிற்பன கலிக்குறுப்பாகிய கொச்சக வெண்பாக்க ளிவை யன்ன வன்றென்றுணர்க.

கோட்டு நூறும் மஞ்சளுங் கூடிய வழிப்பிறந்த செவ் வண்ணம்போல, நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்திற் பிறந்த பின்னர்ப் பிளவுபடா வோசையை யளபெடை யென்றாசிரியர் வேண்டினார். இவை கூட்டிச்சொல்லிய காலத் தல்லது புலப்படா, வெள்ளாட்டிய வழியல்ல தெண் ணெய் புலப்படாவாறு போல வென்றுணர்க. இனியளபெ டையல்லாத வோசை களெல்லாம் இசையோசையாதலி னவற்றை 'யளவிறந் துயிர்த்தலு' (அளபிறந்து யிர்த்த லும்) மென்னுஞ் சூத்திரத்தாற் கூறுப.

7 கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே
இது மாத்திரைக் களவு கூறுகின்றது.

(இ-ள்) கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை-கண்ணிமை யெனவும் நொடி யெனவு மவ் விரண் டே யெழுத்தின் மாத்திரைக் களவு, நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே—இ து நு ண் ணி தா க நூலிலக்கணத்தை யுணர்ந்த வாசிரியர் கண்ட நெறியென்றவாறு.

'என' எண்ணினுட் பிரிந்திரண்டிடத்துங் கூடிற்று. கண்ணிமை நொ டி யெனும் பல பொருளொரு சொற்க ளீண்டுத் தொ ழி ல் மே லு மோசை மேலு முறையே நின்றன. ஆசிரிய ரெல்லாரு மெ ழு த் தி ற் கி வை யே யளவாகக் கூறலினிவருங் கூறினார். இயற்கை மகன் றன் குறிப்பினன்றி யிரண்டிமையு மொருகாற் கூடி நீங்கின காலக் கழிவும், அ எனப் பிறந்த வோசையது தோற்றக் கேட்டுக் காலக் கழிவு மொக்கும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்குஞ் சார்பிற் றோற்றத்திற்கு மிதன் பாகம் மகரக்குறுக்கத்திற்குங் கொள்க. இக்கண்ணிமை யிரட்டி (த்து) வருதனெடிற்கு மது மூன் று நான்குமாய் வருத லளபெடைக்குங் கொள்க. (அது போலவே) நொடித்தற் றொழிலிற் பிறந்த வோசையதுதோற்றக் கேட்டுக் காலக் கழிவும், அ எனப் பிறந்த வோசையு மொக்கும். (வோசை யது தோற்றக்கேட்டுக் காலக் கழிவு) ஏனைய வற்றிற்குங் கூறியவாறே கொள்க.

இனியளவைதாம் (இனியவ் வளவைதான்) நிறுத்த ளத்தல் பெய்தளத்தல் சார்ந்தியளத்த னீட்டியளத்த றெறித்தளத்த றேங்க முகந்தளத்தல் என்னியளத்தலென வெழு வகைய, (வகைத்து) அவற்றுளிது சார்ந்தியளத்த லாம்.

கண்ணிமைக்கும் நொடிக்கு மளவாராய்ன்வரம்பின்றி யோடு மென்று கருதி 'நுண்ணிதினுணர்ந்தோர்கண்டவா' றென்றுமுடிந்தது காட்ட (காட்டலென்னு)மூத்திகூறினார் இது ஆணை கூறுதலுமாம். எனவே யெழுத்திற்கே யளவு கூறி மாத்திரைக் களவு கூறிற்றலர். நொடியிற் கண்ணி மை சிறப்புடைத்துள்ளத்தானி(னை) த்து நிகழாமையின்.

8 ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப

(இது) குறிலையு நெடிலையுந் தொகுத்து வேறோர் குறியீடு கூறுகின்றது.

(இ-ள்) ஔகார விறுவாய்ப் பன்னீரெழுத்தும் அகர முதலாக வௌகார மீறாகக் கிடந்த பன்னிரண்டெழுத்தும் உயிரென மொழிப - உயிரென்னுங் குறியை யுடைய வென்று கூறுவர்புலவரென்றவாறு.

இதுவு மாட்சியுங் காரணமு நோக்கிய குறி, மெய் பதினெட்டினையு மியக்கித் தா(ன்)மருவாய் வடிவின்றி நிற்ற லினுயிராயின (உயிராயிற்று) இவைமெய்க்குயிராய் நின்று மெய்களை யியக்கு. மேலுயிரென வேறோரெழுத்தின்றாம் பிறவெனின்; மெய்யினிற்கு முயிருந் தனியேநிற்குமுயிரும் வேறென வுணர்க. என்னை? 'அகர முதல' வென்புழி யகரந் தனியே யுயிருமாய்க் ககரவொற்று முதலியவற்றிற் குயிருமாய் வேறு நிற்றலின், அவ்வகரந் தனியே நிற்ற லானும், பலமெய்க்கணின்றவ்வம் மெய்கட்கிசைந்த வோசைகளைப் பயந்தே நிற்றலானும், வேறுபட்ட தாதலினொன்றேயாயும் பலவேயாயு நிற்பதோர்தன்மையையுடைத்தென்றுகோடும். இறைவனொன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயா யவற்றினளவாய் நிற்குந் தன்மையும்போல (அது) அ, வென்றவழியும். ஊரவென விளியேற்ற வழியும், அகர முதலவென்ற வழியும் மூவினங்களிலேறிய வழியு, மோசை வேறுபட்ட வாற்றானுணர்க. இங்ஙன மிசைத்துழியும் மாத்திரையொன்றேயாம். (இஃது) இதுஏனையுயிர்கட்கு மொக்கும்.

ஔகார விறுவாயென்பது பண்புத் தொகை. உம்மை முற்றும்மை, 'அகர முத'லென முற்கூறிப் போந்தமையினீண்டீறே கூறினார்.

9 ''னகார விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெப்பென மொழிப''

இது உயிரல்ல(ன)வற்றைத் தொகுத்தோர் குறியீடு கூறுகின்றது.

(இதன் பொருள்) னகார வி று வ ா ய் ப் பதினெண் ணெழுத்தும், ககர முத னகர மீறாகக் கிடந்த பதினெட் டெழுத்தும். மெய்யென மொழிப-மெய்யென்னுங் குறியை யுடைய வென்று கூறுவர் புலவரென்றவாறு.

இதுவு மாட்சியுங் காரணமு நோக்கியகுறி. என்னை? பன்னீருயிர்க்குந் தானிடங் கொடுத்தவற்றா னியங்குந் தன்மை பெற்றவுடம்பாய் நிற்றலின்.

னகார விறுவா யென்பது பண்புத் தொகை. உம்மை முற்றும்மை, முன்னர் னகார விறுவாயென்புழி முப்பதெ ழுத்திற்கு மீறா மென்றா ரீண்டுப் பதினெட் டெழுத்திற்கு மீறா மென்றாராதலின் கூறியது கூறிற்றன்று.

10 மெய்யோ டியையினு மூயிரிய றிரியா

இது உயிர்மெய்க் களவு கூறுகின்றது

(இ-ன்) உயிர்மெய்யோடியையினும்—பன்னீருயிரும் பதினெட்டு மெய்யோடுங் கூடிநின்றன வாயினும், இயறீ ரியாதம்மளவுங் கு றி யு மெ ண்ணு ந் தி ரி ந் து நில்லா வென்றவாயு.

இது ''புள்ளிமில்லா'' வென்பதனை நோக்கி நிற்றலி னெதிரது போற்றலாம். உயிருமெய்யு மதிகாரப்படுதலி னீண்டு வைத்தார். அ எ ன் பு ழி நின்றவளவுங் குறியு மொன்றென்னும் மெண்ணுங் க எ ண நி ன் ற வி ட த் து மொக்கும். ஆவென்புழி நி ன் ற வ ள வு ங் குறியுமொன் றென்னு மெண்ணுங் கா வென நின்ற விடத்து மொக்கும் என்பதிதன்

கருத்து, பிறவுமன்ன, ஆயினொன்றரை மாத்திரையுமிரண்டரை மாத்திரையுமுடையனவொருமாத்திரையும் இரண்டு மாத்திரையு மாயவாறென்னை யெனின் நீர் தனித்தளந்துழியும் நாழியாய் அரை நாழியுப்பிற் கலந்துழியுங் கூடி (ஒன்றரை) நாழியாய்மிகாதவாறு போல்வதோர் பொருட் பெற்றி யென்று கொள்வ தல்லது காரணங் கூறலாகாமை யுணர்க. ஆசிரியனாணை யென்பாரு முளர்.

'விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்' (நாலடியார்)

என்பதே காட்டினா ருரையாசிரியரும். (10)

11 மெய்யி னளவே யரையென மொழிப

இது தனி மெய்க்களவு கூறுகின்றது.

(இ-ள்) மெய்யி னளவே யரையென மொழிப-மெய்யினது மாத்திரையினை யொரோவொன்றரை மாத்திரையுடைய வென்று கூறுவர் புலவரென்றவாறு.

அவ்வரை மாத்திரையுந் தனித்துக் கூறிக் காட்டலாகாது. நாச் சிறிது புடைபெயருந் துணையாய் நிற்றலினியதனைச் சிலமொழிமேற் பெய்து காக்கை கோங்கு கவ்வை எனக் காட்டுப. மெய்யென்ப தஃறிணை யியற் பெயராதலின் மெய்யென்னு மொற்றுமை பற்றி யரை யென்றார். (11

12 அவ்விய னிலையு மேனை மூன்றே

இது சார்பிற் றோற்றத்து மூன்றற்கு மளவு கூறுகின்றது.

(இ-ள்) ஏனை மூன்று-சார்பிற் றோற்றத்து மூன்றும், அவ்விய(ல்)நிலையும்-முற்கூறியவரை மாத்திரையாகிய வியல்பின்கண்ணே நிற்குமென்றவாறு.

கேண்மியா, நாகு, எஃகு எனவரும். (12)

13 அரையளவு குறுகன் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை

இது மெய்களு ளொன்றற்கெய்தியது விலக்குதலுதலிற்று

(இ-ள்) இசையிடன் மகரம் அரையளவு குறுகலுடைத்து-வேறோ ரெழுத்தின தோசையின்கண்மகரவொற்றுத் தனதரை மாத்திரையிற் குறுகிக் கான் மாத்திரை பெறுதலையுடைத்து, தெரியுங்காலை- யருகும் ஆராயுங் காலத்துத்தான் சிறுபான்மையாய் வருமென்றவாறு.

(உதாரணம்) பொன்ம் வரும்வண்ணக்கன், எனவொருமொழிக்கண்ணு மிருமொழிக்கண்ணுங் கொள்க. இது பிறன்கோட் கூறலென்னு முத்தி. (13)

14 உட்பெறு புள்ளி யுருவா கும்மே.

இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது.

மகரமதிகாரப்பட்டு நிற்றலி னீண்டுக் கூறினார்.

(இ-ள்) உட்பெறு புள்ளி-புறத்துப் பெறும் புள்ளி (யோடு உள்ளாற் பெறும் புள்ளி, உருவாகும்-மகரத்திற்கு வடிவாமென்றவாறு)

(எனவே புறத்துப் பெறும் புள்ளியாவது மேற்சூத்திரத்தான் மெய்கட்குக் கூறும் புள்ளி.) ஈண்டு உருவென்றது காட்சிப் பொருளை உணர்த்தி நின்றது.

உதாரணம்: கப்பி கப்மி (கம்மி) என வரும். இது எதிரது போற்றல். (14)

15 மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்.

இது தனிமெய்க்கும் உயிர் மெய்க்கு மொப்புமை மேல் வேற்றுமை செய்கின்றது (செய்தல் கூறுகின்றது). நுத லிற்று என்னை? உயிர் மெய்யான ககர ஙகரங்கட்குந் தனி மெய்யான ககர ஙகரங்கட்கும் வடிவொன்றாக வெழுதிய வற்றை யொற்றாக்குதற்கு பின்னப் புள்ளி பெறுக, வென் றலின்.

(இ-ள்) மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்- பதினெட்டு மெய்களின் றன்மையாவது புள்ளி பெற்று நிற்றலா மென்றவாறு.

எனவே யுயிர்மெய்கட்குப் புள்ளியின்றாயிற்று க்- ங்- (ற்-ன்) எனவரும் இவற்றைப் புள்ளியிட்டுக் காட்டவே புள் ளி பெறுவதற்கு முன்னரகரம் உடனின்றதோர் மெய்வடி வே பெற்றுநின்றனவற்றைப் பின்னரப்புள்ளி யிட்டுத்தனி மெய்யாக்கினா ரென்பதூஉம் பெறுதும். இதனானே ககர ஙகர முதலியன புள்ளி பெறுவதற்கு முன்ன ரியல்பாக வகரம் பெற்றே நிற்கு மென்பதூஉம் புள்ளி பெறுங்காலத் தவ்வகர நீங்கு மென்பதூஉம் புள்ளி நீங்கி யுயிரேறு மிடத்துத் தன்கணகர நீங்கியேபோகவருகின்ற தோருயிர் யாதானு மொன்றேறிநிற்கு மென்பதூஉம் பெற்றாம் 'மெய்யினியக்க மகரமொடு சிவணு' மென்னுஞ் சூத்திரத் தானு மிதுவேயிதற்குக் கருத்தாவதுணர்க. (கருத்தால் உணர்க) 15

16 எகர ஒகரத் தியற்கையு மற்றே

இதுவுமது.

(இ-ள்) எகர ஒகரத் தியற்கையு மற்றே - எகர ஒகரங் களினது தன்மையு மெய்போலப் புள்ளி பெறு மியல்பிற் றென்றவாறு.

எனவே ஏகார ஓகாரங்கட்குப் புள்ளியின்றாயிற்று எ, ஒ எனவரும்.

இது உயிர் மெய்க்கு மொக்கு ம்.

மகர மாராய்ச்சிப் பட்டது கண்டு மகரத்திற்கு வடிவு வேற்றுமை செய்ததிகாரத்தான் மெய்யின்றன்மை கூறிய தன்பின் மாட்டேற்றலின் எகர ஒகரத்தையுங் கூறினார்.

17 **புள்ளி யில்லா வெல்லா மெய்யு**
முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயீ ரியல வுயிர்த்த லாறே.

இது மெய்யு முயிருங் கூடுமாறு (கூடிப்புணருமாறு) மாண்டவை திரிந்துந் திரியாது நிற்குமாறுங் கூறுகின்றது.

(இ-ள்) புள்ளி யில்லா யெல்லாமெய்யும்-உயிரை (பெறுதற்கு)யேற்றுதற்குப் புள்ளியைப் போக்கினவெல்லா மெய்களும், உருவுருவாகி யகரமோ டுயிர்த்தலும்-புள்ளி பெறுகின்ற காலத்தியல்பாகிய வகர நீங்கிய வடிவெ தமக்கு வடிவாகி நின்று பின்னரேறிய வகரத்தோடு கூடி யொலித்தலும், ஏனையுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்—ஒழிந்த பதினோருயிரோடுங் கூடியவ் வடிவு திரிந்தொலித்தலும், ஆயீரியல உயிர்த்தலாறே - என வவ்விரண்டியல்பினை. யுடையவை யொலிக்கு முறைமை யென்றவாறு.

புள்ளி யில்லா மெய்யெனவே முன் பெற்று நின்ற புள்ளி யை (யுயிரேற்றுதற்குப்) யுயிரையேற்றுதற்குப் போக்கின்மை பெறுதும். உருவுருவாகி யெனவே,புள்ளி பெறுதற்காக வியல்பாகிய வகர நீங்கிய வடிவே, பின்ன ரகரம் பெறுதற்கும் வடிவாமென்பது கூறினார்.
க-ங-ய-எனவரும்.

உருவு திரிதலாவது [திரிந்துயிர்த்தலாவது] மேலுங் கீழும் விலங்கு பெற்றும் கோடு பெற்றும் புள்ளி பெற்றும் புள்ளியுங் கோடு முடன் பெற்று முயிர்த்தலாம். கி.கீ

முதலியன மேல் விலங்கு பெற்றன. கு,கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கெ,கே, முதலியன கோடு பெற்றன. கா,ஙா, முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை யிக்காலத்தார் காலாக வெழுதினார். மகர முட்பெறு புள்ளியை வளைத்தெழுதினார். கொ, கோ, ஙொ, ஙோ, முதலியன புள்ளியுங் கோடு முடன் பெற்றன. இங்ஙனந் திரிந் தொலிப்பவே வுயிர் மெய் பன்னிருபதி னெட்டிரு நூற்றொருபத்தாறாயிற்று. ஆகவே யுயிர் மெய்க்கு வடிவு மொருவாற்றாற் கூறினா ராயிற்று. இதனானே மெய் தனக்கியல்பாகிய வகரத்தை நீங்கி நிற்பதோர் தன்மையும் பிறிதோருயிரை யேற்குந் தன்மையு முடைய தென்பதூஉ முயிர் மெய்க்கட் புலப்படா தியல்பாகிய வகரமாய் நிற்குந் தன்மையும் மெய் புள்ளி பெற் றழிந்த வழி, யவற்றிற்குத் தக்க வுயிராய்ப் புலப் பட்டுவருந் தன்மையு முடைய தென்பதூஉம் பெற்றாம். உயிர்மெய் யென்பது உம்மைத்தொகை.

18 மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே

இது மெய்யு முயிருங் கூடிய வழி யவற்றினோசை நிற்குமுறைமை கூறுகின்றது.

(இதன் பொருள்) மெய்யின் வழியது - மெய்யினோசை தோன்றிய பின்னர்த்தாம், உயிர்தோன்று நிலையே-உயிரினோசை தோன்றும் நிலையென்றவாறு.

முன்னின்ற சூத்திரத்தான் மெய் முன்னர் நிற்ப வுயிர் பின்னர் வந்தேறு மென்றார். அம்முறையே யோசையும் பிறக்கு மென்றா ரிதனான் மாத்திரை கொள் ளுங்கா லுப்பும் நீரும் போல வொன்றேயாய் நிற்றலும் வேறுபடுத்துக் காணுங்கால் விரலும் விரலுஞ் சேரநின் றாற் போல வேறாய் நிற்றலும் பெற்றாம். நீருப்பின் குணமே யாயவாறு போல வுயிருமெய்யின் குணமே யாய் வன்மை மென்மை யிடைமை யெய்தி நிற்றல் கொள்க.

(உ-ம்) க, ங, ய எனக் கூட்டமும் பிரிவும் மூவகை யோசையுங் காண்க. 18

19 வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.

இது தனியே மெய்களுட் சிலவற்றிற்கு வேறோர் குறி யிடுதனுதலிற்று. (குறியீடு கூறுகின்றது)

(இ-ள்) க ச ட த ப ற - க ச ட த ப ற வென்னுந் தனி மெய்களை, வல்லெழுத்தென்ப - வல்லெழுத்தென்னுங் குறிய வென்று கூறுவராசிரியரென்றவாறு.

(இஃது) இதுவு மாட்சியுங் காரணமு நோக்கிய குறி. ஒழிந்த மெல்லெழுத்தையு மிடையெழுத்தையு நோக்கித் தாம் வல்லென்றிசைத்தலானும் வல்லென்ற தலைவளி யாற் பிறத்தலானும் வல்லெழுத்தாயின. (வல்லெழுத் தாயிற்று.) 19

20 மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன

இதுவுமது.

(இ-ள்) ங ஞ ண ந ம ன - ங ஞ ண ந ம ன வென்னுந் தனிமெய்களை, மெல்லெழுத்தென்ப — மெல்லெழுத்தென் னுங் குறியவென்று (குறியினையுடைய வென்று) கூறுவ ராசிரியரென்றவாறு.

இதுவு மாட்சியுங் காரணமும் நோக்கிய குறி மெல் லென்றிசைத்தலானும் மெல்லென்று மூக்கு (மூக்கின்) வளி யாற் பிறத்தலானு மெல்லெழுத்தாயின. (மெல்லெழுத் தாயிற்று) 20

21 இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.

இதுவுமது.

(இ-ள்) ய ர ல வ ழ ள - ய ர ல வ ழ ள வென்னுந் தனிமெய்களை, இடை யெழுத்தென்ப — இடையெழுத்

தென்னுங் குறியவென்று (குறியினையுடையவென்று) கூறுவராசிரிய ரென்றவாறு.

இதுவு மாட்சியுங் காரணமும் நோக்கிய குறி. இடை நிகர்த்தா யொலித்தலானும் இடை நிகர்த்தாயுமிடற்று வளியாற் பிறத்தலானு மிடையெழுத்தாயின(யிற்று)

வல்லினத்துக் க ச த ப வென்னுநான்கும்மெல்லினத்து ஞ ந ம வென்னும் மூன்று மிடையினத்து ய வ வென்னு மிரண்டும் மொழிக்குமுதலாதனோக்கி இம்முறையே வைத்தார். இப்பெயரானே யெழுத்தென்னு மோசைகளுக் குருவாயின (ஓசைகள் உருவாயின) உயிர்க்குங் குறுமை நெடுமை கூறலி னவையு முருவாயின. இது சார்பிற்றோற்றத்திற்கு மொக்கும். 21

22 அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை.

இது தன் (தனி) மெய் பிற வொற்றோடுந் தன்னொற்றோடு (பிறமெய்யோடுந் தன்மெய்யோடும்) மயங்கு மயக்கமும்உயிர் மெய்யுயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கு மயக்கமுங் கூறுகின்றது.

(இ-ள்) அம்மூவாறும் — அங்ஙனம் மூன்று கூறாகப் பகுத்த பதினெட்டு மெய்யும், வழங்கியன் மருங்கின் வழக்கிடத்துஞ்செய்யுளிடத்து மெழுத்துக்களைக் கூட்டி மொழிப்படுத்து வழங்குத லுளதாமிடத்து, மெய்மயங்குநிலை-தனிமெய் தன்முன்னர் நின்ற பிறமெய்யோடுந் தன்மெய்யோடும் மயங்கும்நிலையும்,உடன்மயங்குநிலைஅப்பதினெட்டு முயிரு டனே நின்று தன் பின்னர் (தன்முன்னர்) நின்ற வுயிர்மெய் யோடுந் தனிமெய்யோடும் மயங்கும்நிலையு மென விரண்டாம். தெரியுங்காலை-அவை மயங்கும்மொழியாந் தன்மையாராயுங் காலத்தென்றவாறு.

எனவே தனித்து நின்ற வெழுத்துடன் முன்னின்ற வெழுத்துக்க டாங் கூடுமாறு கூறினாராயிற்று. கட்க என என்றால்) விடைநின்ற தனிமெய் பின்னின்ற (முன்னர் நின்ற) தன்னின் வேறாய ஙகர வொற்றோடு மயங்கிற்று. காக்கை யென விடை (காக்கை யென்றால் இடை) நின்ற ஙகர வொற்றுப் பின்னர் நின்ற (ஙகர வொற்று முன்னர் நின்ற) தன்னொற்றோடு மயங்கிற்று. காரு (கரு) வென வீரெழுத்தொரு மொழியுங் கருந (கருந) வென மூவெழுத் தொரு மொழியும் உயிர்மெய் நின்று தன்பின்னர் நின்ற (தன்முன்னர் நின்ற)வுயிர் மெய்யோடு மயங்கிற்று. துணங் கை யென உயிர்மெய்கணின்று தன்பின்னர் நின்ற (தம் முன்னர் நின்ற) தனி மெய்யோடு மயங்கிற்று. கல் வில் என்பனவும் (என்பன) உயிர்மெய் நின்று தனிமெய்யோடு மயங்கிற்று.

தெரியுங்காலை என்றதனான் உயிர் முன்னர் உயிர் மெய் மயக்கமும் உயிர் முன்னர்த் தனிமெய் மயக்கமுங் கொள்க அவை அளை ஆம்ப லென்றாற் போல்வன.

இம்மயக்கங்களுட் டனிமெய் (மெய்மயக்கங்களுள் தனி மெய்) முன்னர்ப் பிறமெய் நின்று மயங்குதல் பலவாதலிற் பல சூத்திரத்தாற்கூறித் தன்முன்னர்த்தான் வந்துமயங்கு தலை, யொரு சூத்திரத்தாற் கூறுப. அவற்றை (அவை) மயங்குங்கால் வல்லினத்தில் டகரமும் றகரமும் மெல்லின மாறு மிடையினமாறும் பிறமெய்யோடு மயங்குமென்றும் வல்லினத்திற் க, ச, த, ப, க்கள் தன்மெய்யோடன்றிப் பிற மெய்யோடுமயங்காவென்றுமுய்த்துணரக் கூறுமாறுணர்க

எழுத்துக்களுந்திய கருவி கூறுகின்ற தென்றுணர்க.

மூவாறு மென்னு மும்மை முற்றும்மை.

(இச்சூத்திர முதலாக மெய்நிலைச்சுட்டீறாக மேற் கூறு மொழி மரபிற்குப் பேர்கடம்மிற் கூடுமாறு கூறுதலின்) இச்சூத்திர முதலாக மெய்நிலை சுட்டின் ஈறாக மேற்கூறும்

மொழி மரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றதென்று ணர்க. எழுத்துக்கள் தம்மிற் கூடிப்புணருமாறு கூறு கின்றதாதலின் 22

23 ட ற ல ள வென்னும் புள்ளி முன்னர்க்
க ச ப வென்னு மூவெழுத் துரிய

இது தனிமெய் பிறமெய்யோடு மயங்கு ம ய க்க முணர்த்துகின்றது.

(இ-ள்) ட, ற, ல, ள வென்னும் புள்ளி முன்னர்— மொழியிடைநின்ற ட, ற, ல, ள வென்று கூறப்படும் நான்கு புள்ளிகளின் முன்னர், க, ச, ப வென்னும் மூவெ ழுத்துரிய—க, ச, ப வென்று கூறப்படும் முன்றெழுத்தும் வந்து மயங்குதற்குரிய வென்றவாறு

(உ-ம்) கட்க, கட்சி, கட்ப, எனவும், கற்க முயற்சி கற்ப எனவும், செல்க வல்சி செல்ப எனவுங் கொள்க. தீன்சினை கொள்ப எனவும், தனிமெய் பிறமெய்யோடு மயங்கியவாறு ணர்க. கட்சிறார் கற்சிறார் என்பன் விரிமொழிப்புணர்ச்சி யாகலி னீண்டைக்காகா. 23

24 அவற்றுள்
ளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்

இதுவுமது

(இ-ள்) அவற்றுள் முற்கூறிய நான்கனுள் ளஃகான் முன்னர்-லகார ளகாரமாகிய புள்ளிகளின் முன்னர், யவவுந் தோன்றும்-க, ச, ப க்களே யன்றி யகர வகரங்களும் வந்து மயங்கு மென்றவாறு.

(உ-ம்) கொல்யானை, செல்வம், வெள்யாறு, கள்வன் எனவரும். இவற்றுள் (கொல்யானை என)வினைத்தொகை யும் வெள்யாறு எனப்பண்புத்தொகையும் நிலைமொழிவரு

மொழி செய்தற் கியையாமையின் 'மருவின் பாத்திய' வென்று கூறுவராதலி னிவ்வாசிரிய ரிவற்றை யொரு மொழியாகக் கொள்ளுவரென்றுணர்க. இக்கருத்தானே மேலும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் ஒரு மொழியாகக் கொண்டே யுதாரணங் காட்டுதும், அன்றி யிவ்வாசிரியர் நூல்செய்கின்ற காலத்து வினைத்தொகை யும் பண்புத் தொகையு (வினைத்தொகைக் கண்ணும் பண் புத்தொகைக் கண்ணும்) மன்றி யொருமொழிக்கண்ணே மயங்குவனவு முளவாதலி னவற்றைக் கண்டிலக்கணங் கூறினார். அவை பின்ன ரிறந்தன வென்று (ஒழித்து) உதாரண மில்லனவற்றிற் குதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலுமொன்று 24

25 ஙஞணநமன வெனும்புள்ளி முன்னர்
தந்த மிசைக ளொத்தன நிலையே

இதுவுமது

(இ-ள்)ங, ஞ, ண, ந, ம, ன வெனும்புள்ளி முன்னர்-ங, ஞ, ண, ந, ம, ன வென்று கூறப்படும் புள்ளிகளின் முன் னர், தத்தமிசைகள் - தமக்குத் தமக்கினமாய் முன்னின்ற க, ச, ட, த, ப, ற க்கள், ஒத்தன நிலையே-பின்னிற்றற்குப் பொருந்தின மயங்கி நிற்றற்கண் ணென்றவாறு.(ப)

(உ-ம்) கங்கன், கஞ்சன், கண்டன், கந்தன், கம்பன் மன்றன். எனவரும். தெங்கு, பிஞ்சு, வண்டு, பந்து, கும்பு, கன்று, எனக் குற்றுகரமுங் காட்டுப. 25

26 அவற்றுள், ணனஃகான் முன்னர்க்
கசரு பமயவ வ்வே முழுரிய

இதுவுமது

(இ-ள்) அவற்றுள் முற் (மேற்) கூறிய மெல்லொற் றாறனுள் ணனஃகான் முன்னர்-ணகாரனகாரங்களின்முன்

ஸ் க, ச, ஞ, ப, ம, ய, வ வ்வேழு முரிய-டறக்களே யன்றிக் க ச ஞ ப ம ய வ வென்னுமேழெழுத்தும் பின்வந்து மயங்குதற்குரிய வென்றவாறு.

(உ-ம்) எண்கு, வெண்சாந்து, வெண்ஞாண், பண்பு வண்மை, மண்யாறு, எண்வட்டு, எனவும் புன்கு, புன்செய் மென்ஞாண், அன்பு, வன்மை, இன்யாழ், புன்வரகு, எனவும் வரும். எண்வட்டு வினைத்தொகை எண்கு புன்கு பெயராதலினாற் கண்டு கொள்க. (பெயர்) 26

27 ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே

இதுவுமது

(இ-ள்) ஞ ந ம வ வென்னும் புள்ளி முன்னர்-ஞ ந ம வ வென்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர், யஃகானிற்றல் மெய்பெற் றன்றே-யஃகானிற்றல் பொருண்மை பெற்ற தென்றவாறு.

இங்ஙன மாசிரியர் சூத்திரஞ் செய்தலி னக்காலத் தொரு மொழியாக வழங்கிய சொற்களுள வென்பது பெற் றாம். அவை யிக்காலத்திறந்தன.

இனி உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது எனவிரு மொழிக்கண் வருவன வுதாரண மாகக் காட்டினாரா லெனின் ஆசிரிய ரொரு மொழியா மாறீண்டுக் கூறி யிரு மொழி புணர்த்தற்குப் புணரிய லென்று வேறோ ரியலுங் கூறி யதன்கண் மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியு மென்று கூறினார். கூறிப் பின்னரும் கூறிய வழிப்பின்னும்முகரமொடுபுணரும் புள்ளி யிறுதி யென்றும் பிறாண்டு மீறுகடோறு மெடுத்தோதிப் புணர்ப்பராதலி னீண்டிரு மொழிப்புணர்ச்சி காட்டிற் கூறி யது கூறலென்னுங் குற்றமா மதனாலவை காட்டுதல் பொருந்தாமை யுணர்க. 27

28 மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்

இதுவுமது.

(இ-ள்) மஃகான் புள்ளிமுன் - முற்கூறியவற்றுண் மகரமாகிய புள்ளி முன்னர், வவ்வுந் தோன்றும்—பகர யகரமே யன்றி வகரமும் வந்து மயங்கு மென்றவாறு.

இதற்கு முதாரண மிக்காலத் திறந்தன அன்றி, வரும் வண்ணக்க னென்றாற் போல்வன காட்டின் வகாரமிசையு மகாரங் குறுகும் என்றவிதி வேண்டாவாம். 28

29 யரழ வென்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்தும் ஙகரமொடு தோன்றும்.

இதுவுமது

(இ-ள்) யரழ வென்னும் புள்ளி முன்னர்— யரழ வென்று கூறப்படு மூன்று புள்ளிகளின் முன்னர், முதலா கெழுத்தும்-மொழிக்கு முதலா மென மேற்கூறு மொன்ப தெழுத்துக்களு மும்மையான் மொழிக்கு முதலாகாத பிற வெழுத்துக்களும், ஙகரமொடு தோன்றும்-ஙகரமும் வந்து மயங்கு மென்றவாறு.

உதாரணம்:- ஆய்க ஆர்க ஆழ்க, ஆய்தல் ஆர்தல் ஆழ்தல், ஆய்நர் ஆர்நர் ஆழ்நர், ஆய்பவை ஆர்பவை ஆழ்பவை, வாய்மை நேர்மை கீழ்மை, எய்சிலை வார்சிலை வாழ்சேரி, தெய்வம் சேர்வது வாழ்வது, பாய்ஞெகிழி, நேர்ஞெகிழி, வாழ்ஞெண்டு (செய்யாறு) போர்யானை வீழ்யானை என மொழிக்கு முதலாமொன்பதும் வந்து மயங்கின. செய்யாறென யகரத்தின் முன்னர் யகரம் வந்தது தன் முன்னர்த் தான் வந்ததாம்.

இனியும்மையாற் கொண்ட மொழிக்கு முதலாகாத வற்றின் கண்ணுஞ் சில காட்டுதும். ஓய்வு, சோர்வு, வாழ்வு, ஓய்வோர், சோர்வோர், வாழ்வோர், ஆய்ஞர், சேர்ஞர்

ஆழ்ஞர் எனவரும். பிறவெழுத்துக்களோடு வருவனவுள வேனும் வழக்கந்ந் செய்யுளு நோக்கிக் கூறிக் கொள்க.

இனி, வேய்ங்ஙனம் வேர்ங்ஙனம் வேழ்ங்கனம் என மொழிக்கு முதலாகாத ஙகரமிடை வந்த சொற்கள், அக் காலத்து வழங்கினவென்றுணர்க. ஆசிரியனோதுதலின் இதனை ஙகரமொடு தோன்றுமெனப் பிரித்தோதினா ரக் காலத்து மரிதாக வழங்கலின்.

இனி, வேய்கடிஙு வேர்கடிது வீழ்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டஙு மாண்டஙு யாது வலிது என் பனகாட்டினவை யிருமொழியாக நிலைமொழி வருமொழி செய்து மேற்புணர்க்கின்றன. வீண்டைக் காகாவென மறுக்க. 29

30 மெய்ந்நிலை சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற்றாம வருஉம ரழவலங் கடையே

இது நிறுத்த முறையானே தனிமெய் தன்னொற் றோடு மயங்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) மெய்ந்நிலை சுட்டின் — பொருணிலைமை யைக்கருதின், எல்லாவெழுத்தும் - பதினெட்டு மெய்யும், தம்முன் தாம் வருஉம்-தம்முன்னே தாம் வந்து மயங்கும் ரழஅலங்கடையே - ரகார ழகாரங்களல்லாத விடத் தென்றவாறு.

(உதாரணம்) காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை பட்டை, மண்ணை, தத்தை, வெந்நெய், அப்பு, (அப்பை) அம்மி, (அம்மை) வெய்யர், எல்லி, எவ்வி, கள்ளி, கொற்றி கண்ணி (கன்னி) எனவரும்.

(மெய்ந்நிலை)சுட்டினென்றதனாற் றனிமெய்முன்ன ருயிர்மெய் வருமென்று கொள்க. எல்லா மென்றது ரகார ழகாரங்களை யொழிந்தனவற்றைத் தழுவிற்று, 30

31 அ, இ, உ, அம் மூன்றுஞ் சுட்டு

இது குற்றெழுத் தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியிடுத னுதலிற்று (குறியீடு கூறுகின்றது.)

(இ-ள்) அ, இ, உ, அம் மூன்றுஞ் சுட்டு—அ, இ, உ, என்று கூறிய வம் மூன்றுஞ் சுட்டெனுங் குறிய வென்ற வாறு (குறியினையுடைய வென்றவாறு)

இஃதாட்சியுங் காரணமு நோக்கிய குறி, சுட்டி யறியப் படும் பொருளை யுணர்த்தலின். தன்னின முடித்த லென்ப தனானே எகரம் வினாப்பொரு ளுணர்த்துதலுங் கொள்க.

(உ-ம்) அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன் எனப்பொருள் என (எப்பொருள் எனவரும்) விவை பெயரைச் சேர்ந்து (சார்ந்து) தத்தங் குறிப்பிற் பொருள் செய்த விடைச் சொல். இச் சூத்திர மொருதலையென்னு (மொழி தலென்னு) முத்தி. இதுவு மேலைச் சூத்திரமெழுத்தாந் தன்மை யன்றி மொழி நிலைமைப்பட்டு வேறோர் குறி பெற்று நிற்றலின், மொழிமரபினைச் சேரவைத்தார். 31

32 ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா

இது நெட்டெழுத் தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியிடுத னுதலிற்று. (குறியீடு கூறுகின்றது).

(இ-ள்) ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா—ஆ ஏ ஓ என்று கூறப்பட்ட வம்மூன்றும் வினாவென்னுங் குறிய வென்ற வாறு. (குறியினையுடைய வென்றவாறு),

இதுவு மாட்சியுங் காரணமு நோக்கிய குறி, வினாப் பொருளுணர்த்தலின்,

உதாரணம்உண்கா,உண்கே உண்கோ எனவரும்இவற் றுள் ஆகாரமு மேகாரமு மிக்காலத்து வினாவாய்வருத

லரிது. நீயே யெனவிக் காலத்து வரும் (நீயே நீயோ என்பது இக் காலத்து வரும்.) இவற்றுள் ஏ, ஓ என்பன இடைச்சொல் லோத்தினுள்ளுங் கூறினா ரேகார வோகா ரங்கட்கும் (ஒகாரங்கள் தரும்) பொருட்டொகை புற்றி. இது மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின் மொழியா ததனை முட்டின்றி முடித்தலென்னு முத்திக்கினமாம் யகர வாகாரமும் (யகர ஆகாரமும்) வினாவாய் வருதலின். 31

33 அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்

இது புறங்கோட் (பிறன் கோட்) கூறலென்னு முத்தி பற்றி யிசை நூற்கு வருவதோரிலக்கண மாமாறு கூறியவ் விலக்கண மிந்நூற்குங் கொள்கின்றது.

(இ-ன்) அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு நரம்பின் மறைய வென்மனார் புலவர் - முற்கூறிய வுயிரு முயிர் மெய்யு மாத்திரையை யிறந்தொலித்தலு மொற் றெழுத்துக்க ளரை மாத்திரையி னீண்டொலித்தலும் யாழ் நூலிடத்தன்வென்று கூறுவர் புலவர், இசையொடு சிவணி ய வுளவென மொழிப-அங்ஙன மளவிறந்து நீண்டுமிசைத்த லோசையோடு பொருந்திய நால்வகைச் செய்யுட்களுக்கு முள வென்று கூறுவராசிரிய ரென்றவாறு.

எழுத்துக்கண் முற்கூறிய மாத்திரையை யிறந்தொ லிக்குமாறு கண்டாம் திறந்தொலிக்கு மிடங்கூறினார் எழுத் துஞ் சொல்லும் பொருளும் கிடக்குமிடஞ் செய்யுளிடமாத லின் அது மிக்கொலித்தலைச் செய்யுளியலின்கண் 'மாத் திரையெழுத்தியலசை வகையெனா அ' வென விருபத் தாறுறுப்பிற்குஞ் சிறப்புறுப்பாக முற்கூறிப் பின்னர்,

" மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர். "

என இச் சூத்திரத்தோடு மாட்டெறிந்து, பின்னும்

" எழுத்தள பெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப "

வென்றுங்கூறினார். இது எதிரது போற்ற லென்னு முத்தி யுங் கூறிற்று.

(இ-ள்) "வருவர்கொல் வயங்கிழா அய் வலிப்பல் யான் கே எளினி" என்புழி ழகர வகாரமுங் ககர வேகாரமு மாத்திரை யிறந்தொலித்தவாறு காண்க. (உணர்க) "பிடி யூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே " என் புழி ங்கரவொற் றளபிறந்தவாறுகாண்க. ஒழிந்த மூவகைச் செய்யுட்கு மிவ்வாறே தத்தமக்குரிய பாவென்னு முறுப்பி னை நடாக்கி யளவு மிகுமாறு காண்க.

சிவணிய வென்பது தொழிற்பெயர். இசையொடு சிவ ணிய வெனவே செய்யுளாதல் பெற்றாம் நரம்பென்றதாகு பெயராய்யாழினை யுணர்த்திற்று. மறையென்றது நூலை மொழிபவென்றுமென்மனார் புலவரென்று மிருகாற்கூறிய வதனானே இங்ஙனம் பொருள் கூறலே யாசிரியர்க்குக் கருத்தாயிற்று. அல்லாக்காற் செய்யுளியலுட் கூறிய மாத் திரையளவு மென்னுஞ் சூத்திரத்தின் மேற்கிளந்தன்ன வென்னுமாட்டேற்றிற் கிவ்வோத்தினுள் வேறோர் சூத்தி ரமின்மையு முணர்க. இவ்விலக்கணங் கூறாக்காற் செய்யுட் குப்பாவென்னு முறுப்பு நிகழாதவை யுரைச்செய்யுட்போல நிற்றலி னிவ்விலக்கணங் கூறவே வேண்டு மென்றுணர்க.

''சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.''

என்னு மரபியற் சூத்திரத்தானே இவ்வாறே சூத்திரங்களை நலிந்து கொண்டு பொருளுரைப்பன வெல்லாங் கொள்க. 33

முதலாவது தான்மரபு முற்றும்.

இரண்டாவது மொழி மரபு

34 குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே.

(என்பது சூத்திரம்) மேலெழுத் துணர்த்திய பின்ன ரவை தம்முட் டொடருமாறு முணர்த்தி யவ்வெழுத்தானா மொழியது மரபுணர்த்து கின்றமையி னிவ்வோத்து மொழி மரபெனக் காரணப் பெயர்த்தாயிற்று. இச் சூத்திர முன் னர்ச் சார்ந்து வருமென்ற மூன்றனுட் குற்றிய லிகரத்திற் கிடனும் பற்றுக் கோடுங் கூறுகின்றது.

(இ-ள்) உரையசை கிளவிக்கு வரூஉம்—தான்கூறும் பொருளைக் கோடற் கொருவனை யெதிர் முகமாக்கும் சொல்லிற்குப்பொருந்தவரும், ஆவயின்-அம்மியா வென்னு மிடைச் சொல்லைச் சொல்லு மிடத்து, யாவென் சினை மிசை மகர மூர்ந்து-யாவென்னு முறுப்பின் மேலதாய் முத லாய் நின்ற மகர வொற்றினை யேறி, குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்-குற்றிய லிகரம் நிற்றலை விரும்பு மாசிரிய ரென்றவாறு.

உதாரணம்: கேண்மியா சென்மியா என வரூஉங் கே ளென்ப துரையசைக்கிளவி அதனைச் சார்ந்து தனக்கியல் பின்றி நின்றது மியா வென்னு மிடைச்சொல் அவ்விடைச் சொல்லோர் முதலு மதனிற் பிரியும் யாவதற் குறுப்புமா மென்றுகருதி யாவென்சினை யென்றார் மியாவிடம் மகரம் பற்றுக்கோடு. யாவு மிகர மரை மாத்திரையாதற்குச் சார்பு இவ்விடைச்சொற் றனித்து நிற்றலாற்றாமையிற் கேளென்

பதனோடு சார்ந்தொரு சொல்லாயே நின்று நி யிடைநின்ற விகரமொரு மொழியிடத்துக் குற்றிய லிகரமாய் வருத லானு மாண்டுணர்த்துதற்குச் சிறப்பின்மையானு மீண்டு போத்துக் (போத்தந்து) கூறினார். ஊர்ந்தெனவே குற்றிய லிகரமு மு யி ரெ ன் ப து பெற்றாம். உயிர்க்கல்ல தேறுதலின்மையின். 1

35 புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே
யுணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது குற்றிய லிகரம் புணர்மொழி யிடத்தும் (மொழி யகத்தும்) வருமென்கின்றது.

(இ-ள்) புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே-அக் குற்றியலிகரம் புணரியலுள் ஒருமொழிக் கண்ணன்றி. யிருமொழி தம்மிற் புணர்த்த லியன்ற நிலைமைக்கண்ணுங் குறுகுதலுரித்து, உணரக்கூறின் முன்னர்த்தோன்றும்— அதற்கிடமும் பற்றுக்கோடு முணரக்கூறத் தொடங்கி னவை குற்றிய லு க ர ப் பு ண ரி ய லுள்ளே கூறப்படு மென்றவாறு.

குறுகலு மென்னுமிடத் தும்மையை நிலையிடையு மென மாறிக்கூட்டுக. யகரம் வருவழி யென்னுஞ் சூத்தி ரத்து யகரமிட மு க ர ஞ் சார்ந்த வ ல் லெ ழு த் து ப் பற்றுக்கோடு.

(உ-ம்) நாகியாது, வரகியாது, தெள்கியாது, எஃ யாது, (எஃகியாது)கொக்கியாது. குரங்கியாது எனவரும். இது மொழிவாமென்னு முத்தி. 2

36 நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இது(இஃது)ஒருமொழிக் குற்றிய லுகரத்திற்கிடனும் பற்றுக்கோடு முணர்த்துகின்றது.

(இ-ள்)குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே-குற்றியலுக ரம் வல்லெழுத்துக்க ளாறினையு மூர்ந்து, நெட்டெழுத்

திம்பருந் தொடர் மொழி யீற்றும்-நெட்டெழுத்தின் பின் ஐவகைத்தொடர் மொழியினிறுதியினும் நிற்றல் வேண்டு மாசிரிய னென்றவாறு.

(நெட்டெழுத்தினது பின் தொடர்மொழியின தீறென நிலத்தகலம்போல வொன்றியற் கிழமைப்பட்டு நின்ற தம் மொழியிற் றீர்ந்து குற்றியலுகர நில்லாமையின் வல்லாறு பண்புத்தொகை. முற்றும்மை தொக்குநின்றது. அதிகார முறைமை யென்னு முத்தியால் நிற்றல் வேண்டுமென்பது வருவிக்க.

(உ-ம்) நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு எனவரும். இவ்வாறு வகையுமிடம் வல்லெழுத்துப்பற்றுக் கோடு. எனவே மொழிக்கீறாதலும் பெற்றாம். பெருமுரசு கருமுரசு, (திருமுரசு) என்பன விருமொழிக்கண்ணே வந்த குற்றுகரம் பசு (பரசு) இங்கு ஏது என்னு முற்றுகரங்கள் வடமொழிச்சிதைவு தருக்கு, அணுக்கு, (கருக்கு அணுக்கு) என்பன வினைக்கண் வந்த முற்றுகரம். குற்றுகரத்திற்கு முன்னர் வந்த வுயிரேறி முடியவரை மாத்திரையாய் நிற்றலு முற்றுகரத்திற்கு முன்னர் வந்த வுயிரேறி முடியா மையுந் தம்முள் வேற்றுமை. 3

37 இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

இது குற்றிய லுகரம் புணர்மொழிக்கட் டன்னரை மாத்திரை (மொழிக்கண் தன்னரை மாத்திரை) குறுகிவரு மென்கின்றது.

[இ-ள்] இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே-அவ் வுகர மொரு மொழியுள்நிற்பப் புணர்மொழியிடைப்படிற் றன்னரை மாத்திரையினுங் குறுகுமிடனு முண்டு, கடப்பா டறிந்த புணரியலான-அதற்கிடனும் பற்றுக்கோடும் யாண்டுப் பெறுவதெனின் அதன்புணர்ச்சி முறைமை யறியுங் குற்றிய லுகரப் புணரியலு ளென்றவாறு.

வல்லொற்றுத்தொடர்மொழியென்பதனுள்வல்லொற் றுத் தொடர்மொழியும் வல்லெழுத்து வரும்வழியுமிடன் ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

(உ-ம்) செக்குக்கணை சுக்குக்கோடு சுக்குக்கொடு என வரும். இவை யரை மாத்திரையிற் குறுகியவா றேனைய வற்றோடு படுத்துணர்க. இடனுமெனவே இதுசிறு பான்மையாயிற்று. 4

38 குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே

இது நிறுத்த முறையானே ஆய்த மொரு மொழியுள் வருமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஆய்தப்புள்ளி - ஆய்தமாகிய வொற்று, குறி யதன் முன்ன ருயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து -குற்றெழுத்தின் முன்னதா யுயிரோடு கூடிய வல்லெழுத் தாறன் மேலிடத்ததாய் வருமென்றவாறு.

வல்லாறன் மிசைத் தென்றதனானும் ஈண்டுப்புள்ளி யென்றதனானும் ஆய்தத் தொடர்மொழியென மேற் கூறு தலானு முயிரென்ற தீண்டுப் பெரும்பான்மையுங் குற்றுகர மேயாம். சிறுபான்மை யேனையுயிர்களையுங் கொள்க.

(உ-ம்) எஃகு, கஃசு கஃடு, கஃது, கஃபு, கஃறு, அஃது இஃது, உஃது, எனவரும். கஃறீது, முஃடீது என்பனவற் றை மெய்பிறிதாகிய புணர்ச்சி யென்றதனானு மீண்டுப் புள்ளி யென்றதனானு மாய்தமு மெய்யாயிற்று. அஃகாமை வெஃகாமை, அஃகி, வெஃகி, அஃகாம், (அஃகம்)என்பன (எனப்) பிறவுயிர்களோடும் வந்தன, (வந்தது) கஃசியா தெனத் திரிந்ததுவுங்குற்றுகரத்தோடு புணர்ந்ததாம். 5

39 ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும்

இது [இஃது] அவ்வாய்தம்புணர்மொழியகத்தும் வரு மாறு கூறுகின்றது.

[இ-ள்] ஈறியன் மருங்கினும் - நிலைமொழியீறு வரு மொழி முதலோடு புணர்ந்து நடக்குமிடத்தும், இசைமை தோன்றும் - அதன் னரைமாத்திரையேயிசைக்குந்தன்மை தோன்று மென்றவாறு.

[உ-ம்] கஃறீது, முஃடீதுஎனவரும். இவ்வீறியலுமாறு புள்ளிமயங்கியலுட் பெறுதும். ஈண்டுமிடங் குற்றெழுத்து மேல்வரும் வல்லெழுத்து. 6

40 உருவினு மிசையினு மருகித் தோன்று
மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா
வாய்த மஃகாக் காலை யான

இது [இஃது] எதிரது போற்றலென்னு முத்தியாற் சய்யுளியலை நோக்கி யாய்தத்திற் கெய்தியதோ ரிலக் கண முணர்த்திற்று [முணர்த்துகின்றது]

[இ-ள்] உ ரு வி னு மிசையினு மருகித்தோன்றுங் குறிப்பு மொழியும் - நிறத்தின் கண்ணு மோசையின் கண் ணுஞ் சிறுபான்மையாய்த் தோன்றும் (சிறுபான்மைஆய் தந் தோன்றும்) பொருள் குறித்தலை யுடையசொல்லும், எல்லாமொழியும் - அவையொழிந்த வெல்லாமொழிகளும் எழுத்தினியலா-ஒற்றெழுத்துக்கள் போல வரை மாத்திரை யின் கண்ணும் சிறுபான்மைமிக்கு நடந்து, ஆய்தமஃகாக் காலையான - ஆய்தஞ்சுருங்காத விடத்தான சொற்களா மென்றவாறு.

எனவே, யிவை யீண்டாராய்ச்சி யின்றேனுஞ் செய்யு ளியலிற் கூறு :'மொற்றளபெடுப்பினு மற்றென மொழிப' வென்னுஞ் சூத்திரத்துக் 'கண்ண்டண்ணெனக் கண்டுங்

கேட்டு' மென்புமிக் கண்ணென்பது சீர்நிலை யெய்தினார் போலக் கீஃறென்னுங் கல்லத ரத்தமென நிறத்தின் கண் ணுஞ்சுஃஃறென்னுந்தண்டோட்டுப்பெண்ணெனெயவிசை யின்கண்ணும் வந்த வாய்த மொரு மாத்திரைப் பெற்றுச் சீர்நிலை யெய்துங்கா லாண்டுப் பெறுகின்ற வொருமாத் திரைக் கீண்டெதிரது போற்றி விதி கூறுகின்றா ராய்த மதிகாரப் பட்டமை கண்டு

''எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகுவார்க்கில்லை வீடு''

என்றேனை யிடத்து ம் வந்தன, ஒற்றள பெடுக்குமாறு இவ்வதிகாரத்திற் கூறிற்றில்ர துவு(அஃது)உயிர்ளபெடை போலச் சீர்நிலை யெய்தலு மசைநிலையாந் தன்மையு முடையவாய்ச்செய்யுட் கேவருதலி, னிதனானே யொற்றள பெடையு மொரு மாத்திரைபெறு மென்பது பேற்றாம்.

எழுத்தினென்றவின் (இன்) னுவமப் பொருள். இயலா வென்றது செய் பா வென்னும் வினையெச்சம்.

இவ்வாறன்றி இக் குறிப்புச் சொற்க ளாய்த மிரண் டிட்டெழுதப்பட்ட வென்ற பொருள் கூறிற் செய்யுளிய லோடு மாறுபட்டு மாறுகொளக் கூறலென்னுங் குற்றந் தங்கு மென்றுணர்க. 7

41 குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்பர் சொத்தகுற் றெழுத்தே

இது எதிரது போற்றலென்னு முத்திபற்றிச் செய்யுளி யலை நோக்கி நீட்டம் வேண்டினென முற்கூறிய வளபெ டையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும் அளபெடுத்துக்கூறாக்காற் குன்றுவதான வோசையை

யுடையவவ்வளபெடைச் சொற்கண்ணே நின்றவ்வோசை யைநிறைக்குமவையாவையோவெனின் நெட்டெழுத்திம்ப ரொத்த குற்றெழுத்தே-நெட்டெழுத்துக்களின் பின்னாகத் தமக்கினமொத்த குற்றெழுத்துங்க ளென்றவாறு.

(எ-ம்) ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஓ ஒ, எனவரும். குன்றிசைமொழி யென்றதற் கிசை குன்றுமொழி யென்றா மாம். இனமொத்தலாவது பிறப்பும் புணர்ச்சியும் மோசை யும் வடிவுமொத்தல், ஈண்டுமொழியென்ற தளபெடையசை நிலை யென்னுஞ் செய்யுளியற் சூத்திரத்து எட்டியற் சீரின் பாற்படுகின்ற வெண்வகை யளபெடைச் சொற்களையும் அவை ஆ அ கடா அ ஆஅழி படாஅகை ஆஅங்கு ஆஅவது புகாஅர்த்து விராஅயத்து(விரா அயது)என்பனவாம். கட் டளை கொள்ளா வாசிரிய ரிவற்றைத் தனிநிலை முதனி லை யிடைநிலை [யிறுதிநிலை] யென்று மடக்குப. இனி மொழியென்றதற்குத் தனிநிலை யேழனையுமே கொள்ளி னொழிந்த வியற்சீர்ப்பாற் படுமளபெடை கோடற்கிடமின் மை யுணர்க. 8

42 ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்

இஃதொத்த குற்றெழுத் தில்லாதன வளபெடுக்குமாறு கூறுகின்றது.

இதுவுமெதிரது போற்றல்.

(இ-ள்) ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்கு—தமக்கினமில் லாத ஐகார ஔகார மென்று கூறப்படு மவ்விரண்டெழுத் திற்கும், இகர வுகர மிசைநிறை வாகும்–ஈகார ஊகாரங் கட்கினமாய் இகர உகரங்களைச் சார்த்திக் கூற வவை யக்குன்றிசை மொழிக்கணின் றோசையை நிறைப்பனவா மென்றவாறு.

(உ-ம்) ஐஇ, ஔஉ என நிறையாகக் (நிரனிறையா கக்) கொள்க. இவற்றை முற்கூறிய வியற்சீ ரெட்டுக்கு

மேற்பனவற்றோ டுதாரணங் காட்டிக் கொள்க. இத் துணையு நூன்மரபி னொழிவு.

43 நெட்டெழு தேழே யோரெழுத் தொருமொழி

இது (இஃது) ஓரெழுத் தொருமொழி யுணர்த்துதலு தலியவற்றுள் நெட்டெழுத்தானாம் மொழி யாக்கங் கூறு கின்றது.

(இ-ள்) நெட்டெழுத் தேழே - நெட்டெழுத்தாகிய வுயிர்களேழும், ஓரெழுத்தொருமொழி - ஓரெழுத்தானாகு மொருமொழியா மென்றவாறு.

முற்றும்மை தொகுத் தீற்றசை யேகாரம் விரித்தார்.

(உ-ம்) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, (ஔ) எனவரும். ஔகார முயிர்மெய்க்கண்ணல்லது வாராது. ஊவென்பது தசை. இது (இஃது) உயிர்க்கு உயிர் மெய்க்கும் வித்து. காதீ பூ சேதை (கோ) கௌ எனவரும். இவை தம்மை யுணர நின்றவழி யெழுத்தா மிடைநின்று பொருளுணர்த்திய வழிச் சொல்லாம். நெட்டெழுத்தேறியமெய் நெட்டெழுத் தாயுங் குற்றெழுத்தேறியமெய் குற்றெழுத்தாயும்நிற்றலே யன்றிமெய்க்கு நெடுமையுங் குறுமையு மின்மை யுணர்க.

44 குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே

இது குற்றெழுத்தைந்தும் மொழியாகா. வவற்றுட் சில மொழியாகு மென்ப துணர்த்துகின்றது.

[இ-ள்] குற்றெழுத்தைந்தும் -குற்றெழுத்தாகிய வுயிரைந்தும், மொழிநிறைபிலவே - தாமே நிறைந்துநின்று மொழியாதலில சிலமெய்யோடு கூடி நிறைந்து நின்று மொழியா மென்றவாறு.

[உ-ம்] அவை துநொ எனவரும். இவை யுயிர்மெய்க் கண்ணல்லதுவாராமையானுமுயிர்க்கண்ணுமேனையகரமு

மெகரமு (அகரமும் எகரமும்) அக்கொற்றன் எப் பொருள் எனத்தனித்து நின்றுணர்த்த லாற்றா திடைச் சொல்லாய்ப் பெயரைச் சார்ந்து நின்று சுட்டுப்பொருளும் வினாப்பொருளுமுணர்த்துதலானு நிறைபிலவென்றார். முற்றும்மை யீண்டெச்சப்பட்டு நின்ற தென்றுணர்க.

45 ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழியுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நிலையே

இது முன்னர் மெய்மயக்க முடலிலை மயக்கங் கூறலானு மீண்டு 'நெட்டெழுத்தேழே' யென்பதனானுமெழுத்தினானேமொழி யாமாறுங் கூறினா ரம்மொழிக்குச் சூத்திரத்தாற்பெயருமுறையுந் தொகையுங் கூறுகின்றார்.

(இ-ள்) ஓரெழுத்தொருமொழி யீரெழுத்தொருமொழி யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட-ஓரெழுத்தானாகு மொருமொழியு மிரண்டெழுத்தானாகு மொரு மொழியுமிரண்டனை யிறந்து பலவற்றினாலிசைக்குந் (பலவாற்றான் இசைக்குந்) தொடர்மொழியுடனே கூட, மொழி நிலை மூன்றே-மொழிகளினிலைமைமூன்றேயாம், தோன்றிய நெறியே - அவை தோன்றியவழக்கு நெறிக் கண்ணென்றவாறு.

[உ-ம்] ஆகா [நா] ஓரெழுத்தொருமொழி, மணிவரகு கொற்றன் ஈரெழுத்தொருமொழி, குரவு அரவு மூவெழுத் தொருமொழி, கணவரி நாலெழுத்தொருமொழி, அகத்தியனார் ஐந்தெழுத்தொருமொழி, திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொருமொழி, பெரும்பற்றப்புலியூர் ஏழெழுத்தொருமொழி.

ஓரெழுத்தொருமொழியுந் தொடர்மொழியு மென்னாதீரெழுத்தொருமொழியு மோதினார். சில பல வென்னுந் தமிழ் வழக்கு நோக்கி.

ஆசிரியர் ஒற்றுங் குற்றுகரமு மெழுத்தென்றது கொண்டு (கொண்டனராதலின்) மாகாவென நின்ற சொற்கள் மால்காலென வொற்றடுத்துழி யொற்றினான் வேறு பொருடந்து நிற்றலி னிவற்றையு மீரெந்தொரு மொழியென்று நாகு வரகு என்னுங் குற்றுகாவீற்றுச் சொற்களிற் குற்றுகரங்கள்சொல்லோடுகூடிப் பொருடந்து நிற்றலி னிவற்றையு மீரெழுத்தொரு மொழி மூவெழுத் தொரு மொழி யென்றுங் கோடு மென்பார்க்கு ஆசிரியர் பொருளைக்கருதாதுமாத்திரை குறைந்தமை பற்றி(யுயிரி லெழுத்து) (யுயிரெழுத்து)மெண்ணப்படா 'குறிலேதெடி லே குறிலிணை' யென்னுஞ்செய்யுளியற் சூத்திரங்களாலி வற்றை யெழுத்தெண்ணவு மலகிடவும் பெறாவென்று விலக்குவரா தலினிவற்றா னீண்டிரெழுத்தொருமொழியு மூவெழுத் தொருமொழியுங்கொள்ளின் மாறுகொளக் கூற லென்னுங்குற்றந் தங்குமென மறுக்க.

இனி 'நெட்டெழுத்தேழே(யோரெழுத்தொருமொழி)' குற்றெழுத் (தைந்து மொழிநிறை) பிலவே என்பனவற் றான்மெய்க்குக்குறுமை நெடுமை யின்மையா னுயிருமுயிர் மெய்யுமாகிய நெடிலுங் குறிலுமே மொழியாமென்று கூறிமீட்டு மதனை யேயு மிச்சூத்திரத்தா னோரெழுத் தொருமொழி யென்றெடுத்ததனோடே மீரெழுத்தையு மீரண்டிறந் ததனையுங் கூட்டி மொழியாகக் கோடலி னொற்றினைக் கூட்டி யெழுத்தாகக் கோடலாசிரியர்க்குக் கருத்தன்மை யுணர்க. அன்றியு மொழிப்படுத்திசைப்பினு மென்னுஞ் சூத்திரத்துக் கூறுகின்றவற்றானுமுணர்க. 'அகரமுத னகரவிறுவாய் முப்பஃதென்பவென' வொற்றி னையு மெழுத்தென்ற தெழுத்தின்றன்மை கூறிற்று. ஈண்டு மொழியாந் தன்மை கூறிற்று. 12

46 மெய்யி னியக்க மகரமொடு சிவணும்

இது தனிமெய்களை யகரமியக்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) மெய்யினியக்கம்—தனிமெய்களினது நடப்பு, அகரமொடு சிவணும் - அகரத்தோடு பொருந்தி நடக்கு மென்றவாறு.

என்றது (எனவே) ஒருவன் றனிமெய்களை நாவாற் கருத்துப் பொருளாகிய வுருவாக வியக்கு மியக்கமும் மூவ கையாற் காட்சிப் பொருளாகிய வடிவாக வியக்குமியக்கமு மகரத்தோடு கூடியே யியக்கப்படு மென்றவாறு. (நடக்கு மென்றவாறு)

(உ-ம்) 'வல்லெழுத்தென்ப க, ச, ட, த, ப, ற' ஙகார ஞகார முதனாவண்ணம்என்றார்போல்வனநாவாலியக்கிய வாறு காண்க. எழுதிக்காட்டுமிடத்துக் ககர முதலியன வுயிர் பெற்று நின்றவடிவாகவே யெழுதிப் பின்னர்த் தனி மெய் யாக்குதற்குப் புள்ளிபிட்டுக் காட்டுகின்ற வாற்றான் வடிவை யியக்குமிடத்து மகரங் கலந்து நின்றவாறு காண்க

இங்ஙனம் மெய்க்கணகரங் கலந்து நிற்குமாயு கூறினாற் போலப் பதினோருயிர்க்கண்ணு மகரங் கலந்து நிற்குமென்பதாசிரியர் கூறாராயினார். அன்னிலை (அந் நிலைமை) தமக்கே புலப்படுதலானும் பிறர்க் கிவ்வாறு ணர்த்த லரிதாக லானு மென்றுணர்க. இறைவ னியங்கு திணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணுமவற்றின் றன்மையாய் நிற்குமா றெல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல வகரமு முயிர்க்கண்ணுந் தனி மெய்க்கண்ணுங் கலந்தவற்றின் றன்மையேயாய் நிற்கு மென்பது சான்றோர்க்கெல்லாமென வள்ளுவனாருவமை கூறியவாற்றானுங் (கெல்லாம் ஒப்பமுடிந்தது)'அகாமுதல என்னுங்குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக் களெல்லாம் அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமெனவள்ளுவனாருவமை)கூறியவாற்றானும்கண்ண னெழுத்துக்களி லகரமா நின்றேனே யானே யெனக் கூறி யவாற்றானும் பிறநூல்களானு முணர்க. இதனானுண்

இதனானுண்மைத் தன்மையுஞ் சிறிது கூறினாரா யிற்று, இதனை நூன்மரபிற்கூறா தீண்டுக் கூறினார். (வல்லெழுத்தென்ப) க, ச, ட, த, ப, ற, வென்ற விடத்துத் தானிடை நின்றொற்றென்பதோர் பொருளை யுணர்த்தி மொழியிற்ந் தன்மை யெய்தி நிற்றலின் 13

47 தம்மியல் சிளப்பி னெல்லா வெழுத்து
மெய்ந்நிலை மயக்க மான மில்லை

இது முன்னர் மெய்க்கணுயிர் நின்றவாறு கூறியவ் வுயிர் மெய்க்கண்ணேறி யுயிர்மெய்யாய் நின்றகாலத் தம் மெய்யாற் பெயர்பெறு மென்கின்றது. (பெயர்பெறுமாறு கூறுகின்றது)

(இ-ள்) எல்லாவெழுத்தும்-பன்னீருயிரையும் (பன்னீருயிரும்) மெய்ந்நிலை தம்மியன் மயக்கங் கிளப்பின்-மெய்யின் றன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றாகப் பெயர் கூறின், மானமில்லை-குற்றமில்லை யென்றவாறு.

மெய்யின் றன்மையாவது வன்மை, மென்மை, யிடைமை. தம்மியலாவ துயிர்த்தன்மை. என்றது வல்லெழுத்து மெல்லெழுத் திடையெழுத்தென வுயிர்மெய்க்கும் பெயரிட்டாடல் (டாளுதல்) கூறிற்று. அவை வல்லெழுத்தியையினவ்வெழுத்து மிகுமே எனவும் மெல்லெழுத்தியையினிது தியோடுறழும் எனவும், இடையெழுத்தென்ப ய,ர,ல,வ, ழ,ள எனவும் பிறாண்டு மாள்ப. எழுத்தை வன்மை, மென்மை, யிடைமை யென விசேடித்த சிறப்பா னிப்பெயர் கூறினார்.

இதற்குப் (இஃதன்றிப்) பதினெட்டு மெய்யுந்தன்மை கூறுமிடத்து மெய்மயக்கங் கூறியவகையானன்றி வேண்டியவாறு மயங்குமென்று கூறி அவற்றுள் ''லளஃகான் முன்ன'' ரென்பதனைக் காட்டி லஃதிரு மொழிக்கண்ண தென்று மறுக்க. 14

48 யரழ வென்னு மூன்று மொற்ற ங்
கசத ஙஞநம வீரொற் றாகும்.

இது ஈரொற்றுடன் நிலையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) ய, ர, ழ வென்னு மூன்று மொற்ற—ய, ர, ழ வென்று கூறப்படு மூன்று புள்ளியு மொற்றாய் நிற்ப, க,ச, த,ப,ங,ஞ,ந,ம வீரொற்றாகும்—க,ச,த,ப க்களும் ங,ஞ,ந ம க்களும் வந்தீரொற்றாய் நிற்கு மென்றவாறு.

(உ-ம்) வேய்க்க, வாய்ச்சி, பாய்த்தல், வாய்ப்பு,என வும் பீர்க்கு, நேர்ச்சி, வார்த்தல், ஆர்ப்பு, எனவும் வாழ்க் கை தாழ்ச்சி, தாழ்த்தல், தாழ்ப்பு, எனவும் காய்ங்கனி, தேய்ஞ்சது, காய்ந்தனம், காய்ம்புறம்,எனவும் நேர்ங்கல், நேர்ஞ்சிலை, நேர்ந்தலை, நேர்ம்புறம், எனவும் வரும். ழகாரத்திற்கு வாழ்ந்தனம் எனவிக்காலத்து நகரவொற்று வரும். ஏனைய மூன்று மிக்காலத்து வழங்குமேனு முணர்க (வழங்கு மெனின் உணர்க).

இனி தாழ்ங்குலை தாழ்ஞ்சினை வீழ்ம்படை எனவக் காலத்து வழங்கு மென்றித் தொகைச் சொற்கள் காட்டலு மொன்று. உரையாசிரியரு மிருமொழிக்கட் காட்டி யவற் றிற் கவ்வீறுகடோறுங் கூறுகின்ற சூத்திரங்கள் பின்னர் வேண்டாமை யுணர்க. இது மூவொற்றுடனிலை யாதலி னீண்டு வைத்தார். (இஃது ஈரொற்றுடனிலை யாதலி னீண்டு வைத்தார்)

இனி நெடிற் கீழே பன்றிப் பலவெ ழந்துந் தொடர்ந்து நின்றதன்பின்னு மீரொற்று வருதல் கொள்க. அவை வேந் தர்க்கு அன்னாய்க்கு என்றாற் போல்வனவாம். 15

அவற்றுள்

49 ரகார ழகாரங் குற்றொற் றாகா

அவற்றுள், இது எய்தியதொ ருருங்கு மறுத்தல் நுத லிற்று (கூறுகின்றது)

(இ-ள்) அவற்றுள் - முற்கூறிய மூன்றனுள், ரகார ழகாரம்-ரகாரமும் ழகாரமும், குற்றொற்றாகா - குறிற் கீழொற்றாகா நெடிற் கீழொற்றா மவை குறிற் கீழுயிர் மெய்யா மென்றவாறு.

கீழென்னு முருபு தொகுத்துக் கூறினார். ஆகாதன வற்றிற் குதாரணமின்று.

(உ-ம்) கார் வீழ் எனநெடிற் கீழொற்றாய் வந்தன. சரு, மழு,வெனக் குறிற்கீழுயிர்மெய்யாய் வந்தன. இவற் றை விலக்கவே,யகரம் பொய்யெனவும் நோயெனவுமிரண் டிடத்து மொற்றாய் வருதல் பெற்றாம். புகழ் புகர் புலவர் (புகர் புகழ் புலவர்) என்றாற் போல்வனவோ வெனின் மொழிக்கு முதலா மெழுத்தினைச் சொல்வனவற்றிற்கே யீண்டாராய்ச்சியாலவைவேண்டியவாறேவருமென்றுணர் கஅன்றியுங்குற்றொற்றென்றே சூத்திரஞ்செய்தலிற்குறி, லிணை யொற்றினைக் காட்டிக் கடாவ லாகாமையுணர்க இது வரையறை யின்றி யுயிர்மெய்யோடு தனிமெய் மயங் குவனவற்றிற் சில வொற்றிற்கு வ ரை ய றை யீண்டுக் கூறியது. (16)

50 குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல

இது அளவிறந் துயிர்த்தலு மென்னு நூன்மரபிற் சூத்திரத்திற்குப் புறநடையாயதன்கணிகழ்வதோ ரையய மறுத்தலை நுதலிற்று.

இது அளவிறந் துயிர்த்தலு மென்னு (செய்யுளியலை நோக்கிய) நூன்மரபிற் சூத்திரத்திற்குப் புறநடையாய தன் கணிகழ்வதோரைய மறுத்தலை னுதலிற்று (ஐயம் அகற்றுகின்றது) என்னை உயிரு முயிர்மெய்யு மளவிறந் திசைக்குங் காற்குறிலோ நெடிலோவிசைப்பதெனமாணாக் கர்க்கு நிகழ்வதோ ரைய மறுத்தலின்.

(இ-ள்) குறுமையும் நெடுமையும்-எழுத்துக்களது குறிய தன்மையு, நெடியதன்மையும், அளவிற்கோடலின் மாத்திரையென்னு முறுப்பினைச் செவி கருவியாக வளக்கின்ற வளவுதொழிலாலேசெய்யுட்குக் கொள்ளப்படுதலின் தொடர்மொழியெல்லாம் - அம்மாத்திரை தம்முட் டொடர்ந்து நிற்கின்ற சொற்களெல்லாம், நெட்டெழுத்தியல நெட்டெழத்து மாத்திரை மிக்கு நடக்கும்படியாகத் தொடர்ந்த சொல்லா மென்றவாறு.

(உ-ம்) வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல் எனவும் கடியவே கனங்குழாய் எனவும், குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரை மிகுத்தற்குக் கூடியவாறு காண்க. (உணர்க) ஏனைச் செய்யுட்களையு மிவ்வாறே காண்க எனவே மாத்திரையை யளக்குங்கா னெட்டெழுத்தே மாத்திரை மிக்கு நிற்கு மென்றமையா னெதிரது போற்றலென்னு முந்கி பற்றிச் செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று. ஈண்டுக் கூறினார் நெட்டெழுத்திரண்டு மாத்திரையி னிகந்து வருமென்ப தறிவித்தற்கு.

அளபென்று மாத்திரையைக் கூறாதளவெனச் சூத்திரஞ் செய்தமையா னளவு தொழின்மேனின்றது. அதுசெய்யுளியலுண் மாத்திரை யளவு மென்றதனானு முணர்க. (என்பதனானு முணர்க) இயல வென்றதனைச் செயவெனச்சமாகப் (மாக்கிப்) படுத்தலோசையாற் கூறுக.

இனித் தன்னின முடித்த லென்பதனானொற்றிற்கு மிவ்வாறேகொள்க. 'குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி'யென்ற குறுஞ்சீர் வண்ணத்திற்குரிய குற்றெழுத்துக்களெல்லா மிடையினின்றவொற்றெழுத்தைமாத்திரை மிகுத்தற்கு கூடிநின்றவாறுணர்க. எனவே குற்றெழுத்துக்களெல்லா மொற்றெழுத்துக்களோடு நெட்டெழுத்துக்களோடுங் கூடியவற்றையே யோசை மிகுந்துநிற்கு மென்றவாறாயிற்று இதனானே யொற்றிசை நீடலுமென்ற வொற்றிசை

நீளுங்காற் குற்றெழுத்தாய் நீளுமென்றார். இனி உரை யாசிரியர் புகர் புகழ் எனக் குறிலிணைக்கீழ் ரகார ழகாரங் கள் வந்த தொடர்மொழிக ளெல்லாந் தார் தாழென்றார் போல வோசை யொத்து நெட்டெழுத்தின் றன்மையவா மென்றாராலெனின் புகர் புகழ் என்பனவற்றைக் குறிலி ணை யொற்றடுத்து நிரையசையாகவும் தார் தாழ் என்ப னவற்றை நெட்டெழுத் தொற்றடுத்து நேரசையாகவுங் கோடலானுமது பொருளன்மை யுணர்க.

புகர் புகழ் என்பனவற்றை நெட்டெழுத்தென்றே எவ் விடத்தும் ஆளாமையானும் நெட்டெழுத்தாகக் கூறிய இலக்ஷணத்தால் ஒருபயன் கொள்ளாமையானுஞ்செய்யுளி யலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரையசையா கவுந் தார் தாழ் என்பனவற்றைநெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசையாகவுங் கோடலானும் அது பொருளன்மை யுணர்க. (17)

51 செய்யு ளிறுதிப் போலி மொழிவயி
னகார மகார மீரொற் றாகும்

இது, செய்யுட்கணீ ரொற்றிலக்கணமாமாறு கூறு கின்றது.

(இ-ள்) செய்யுட் போலி மொழியிறுதிவயின்-செய்யுட் கட் போலுமென்னுஞ் சொல்லி னிறுதிக்கண், னகார மகார மீரொற்றாகும் - னகாரமு மகாரமும் வந்தீரொற்றுடன் நிலையா மென்றவாறு. (ஈரொற்று உடனிலையாய்நிற்கு மென்றவாறு)

(உ-ம்) 'அந்நூலை முன் னூ ல ா ய் கொள்வானும் போன்ம்' 'சிதையுங்கலத்தைப் பயினாற்றிருத்தித் திசையறி மீகானும் போன்ம்' எனவரும். போலும், என்னுஞ்சொல் போன்மெனச் செய்யுமென்னும் பெயரெச்ச மீற்று மிசை யுகரமெய்யோடுங் கெட்டது திரிந்து நின்றது (கெட்டு லகாரந் திரிந்து நின்றது) இஃது இறுதியில் முற்று இடை

யிற் பெயரெச்சமாகிய உவமவுருபு ஈண்டு முற்றென்பார் (இறுதிமொழி யென்றார்) இது பெயரெச்சமாகிய வுவமவுருபு 18

52 னகாரை முன்னர் மகாரங் குன்றும்

இது (இஃது) அரையளவு (அரையளபு) குறுகுமென்ற மகரத்திற்கு குறுகு மிட மிது வென்கின்றது.

(இ-ள்) (னகாரை) னகார முன்னர் மகாரங் குறுகும் முற்கூறிய னகாரத்து முள் வந்த மகரந் தன்னரை மாத்திரையிற் குறுகி நிற்கு மென்றவாறு.

(உ-ம்) போன்ம் என (முன்னர்க்) காட்டினாம். னகாரையென விடைச் சொல்லீறு திரிந்து நின்றது.

இனித் தன்னின முடித்த லென்பதனான் னகரவொற்றின் முன்னு மகரங்(மகாரங்) குறுகுதல் கொள்க,மருளினு மெல்லா மருண்ம் எனவரும். 19

53 மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவேறிசைப்பினு மெழுத்திய றிரியா வென்மனாற் புலவர்

இது (இஃது)ஒற்றுங் குற்றுகரங்களுமீண்டெழுத்துக்களோடு கூட்டி ரெண்ணப்பட்டுநிற்குமென்பதுஉஞ் செய்யுளியலுளெண்ணப்படாதுநிற்குமென்பதுஉங்கூறுகின்றது

[இ-ள்] தெரிந்து - ஒற்றுங் குற்றுகரமுங் பொருடரு நிலைமையை யாராய்ந்து, மொழிப்படுத்திசைப்பினும் - சொல்லாகச் சேர்த்துச் சொன்னாலும்[சொல்லினும்] வேறிசைப்பினும்-செய்யுளியலு ளொற்றுங் குற்றுகரமும் பொருடருமேனுமாத்திரைகுறைந்துநிற்கும்நிலைமையைநோக்கியெழுத்தெண்ணப் பெறப்படாதென் [பெறப்படாவென்னு] றீண்டைக்கு வேறாகக் கூறினாலும், [கூறினும்]எழுத்திய

றிரியா வென்மனார் புலவர் -அவ்விரண்டிடத்துமரைமாத் திரை பெற்று நிற்குமொற்று மாய்தமு (மொற்றுங் குற்று கரமும்) முற்கூறிய வெழுத்தாந் தன்மை திரியா வென்று கூறுவர் புலவரென்றவாறு.

இதனாலொற்று மாய்தமுங் குற்றுகரமு மெழுத்தாய் நின்று பொருடந்து (எழுத்தாகி நின்று பொருள் தந்தும்) மெழுத்தெண்ணவு மலகிடவும் பெறாவென்பதுகூறினாரா யிற்று. தெரிந்துவேறிசைத்தல் குற்றுகரத்திற்கின்றா தலினேற் புழிக் கோடலா னொற்றிற்கு மாய்தத்திற்குமே கொள்க.

(உ-ம்)அல், இல், உண், எல், (எண்) ஒல், எனவும் கல், வில், முள், செல், சொல், எனவும் ஆல், ஈர்,ஊர்,ஏர் ஓர் எனவும் கால், சீர், சூல், தேன், கோன்,எனவும் உயிரு முயிரு மெய்யுமாகிய குற்றெழுத்தையு நெட்டெழுத்தையும் ஒற்றெழுத்துக்க ளடுத்து நின்று பொருடந்தவாறுகாண்க. (பொருள் தந்தவாறு காண்க.) கடம் கடாம் உடையான் திருவாரூர் அகத்தியனார் என வீரெழுத்தையு, மூவெழுத் தையு, நான்கெழுத்தையு [நாலெழுத்தையும்] மையெழுத் தையு (ஐயெழுத்தையும்) மி று தி யி லு மி டை யி லு ம் ஒற்றடுத்து நின்று பொருடந்தவாறு காண்க. (பொருள் தந்தவாறுகாண்க) (எஃகு) தெள்கு, கொக்கு, குரங்கு, என்பனவு மெழுத்தெண்ணவும் படாஅ வுயிர்த்திற மியக்க மின்மையான என்பதெழுத்தெண்ணப் பெறாமைக்குவிதி. [உயிரிலெழுத்து மெண்ணப்படாஅ உயிர்த்திற மியக்க மிண்மையான என்பது எழுத்து எண்ணப் பெறாமைக்கு விதி]

இனிஇச்சூத்திரத்திற் கெழுத்துக்களைச்சொல்லாக்கிக் கூறினாலும் பிறித்துக்(பிறிதாகக்) கூறினாலும்(கூறினும்) மாத்திரை திரியாதென்று பொருள் கூறி அகரமென்புழியும் அ என்புழியும் அல் என்புழியும் ஆ வென்புழியும் காலமென் புழியும் காவென்புழியும்(அ என்புழியும் ஆலம் என்புழியும் ஆ என்புழியுங் ககரம் என்புழியுங் க என்புழியுங் காலம்என்

புழியுங் கா என்புழியும்)ஓசையொத்து நிற்கு மென்றாலது முன்னர்க் கூறிய விலக்கணங்களாற் பெறப்படுதலிற் (பய னில்) பயமில் (கூறலாமென்) கூற்றா மென்க.

54 அகர விகர மைகார மாகும்

இது சிலவெழுத்துக்கள் கூடிச் சிலவெழுத்துக்கள் போல விசைக்குமென் றெழுத்துப் போலி கூறுகின்றது.

(இ-ள்) அகர விகர மைகார மாகும் - அகரமு மிகர முங் கூட்டிச் சொல்ல ஐகாரம் போல விசைக்குமது கொள் ளற்க வென்றவாறு.

போல வென்றது தொக்கது.

(உ-ம்) ஐவனம் அ இவனம் எனவரும். ஆ தமென்ற தனானிஃ திலக்கண மாயிற்று 21

55 அகர உகர மௌகார மாகும்

இதுவுமது

(இ-ள்) அகர உகர மௌகாரமாகும் - அகரமும் உக ரமுங் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல விசைக்குமது கொள்ளற்க வென்றவாறு

போல் வென்றது தொக்கது

(உ-ம்) ஔவை அஉவை எனவரும் 22

56 அகரத் திம்பர் யகரப் புள்ளியு
மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

இதுவுமது

(இ-ள்) அகரத் திம்பர் யகரப் புள்ளியும் - அகரத் தின் பின் னிகரமேயன்றி யகரமாகிய புள்ளிவந்தாலும் ஐயெ னெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும்-ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவுபெறத் தோன்று மென்றவாறு.

(உ-ம்) ஐவனம் அய்வனம் எனவரும் மெய்பெற வென்றதனான் அகரத்தின் பின்னருகரமே யன்றி வகரப் புள்ளியு மௌகாரம் போலவருமென்று கொள்க. ஒளவவை (ஒளவை) அவ்வை எனவரும். 23

57 ஓரள பாகு மிடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான

இது அதிகாரத்தா னைகாரத்திற்கு மெதிரது போற்ற லென்பதனாற் செய்யுளியலை நோக்கி மாத்திரைச் சுருக்கங் கூறுகின்றது.

(இ-ள்) மொழிவயினான - ஒரு சொல்லிடத்தே நின்ற வைகார ஔகாரங்கள், தேருங்காலை - ஆராயுமிடத்து, ஓரளபாகு மிடனுமா ருண்டே-ஒருமாத்திரையாய் நிற்கு மிடமுமுண்டென்றவாறு.

உம்மையா னிரண்டு மாத்திரை பெறுதலே வலியுடைத் தாயிற்று. இடனுமென்ற தொரு சொல்லின் முதலிடை கடையிற்குறுகு, மதுசெய்யுட்களோசை யிடர்பட்டொலிக்கு மிடத்துக் குறுகு மென்றற்கு. உரையிற் கோடலால் ஐகார மிரண்டிடத்து (ஐகார முதலிடைகடை யென்னு மூன்றிடத் தூங்)குறுகும், ஔகாரம் முதற்கண் குறுகுமெனக் கொள்க.

(உ-ம்) ஐப்பசி கைப்பை இடையன் (குவளை) தினை எனவரும். 'அடைப்பையாய் கோறா' வென்றலும் எனவும் புனையிளங் கொங்கையாய் வருமெனவும் பிறவாறும் வரு வனவுஞ் செய்யுளிபலுட் காண்க. ஔவை கௌவை என வரும். ஔகாரம் 'கௌவைநீர்வேலி கூற்று' எனத் தொடை நோக்கிக் குறுகின வாறுங் காண்க. தேருங்காலை யென்றதனா னோரெழுத் தொருமொழியுங் குறுகும். தை கை மை பை எனவரும். 24

58 இகர யகர மிறுதி விரவும்

இதுவும் போலி கூறுகின்றது.

(இ-ள்) இகர யகர மிறுதி விரவும்-இகரமும் யகரமு மொருமொழியி னிறுதிக்க ணோசைவிரவிவரும். அவ் விகாரங் கொள்ளற்க வென்றவாறு. 25

நாய் நாஇ எனவரும்.

59 பன்னீ ருயிரு மொழிமுத லாகும்

இது மேலெழுத்தினான் மொழியாமாறுணர்த்தி யம் மொழிக்கு முதலாமெழுத்திவை யென்ப துணர்த்துதல் நுதலிற்று (உணர்த்துகின்றது).

(இ-ள்) பன்னீருயிரும் - பன்னிரண்டுயிரெழுத்தும், மொழிமுதலாகும்-மொழிக்கு முதலாமென்றவாறு.

(உ-ம்) அடை, ஆடை, இலை, ஈயம், உள்ளை, உளை, ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஒக்கம், (ஓடம்) ஔவ்வியம் (ஔவியம்) எனவரும் 26

60 உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா

இது உயிர்மெய் மொழிக்கு முதலா மென்கின்றது.

(இ-ள்) உயிர்மெய்யல்லன மொழி முதலாகா-உயி ரோடுகூடிய மெய்யல்லாதனவாகிய தனிமெய்கள் மொழிக்கு முதலாகா வென்றவாறு. ஈண்டுயிர் மெய்யென் றது வேற்றுமை நயங் கருதிற்று. ஒற்றுமை நயங்கருதின் மேலிற் சூத்திரத் துயிரோடுங் கூடியாமென்றல் பயனின் றாம். 27

(எனவே உயிரோடு கூடிய மெய்களே மொழிக்கு முத லாவன என்றவாறாம். ஈண்டு உயிர்மெய்யென்றது வேற் றுமை நயங்கருதிற்று. ஒற்றுமை நயங்கருதின் மேலைச் சூத்திரத்து உயிரோடுகூடி ஆமென்றல் பயனின்றாம்) 27

61 க த ந ப ம வெனு மாவைந் தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே

இதுமேற் பொதுவகையா னெய்துவித்த விருநூற் றொரு பத்தாறெழுத்துக்களைச் சிறப்பு வகையான் வரையறுத் தெய்துவிக்கின்றது.

(இ-ள்) க த ந ப ம வெனு மாவைந்தெழுத்தும் — கதநபம வென்று கூறப்படுமவ்வைந்து (கூறப்பட்ட அவ்வைந்தும்) தனிமெய்யும், எல்லாவுயிரோடுஞ் செல்லுமார் முதலே - பன்னிரண்டுயிரோடு மொழிக்கு முதலாதற்குச் செல்லு மென்றவாறு.

(உ-ம்) கலை, (கார்) கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை, எனவும் தந்தை, தாதி, (தாய்) தித்தி. தீமை, துணி, தூணி, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை எனவும் நந்து, நாரை, நிலம், நீலம், நுகம், நூல், நெய்தல், நேமி, நை வளம், நொச்சி, நோக்கம் நௌவி எனவும் படை, (பால்) பாரம், பிடி, பீடு, புகழ், பூமி, பெட்டை, பெடை, (பேடை) பைதல் பொன் (போது) (போத்தம்) பௌவம் எனவும் மடி, மாலை, மிடறு, மீளி, முகம், மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோத்தை, மௌவல் எனவும் வரும். 28

62 சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே

இதுவுமது

(இ-ள்) சகரக் கிளவியு மவற்றோ ரற்று - சகரமாகிய தனிமெய்யுமுற்கூறியவைபோலவெல்லா வுயிரோடுங்கூடி மொழிக்கு முதலாம், அ ஐ ஔ வெனு மூன்றலங்கடையே - அ ஐ ஔ வென்று கூறப்படு மூன்றுயிரு மல்லாத விடத்தென்றவாறு.

(உ-ம்) சாந்து சிற்றில் (சீற்றம்) சீரை (சுரை) சுதை சூரல் செக்கு சேவல் சொல் சோறு எனவரும். சட்டி சகடம் சமழ்ப்பு என்றாற் போல்வன. 'கடிசொல்லில்லை' என்பதனாற் கொள்க. சையம் சௌரியம் என்பனவற்றை வட சொல்லென மறுக்க. 29

63 உஊ ஒஓ வென்னு நான்குயிர்
வஎன் னெழுத்தொடு வருத லில்லை

இதுவுமது

(இ-ள்) உ ஊ ஒ ஓ வென்னு நான்குயிர் — உ ஊ ஒ ஓ வென்றுசொல்லப்பட்ட நான்குயிரும், வ என்னெழுத்தோடு வருதலில்லை—வ என்று சொல்லப்படுந் தனிமெய்யெழுத்தோடு கூடிமொழிக்கு முதலாய் வருதலில்லை (என்றவாறு)

எனவே யிவை மொழிக்கு முதலா மென்றவாறாயிற்று

(உ-ம்) வளை, வாளி, வினை, (விளரி) வீடு, வெள்ளி வேட்கை, வையம், வௌவுதல் எனவரும். 30

64 ஆ எ ஒவென்னு மூவுயிர் ஞகாரத்துரிய

இதுவுமது

(இ-ள்) ஆ எ ஒ வென்னு மூவுயிர் - ஆ எ ஒ வென்று கூறப்படு மூன்றுயிரும், ஞகாரத்துரிய - ஞகர (ஞகார) வொற்றோடு கூடி மொழிக்கு முதலாதற்குரிய (என்றவாறு)

எனவே யேனைய வுரியவல்ல வென்றவாறு (வென்பதாம்)

(உ-ம்) ஞாலம் ஞெண்டு ஞொள்கிற்று எனவரும்.

'ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பு' என்பது திசைச்சொல் ஞழியிற் றென்றார் போல்வன விழிவழக்கு. 31

65 ஆவோ டல்லாது யகர முதலாது

இதுவுமது

[இ-ள்] ஆவோ டல்லாது யகர முதலாது - ஆகாரத் தோடு கூடியல்லது யகரவொற்று மொழிக்கு முதலாகா தென்றவாறு.

[உ-ம்] யானை யாடு யாமம் எனவரும்.யவனர் யுத்தி யூபம் யோகம் யௌவனம் என்பனவடசொல்லென மறுக்க 32

66 முதலா வேன தம்பெயர் முதலும்

இது மொழிக்கு முதலாகாதனவும் மோரோவழியா மென்கின்றது.

[இ-ள்] முதலாவும் - மொழிக்கு முதலாகாவென்ற வொன்பது மெய்யும், ஏனவும் - மொழிக்கு முதலாமென்ற வொன்பதுமெய்யும், பன்னிரண்டுயிரும் தம்பெயர் முதலும் -தம்பெயர் கூறுதற்கு முதலாமென்றவாறு. முதலாவு மேனவு மென்னு மும்மைகள் தொக்குநின்றன.

[உ-ம்] ஙகரமும் டகரமும் ணகரமும் ரகரமும் லகரமும் ழகரமும் ளகரமும் றகரமும் னகரமும் எனமொழிக்கு முதலாகா வொன்பதும் முதலாமாறு ஙக்களைந்தார் டப் பெரிது ணந்நன்று என [வரும்] இவ்வாறே ஏனையவற் றோடு மொட்டுக. இனி [ஏனவென்றதனான்] கக்களைந் தார் தப்பெரிது அக்குறிது ஆநெடிது என மொழிக்கு முதலாயவற்றையுந் தம்பெயர் கூறுதற்கு முதலாமா றொட்டிக்கொள்க. வரையறுக்கப்பட்டு மொழிக்கு முதலா காது நின்ற மெய்க்கு மிவ் விதி கொள்க. அவை சகரத்து மூன்றும் வகரத்து நான்கும் ஞகரத்தொன்பதும் யகரத்துப் பதினொன்றுமாம். 33

67 குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்

இது [இஃது] எழுத்துக்களை மொழிக்கு முதலாமாறு கூறி முறையே குற்றிய லுகரம் மொழிக்கு முதலாமாறு கூறுகின்றது.

(இ-ள்)குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின் - குற்றியலுகரமானது முன்னிலைமுறைப் பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் - தனிமெய்யாய் நின்ற நகரத்து மேனின்ற நகரத்தொடு கூடி மொழிக்கு முதலாமென்றவாறு.

[உ-ம்] நுந்தை எனவரும். இதனானே முறைப்பெயரிடம்[ரிடமும்] நகரம் பற்றுக்கோடுமாயிற்று ஈண்டுக் குற்றிய லுகரமெய்ப்பின்னர் நின்றதேனு மொற்றுமை நயத்தான் மொழிக்கு முதலாமென்றார். இது செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று. 34

68 முற்றிய லுகரமொடு பொருள்வேறு படா அ
தம்பெயர் மருங்கி னிலையிய லான

இது மேலதற்கோர் புறநடை [கூறுகின்றது]

[இ-ள்] அப்பெயர் மருங்கி னிலையியலான - அம்முறைப்பெயரிடத்தே நிற்ற லிலக்கணமான குற்றியலுகர, முற்றியலுகரமொடு பொருள்வேறு படாஅது - இதழ்குவித்துக் கூறும்வழி வரு முற்றுகரத்தோடவ்விடத்துக் குற்றுகரம் பொருள் வேறுபடுமாறு போல வீண்டுப் பொருள் வேறுபட்டு நில்லாதென்றவாறு.

காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமுங் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல நுந்தையென்றிதழ்குவித்து முற்றக்கூறியவிடத்து மிதழ் குவியாமற் குறையக் கூறியவிடத்து மொருபொருளே தந்தவாறு காண்க. ஆயின் நுந்தாயென்பதோவெனி னஃதிதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று இயலென்றதனா

னிடமும் பற்றுக்கோடு மிரண்டற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனான் [இதனானே] மொழிக்கு முதலா மெழுத்துத் தொண்ணூற்று நான்கென்றுணர்க. 35

69 உயிர் ஔ வெஞ்சிய விறுதியாகும்

இது (இஃது) உயிர்மொழிக் கீறாமாறு கூறுகின்றது.

(இ-ள்) உயிர்ஔ வெஞ்சிய விறுதி யாகும்—உயிர் களுள்ளே ஔகார மொழிந்தன வெல்லா மொழிக்கீறா மென்றவாறு

எனவே ஔகாரவுயி ரீறாகா தாயிற்று. இது (இஃது) உயிர்க்கு முயிர்மெய்க்கும் பொது.

(உ-ம்) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என இவை தாமே யீறாயின. ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனக் குறிலைந்து மளபெடைக்க ணீறாயின கா தீ பூ சே கை கோ எனவும் விள கிளி மழு எனவும் வரும். எகர ஒகர மேலே விலக்குப 'அளபெடை மிகூஉ மிகர விறு பெயரென்பாராதலின்' அளபெடைப் பின் வந்த குற்றெழுத்துங் கொள்வராசிரிய ரென்றுணர்க. நெட்டெழுத்தேழுமோரெழுத் தொருமொழி (நெட்டெழுத் தேழு முதன்மொழியா மென்னுந்) யென்னுந் துணையே முன்னுணர்த்தலி னீண்டவை யீறா மென்று முணர்த்தினார். 36

70 கவவோ டியையி னெளவு மாகும்

இது (இஃது) ஈறாகா தென்ற ஔகார மின்னுழியா மென்கின்றது.

(இ-ள்) ஔவும் — முன்னீறாகா தென்ற ஔகாரமும், கவ்வோடியையி னாகும்—ககர வகரத்தோடியைந்தவழி யீறா மென்றவாறு.

(உ-ம்) கௌ வௌ எனவரும். எனவே யொழிந்த வுயிரெல்லாந் தாமேநின்றும் பதினெட்டுமெய்களோடுங் கூடி நின்று மீறாதலிதனாற் பெற்றாம். இதனானே ஔகார மேனை மெய்க்கண்ணும் (மெய்க்கண்) வாராதென விலக்குதலும் பெற்றாம். (உயிர் ஙகரத்தோடு கூடி) ஙகர மொழிக்கீறா மென்பதிதனா லெய்திற்றேனு மது மொழிக் கீறாகாமை தந்து புணர்ந்துரைத்தலானுணர்க, இது வரையறை கூறிற்று. 37

71 எ என வருமுயிர் மெய்யீ றாகாது

இது (இஃது) எகரந்தானே நின்றவழியன்றி மெய் யோடுங் கூடினா லீறாகாதென விலக்குகின்றது.

(இ-ள்) எ என வருமுயிர் மெய்யீறாகாது - எ என்று கூறவரு முயிர்தானே யீறாவதன்றி யாண்டு மெய்களோ டியைந்தீறாகா தென்றவாறு. 38

72 ஒவ்வு மற்றே நவ்வலங் கடையே

இது விலக்கும் வரையறையுங் கூறுகின்றது.

(இ-ள்) ஒவ்வுமற்று - ஒகரமும் (முன்சொன்ன எகரம் போலத்) தானே யீறாவதன்றி மெய்களோடியைந் தீறா காது நவ்வலங்கடையே - நகரவொற்றோடல்லாத விடத் தென்றவாறு

(உ-ம்) நொ கொற்றா நொ அலையநின்னாட்டை நீ என வரும். 39

73 ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை.

இது சிலவுயிர் சில வுடலோடேறி முடியாதென விலக் கும் வரையறையுங் கூறுகின்றது.

(இ-ள்) ஏ ஓ எ னு மு யி ர் ஞகாரத்தில்லை - ஏ ஓ வென்று கூறப்பட்ட விரண்டுயிருந் தாமே நின்றும் பிற மெய்களோடு நின்று மீறாதலன்றி ஞகாரத்தோடியைந் தீறாதலின் றென்றவாறு

எனவே யேனையுயிர்கள் ஞகாரத்தோடீறா மென்றா ராயிற்று.

(உ-ம்) உரிஞு உரிஞா உரிஞி உரிஞீ உரிஞு உரிஞூ இவை யெச்சமும் வினைப்பெயரும் பற்றிவரும். அஞ்ஞை மஞ்ஞை இவைபெயர். ஏனைய வைந்தும் விலக்கப்பட்டன. உரிஞோ வென்பது 'கடிசொல்லில்லை' என்பதனாற் கொள்க. 40

74 உ ஊ கார நவவொடு நவிலா

இதுவுமது,

(இ-ள்) உ ஊகாரம்-உகர ஊகாரங்கடாமேநின்றும் பிறமெய்களோடு நின்றும் பயில்வதன்றி, நவவொடுநவி லா - நகரவொற்றோடும் வகர வொற்றோடும் பயிலா வென்றவாறு.

எனவே யேனையுயிர்கள் நகர வகரங்களோடு வருமாயின.

(உ-ம்) நகரம் பொருந எனவினைப்பெயராயும், நா நீ (நே) எனப்பெயராயு (பெயராகியு) நை நொ (நோ) என வியங்கோளாயும் (வியங்கோளாகியும்) வரும். பொருநை என்றுங் காட்டுப. வகரம் உவ வே என வியங்கோளாயும் உவா செவ்வி வி வை (வீவை) எனப்பெயராயும் வரும், இனி ஒருவ ஒருவா ஒருவி ஒருவீ ஒளவை யென்றுங்காட்டுப, ஈண்டு விலக்காத வேனை யுயிரோடு (யுயிர்களோடு) வந்த நகரவகரங்க ளக்காலத்து வழங்கிற்றென்று (நகரவ கரங்கள் அக்காலத்து வழங்கினவென்று கோடும்) கோடு-மிவ்விதியால் இனி நவிலா வென்றதனானே வகர வுகரங் கதவு துரவு குவவு புணர்வு (குலவு) நொவ்வு நுகர்வு கவ்வு எனப்பயின்று வருதலுங் கொள்க. 41

75 உச்ச கார மிருமொழிக் குரித்தே

இது (சகார உகாரம்) பலசொற் கீறாய்வாரா தீண் டிரு சொற் கீறாமென்று வரையறை கூறுகின்றது.

(இ-ள்) உச்சகாரம் - உகரத்தோடு கூடிய சகாரம், இரு மொழிக்குரித்து - இரண்டு மொழிக்கீறா மெனவே பன்மொழிக் கீ ற ா க ா தென்றவாறாயிற்று. இரண்டு மொழிக்கே ஈறா மென்றவாறு.

எனவே பன்மொழிக்கு ஈறாகாதென்ற வாறாயிற்று. உரித்தேயென்னும் ஏகாரம் மொழிக்கே யெனக்கூட்டுக.

(உ-ம்) உசு இது [இஃது] உளுவின் பெயர். முசு இது குரங்கினு ளொருசாதி. பசு வென்பதோவெனின் அது [அஃது] ஆரியச்சிதைவு. கச்சு குச்சு என்றாற் போல்வன குற்று கரம். உகரமேறிய சகர மிருமொழிக்கீறா மெனவே ஏனையுயிர்களேறிய சகரம் பன்மொழிக்கீறா மென்றாரா யிற்று. உச உசா விசி சே கச்சை சோ எனப்பெயராயும், துஞ்ச எஞ்சா எஞ்சி மூசி மூசு [மூசூ] என வெச்சமாயும் வரும். அச்சோ வென வியப்பாயும்வரும். என்னுமிவை [இன்னும் இவை] வழக்கின்கட் பலவாமாறுணர்க. 42

76 உப்ப காரமொன்றென மொழிப
விருவயி னிலையும் பொருட்டா கும்மே

இது [இஃது] ஒருசொல்லோசை வேற்றுமையாலிரு பொருடருமென வரையறை கூறுகின்றது,

[இ-ள்] உப்பகார மொன்றென மொழிப — உகரத் தோடு கூடிய பகர மொருமொழிக்கல்லது பன்மொழிக் கீறகாதென்று கூறுவர் பு ல வ ர். இருவயி னிலையும் பொருட்டாகும்மே — அதுதான் நன்மினை தீவினை யென்னுமிரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தா மென்றவாறு.

(உ-ம்) தபு (எனவரும்) இது படுத்துக்கூற நீ சா வெ ன த் தன்வினையாம். இது எடுத்துக்கூறவே நீ யொன்றினைச் சாவப்பண் ணெனப் பிறவினையாம்.உப்பு கப்பு என்றாற் போல்வன குற்றுகரம்.உகரத்தோடு கூடிய பகர மொன்றெனவே ஏனையுயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக் கீறாய்ப் பலபொரு டரு மென்றாராயிற்று. மறந்தப துப்பா என எச்சமாயும் நம்பி செம்பூ (பே)பெதும் பை எனப் பெயராயும் போ என வேவலாயும் வரும். இவற்றைப் பிற சொற்களோடு மொட்டுக. ஏனை யீகார பகர மிடக்கராய் வழங்கும். 43

77 எஞ்சிய வெல்லா மெஞ்சுத லிலவே

இது (இஃது) முன்னர் மொழிக்கீறா மென்றவற்று ளெஞ்சி நின்றன மொழிக்கீறாமாறும் மொழிக்கீறாகா வென்றவை தம்பெயர் கூறுங்கான் மொழிக்கீறாமாறுங் கூறுகின்றது.

(இ-ள்) எஞ்சியவு மெஞ்சுதலில - கவவோ டியையி னென்னுஞ் சூத்திரத்தாற் பதினோருயிரும் பதினெட்டு மெய்க்கண்ணும் வந்து மொழிக்கீறா மென்ற பொதுவிதி யிற்பின்னைவிசேடித்துக் கூறியவற்றை யொழிந்தனவும் மொழிக்கீறாதற் கொழிவில,எல்லா மெஞ்சுதலில-மொழிக் கீறாகாதென்ற வுயிர்மெய்களுந் தம்பெயர் கூறும்வழி யீறாதற்கொழிவில வென்றவாறு.

எல்லாமென்றது சொல்லினெச்சஞ் சொல்லியாங் குணர்த்த லென்னு முத்தி. உம்மை விரிக்க ஈண்டெஞ்சிய வென்றது முன்னருதாரணங் காட்டிய ஞகரமு நகரமும் வகரமும் சகரமும் பகரமும் ஒருமொழிக் கீறாகாத ஙகரமு மொழிந்த பன்னிரண்டு மெய்க்கண்ணும்எகரமும் ஒகரமும் ஔகாரமு மொழிந்த வொன்ப துயிருமேறி மொழிக்கீறாய் வருவனவற்றை யென்றுணர்க.

(உ-ம்)வருக புகா வீக்கி புகீ செகு புகூ ஈங்கே மங்கை எங்கோ எனவும் கட்ட கடா (மடிமடி)மடு மடு (படு)பட்டை (படை) (எனவும்) இதற்கேகார ஒகாரங்க ளேறிவருவன வுளவேற் கண்டுகொள்க. மண்ணா எண்ணா கண்ணி ளணி(உணீ) கணு நண்ணூ பண்ணை (எனவும்) இதற்கு மேகார வோகாரங்களேறிவருவன வுளவேற் கொள்க. அத புதா பதி வதீ அது கை தூ தந்தை அந்தோஎனவிதற் கேகார(எனவும் இதற்கு ஏகாரம்)மேறிவருவன வுளவேற் கொள்க. கம நென்மா அம்மி மீ செம்மு கொண்மூ யாமை காத்தும் வம்மோஎனவிதற்கேகாரமேறிவந்தன(வருவன) வுளவேற் கொள்க. செய காயா கொய்யூ ஐயை ஐய்யோ (ஐயோ)இதற் கிகர வீகார உகர ஏகாரங்களேறி வருவன வுளவேற் கொள்க. வர தாரா பரி குரி கரு வெரு நரை (நாரை) எனவும் இதற்கேகார ஓகாரங்களேறி வந்தன (வருவன) வுளவேற் கொள்க சில பலா வலி வலீ (வலு) கொல்லூ வல்லே கலை (எனவும்) இதற்கோகாரமேறி (வருவன)வுளவேற் கொள்க. தொழா[தொழ] விழா நாழி வழீ மழூ எழூ தா ழை [எனவும் இதற்கேகார ஒகாரங்க ளேறி [வருவன]வுளவேற் கொள்க. உள உள்ளா வெள்ளி குளீ உளூ எள்ளு களை [எனவும்] இதற்கேகார ஓகாரங்க ளேறி [வருவன]வுளவேற் காண்க [கொள்க] கற்ற கற்றா உறி உறீ மறு உறூ கற்றை எற்றோ (எனவும்) இதற்கேகார மேறி (வருவன)வுளவேற் காண்க(கொள்க) நன கனா வன்னி துனீ முன்னு துன்னூஎன்னே அன்னை அன்னோ எனவரு [எனவும் வரும்] மிவற்றுட் பெயராயும் வினையாயும் வருவனவுணர்க. இவற்றுட் ககர னகரங் கள்விலக்காத வொன்பதும் வந்தன. ஆக ஈறு நூற்று நாற்பத்து மூன்றும் உதாரண மில்லாதன பதினெட்டும் ஆக நூற்றுமுபத்தொன்று. ஙகர மொழிக்கீறாகா தென்பது பெரும்பான்மையாதலிற் கூறிற்றிலர். இனி ஙகரமும் ஔகார மேறாதா மெய் பதினைந்தும் எகரமும் ஒகரமும். ஏகாரமும் ஓகாரமும் உகாரமும் ஊகார

மும் பெறாதமெய்களுந் தம்பெயர் கூறுங்கான் மொழிக் கீறாமாறு, ஙப்பெரிது (சப்பெரிது) சௌ அழகிது ஞௌ தீது எனவரும். ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. கெக்குறைந்தது கொத்தீது ஞொவ்வழகிது ஞொத்தீது நுந்நன்று நூப்பெரிது வுச்சிறிது வூப்பெரிது என எல்லா வற்றையு மிவ்வாறே யொட்டுக. இன்னுமெல்லா மென்ற தனானே கந்நன்று ஆநன்றென மொழிக்கீறாவனவுந் தம் பெயர் கூறும் வழியாமென்று கொள்க. (44)

78 ஞணநம னயரல வழள வென்னு
மப்பதி னொன்றே புள்ளி யிறுதி

இது முன்னருயிர்றாமாறுணர்த்திப் புள்ளிகளு ளீறா வனவிவை யென்கின்றது.

(இ-ள்) ஞணநமனயரல்வழள வென்னு மப்பதி னொன்றே புள்ளியிறுதி - ஞணநமனயரலவழள வென்று கூறப்படுமப்பதினொன்றுமே புள்ளிகளின் மொழிக் கீறா வனவென்றவாறு.

(உ-ம்)உரிஞ் மண் பொருந் திநம் பொன் வேய் வேர் வேல் தெவ் வீழ் வேள் எனவரும். னகரமீற்று வையாது மகரத்தோடு வைத்தது வழக்குப் பயிற்சியு மயக்கவியையும் நோக்கி. 45

79 உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்

இது மேற் பொதுவகையா னீறாவன வற்றுள் வரை யறைப் படுவதிது வென்கின்றது.

(இ-ள்) உச்சகாரமொடு நகாரஞ் சிவணும் - உகரத் தோடு கூடிய சகரமிருமொழிக் கீறாயவாறு போல நகர வொற்று மிருமொழிக்கல்ல தீறாகா தென்றவாறு.

(உ-ம்) பொருந் வெரிந் எனவரும் 46

80 உப்ப காரமொடு ஞகாரையு மற்றே
யப்பொரு ளிரட்டா திவணை யான
இதுவுமது.

(இ-ள்) உப்பகாரமொடு ஞகாரையு மற்றே - உகரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகரமு மொத்தொரு மொழிக்கீறாம், இவணையான வப்பொருளிரட்டாது - இவ்விடத்து ஞகாரத்தின் கணான வப்பொருள் பகாரம் போல விருபொருளடா (பொருட்படா) தென்றவாறு.

(உ-ம்) உரிஞ் எனவரும். ஞகார மொருமொழிக் கீறாதலின் நகரத்தின் பின் கூறினார். இவணை யென்னு மைகாரமசை (ஐகாரம் அசை) 47

81 வகரக் கிளவி நான்மொழி யீற்றது.
இதுவுமது

(இ-ள்)வகரக்கிளவி நான் மொழியீற்றது-வகரமாகிய வெழுத்து நான்கு மொழியினீற்றதா மென்றவாறு.

(உ-ம்) அவ் இவ் உவ் தெவ் எனவரும். கிளவி யாகு பெயர்,எழுத்துக் கிளவியாதற் குரித்தா மாதலின். 48

82 மகரத் தொடர்மொழி மயங்குதல் வரை
னகரத் தொடர்மொழி யொன்பஃதென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன.

இதுவும்(அது) வரையறை கூறுகின்றது. (கூறுதலின்)

(இ-ள்) புகரறக்கிளந்த வஃறிணைமேன - குற்றமறச் சொல்லப்பட்ட வஃறிணைப் பெயரிடத்து, மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர் மொழி யொன்பஃதென்ப - மகரவீற்றுத் தொடர்மொழியோடு

மயங்காவென்று (தென்று) வரையறுக்கப் பட்ட (வரையறைப்பட்ட) னகரவீற்றுத் தொடர்மொழி வொன்ப தென்று கூறுவராசிரியரென்றவாறு. ஆய்தம் விகாரம்.

(உ-ம்) எகின் செகின் (விழன்) எயின் பயின் குயின் அழன் புழன் கடான் வயான் எனவரும். எகின் எகினம் என்றாற்போல வேறோர் பெயராய்த் திரிவனவுஞ் சந்தியாற் றிரிவனவுமா யிவற்றுட் (ஈற்றுட்) டிரிபுடையன களைந் தொன்பதும் வரும்மேற் கண்டுகொள்க. ஆய்தம் விகாரம் நிலம் நிலன் பிலம் பிலன் கலம் கலன் வலம் வலன் உலம் உலன் குலம் குலன் கடம் கடன் பொலம் பொலன் புலம் புலன் நலம் நலன் குளம் குளன் வளம் வளன் (என) இத்தொடக்கத்தன தம்முண் (தம்முள்) மயங்குவன. வட்டம் குட்டம் ஓடம் பாடம் இவைபோல்வன மயங்காதன. வரையறை னகரத்து மேற்செல்லும் (னகரத் தின் மேற் செல்லும்) மயங்கா வெனவே மயக்கமும் பெற்றாம். 49

இரண்டாவது மொழி மரபு முற்றும்



மூன்றாவது பிறப்பியல்



83 உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.

(என்பது சூத்திரம்) இவ்வோத் தெழுத்துக்களது பிறப்புணர்த்துதலிற் பிறப்பிய லென்னும் பெயர் பெற்றது. சார்பிற் றோற்றத் தெழுத்துந்தனிமெய்யும் மொழியினன்றி யுணர்த்தலாகாமையி னவை பிறக்கு மொழியை மொழி மரபிடை யுணர்த்திப் பிறப்புணர்த்த வேண்டுதலி னூன்-மரபின் பின்னர் வையாதிதனை மொழிமரபின் பின்னர் வைத்தார்.

இச்சூத்திர மெழுத்துக்களினது பொதுப்பிறவியித்துணை நிலைக்களத்து நின்று புலப்படுமென்கின்றது.

(இ-ள்) எல்லாவெழுத்தும் பிறப்பினாக்கஞ் சொல்லுங் காலை-தமிழெழுத் தெல்லாவற்றிற்கு மாசிரியர் கூறிய பிறப்பினது தோற்றரவை யாங் கூறுமிடத்து, உந்தி முதலாத் தோன்றி முந்துவளி - கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதான னென்னுங் காற்று, தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇ - தலையின்கண்ணுமிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லு மிதழு நாவு மூக்கும்

மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா னுறுப்புற்று - பல்லு மிதழு நாவு மூக்கு மண்ணமு மென்ற வைந்துடனே யக்காற்று நின்ற தலையுமிடறு நெஞ்சுங்கூட வெட்டாகிய முறைமையை யுடைய தன்மையோடு கூடிய வுனாப்புக்க ளொன்றுடொன்று (உறுப்புக்களோடுஒன்றுற்று) அமைய இங்ஙனமமைதலாலே, வேறுவேறியல - அவ்வெழுத்துக் களது தோற்றரவுவேறுவேறுபுலப்படவழங்குதலையுடைய காட்சியான நாடி நெறிப்பட- அதனையறிவானாராய்ந்த வற்றின் வழியிலே மனம்பட, திறப்படத்தெரியும் - அப் பிறப்பு வேறுபாடுகளெல்லாங் கூறுபட விளங்கு மென்றவாறு.

சொல்லுங்காலை வளி நிலைபெற் றுறுப்புக்களுற் றிங்ஙனமமைதலானே யவைவழங்குதலுடைய;அவற்றின் வழக்கமவற்றின் வழியிலே மனந்திறப்படத் தெரியுமெனக் கூட்டியுரைத்துக்கொள்க. இங்ஙனங் கூறவே முயற்சியு முயலுங் கருத்தாவு முண்மை பெற்றாம். (1)

84 அவ்வழி
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்.

இஃது உயிரெழுத்திற்குப் பொதுப்பிறவிகூறுகின்றது

(இ-ள்) பன்னீ ருயிருந் தந்நிலை திரியா-பன்னிரண்டு உயிருந் தத்தம் மாத்திரை திரியாவாய், அவ்வழிப் பிறந்த - அவ்வுந்தியிடத்துப்பிறந்த, மிடற்று வளியின்இசைக்கும் - மிடற்றின்கண் நிலைபெற்ற காற்றான் ஒலிக்கும் என்றவாறு.

எனவே குற்றியலிகரமுங் குற்றியலுகரமுந் தந்நிலை திரியு மென்றாராயிற்று. அவ்வெழுத்துக்களை க் கூறியுணர்க. (2)

85 அவற்றுள்
அ ஆ வாயிரண் டங்காந் தியலும்.

இஃது அதுவுயிர்களுட் சிலவற்றிற்குச் சிறப்புப் பிறவி கூறுகின்றது.

[இ-ள்] அவற்றுள் - முற்கூறிய பன்னிரண்டு உயிர் களுள், அ ஆ ஆயிரண்டு - அகர வாகாரங்களாகிய அவ் விரண்டும், அங்காந்து இயலும் - அங்காந்துகூறும் முயற் சியாற் பிறக்கும் என்றவாறு.

முயற்சி யுயிர்க்கிழவன் கண்ணது. அ ஆ என விவற் றின் வேறுபாடுணர்க.

86 **இ ஈ எ ஏ ஐயென விசைக்கு**
மப்பா லைந்து மவற்றோ ரன்ன
வவைதா
மண்பன் முதனா விளிம்புற லுடைய
இதுவுமது

[இ-ள்] இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அப்பாலைந்தும் இ ஈ எ ஏ ஐ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும் அவற் றோரன்ன - அகர ஆகாரங்கள் போல அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும், அவைதாம் அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய அவைதாம் அங்ஙனம் பிறக்குமா யினும் அண்பல்லும் அடிநா விளிம்பும் உறப்பிறக்கும் வேறுபாடுடைய என்றவாறு.

அண்பல் வினைத்தொகை எனைவநாவிளிம்புஅணுகு தற்குக் காரணமான பல்லென் றதற்கோர் பெயராயிற்று இ ஈ எ ஏ ஐ யென விவற்றின் வேறுபாடுணர்க.

87 **உ ஊ ஒ ஓ வெளவென விசைக்கு**
மப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்.

இதுவுமது,

(இ-ள்) உ ஊ ஒ ஓ ஔ என விசைக்கும் அப்பாலைந்தும்—உ ஊ ஒ ஓ ஔ என்று சொல்லப்படும் அக்கூற்றைந்தும் இதழ் குவித்துக் கூறப் பிறக்கும் என்றவாறு

உ ஊ ஒ ஓ ஔ என விவற்றின் வேறுபாடுணர்க (5)

88. தத்தந் திரிபே சிறிய வென்ப

இது முற்கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் பொதுவிதி கூறிச் சிங்கநோக்காகக் கிடந்தது.

(இ-ள்) தத்தந் திரிபே சிறிய என்ப—உயிர்களும் மெய்களும் ஒவ்வொரு தானங்களுட் பிறப்பனவற்றைக் கூட்டிக் கூறினேமாயினும் நுண்ணுணர்வாளராயுமிடத்துத் தம்முடைய தம்முடைய வேறுபாடுகள் சிறிவாகவுடையவென்று கூறுவர் புலவர் என்றவாறு.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்ற வாற்றானுந் தலைவளி நெஞ்சுவளி மிடற்றுவளி மூக்குவளியென்ற வாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணறிவுடையோர் கூறியுணர்க ஐ விலங்கலுடையது வல்லினந் தலைவளி யுடையது மெல்லினம் மூக்குவளியுடையது இடையினம் மிடற்றுவளியுடையது. ஏனையவுங் கூறிக் கண்டுணர்க.

89. ககார ஙகார முதனா வண்ணம்

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறப்புக்கூறுகின்றது

(இ-ள்) ககார ஙகாரம் முதல் நா அண்ணம்-ககாரமும் ஙகாரமும் முதல்நாவும் முதல் அண்ணமும் உறப் பிறக்கும் என்றவாறு.

உயிர் மெய்யாகச் சூத்திரத்துக் கூறினுஞ் தனிமெய் யாகக் கூறிக் காண்க. முதலை யிரண்டிற்குங் கூட்டுக— க ங வென விவற்றின் வேறுபாடுணர்க. (7)

90 சகார ஞகார மிடை ஐ ா வண்ணம்

இதுவுமது.

(இ-ள்) சகார ஞகாரம்இடைநா அண்ணம்-சகாரமும் ஞகாரமும் இடைநாவும் இடையண்ணமும் உறப்பிறக்கும் என்றவாறு.

இடையை யிரண்டிற்குங் கூட்டுக. ச ஞ வென விவற் றின் வேறுபாடுணர்க. (8)

91 டகார ணகார நுனிநா வண்ணம்

இதுவுமது

(இ-ள்) டகார ணகாரம் நுனிநாஅண்ணம்-டகாரமும் ணகாரமும் நுனிநாவும் நுனியண்ணமும் உறப்பிறக்கும் என்றவாறு.

நுனியை யிரண்டிற்குங் கூட்டுக. ட ண வெனஇவற் றின் வேறுபாடுணர்க. (9)

92 அவ்வா றெழுத்து மூவகைப் பிறப்பின

இது மேலனவற்றிற்கோ ரைய மகற்றியது.

(இ-ள்) அவ்வாறெழுத்தும் மூவகைப் பிறப்பின - அக் கூறப்பட்ட வாறெழுத்தும் மூவகையாகிய பிறப்பினையு டைய என்றவாறு.

எனவே, அவை ககாரம் முதல் நாவினும் ஙகாரம் முதல் அண்ணத்தினும்பிறக்குமென் றிவ்வாறே நிரனிறை வகையான் அறுவகைப் பிறப்பின வல்ல வென்றார். (10)

93 **அண்ண நண்ணிய பன்முதன் மருங்கி**
னாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்குந் தகார நகாரம்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி கூறுகின்றது.

(இ-ள்) அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்— அண்ணத்தைச் சேர்ந்த பல்லினதடியாகிய விடத்தே, நா நுனி பரந்து மெய்யுற ஒற்ற - நாவினது நுனி பரந்து சென்று தன்வடிவு மிகவும் உறும்படி சோ தகார நகாரந் தாம் இனிது பிறக்கும் - தகார நகார மென்றவை தாம் இனிதாகப் பிறக்கு மென்றவாறு.

த, ந வென விவற்றின் வேறுபாடுணர்க. முன்னருறுப்புற் றமைய வென்று கூறியீண்டு மெய்யுற வொற்றவென்றார் சிறிதொற்றவும் வருடவும் பிறப்பன வுளவாகலின். (11)

94 **அணரி நுனிநா வண்ண மொற்ற**
றஃகா னஃகா னாயிரண்டும் பிறக்கும்

இதுவுமது.

(இ-ள்) நுனி நா அணரி அண்ணம் ஒற்ற-நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்ட, றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்-றகாரனகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கு மென்றவாறு.

இது முதலாக நெடுங்கணக்கு முறையன்றி நாவதிகாரம் பற்றிக் கூறுகின்றார்.

ற ன வென விவற்றின் வேறுபாடுணர்க. (12)

95 **நுனிநா வணரி யண்ணம் வருட**
ரகார ழகார மாயிரண்டும் பிறக்கும்

இதுவுமது

(இ-ள்) நுனி நா அணிரி அண்ணம் வருட-நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ,ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும் - ரகார ழகாரமாகிய அவ் விரண்டும் பிறக்குமென்றவாறு.

ர, ழ வென விவற்றின் வேறுபாடுணர்க (13)

96 நாவிளிம்பு வீங்கி யண்பன் முதலுற
வாவயி னண்ண மொற்றவும் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்

இதுவுமது

(இ-ள்)நா வீங்கி விளிம்பு அண்பல் முதலுற - நா மே னோக்கிச் சென்று தன் விளிம்பு அண்பல்லினடியிலேயுறா நிற்க, ஆவயின் அண்ணம் ஒற்றலகாரமாய் அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தீண்ட லகாரமாயும்,ஆவயின் அண்ணம் வருட ளகாரமாய்-அவ்விடத்து அவ்வண்ணத் தை யந்நாத் தடவ ளகாரமாயும், இரண்டும் பிறக்கும்- இவ்விரண்டெழுத்தும் பிறக்கு மென்றவாறு.

ல ள வென விவற்றின் வேறுபா டுணர்க

இத்துணையும் நா வதிகாரங் கூறிற்று (24)

97 இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்

இதுவுமது

(இ-ள்) இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம் மேலிதழுங் கீழிதழுந் தம்மிற் கூடப் பகாரமும் மகாரமும் பிறக்குமென்றவாறு.

ப. ம. வென விவற்றின் வேறுபாடுணர்க. (கரு)

98 பல்லித ழியைய வகாரம் பிறக்கும்.

இது வகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்—மேற் பல்லும் கீழுதடுங் கூட வகாரமானது பிறக்கும்என்றவாறு.

வ வென வரும். இதற்கிதழியைதலின் மகரத்தின் பின்னர் வைத்தார். (16)

99 அண்ணஞ் சேர்ந்த விடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

இது யகரம் பிறக்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) எழுவளி விடற்றுச் சேர்ந்த இசை - உந்தியி லெழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற்பிறந்த ஓசை, அண்ணங் கண்ணுற்று அடைய - அண்ணத்தை யணைந்து உரலாணி யிட்டாற்போலச் செறிய யகாரம் பிறக்கும்-யகார மொற்று பிறக்கு மென்றவாறு.

ஆணி - மரம், ய என வரும். (17)

100 மெல்லெழுத் தாறும் பிறப்பி னாக்கஞ்
சொல்லிய பள்ளி நிலையின வாயினு
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.

இது மெல்லெழுத்திற்குச் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கஞ் சொல்லிய பள்ளி நிலைமின ஆயினும் - மெல்லெழுதுக்கள் ஆறுந்தத்தம் பிறப்பினது ஆக்கஞ் சொல்லிய இடத்தே நிலை பெற்றனவாயினும், மூக்கின் வளி இசை யாப்புறத் தோன்றும்-ஓசைகூறுங்கால்மூக்கின்கண் உளதாகிய வளி யினிசையான் யாப்புறத் தோன்றுமென்றவாறு.

அவை யங்ஙன மாதல் கூறிக் காண்க. யாப்புற வென்றதனான் இடையினத்திற்கு மிடற்றுவளியும் வல்லினத்திற்குத் தலைவளியுங் கொள்க. (18)

101 சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்.

இது சார்பிற் றோற்றங்கள் பிறக்குமாறுகூறுகின்றது

(இ-ள்) சார்ந்துவரின் அல்லது - சிலவெழுத்துக்களைச் சார்ந்து தோன்றினல்லது, தமக்கு இயல்பு இல என - தமக்கெனத் தோன்றுதற்கு ஓரியல்பிலவென்று, தேர்ந்துவெளிப்படுத்த தம்மியல்பு மூன்றும் - ஆராய்ந்து வெளிப்படுக்கப்பட்ட வெழுத்துக்கள் தம்முடைய பிறப்பியல்பு மூன்றினையுங் கூறுங்கால், தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி இயலும் - தத்தமக்குரிய சார்பாகிய மெய்களது சிறப்புப் பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி நடக்கும், ஏனை ஒத்த காட்சியின் இயலும் - ஒழிந்த, ஆய்தந் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்குமென்றவாறு.

காட்சி யென்றது நெஞ்சினை, கேண்மியர் தாகு நுந்தை யெனவும் எஃகெனவும் வரும்.

ஆய்தத்திற்குச் சார்பிடங் குறியதன் முன்னர்(எழு38) என்பதனாற் கூறினார். இனியாய்தந் தலைவளியாலும் மிடற்று வளியாலும் பிறக்குமென்பாருமுளர். மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தலென்பதனான் அளபெடையும் உயிர்மெய்யுந் தம்மை யாக்கிய வெழுத்துக்களது பிறப்பிடமே யிடமாக வருமென்றுணர்க (19)

102 எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே.

இஃது எழுத்துக்கடம் பிறப்பிற்குப் புறனடை கூறுகின்றது-

(இ-ள்) எல்லா வெழுத்துங் கிளந்து வெளிப்பட— ஆசிரியன்எல்லாவெழுத்துக்களும் பிறக்குமாறு முந்து நூற் கண்ணே கூறி வெளிப்படுக்கையினாலே, சொல்லிய பள்ளி பிறப்பொடு விடுவழி—யானும் அவ்வாறே கூறிய வெண் வகை நிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே யவ்வெழுத்துக் களைக் கூறுமிடத்து,எழுதருவளியின் உறழ்ச்சி வாரத்தின் அளபு கோடல் - யான் கூறியவாறன்றி யுந்தியிற் றோன் றுங் காற்றினது திரிதருங் கூற்றின் கண்ணே மாத்திரை கூறிக் கோடலும், அகத்து எழு வளியிசை அரில்தப நாடி கோடல் - மூலாதாரத்தி லெழுகின்ற காற்றினோசையைக் குற்றமற நாடிக்கோடலும், அந்தணர் மறைத்தே - பார்ப் பாரது வேதத் துளதே, அந்நிலைமை யாண்டுஉணர்க. அஃது இவண் நுவலாது—அங்ஙனங் கோடலை யீண்டுக் கூறலாகாமையின் இந் நூற்கட் கூறாதே, எழுந்துபுறத்து இசைக்கும்-உந்தியிற்றோன்றிப் புறத்தேபுலப்பட்டொலிக் கும், மெய் தெரி வளியிசை அளவு நுவன்றிசினே - பொரு டெரியுங் காற்றினது துணிவிற்கேயநுன் மாத்திரை கூறி னேன்; அவற்றினது மாத்திரையை யுணர்க - என்றவாறு.

இதனை யிரண்டு சூத்திரமாக்கியு முரைப்ப.

இது பிறன் கோட் கூறலென்னு முத்திக்கு இனம் என்னை? உந்தியி லெழுந்த காற்றினைக் கூறுபடுத்தி மாத்திரை கூட்டிக் கோடலும் மூலாதாரம் முதலாகக் காற் றெழுமாறு கூறலும் வேதத்திற் குளதென்று இவ்வாசிரியர் கூறி அம்மதம் பற்றி அவர் கொள்வதோர் பயனின்றென் றலின் உந்தியில் எழுந்த காற்று முன்னர்த் தலைக்கட் சென்று பின்னர் மிடற்றிலே வந்து பின்னர் நெஞ்சிலே நிற்றலையுறழ்ச்சி வாரத் தென்றார் அகத்தெழு வளி யெனவே மூலாதார மென்பது பெற்றாம்.

இன்சாரியை அத்துச் சாரியையோடு கூட்டுக ஏகாரந் தேற்றம்.

மெய்தெரிவளி யெனவே பொருடெரியா முற்கும் வீளையும் முயற்சியானா மெனினும் பொருடெரி யாமை யின் அவை கடியப்பட்டன. எனவே, சொல்லப்பிறந்து சொற்கு உறுப்பாமோசையை இவர் எழுத்தென்று வேண் டுவரென வுணர்க.

நிலையும் வளியும் முயற்சியு மூன்று
மியல நடப்ப தெழுத்தெனப் படுமே

என்றாராகலின்

பிறப்பியன் முற்றிற்று.



பிறப்பியல் குறிப்புரை:

83 சூத்திரம் : சொல்லுங்காலையென்பதைஎழுத்துக் களை கூறுபவனுடைய வினையாக்கி யுரையாசிரியர் கூறு வர் அதுவே சிறந்த உரையாதல் காண்க.

வளிதோன்றி நிலைபெற்று உறுப்புற்று அமைய வென்றதனானே அங்ஙனம் அமைதற்கு உயிர்க்கிழவனது முயற்சியும் அவனும்வேண்டுமென்பதுபெறப்படும்.உயிர்க் கிழவன்—கருத்தா.

92-ம் சூத்திரம்:

நிரனிறை வகையான் அறு வகைப் பிறப்பின அல்ல வென்றது 'சகார ஞகார மிடைநா வண்ணம்' என்புழிச் சக ரமிடை நாவிலும் ஞகார மிடையண்ணத்திலும் என்று நிரனிறையாகக் கொள்ள அறு வகைப் பிறப்பினவாம் : அங்ஙனம் அல்ல என்றபடி, (2) மெய்யுற ஒற்ற என்றபடி (3) சிறிது ஒற்றப் பிறப்பான றகரம் னகரம் லகரம் என் பன சிறிது வருடப் பிறப்பன. ளகார ரகார ழகாரங்கள்.

95-ம் சூத்திரம்:

அணருதல் - மேனோக்கிச்சேறல், அணரி -மேனோக் கிச்சென்று.

4 சூத்திரம் குறிப்பு.

96-ம் சூத்திர வுரையில் : இத்துணையும் நாவதிகாரங் கூறிற் றென்றது எட்டாஞ் சூத்திரத்தில் நாவிற்பிறக்கும் எழுத்தை அதிகாரப் படவைத்து அதுமுதலாக நாவிற் பிறக்கும் எழுத்துக்களையே கூறிவந்தமையை, அதி காரம்-தலைமை இவ்வுரையாசிரியர் (நச்சினார்க்கினியர்) முறைமை யென்பர்.

99ம் சூத்திரத்தின் உரையில் ஆணி - மரம், ஆணி யென்றது உரலின் அடித்துவாரத்தை மறைக்கும்படி இடும் மரத்தை.

100 சூத்திரத்துப்பள்ளி யென்றது இடத்தை.

102 சூத்திரவுரையில் (1) புலப்படல்- செவிக்குப்புலப் படல் பொருள் தெரியா என்பதற்கு எழுத்தாகிய பொருள் தெரியாத என்பது பொருள். இன்றேல், முற்கும் வீளை யும் பொருளுணர்த்துமேனும் என்று இவர் முற்கூறிய தோடு மாறுபடும். நிலையென்றது இடத்தை, வளியென் றது காற்றை முயற்சி யென்றது முயற்சிப் பிறப்பை.

நான்காவது புணரியல்

103 மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தி
னிரண்டுதலை யிட்ட முதலா கிருப:
தறுநான் கீற்றொடு நெறிநின் றியலு
மெல்லா மொழிக்கு மிறுதியு முதலு
மெய்யே யுயிரென் றாயீரியல

என்பது சூத்திரம். மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை யுணர்த்தினமை யிற்புணரிய லென்றிவ் வோத்திற்குப் பெயராயிற்று. ஈண்டு முறைமை யென்றது மேற் செய்கை யோத்துக் களுட் புணர்தற்குரியவாக வீண்டுக்கூறிய கருவிகளை.

இச் சூத்திரத்தின் கருத்து (இச் சூத்திரம் என்னுத லிற்றோவெனின்) மொழிமரபிற் கூறிய மொழிக்கு முதலா மெழுத்தும் மொழிக் கீறாமெழுத்து மித்துணை யென்றலு மெல்லா மொழிக்கு மிறுதியு முதலு மெய்யு முயிரு மல்ல தில்லை யென்று வரையறுத்தலுமீறுமுதலுமாக வெழுத்து நாற்பத்தாறுளவோ வென்றையுற்றாற் கெழுத்து முப் பத்து மூன்றுமேயங்ஙன மீறு முதலுமாய் நிற்பதென்றைய மகற்றலுமாம். (ஐயமறுத்தலும் நுதலிற்று).

(இ-ள்)முதலிரண்டு தலையிட்ட யிருபஃ தீறறு நான் காகும் மூன்று தலையிட்ட முப்பதிற் றெழுத்தினொடு—

மொழிக்கு முதலாமெழுத்திரண்டை முடிவிலே யிட்ட யிரு பது (இருபஃது) மொழிக்கீறா மெழுத்து இருபத்து நான் காகின்ற(நான்குமாகின்ற)மூன்றை முடிவிலே (முடியிலே) யிட்ட முப்பதாகிய வெழுத்துக்களோடே,நெறி நின்றியலு மெல்லா மொழிக்கும் - வழக்கு நெறிக்கணின்று நடக்கு மூவகை மொழி (மொழிக்கும்), மெய்யே யுயிரென்றா யீரி யலவிறுதியு முதலும்—மெய்யு முயிரு மென்று கூறப்பட்ட வவ்விரண்டியல்பினையுடைய வெழுத்துக்களோடு (எழுத் துக்களே) யீறுமுதலுமாவன வென்றவாறு.

இருபத்திரண்டு முதலாவன பன்னீருயிரு மொன்பது யிர்மெய்யும் மொழி முதற் குற்றிய லுகரமுமாம்.இருபத்து நான்கீறாவன பன்னீருயிரும் பதினொரு புள்ளியு மீற்றுக் குற்றிய லுகரமுமாம் மெய்முற் கூறினார் (மெய்யை முற் கூறினார்) நால் வகையும் (வகைப்) புணர்ச்சியு மெய்க் கணிகழு மாறுயிர்க்கணிகழா வென்றற்கு.

(உதாரணம்) மரம் எனமெய் முதலீறும், இலை என உயிர்முதலு மீறும் (உயிரீறும்) ஆல் என உயிர் முதலும் மெய்யீறும் விள என மெய்முதலு முயிரீறுமாய் வரும் (உயிரீறுமாம்) மொழியாக்கம் இயல்பும் விகாரமு மென விரண்டாம் உயிர்தாமே நின்று முதலு மீறு மாதலியல்பு அவை மெய்யோடு கூடி நின்றங்ஙனமாதல் விகாரம். (1)

104 அவற்றுண்

மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்

இது முற் கூறியவாற்றாற்றனிமெய்யு முதலாவன (முதலாவான்) சென்றதனை விலக்கலி னெய்தியது விலக்கிற்று.

(இ-ள்) அவற்றுள்-முற்கூறிய மெய்யு முயிருமென்ற விரண்டனுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலை

யல்-மெய்மொழிக் கீறாயவை யெல்லாம் புள்ளிபெற்று நிற்கு மென்றவாறு.

எனவே, மொழிக்கு முதலாயவை (முதலாயினவை) யெல்லாம் புள்ளியிழந் துயிரேறி நிற்குமென்றா(ரா)யிற்று இன்னு மீற்று மெய் புள்ளி பெற்று நிற்கு மென்றதனான் உயிர் முதன் மொழி தம்மேல் வந்தாலவை யுயிரேறவிடங் கொடுத்து நிற்குமென்பதுங் கூறினா ராயிற்று. இவ்விதி முன்னர்க் கூறியதன்றோ வெனின் ஆண்டுத் தனிமெய் பதி னெட்டும். புள்ளி பெற்று நிற்குமென்று மவைதா முயி ரேறுங்காற் புள்ளி யிழந்து நிற்குமென்றுங் கூறினார். ஈண்டு மெய் முதன் மெய்யீறெனப் பொருளுரைக்க வேண் டினமையின் மொழி முதன் மெய்க்கும் (மெய்களும்) புள்ளி பெறுமோ வென்றையுற்ற வைய மகற்றக் கூறினாரென் றுணர்க. மரம் எனப் புள்ளி பெற்று நின்றது அரிதென வந்துழி மரமரி தென்றேறி முடிந்த வாறுணர்க. (2)

105 குற்றிய லுகரமு மற்றென மொழிப.

இது முன்னர்ப் புள்ளி யீற்று முன்னுயிர்தனித்தியலா தென்றுமெய்க்கெய்து விக்கின்ற கருவியை எதிரதுபோற்றி யுயிர்க்கு மெய்துவிக்கின்ற கருவிச் சூத்திரம்.

(இ-ள்) குற்றிய லுகரமு மற்றென மொழிப-ஈற்றுக் குற்றிய லுகரமும் புள்ளி யீறுபோல வுயிரேற விடங் கொடுக்கு மென்று கூறுவர் புலவரென்றவாறு.

இம்மாட்டே றொருபுடைச்சேறல் புள்ளி பெறாமை யின் அங்ஙன முயிரேறுங்காற் குற்றுகரங்கெட்டுப் போகா நின்ற வொற்றின் மேலுயி ரேறிற்றென்று கொள்ளற்க. நாகரி தென்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னரு யிரோசையும் பெற்றவ்விரண்டுங் கூடிநின்றல்ல தப்பொரு ளுணர்த்த லாகாமையின் இது (இஃது) உயிரோடுங் கூடி நிற்கு மென்றார்.

106 உயிர்மெய் யீறு முயிரீற் றியற்றே

இது மெய்யே யுயிரென் றாயீரியல வென்ற வுயிர்க் கண்ணிகழ்வதோரைய மகற்றியது. உயிர்மெய் யென்ப தோ ரீறுண்டேனு மது புணர்க்கப் படாததுவு முயிராயே யடங்குமென்றலின்.

(இ-ள்) உயிர்மெய்யீறும்—உயிர் மெய் மொழியின தீற்றின் கணின்றதுவும், உயிரீற்றியற்றே— உ யி ரீ ற் றி னியல்பை யுடைத்து (என்றவாறு)

உம்மையானிடைநின்ற வுயிர்மெய்யு முயிரீற்றினியல் பையுடைத் தென்றவாறு (என்றாராயிற்று) உம்மை யெச் சவும்மை ஈற்றினு மிடையினு நின்றன வுயிருளடங்கு மெனவே முதனின்றன மெய்யுளடங்கு மென்றார் இத னான் (இதனானே) மேல் விள வென்றாற்போலு முயிர் மெய்களெல்லாம் அகரவீறென்று புணர்க்கு மாறுணர்க. வரகு இதனை மேலுயிர்த் தொடர்மொழி யென்பமுன்னர் மெய்யின் வழிய தென்ற தோரெழுத்திற் கென்றுணர்க. இத்துணையு மொழி மரபினொழிவு கூறிற்று. (4)

107 உயிரிறு சொன்முன் னுயிர்வரு வழியு
முயிரிறு சொன்முன் மெய்வரு வழியு
மெய்யிறு சொன்முன் னுயிர்வரு வழியு
மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியுமென்
றிவ்வென வறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்
றாயீ ரியல புணர்நிலைச் சுட்டே

இது மேற்கூறும் புணர்ச்சி களெல்லா மிருமொழிப் புணர்ச்சி யல்லதில்லை யென்பதூஉமஃதெழுத்து வகை யான் நான்கா மென்பதூஉ முணர்த்துகின்றது.

(இ-ள்) உயிரிறுசொன்முன் உயிர்வரு வழியும்-உயிர் தனக்குஈறாக விறுஞ்சொல்லின் முன்னுயிர் முதலாகிய மொழி ஈறாகவருமிடமும், உயிரிறு சொன்முன் மெய்வரு வழியும் உயிர் தனக்கீறாக விறுஞ்சொல்லின் முன்னர் மெய்முதலாகிய மொழிவருமிடமும், மெய்யிறு சொன்முன் உயிர்வரு வழியும் — மெய்தனக்கீறாக விறுஞ்சொல்லின் முன்னுயிர் முதலாகிய மொழிவருமிடமும்மெய்யிறு சொன் முன் மெய்வரு வழியும்-மெய்தனக்கீறாகவிறுஞ்சொல்லின் முன்னர் மெய்முதலாகிய மொழிவருமிடமும்,என்று புணர் நிலைச் சுட்டு — என்று சொல்லப்பட்ட வொன்றனோ டொன்று கூடும் நிலைமையாகிய கருத்தின்கண், இவ் வென வறியக் கிளக்குங்காலை - அவற்றை இத்துணை யென வரையறையை யெல்லாரு மறிய யாங் கூறு ங் காலத்து, நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென் றாயீரியல—முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லும் அதனை முடித்தலைக் குறித்துவருஞ் சொல்லு மென்று சொல்லப் பட்ட வவ் விரண்டியல்பினையுடைய வென்றவாறு.

எனவே நான்கு வகையானுங் கூடுங்காலுமிருமொழி யல்லது புணர்ச்சி யின்றென்றாயிற்று.

உதாரணம் : ஆ உண்டு ஆ வலிது ஆலிலை ஆல் வீழ்ந்தது என முறையே காண்க.விளவினைக் குறைத்தா னென்ற வழிச் சாரியையுமுருபு நிலைமொழியாயே நிற்கு மென்பது நோக்கியதனை நிறுத்த சொல்லென்று முடிக் குஞ் சொல்லைக் குறித்துவரு கிளவியென்றுங் கூறினார். இதனானே நிலைமொழியும் வருமொழியுங் கூறினார். முன்னர் மெய்யே யுயிரென்ற தொரு மொழிக்கிஃ திரு மொழிக் கென்றுணர்க. (5)

108 அவற்று
ணிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்

பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலுந்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலு
மூன்றே திரிபிட னொன்றே யியல்பென
வாங்கந் நான்கே மொழிபுண ரியல்பே.

இது முன்ன ரெழுத்து வகையா னான்கு புணர்ச்சி யெய்திய விருவகைச் சொல்லுஞ் சொல்வகையானும் நான் கா மென்பதூ உமங்ஙனம் புணர்வது சொல்லுஞ் சொல்லு மன்றெழுத்து மென்பதூஉ முணர்த்துகின்றது.

(இ-ள்) அவற்றுள் -நிலைமொழி வருமொழி யென்ற வற்றுள். நிறுத்த சொல்லினீறாகெழுத்தொடு குறித்துவரு கிளவி முதலெழுத்தியைய -முன்னர் நிறுத்தப்பட்ட சொல் லின தீறாகின்ற வெழுத்தோடே யத்திணை (அதனை) முடிக்கக் கருதி வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரைப் புணர்க்குங்காலும் - பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டுமிடத்தும், பெயரோடு தொழிலைப் புணர்க்குங்காலும்—பெயர்ச் சொல்லோடு தொழிற்சொல்லைக் கூட்டுமிடத்தும், தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்-தொழிற், சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டுமிடத்தும், தொழி லோடு தொழிலைப் புணர்க்குங்காலும் தொழிற் சொல் லொடுதொழிற் சொல்லைக் கூட்டுமிடத்து,மூன்றேதிரிபிட னொன்றே யியல்பென வாங்கந் நான்கே-திரியுமிட மூன்றியல் பொன்றென்று முந்து நூலிற் கூறிய வந்நான் கிலக்கணமுமே, மொழி புணரியல்பு-ஈண்டு மொழிகடம் முட்கூடு மிலக்கணமென்றவாறு.

உதாரணம்: சாத்தன்கை சாத்தனுண்டான் வந்தான் சாத்தன் வந்தான்போயினான் என முறையே காண்க.இது

நான்கிலக்கணத்தோடு கூடிப் பதினாறாம். இடையு முரியுந் தாமாகா நில்லாமையிற் பெயர் வினையே கூறினார். இடைச்சொல்லு முரிச் சொல்லும் புணர்க்குஞ் செய்கைப் பட்டுழிப்புணர்ப்பச் சிறுபான்மை, பெயர்ப் பெயரு மொட்டுப் பெயருமெனவிரண்டு வகைப்படும். பெயர் தெரிநிலை வினையுங் குறிப்பு வினையுமென வினையிரு வகைத்து (இரண்டு வகைப் படும் பெயர்). நிலை மொழிய தீற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப் போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையான் முறையிற் பிறந்து நின்று கெடுவனவொருங்கேநின்று புணருமாறின்மையிற் புணர்ச்சி யென்ப தொன்றின்றாம். பிறவெனின் அச் சொற்களைக் கூறுகின்றோருங் கேட்கின்றோரு மவ்வோசையை யிடையறவு படாமை யுள்ளத்தின் கண்ணே யுணர்வாராதலி னிவ்வோசை கேடின்றி யுள்ளத்தின்கண்ணிலை பெற்றுப் புணர்ந்தனவேயா மாகவே பின்னர்க் கண்கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியு முடிந்தனவே யாமென்றுணர்க, இ னி முயற்கோடுண் டென்றாலது குறித்து வருகிளவிப்பன்மையிற் (வருகிளவியன்மையிற் புணர்க்கப்படு மென்றுணர்க. (6)

109 அவைதாம்

மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரியு மாறே.

இது முற்கூறிய மூன்று திரவு (திரிபு) மாமாறு—கூறுகின்றது.

(இ-ள்) அவைதாந்திரியுமாறு-முன்னர்த் திரிபென்று கூறியவவைதாந் திரிந்து புணரு நெறியை, மெய்பிறிதாதல் மிகுதல்குன்றலென் றிவ்வென மொழிப—மெய்வேறுபடுவல் குறைதலென்று கூறப்படு மிம்மூன்று கூற்றையுடைய வென்று கூறுவராசிரிய ரென்றவாறு.

இம்மூன்று மல்லாத தியல்பா மென்றுணர்க. இவை விகற்பிக்கப் பதினாறுதாரணமாம் (மட்குடம்) மலைத் தலை,மரவேர் இவை பெயரோடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு. மண்மலை என்பதியல்பு. சொற்கேட்டான், பலாக் குறைத்தான், மரநாட்டான் இவைபெயரோடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. கொற்றன்வந்தான் இஃதியல்பு வந்தானாற் சாத்தன்கெடாப்பொருள்.(கொடாப்பொருள்) ஒடுநாகம் இவை தொழிலோடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு வந்தான் சாத்தன் இஃதியல்பு. வந்தாற்கொள்ளும் பாடாப் போயினான் (பாடப்போயினான்) சாஞான்றான். இவை தொழிலொடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. வந்தான் கொண்டான் இஃதியல்புமென மூன்று திரிபென் னாதிடனென்றதனா லொரு புணர்ச்சிக்கண் மூன்று மொ ருங்கே வரப்பெறு மென்றுங்கொள்க. (ஒருங்கேயும் வரப் பெறுமென்று உணர்க. இரண்டு வருவனவுங் கொள்க. (காண்க) (7)

110 நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியு மடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.

இது நிலைமொழி யடையடுத்தும் வருமொழியடை யடுத்துமவ்விரு மொழியு மடையடுத்தும் புணருமெனவே யதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) நிறுத்தச் சொல்லுங் குறித்து வரு கிளவியும் - நிலைமொழியாக நிறுத்தின சொல்லுமதனைக் குறித்து வருஞ் சொல்லும்அடையொடுதோன்றினும் புணர்நிலைக் குரிய - தாமே புணராது ஓரோவோர் சொல்லடை யடுத்து வரினு மிரண்டு மடையடுத்து வரினும் புணரு நிலைமைக் குரிய வென்றவாறு.

அடையாவன வும்மைத்தொகையு மிருபெயரொட்டுப் பண்புத் தொகையுமாம்.

உதாரணம் :— பதினாயிரத்தொன்று ஆயிரத்தொரு பஃது,பதினாயிரத்திருபஃது எனவரும்இவ்வடை களொரு சொல்லேயாம். வேற்றுமைத் தொகையு முவமைத் (உவ மத்) தொகையும் முடியப் பண்புத்தொகையும். வினைத் தொகையும் பிளந்து முடியாமையினொரு சொல்லேயாம். அன்மொழித் தொகையும் தமக்கு வேறோர் முடிபின்மை யின் ஒரு சொல்லேயாம் இத்தொகைச் சொற்களெல்லா மடையாய் வருங்காலத்தொரு சொல்லாய் வருமென்று ணர்க, உண்ட சாத்தன் வந்தானெனவு முண்டு வந்தான் சாத்தனெனவு மொரு சொல்லேயாம். (8)

111 மருவின் றொகுதி மயங்கியன் மொழியு
முரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே

இது மரூஉச் சொற்களும்புணர்ச்சி பெறுமென்பதூஉ நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியுமாய்ப் பொருளி யை பில்லனவும் புணர்ச்சி பெற்றாற் போல நிற்குமென்ப தூஉ முணர்த்துகின்றது.

(இ-ள்) மருமொழியும்—இருவகையாகி மருவியசொற் களும் இன்றொகுதி மயங்கியன் மொழியும்—செவிக்கினி தாகச் சொற்றிரளிடத்து நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியுமாயொட்டினாற்போலநின்று பொருளுணர்த்தாது பிரிந்து பின்னர்ச் சென்றொட்டிப் பொருளுணர்த்த மயங் குதலியன்ற சொற்களும், புணர்நிலைச்சுட்டிரியவையுள- புணருநிலைமைக் கருத்தின்கணுரியனவுள வென்றவாறு.

மொழியு மென்பதனை மருவென்பதனோடுங் கூட்டுக இன்றொகுதி யென்றார்,பாவென்னு முறுப்பு நிகழப் பொ ளொட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்.

உதாரணம் : முன்றில் மீன்கண் (மீகண்) இவை இலக்கணத்தோடு பொருந்தியமரு இலக்கணமல்லாமரு வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும், என்புழிக் காட்டுதும். இனி.

'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப'

என்புழி மருப்பி னிரலை யென்றொட்டி யிரண்டா வதன் றொகையாய்ப் பொருடந்து புள்ளி யீற்று முன்னு யிர்த்தனித்தியலா தென்றுயிரேறி முடிந்தது.மயங்கி நின் றது ஆயின் மருப்பிற் பரலென்று மெய்பிறிதா யொட்டி நின்றவாறென்னை யெனின் மருப்பினையுடையபரலென வேற்றுமைத் தொகைப் பொருளுணர்த்தாமையினஃதச் செய்யுட் கின்னோசை நிகழ்தற்குப் பகரத்தின் முன்னர் நின்ற னகரம் றகரமாய்த் திரிந்து நி ன் ற துணையே யாய்ப் புணர்ச்சிப் பயனின்றி நின்று இங்ஙனம் புணர்ச்சி யெய்தினாற் போல மாட்டிலக்கணத்தின் கண்ணு மொழி மாற்றின் கண்ணு நிறுறல் சொற்கியல் பென்றற் கன்றே யாசிரியரின்றொகுதி யென்ற தென்றுணர்க. கருங்காலோ மைக் காண்பின் பெருஞ்சினை யென்புழி யோமைச் சினை யென் றொட்டி யோமையினது சினையெனப் பொருடரு கின்ற தின்னோசை தருதற்குக் ககர வொற்று மிக்குக் காண்பென்பதனோ டொட்டினாற் போல நின்றது. ''தெய்வமால் வரைத்திரு முனி யருளால்'' என்புழித் தெய்வவரை யென்றொட்டித்தெய்வத்தன்மையையுடைய வரையெனப் பொருடருகின்ற தின்னோசை தருதற்கு மா லென்பதனோடு கூட்டினாற்போல (ஒட்டினாற் போலக்) குறைந்து நின்றது. என மூன்றுதிரிபும் வந்தவாறு காண்க இனி எச்சத்தின் கண்ணும்.

பொன்னோடைப் புகரணி நுதற்
றுன்னருந்திறற் கூழ் கடா அத்து
எயிறு படையாக வெயிற்கதவிடா அக்
கயிறு பிணிக்கொண்ட கவிழ்மணி மருங்கிற்
பெருங்கையானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயா (புறம்—3)

வென மாட்டா யொட்டி நின்றது கயிறு பிணிக்கொண்ட வென்பதனோடு மொட்டினாற் போல நின்றொற்றடுத்து இன்னோசை பெறுதற்குப் பிறசான்றோர் செய்யுட்

கணிவ்வாறும் பிறவாறும் புணர்ச்சியில் வழிப்புணர்ச்சி பெற்றாற்போல நிற்பன வெல்லாவற்றிற்கு மிதுவே யோத்தாகக் கொள்க. (9)

112 வேற்றுமை குறித்த *புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்
மெழுத்தே சாரியை யாயிரு பண்பி
னொழுக்கல் வலிய புணருங் காலை

இது மூவகைத் திரிபினுண் மிக்குப் புணரும் புணர்ச்சி யிருவகைய வென்கின்றது.

(இ-ள்) புணருங்காலை—நால்வகைப் புணர்ச்சியுண் மிக்க புணருங்காலத்து, வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் - வேற்றுமைப் பொருண்மையினைக் குறித்த புணரு மொழியினது தன்மையும், வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும் - வேற்றுமை யல்லாத வல்வழி யிடத்துப் புணருமொழியினது தன்மையும், எழுத்தே சாரி யை யாயிரு பண்பினொழுக்கல் வலிய-எழுத்து மிகுதலுஞ் சாரியை மிகுதலுமாகிய வவ்விரண்டு குணத்தாலுஞ் சொல்லுதலைத் தமக்கு வலியாக வுடைய வென்றவாறு.

எனவே யேனைப்புணர்ச்சிகளுக்கித்துணை வேறுபா டின்றென்றுணர்க.

உதாரணம் : விளங்கோடு இது (இஃது) எழுத்துப் பெற்றது. மகவின்கை இது சாரியை பெற்றது இனி அவ் வழிக்கண் விளக்குறிது இது எழுத்துப் பெற்றது பனை யின் குறை இது சாரியைபெற்றது. இதற்குப்பனை குறைந்த தென்பது பொருளாம். இது (இஃது) அளவுப் பெயர் யொழுக்கல் (ஒழுக்கல்) வலியவென்றதனானிக் கூறிய விரண்டு மெழுத்துஞ் சாரியையு முடன்பெறுதலுங் கொள்க. அவற்றுக் கோடென்பது. வேற்றுமைக்கண்ணி ரண்டும் பெற்றது. கலத்துக்குறையென்ப தல்வழிக்க

*புணர்நிலை மொழியும். [பி.பே.]

ணிரண்டும் பெற்றது. இதற்குக் கலங் குறைந்ததென்பது பொருளாம். இயல்புகணத்துக்கணிவ்விரண்டுமுடன் பெறுதலின்று. வ்வழிமுற்கூறாதது வேற்றுமையல் லாததல் வழி யனவேண்டுதலின் எழுத்துப்பேறு யாப்புடைமை யானு மெழுத்தினாற் சாரியை யாதலானு மெழுத்து முற் கூறினார் வேற்றுமை மேலிற் (மேலைச்) சூத்திரத்தே கூறுகின்றார்.

அல்வழியாவன அவ்வுருபுகடொக்கும் விரிந்து நில் லாது புணர்வன அவையெழுவாய் வேற்றுமையாறு பய னிலையோடும் புணர்ந்த புணர்ச்சியும் விளிவேற்றுமை தம்பொருளோடும் புணர்ந்த புணர்ச்சியும் முற்றுப்பெய ரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும் பெயரெச் சமும் வினையெச்சமும் பெயரோடும் புணர்ந்த புணர்ச்சி யும் மூவகைத்தொகையு மும்மைத் தொகையு மிருபெய ரொட்டுப் பண்புத் தொகையு மிடைச் சொல்லு முரிச் சொல்லும் பெயரோடும் வினையோடும் புணரும் புணர்ச் சியு மன்மொழித் தொகைப் பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும் பண்புத் தொகையும் வினைத் தொகையும் விரிந்து நின்ற வழிப் புணர்ந்த புணர்ச்சியு மெனவுணர்க.

113 ஐ ஒடு குஇன் அதுகண் ணென்று
மவ்வா றென்ப வேற்றுமை யுருபே

இது மேல்வேற்றுமை யெனப்பட்ட வவற்றது பெயரு முறையுந் தொகையு முணர்த்துகின்றது.

(இ-ள்) வேற்றுமை யுருபு—எது முற்கூறிய வேற்று மைச் சொற்களை, ஐ ஒடு குஇன் அது கண்ணென்னு மவ் வாறென்ப - ஐ ஒடு குஇன் அது கண்ணென்று சொல்லப் படுமவ்வாறுருபுமென்று சொல்லுவராசிரிய ரென்றவாறு.

மேற் சொல்லதிகாரத் தெழுவாயையும் விளியையுங் கூட்டி வேற்றுமை யெட்டென் பாராலெனின் ஐ முதலிய

வேற்றுமை யாறுந்தொக்கும். விரிந்தும் பெரும்பான்மை யும் புலப்பட்டு நின்று பெயர்ப் பொருளைச் செயப்படு பொருண் முதலியனவாக வேறுபாடு செய்து புணர்ச்சி யெய்துவிக்கு மென்றற் கீண்டாறே யென்றா ராண்டெழு வாயும் விளியுஞ் செயப்படுபொருண் முதலியவற் றினின் றுந்தம்மை வேறுபடுத்துப் பொருண் மாத்திர முணர்த்தி நின்றும், விளியா யெதிர் முகமாக்கி நின்று மிங்ஙனஞ் சிறுபான்மையாய்ப் புலப்பட்டு நில்லா வேறுபாடுடைய வேனுமவையு மொரு வாற்றான் வேற்றுமை யாயிற் றென்றற் காண்டெட்டென்றா ரென்றுணர்க. (ரென உணர்க.) (11)

114 வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற் கொல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது நான்காவதற்கு மேழாவதற்கு முருபியலை நோக்கியதோர் கருவி கூறுகின்றது.

(இ-ள்) வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு வல்லெழுத்தடியாய் நின்ற நான்காவதற்கு மேழாவ தற்கும், ஒல்வழி யொற்றிடை மிகுதல் வேண்டும் - பொ ருந்திய வழி வல்லொற்றாயினும் மெல்லொற்றாயினு மிடைக்கண் மிக்குப் புணர்தலை விரும்பா ராசிரிய ரென்றவாறு.

வரையா தொற்றெனவே வல்லொற்று மெல்லொற் றும் பெற்றாம்.

உ-ம் :- மணிக்கு மணிக்கண் தீக்கு தீக்கண் மனைக்கு மனைக்கண் எனவும் வேய்க்கு வேய்க்கண் ஊர்க்கு ஊர்க் கண் பூழ்க்கு பூழ்க்கண் எனவு முயிரீறு மூன்றினும் புள்ளி யீறு மூன்றினும் பெரும்பான்மை வல்லொற்றுமிக்குவரும். தங்கண், கங்கண், நுங்கண், எங்கண் என மெல்லொற்று

மிக்கது. இவற்றிற்கு நிலைமொழி மகரக் கேடுருபியலுட் கூறுப. ஆங்கண் இங்கண் (ஈங்கண்) ஊங்கண் என்பன வும். அவை சுட்டெழுத்து நீண்டு நின்றது. இவற்றிற் கொற்றுக்கேடு கூறுதற் கொற்றின்று.

(இனி) நான்கனுருபிற்கு மெல்லொற்று மிகாவென் (மிகாதென்) றுணர்க. இனியொல்வழி யென்றதனா னே ழாமுருபின் கண்நம்பிகணென விகர வீற்றின் கண்ணும் நங்கை கண்ணென ஐகார வீற்றின் கண்ணும் தாய்கண் ணென யகர வீற்றின் கண்ணும் அரசர் கண்ணென ரகர வீற்றின் கண்ணு மொற்று மிகாமை கொள்க.

இனி மெய்பிறிதாதலை முன்னே கூறாது மிகுதலை முற்கூறியவதனானே பொற்கு பொற்கண் வேற் வேற்கு கண்வாட்கு வாட்கண் எனத்திரிந்து முடிவனவுங் கொள்க. இதனானே அவன்கண், அவள்கண் என வுயர்திணைப் பெயர்க்கண்ணேழ னுருபியல்பாய் வருதலுங் கொள்க. இவற்றிற்குக் குன்றிய புணர்ச்சி வருமேனுங் கொள்க.

கொற்றிக்கு கொற்றிகண் கோதைக்கு கோதைகண் என விரவுப் பெயர்க்கு மிதனானே கொள்க. (12)

115 ஆற னுருபி னகரக் கிளவி
யீறா ககரமுனைக் கெடுதல் வேண்டும்

இது (இஃது) ஆறாவதற்குத் தொகை மரபை நோக் கியதோர் கருவி கூறுகின்றது.

(இ-ள்) ஆறானுருபி னகரக்கிளவி— அதுவென்னு மாறனுருபின்கணின்ற வகரமாகிய (அகரமாகிய) வெ ழுத்து, ஈறா அகரமுனைக்கெடுதல் வேண்டும்—நெடு முதல் குறுகு மொழிகட் 'கீறாகும் புள்ளி யகரமொடு நிலையும்' என விதித்ததனா லுளதான (லுளதாகிய அக ரத்தின்) வகரத்தின் முன்னர்த் தான் கெடுதலை விரும்பு மாசிரிய ரென்றவாறு.

தமது நமது எமது நுமது தனது எனது நினது என் வரும். இது நிலைமொழிக்கோ ரகரம் (மொழிக்கோர் அக ரம்) பெறுமென விதியாதுரு பகரமேறி முடியுமென விதித் தால் வருங்குற்ற முண்டோவெனின் 'நினவ கூறுவ லெ னவ கேண்மதி' யென்றாற்போல வாறாவதற்குரிய வகர வுருபின் முன்னருமோரகரவெழுத்துப்பேறுநிலை மொழிக் கண் வருதலுளதாகக் கருதினாராதலி னாறனுருபிற்கும் நான் கனுருபிற்கும் பொதுவாக நிலைமொழிக்க ணகரப் பேறு விதித்துஅதுவென்னுமொருமை யுருபு வந்தாலாண் டுப் பெற்று நின்றவகரத்தின் முன்னரதுவென்பதன் கண் ணகரங்கெடுக வென்றீண்டுக் கூறின்னாராதலி னதற்குக் குற்ற முண்டென்றுணர்க. (13)

116 வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே

இது வேற்றுமைப்பெயர்க்க ணிற்குமாறுகூறுகின்றது

(இ-ள்) வேற்றுமை பெயர்வழிய - வேற்றுமைகள் பெயரின் பின்னிடத்தனவாம், புணர்நிலை - அவற்றோடு புணருநிலைமைக்க ணென்றவாறு.

(உ-ம்) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத் தனின் சாத்தனது சாத்தன்கண்ணனவரும். மற்றிது கூறிய முறையி னென்னும் வேற்றுமை யோத்திற் சூத்திரத் தாற் பெறு துமெனின் இது வேற்றுமைப் பெயர்க்கணிற்கு மாறுகூறுகின்றது. வேற்றுமை பெயர்வழிய எது வேற்று மைகள்பெயரின் பின்னிடத்தனவாகும் புணர்நிலையே அவற்றோடு புணருநிலைமைக்க ணென்றவாறு.

(உ-ம்) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்த னின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.மற்றிது கூறிய முறையி னென்னும் வேற்றுமை யோத்திற் சூத்திரத்தாற்

பெறுது மெனின் பெயரொடு பெயரைப் புணர்த்தன்முத லிய நால்வகைப் புணர்ச்சியினையும் வேற்றுமை யல்வழி யெனயிரண்டாக வடக்குதலிற் றொழிற் பின்னுமுருபுவரு மெனவெய்தியதனை விலக்குதற் கீண்டுக் கூறினார் (கூறினாரென்க) ஆவயினிவ் விலக்குதல் வினையியலின் 'முதற்சூத்திரத்தாற் பெறுது மெனினது முதனிலையைக் கூறிற் றென்ப தாண்டுணர்க. (14)

117 உயர்திணைப் பெயரே யஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே

இது முற்கூறிய பெயர்கட்குப் பெயரு முறையுந் தொகையுங் கூறுகின்றது.

(இ-ள்) சுட்டு நிலைப்பெயர்—பொருளையொருவன் கருதுதற்குக் காரணமான நிலைமையினை (நிலைமையை) யுடைய பெயர்களை, உயர்திணைப்பெயரே யஃறினைப் பெயரென் றாயிரண்டென்ப - உயர்திணைப்பொருளை யொருவன் கருதுதற்குக் காரணமான பெயரும் அஃறி ணைப் பொருளையொருவன்கருதுதற்கு காரணமான பெ யரும்என்றவ் விரண்டென்றுகூறுவராசிரிய ரென்றவாறு.

பெயரியலு ளவனிவ (னுவ)னென்பது முதலாகஉயர் திணைப் பெயரும் அது விது (வுது)வென்பது முதலாகவஃ றிணைப் பெயரு மாமாறவற்றிற் கிலக்கணங் கூறுகின் றாரீண்டுக் குறியிட்டாடன் (குறியிட்டாளுதல்) மாத்திரை யே கூறினாரென்றுணர்க. இனிக் கொற்றன் கொற்றி யென்றாற்போலும் விரவுப்பெயரும் கொற்றன் குறியன் கொற்றி குறியள்கொற்றன் குளம்பு கொற்றிகுறிது எனப் பின் வருவனவற்றாற்றீணை தெரிதலி னிருதிணைப்பெய ரின்கணடங்கும். இனிக் கொற்றன் செவி கொற்றி செவி யென்பனவும் பின்னர் வருகின்ற வினைகளாற்றிணை விளங்கியடங்கு மாறுணர்க. இனி யஃறிணை விரவுப் பெயரியல்புமாருளவே

யென்றாற் போலப் பிறாண்டு மோதுதல் பற்றிநிலை யென்றதனான் விரவுப் பெயருங் கோடலு மொன்று.(15)

118 அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே

இது சாரியை வருமிடங் கூறுகின்றது.

(இ-ள்) அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே - அச்சொல்ப்பட்ட அவ்விருவகைப் பெயர்களின் பின்னாகியவிடத்தே சாரியைச் சொற்கள் வரும் என்றவாறு.

உதாரணம் : ஆடூஉவின்கை மகடூஉவின்கை பலவற்றுக்கோடு எனப்புணரிய நிலையிடைப் பொருணிலைக் குதவி வந்தன. சாரியை யென்றதன் பொருள் வேறாகி நின்ற விருமொழியும் தம்மிற் சார்தற் பொருட்டியைந்து நின்ற தென்றவாறு. (16)

119 அவைதாம்
இன்னே வற்றே யத்தே யம்மே
யொன்னே யானே யக்கே யிக்கே
யன்னென் கிளவி யுளப்படப் பிறவு
மன்ன வென்ப சாரியை மொழியே

இது (இஃது) அச்சாரியைகட்குப் பெயரு முறையுந் தொகையு முணர்த்துகின்றது.

(இ-ள்) அவைதாம் - முன்னர்ச்சாரியை யெனப் பட்டவவைதாம், இன்னே வற்றே யத்தே யம்மே யொன்னே யானே யக்கே யிக்கே யன்னென் கிளவியுமுளப்படவன்ன என்ப - இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும்அக்கும்இக்கும் அன்னென்னுஞ் சொல்லோடு(கூட) வொன்பதாகிய தன்மையை யுடைய வென்றாராசிரியரே (அத்தன்மை யுடையனவும், பிறவுஞ் சாரியை மொழி

யென்ப - அவை யொழிந்தனவுஞ் சாரியைச் சொல்லா மென்றாசிரிய ரென்றவாறு.

பிறவாவன, தம் நம் நும் உம் ஞான்று கெழு (ஏ,ஐ) என்பனவாம். இவற்றுள் ஞான்றொழிந்தன வெடுத்தோ துவராசிரியர். 'எடுத்த நறவின் குலையலங் காந்தளென' விதுவினைத்தொகை, சாரியை யன்று. இன்சாரியை வழக் குப்பயிற்சியும் பலகாலெடுத்தோதப்படுதலும் பொதுவகை யானோதியவழித் தானே சேறலுமாகிய சிறப்புநோக்கி முன் வைத்தார், வற்றும் மத்தும் (அத்தும்) மின் போல (இன்போல)முதல் திரியுமாகலானும்செய்கை யொப்புமை யானுமதன்பின் வைத்தார், அம் ஈறு திரியுமாதலிற்றிரிபு பற்றியதன்பின் வைத்தார். ஒன்னீறு திரியுமேனும்வழக் குப்பயிற்சியின்றி நான்கா முருபின்கட் டிரிதலி னதன்பின் வைத்தார். ஆன்பொருட் புணர்ச்சிக்கு முருபு புணர்ச்சிக் கும் வருமென்றதன் பின் வைத்தார். அக்கீறு திரியுமேனு முருபுபுணர்சிக்கண் வாராமையின் அதன்பின் வைத்தார். இக்கு முதறிரியுமேனுஞ் சிறுபான்மை பற்றி யதன் பின் வைத்தார்.அன் இன் போலச் சிறத்தலிற் பின்வைத்தார்.

ஆனுருபிற்கு மான் சாரியைக்கு மின்னுருபிற்கு மின் சாரியைக்கும் வேற்றுமையாதெனின்,அவை சாரியையான விடத்தியாதானு மோருருவு பெற்று முடியு முருபாயின விடத்து வேறோருருபினை யேலாதென்றுணர்க. (ஏலா வென்று உணர்க) இனி மகத்துக்கை யென்புழித் தகர வொற்றுந்தகர வுகரமும் வருமென்று கோடுமெனின் இருளத்துக் கொண்டானென்றால் அத்து எனவே வேண் டுதலி னாண்டு மத்து நின்று (நின்றே) கெட்ட தென்று கோடும். அக்கு இக்கு என்பனவும்பிரித்துக் கூட்டக் கிடக் கும். தாழக்கோல் என அக்குப்பெற்று நிற்றலானும் ஆடிக்கு என்றுழிக் (என்புழிக்) குகர நான்கனுருபாகாமை யானு மவை சாரியையாமாறுணர்க. (17)

120 அவற்று
ளின்னி னிகர மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும்

இது முற் கூறியவற்றுளின் சாரியை முதற்றிரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) அவற்றுள்-முற்கூறிய சாரியைகளுள் இன்னி னிகரம்—இன்சாரியையதிகரம். ஆவினிறுதி முன்னர்-ஆவென்னுமோரெழுத்தொரு மொழி முன்னர்க் கெடுதலு ரித்து மாகும்-கெட்டு முடியவும்பெறும் (எ-று)

உரித்துமாகு மென்றதனாற் கெடாது முடியவும் பெறு மென்றவாறு. இது ஒப்பக்கூறலென்னு முத்தி

உதாரணம்: ஆனை ஆவினை ஆனொடு ஆவினொடு ஆற்கு ஆவிற்கு ஆனின் ஆவினின் ஆனது ஆவினது ஆன் கண் ஆவின்கண் எனவரும்.

இனி முன்னரென்றதனானே இவ்வாறே மாவிற்குங் கொள்க. மானை மாவினை, மானொடு மாவினொடு, மாற்கு மாவிற்கு, என ஒட்டுக. ஆகார ஈறு என்னாதாவி னிறுதி (ஆகார ஈறென்னாது ஆவினிறுதி) யென்றோதின மையின் மாவிலே சினாற் கொள்ளப்பட்டது.

இனி ஆன்கோடு ஆவின்கோடு, மான்கோடு மாவின் கோடு என உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட் சென் றுழியுங் கொள்க (18)

121 அளவாகு மொழிமுத னிலைஇய வுயிர்மிசை
னஃகான் றஃகா னாகிய நிலைத்தே

இது அவ்வின்சாரியை யீறு திரியுமாறு கூறுகின்றது

(இ-ள்) அளவாகுமொழி — அளவுபெயராய்ப் பின் னிற்கு மொழிக்கு, முதனிலைஇய வுயிர்மிசை னஃகான் - முன்னர் நின்ற வெண்ணுப் பெயர்களினீற்று நின்றகுற்று கரத்தின் மேல்வந்தவின் சாரியையது னகரம், றஃகா னாகிய நிலைத்தே - றகரமாய்த் திரியும் நிலைமையை யுடைத்தென்றவாறு.

உதாரணம் : பதிற்றகல் பதிற்றுழக்கு இவற்றைப் பத்தென நிறுத்தி நிறையு மளவு மென்னுஞ் சூத்திரத்தா லின் சாரியை கொடுத்துக் குற்றிய லுகரமெய்யோடுங் கெடுமேயென்றதனால் குற்றுகர மெய்யோடுங் கெடுத்து வேண்டுஞ் செய்கை செய்து 'முற்றவின்வரூஉ' மென்ப தனா னொற்றிரட்டித்து முடிக்க.

நிலைஇய வென்றதனாற் பிறவழியு மின்னின்னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றெழுத்து பதிற்றடுக்கு ஒன்ப திற் றெழுத்து பதிற்றொன்று பதிற்றிரண்டு பதிற்றொன் பது என எல்லாவற்றோடு மொட்டிக் கொள்க. அச்சூத்தி ரத்திற்குறையாதாகு மென்றதனாற் பொருட் பெயருக்கு மெண்ணுப் பெயர்க்கு மின் கொடுக்க. (19)

122 வஃகான் மெய்கெடச் சுட்டுமுத லைம்மு
னஃகா னிற்ற லாகிய பண்பே

இது வற்று முதறிரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டு முதலைம்முன் - சுட்டெழுத்தை முத லாகவுடையவை யகார (ஐகார) விறுதிச் சொன்முன், வற்றுவருங்காலை வஃகான் மெய்கெட னஃகா னிற்ற லாகிய பண்பு - அவ்வற்றுச் சாரியையினது வகரமாகிய வொற்றுக்கெடவாண்டேறிய (ஆண்டு ஏறிய) வகர நிற்ற லதற்குளதாகிய குண மென்றவாறு.

உதாரணம்: அவையற்றை இவையற்றை உவையற்றை எனவரும். இன்னும் இவற்றை யவை யிவை யுவை யென நிறுத்திச் சுட்டு முதலாகியவை யெனிறுதி யென்பதனா னவற்று முருபுங் கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்க. இவ்வாறெல்லா வுருபிற்கு மொட்டுக. அவையற்றுக்கோடு என வுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்ற வழியுங் கொள்க.

ஆகிய வென்றதனான்(ஆகிய பண்பு என்றதனானே) எவனென்பது படுத்த லோசையாற் பெயராயவழி எவன் என நிறுத்தி வற்று முருபுங் கொடுத்துவற்றின்மிசை ஒற்றென்று னகரங் கொடுத்தகர வுயிர்முன்னரவற்றின் வகரங்கெடுமெனக் கெடுத்து எவற்றை எவற்றோடு எனமுடிக்க. (20)

123 னஃகான் றஃகா னான்க னுருபிற்கு

இது (இஃது) இன் ஒன் ஆன் அன் என்னும் னகர வீறு நான்குந் திரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) னஃகா னான்க னுருபிற்கு றஃகான்—னஃகா னான்க னுருபிற்கு றஃகானகர வீற்று னான்கு சாரியையி னகரமும்நான்கா முருபிற்குறகாரமாய்த்திரியுமென்றவாறு

உதாரணம் : விளவிற்கு (கோளற்கு) கோஒற்கு ஒருபாற்கு அதற்கு எனவரும்-

இதனை யளவாகு மொழிமுதலென்பதன் பின்வையாதீண்டு வைத்தார் னகர வீறுகளெல்லாமுடன் றிரியு மென்றற்கு, ஆண்டு வைப்பினின் சாரியையே திரியுமென்பதும் படும். ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉ மெல்லா வெண்ணு மென்பதனா னொருபாற் கென்பதனை முடிக்க (21)

124 ஆனி னகரமு மதனோ ரற்றே
நாண்முன் வருஉம் வன்முதற் றொழிற்கே

இது ஆனீறு(இஃது ஆனின் ஈறு) பொருட் புணர்ச்சிக் கட்டியு மென்கின்றது.

(இ-ள்) நாண்முன் வருஉம் வன்முதற்றொழிற்கு - நாட்பெயர் முன்னர்வரும்வல்லெழுத்தை முதலாகவுடைய தொழிற்சொற்கிடையே வரும், ஆனினகரமு மதனோரற்று - ஆன்சாரியையி னகரமும் நான்கனுருபின்கண் வருமான் சாரியைபோல றகரமாய்த் திரியுமென்றவாறு.

உதாரணம் : பரணியாற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும் நாண்முதற் றோன்றுந் தொழி நிலைக் (கிளவிக்) கென்றதனா னான் சாரியை கொடுத்துச் செய்கை செய்க. இனியும்மை யிறந்தது தழீ இயதாக்கி நாளல்ல வற்றுமுன்வரும் வன்முதற்றொழிற் கண்ணின்னி னகரமு மதனோடொக்கு மெனப் பொருளு ரைத்துப் பனியிற் கொண்டான் வலியிற்கொண்டான்என இன்னி னகரமும் றகரமாதல் கொள்க.

இனி ஞாபகத் தொழிற்கண்ணின்னினகரந் திரிதலுந் திரியாமையுங் கொள்க. 'குறும்பிற் கொற்றன்' 'பரம்பிற் பாரி' எனத்திரிந்து வந்தன. குருகின்கால் எருத்தின்புறம் எனத்திரியாது வந்தன. (22)

125 அத்தி னகர மகரமுனை யில்லை

இது (இஃது) அத்து முதறிரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) அத்தினகரம் - அத்துச்சாரியையி னகரம் அகரமுனையில்லை-அகரவீற்றுச் சொன்முன்னில்லையா மென்றவாறு.

மகப்பெயர்க் கிளவிக் கின்னே அத்தவண்வரினும் வ ர நிலையின்றே மென்ப தனான் மகப் பெயரத்துப் பெற்றுநின்ற

தும்மகத்துக்கென வகரங்கெட்டுநின்றது. விளவத்துக்கண் ணென்புழிக் கெடாதுநிற்றல் லத்தெ வற்றே என்பதனுட் டெற்றென்றற்றே யென்பதனாற் கூறுப. [23]

126 இக்கி னிகர மிகரமுனை யற்றே.

இது [இஃது] இக்குமுதறிரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) இக்கினிகரம்—இச்குச் சாரியையின திகரம் இகரமுனையற்று-இகரவீற்றுச்சொன்முன்னர்முற் கூறிய அத்துப்போலக்கெடு மென்றவாறு.

திங்கண் முன்வரி னென்பதனாற் பெற்றவிக்கு ஆடிக் குக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என இகரங்கெட்டு நின்றதுஇது (இஃது)இடப்பொருட்டு.(24)

127 ஐயின் முன்னரு மவ்வைய னிலையும்

இதுவுமது

(இ-ள்) ஐயின் முன்னரு மவ்வைய னிலையும் — இக்கி னிகர மிகர மீற்றுச் சொன்முன்னரன்றி யையகார வீற்றுச் சொன் முன்னரு மேற்கூறிய கெடுதலியல்பிலே நிற்கு மென்றவாறு.

திங்களு நாளு (முந்துகிளந் தன்ன) மென்பதனாற் சித்திரைக்குக் கொண்டா னென்புழிபெற்ற விக்கு ஐகாரத் தின் முன்னர்க் கெட்டவாறு காண்க. (25)

128 எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
யக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகர முற்றத்தோன் றாது

இது அக்குமுத லொழிய வேனைய கெடுமாறு கூறுகின்றது.

(இ-ள்) எப்பெயர் முன்னரும் —எவ்வகைப்பட்ட பெயர்ச்சொன் முன்னரும், வல்லிலழுத்து வருவழி—வல்லெழுத்து வருமொழியாய் வருமிடத்து, அக்கினிறுதிக் குற்றியலுகரமுற்றத்தோன்றாது - இடைநின்ற அக்குச் சாரியையினிறுதி நின்றகுற்றிய லுகரமுடியத்தோன்றாது மெய்மிசையொடுங் கெடும் - அக்குற்றுகர மேறிநின்ற வல்லொற்றுத் தனக்கு மேனினின்ற வல்லொற்றோடுங் கெடுமென்றவாறு.

'ஒற்றுநிலை திரியா தக்கொடு வரு(வரூஉ)' மென்ற தனான் அக்குப்பெற்ற குன்றக்கூகை மன்றப் பெண்ணை என்பனவும்வேற்றுமையாயினேனையிரண்டு மென்பதனா னக்குப் பெற்ற வீமக்குடம் கம்மக்குடம் என்பனவுந் தமி ழின்கிளவியுமென்பதனா னக்குப்பெற்ற தமிழ்க் கூத்தென் பதுவுமக்கீறு கெட்டவாறு காண்க. இங்ஙனம் வருதலினைப் பெயரென்றார். முற்றவென்றதனான் (வென்பதனான்) வன்கணமன்றி யேனையவற்றிற்கு மிவ்விதி கொள்க. தமிழ்நூல் தமிழ்யாழ் தமிழ்வரையர் எனவரும். இன்னு மிதனானே தமக்கேற்ற வியைபு வல்லெழுத்துக்கொடுத்து முடித்துக் கொள்க. அன்றிக் கேடோதிய ககரவொற்று நிற்குமெனிற் சகரந் தகரம் பகரம் வந்தவற்றிற்குக் ககர வொற்றாகாமை யுணர்க. (26)

129 அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்

இது (இஃது) அம்மீறு திரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) அம்மி னிறுதி -அம்முச்சாரியை யிறுதியாகிய மகரவொற்று, கசதக்காலை - கசதக்கள் வருமொழியாய் வருங்காலத்து, தன்மெய்திரிந்து ங ஞ ந வாகும் - தன் வடிவு திரிந்து ங ஞ ந க்களா மென்றவாறு.

உதாரணம் : புளியங்கோடு புளியஞ்செதிள் புளியந் தோல் எனவரும்.

இது புளிமரக் கிளவிக் கென்பதனானம்முப் பெற்றது கசதக் காலைத் திரியுமெனவே பகரத்தின்கட் டிரிபின்றா யிற்று. மெய்திரிந்தென்னாது தன்மெய் யென்றதனா னம்மின் மகரமே யன்றித் தம் நம் நும் உம் என்னுஞ் சாரியை மகரமுந் திரிதல் கொள்க. எல்லார் தங்கையும் எல்லார் நங்கையும் எல்லீர் நங்கையும் (எல்லீர் நுங்கை யும்) வானவரி வில்லும் திங்களும் எனவரும். துறைகேழூ ரன் வளங்கேழூரன் எனக் கெழுவென்னுஞ் சாரியை யதுகரக்கேடும் எகர நீட்சியுஞ் செய்யுண் முடிவென்று (முடிபென்று) கொள்க. (27)

130 மென்மையு மிடைமையும் வரூஉங் காலை
யின்மை வேண்டு மென்மனார் புலவர்

இது இயல்பு கணந்து முன்னரம்மீது கெடுமென் கின்றது.

இஃது அம்மீது இயல்பு கணத்து முன்னர்க் கெடுமின் கின்றது.

(இ-ள்) மென்மையு மிடைமையும் வரூஉங் காலை— மென்கணமுமிடைக்கணமும் வருமொழியாக வருங் காலத்து, இன்மை வேண்டு மென்மனார் புலவர்—அம் மினிறுதி மகரமின்றி (அம்முச்சாரியை இறுதி மகரமின்றி) முடிதலை வேண்டுமென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம் புளிவஞெரி (புளியஞெரி) நுனி முரி யாழ் வட்டு எனவரும் உரையிற் கோடலென்பதனாற் புளிய விலையென வுயிர்வருவழி யீறுகெடுதலும் புளியிலையென முழுவதூஉங் கெடுதலுங் கொள்க.(புளியிலையெனஅம்மு முழுவதுங் கெடுதலுங் கொள்க) புளியவிலை யென்ற தொட்டுதற் கொழுகிய வழக்கன்று. மென்கணமு மிடைக் கணமு முயிர்க்கணமுந் தம்முளொக்கு மேனும் முழுதுங் (அம்மு முழுவதுங்) கெட்டு வருதலின்னுயிரை யெடுத்தோ தாராயினார். புளியங்காயென்பது மருமுடிபு. (28)

131 இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை யின்மை வேண்டும்

இது (இஃது) இன்சாரியை யைந்தா முருபின்கண் முழுவதூஉங் (முழுவதுங்) கெடுமென்கின்றது

(இ-ள்) இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்கு, - இன்னென்று சொல்ல வருகின்ற வேற்றுமை யுருபிற்கு, இன்னென் சாரியை யின்மை வேண்டும்-இன்னென்னுஞ் சாரியை தானின்றி முடிதலை விரும்பு மாசாரிய றென்ற வாறு

உதாரணம் : விளவின் பலாவின் கடுவின் தழுவின்சே வின்வெளவின் எனவரும். இவற்றிற்கு வீழ்பழ மெனவும் நீங்கினானெனவுங் கொடுத்து முடிவுணர்க. [ஊரி நீங்கி னான் என ஏனையவற்றோடும் ஒட்டுக] இனி அவற்று ளின்னினிகர மென்றதன்பி னிதனை வையாத முறையின் றிக் கூற்றானின் சாரியை [கூற்றினான் இன்சாரியை] கொடாது[கெடாது]வழக்கின் கண்ணுஞ் செய்யுட் கண்ணு நிற்றல்கொள்க. பாம்பினிற் கடிது தேள் கற்பினிள் வழா அ நற் பலவுதவி 'அகடுசேர்பு பொருந்தி யளவினிற் றிரியாது' என வரும் இனி இன்மையும் வேண்டுமென்னு மும்மை தொக்கு நின்றதாக்கி யதனானிவை கோடலு மொன்று. (29)

132 பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுந்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணு
மொட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா
திடைநின் றியலுஞ் சாரியை யியற்கை
யுடைமையு மின்மையு மொடுவயி னொக்கும்

இது முற்கூறிய சாரியைகளெல்லாம் புணர்மொழி யுள்ளே வருமென்பதூஉம் மொழிதாமிவை யென்ப

தூஉமவை வாராத மொழிகளு முளவென்பதூவுங் கூறு கின்றது.

(இ-ள்) பெயருந் தொழிலும் - பெயர்ச் சொல்லுந் தொழிற் சொல்லும், பிரிந்திசைப்ப ஒருங்கிசைப்ப - பெய ருந்தொழிலுமாய் பிரிந்திசைப்பபெயரும்பெயருமாய்க் கூடி யிசைப்ப, வேற்றுமையுருபு நிலைபெறுவழியும் - வேற்று மை யுருபுகடொகாது நிலைபெற்ற விடத்தும் தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும் - அவ்வேற்றுமை யுருபுக டோற்றுதல் வேண்டாது தொக்கவிடத்தும், ஒட்டுதற் கொழுகிய வழக்கொடுசிவணி - தாம்பொருந்துதற் கேற்ப நடந்த வழக்கோடு பொருந்தி (வழக்கோடே பொருந்தி) சொற்சிதர் மருங்கின்-சாரியைபெறும் புணர்மொழிகளைப் பிரித்து காணுமிடத்து, சாரியை யியற்கை வழிவந்து விளங்காதிடை நின்றியலும் - அச்சாரியையினது தன்மை யச் சொற்களின் பின்னே வந்து விளங்காதுநடுவே நின்று நடக்கும், உடைமையு மின்மையு மொடுவயி னொக்கும் - அச்சாரியை யுண்டாதலு மில்லையாதலு மொடுவுருபி னிடத் தொத்துவரு மென்றவாறு.

ஒடுவிற் கொக்கு மெனவே னைய வொவ்வா வாயின

உதாரணம் : விளவினைக் குறைத்தான் கூழிற்குக் குற்றேவல் செய்யும் இவை பிரிந்திசைத் துருபுநிலை பெற்றன. அன்னென் சாரியை யென்பதனைக் குற்றியலு கரத் திறுதியென்பதனைச் சேரவைத்ததனாலின் சாரியை வருதல் கொள்கஇவ்விரண்டுருபுஞ் சாரியைநிற்பப் பெரும் பான்மையுந் தொகாதென்றுணர்க.விளைவினைக்குறைத் தவன் கடி சூத்திரத்திற்குப் பொன்இவையொருங்கிசைப்ப வுருபுநிலை பெற்றன. வானத்தின் வ ழு க் கி வானத்து வழுக்கி எனச்சாரியை பிரிந்திசைத் தைந்தா முருபுநிலை பெற்றும் நிலைபெறாதும் வந்தது. வானத்தின் வழுக்கல் வானத்து வழுக்கல் இவை மெல்லெழுத்துறழு மென்னுஞ் சூத்திரத்து வழக்கத்தா னென்பதனா னத்துக்கொடுத்து

மகரங்கெடுக்க ஒருங்கிசைத்தன விளவினது கோடு விள வின்கோடு என ஒருங்கிசைத்துச் சாரியை பெற்றவழி ஆறனுருபு தொகாதுந் தொக்கு நின்றது. இதற்குப் பிரிந் திசைத்தலின்று மரத்துக்கட் கட்டினான் மரத்துக்கட்டி னான் எனப்பிரிந்திசைத்த வழியு மரத்துக்கட்குரங்கு மரத் துக் குரங்கு எனஒருங்கிசைத்தவழியுஞ்சாரியை நின்றவழி யேழனுருபுதொகாதுந்தொக்கு நின்றதுகிளைப் பெயரெல் லா மென்றதனுட் கொள வென்றதனான் ணகரம்டகரமா யிற்று. (ணகாரம் டகாரமாயிற்று) நிலாவென் கிளவியத் தொடுசிவணும் என விதித்த அத்து நிலாக்கதிர் நிலா முற்றம்என்றவழிப் பெறாதாயிற்று. அஃதொட்டுதற் கொ ழுகிய வழக்கன்மையின் நிலத்துக்கொண்டான் நிலத்துக் கொண்டவன் என்பன வுருபு தொக்குழியிருவழியும் பெற் றனஎல்லார் தம்மையுமெனச் சாரியை யீற்றின் கண்ணும் வருதலி னிடை நிற்றல் பெரும்பான்மை யென்றற்கியலு மென்றார். பூவினொடு விரிந்த கூந்தல் பூவொடு விரிந்த கூந்தல் என உடைமையுமின்மையு மொடுவயினொத்தது இனியியற்கை யென்றதனானொடு வுருபின்கட் பெற்றும் பெறாமையும் வருதலின்றிப் பெற்றே வருதலுங் கொள்க. பலவற்றோடு எனவரும். (30)

133 அத்தே வற்றே யாயிரு மொழிமே
லொற்றுமெய் கெடுத றெற்றென் றற்றே
யவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே.

இது (இஃது) அத்து வற்றென்பனவற்றிற்கு நிலை மொழிய தொற்றுக்கேடும் வருமொழி வன்கணத்துக்க ணொற்றுப் பேறுமாகிய செய்கை கூறுகின்றது.

(இ-ள்) அத்தே வற்றே யாயிரு மொழிமே லொற்று - அத்தும் வற்றுமாகியவ் விரண்டு சாரியை மேனின்ற வொற்று, மெய்கெடுத றெற்றென்றற்று-தன்வடிவு கெடுத

றெளியப்பட்டது. அவற்று முன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே - அவ்விருசாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : கலத்துக்குறை, அவற்றுக்கோடு என வரும். அத்திடை வரூஉங் கலமெனளவே (கலமென்ன ளவே) சுட்டுமுதல் வகர மையும் மெய்யு மென்பனவற்றா னத்தும் வற்றும் பெற்றுவரு மகர வகர வீறுகட்கீற்று வல்லெழுத்து விதியின்மையினவற்றுமுன் வரும் வரூஉம் வல்லெழுத்து மிகுமென்று சாரியை வல்லெழுத்து விதித் தார். வல்லெழுத்தின்றித் திரிந்து முடிவன ணகாரமும் னகாரமும் லகாரமும் ளகாரமுமா வகரவீற்றிற் கத்துமகர வீற்றுக்கு வற்றும் வருமென்பதச் சூத்திரங்களாற் பெற் றாம்வற்றே அத்தே யென்னாத முறையன்றிக் கூற்றி னாற் புள்ளி யீற்றின் முன்னரத்தின் மிசை யொற்றுக் கெடாது நிற்றலுங் கொள்க.

உதாரணம் : விண்ணத்துக் கொட்கும் வெயிலத்துச் சென்றான் இருளத்துக் கொண்டான் எனவரும் மெய் யென்றதனானத்தி னகர மகரமுன்னரே யன்றிப் பிறவுயிர் முன்னருங்கெடு மொரோவிடத்தென்று கொள்க. அண் ணாத்தேரி திட்டாத்துக்குளம்எனஆகாரத்தின் முன்னரும் வரும் அத்தினகரங் கெட்டது. இவற்றையு (அகர) மகர வீறாக்கியுமுடிப்ப இனித்தெற் றென்றற்றென் றதனான் அத்தி னகரக் கேடுதெற்றெனக் கெடாது நிற்குமிடமுங் கொள்க.அதவத்துக்கண் விளவத்துக்கண் எனவரும். (31)

134 காரமுங் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்று மெழுத்தின் சாரியை

இது மொழிச் சாரியையைவிட்டெழுத்துக்கட்கு வருஞ் சாரியைகளது பெயரு முறையுந் தொகையுங் கூறுகின்றது

(இ-ள்) காரமுங் கரமுங் கானொடு சிவணி-காரமுங் கரமுங் கரனொடு பொருந்தி எழுத்தின் சாரியை நேரத் தோன்றும் - எழுத்தின்கண்வருஞ் சாரியையாதற் கெல் லாவாசிரியராணு முடம்படத் தோன்று மென்றவாறு

காரமுங் கரமு மெடுத்துச் சொல்லியவழி யினிசைத்த லானும் வழக்குப் பயிற்சி யுடைமையாயினும் வடவெழுத் துக்கு முரிய வாகலானுஞ் சேரக்கூறினார். கானத்தன்மை யின்மையிற் பின்வைத்தார். நேரத்தோன்று மெனவே நேரத்தோன்றா தெனவு முளவாயின. அவை ஆனம் ஏனம் ஓனம் என்க. இவை சிதைந்த வழக்கேனுங் கடியல காவயின (கடியலாகாவாயின) (32)

135 அவற்றுட்
கரமுங் கானு நெட்டெழுத் திலவே

இது (இஃது) அவற்றுட் சிலசாரியை சிலவெழுத் தோடு வாராவென வெய்தியது விலக்கிற்று.

(இ-ள்) (அவற்றுள் - முற்கூறிய வற்றுள் கரமுங் கானும் நெட்டெழுத்திற்கு வருதலின்று என்றவாறு அவற்றுட் கரமுங்கானு நெட்டெழுத்திலவே - முற்கூறிய வற்றுட் கரமுங்கானு நெட்டெழுத்திற்கு வருதலின் றென்றவாறு.

எனவே நெட்டெழுத்திற்குக் காரம் வருமாயிற்று.

உதாரணம்: ஆகாரம் ஈகாரம் என ஒட்டுக. ஐகாரம் ஔகாரம் எனச் சூத்திரங்களுள் வருமாறு காண்க. (33)

136 வரன்முறை மூன்றுங் குற்றெழுத்துடைய

இது (இஃது ஐயமகற்றியது. என்னை?) நெட்டெழுத் திற்குச் (சிலசாரியை) விலக்கினாற் போலக் குற்றெழுத்துக் கும் விலக்கற் பாடுண்டோ வென்பது ஐயம் நிகழ்தலின்

(இ-ள்) வரன்முறை மூன்றும்-வரலாற்று முறைமை யுடைய மூன்று சாரியையும் குற்றெழுத்துடைய குற்றெழுத்துப் பெற்றுவருதலையுடைய வென்றவாறு.

அகாரம் அகரம் அஃகான் (மஃகான்) என ஒட்டுக. வகாரமிசையும் 'அகரம் இகரம்' வஃகான் மெய்கெட வெனப்பிறவுஞ்(வெனவும் பிறவுஞ்) சூத்திரங்களுட் காண்க இஃகான் எஃகான் (ஒஃகான்) என்பன பெருவழக்கின்று. (பெருவழக்கன்று) வரன்முறை யென்றதனான் அஃகா னென்புழி யாய்தம் பெறுதல் கொள்க. இது குறியதன் முன்னராய்தப் புள்ளி யென்பதனாற் பெறாதாயிற்று. மொழியாய் நில்லாமையின். (34)

137 ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்

இது எய்திய திகந்து படாமற் காத்தது. இஃது அவற்றுட்கரமுங் கானும் என்பதற்கோர் புறநடை கூறு கின்றது.

(இ-ள்) ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும் நெட்டெழுத்துக்களுள் ஐகாரமு மௌகாரமு முன்விலக்கப் பட்ட கானொடுந் தோன்று மென்றவாறு.

ஐகான் ஔகான் என வரும் உம்மை யிறந்தது தழீயிற்று(தழீஇயிற்று)காரத்தைக் கருதுதலின் (35)

138 புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலாது
மெய்யொடு சிவணு மவ்வியல் கெடுத்தே

இது புள்ளி யிற்றுமுன் னுயிர்முதன் மொழிவத்த காலத்துப் புணரு முறைமை கூறுகின்றது.

(இ-ள்) புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித்தியலாது— புள்ளியீற்றுச் சொன்முன் வந்தவுயிர் முதன் மொழியிலுயிர்

தனித்து நடவாது, மெய்யொடு சிவணும்-அப்புள்ளியோடு கூடும், அவ்வியல் கெடுத்து—தான்றனித்து நின்ற வவ்வியல்பினைக் கெடுத்தென்றவாறு.

எனவே நீரொடு கூடிய பால் போல நின்றதென்றொற்றுமை கூறினாரீண்டு இதனானே யுயிர்மெய்யெனப் பெயர்பெற்றது.

உதாரணம்: பாலரிது பாலாழி ஆலிலைபொருளீட்டம் வானுலகு வானூடு வேலெறிந்தான் வேலேற்றான் பொருளையம் பொருளொன்று நாணோடிற்று சொல்லோவியம் எனவரும்.

ஒன்றென முடித்தலென்பதனா னியல்பல்லாதபுள்ளி முன்னருயிர் வந்தாலு மிவ்விதி கொள்க. அதனை அதனொடு நாடுரி எனவரும். இவற்றைச் சுட்டு முதலுகர மன்னொடுஉரிவருகாலை(நாழிக்கிளவி)என்பனவற்றான் முடிக்க புள்ளியீற்று முன்னுமென வும்மையை மாற்றி யெச்சவும்மை யாக்கிக் குற்றிய லுகரத்தின் முன்னுமென வவ்விதிகொள்க. (முன்னரும் என அவ்விதி கொள்க) எனவே குற்றியலுகரமு மற்றென்றதனோடு பொருந்திற்றாம். நாகரிது வரகரிது எனவரும். (36)

139 மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு பாகும்

இது (இஃது)உயிர்மெய்ப் புணர்ச்சிக்கண்ணுயிர் நீங்கிய வழிபடுவதோர் விதி கூறுகின்றது.

(இ-ள்) மெய்யுயிர் நீங்கில்-மெய்தன்னோடு கூடி நின்றவுயிர் புணர்ச்சி யிடத்துப் பிரிந்து வேறுநின்றதாகில் தன்னுருபாகும்(தன் உருவாகும்)-தான் முன்னர்ப் பெற்று நின்ற புள்ளிபெற்று நிற்குமென்றவாறு.

உதாரணம்: ஆல் இலை அது அனை (அதன் ஐ)என வரும்,

உயிரின்ன வடிவிற்றென்றாசிரியர் கூறாமையினு யிர்க்கணாராய்ச்சியின்று.

இனி எகர வொகரங்களைப் (ஒகரங்களைப்) புள்ளி யான் வேற்றுமை செய்தலிற் றொன்றுதொட்டு வழங்கின வடிவுடையவென்று கோடலுமாம் புணர்ச்சியு ளுயிர் மெய் யினைப் பிரிப்பாராதலினிது கூறாக்காற் குன்றக் குறவா மென்றுணர்க. (குன்றக் கூறலாமென்று உணர்க) (37)

140 எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்

இது (இஃது) உயிரீறு முயில்முதன் மொழியும் புண ரும்வழி நிகழ்வதோர் கருவி கூறுத னுதலிற்று (கருவி கூறுகின்றது)

(இ-ள்) எல்லாமொழிக்கும்-நிலைமொழியும் வருமொ ழியுமாய்ப் புணரு மெல்லாமொழிக்கும், உயிர்வருவழியே -உயிர் முதன்மொழி வருமிடத்து உடம்படுமெய்யி னுருவு கொளல் வரையார் - உடம்படு மெய்யினது வடிவை வுயி ரீறுகோடலை நீக்கார் கொள்வாராசிரியரென்றவாறு.

அவை யகரமும் வகரமு மென்பது முதனூல் பற்றிக் கோடும்.

''உடம்படு மெய்யே யகார வகார
முயிர்முதன் மொழி வருஉங் காலை யான

எனவும்,

இறுதியு முதலு முயிர்நிலை பெறினே (வரினே)
யுறுமென மொழிப வுடம்படு மெய்யே.

எனவுங் கூறினாராகலின் உயிர்களுள் இகர ஈகார ஐகார வீறும் யகரவுடம்படு மெய்கொள்ளும். ஏகாரம் யகரமும்

(யகாரமும்) வகரமும் (வகாரமுங்) கொள்ளும் அல்லன வெல்லாம் வகரவுடம்படு மெய்கொள்ளு மென்றுணர்க

உதாரணம் : கிளியழகிது. குரீஇ யொப்புவாழை (குரீஇயோப்புவாள்) வரையர மகள் (வரையர மகளிர்) எனவும் விளவழகிது, கடுவழகிது, பலாவழகிது, பூவழகிது, கோவழகிது, கௌவடைந்தது, எனவொட்டுக (எனவும் ஒட்டுக)

'ஏயெ யிவளொருத்தி பேடியோ வென்றார்'
ஏவாடல் காண்க என ஏகாரத்திற் கிரண்டும் வந்தன.

ஒன்றென முடித்த லென்பதனால் விகாரப்பட்ட வுயிர் மொழிக்கண்ணு முடம்படு மெய் கொள்க. மரவடி, ஆயிரு திணை எனவரும். வரையா ரென்றதனா னுடம்படுமெய் கோடலொருதலையன்று. கிளிஅரிது மூங்கா இல்லை எனவும் வரும். ஒன்றென முடித்த லென்பதனான் விண் வத்துக்கொட்கும்' எனச்சிறு பான்மை புள்ளி யீற்றினும் வரும். செல்வுழி உண்புழி என்பன வினைத்தொகை யெனமறுக்க. (38)

141 எழுத்தோ ரன்ன பொருடெரி புணர்ச்சி
யிசையிற் றிரித னிலைஇய பண்பே

இது எழுத்துக்களொன்று பலவாமென எய்தாதெய்து வித்தது. (இஃது எழுத்துக்கள் ஒன்றுபலவாமென எய்தாத தெய்துவிக்கின்றது)

(இ.ள்) எழுத்தோரன்ன பொருடெரி புணர்ச்சி -எழுத் தொரு தன்மையான் பொருள் விளங்க நிற்கும் புணர் மொழிகள், இசையிற்றிரித னிலைஇய பண்பே—எடுத்தல் படுத்தல் நலிதலென்கின்ற வோசை வேற்றுமையாலே புணர்ச்சி வேறுபடுத னிலைபெற்ற குணமென்றவாறு.

உதாரணம் : செம்பொன் பதின்றொடி, செம்பருத்தி குறும்பரம்பு நாகன்றேவன் போத்து, தாமரக் கணியார்

[தாமரக்கணியார்] குன்றேறாமா எனவிவை யிசையிற் றிரிந்தன 39

142 அவைதாம்
முன்னப் பொருள புணர்ச்சி வாயி
னின்ன வென்னு மெழுத்துக்கட னிலவே.

இது மேலதற்கோர் புறநடை கூறுகின்றது.

[இ-ள்] அவைதாம் - பலபொருட்குப் பொதுவென்ற புணர்மொழிகடம்[புணர்மொழிகள் தாம்]முன்னப் பொருள -குறிப்பானுணரும் பொருண்மையினையுடைய புணர்ச்சி வாயி னின்னவென்னு மெழுத்துக்கடனில-புணர்ச்சியிடத் தின்தன்மையவென்னு மெழுத்து முறைமையையடைய வல்ல வென்றவாறு,

செம்பொன் பதின்றொடி என்றுழிப் பொன்னாராய்ச் சியுளவழிப் பொன்னென்றும் [பொன்னெனவுஞ்] செம்பா ராய்ச்சி யுளவழிச் செம்பென்றுங் [செம்பெனவுங்] குறிப்பா னுணரப்பட்டது. இசையிற்றிரித லென்ற தொலி யெழுத் திற்கெனவும் எழுத்துக்கடனில வென்றது வரிவடிவிற் கெனவுங் கொள்க.

நான்காவது புணரியன் முற்றும்



5 - வது, தொகை மரபு.

143 கசதப முதலிய மொழிமேற் றோன்று
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னு மொற்றா கும்மே
யன்ன மரபின் மொழிவயி னான

என்பது சூத்திரம்.

உயிரீறும் புள்ளியீறும் மெல்லெழுத்தினுண் முடிக்கும் வழி யீறுகடோறும் விரித்து முடிப்பனவற்றை யீண்டோ ரோவோர் சூத்திரங்களாற்றொகுத்து முடிவு கூறினமையி னிவ் வோத்துத் தொகை வரபென்னும் பெயர்த்தாயிற்று. மேன் (மேல்) மூவகை மொழியு நால்வயொற் புணர்வுழி மூன்று திரிபுமோரியல்பு மெய்தி வேற்றுமை யல்வழியென யிருபகுதியவாகி யெழுஞ்சாரியையு(பகுதியவாகிஎழுத்துஞ் சாரியையு) மிக்குப் புணருமாறிது வென்றுணர்த்தியவை தாம் விரித்த சூத்திரப் பொருளவன்றியுந் தொக்குப்புணரு மாறுகூறுதலி னிவ்வோத்துப் புணரியலோடியை புடைத் தாயிற்று, இதன்றலைச் சூத்திர முயிர் மயங்கியலையும் புள்ளிமயங்கியலையும் நோக்கியதோர் வருமொழிக் கருவி யை வேற்றுமை யல்வழி யென்பன வற்றுக்கட் கூறுகின் றது. (வருமொழிக் கருவி கூறுகின்றது)

(இ-ள்) கசதப முதலியமொழிமேற்றோன்று மியற்கை மெல்லெழுத்து-உயிரீறும் புள்ளியீறு முன்னர் நிற்பக்கசத பக்களை முதலாகவுடைய மொழிகள் வந்தாலவற்றிற்கு மேலே தோன்றி நிற்கு மியல்பாகிய மெல்லெழுத்துக்கள் யாவையெனின், சொல்லிய முறையான் ஙஞநம வென்னு மொற்றாகும் - நெடுங்கணக்கிற் பொருந்தக்கூறிய முறை யானே கசதபக்களுக்கு ஙஞநம வென்னு மெழுத்துக்கணிர

நிறை வகையானாம் (ஒற்றுக்கள் நிரனிறை வகையானாம் அன்ன மரபின் மொழிவயினான-அத்தன்மையாகிய முறையினையுடைய மொழிகளிடத்தென்றவாறு (அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிளிடத்து என்றவாறு)

உதாரணம் :- விளங்கோடு செதிள் தோள் பூ என வரும். இது மரப்பெயர்க்கிளவியென்பதனான்மெல்லெழுத்துப் பெற்றது. மரங் குறிது சிறிது தீது பெரிது என அல்வழிக்கட்டிரியுமாறல் வழியெல்லா மென்பதனாற் பெறுமேனு மீண்டுத் தோன்று மென்றதனானிலை மொழிக்கட்டோன்றி நின்ற வொற்றுத்திரிதல்கொள்க அன்ன மரபின் மொழியன்மையின் விளக்குறுமை விளக்குறைத்தானென்புழி மெல்லெழுத்துப் பெறாவாயின இவை ஏழாவது மிரண்டாவதுந் திரிதலின் இங்ஙனம் எழுத்துப்பெறுவனவெல்லாம் (பெறுவனவுந் திரிவனவு மெல்லாம்) வருமொழியேபற்றி வருமென்றுணர்க. (1)

144 ஞநம யவவெனு முதலாகு மொழியு
முயிர்முத லாகிய மொழியு முளப்பட
வன்றி யனைத்து மெல்லா வழியு
நின்ற சொன்முன் னியல்பா கும்மே.

இது முற்கூறிய நால்வகைப் புணர்ச்சியுளியல்பு புணருங்காலிக்கூறிய பதினேழெழுத்தும் வருமொழியாய் வந்தவிடத் திநபத்துநான்கீற்றின் முன்னரும் வேற்றுமையிலுமல்வழியிலும் வருமொழி யியல்பாய் முடிகவென்கின்றது.

(இ-ள்) ஞ ந ம ய வ வெனு முதலாகுமொழியும்—ஞந ம ய வ வென்று சொல்லப்படு மெழுத்துக்கண் முதலாக நிற்குஞ் சொற்களும் (எழுத்துக்கள் முதலாய் நிற்குஞ்

சொற்களும்) உயிர் முதலாகிய மொழியு முளப்பட - உயி ரெழுத்துமுதலாய் நின்ற சொற்களுந் தம்மிற்கூட, அன்றி யனைத்தும் - அப்பதினேழாகிய வருமொழிகளும், எல்லா வழியும்-வேற்றுமையுமல்வழியுமாகிய வெல்லாவிடத்தும், நின்றசொன்முன் - இருபத்துநான்கீற்றவாய் நின்ற பெயர்ச்சொன்முன்னர், இயல்பாகும்-திரிபின்றி இயல்பு புணர்ச்சியாய் நிற்குமென்றவாறு.

உயிரீற்றின்கண் எகர ஒகர மொழிந்தன கொள்க.

உதாரணம் : விள, பலா, கிளி, குரீ, கடு, பூ, சே,கை சோ, கௌ எனநிறுத்தி, ஞான்றது. நீண்டது, மாண்டது யாதுவலிது நுந்தையது எனமெய் முதன்மொழி வருவித் துப்பொருடருதற்கேற்ப வறிந்து கூட்டுக. சோ வென்ப தரண் அதற்குச் சோ ஞொள்கிற்றென்க. (ஞெள்கிற்று எனக்கொள்க) கௌவுக்கு(கௌ வென்பதற்கு) கௌ ஞொ கிழ்ந்தது நீட்டித் தென்க [நீடிற்று என்க] இனி இவற்றின் முன்னுயிர் [முன்னர் உயிர்] முதன் மொழி வருங்கால் அழ கிது ஆயிற்று இல்லை யீண்டிற்று உண்டு ஊறிற்று,எழுந் தது ஏய்ந்தது, ஐயம் ஐது] ஒன்று ஓங்கிற்று, ஔவியது [ஔவியத்தது] எனவநம் இவற்றுள் சோவுக்கு இடிந்தது ஈண்டையது உள்ளது ஊடிற்று [ஊறிற்று] ஔவியத்தது என்பனவற்றோடு முற்கூறியவற்றையொட்டு.சௌவுக்கு ஈண்டையது ஊக்கத்தது என்பனவற்றோடு முற்கூறிய வற்றை யெகிட்டுக. இனி வேற்றுமைக்கண் விள முதலிய வற்றை நிறுத்தி ஞாற்சி நீட்டி மாட்சி யாப்பு வன்மை அழகு ஆக்கம் இன்மை [இளமை] ஈட்டம் உயர்பு [உயர்வு] ஊற்றம் எழுச்சி ஏற்றம் ஐயம் ஒழிவு ஓக்கம் ஔவியம் எனவொட்டுக. ஏலாதனவற்றிற்கு முற்கூறியவாறு போல ஏற்பனகுணர்ந்தொட்டுக [கொணர்ந்து ஒட்டுக]

இனிப் புள்ளியீற்று ணகாரமு னகாரமு மேற்கூறுப ஏனைய வீண்டுக் கூறுதும்

உதாரணம் : உரிஞ் வெரிந் எனநிறுத்தி ஞெகிழ்ந்தது நீட்டித்தது அழகிது ஆயிற்று எனவும், ஞெகிழ்ச்சி நீட்டிப்பு அடைவு ஆக்கம்எனவும் வருவித்தெல்லாவற்றோடுமொட்டுக. மரம், வேய், வேர். யாழ், எனநிறுத்தி, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது,வலிது, நுந்தையது, அழகிது ஆயிற்று எனவும் வருவித்து எல்லாவற்றோடு மொட்டுக. இவற்றுள் மகரவீறு வேற்றுமைக்கட்கெடுதல் துவரவென்றதனாற் கொள்க. அல்வழிக்கட் கெடுதலல்வழி யெல்லாமென்றதனாற் கொள்க. நிலைமொழித்திரிபு ஈண்டுக் கொள்ளாமை யுணர்க. யகரவீறு யகரத்தின் முன்னரிரண்டிடத்துங் கெடுதலீண்டெல்லா மென்றதனாற் கொள்க. வே [வேல்] தெவ் கோள் எனநிறுத்தி ஏற்பனகுணர்ந்திருவழியுமொட்டுக. ணகார ளகார லகார னகாரங்கள் முன்னர் நகாரம் வருமொழியாய் வந்துழி யன்னகரந் திரிதலினத்திரிந்தவுதாரணங்க ளீண்டுக் கொள்ளற்க. இவற்றுட்டிரிந்து வருவனவுளவவையெடுத்தோத்தானு மிலைசானு (இலேசானும்) மேனையோத்துக்களுண் முடிக்கின்றவாற்றானுணர்க. இனி எல்லாமென்றதனா னுயிர்க்கணமாயினொற்றிரட்டியு முடம்படு மெய்பெற்று முயிரேறியு முடியுங் கருவித்திரிவுக டிரிபெனப்படா விவ்வியல்பின் கண்ணென்றுணர்க வரகுஞான்றது வரகுஞாற்சி எனக் குற்றுகரத்தின் கண்ணுமிவ்வாறேகொள்க. இருபத்து நான்கீற்றிற்கும் (வேற்றுமைக்கும் அல்வழிக்கும்) அகத்தோத்தினுள் னாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றையொரு சூத்திரத்தாற் றொகுத்து முடித்தார். மேலுமிவ்வாறே கூறுப. இவ்வியல்பு வருமொழி நோக்கிக் கூறியதென்றுணர்க, இவ்வியல்பு புணர்ச்சி மெய்க்கணிகழுமாறுயிர்க்கணிகழாமையின் மெய்முற் கூறினார். (2)

145 அவற்றுண்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான

இது முற்கூறிய முடிவிற் சிலவற்றிற்கம்முடிபு விலக்கிப் பிறிதுவிதியெய்து வித்தது.

(இ-ள்) அவற்றுள்-முற்கூறிய மூன்று கணத்தினும், மெல்லெழுத்தியற்கை யுறழினும் வரையார்-மெல்லெழுத்தினதியலியல்பாதலேயன்றி யுறழ்ந்து முடியினு நீக்கார், சொல்லிய தொடர்மொழி யிறுதியான - சொல்லப்பட்ட தொடர்மொழி யீற்றுக்க ணென்றவாறு.

உம்மை எதிர்மறையெனவே உறழாமை வலியுடைத்தாயிற்று. கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி நுனி முரி எனவும் இதழ்ஞெரி இதழ்ஞ்ஞெரி நுனி முரி எனவும் வரும். வருமொழி முற்கூறியவதனான் ஒரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொருமொழிக. (ஈரெழுத்தொருமொழி) ஞள்ளுஞ்சில வுறழ்ச்சிபெற்று முடிதலுங் கொள்க பூஞெரி பூஞ்ஞெரிநுனி முரி எனவும் வரும். சொல்லிய வென்றத னோரெழுத்தொருமொழிகளுட் சிலமிக்கு முடிதல் கொள்க. கைஞெரித்தார் நீட்டினார் மறித்தார் எனவருமின்னு மிதனானே ஈரெழுத்தொரு மொழிக்கண் மெய்ஞ்ஞானம் நூல்மறந்தார் இவற்றை நலிந்து கூறிப்பிறத்தலி னியல்பென்பாருமுளர். பூஞாற்றினார் என்றாற் போல்வன மிகாதன. (3)

146 ணனவென் புள்ளிமுன் யாவு ஞாவும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்

இது யகர ஞகர முதன்மொழி வந்தானிகழ் வதோர் [வந்த இடத்து நிகழ்வதோர்] தன்மை கூறுகின்றது. இதுவும் புணரிய லொழிபாய்க் கருவிப்பாற்படும்.

(இ-ள்) ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்—ணகார னகாரமென்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர் வந்த யாவு ஞாவு முதலாகிய வினைச்சொற்கள், வினை

யோரனைய வென்மனார் புலவர்- ஒருவினை வந்த தன் மையை டுயாக்குமெனக் கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம் : 'மண்யாத்த கோட்ட மழகளிறு தோன் றுமே, மண்ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே. என வும் 'பொன் யாத்த தார்ப்புரவி பரிக்குமே பொன் ஞாத்த தார்ப்புரவி பரிக்குமே எனவும்வரும்.

வினைக்கண்ணெனவே மண்யாமைமண்ஞாமை எனப் பெயர்க்கண் வாராவாயிற்று.ஞாமுற் கூறாது யாமுற் கூறி யவதனால் ஞாச் சென்றவழி யாச்செல்லாது. யாச் சென்ற வழி ஞாச்செல்லு மென்று கொள்க. மண்ஞான்ற தென்ற வழி மண்யான்றதென வாராமை யுணர்க. (4)

147 மொழிமுத லாகு மெல்லா வெழுத்தும்
வருவழி நின்ற வாயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிட னிலவே.

இது ணகர வீறும் னகரவீறு [ணகாரவீறும் னகாரா வீறும்] மல்வழிக்கணியல்பாய் முடியுமென்கின்றது,

(இ-ள்) மொழிமுதலாகு மெல்லா வெழுத்தும் வருவழி -மொழிக்கு முதலா மெனப்பட்ட விருபத்திரண்டெழுத்தும் வருமொழியாய் வருமிடத்து, நின்றவாயிரு புள்ளியும் - முன்னர்க் கூறிநின்ற ணகாரமு னகாரமும், வேற்றுமையல் வழித் திரிபிடனிலவே-வேற்றுமையல்லாத விடத்துத் திரியு மிட மிலவென்றவாறு.

மண்பொன் எனநிறுத்திக் கொண்டது சிறிது தீது பெரிது ஞெகிழ்ந்தது,நீண்டது,மாண்டது,யாது வலிது நுந் தையது,அடைந்தது,ஆயிற்று,இல்லை,ஈண்டிற்று,உண்டு ஊட்டிற்று,எவ்விடத்து,ஏறிற்று,ஐது ஒழுக்கிற்று ஓங்கிற்று ஔவையது என வொட்டுக. வருமொழி முற்கூறிய வதனா ணகாரத்திற்குச் சிறுபான்மை திரிபு முண்டென்று கொள்க.

சாட்கோல் எனவரும் இதற்கு சாணாகிய கோலென்க. இவை நின்ற சொன்முனியல்பாகு மென்புழி யடங்காவா யிற்று: (வாயின) அவை (அது) வருமொழி பற்றித்திரியா மை கூறினாராதலின் இவை [இது] நிலைமொழிபற்றித் திரியாமை கூறின வாதலின் [திரியாமை கூறியது] [5]

148 வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை யாவயி னான.

இது முற்கூறிய வாற்றான் வேற்றுமைக் கட்டிரி வெய்தி நின்றனவற்றை யீண்டு வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தல் வழிதிரியாவென வெய்தியது விலக்கிற்று.

[இ-ள்] ஆவயினான - அல்வழிக்கண் ணங்ஙனந் திரி யாது நின்றவவ்வொற்றுக்கள், வேற்றுமைக் கண்ணும்- வேற்றுமைப் பொருட்புணர்ச்சி யிடத்தும், வல்லெழுத் தல் வழி மேற்கூறியற்கை-வல்லெழுந்தல்லாத விடத்து மேற் கூறிய வியல்பு முடிபாவென்றவாறு.

எனவே வல்லெழுத்து வந்துழித் திரியுமென்றாரா யிற்று.

உதாரணம் மண், பொன் என நிறுத்தி ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி யாப்பு வலிமை நுந்தை அழகு ஆக்கம் இன்மை யென ஏற்றன [ஏற்பன] குணர்ந் தொட்டுக. இதுவுஞ் செய்கை சூத்திரமே னா ன் கு சூத்திரத்தாற் கூறுப. [கூறியன] வல்லெழுத்து வந்துழித் திரியுமாறுத் தந்த மீற்றுட் கூறுதும். [6]

149 லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தநவெனவரிற் றனவா கும்மே.

இது புள்ளி மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுகின்றது.

[இ-ள்] லன என வரூஉம் புள்ளி முன்னர் - லகார னகாரமென்று சொல்லவருகின்ற புள்ளிகளின் முன்னர், தந எனவரின் [தகாரமும் நகாரமும்] தகார நகார முத லென்று சொல்லும்படியாகச் சிலசொற்கள்வரிற் றனவா கும்-நிரநிறை வகையானேயவை றகார னகாரங்களாய்த் திரியுமென்றவாறு.

உதாரணம் : கஃறீது கன்னன்று பொன்றீது பொன் னன்று எனவரும் நிலைமொழித்திரிபு தத்த மீற்றுட் கூறுதும்- (7)

150 ணளவென் புள்ளிமுன் டணவெனத்தோன்றும்

இதுவுமது.

[இ.ள்] ணளவென் புள்ளிமுன் - ணகார ளகார மென்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னதிகாரத்தாற் தகார] றகார நகாரங்கள் வருமே னெனின் (வருமெனின் டணவெனத் தோன்றும் - அவை நிரநிறை வகையால் டகாரணகாரங்களாய் திரி [திரிந்து] தோன்று மென்ற வாறு.

மண்டீது மண்ணன்று முஃடீதுமுண்ணன்று எனவரும் நிலைமொழித்திரிபு தத்த மீற்றுட் கூறுதும் (கூறுப) (8)

151 உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியு
மியல்பா குனவு முறழா குநவுமென்
றாயீ ரியல வல்லெழுத்து வரினே

இது முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு கூறுகின்றது.

[இ-ள்] உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்—உயிரீ றாய் வந்த முன்னிலை வினைச் சொற்களும், புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும் - புள்ளியீறாய் வந்த முன்னிலை

வினைச்சொற்களும், வல்லெழுத்துவரின்- வல்லெழுத்து முதலாகிய மொழிவரின், இயல்பாதுணவு முறழாந்நிலை மென்றாயீரியல-இயல்பாய் முடிவனவு முறழ்ந்து முடிவன வுமென வவ்விரண்டியல்பினை யுடையவென்றவாறு.

உதாரணம் : எறிகொற்றா குணாகொற்றா(கொணா, கொற்றா) உண்கொற்றா நின்கொற்றாசாத்தா தேவா பூதாளனவிவையியல்பு. நடகொற்றா சாத்தாதேவா பூதா எனவிவையியல்பு. நடகொற்றா நடக்கொற்றா ஈர்கொற்றா ஈர்க்கொற்றா சாத்தாதேவாபூதா எனவிவை யுறழ்ச்சி ஈறென்றோதில்லையின் வினைச்சொல்லே கொள்க. இது முன்னின்றான் றொழிலுணர்த்துவனவும் வனைத் தொழிற் படுத்துவனவுமென விருவகை. இ ஐ அய் (ஆய்) முதலியன தொழிலுணர்த்துவன. நடவா முதலிய வுயிரீறும் புள்ளியீறுந் தொழிற்படுத்துவன நில் கொற்றா நிற்கொற்றாளனத்திரிந் நுறழ்ந்தனவு முறழா குனவு மென்னும்பொதுவகையான் முடிக்க. இயல்பு முறழ் வுமென்றிரண்டியல்பின வென்னா தாகுனவு மென்றத னான் துக்கொற்றா நொக்கொற்றாஞெள்ளா நாகா மாடா வடுகா எனஓரெழுத்தொரு மொழி முன்னிலை வினைச் சொன்மிக்கே முடிதலுங்கொள்க. (9)

152 ஔவென வரூஉ முயிரிறு சொல்லும்
ஞநமவ வென்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியு முளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.

இது (இ-ந்) எய்தியது விலக்கிற்று. முற்கூறியவற் றுட் சில வாகாதனவற்றை வரைந்துணர்த்தலின்

(இ-ள்)ஔவென வரூஉ முயிரிறு சொல்லும்-ஔ என வருகின்ற வுயிரீற்றுச் சொல்லும், ஞநமவ வென்னும் புள்ளி யீற்றுச் சொல்லும், குற்றிய லுகரத்திறுதியும் - குற்றிய லுகரத்தையிறுதியிலேயுடைய சொல்லும், முன்னிலை

மொழிக்குளப்படமுற்றத் தோன்றா - முன்னர் முன்னிலை மொழிக்குப் பொருந்தக்கூறிய வியல்பு முறழ்ச்சியுமாகிய முடிபிற்கு முற்றத்தோன்றா வென்றவாறு.

முற்றவென்றதனா னிலைமொழியுகரம் பெற்று றழந்து முடிதல் கொள்க. (10)

உதாரணம் கௌவுகொற்றா கௌவுக்கொற்றா. வௌவு கொற்றா வௌவுக்கொற்றா உரிஞுகொற்றா உரிஞுக்கொற்றா பொருநுகொற்றா பொருநுக்கொற்றா திருமுகொற்றா திருமுக் கொற்றா தெவ்வுகொற்றாதெவ் வுக்கொற்றாகூட்டுகொற்றா கூட்டுக்கொற்றா எனவரும்.

153 உயிரீ றாகிய வுயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரு
மெல்லா வழியு மியல்பென மொழிப

இது (இ-ஃது) உயர்திணைப் பெயர், வன்கண மென்கணமிடைக்கண முயிர்க்கண மென்னு நான்கு கணத்தினு மிருவழியு முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) உயிரீறாகிய வுயர்திணைப் பெயரும் - உயிரீறாய் வந்த வுயர்திணைப் பெயர்களும், புள்ளியிறுதி யுயர்திணைப் பெயரும்-புள்ளியீற்றினை யுடைய வுயர்திணைப் பெயர்களும், எல்லா வழியும் - நான்கு கணத்தல் வழியும் வேற்றுமையுமாகிய வெல்லா விடத்தும், இயல்பெனமொழிப-இயல்பாய் முடியுமென்று கூறுவர் புலவரென்றவாறு.

வன்கண மொழிந்த கணங்களை ஞநமயவ வென்பதனான் முடிப்பாரு முளர். அது பொருந்தாது. இவ்வாசிரியருயர்திணைப் பெயரும் விரவுப் பெயரு மெடுத்தோதியே முடிப்பாராதலின்

உதாரணம் : நம்பி அவன் எனவும் நங்கை அவள் எனவும் நிறுத்தி அல்வழிக்கண் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும் குறியள் சிறியள் நீயள் பெரியள்எனவும் ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவும் ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் எனவும் யாவன்வலியன் எனவும் யாவள் வலியள் எனவும்அடைந்தான் ஆயினான் ஒளவித் தான் எனவும் அழகியள் ஆடினாள் ஒளவித்தாள் எனவும் ஒட்டுக. இனி வேற்றுமைக் கண் கை செவி தலை புறம் எனவும் ஞாற்சிநீட்சி மாட்சி எனவும் யாப்பு வன்மை எனவும் அழகு ஒளவியம் எனவும் ஒட்டுக. ஒருவனெனத்(ஒருவேன் எனத்) தன்மைப் பெயர்க் கண்ணும்குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் எனவும் கைசெவி தலை புறம் எனவும் எல்லாவற்றோடு மொட்டுக. (நீ) முன்னிலை விரவுப் பெயராதலி னீண்டைக்காகா.

இனி உயிரீறு புள்ளி யீறென்ற (புள்ளியிறுதி என்ற மிகையானுயர்திணைப்பெயர்(மிகையானே உயர்திணைப் பெயர்) திரிந்து முடிவனவுங் கொள்க. கபிலாபரணர் இறைவனெடு வேட்டுவர். மருத்துவர் மாணி (மருத்துவ மாணிக்கர்) எனவிவை னகரவீறு கெட்டியல்பாய் முடிந்தன. ஆசீவகப் பள்ளி நிக்கந்தக்கோட்டம் எனவிவை யவ்வொற்றுக்,(யவ்வீறு கெட்டு மிக்கு முடிந்தன. ஈழவக்கத்தி வாணிகத் தேரு அரசக்கன்னி கோலிகத்தருவி (கோலிகக் கருவி) எனவிவை ஒருமை யீறும் பன்மை யீறுங் கெட்டு மிக்கு முடிந்தன.குமாரகோட்டம்(குமரகோட்டம்)குமாரக் கோட்டம் (குமரக் கோட்டம்) பிரம கோட்டம் பிரமக் கோட்டம் எனவிவை யீறுகெட்டு வல்லெழுத் துறழ்ந்தன வண்ணாப் பண்டி (வண்ணாரப் பெண்டிர்) எனமிக்கு முடிந்தது. பல சங்கத்தார் பலசான்றார் (பலசான்றோர்) பல்லரசர் என்றாற் போல்வன ரகரவீறு மதன் முன்னர் நின்ற வுகரமுங் கெட்டுப் பிறசெய்கைகளும் பெற்று முடிந்தன.

இனி யெல்லாவழியு மென்றதனா னுயர்திணை வினைச்சொலியல்பாயுந் திரிந்து முடிவன வெல்லாங் கொள்க. உண்கு உண்டு வருது சேறு (உண்பல்) உண்டேன் உண்பேன் என்னுந் தன்மை வினைகளைக் கொற்றா சாத்தா தேவாபூதா என்பனவற்றோடொட்டுக. உண்டீர் சான்றீர் பார்ப்பீர் என முன்னிலைக் கண்ணும்உண்ப உண்டார் சான்றார் பார்ப்பார் எனப்படர்க்கைக் கண்ணு மொட்டுக. இவையியல்பு உண்டேஞ் சான்றேம் (உண்டனெஞ் சான்றேம்) உண்டநேநாம் (உண்டே நாம்) என்றாற் போல்வன திரிந்து முடிந்தன பிறவு மன்ன. (11)

154 அவற்று
ளிகர விறுபெயர் திரிபிட னுடைத்தே

இது (இஃது) உயர் திணைப்பெயருட் சிலவற்றிற் கெய்தா தெய்துவித்தது.

[இ-ள்] அவற்று ளிகர விறுபெயர்-முற்கூறிய வுயர் திணைப் பெயர்களுளிகரவீற்றுப் பெயர், திரிபிடனுடைத்து -இருவழியுந் திரிந்து முடியுமிடனுடைத் தென்றவாறு.

எட்டிப்பூ காவிதிப்பூ நம்பிப்பேறு என வுயர்திணைப் பெயர்கள் [என இவ்வுயர்திணைப்பெயர்கள்] வேற்றுமைக் கண் மிக்கு முடிந்தன. எட்டி காவிதி யென்பன தேயவழக்காகிய சிறப்புப் பெயர் எட்டி மரமன்று அது அஃது [எட்டிக் குமரனிருந்தோன்றன்னை யென்பதனா னுணர்க. இவை எட்டியதுபூ எட்டிக்குப்பூ வெனவிரியும். இனி நம்பிக் கொல்லன் சான்றான் நம்பித்துணை நம்பிப்பிள்ளை என வும் செட்டிக் கூத்தன் சாத்தன் தேவன் பூதன் எனவும் அல்வழிக்கண்ணுயர்திணைப்பெயர் மிக்கு முடிந்தன, இடனுடைத்தென்றதனா னிகரவீறல்லாதனவு மீறுதிரியாது நின்று வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. நங்கைப்பெண்

நங்கைச்சானி யென அல்வழிக்கட் சிறுபான்மை ஐகாரவீறு மிக்கன. இவ்வீற்றஃறிணைப்பெயர் மிக்கு முடிந்த லுயிர் மயங்கியலுட் கூறுப. [12]

155 அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே

இது விரவுப்பெயரு ளியல்பாய் முடிவனவு முளவென் கின்றது.

[இ-ள்] அஃறிணை விரவுப்பெயர்—உயர்திணையோ டஃறிணை விரவும் விரவும்பெயர், இயல்புமாருளவே- இயல்பாய் முடிவனவுமுள வியல்பன்றி முடிவனவுமுள வென்றவாறு.

உயர்திணையோ [உயர்திணைப்பெயரோடு] டஃறி ணைச்சென்று விரவிற்றென்றதென்னை சொல்லதிகாரத் திருதிணைச்சொற்கு மோரன்ன வுரிமையுமென்று சூத்தி ரஞ் செய்வாராலெனின் அதுவும்பொருந்துமாறு கூறுதும். சாத்தன் சாத்திமுடவன் முடத்தினவரும் விரவுப்பெயர்க் கண்ணுயர்திணைக் குரித்தாக. வோதிய வாண்பாலும் பெண்பாலு முணர்த்தி நின்ற வீற்றெழுத்துக்களே யஃறி ணை யாண் பாலும் பெண்பாலு முணர்த்திற் றென்றல் வேண்டும். என்னை அஃறிணைக் கொருமைப்பாலும்பன் மைப்பாலு முணர்த்து மீறன்றி யாண்பாலும் பெண்பாலு முணர்ந்து மீறுகளுள வாக வாரியரோதாமையின் அங் ஙன முயர்திணையிருபாலு முணர்த்து மீறுகணின்றே யஃறிணை யாண்பாலையும் பெண்பாலையு முணர்த்துத லினஃறிணை யுயர்திணை யோடுசென்று விரவிற்றென்ற வற்றினுண்மைத் தன்மைத்தோற்றங் கூறுவா னீண்டுக் கூறினார் இவ்வாறே விளி மரபின்கட்கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயரென் புழியு மாசிரியருயர்திணை யோடஃறிணைவிரவிய விரப் பெயரென வாண்டு முண் மைத் தன்மைத் தோற்றங் கூறுவர் மாணாக்கனினிதினு ணர்தற் கிவ்வாறே விரவிப் பெயரின துண்மைத்தன்மைத் தோற்ற மிரண்டதிகாரத்துங் கூறினாரென்றுணர்க.

இனி, அவையல்வழிக்கணியல்பாய் நிற்குமாறு சாத்தன்கொற்றன் சாத்தி கொற்றி என நிறுத்தி குறியன் சிறியன் தீயன் பெரியன் குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும் ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் ஞான்றாள் நீண்டாள் மாண்டாள்யாவ ள்வலியள் எனவும்அடைந்தான் ஒளவூராள்அடைந்தால்(ஒளவூரான் ஒளவித்தான் அடைந்தான்ஒளவித்தாள்) எனவும்நான்கு கணத்தோடு மொட்டுக. இனி வேற்றுமைக்கண் கை செவி தலைபுறம் எனவும் ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஒளவ்வியம் (ஒளவியம்)எனவும் ஒட்டுக. இவற்றுள் னகார நிற்கத் தகார நகாரம் வந்துழித்திரியு முதாரண மீண்டுக் கொள்ளற்க. இனி சாத்தன் குறிது சாத்தி குறிது என அஃறிணை முடிபேற்பனவுங் கொள்க. இவற்றொடு வினைச்சொற் றலைப்பெய்ய விவையிருதிணைக்கு முரியவாம் ஆண்டு நாற்பத்தெட்டு சூத்திரத்தான் முடிவதனை யீண்டுத் தொகுத்தார் இது உயர்திணைக்கு மொக்கும். உம்மையாலியல்பன்றி முடிவன னகார வீற்றுக் [வீற்றுட்] காட்டுதும். [13]

156 புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையாற்
றம்மி னாகிய தொழிற்சொன் முன்வரின்
மெய்மை யாகலு முறழத் தோன்று [தோன்றலு]
மம்முறை யிரண்டு முரியவை யுளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இது மேலுயிரீற்றிற்கும் புள்ளி யீற்றிற்கும் வேற்றுமைக்கட் கூறு முடிபு பெறாது நிற்கு மூன்றாம் வேற்றுமைக் முடிபு கூறுகின்றது.

[இ-ள்] தம்மினாகிய தொழிற்சொல் - மூன்றாவதற்குரிய வினைமுதற் பொருளானுளவாகிய தொழிற்சொல்

புள்ளியிறுதி முன்னு முயிரிறு கிளவி முன்னும் வரின்— புள்ளியீற்றுச் சொன்முன்னரும் உயிரீற்றுச்சொன் முன்ன ரும் வருமாயின் மெய்மையாகலு முறழத் தோன்றலு மம் முறை யிரண்டு முரியவையுள-அவற்றுளியல்பாதலு முற ழத்தோன்றுதலுமாகிய வம் முறை யிரண்டும் பெறுதற்கு ரியவுளவாதலால், வேற்றுமை மருங்கிற் சொல்லிய முறை யால் வேண்டும் வல்லெழுத்து மிகுதி - உயிர்மயங்கிய லுள்ளும் புள்ளிமயங்கியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக் குச் சொல்லிய முறையான் விரும்பும் வலெழுத்து மிகுதி யை, போற்றல் - ஈண்டுக் கொள்ளற்க வென்றவாறு.

மெய்ம்மை பட்டாங்காதலினியல்பாம்

உதாரணம் : நாய் புலி என நிறுத்தி கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என விருத்தி இயல்பாயவாறுணர்க, சூர்கோட்பட்டான் சூர்க் கோட்பட்டான் வளி கோட்பட்டான் வளிக்கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என விவை யுறழ்ந்தன இவை நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் சூத்திரங்களான் முடிவனவற்றைத் தொகுத்தார்.

புள்ளி யீறுயிரீ ரென்றதனான் [புள்ளியிறுதி உயிரிறு கிளவி என்றதனாற்] பேஎய்க் கோட்பட்டானென எகரப் பேறு முறழ்ச்சிக்குக் கொடுக்க அம்முறையிரண்டு முரிய வையுளவே யென்றதனான் பாம்பு கோட்பட்டான் பாப் புக்கோட்பட்டான் என்னு முறழ்ச்சியு ணிலைமொழி யொற்றுத்திரிதலுங் கொள்க. இவ்விறுதிகள் [இவ்வீறுகள்] நாய்க்கால் தேர்க்கால் தேர்க்கால்கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுமாறுணர்க. [14]

157 மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலு
வல்லெழித்து மிகுவமி மெலிப்பொடு தோன்றலு

மியற்கை மருங்கின் மிகற்கை தோன்றலு
முபிர்மிக வருவழி யுயிர்கெட வருதலுஞ்
சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை யுறழத் தோன்றலு
முயர்திணை மருங்கி னொழியாது வருதலு
மஃறிணை விரவுப் பெயர்க் கவ்விய னிலையலு
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலு
மன்ன பிறவுந் தன்னியன் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந்திசைக்கு
மைகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இது [இஃது] இரண்டாம் வேற்றுமைத் திரிபு தொகுத் துணர்த்துகின்றது.

[இ-ள்] மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன் றலும்-மரப்பெயர் கிளவி மெல்லெழுத்து மிகுமே என்றத னான் விளங்குறைத்தானென மெல்லெழுத்து மிகுமிடத்து விளக்குறைந்தானெனவல்லெழுத்தொடு [வல்லெழுத்துத்] தோன்றலும், [வல்லெழுத்துமிகுவழி மெலிப்பொடு தோன் றலும்-மகரவிறுதி என்பதனான் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங்குறைத்தான்என மெல்லெ ழுத்துத் தோன்றுதலும்] இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும் - தாயென்கிளவி யாதுமென்றவழித் தாய் கொலையெனவியல்பாய் வருமிடத்துத் தாய்க்கொலை யெனமிகுதி தோன்றலும், உயிர்மிக வருவழியுயிர்கெட வருதலும் குறியதன் முன்னரு மெனவும் குற்றெழுத் திம் பரும் எனவும் ஏயெனிறுதிக் கெனவும் கூறிய வாற்றானு யிர் மிக்கு வருமிடத்து பலாக்குறைத்தான் தழுக்குணர்ந் தான் [கழுக்கொணர்ந்தான்] எக்காட்டினான் [ஏக்கட்டினான்] எனவுயிர் கெடவருதலும், சாரியை

யுள்வழிச் சாரியை கெடுதலும் — வண்டும்பெண்டு மென்பதனாற் சாரியைப் பெற்றுளவிடத்து வண்டு குணந் தானெனச் சாரியை கெட்டு நிற்றலும், சாரியையுள்வழித் தன்னுருபு நிலையலும்- வண்டும் பெண்டு மென்பதனாற் சாரியைப் பேறுள்ள விடத்து வண்டினைக் குணர்ந்தானெனத்தன்னுருபு நிற்றலும் (இதற்கு வல்லெழுத்துப் பேறீற்று வகையாற் கொள்க. சாரியை யியற்கை யுறழத் தோன்றலும் - புளிமரக்கிளவிக்கெனவும் பனையுமரையுமெனவு பூல்வேலென்றா வெனவும் பெற்ற சாரியைபெறாதியல்ய்ாய் நின்று புளி குறைத்தான் புளிக்குறைத்தான் பனைதடிந்தான் பனைத்தடிந்தான் பூல்குறைத்தான் பூற் குறைத்தான். எனமிக்குந்திரிந்து முறழ்ச்சியாகத் தோன்றலும் உயர்திணை மருங்கினொழியாது வருதலும்-உயிரீறாகிய உயர்திணைப் பெயரென்பதனான் (பெயரும் என்பதனான்)வேற்றுமைக்கணியல்பாக வருமென்றமை நம்பியைக் குணர்ந்தான்நங்கையைக் குணர்ந்தான் என்றவழியிரண்டானுருபு (இரண்டனுருபு) தொகாதே நிற்றலும் [ஒழியாதென்றதனான் மகற்பெற்றான் மகட்பெற்றான் எனவும் ஆடூஉ வறிசொல்மழவரோட்டிய அவற்கண்டெம்முள்எனவுமொழிந்து வருமென்றுங் கொள்க.

அஃறிணை விரவுப்பெயர்க்கவ்வியனிலையலும்-உயர்திணையோ டஃறிணை விரவுப்பெயர்க்குக் [விரவும்பெயர்க்கு] கொற்றனைக் குணர்ந்தானென வுருபு தொகாதே நிற்றலும் அவ்விய னிலையலு மென்றதனான் [அவ்வியல் நிலையலும் என்றதனானே மகற்பெற்றனென[மகப்பெற்றேனென] விரவுப்பெயர்க்கண்ணுந் தொகுதல் கொள்க. உருபியலுள்தேருங்காலை யென்றவிலேசானிதற்கு முன்னையதற்கும் வல்லெழுத்துப்பேறுங் கொள்க] மெய்பிறிதாகிடத்தியற் கையாதலும் — யுள்ளிமயங்கியலுணகாரனகாரவிறுதி வல்லெழுத்தியையின் மெய்பிறிதாமென்ற விடத்து மெய்பிறிதாகாது பொன்குணர்ந்தான் மண்குணர்ந்தானென வியற்கை

யாய் வருதலும், அன்னபிறவும் -அவைபோல்வன பிறவு மாவன அவை எக்கண்டு பெயருங்காலை யாழநின் கற் கெழுசிறுகுடி எனவும் நப்புணர்வில்லா நயனில்லோர் நட் பெனவும் வருவழி எக்கண்டு நப்புணர்வென்னுந் தொடக் கங் குறுகுமுயர்திணைப் பெயர்கள் மெல்லெழுத்துப்பெறு தற் குரியன வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. இன்னும் திணைபிளந்தான் [தினைபிளந்தான்] மயிர்குறைத்தான் தற்கொண்டான் செறுத்தான் புகழ்ந்தான் எனவரும். தன்னியன் மருங்கின் -தன்னையே நோக்கித்திரிபுநடக்கு மிடத்து, மெய்பெறக்கிளந்து பொருள்வரைந் திசைக்கும் -பொருள்பெற வெடுத்தோதப்பட்டேனை வேற்றுமைப் பொருட்புணர்ச்சியது [பொதுமுடிவினைத் தான் நீக்கி] வேறு முடிபிற்றாய் நின்றொலிக்கும், ஐகார வேற்றுமைத் திரிபெனமொழிப-இரண்டாம் வேற்றுமையது வேறுபட்ட புணர்ச்சி யென்று கூறுவ ராசிரிய ரென்றவாறு.

மெய்பெற வென்றதனானேசாரியையுள்வழித் தன்னு ருபு நிலையாது. செய்யுட்கண் வருவனவும் பிறவற்றின் கணுறழ்ந்து முடிவனவுங்கொள்க. மறங்கடித்த வருங்கற்பி னெனவும் 'சில சொல்லிற் பல கூந்த' லெனவும் 'ஆயிரு திணையினிசைக்கும்' னெனவும் பிறாண்டும் பெரும்பான் மையும் வருமென்று கொள்க. மைகொணர்ந்தான் மைக் கொணர்ந்தான் வில்கோள் விற்கோள் எனவரும். [இனி இவ்வாறு திரியாது அகத்தோத்திற் கூறிய பொதுமுடிபே தமக்கு முடிபாக வருவனவுங் கொள்க. அவைகடுக் குறைத் தான் செப்புக்கொணர்ந்தான். என்றாற் போல்வன] இனி இவன் தம்மினாகிய தொழிற்சொன் முன்வரினென்ற வதி காரத்தான் வினைவந்துழியே யிங்ஙனம் பெரும்பான்மை திரிவதென்றுணர்க. இனித் தன்னின முடித்த லென்பத ஞான் ஏழாவதற்கும் வினையோடு முடிவுழித்திரிதல் கொள்க. [அது] 'வரைபாய் வருடை' புலம் புக்கனனே புல்லனற்காளை [என்றாற் போலவரும்

158 வேற்றுமை யல்வழி இஐ என்னு
மீற்றுப்பெயர் கிளவி மூவகை நிலைய
வவைதா
மியல்பா குனவும் வல்லெழுத்து மிகுனவு
முறழா குனவு மென்மனார் புலவர்.

இது [இஃது]இகரவீற்றுப் பெயர்க்கு மைகாரவீற்றுப் பெயர்க்கு மல்வழி முடிபு கூறுகின்றது.

[இ-ள்] வேற்றுமை யல்வழி - வேற்றுமை யல்லாத விடத்து, இஐ என்னு மீற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய-இஐ என்னு மீற்றையுடைய பெயர்ச் சொற்கண் மூவகையாகிய முடிபு நிலையுடைய, அவைதாம் அம்முடி புகடாம் இயல்பாகுனவும்-இயல்பாய் முடிவனவும், வல்லெ ழுத்துமிகுனவும்-வல்லெழுத்துமிக்கு முடிவனவும், உறழா குனவும்-உறழ்ச்சியாய் முடிவனவும், என்மனார் புலவர் - எனவிவையென்று கூறுவர் புலவரென்றவாறு.
உதாரணம் : பருந்தி குறிது காரை குறிது தீது பெரிது என விவையியல்பு மாசித்திங்கள் சித்திரைத்திங்கள். அலிக் கொற்றன் புலைக்கொற்றன் காவிக்கண் குவளைக்கண் எனவிவைமிகுதி, கிளி குறிது கிளிக்குறிது தினைகுறிது தினைக்குறிது. எனவிவை யுறழ்ச்சி.

பெயர்க்கிளவி மூவகை நிலையவெனவே பெயரல் லாதவிரண்டீற்று வினைச் சொல்லுமிடைச் சொல்லுமுரிச் சொல்லு மியல்பு மிகுதியுமாகிய விருவகை நிலையவாம். ஒல்லைக்கொண்டானென்பதைகார வீற்றுவினைச் சொன் மிகுதி இனி அணி யென்பதன் கணிகரவீற்று வினையெச்ச மெடுத்தோதுப. இவற்றிற் கியல்பு வந்துழிக் காண்க. சென்மதிபாக இஃதிகார. (இஃதிகர) வீற்றிடைச் சொல்லி யல்பு மிகுதி வந்துழிக் காண்க. தில்லைச் சொல்லே. இது ஐகாரவீற்றிடைச் சொன்மிக்கு வந்தது. (மிகுதி) இயல்பு

வந்துழிக் காண்க. கடிகா இது இகர வீற்றுரிச் சொல்லி யல்புமிகுதி வந்துழிக்காண்க. பணைத்தோள் இது ஐகார வீற்றுரிச் சொன்மிகுதி யியல்பு வந்துழிக் காண்க. (16)

159 சுட்டுமுத லாகிய விகர விறுதியும்
மெகரமுதல் வினாவி னிகர விறுதியுஞ்
சுட்டுச்சினை நீடிய வையெ னிறுதியும்
யாவென் வினாவி னையெ னிறுதியும்
வல்லெழுத்து மிகுனவு முறழா குனவுஞ்
சொல்லியன் மருங்கி னுளவென மொழிப

இது [இஃது] ஏழாம் வேற்றுமை இடப்பொருளு ணர்த்தி நின்றஇகர ஐகார வீற்றிடைச்சொன் முடிபுகூறு கின்றது.

[இ-ள்] சொல்லிய மருங்கின் - இகரஐகாரங்கட்கு முன்னர்க்கூறிய மூவகையிலக்கணங்களுளியல நீக்கி, சுட்டுமுதலாகியவிகரவிறுதியும்- சுட்டெழுத்தினைமுதலாக அவ்விகர வீற்றிடைச் சொல்லும்,எகரவினாவின் முதலிக ரவிறுதியும் - எகரமாகிய வினாவினை முதலாகவுடைய வவ்விகர வீற்றிடைச் சொல்லும், சுட்டுச்சினை நீடியவை யெனிறுதியும் -சுட்டாகி வுறுப்பெழுத்து நீண்ட வவ்வை காரவீற்றிடைச்சொல்லும், யாவென் வினாவினையெ னிறுதியும்-யாவென்னும் வினாவினைமுதற்கண்ணுடைய வல்வைகாரவீற்றிடைச்சொல்லும், வல்லெழுத்து மிகுன வும்-வல்லெழுத்து மிக்கு முடிவனவும், உறழா குனவும். உறழ்ச்சியாய் முடிவனவும், உளவெனமொழிப - உள வென்று கூறுவராசிரியரென்றவாறு.

உதாரணம் :- அதோளிக் கொண்டான் இதோளிக் கொண்டான், உதோளிக் கொண்டான்,எதோளிக்கொண் டான், சென்றான், தந்தான்,போயினான், எனவும் ஆண் டைக் கொண்டான், ஈண்டைக் கொண்டான், ஊண்டைக்

கொண்டான் யாண்டைக் கொண்டான் எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விடமென்னும் பொருட்டு அவ்வழி கொண்டான், அவ்வழிக்கொண்டான் இவ்வழிகொண்டாம் இவ்வழிக்கொண்டான் உவ்வழிக்கொண்டான் உவ்வழிக் கொண்டான் எவ்வழி கொண்டான் எனவரும். சுட்டுச்சி னை நீண்டதற்கும் யாவிற்கும்வரும். ஐகாரவீற்றிற்குதா ரண மக்காலத்து ஆயிடைகொண்டான் ஆயிடைக் கொண் டான் என்றார்போல வேனையவற்றிற்கும் வழங்கிற்று போலும். இனி ஆங்கவை கொண்டான் ஆங்கவைக் கொண்டான் என்பன காட்டுவாருமுளர். அவைதிரி புடை யனவாற் சொல்லிய வென்றதனானே பிறவைகார வீறு மிக்கு முடிவனகொள்க. அன்றைக் கூத்தர் பண்டைச் சான்றார் (சான்றோர்) எனவும் ஒருதிங்களைக்குழவி ஒரு னாளைக்குழவி எனவும் வரும். (17)

160 நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலு
மறியத் தோன்றிய நெறியிய லென்ப.

இது புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலை மொழிக்கருவி கூறுகின்றது.

(இ-ள்) நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலும் -நெட்டெழுத்தின் முன்னின்ற வொற்றுத்தன் வடிவுகெடு தலும், குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும் குற்றெ ழுத்தின் முன்னின்ற வொற்றுதன்வடி விரட்டித்தலும் அறியத் தோன்றிய நெறியிய லென்ப-அறியும்படி வந்த வடிப்பாட்டியல் பென்று கூறுவராசிரிய ரென்றவாறு.

இங்ஙனம் நெடியதன் முன்ன ரொற்றுக் கெடுவன ணகாரமும் னகாரமும் மகாரமும் லகாரமும் ளகாரமுமென வைவகையவாம்.

உதாரணம்: கோணிமிர்ந்தது தானல்லன் தாநல்லர் வேனன்று கோணன்று (தோணன்று) என நகரம் வரு மொழியாதற்க ணெடிதன் முன்ன ரொற்றுக்கெட்டது கோறீது வேறீது எனத்தகரம் வருமொழி யாதற்கண் லகர வொற்றுக்கெட்டது ஏனைய வந்துழிக் காண்க. இவற்றை லன யென வரும் (யெனவருஉம்) னளவென் புள்ளிமுன் னென்பன வற்றான் முடித்துக் கெடுமாறுணர்க(கெடுமாறு காண்க) வொற்றிரட்டுவன ஞகார நகார ரகார ழகார மொழிந்தன கண்ணழகிது பொன்னகல் தம்மாடை சொல் லழகிது எள்ளழகிது நெய்யகல் தெவ்வன் (தெவ்வலன்)

எனக்குறியதன் முன்னர் தன்னுருபிரட்டின் மேலைச் சூத்திரத்து நான்கனுருபு பிற்கூறியவதனா னொற்றிரட் டுதலுயிர்முதன் மொழிக்கண்ணதென்றுணர்க. குறியது பிற்கூறிய முறையன்றிக் கூற்றினாற்றம்மை யெம்மை நின்னை என நெடியன குறுகிநின்ற வழியுங் குறியதன் முன்ன ரொற்றா யிரட்டலும் விரனன்று குறணிமிர்ந்தது எனக்குறிலிணையின் முன்னர்வந்த வொற்றுக்கெடுதலும் வாராதீது நன்றுஎனக் குறிநெடிற்கணின்ற வொற்றுக் கெடுதலும்அது கொறோழியெனவும் குரிசிறீயன் எனவுந் தொடர்மொழியீற்றினின்ற வொற்றுக் கெடுதலு மிடைச் சொல்லொட்டுப்பட்டு நிற்றலுங்காற்றீது எனநின்றலுங் கொள்கஇனி அறியவென்றதனால் தேன்றீது நாண்டீது என்றாற் போல்வன கெடாமை நிற்றலுங் கெடுவதுந் தகார நகாரங்கள் வந்துழி யென்பதுஉங் கொள்க. நெறியியலென்றதனாற் சுட்டின் முன்னுயிர் முதன்மொழி வந்துழியிடைவகரவொற்றில் வழியு மிரட்டுதல் கொள்க அவ்வடை அவ்வாடை என இடை வகரவொற்று இல். வழியும் இரட்டுதல் கொள்க.) (18)

161 ஆற னுருபினு நான்க னுருபினுங்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை

யீறாகு புள்ளி யகரமொடு நிலையு
நெடுமுதல் குறுகு மொழிமுன் னான

இது (இஃது) உருபியலை நோக்கியதோர் நிலை மொழிக் கருவி கூறுகின்றது.

(இ-ள்) நெடுமுதல் குறுகு மொழிமுன்னான நெடிய தாகிய முதலெழுத்துக்குறுகி முடியு மறுவகைப்பட்டமொழி களின் முன்னர் வந்த, ஆறனுருபினும் நான்கனுருபினும்- ஆறாம் வேற்றுமைக் கண்ணும் நான்காம் வேற்றுமைக் கண்ணும் கூறிய குற்றொற் றிரட்டலில்லை முன்னர் மொழி நிலைக்கிரட்டு மென்ற குற்றொற்றிட்டி வருதலில் லை, ஈறாகு புள்ளி யகரமொடு நிலையும்—நிலைமொழி யீற்றினின்ற வொற்றுக்களகரம் பெற்று நிற்கு மென்ற வாறு.

உருபியலில் நீயெனொருபெயரெனவுந் (தாமேனா மென்னு) மெனவும் யாமெனிறுதி யெனவுந்தான்யான் என்னு மெனவுங் கூறியவாற்றாற் குறுகி ஒற்றிரட்டி தம்மை நம்மை எம்மை தன்னை நின்னை என்னை என வருவன விதனானேதமது நமது எமதுதனது எனதுநினது எனவும் தமக்கு நமக்கு எமக்கு தனக்கு எனக்கு நினக்கு எனவும் ஒற்றிரட்டாதகரம் பெற்றுவந்தன. நான்காவதற் கொற்றுமிகுதல் வல்லெழுத்து முதலிய வென்பதனாற் கொள்க. ஆறனுருபாகிய அகரமேற்றி முடியாமைக்குக் காரணம் ஆறனுருபினகரம் வேண்டுமென்புழிக் கூறினாம் ஒற்றிரட்டாமையும் அகரப்பேறு மிரண்டற்கு மொத்த விதியென்றுணர்க. கூறிய வென்றதனானே முதல் குறு காத தம் நம் நும் எனவருஞ் சாரியைகட்கு மிவ்விரு விதி யுங்கொள்க. எல்லார் தனக்கும்எல்லார் நமக்கும் எல்லீர் நுமக்கும்எல்லர்தமதும் எல்லார் நமதும் எல்லீர் நுமதும் எனவரும். (19)

உருபியலில் நீயெனொருபெயர் எனவுந் 'தாம்நா மென்னும்' எனவுந் 'தான்யானென்னும்' எனவுங் கூறிய வற்றாற் குறுகி ஒற்றிரட்டித் தம்மை நம்மை எம்மை தன் னை நின்னை என்னை எனவருவன இதனானே தமது நமது எமது தனது நினது எனது எனவும், தமக்கு நமக்கு எமக்கு தனக்கு நினக்கு எனக்கு எனவும் ஒற்றிரட்டாது அகரம் பெற்று வந்தன. நான்காவதற்கு ஒற்றுமிகுதல் (வல்லெழுத்து முதலிய) என்பதனாற் கொள்க. ஆறனுரு பாகிய அகரம் ஏறி முடியாமைக்கு காரணம் ஆறனுருபின கரக்கிளவி என்புழிக்கூறினாம். ஒற்றிரட்டாமையும் அக ரப்பேறும்இரண்டற்கும் ஒத்தவிதியென்று உணர்க.கூறிய வென்றதனான் நெடுமுதல் குறுகாத தம் நம் நும் என வருஞ் சாரியைகட்கும் இவ்விரு விதியுங் கொள்க. எல் லார் தமக்கும் எல்லா நமக்கும் எல்லீர் நுமக்கும் எல்லார் தமதும் எல்லா நமதும் எல்லீர் நுமதும் எனவரும். (20)

162 நும்மெ னிறுதியு மந்நிலை திரியாது

இது நெடுமுதல் குறுகாது மென்கின்றது. (குறுகாத நும் மென்கின்றது) மவ்விதி பெறு மென்கின்றது.

(இ-ள்) நும்மெனிறுதியும்— (கெடு) முதல் குறுகானு மென்னும் மகரவிறுதியும் (மகரவீறும்)அந்நிலை திரியாது —முற்கூறிய குற்றொற்றிட்டாமையும் மீறாகுபுள்ளி யகர மொடு நிலையலு மென்றவாறு

உதாரணம் : நுமது நுமக்கு எனவரும். (20)

163 உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை

இது புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலை மொழிச் செய்கை கூறுகின்றது.

(இ-ள்) உகரமொடு புணரும் புள்ளியிறுதி உகரப் பேற்றோடு புணரும் புள்ளியீறுகள் யகரமுமுயிரும்

வருவழி இயற்கை—யகரமுமுயிரும் வருமொழியாய் வரு மிடத்தவ்வுகரம் பெறாதியல்பாய் முடியு மென்றவாறு.

அவ்வீறுகளாவன புள்ளி மயங்கியலு ளுகரம் பெறு மென்று விதிக்கும் பலவீறுகளு மென்று கொள்க. உரிஞா யானா உரிஞ(உரிஞ்யானா)அனந்தா ஆதா இகலா ஈந்தா உழுந்தா ஊரா எயினா ஏறா ஐயா ஒழுக்கா ஓதா ஔவி யா என வொட்டுக. இனி உரிஞ்யாது உரிஞ அழகிது (அழகு) எனவு மொட்டுக. ஏனைப் புள்ளிகளோடு மேற் பன வறிந்தொட்டுக.

ஞகாரை யொற்றிய வென்பதனானும் 'ஞநமவவியை யினு'மென்பதனானு யகரமுமுயிரும் வந்தாலுகரம் பெறா தியல்பா மென்பது பெறுதலி னீண்டு விலக்க வேண்டா வெனின் எடுத்தோத்தில் வழியே (வழியதே) யுய்த்து ணர்ச்சி யென்று கொள்க. இதுமுதலாக அவ்வழி கூறு கின்றார் (21)

164 **உயிரும் புள்ளியு மிறுதி யாகி**
யளவு நிறையு மென்னுஞ் சுட்டி
யுளவெனப் பட்ட வெல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் தோன்றி
னொத்த தென்ப வேயென் சாரியை

இது (இஃது) அளவு நிறையு மென்னுமாகிய பெயர் கடம்மிற் புணருமாறு கூறுகின்றது.

இதன் பொருள் : உயிரும் புள்ளியு மிறுதியாகி உயி ரும் புள்ளியுந் தமக்கீறாய், அளவும் நிறையுமென்னுஞ் சுட்டி யுளவெனப்பட்ட வெல்லாச் சொல்லும்—அளவையு நிறையையு மெண்ணையுங் கருதி வருவன வுளவென்றா ராசிரியர் கூறப்பட்ட வெல்லாச் சொற்களும், தத்தங்கிளவி தம்மகப்பட்ட - தத்தமக்கினமாகிய சொற்களாய் தம்மிற்

குறைந்த சொற்கள் .முத்தை வரூஉங் காலந் தோன்றின் - முன்னே வருங் காலந் தோன்றுமாயின் ஏயென்சாரியை யொத்ததென்ப- தாமேயென சாரியை பெற்று முடி தலைப் பொருந்திற்றென்பராசிரிய ரென்றவாறு.

முந்தை முத்தையென விகாரம்.

நாழியே யாழாக்கு உழக்கேயாழாக்கு கலனே பதக்கு என அளவு பெயரேகாரம்பெற்றுத் தம் முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. தொடியே கஃசு கழஞ்சே குன்றி கொள்ளே ஐய (கொள்ளேயையவி) என நிறைப் பெயரே காரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. ஒன்றேகால் காலே காணி காணியே முந்திரிகை என எண்ணுப் பெயரேகாரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன.அதிகாரப்பட்ட புள்ளியீறு முற் கூறா ததனானே குறுணி நானாழி ஐந்நாழி யுழக்கு (ஐந்நாழியு ழக்கு)என்றேகார முன்னர் வருமறையென்று வருமென்னு சொலில்) என்றே காரமின்றி வருவனவுங்கொள்க. (22)

165 அரையென வரூஉம் பால்வரைக் கிளவிக்குப் புரைவ தன்றாற் சாரியை யியற்கை

இது (இஃது) எய்தியது விலக்கிற்று.

இதன் பொருள் : அரையென வரூஉம் பால்வரைக் கிளவிக்கு - அம் மூவகைச் சொன்முன்னர் வருமரை யென்று சொல்ல வருகின்ற பொருட் கூற்றை யுணர நின்ற சொல்லிற்கு சாரியை யியற்கை புரைவதன்று — ஏயென் சாரியை பெறுந்தன்மை பொருந்து தன்றென்ற வாறு. (பொருந்துவ தன்றென்றவாறு)

ஆல் அசை.

உதாரணம் : உழக்கரை செவிட்டரை மூவுழக்கரை எனவும் கஃசரை கழஞ்சரை தொடியரை கொள்ளரை எனவும் ஒன்றரை பத்தரை எனவும்ஏயென்சாரியை பெறாமல் (பெறாவாய்) வந்தன புரைவதன் றென்றதனான் கல வரையென்பதனை யொற்றுக்கெடுத்துச் செய்கைசெய்து முடிக்க இதனானே செவிட்டென்புழி (செவிட்டரையென் புழி) டகரவொற்று மிகுதலுங்கொள்க.ஒட்டுதற்கொழுகிய வழக்கன்மையிற் சாரியை பெறாவாயின வென்றாலோ வெனின் அவைபெற்றும் பெறாதும் வருவனவற்றிற்குக் கூறியதாதலானுமிது தம்மகப்பட்டதென வரைந் தோதி னமை யானும் விலக்க வேண்டிற்று. (23)

166 குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை

இது (இஃது) எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுக் கின்றது.ஏஎன் சாரியை விலக்கி வேற்றுமை முடிபினோடு மாட்டெறிதலின்.

(இ.ள்) குறையென்கிளவி முன்வருகாலை — குறை யென்னுஞ் சொல்லளவுப் பெயர்முதலியவற்றின் முன்வரு காலத்திற்கு. வேற்றுமையியற்கை- வேற்றுமைப்புணர்ச்சி முடிபிற் குரித்தாகக் கூறுந்தன்மை. நிறையத்தோன்றும் - நிரம்பத்தோன்று மென்றவாறு.

உதாரணம் : உரிக்குறை (கலக்குறை எனவும், தொ டிக்குன்ற கொட்குறை எனவும். காணிக்குறை காற்குறை என்னவும் வரும் உரிய நெல்லுங் குன்றநெல்லு மென்க) உரிய நெல்லென்னுங் குறைநெல்லு மென்க. கல்க்குறை என்னவும் தொட்டிக்குன்ற கொட்குறை எனவும்காணிக்குறை கால்குறை என்னவும் வரும்.

வேற்றுமை யியற்கை யெனவே யிவை வேற்றுமை யன்றாயிற்று. (இவை வேற்றுமை யன்றாயின). எனவே

யுரிக்குறை யென்பதற்குரியு முழக்குமெனப் பொருளா யிற்று- ஏனையவு மன்ன.

முன்வரு காலை யென்றதனானே கலப்பயறு கலப் பாகு என்றாற் போலப் பொருட் பெயரோடு புணரும் வழி யுமிவ் வேற்றுமை முடி பெய்துவிக்க. பாகென்றது பாக்கி னை. நிறையவென்றதனானே உரிக்கூறு தொடிக்கூறு காணிக்கூறு எனக் கூறென்றதற்கு மிம்முடி பெய்துவிக்க. (24)

167 குற்றிய லுகரக் கின்னே சாரியை

இது வேற்றுமை முடிபு விலக்கி யின்வகுத்தலி னெய் தியது விலக்கிப்பிறிது விதி கூறிற்று.

இதன் பொருள் : குற்றிய லுகரக்குச் சாரியை—குற் றியலுகர வீற்றளவு பெயர் முதலியவற்றிற்குக் குறை யென்பதனோடு—புணரும் வழி வருஞ்சாரியை, இன்னே- இன்சாரியையே யாமென்றவாறு.

குற்றிய லுகரக்கு இதற்கத்து விரித்து (விதித்து) முடிக்க குற்றிய லுகரத்தின்னே யென்பதூஉம் பாடம் (யென்பதும் பாடம்.)

உழக்கின் குறை ஆழாக்கின்குறை எனவும் கழஞ்சின் குறை(கஃசின்குறை எனவும்,ஒன்றின்குறை பத்தின்குறை எனவும் வரும். இதற்கு உழக்குங் குறையுமென்பது பொருள். இது வேற்றுமைக் கண்ணாயின் உழக்கிற்குறை யென நிற்கும்.) யென நிற்கும். (25)

168 அத்திடை உரூஉங் கலமெ னளவே

இதுவுமெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, வேற்றுமை விதிவிலக்கி யத்து வகுத்தலின்.

இதன் பொருள் : கலமெனளவே - கலமென்னு மள வுப்பெயர் குறையொடு புணருமிடத்து, அத்திடை வரூஉம் அத்துச் சாரியை யிடைவந்து புணரு மென்றவாறு.

கலத்துக்குறை இதனை யத்தே வற்றே யென்பத னான் முடிக்க. இதற்குங் கலமுங் குறையு மென்பதும் பொருள். சாரியை முற்கூறியவதனான் முன்னின் சாரியை பெற்றவழி வல்லெழுத்து வீழ்க்க, [26]

169 பனையெ னளவுங் காவெ னிறையு
நிலையுங் காலை யின்னொடு சிவணும்

இதுவுமது வேற்றுமைவிதி விலக்கியின் வகுத்தலின்

(இ-ள்) பனையெனளவுங் காவெனிறையும் - பனை யென்னுமளவுப் பெயருங் காவென்னு நிறைப்பெயரும் குறையென்பதனோடு புணருமிடத்து, நினையுங்காலை - ஆராயுங்காலத்து, இன்னொடுசிவணும் - இன்சாரியை பெற்றுப்புணருமென்றவாறு.

பனையின்குறை காவின்குறை (எனவரும்) இவையு மும் மைத்தொகை நினையுங்காலையென்றதனா (யென்ப தனான்) வேற்றுமைக்குரிய விதியெய்தி வல்லெழுத்துப் பெறுதலுஞ் சிறுபான்மை கொள்க. பனைக்குறை காக் குறை எனவரும்.

இத்துணையு மல்வழி முடிபு இவற்றை வேற்றுமை யல்வழி இஐ யென்னுஞ் சூத்திரத்திற்கூறாதிவை(கூறாது இவை) அளவு நிறையு மெண்ணு மாதலின் (வேறோதி னார் (வேறோதினார்) (27)

170 அளவிற்கு நிறையிற்கு மொழிமுதலாகி
யுளவெனப் பட்ட வொன்பதிற் றெழுத்தே
யவைதாங்

க ச த ப வென்றா நமவ வென்றா
அகர உகரமோ டவையென மொழிப
(வகர வுகரமோ)

இது முற்கூறிய மூன்றனுளளவிற்கு நிறைக்கு மொழிக்கு முதலாமெழுத்தினைத் தென்கின்றது.

இதன் பொருள் : அளவிற்கு நிறையிற்கு மொழி முதலாகி யுளவெனப்பட்ட வொன்பதிற் றெழுத்தே - அளவுப் பெயர்க்கு நிறைப்பெயர்க்கு மொழிக்குமுதலாயுளவென்று கூறப்பட்டன. ஒன்பதெழுத்துக்கள், அவை தாங் க ச த ப வென்றா ந ம வ வென்றா அகர உகரமோடவை யென மொழிப - அவ்வெழுத்துக்கடாங் க ச த ப க்களும் அகர உகரமாகிய வவையென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம்:கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை வட்டி அகல் உழக்கு இவை அளவு. கழஞ்சு சீரகம் தொடி பலம், நிறை மா வரை அந்தம் இவை நிறை இந்நிறைக்கு உகர முதலிய பெயர் வந்துழிக் காண்க. இனி யுளவெனப் பட்ட வென்றதனானே யுளவெனப்படாதனவு முள. அவை இம்மி ஓரெடை (ஓரடை) இடாவென வரையறை கூறாதனவுங் கொள்க. இன்னு மிதனானே தேய வழக்காய் ஒருஞார் ஒருது வலி யென்பனவுங் கொள்க. இங்ஙனம் வரையறை கூறினாரகத் தோத்தினுண் முடிபு கூறிய வழியதிகாரத்தான் வன்கணத்தின் மேற் செல்லா தொழிந்த (ஒழிந்த) கணத்தினுஞ் செல்லுமென்றற்கு எண்ணுப் பெயர் வரையறை யின்மையிற் கூறாராயினார்

(28)

171 ஈறியன் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லா
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
யொத்தவை யுரிய புணர்மொழி நிலையே.

இது [இஃது] இவ்வோத்திற்குப் புறநடை யெடுத் தோத்தானு மிலைசானு (இலேசானு) முடியாதனவற்றிற் இதுவேயோத்தாகலின்.

(இ-ள்) ஈறிய ன் மருங்கின் உயிரும் புள்ளியுமிறுதி யாகியசொற்கள் வருமொழியோடு கூடி நடக்குமிடத்து. இவற்றியல் பிவையென கூறிய கிளவிப்பல்லாறெல்லாம்- இம்மொழிகளின் முடிவிவையெனக்கூறி முடிக்கப்பட்ட சொற்களின் தவற்றான்(தவ்வற்றான்) முடியாதுநின்ற பல வகை முடிபுகளெல்லாம், மெய்த்தலைப்பட்ட வழக் கொடு சிவணி-உண்மையைத் தலைப்பட்ட வழக்கொண்டு (வழக்கோடு)கூடி, புணர்மொழிநிலை யொத்தவையுரிய- - புணருமொழிகளி னிலைமைகட் குப் பொருந்தினவை யுரியலா மென்றவாறு

உதாரணம் : நடஞெள்ளா என உயிரீறாகிய முன்னி லைக்கிளவி மென்கணத்தியல்பாய் முடிந்தது, மண்ணு கொற்றா மண்ணுக்கொற்றா, பண்ணுகொற்றா, பண் - ணுக்கொற்றா, உள்ளுகொற்றா. உள்ளுக்கொற்றா, கொல்லுகொற்றா, கொல்லுக்கொற்றா என்பன புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவிபுகரம் பெற்று முறழ்ந்து முடிந் தன. உரிஞு ஞெள்ளா இது (இஃது) ஒளவென வருஉ மென்பதனானொழிபு பதக்க நானாழி பதக்கமுன்னாழி எனவிவையெனச் சாரியை பெறாதக்குப் பெற்றத னிறுதி மெய்மிசை யொடுங்கெட்டுப் புணர்ந்தன. வாட்டானை தோற்றண்டை என்ப தகாரம் வந்துழித் திரிந்து நெடிய தன் முன்னரொற்றுக்கெடாது நின்றன. சீரகரை என்பத னை சீரகம் அரையென நிறுத்திக் ககர வொற்றின் மே லேறின. அகரத்தையு மகரவொற்றையுங் கெடுத்தரை யென் பதனி லகரத்தை யேற்றி முடிக்க இது நிறைப் பெயர். ஒரு மா அரையென நிறுத்தி வருமொழி யகரங் கெடுத்தொரு மாரையென முடிக்க. கலவரையு முடிக்க. (கலவரை யென்பதனைக் கலரையென முடிக்க)

அகர மகரங் கெடுத்து நாகணையெனப் பிறவுமிங்ஙனம் வருவன வெல்லாமிச் சூத்திரத்தின் முடிக்க. (29)

172 பலரறி சொன்முன் யாவ ரென்னும்
பெயரிடை வகரங் கெடுதலு மேனை
யொன்றறி சொன்முன் யாதென் வினாவிடை
யொன்றிய வகரம் வருதலை மிரண்டு
மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே.

இது மரூஉச் சொன் முடிபு கூறுகின்றது.

இதன் பொருள் : பலரறி சொன்முன் யாவரென்னும் பெயரிடை வகரங் கெடுதலும்- பலரையறியு மவரென்னும் சொல்லின் முன்னர் வருகின்ற யாவரென்னும் பெயரிடையில் வகரங் கெடுதலும், ஏனையொன்றறி சொன்முன் யாதென் வினாவிடை யொன்றிய வகரம் வருதலும் - ஒழிந்த வொன்றனை யறியுமது வென்னுஞ் சொன் முன்னர்வருகின்ற யாதென்னும் வினாச் சொல்லிடையிலே யுயிரோடு பொருந்திய வகரம் வருதலும், இரண்டும் - ஆகிய விவையிரண்டும் (அவை யிரண்டும்), மருவின் பாத்தியின் மன் பயின்று திரியும் - மருமுடிவின் பகுதியிடத்து மிகவும் பயின்று திரியு மென்றவாறு.

உதாரணம் : அவர் யார் எனவும் அது யாவது என வும் வரும் (அவர் யா வென்பது அவர் யாவரென்பது)வக ரங் கெட்டவர் யாரென நின்றவழி யாரென்னும்) (யாஅ ரென்னும்) வினாவின் கிளவி யென்று வினையியலுட் கூறும்வினைக்குறிப்புச்சொல்லாம் பிறவெனினாகாது (பிற வெனின் ஆகாது அவ்வகரங் கெட்டாலு மீண்டியாவ ரென்னும் (ஈண்டு யாவ) ரென்னும் பெயர்த் தன்மையா யே நிற்றலின் அது பெற்ற வாறென்னை யெனின் ஈண்

டுப் பலரறி சொன் முன் வந்த யாவரென்பதன் வகரங் கெடுமெனவே, ஏனை அவன் அவள் என்னு மிருபான் முன்னும் யாவரென்பது வாரா தென்றுமது திரிந்து மரு வாய் நிற்குமென்றுங் கூறுதலானும் யாவரென்னும் பெயரிடை யென்பதனானும் பெற்றாம். இதனானே அவன் யாவர் அவள் யாவர் என்றாற் பால் வழுவாமென் பது பெற்றாம். இதனை யாவன் யாவள் யாவரென்னு - மாவயின் மூன்றோ டெனப் பெயராக வோதிய வாற்றா னுணர்க அன்றியும் யாஅரென்னும் வினாவின் கிளவி முப்பாற்கு முரித் தென்று யாரென்னும் வினைக்குறிப்பி னை [வினாவினைக்குறிப்பினை] அவன் யார் அவள் யார் அவரியாரென முப்பாற்கு மொப்ப வுரிமை கூறுதலானு மது வேறென்பது பெற்றாம். அது வினையியலு ளோதின மையானும் வினாவிற்கேற்ற லெனப் பயனிலையாக வோ தினமையானும் வேறாயிற்று.

இனி'யார் யார்க் கண்டே யுவப்ப' ரென பலரறி சொன் முன்ன ரன்றி யியல்பாக வந்த யாரென்பது யாண் டடங்கு மெனினதுவும் யாரை யாரைக் கண்டெனவுருபு விரிதலின் யாவரை யென்னும் வகரங் கெட்ட பெயரே யாம். அங்ஙனம் வருமொழி நிலைமொழியாய் (நிலை மொழி வருமொழியாய்) நிற்றல் பயின்றென்றதனாற் கொள்க. இதனானே யாவது நன்றென வுணரார் மாட்டு மெனவேனை யொன்றறி சொல்லு நிலைமொழியாய் நிற்றல் கொள்க. இன்னு மிதனானே யாரவர் யாவதது, எனவவிரு (என இவ்விரு) சொல்லும் வருமொழியாய் (நிலைமொழியாய்) வருதல் கொள்க.

ஐந்தாவது
தொகை மரபு முற்றும்



6. உருபியல்

173 அ ஆ உ ஊ ஏஒள வென்னு
மப்பா லாற னிலை மொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை

[என்பது சூத்திரம்]

உருபுகளோடு பெயர்புணரு மியல்புணர்த்தினமையி னிவ்வோத்துருபிய லென்னும் பெயர்த்தாயிற்று. மேற் றொகுத்துப் புணர்த்ததனை யீண்டு விரித்துப் புணர்க் கின்றா ராகலி னிவ்வோத்துத் தொகைமரபோடியை புடைத்தாயிற்று. [இச்சூத்திரம்] அகரமுதலிய வீற்றான் வருமாறீற்றுச் சொற்கணின்றன் பெற்றுருபினோடு(சொற் கள் நின்று இன் பெற்று) புணருமாறு கூறுகின்றது. உரு பின் பொருள்பட வரும் புணர்ச்சி மேற் கூறுப.

(இ-ள்) அஆ உஊ ஏஒள வென்னு மப்பாலாறனிலை மொழி முன்னர் - அ ஆ உ ஊ ஏஒள வென்னு சொல்லப் படுகின்ற வக்கூற்றாறினையுமீறாக வுடைய நிலைமொழி யின் முன்னர் வருகின்ற,வேற்றுமையுருபிற் கின்னே சாரி யை - வேற்றுமை யுருபுகட் கிடையே வருஞ்சாரியை யின் சாரியை யென்றவாறு (இன் சாரியையே என்றவாறு)

உதாரணம் : விளவினை விளவினொடு விளவிற்கு விளவினது விளவின்கண் எனவும். பலாவினை, பலாவி னொடு பலாவிற்கு பலாவின் பலாவினது பலாவின்கண் எனவும் கடுவின (கடுவினை) கடுவினொடு கடுவிற்கு கடு வின் கடுவினது கடுவின்கண் எனவும் தழுவினை (தழுஉ

வினை) தழுவினொடு (தழு உவினொடு) தழுவிற்கு (தழு உவிற்கு) தழுவினது (தழு உவினது) தழுவின்கண் (தழு உவின்கண்) எனவும். சேவினை சேவினொடு சேவிற்கு சேவின் சேவினது சேவின்கண் எனவும் வெளவினை வெளவினொடுவெளவிற்கு வெளவின் வெளவினது வெள வின்கண் எனவும் (வரும்) செய்கை யறிந்திவ்வாறே யொட்டுக. (இவ்வாறே செய்கை யறிந்து ஒட்டுக.

'இன்னென வரும் (வருஉம்) வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை (யின்மை வேண்டும்')

எனவே ஏனைய வின்பெறு மென்றலின் ஞனமயவ (ஞநமயவ) வென்பதனா னியல்பென்றது விலக்கிற்றாம். (1)

174 பல்லவை நுதலிய வகர விறுபெயர்
வற்றொடு சிவண லெச்ச மின்றே

இது [இஃது] இன் சாரியை விலக்கி வற்று வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி [வகுக்கின்றது]

[இ-ள்]பல்லவை நுதலிய பெயரிறுதியகரம் பன்மைப் பொருளைக் கருதின பெயர்களினிறுதி நின்ற அகரம். வற்றொடு சிவண லெச்ச மின்று - வற்றுச் சாரியையோடு பொருந்துதலை யொழிதலில்லை யென்றவாறு.

உதாரணம் : பல்லவற்றை பல்லவற்றொடு பலவற் றை பலவற்றொடு சில்லவற்றை சில்லவற்றொடு சிலவற் றை சிலவற்றொடு உள்ளவற்றை உள்ளவற்றொடு இல் லவற்றை இல்லவற்றொடு எனவொட்டுக.

எச்சமின்றென்றதனானே மேலின் பெற்றன பிறசாரி யையும் பெறுதல் கொள்க. நிலாத்தை [துலாத்தை] மகத்தை எனவரும். இன்னு மிதனானே பல்லவை நுதலி யவற்றின்கண் மூன்றா முருபு வற்றுப் பெற்றே முடிதல் கொள்க. [2]

175 யாவென் வினாவு மாயிய றிரியாது

இது (இஃது) ஆகார வீற்று ளொன்றற் கெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) யாவென் வினாவும்-யாவென்று சொல்லப்படு மாகார வீற்று வினாப் பெயரும், ஆயிய றிரியாது-முற்கூறிய வற்றுப்பேறு மவ்வியல் பிற்றிரியாதென்றவாறு. (3)

யாவற்றை யாவற்றொடு எனவரும்.

176 சுட்டுமுத லுகர மன்னொடு சிவணி
யொட்டிய மெயயொழித் துகரங் கெடுமே

இது (இஃது) உகரவீற்றிற் கெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) சுட்டு முத லுகர மன்னொடு சிவணி-சுட்டெழுத்தினை முதலாகவுடைய வுகரவீற்றுச் சொல்லன் சாரியையோடு பொருந்தி ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடும் - தான்பொருந்திய மெய்யைநிறுத்தியுகரங் கெடுமென்றவாறு.

அதனை அதனொடு இதனை இதனொடு உதனை உதனொடு எனவரும். அதினை அதினொடு என்றாற் போல்வன மருமுடிப்புழி முடிந்தன. ஒட்டிய வென்றதனாற் சுட்டுமுத லுகரமன்றிப் பிறவுகரமு முயிர்வருவழிக் கெடுவன கொள்க. அவை கதவு அளவு (களவு) கனவுஎன நிறுத்தி அழகிது இல்லை என வருவித்துகரங் கெடுத்து முடிக்க இவற்றை வகர வீறாக்கி உகரம் பெற்றனவென்று கோடுமெனின் வழக்கின் கண்ணுஞ் செய்யுட் கண்ணும் பயின்றுவரும் வகரவீறுகளை யொழித்தாசிரியர் வகரக் கிளவி நான்மொழி யீற்றதென்றாற்போல வரைந்தோதல் குன்றக்கூறலாமாதலினவை யுகர வீற்றென்றுணர்க. (வீறென்றுணர்க). அவை செலவு வரவு தரவு உணவு கனவு எனவழக்கின் கண்ணும் புன்கணுடைத்தாற் புணர்வு

(பாடறியா தானை யிரவு) கண்ணாரக் காணக் கதவு, (கண்ணாரக்காணக்கதவு) எனச் செய்யுட் கண்ணும் பயின்று வருமாறுணர்க. (4)

177 சுட்டுமுத லாகிய வையெ னிறுதி
வற்றொடு சிவணி நிற்றலு முரித்தே

இது (இஃது) ஐகார வீற்றிற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டு முதலாகியவை யெனிறுதி - சுட்டெழுத் தினைமுதலாகவுடைய வைகார வீற்றுச்சொல், வற்றொடு சிவணி நிற்றலு முரித்து -வற்றுச் சாரியையோடுபொருந்தி நிற்றலு முரித்து (என்றவாறு) உம்மையான் வற்றொடு சிலவுருபின்கணின் சாரியை பெற்று நிற்றலு முரித் தென்றவாறு.

அவையற்றை அவையற்றொடுஇவையற்றை இவை யற்றொடு உவையற்றை உவையற்றொடு என வொட் டுக. இங்ஙன மைகார நிற்க வற்று வந்துழி வஃகான் மெய்கெட வென்பதனான் முடிக்க.

இனி உம்மையான் அவை யற்றிற்கு அவையற்றின் கண் என நான்காவதும் ஏழாவதும் வற்று மின்னும் பெற் றுவந்தவாறு காண்க. இனி ஒன்றென முடித்த லென்பத னாற் பல்லவை நுதலிய வகரவீற்றிற்கு மிவ்விரண்டுரு பின்கண் வற்றுமின்னுங் கொடுத்து பல்லவற்றிற்கு (பலவற்றிற்கு பலவற்றின்கண்) எனமுடிக்க இதுமேல் வருகின்ற வற்றிற்கு மொக்கும் இதுமேல் வருவன வற்றிற்கும் ஒக்கும். (5)

178 யாவென் வினாவினையெ னிறுதியு
மாயிய றிரியா தென்மனார் புலவ
ராவயின் வகர மையொடுங் கெடுமே
இதுவுமது

[இ-ள்] யாவென் வினாவி னையெனிறுதி - யாவென் னும் வினாவினை யுடைய வைகார வீற்றுச் சொல்லும், ஆயியறிரியாது - முற்கூறிய சுட்டு முதலைகாரம் போல வற்றுப் பெறுமவ்வியல் பிற்றிரியாதென்று சொல்லுவா ராசிரியர் ஆவயின் வகர மையொடுங் கெடுமே - அவ்வி டத்து [அவ்வீற்றிடத்து வகர மைகாரத்தோடு கூடக்கெடு மென்றவாறு.]

யாவற்றை யாவற்றொடு எனவொட்டுக. வகரம் வற்றின் மிசை(வற்றுமிசை)யொற்றென்று கெடுவதனைக் கேடோதிய மிகையானே பிறவைகாரமும் வற்றுப்பெறுதல் கொள்க. கரியவற்றை (கரியவற்றொடு) நெடியவற்றை (நெடியவற்றொடு) (குறியவற்றை குறியவற்றொடு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இது கருமை நெடுமை குறு மை என்னும் பண்புப்பெய ரன்றிக் கரியவைநெடியவை குறியவை) யெனப்பண்புகொள் பெயராய் நிற்றலின் வக ரவைகாரங் கெடுத்து வற்றுச்சாரியைகெடுத்து(கொடுத்து) முடிக்கப்பட்டன. இவையெம்பாலறியும் பண்பு தொகு மொழியன்மை யுணர்க. (6)

179 நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகு
மாவயி னகர மொற்றா கும்மே

இது (இஃது) ஈகார வீறின்னவாறு புணருமென் கின்றது.

[இ-ள்] நீயெ னொருபெயர் நெடுமுதல் குறுகும் - நீ யென்னு மொருபெயர் தன்மேல் நின்ற நெடியதாகிய ஈகா ரங் குறுகி இகரமாம், ஆவயி னகரமொற்றாகும் - அவ்வி டத்து வரு னகர மொற்றாய் நிற்கு மென்றவாறு.

உதாரணம் : நின்னை நின்னொடு நினக்கு எனச் செய்கையறிந்து ஒட்டுக. நினக்கென்பதற்கு 'ஆறனுரு பினு நான்கனுருபினும்' வல்லெழுத்து முதலிய என்பன கொணர்ந்து முடிக்க. நினவென்பதற்கு[நினதென்பதற்கு] ஆறனுருபி னகரக்கிளவியென்பதனான் முடிக்கநின்னென்

பது வேறொரு பெயரோவெனக் கருதுதலை விலக்குதற் கொரு பெயரென்றார் பெயர் குறுகுமென்னாது முதல் குறுகுமென்றதப் பெயரினெ முத்தின் கண்ணது குறுக்க மென்றற்கு நெடுமுதலெனவே. நகரங் குறுகுதலை விலக் கிற்பூஉயிர்மெய் யொற்றுமை பற்றி நெடியது முதலா யிற்று.'உடைமையு மின்மையுமொடு வயினொக்கும்'என்- றதனைநோக்கி ஒடுவிடத்துச் சாரியை பெற்றேவந்த வதிகாரத் தைமாற்றுதற்குச் சாரியைப் பேற்றினிடை [பேற்றிடை] யெழுத்துப் பேறு கூறினார்.

[7]

180 ஓகார விறுதிக் கொன்னே சாரியை

இது [இஃது] ஓகார வீற்றின்னவாறு [ஈறு இன்ன வாறு] புணருமென்கின்றது.

[இ-ள்] ஓகாரவிறுதிக் கொன்னே சாரியை ஓகாரவீற் யொன்றிநிற் கிடைவருஞ் சாரியைசாரியை யென்றவாறு

கோஒனை கோஒனொடு என ஒட்டுக. ஒன்னே என்ற ஏகாரத்தாற் பெரும்பான்மையாக வருஞ்சாரியை யொன் னே சிறுபான்மை யின்சாரியை வருமென்று கொள்க. 'ஒன் றாக நின்றகோவினை யடர்க்கவந்த'எனவும், கோவினை கோவினொடு சோவினை சோவினொடு ஓவினை ஓவி னொடு எனவும் வரும்.

ஓ வென்பது மதகினீர் தாங்கும் பலகை
[மதகு நீர்] (8)

181 அ ஆ வென்னு மரப்பெயர்க் கிளவிக்
கத்தொடுஞ் சிவணு மேழ னுருபே

இது [இஃது] அகர ஆகார வீற்றிற் கெய்தியதன் மேற்சிறப்புவிதி கூறுகின்றது.

[இ-ள்] அ ஆ வென்னு மரப்பெயர்க்கிளவிக்கு- அ ஆ வென்று சொல்லப்படு மரத்தை யுணரநின்ற பெயராகிய

சொல்லிற்கு ஏழனுரு பத்தொடுஞ் சிவணும் - ஏழாமுரு பின்னோ டன்றி யத்தோடும் பொருந்து மென்றவாறு.

உதாரணம் : விளவத்துக்கண் பலாவத்துக்கண் என வரும்'வல்லெழுத்து முதலிய' வென்பதனான் வல்லெழுத் துக் கொடுத்து தெற்றென்றற்றே என்பதனா னத்தினகர மகர முன்னர் 'அத்தினகர மகரமுனை' கெடாமைச் செய் கை செய்து முடிக்க. (9)

182 ஞநவென் புள்ளிக் கின்னே சாரியை

இது புள்ளி யீற்றுள் ஞகாரவீறு நகாரவீறு முடியு மாறு கூறுகின்றது.

(இ-ள்) ஞந வென் புள்ளிக் கின்னே சாரியை - ஞ ந வென்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்கு வருஞ்சாரி யையின் சாரியை யென்றவாறு.

உதாரணம் :உரிஞினை உரிஞ்னொடு பொருநினை பொருநினொடு எனவொட்டுக. (10)

183 சுட்டுமுதல் வகர மையு மெய்யுங்
கெட்ட விறுதி யியற்றிரி பின்றே

இது நான்கு மொழிக்கீறாம் வகர வீற்றிற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டுமுதல் வகரம்- அவ் இவ் உவ் என்னுஞ் சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகரவீற்றுச்சொல், ஐயு மெய்யுங்கெட்ட விறுதியியற்றிரிபின்று - ஐகாரமுமை காரத்தானூரப்பட்ட மெய்யுங்கெட்டு வற்றுப்பெற்று முடிந்த யாவையென்னு மைகார வீற்றுச் சொல்லியல்பிற் றிரிபின்றிவற்றுப்பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் :அவற்றைஅவற்றோடு இவற்றைஇவற் றோடு உவற்றை உவற்றொடு எனவொட்டுக. (11)

184 ஏனைய [ஏனை] வகர மின்னொடு சிவணும்

இது (இஃது) எய்தாத தெய்துவித்தது பெயர்க்கே யன்றி யுரிச்சொல் வகரத்திற்கு முடிபு கூறுதலின்

(இ-ள்) ஏனைய (ஏனை) வகர மின்னொடு சிவ ணும் - ஒழிந்த வுரிச்சொல் வகரமின் சாரியையோடு பொருந்தி முடியுமென்றவாறு.

தெவ்வினை தெவ்வினொடு எனவொட்டுக. இது (இஃது) உரிச்சொல்லாயினும் படுத்தலோசையாற் பெய ராயிற்று. (12)

185 மஃகான் புள்ளிமு னத்தே சாரியை

இது மகரவீறு புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) மஃகான் புள்ளிமு னத்தே சாரியை - மகரமா கிய புள்ளியீற்றுச் சொன்முன் வருஞ்சாரியை யத்துச் சாரி யை யென்றவாறு.

உதாரணம் : மரத்தை மரத்தொடு நுகத்தை நுகத் தொடு எனவொட்டுக. 'அத்தே வற்றே' 'அத்தினகரம்' (மகர) மெனவற்றான் முடிக்க ('அத்தினகரம்' என்பன வற்றான் முடிக்க) (13)

186 இன்னிடை வரூஉ மொழியுமா ருளவே

இது மகரவீற்றிற் கெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே - மகரவீற்றுச் சொற்களு ளத்தே யன்றி யின்சாரியையிடை யே வந்து முடியுஞ் சொற்களு முளவென்றவாறு. மார சை (மார் அசை)

உதாரணம் : உருமினை உருமினொடு திருமினை திருமினொடு எனவொட்டுக. (14)

187 நும்மெ னிறுதி யியற்கை யாகும்

இது மகரவீற்று ளொன்றற்கெய்தியது விலக்கிப் பிறி துவிதிவகுத்தது.

(இ-ள்) நும்மே யிறுதி யியற்கை யாகும்-நும்மென்னு மகரவீறு மேற்கூறிய வத்து மின்னும் பெறாதியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : நும்மை, நும்மொடு நுமக்கு நும்மின் நுமது நுங்கண் எனவரும்.

நுமக்கு நுமது என்பனவற்றிற்கு ஆறனுருபினு நான் கனுருபினும் நும்மெனிறுதியு மந்நிலை வல்லெழுத்து முத லிய ஆறனுருபி னகரக்கிளவியென்பன கொணர்ந்து முடிக்க. நுங்கணென்பதற்கு மேலைச்சூத்திரத்து மெய் யென்றதனான் மகரவொற்றுக்கெடுத்து வல்லெழுத்து முதலியவென்பதனான் மெல்லொற்றுக் கொடுக்க இயற் கையென்றார் சாரியை பெறாமை கருதி (15)

188 தாகா மென்னு மகர விறுதியும்
யாமெ னிறுதியு மதனோ ரன்ன
ஆயே ஆகும்யாமெ னிறுதி
யாவயின் யகரமெய் கெடுதல் வேண்டு
மேனை யிரண்டு நெடுமுதல் குறுகும்

(இது மகர வீற்றின் முற்கூறிய முடிபொவ்வாதன வற்றிற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) தாம் நாமென்னு மகரவிறுதியும் யாமெனிறு தியுமதனோ ரன்ன—தாம் தாமென்று கூறப்படு மகரவீறு யாமென்னு மகரவீறு நும்மென்னு மகரவீறுபோல வத்து மின்னும் பெறாது முடிதலையுடைய, யாமெனிறுதி ஆ ஏ ஆகும்—யாமென்னு மகரவீற்றுச் சொல்லி லாகார மேகார மாம் (ஆகாரம் ஏகாரமாம்) ஆவயின்யகரமெய் கெடுதல் வேண்டும்- அவ்விடத்து நின்ற யகரமாகிய மெய் கெடுத லை விரும்பு மாசிரியன், ஏனையிரண்டும் நெடுமுதல் குறு கும்-ஒழிந்ததா நாமென்னுமிரண்டு நெடியவாகிய முதல் குறுகித்தம் நம்மென நிற்கு மென்றவாறு.

உதாரணம் :தம்மை தம்மொடு நம்மை நம்மொடு எம் மை எம்மொடு என ஆறுருபினோடு மொட்டுக. ஆறனுரு பிற்கும் நான்க னுருபிற்குங் கருவி யறிந்து முடிக்க.

மெய்யென்றதனாற் பிறவயின் மெய்யுங் கெடுக்க தங் கண் நங்கண் எங்கண் எனஏழனுரு பின்கண் மகரங் கெடுத்து வல்லெழுத்து முதலிய வென்பதனான் மெல்லெ ழுத்துக் கொடுக்க. [16]

189 எல்லா மென்னு மிறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்று
மும்மை நிலையு மிறுதி யான

இது மகரவீற்று ளொன்றற் கெய்தியதுவிலக்கிப் பிறி துவிதி வகுத்தது (வகுக்கின்றது).

(இ-ள்) எல்லா மென்னு மிறுதி முன்னர் வற்றென் சாரியை முற்றத்தோன்றும்—எல்லாமென்னு மகரவீற்றுச் சொன் முன்னரத்து மின்னுமன்றி, வற்றென்னுஞ் சாரி யை முடியத்தோன்றி. முடியும், உம்மை நிலையுமிறுதி யான-ஆண்டு உம்மென்னுஞ் சாரியை இது நிறுதிக்கண் (இறுதிக்கண்) ணிலைபெறு மென்றவாறு.

மகரம் வற்றின்மிசை யொற்றெனக் கெடுக்க, எல்லா வற்றையும் எல்லாவற்றினும் எல்லாவற்றுக் கண்ணும் எனவரும். (முற்றவென்றதனான் ஏனை முற்றுகரத்திற் கும் உம்மின் உகரங்கெடுத்துக் கொள்க. எல்லாவற்றொ டும் எல்லாவற்றுக்கும் எல்லாவற்றதும் எனவரும்) முற்று கர மாதலின்னேறிமுடியாது (ஏறி முடியா). (17)

190 உயர்திணை யாயி னம்மிடை வருமே

இது [இஃது] எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத் தது [வகுக்கின்றது]

[இ-ள்] உயர்திணையாயின் - எல்லாமென நின்ற மகர வீற்று விரவுப்பெயருயர்திணைப் பெயராமே யெ னின் (பெயராமெனின்], நம்மிடை வரும் - நம் மென் னுஞ்சாரியையிடை நின்று புணருமென்றவாறு.

மகரவீற்றினை மேல்வற்றின்மிசை யொற்றெனக் கெடுத்த வதிகாரத்தாற் கெடுக்க எல்லா நம்மையும்எல்லா நம்மினும் எல்லாநங்கணு என உம் (உகரம்) பெற்று எல் லா நம்மொடு எல்லா நமக்கும்எல்லா நமதும் என உகரங் கெட்டு மகர நிற்கும். இவற்றிற் கெல்லாரையும் எல்லா ரொடு மென்பது பொருளாக வொட்டுக. இதற்கு நம்மு வகுத்ததே வேறுபாடு ஈறாகுபுள்ளி அகரமொடு நிற்ற னான் காவதற்கு மாறாவதற்குங் கொள்க. (18)

191 எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியு
மெல்லீரு மென்னு முன்னிலை யிறுதியு
மொற்று முகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
யும்மை நிலையு மிறுதி யான
தம்மிடை வருஉம் படர்க்கை மேன
நும்மிடை வருஉ முன்னிலை மொழிக்கே

இது மகரவீற்றுயர் திணைப் பெயர்க்கு முடிபு கூறு கின்றது.

(இ-ள்) எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும் எல் லாரு மென்னு மகரவீற்றுயர்திணைப் படர்க்கைப் பெய ரும், எல்லீரு மென்னு முன்னிலை யிறுதியும் - எல்லீரு மென்னு மகரவீற்றுயர்திணை முன்னிலைப்பெயரும் ஒற்று முகரமுங் கெடுமென மொழிப - மகரவொற்று மதன் முன்னின்றவுகரமுங் கெட்டு முடியுமென்று சொல்லுவர் புலவர் ரகரப் புள்ளி நிற்றல் வேண்டும் - அவ்வுகர மேறி நின்றரகரவொற்றுக்[ரகரவொற்றுக்] கெடாது நிற்றலை விரும்புமாசிரியன், இறுதியான உம்மை நிலையும் - அவ்விருமொழியிறுதிக் கண்ணும் மென்னுஞ் [கண்ணும் உம்மென்னுஞ்] சாரியை நிலைபெறும் படர்க்கை மேன தம்மிடைவரும் - [வருஉம்] படர்க்கைச் சொல்லிடத்துத் தம்முச்சாரியை யிடைவரு முன்னிலை மொழிக்கு நும் இடைவருஉம் - முன்னிலைச் சொற்கு நும்முச்சாரியை இடைவரும்மென்றவாறு.

உதாரணம் : எல்லார் தம்மையும் எல்லார் தம்மினும் எல்லார் தங்கணும்எனஉம்முப் பெற்றும்[உகரம்பெற்றும்] எல்லார் தம்மொடும் எல்லார் தமக்கும் எல்லார் தமதும் என உகரங்கெட்டு மகர நிற்கும் எல்லீர் நும்மையும் எல் லீர் நும்மினும் எல்லீர் நுங்கணும் எனவும் [எனஉகரம் பெறும்] எல்லீர் நும்மொடுஎல்லீர்நுமக்கும் எல்லீர் நுமது [எனஉகரங்கெட்டும் மகரம் நிற்கும்]

எனவும் வரு முன்னர் 'மெய்' யென்ற விலைசாற் [விலேசாற்[கொண்ட மகாக்கேடிவற்றிற்கு மேல் வரு வனவற்றிற்குங் கொள்க.

படர்க்கை [படர்க்கைப் பெயர்] முற்கூறியவதனா னேரகர வீற்றுப் படர்க்கைப் பெயரு முன்னிலைப் பெயரு மகரவீற்றுத் தன்மைப் பெயரும் தம் நும் நம் என்னுஞ் சாரியை [யிடையே பெற்றிறுதியும்முச்சாரியையும்பெற்று]

முடிவனகொள்க. கரியார் தம்மையுஞ் சான்றார் தம்மையும் எனவும், கரியீர் நும்மையுஞ் சான்றீர் நும்மையும் எனவும், கரியே நம்மையும் இருவே நம்மையும் எனவும் எல்லா வுருபினோடுஞ்(வுருபோடுஞ்)செய்கையறிந் தொட்டுக உகரமு மொற்று மென்னாததனா னிக்காட்டிய வற்றிற் கெல்லா மூன்றுருபின்கண்ணுமும்மினுகரங் கெடுதல் கொள்க. நிற்றல் வேண்டும் ரகரப்புள்ளி யென்றதனானே தம்முப் பெறாமை வருமவையுங் கொள்க. 'எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை' யெனவரும். (19)

192 தான்யா னென்னு மாயீ ரிறுதியு
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே

இது னகரவீற்றுட் சிலவற்றிற்கு முடிவு (முடிபு) கூறுகின்றது.

(இ-ள்) தான் யானென்னுமாயீ ரிறுதியும் - தான் யானென்று சொல்லப்படு மிரண்டு (சொல்லப்பட்ட அவ்விரண்டு) நகரவீறும், மேன்முப்பெயரொடும் வேறுபாடிலவே-மேன்மகரவீற்றுட் கூறிய மூன்று பெயரோடும் வேறுபாடின்றித் தானென்பது குறுகியும் யாயென்பதன்கணாகாரமேகாரமா (ஆகாரம் ஏகாரமாய்) யகர வொற்றுக் கெட்டு முடியு மென்றவாறு.

தன்னை என்னை என எல்லா வுருபோடுமொட்டுக. செய்கையறிந் தொற்றிரட்டுத னெடியதன் முன்னரென் பதனுளிலைசாற் (ளிலேசாற்) கொள்க. (20)

193 அழனே புழனே யாயிரு மொழிக்கு
மத்து மின்னு முறழத் தோன்ற
லொத்த தென்ப வுணரு மோரே

இதுவுமது

(இ-ள்) அழனே புழனே யாயிருமொழிக்கும் - அழன் புழன் ஆகிய வவ்விருபெயர்க்கும் அவ்விருமொழிக்கும், அத்துமின்னு முறழத்தோன்றலொத்த தென்ப-அத்துச் சாரியையு மின்சாரியையு மாறிவரத் தோன்றுதலைப் பொருந்திற்றென்பர், உணருமோரே - அறிவோரென்ற வாறு.

அழத்தை அழனினை புழத்தை புழனினை எனச்செய்கையறிந்தெல்லா வுருபினோடுமொட்டுக. னகரத்தை யத்தின்மிசை யொற்றென்று (அத்தின்மிசை ஒற்றென்று) கெடுத்'தத்தி னகர'மென்பதனான் முடிக்க.தோன்றலென்றதனான்எவன் எனநிறுத்தி வற்றுக்கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்து எவற்றை எவற்றோடு என எல்லாவுருபினோடு மொட்டுக. எற்றை யென்புழி நிலைமொழி வகரமிதனாற் கெடுக்க. இனி ஒத்ததென்றதனால் எகின் என நிறுத்தி அத்துமின்னுங் கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்து எகினத்தை எகினினை எனஒட்டுக. அத்தினி திசைத்தலின் முற்கூறினார். (21)

194 அன்னென் சாரியை யேழனிறுதி
முன்னர்த் தோன்று மியற்கைத் தென்ப

இது (இஃது) ஏழென்னு மெண்ணுப் பெயரின் பெற்றுப் (எண்ணுப் பெயர் அன்சாரியைபெற்று) புணர்க வென்கின்றது.

(இ-ள்) அன்னென் சாரியை யேழனிறுதி முன்னர்த் தோன்று மியற்கைத்தென்ப - அன்னென்னுஞ் சாரியை ஏழென்னு மெண்ணுப் பெயரின்முன்னே தோன்றுமியல்பினை யுடைத்தென்று கூறுவராசிரிய ரென்றவாறு.

உதாரணம் : ஏழனை ஏழற்கு ஏழனின் என்றேனை யுருபுக ளோடுஞ் செய்கையறிந் தொட்டுக. சாரியை முற்கூறியவதனாற் பிறவுமண் பெறுவன கொள்க. பூழனை யாழன்னைஎன்றேனை யவற்றோ மொட்டுக. மேல்வருகின்றன் சாரியை சேரவைத் தமையானிவை (அ வை) யெல்லா மின் சாரியை

பெற்று வருதலுங் கொள்க. ஏழினை பூழினை யாழினை எனவரும். (22)

195 குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்று மின்னென் சாரியை

இது குற்றுகர வீற்றிற்கு முடிபு கூறுகின்றது

(இ-ள்) குற்றிய லுகரத் திறுதி முன்னர் - குற்றிய லுகரமாகிய வீற்றின் முன்னர் முற்றத் தோன்று மின்னென் சாரியை - முடியத் தோன்று மின்னென்னுஞ் சாரியை யென்றவாறு,

உதாரணம் :— நாகினை (நாகினொடு) வரகினை (வரகினொடு) என (எனவரும்) ஏனையவற்றோடுஞ் செய்கையறிந் தொட்டுக. முற்ற வென்றதனானே பிற சாரியை பெறுவனவுங் கொள்க. வழக்கத்தாற் பாட்டா ராய்ந்தா னெனவுங் கரியதனை யெனவும் வரும். (23)

196 நெட்டெழுத் திம்ப ரொற்றுமிகத் தோன்று
மப்பான் மொழிக ளல்வழி யான.

இது(இஃது) அக்குற்றிய லுகரங்களுட் சிலவற்றிற்கின வொற்று மிகு மென்கின்றது.

(இ-ள்) நெட்டெழுத்திம்ப ரொற்றுமிகத் தோன்றும்- நெட்டெழுத்தின் பின்னர் வருகின்ற குற்றுகரங்கட்கின வொற்றுமிகத் தோன்றா, நிற்கும் அப்பான் மொழிகள் வழியான - ஒற்று மிகத் தோன்றாத கசதபக்களீறாகிய மொழிகளல்லாத விடத்தென்றவாறு.

எனவே டகார றகாரங்க ளீறாகிய (ஈறான)சொல்லினிடத்துத் தோன்று மாயிற்று (சொல்லிடைத் தோன்று மாயிற்று)

உதாரணம் : யாட்டை யாட்டொடு யாட்டுக்கு யாட்டின் யாட்டது யாட்டுக்கண் எனவும் யாற்றை சோற்றை எனவும் இனவொற்று மிக்கன, இவை அப்பால் மொழிகள் அல்லன

நாகு காசு போது காபு என்றாற்போல்வன அப்பால் மொழிகள் ; இவை இனவொற்று மிகாவாயின [24]

197 அவைதா
மியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப

இது [இஃது] எய்தியது விலக்கிற்று.

[இ-ள்] அவைதா மியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப - அங்ஙன மினவொற்று மிகுவனதா மின்சாரியை பெறாதியல்பாய் [இயல்பாக] முடியுஞ் செய்தியை யுடைய வென்று கூறுவராசிரிய ரென்றவாறு

உதாரணம் :- முன்னர்க் காட்டினவே கொள்க. செயற்கைய வென்ற மிகையானே உயிர்த் தொடர்மொழிகளி னேற்பனவற்றிற்கு மொற்று மிகத்தோன்றுதல் கொள்க. முயிற்றை முயிற்றொடு (முயிற்றுக்கு) முயிற்றின் முயிற்றது முயிற்றின்கண் [முயிற்றுக்கண்] எனவரும் இன்னு மிதனானேயாட்டினை முயிற்றினை எனவிலக்கியவின் பெறுதலுங் கொள்க. [25]

198 எண்ணி னிறுதி யன்னொடு சிவணும்.

இது குற்றுகர வீற்றெண்ணுப்பெயர் முடிவு - [முடிபு] கூறுகின்றது.

[இ-ள்] எண்ணி னிறுதி யன்னொடு சிவணும் - எண்ணுப்பெயர்களினது குற்றுகர வீறன்சாரியை யோடு பொருந்துமென்றவாறு.

உதாரணம்:- ஒன்றனை யிரண்டனை (இரண்டனை) என எல்லா வெண்ணினையு மெல்லா வுருபினோடு மொட்டுக; செய்கை யறிந்து முன்னர்ச் செயற்கையவென்ற விலேசானே ஒன்றினை இரண்டினை என வின்சாரியையுங் கொடுக்க. (26)

199 **ஒன்று முத லாகப் பத்தூர்ந்து வரூஉ**
மெல்லா வெண்ணுஞ் சொல்லுங் காலை
யானிடை வரினு மான மில்லை
ய∴தென் கிளவி யாவயிற் கெடுமே
யுய்தல் வேண்டும் ப∴கான் மெய்யே.

இது (இ∴து) ஒன்றுமுதலாக வெட்டிறுதியாய் நின்ற குற்றுகர வீற்றெண்ணுப் பெயரேழனோடும் பத்தென்னு மெண்ணுப்பெயர் வந்து புணர்ந்தொன்றாய் நின்ற சொற்கள் சாரியை பெற்றுத் திரியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஒன்றுமுதலாகப் பத்தூர்ந்து வரூஉ மெல்லா வெண்ணும்-ஒன்றுமுதலாக வெட்டீறாக நின்ற வெண்களின் மேலேபத்தென்னு மெண்ணுப்பெயரேறி வருகின்ற வொருபது முதலாக (ஒருபது முதலான) வெல்லா வெண்களையும், சொல்லுங்காலை-முடிபுகூறுங்காலத்து, ஆனிடை வரினுமானமில்லை - முற்கூறிய வன்சாரியையேயன்றி யான் சாரியை யிடையே வரினுங் குற்றமில்லை, ஆவயினஃதென் கிளவிகெடும்-அவ்வான் பெற்றுழிப் பஃதென்னு மெண்ணிடத் தஃதென்னுஞ் சொற்கெட்டுப்போம் பஃகான்மெய் யுய்தல் வேண்டும் - அவ்வகரத்தா னூரப்பட்ட பகரமாகிய வொற்றுக்கெடாது நிற்றலை யாசிரியன் விரும்புமென்றவாறு.

நின்ற பத்த னொற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையும்
என்பதனா னாய்தம் பெற்றது.

உதாரணம் : ஒருபஃது இருபஃது முப்பஃது, நாற்பஃது ஐம்பஃது அறுபஃது எண்பஃது எனக் குற்றிய லுகரப்புணரியனுள் விதிக்குமாறே நிறுத்தி முடிக்குமாறே (விதிக்குமாறே) நிறுத்தி யஃதென்பதனைக் கெடுத்துப் பகரவொற்றை நிறுத்தியான் சாரியை கொடுத்து ஒருபானை இருபானை எனஎல்லா வெண்ணோடு மெல்லா வுருபினையுஞ் செய்கையறிந்தொட்டுக உம்மை யெதிர்மறையாதலின் ஒருபஃதனை இருபஃதனை என எல்லாவற்றோடு மொட்டுக.

சொல்லுங்காலை யென்றதனாற் பத்தார் கிளவியே யன்றி ஒன்பான் முதனிலை யொன்பாற் கொற்றிடை மிகுமேஎன்றாற் போல வருவனவற்றின் கண்ணும் பகரத்துளகரம் பிரித்து அஃதென்பது கெடுத்தான் கொடுக்க. (27)

200 யாதெ னிறுதியுஞ் சுட்டு முத லாகிய
வாயத விறுதியு மன்னொடு சிவணு
மாய்தங் கெடுத லாவயி னானே

இது (இஃது) எண்ணுப்பெயரல்லாத குற்றுகர வீற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) யாதெ னிறுதியும் - யாதென வருங் குற்றுகர வீறும், சுட்டு முதலாகிய வாய்தவிறுதியும்- சுட்டெழுத்தினை முதலாக வுடைய வாய்தத் தொடர்மொழிக் குற்றுகர வீறும், அன்னொடு சிவணும் - அன்சாரியையோடு பொருந்தும், ஆவயினான வாய்தங் கெடுதல்-அவ்விடத்து வந்த வாய்தங் கெடு மென்றவாறு.

யாதனை யாதனொடு எனவும் அதனை அதனொடு இதனை இதனொடு உதனை உதனொடு எனவும் வரும். (28)

201 ஏழனுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி யியற்கையு மாகு
மாவயி னிறுதி மெய்யொடுங் கெடுமே

இதுவுங் குற்றுகர வீற்றுட் சிலவற்றிற் கேழனுரு போடு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) திசைப் பெயர் முன்ன ரேழனுருபிற்கு — திசைப் பெயர்களின் முன்னர் வந்த கண்ணெனுருபிற்கு முடிபு கூறுங்கால், சாரியைக் கிளவி யியற்கையுமாகும் - முற்கூறிய வின் சாரியை யாகிய சொன்னின்று முடிதலே யன்றி நில்லா தியல்பாயும் முடியும், ஆவயி னிறுதி மெய் யொடுங் கெடுமே - அங்ஙன மியல்பாயவழி திசைப்பெயரி றுதிக்குற்றுகரந் தன்னா னூரப்பட்ட மெய்யொடுங் கெடு மென்றவாறு.

உதாரணம் : வடக்கின் கண் கிழக்கின் கண் தெற் கின்கண் மேற்கின் கண் எனவும், வடக்கண் கிழக்கண் தெற்கண் மேற்கண் எனவும் வரும். இன் பெறுவழி யுக ரங் (கெடாவென்றுணர்க. கெடா தென்றுணர்க)

ஆவயி னென்றதனான் கீழ்சார் கீழ்புடை, மேல்சார் மேல்புடை, தென்சார் தென்புடை, வடசார் வடபுடை எனச் சாரியை யின்றி பலவிகாரப்பட்டு நிற்பனவுங் கொள்க. (இன்னும்) இதனானே கீழைக்குளம் மேலைக் குளம், (கீழைச்சேரிமேலைச்சேரி}என ஐகாரம் பெறுதலுங் கொள்க. (29)

202 புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியும்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாந்
தேருங்காலை யுருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே.

இது [இஃது] இவ்வோத்தினு ளெடுத்தோத்தானு மிலைசானு [மிலேசானு] முடியாது நின்றவற்றிற் கெல் லா மிதுவேயோத்தாய தோர் புறநடை கூறுகின்றது.

[இ-ள்] சொல்லிய வல்ல புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும் - முற்கூறிய புள்ளியிறு முயிரீறு மல்லாத புள்ளி

யீற்றுச்சொல்லும் உயிரீற்றுச் சொல்லும், ஏனையவும் எல்லாம் -முற்கூறிய வீறுகடம்மு ளொழிந்து நின்றனவு மெல்லாம், தேருங்காலை யுருபொடு சிவணிச் சாரியை நிலையுங் கடப்பாடிலவே - ஆராயுங் காலத் துருபுகளோடு பொருந்திச் சாரியை நின்று முடியு முறைமையை யுடைய வல்ல, நின்று நில்லாது முடியு மென்றவாறு.

ஏனையவுமென வும்மை விரிக்க, கூறாதபுள்ளி யீறுகளைந்து. அவை ணகார யகார ரகார லகாரளகாரங்களாம் [ணகர யகர ரகர லகாரளகாரங்களாம்] மண்ணினைமண்ணை வேயினைவேயை, நாரினை நாரை, கல்லினை கல்லை, முள்ளினை முள்ளை, எனவரும் - உயிரீற்றுளொழிந்ததிகார [இகர] மொன்றுமே யாதலின தனைப்பிற்கூறினார். கிளியினைகிளியை எனவரும்.

இனித் தான் யான் அழன் புழன் என்னு னகர வீற்றினு மேழென்னும் [ஏழென்னும்] ழகர வீற்றினு மொழிந்தன பொன்னினை பொன்னைதாழினை தாழை என்றாற் போல வருவன பிறவுமாம் இனி ஈகார வீற்று ளொழிந்தன தீயினை தீயை ஈயினை ஈயை வீயினை வீயை என்றாற் போல்வன பிறவுமாம். ஐகார வீற்று ளொழிந்தன தினையினை தினையை கழையினை கழையை என்றாற் போல்வன பிறவுமாம் ஏனையீறுகளினும் வருவன உணர்ந்து கொள்க,

மேலே பெயரீற்றுச் செய்கை யெல்லாந்தத்த மீற்றின் கண் முடிப்பா ராதலினவை யீண்டுக் கூறல் வேண்டா.

இனித் தேருங்காலையென்றதனானே யுருபுகணிலை மொழியாக நின்று தம்பொருளோடு புணரும் வழி வேறுபடுமுருபீற்றுச் செய்கையெல்லா மீண்டு முடித்துக்கொள்க

உதாரணம் : நம்பியைக் குணர்ந்தான் மண்ணினைக் குணர்ந்தான் கொற்றனைக்குணர்ந்தான் என மூவைப் பொருளோடுகூடி நின்றவுருபிற் கொற்றுக்கொடுக்கமலையொடுபொருதது.

தான் ஊர்க்குச் சென்றான் காக்கையிற் கரிது, காக்கை யது பலி, மடியுட் பழுக்காய், தடாவினுட் கொண்டான் என்னுந்தொடக்கத்தன வுருபு காரணமாகப் பொருளோடு புணரும் வழி யியல்பாயு மீறு திரிந்து மொற்று மிக்கும் வந்தன கொள்க.

இனிக் கண் கால் புறமுதலியன பெயராயு முருபாயு நிற்குமாதலினவையுருபாகக் கொள்ளும் வழி வேறுபடுஞ் செய்கைக ளெல்லா மிவ்விலைசான் (இவ்விலேசான்) முடிக்க. இது (இஃது) உருபியலாதலினுருபொடு சிவணி எனவேண்டா. வவ்மி கையானே யுருபு புணர்ச்சிக்கட் சென்ற சாரியைகளெல்லாமீற்றுப் பொருண்முடிவுள்வழிப் பொருட்புணர்ச்சிக்குங் கொள்க. (அம் மிகையானேஉருபு புணர்ச்சிக்கட் சென்ற சாரியைக ளெல்லாம் ஈற்றுப் பொருண்முடிபு உள்வழிப் பொருட் புணர்ச்சிக்குங் கொள்க.) விளவின்கோடு கிளியின்கால் பினவெல்லா வீற்றினுங் கொள்க. (என எல்லா ஈற்றினுங் கொள்க.) நம்பியை கொற்றினை (கொற்றனை) என வுயிரீறும் புள்ளியீறுஞ் சாரியைபெறா தியல்பாய் முடிவனவு மீண்டே கொள்க. (ஈண்டே கொள்க). (30)

(ஆறாவது உருபியல் முற்றும்.)



ஏழாவது உயிர் மயங்கியல்

203 அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழி கசதபத் தோன்றிற்
றத்த மொத்த வொற்றிடை மிகுமே.

(என்பது சூத்திரம்). உயிரீறு நின்று வன்கணத்தோடுஞ் சிறுபான்மை யேனைக்கணங்களோடு மயங்கிப் புணரு மியல்புணர்த்தினமையி னிவ்வோத்துயிர் மயங்கிய லென்னும் பெயர்த்தாயிற்று. மேற் பெயரோடுருபு புணருமாறு கூறிப்பெயர் வருவழி யுருபு தொக்கு நின்ற பொருட் புணர்ச்சி கூறுகின்றமையினுருபிய லோடியை புடைத்தா யிற்று.

இச் சூத்திரம் அகரவிறுதிப் பெயர் அவ்வழிக் கண் வன் கணத்தோடு புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) அகரவிறுதிப் பெயர் நிலை முன்னர்—அகர மாகிய விறுதியையுடைய பெயர்ச் சொன் முன்னர், வேற் றுமை யல்வழிக் கசதபத் தோன்றின் - வேற்றுமை யல் லாதவிடத்து கசதப முதன்மொழிகள் வருமொழியாய்த் தோன்றுமாயின். தத்த மொத்த வொற்றிடை மிகும் - தத் தமக்குப் பொருந்திய வக்கச தபக்களாகிய வொற்றிடைக் கண் மிகுமென்றவாறு.

உதாரணம் : விளக்குறிது நுணக்குறிது அக்குறிது (அதக்குறிது) சிறிது தீது பெரிது என வொட்டுக. இவை அஃறிணை யியற்பெயராகிய வெழுவாய்வினைக் குறிப் புப்பண்பாகிய பயனிலையோடு முடிந்தன.

வொத்த வென்னாது (ஒத்தவென்றமையாது) தத்த (மொத்த) மென்றதனா னகரவீற்று உரிச்சொல் வல்லெ ழுத்து மிக்கு மெல்லெழுத்து மிக்கு முடியு முடிபு மகரந் தன்னைமத்திகையாற் புடைத்தான், சாத்தற்குக் கொடுத்

யுணர நின்றவழி வன்கணத்தோடு மிக்கு முடியு முடிபுங் கொள்க. தடக்கை தவக் கொண்டான் வயக்களிறு வயப் புலி குழக்கன்று எனவும், தடஞ்செவி கமஞ்சூல் எனவும் அக்குறிது சிறிது தீது பெரிது எனவும் வரும் இனி இடைச் சொல் வல்லொற்றுப் பெற்று வருவனவுளவே லவற்றையு மிவ்விலைசினான் (விலேசினான்) முடித்துக் கொள்க. (1)

204 வினையெஞ்சு கிளவியு முவமக் கிளவியு
மெனவெ னெச்சமுஞ் சுட்டி னிறுதியு
மாங்க வென்னு முரையசைக் கிளவியு
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

இது [இஃது] அகரவீற்று வினைச் சொல்லுமிடைச் சொல்லும் புணருமாறு கூறுகின்றது.

[இ-ள்] வினையெஞ்சு கிளவியும்-வினையை யொழி பாகவுடைய வகரவீற்று வினைச் சொல்லும், (வினையை ஒழிபாகவுடைய அகர ஈற்று வினைச் சொல்லும்], உவமக் கிளவியும்-உவம வுருபாய் நின்ற வகர்வீற்றிடைச் சொல் லும், என வெனெச்சமும்-என வென்னும் வாய்பாட்டா நின்ற வகரவீற்றிடைச் சொல்லும், சுட்டினிறுதியும்-சுட் டாகிய வகரவீற்றிடைச் சொல்லும், ஆங்கவென்னு முரையசைக்கிளவியும் ஆங்கவென்னு மகர வீற்றுரைய சை யிடைச் சொல்லும், ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே - முன்னர்க் கூறிய வல்லெழுத்து மிக்குமுடியு மென்றவாறு.

உதாரணம் : உண தாவ சாவ என நிறுத்திக் கொண் டான் சென்றான் தந்தான் போயினான் என வல்லெழுத் துக்கொடுத் தொட்டுக. [கொடுத்து முடிக்க] இவ்வினை யெச்ச மொழிந்தன வெல்லா மிடைச் சொல்லென்றுணர்க புலி போலக் கொன்றான்சென்றான்தந்தான் போயினான் கண்டெனக் கொண்டான் [கொள்ளெனக் கொண்டான்]

சென்றான் தந்தான் போயினான். அக் கொற்றன் சாத் தன் தேவன் பூதன்[எனவும்] ஆங்கக் கொண்டான் சென் றான் தந்தான் போயினான்[ஆங்கக் குயிலு மயிலுங் காட் டிக் கேசவனை விடுத்துப் போக்கியோளே [போகியோளே] எனவரும் [எனவும் வரும்] உவமம் வினையெச்ச வினைக் குறிப்பேனுமொன்றனோடு பொருவப் படுதனோக்கி யுவம வியலின்கணாசிரியர் வேறுபடுத்திக் கூறினார். என வெண்ணு மெச்சமுமிருசொல்லையு மியைவிக்கின்ற நிலைமையானிடைச் சொல்லோத்தினுள் வேறோதினார். ஆங்கவென்ப தேழனுருபின் பொருள்பட வந்த தல்லாமை யாங்கவென்னு முரையசை யென்பதனா னுணர்க. [ஆங்க வென்னு முரையசை என்றதனானும் ஆங்க உரையசை என்னும் இடையியற் சூத்திரத்தானும் உணர்க] இவை யியல்பு கணத்துக்கண் முடிக்கு முடிபு [முடியு முடிபு.] ஞநம யவ வென்புழிக் கூறியதே யாம். அவை தாவ புலிபோல கண்டேன [கொள்ளென] ஆங்க என நிறுத்தி ஞநமயவ முதலிய மொழிமே லேற்பன குணர்ந்து [ஏற்பன கொ ணர்ந்து] நிறுத்தி [புணர்த்தி] இயல் பாமா றொட்டிக் கொள்க. சுட்டுமேற்கூறுப [2]

205 சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றி
னொட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்.

இது ஞநமயவ வென்னுஞ் சூத்திரத்தான் மென்கண மியல்பாகவென முற்கூறியதனை விலக்கி மிக்கு முடிக்க வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது. [வகுக்கின்றது]

[இ-ள்] சுட்டின் முன்னர் ஞநமத்தோன்றின் - அகரச் சுட்டின் முன்னர் ஞநமக்கள் [ஞநமக்கண்] முதலாகிய மொழிவரின், ஒட்டிய வொற்றிடை மிகுதல் வேண்டும்- தத்தமக்குப் பொருந்திய வொற்றிடையே மிகுதலை விரும்பு மாசிரிய ரென்றவாறு. (ஆசிரியன் என்றவாறு)

அஞ்ஞாண் தூல்மணி (அஞ்ஞாண் அந்நூல் அம்மணி) எனவரும்]

ஒட்டிய வென்றதனான் அஞ்ஞெளிந்தது அந்நன்று அம்மாண்டது என அகரந் தன்னையுணர நின்ற வயுமிகு தல் கொள்க. [3]

206 யவமுன் வரினே வகர மொற்றும்
இதுவுமது.

[இ-ள்] யவமுன் வரினே - யகர வகர முதன் மொழி [யகரச்] சுட்டின் முன்னேவரின் வகரமொற்றும் - இடைக் கண் வகரமொற்றா மென்றவாறு. அவ்யாழ் அவ்வளை எனவரும்.

வருமொழிமுற்கூறியவதனா லகரந்தன்னை யுணர நின்ற வழியும் வகரமிகுதல் கொள்க. அவ்வளை தந்து [அவ்வளைந்தது] எனவரும். [4]

207 உயிர்முன் வரினு மாயிய றிரியாது
இதுவுமது

[இ-ள்] உயிர்முன் வரினும் ஆயியறிரியாது—உயிர்க ளகரச்சுட்டின் முன்னர் வரினும் முற்கூறிய வகரமிக்கு வருமியல் பிற்றிரியாதென்றவாறு.

அ என நின்ற சுட்டின் முன்ன ரடையென வருவித்து வகரமொற்றித் தன்னுரு பிரட்டி யுயிரேற்றி அவ்வடை யாடை இலை ஈயம் உலா [உரல்] ஊர்தி எழு ஏணி ஐயம் ஒழுக்கம் [ஒடை] ஒளவியம் என வொட்டுக. [அவ் வடை அவ்வாடை அவ்விலை அவ்வீயம் அவ்வுரல் அவ் வூர்தி அவ்வெழு அவ்வேணி அவ்வையம் அவ்வொழுக்கம் அவ்வோடை அவ்வெளவியம் என ஒட்டுக]

நெடியதன் முன்ன ரென்பதனு ணெறியியலென்றத னானிரட்டுதல் கூறினமையினது நிலைமொழித் தொழி லென்பது பெறப்பட்டது. வருமொழி முற்கூறியவதனா னகரந் தன்னை யுணரநின்ற வழியும் வகர மிகுதல் கொள்க. அவ்வழகிது எனவரும் திரியதென்றதனான் [திரியாதென்றதனான்] மேற்சுட்டு நீண்ட வழி வகரக் கேடு கொள்க. (5)

208 நீட வருதல் செய்யுளு ளுரித்தே

இது (இஃது) எய்தியது விலக்கிச் செய்யுட் காவ தோர்விதி கூறுகின்றது.

(இ-ள்) நீட வருதல் செய்யுளு ளுரித்தே — அகரச் சுட்டு நீளும்படி வருதல் செய்யுளிடத் துரித்தென்றவாறு.

உதாரணம் : ஆயிரு திணையி னிசைக்குமன சொல் லே' ஆயிருபாற் சொலஃறிணையவெனவரும். (ஆயிருபாற் சொல் எனவரும்.) இது வருமொழி வரையாது கூறலின் வன்கண மொழிந்த கணங்க ளெல்லாவற்றோடுஞ் சென் றது. (ஒழிந்த கணம்எல்லாவற்றோடுஞ் சென்றது) அவற் றிற்குதாரணம் வந்தவழிக் காண்க. இந்நீட்சி யிருமொழிப் புணர்ச்சிக் கண் வருதலி னீட்டு வழி நீட்டலாகாமை யுணர்க. (நீட்டும் வழி நீட்டல் ஆகாமை உணர்க)

209 சாவ வென்னுஞ் செயவெ னெச்சத்
திறுதி வகரங் கெடுதலு முரித்தே

இது மேல் வினையெஞ்சு கிளவியென்ற வினையெச் சத்திற்கேயாகாத தெய்துவித்தது(எய்தாததெய்துவித்தது)

[இ-ள்] சாவ வென்னுஞ் செயவெனெச்சத் திறுதி வகரம்-சாவ வென்று சொல்லப்படுஞ் செயவெனெச்

சத்திறுதிக்கணின்ற அகரமு மதனாற் பற்றப்பட்ட வகர மும், கெடுதலு முரித்தே - கெட்டு நிற்றலுங் கெடாது நிற் றலுமுரித்தென்றவாறு.

உதாரணம்: கோட்டிடைச் சாக்குத்தினான் என வரும். சீறினான் தகர்த்தான் புடைத்தான் எனவொட்டுக. கெடாதது முன்னர் முடித்தாம்.

இதனை வினையெஞ்சு கிளவி யென்றதன் பின்வை யாததனா னியல்பு கண்டு மிந்நிலை மொழிக்கேடு கொள்க. சாஞான்றான் நீண்டான் மாண்டான் யாத்தான் வீழ்ந்தான் அடைத்தான் (வீழ்த்தான் அடைந்தான்) என வொட்டுக. (7)

210 **அன்ன வென்னு முவமக் கிளவியு**
மண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியுஞ்
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லு
மேவல் கண்ணிய வியங்கோட் கிளவியுஞ்
செய்த வென்னும் பெயரெஞ்சு கிளவியுஞ்
செய்யிய வென்னும் வினையெஞ்சு கிளவியு
மம்ம வென்னு முரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட
வன்றி யனைத்து மியல்பென மொழிப

இது (இஃது) அகர வீற்றுளொருசார் பெயர்க்கும் வினைக்கு மிடைக்கு முன்னெய்தியது விலக்கியு மெய்தாத தெய்துவித்து விலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) அன்ன வென்னு முவமக் கிளவியும்—அன்ன வென்று சொல்லப்படு முவமவுருபாகிய வகரவீற்றிடைச் சொல்லும், அண்மை சுட்டியவிளிநிலைக் கிளவியும்- அணி யாரைக் கருதின விளியாகிய நிலைமையை யுடைய வகர வீற்றுயர்திணைப் பெயர்ச் சொல்லும், செய்ம்மனவென்

ணுந்தொழிலிறு சொல்லும் - செய்ம்மன வென்று சொல் லப்படுந் தொழிற் சொற் பொருடருங் காலு(ம்) மீற்றானி றுஞ் சொல்லும், ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் ஒருவரானேவற்றொழின்மை கருதிக் கூறப்பட்ட வேவற் பொருண்மையை முற்ற முடித்தலை யுணர்த்து மகரவீற்று வினைச்சொல்லும், செய்தவென்னும் பெயரெஞ்சு கிளவி யும்—செய்தவென்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய வகரவீற்று வினைச் சொல்லும், செய்யிய வென்னும் வினையெஞ்சு கிளவியும்-செய்யிய வென்று சொல்லப்படும் வினையெச்சமாகிய வகரவீற்று வினைச் சொல்லும் அம்ம வென்னு முரைப்பொருட் கிளவியும்—அம்ம வென்று சொல்லப்படு மெதிர்முகமாக்கிய வகர வீற்றிடைச் சொல் லும். பலவற்றிறுதிப் பெயர்க்கொடை யுளப்பட- பன்மைப் பொருளை யுணர்த்துமகரவீற்றுப் பெயர்களைந்தினையும் முற்கூறியவற்றோடு கூட்டிக்கொடுத்த லுள்ளிட்டு,அன்றி யனைத்தும் - அவ்வெட்டுச் சொல்லும், இயல்பென மொழிப - இயல்பாய் முடியுமென்று கூறுவ ராசிரியரென் றவாறு. (அன்றி யனைத்து மியல்பென மொழிப—அவ் வெட்டுச் சொல்லும் இயல்பாய் முடியு மென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.)

உதாரணம் :பொன்னன்ன குதிரை சென்னாய் (செந் நாய்) தகர் பன்றி எனவிது வினையெஞ்சு கிளவியு மென் பதனான் மிக்கு முடிதலை விலக்கிற்று. ஊர கேள் செல் தா போ என வுயிரீறாகிய வுயர்திணை யென்னுஞ் சூத்தி ரத்தானியல்பாய் முடிவதீண்டு னகரங் கெட்டகரவீறாய் விளியேற்று முடிந்தமையி னெய்தாத தெய்துவித்தது. உண்மன குதிரை சென்னாய் (செந்நாய்) தகர் பன்றி என்பனவற்றிற் குண்ணு மென விரித்தும் யானுண் மன நீயுண்மன அவனுண்மன என நிறுத்தி கூழ் சோறு தேன் பால்என வருவித்து முடித்து (முடிக்க) இவற்றிற்கு மவ்வாறே விரித்துக் கொள்க. இங்ஙனஞ் செய்யு மென்பதன் பொருட்டாகிய மனவென்னுஞ்

சொல்லக்காலம் (மனவெ னிறுதிக்சொல் அக் காலம்வழங் குதலினாசிரியர் மனவென்பதனையும் வேறாக வெடுத் தோதினார். யானும் நின்னோடுடன் வருக. அவன் செல் க அவள் செல்க அவர் செல்க என நிறுத்திக் காட்டின் கண் செறுவின் கண் தானைக்கண் போரின்கண் என வருவித்து முடிக்க. இவை ஏவற் பொருண்மை யை முற்ற முடித்தன ஏவல் கண்ணியவெனவே யேவல் கண்ணாதனவு முளவாயிற்று. அவை நீ செல்க அது செல்க அவை செல்க என நிறுத்தி முற்கூறிய காடு முதலி யவற்றை வருவித்து முடிக்க. இவை யேவற் பொருண் மையை முற்ற முடியாதன அஃறிணை யேவற் பொருண் மையை முற்ற முடியாமை வினையியலுள் வியங்கோட் கண்ணே பொருளியலுஞ் செய்யுளியலும் பற்றிக் கூறுதும் மனவும் வியங்கோளு மெய்தாத தெய்துவித்தது. உண்ட குதிரை சென்னாய் (செந்நாய்) தகர் பன்றி. இதுவுமது. இதற்குரிய உண்ணாத குதிரை யென்னு மறையு(என்னும் எதிர்மறையு) நல்ல குதிரை யென்னுங் குறிப்புங் கொள்க உண்ணிய கொண்டான் சென்றான் தந்தான் போயினான். இது முன்னர் வினையெச்சம் வல்லெழுத்துப் பெறுக வென்றலி னெய்தியது விலக்கிற்று. அம்ம கொற்றா சாத் தா தேவா பூதா யென்ப திடைச் சொல்லாதலி னெய்தாத தெய்திவித்தது.. இது கேளாய் கொற்றாவென (கொற்ற னே என) வெதிர்முகமாக்கியவாறுணர்க. பல்ல குதிரை பல குதிரை சில்ல குதிரை சில குதிரை உள்ள குதிரை இல்ல குதிரை சென்னாய் (செந்நாய்) தகர் பன்றி என வொட்டுக. இக் காலத்துப் பல்ல (சில்ல) வென்பது வழங் காது. இதுவும்விளக்குறி தென்றாற் போலப்பலக் குதிரை யென வல்லெழுத் தெய்தி யதனை விலக்கிற்று. விளி- நிலைக்கிளவியாகிய பெயர் முற்கூறாததனானே செய்யு மென்பதன் மறையாகிய செய்யாத வென்பதற்கு மிவ்வி யல்பு முடிபு கொள்க அது வாராத கொற்றனென வரும். இவ்வியல்பு முடிபிற்குச் செய்ம்மன சிறத்தலின் வியங் கோட்குமுன் வைத்தார் ஏவல் கண்ணிய வென்பதனானே

வல் கண்ணாதது முளதென்று கூறி [மன்லிய பெரும நீ] யெனவுதாரணங் காட்டுக. வெனி னிது பொருந்தாதுகூறு கின்றவனிலை [கூறுகின்றான் அவன் நிலை] பெற்றிருத் தல் வேணுமென்றே கருதிக் கூறுதலினதுவு மேவல் கண் ணிற்றேயாம். எல்லாவற்றினுஞ் சிறப்புடைய பலவற்றி றுதி முற்கூறுக வெனின் அது வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேறு வேறு முடிபுடைத் தென்றற்குஞ் செய்யுண் முடிமிவ் வியல்புபோற் சிறப்பின றென்றற்கு மகரவீற்றுண் முடிபு கூறாது நின்ற முற்றுவினைக்குறிப்பு மிவ்வியல்பு முடிபு பெறுமென்றற்கும் பின் வைத்தார். உண்டன குதிரை. இது முற்றுவினை. கரியன குதிரை இது முற்றுவினைக் குறிப்பு. இது [இஃது[இயல்பு கணத்துமுடிபு. ஞநமயவ என்புழிப் பொருந்துவன வெலலாங் கொள்க. [8]

211 வாழிய வென்னுஞ் செயவென் கிளவி
யிறுதி யகரங் கெடுதலு முரித்தே.

இது [இஃது] எய்தியதன் மேற் சிறப்பு விதிவகுத்தது (இ-ள்) [வாழிய என்னுஞ் செய என் கிளவி-வாழுங் காலம் நெடுங் காலமாகுக என்னும் பொருளைத் தரும் வாழிய வென்று சொல்லப்படுஞ் செயவெ னெச்சக்கிளவி, இறுதி யகரங் கெடுதலும் உரித்து-இறுதிக்கண் அகரமும் அதனாற் பற்றப்பட்ட யகரவொற்றுங் கெட்டு முடிதலும் உரித்து என்றவாறு.)

(கெடுதலு மெனவே கெடாது முடிதலே பெரும் பான்மை யென்றவாறு.)

வாழிகொற்றா சாத்தா தேவா பூதாஎனவரும் வாழிய வென்பதே பெரும்பான்மை வாழிய யான் நீ அவன் அது அவை என் விது முன்றிடத்துஞ்சேறலி னுயிரீறாகிய முன்

னிலைக்கிளவியு மென்புழிமுன்னிலை யியல்பாமென்றதன் கணடங்கா தாயிற்று. இது குறிப்பு வியங்கோள்.

ஒன்றென முடித்தலா னியல்பு (முடித்தலான் இஃது இயல்பு) கணத்துங் கொள்க. வாழி ஞெள்ளா எனவரும். இவை வாழ்த்தப்படுகின்ற பொருள் வாழ வேண்டுமென் னுங்கருத்தினனாய்க் கூறுதலி னேவல் கண்ணிற்றேயாம் அல்லாக்கால் 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே' யென்பதற்கும் வாழ்த்தியலாகச் சான்றோர் கூறிய செய்யுட்களுக்கும் பயனின்றா மென்றுணர்க.

212 உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.

இது (இஃது) அம்ம வென்பதற் கெய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) உரை பொருட் கிளவி— எதிர்முகமாக்கும் பொருளையுடைய (அம்ம)வம்ம வென்னுஞ் சொல், நீட்டமும் வரையார்—அகரமாய் நிற்றலே யன்றி யாகாரமாய் (ஆகாரமாய்) நீண்டு முடித்தலையு நீக்காவென்றவாறு (நீக்கார் என்றவாறு)

அம்மா கொற்றா சாத்தா தேவா பூதா எனவரும் உம்மையானீளாமையே (உம்மையால் நீளாமையே பெரும் பான்மையாம்)வரைந்து கூறினமையினீட்சி யியல்பு கணத்துங் கொள்க. (வரையாது கூறினமையின் நீட்சி இயல்பு கணத்துங் கொள்க.) அம்மா ஞெள்ளா நாகா மாடா வடுகா ஆதா என ஒட்டுக. (10)

213 பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.

இது முற்கூறிய பலவற்றிறுதிக்குச் (பலவற்றிறுதிக் கண் சிலவற்றிற்குச்) செய்யுண் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) பலவற்றிறுதி நீடுமொழி யுளவே—பலவற்றை யுணர்த்துமை வகைச் சொற்களுளிறுதி யகரநீண்டு முடியு மொழிகளுஞ் சிலவுள, செய்யுள் கண்ணிய தொடர் மொழியான—யாண்டுள வெனிற் செய்யுளாதலைக் கருதியவொன்றோ டொன்று தொடர்ச்சிபடுஞ் செய்யுண் முடிபுடைய மொழிகளின் கண்ணென்றவாறு.

உடைத்தென்னா துளவென்ற பன்மையான் வருமொழிக்கட்சிலவெள்பது வந்து நீடுமென்று கொள்க.செய்யுளான வென்னாது செய்யுள் கண்ணிய தொடர் மொழியான வென்றதனாற் பலவென்பதனிறுதி யகர நீண்டுழி நிலைமொழி யகரப்பேறும் வருமொழி ஞகரமாகிய மெல்லெழுத்துப் பேறும், வருமொழி யிறுதி நீண்ட வழி யகரப்பேறு (அகரப்பேறு) மகரமாகிய மெல்லெத்துப் பேறுங் கொள்க.

உதாரணம் : பலாஅஞ் சிலா (சிலாஅ) மென்மனார் புலவர். இதன் சொன்னிலை பல சில வென்னுஞ் செவ்வெண். [11[

214 தொடர லிறுதி தம்முற் றாம்வரின்
லகரம் றகரவொற் றாகலு முரித்தே

இது பல சில வென்பன வற்றிற் கியல்பேயன்றித் திரிபு முண்டென வெய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

[இ-ள்] தொடர லிறுதி - தொடர்மொழி யல்லாத வீரெழுத்தொரு மொழியாகிய பல சிலவென்று மகரவீற்றுச்சொல், தம்முற்றாம்வரின் - தம்முன்னே தாம்வருமாயின், லகரம் றகரவெற்றாகலு முரித்தே - தம்மீற்றி நின்ற லகர வொற்று றகரவொற்றாய்த் திரிந்து முடிதலு முரித்தென்றவாறு.

உம்மையாற் றிரியாமையு முரித்தென்றார்.

உதாரணம்:பற்பல கொண்டார் சிற்சில வித்தியென வரும். அகரவீற்றுச் சுட்டல்லாத குற்றெழுத் தோரெழுத் தொரு மொழியாக்குவன வின்மையிற் றொடரலிறுதியெனவே வீரெழுத் தொருமொழியே யுணர்த்திற்று. தன் முனென்னாது தம் முனென்ற பன்மையாற் பலசிலவென நின்ற விரண்டுந் தழுவப்பட்டன,

தம்முன்வரினென்னாது தரமென்றதனாற் பலவின் முன் பலவருதலுஞ் சிலவின் முன் சிலவருதலுங் கொள்க. லகரம் றகரவொற்றாமென வொற்றிற்குத் திரிபுகூறி யகரங்கெடுதல் கூறிற்றிலரெனின் அது வாராததனால் வந்தது முடித்தலென்னு முத்திபெற வைத்த தென்றுணர்க. இதனை ஞாபக மென்பாரு முளர். அருத்தா பத்தியாற் றம்முன் றாம்வரினெனவே தம்முன்பிறவரின் லகரம் றகர வொற்றாகா தகரங் கெடுமென்று கொள்ளப்படும்.

உதாரணம்:பல்கடல்,சேனை, தானை,பறை எனவும் பல்யானை, பல்வேள்வி எனவும், சில்காடு, சேனை, தானை, பறை எனவும் சில்யானை, சில்வேள்வி எனவும் வரும். உரித்தென்ற தகரவீற் றொருமை பற்றி (12)

215 வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்

இது முற்கூறிய விரண்டற்கு மோர் முடிபு வேற்றுமை கூறுகின்றது. [இது முற்கூறிய இரண்டற்கும் உள்ளதோர் முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) வல்லெழுத் தியற்கை - முற்கூறிய பல சில வென்னு மிரண்டற்கு மகரவீற்றுப் பொது விதியிற் கூறிய வல்லெழுத்தும் மிகுதியியல்பு (மிகும் இயல்பு), உறழத் தோன்றும் மிகுதலும் மிகாமையுமாய் யுறழ்ந்து வரத்தோன்றுமென்றவாறு.

உதாராணம்:பலப்பல பல பல சிலச்சில சில சில என வரும் ஈண்டுந் தம்முற் றாம்வருதல் கொள்க. இயற்கை யென்றதனான் அகரங் கெட லகரந் திரிந்துந் திரியாது முறழ்ந்தும் முடிதலுங் கொள்க. பற்பல பல்பல சிற்சில சில் சில எனவரும். தோன்று மென்பதனான் அகரங்கெடலகர மெல்லெழுத்து மாய்தமுமாகத் திரிந்து முடிதலுங் கொள்க. பன்மீன் வேட்டத்துப் பன்மலர் பஃறாலி பஃறாழிசை சின்னூல் சிஃறாழிசை எனவரும். இது முன்னர்த் தோன்று மென்றெடுத்தோதிய சிறப்பு விதியால் அகரங்கெட நின்ற லகரவொற்றின் முடிபாகலிற் றகரம் வருவழியாய்த மென்பதனான் முடியாது.

216 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இது (இஃது) அகரவீற்றிற் கல்வழி முடிபுகூறி வன் கணத்தோடு வேற்றுமை தொக்குநின்ற முடிபு கூறு கின்றது.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணு மதனோ ரற்று - அகர வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக் கண்ணும் முற்கூறிய வல்வழியோடொரு தன்மைத்தாய்க் கசதப முதன்மொழி வந்துழித் தத்த மொத்த வொற்றிடை மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்:இருவிளக்கொற்றன் சாத்தன், தேவன், பூதன் எனவரும். இருவிளக்குறுமை சிறுமை, தீமை, பெருமை எனக் குணவேற்றுமைக் கண்ணுங் கொள்க. இருவிள வென்ப தோலை. வேணாட்டகத் தோரூர் கருவூரினகத் தொரு சேரியு மென்ப இருவிளவிற் கொற்றனென விரிக்க.

(14)

217 மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே

இது (இஃது) அகரவீற்று மரப்பெயர்க்கு வல்லெழுத்து விலக்கிப்பிறிது விதிவகுத்தது (இது அகரவீற்று மரப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.)

(இ-ள்) மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகுமே - அகரவீற்று மரப் பெயராகிய சொல்வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்:அதங்கோடு விளங்கோடு செதில்(செதிள்) தோல் பூ எனவரும்.

இது கசதப வென்பதனான் முடியும் (இது கசதப முத லிய என்பதனான் முடியும்.

218 மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை.

இது (இஃது)அகரவீற்று ளொன்றற்கு வல்லெழுத்து விளக்கிப் பிறிது விதி வகுத்தது(இஃது அகர ஈற்றுள் ஒன் றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை— அகரவீற்று மகவென்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்று மைப் பொருட்புணர்ச்சிக்கண் வருஞ்சாரியை யின்சாரியை யென்றவாறு

உதாரணம்:மகவின் கை செவி தலை புறம் எனவரும் சாரியைப் பேறு வரையாது கூறியவழி நான்கு கணத்துக் கண்ணுஞ் செல்லுமென்ப தாசிரியர்க்குக் கருத்தாகலின் மகவின் ஞாண் னூல் (நூல்) மணியாழ் வட்டு அடையென ஒட்டுக.

மேல்அவ ணென்றதனான் இன் சாரியை பெற்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க.

219 அத்தவண் வரினும் வரைநிலை யின்றே

இது (இஃது) ஈற்று வல்லெழுத்தும் அத்தும் வகுத் தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) அவண்—முற்கூறிய மகவிடத்து, அத்துவரி னும் வரைநிலை யின்றே—இன்னேயன்றி யத்துச் சாரி யையு மீற்று வல்லெழுத்தும் வந்து முடியினும் நீக்கும் நிலைமையின் றென்றவாறு.

உதாரணம்:மகத்துக்கை செவி தலை புறம் எனவரும்

அவணென்றதனால் மகப்பால் யாடென வல்லெழுத் துப் பேறும், மகவின்கை எனமேல் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், விளவின் கோடென வுரு பிற்குச் சென்ற சாரினய பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்வுங் கொள்க. நிலையென்றதனால் மகம் பால் யாடென்றே மெல்லெழுத்துப் பேறுங் கொள்க.

220 பலவற் றிறுதி யுருபிய னிலையும்

இது (இ*ஃ*து) ஈற்று வல்லெழுத்தும் வற்றும் வகுத் தலி னெய்தியதன்மேற் சிறப்பு விதி (கூறுகின்றது)

(இ-ள்) பலவற்றீறுதி—பல்ல பல சில உள்ள இல்ல வென்னும் பலவற்றை யுணர்த்து மகர வீற்றுச் சொற்களி னிறுதி, உருபிய னிலையும்—உருபியற்கண் வற்றுப் பெற் றுப் புணர்ந்தாற் போல வுருபினது பொருட் புணர்ச்சிக் கண்ணும் வற்றுப் பெற்றுப் புணரு மென்றவாறு.

ஈற்று வல்லெழுத்து அதிகாரத்தாற் கொள்க.

உதாரணம்:பல்லவற்றுக்கோடு பலவற்றுக்கோடு சில வற்றுக்கோடு உள்ளவற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு செதில் (செதில்)தோல் பூ எனவொட்டுக.உருபு விரிந்துழி நிற்குமாறு போலன்றி யவ்வுருபு தொக்கதன் பொருளின் றுபுணருங்கால் வேறுபாடுடைமையினவ் வேறுபாடுக ளீண்டோதினா ரித்துணையு மென்றுணர்க. (28)

221 ஆகார விறுதி யகர வியற்றே

இது (இஃது) ஆகார வீற்றுப் பெயரல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஆகார விறுதி யகர வியற்றே-ஆகாரவீற்றுப் பெயரல்வழிக் கண்அகர வீற்றல் வழியதியல் பிற்றாய் லெழுத்து வந்துழிந் தத்தமொத்த வொற்றிடை மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : மூங்காக் கடிது தாராக்கடிது சிறிது தீ பெரிது யெனவொட்டுக. (29)

222 செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியு
மவ்விய றிரியா தென்மனார் புலவர்

இது (இஃது) ஆகார வீற்று வினைச்சொன் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) செய்யா வென்னும் வினையெஞ்சு கிளவியும் செய்யா வென்னும் வினையெச்சமாகிய சொல்லு மும்மை யாற் பெயரெச்ச மறையாகிய சொல்லும், அவ்வியல் றிரியா தென்மனார் புலவர்—வல்லெழுத்து மிக்கு முடியு மவ்வியல்பிற் றிரியாதென்று சொல்லுவார் புலவரென்ற வாறு.

உதாரணம் : உண்ணாக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், உண்ணாக் கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும் வரும்- (20)

223 உம்மை யெஞ்சிய விருபெயர்ந் தொகைமொழி
மெய்ம்மை யாக வகர மிகுமே

இது (இஃது) ஆகார வீற்றல் வழிக்கண்ணும்மைத் தொகை முடிபு கூறுகின்றது.

(இ-ள்) உம்மை யெஞ்சிய விருபெயர்த் தொகை மொழி-உம்மை தொக்கு நின்ற விருபெயராகிய தொகைச்

சொற்கள், மெய்ம்மை யாக வகர மிகுமே—மெய்யாக நிலைமொழி யீற்றகரமிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : உவாஅப்பதினான்கு இரா அப்பகல் என வரும்.மெய்ம்மையாக வென்பதனான் வல்லெழுத்துக் கொடுக்க. இது இஃது எழுவாயும் பயனிலையுமின்றி யும்மைத் தொகையாதலின் மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறாவாயிற்று. (பெறாதாயிற்று)

உம்மை தொக்கவென்னா தெஞ்சிய வென்ற வாய்பாடு (வாய்பாட்டு) வேற்றுமையான் அரா அப்பாம்பு எனப்பண்புத் தொகைக்கும் இராஅக் கொடிதென எழுவாய் முடிபிற்கும் இராஅக்காக்கை எனப் பெயரெச்சமறைக்கு மகரப் பேறு கொள்க. வருமொழி வரையாது கூறினமையினியல்பு கணத்துக்கண்ணும் அகரப்பேறு கொள்க: இறாஅ வழுதுணங்காய் எனவரும். இது இஃது உம்மைத் தொகை அராஅக்குட்டி யென்பது பண்புத் தொகையும் வேற்றுமைத் தொகையுமாம். உவா அப்பட்டினி யென்பது வேற்றுமைத் தொகை. (21)

224 **ஆவுமாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
யாவென் வினாவும் பலவற் றிறுதியு
மேவல் குறித்த வுரையசை யியாவுந்
தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி யனைத்து மியல் பென மொழிப.

இது [இஃது] எய்தியது விலக்கலு மெய்தாத தெய்துவித்தலு முணர்த்துகின்றது,

(இ-ள்) ஆவும் - ஆவென்னும் பெயரும், மாவும்—மாவென்னும் பெயரும், விளிப்பெயர்க்கிளவியும்—விளித்தலையுடைய பெயராகிய வுயர்திணைச் சொல்லும், யாவென்வினாவும்—யாவென்னும் வினாப்பெயரும், பலவற் றிறுதியும்

பன்மைப் பொருளை யுணர்த்து மகாரவீற்றுப் பெயரெச்ச மறையாகிய முற்றுவினைச் சொல்லும், ஏவல் குறித்த வுரையசை மியாவும்—முன்னிலை யேவல் வினையைக் கருதி வருமெதிர் முகமாக்குஞ் சொல்லினைச் சேர்ந்த மியாவென்னு மாகார வீற்றிடைச் சொல்லும், தன்றொழி லுரைக்கும் வினாவின் கிளவியொடுதனது தொழிலினைச் சொல்லு மாகார வீற்றுத் தன்மையாகிய வினாச்சொல் லோடு கூட, அன்றியனைத்தும் – அவ்வெழுவகையாகிய சொல்லும், இயல்பென மொழிப-இயல்பாய் முடியுமென்று சொல்லுவர் புல்வரென்றவாறு.

உதாரணம் : ஆகுறிது மாகுறிது சிறிது தீது பெரிது குறிய சிறிய தீய பெரிய என வொட்டுக. இவை (இஃது) ஆகார வீற்றுப் பெயராகலின் மிக்கு முடிவன மிகாவென வெய்தியது விலக்கின (விலக்கிற்று). ஊரகேள் (ஊரா கேள்) செல் தா போ என வியல்பா மென்ற வுயர்திணைப் படர்க்கைப் பெயர் திரிந்து முன்னிலையாய் விளியேற்றலி னெய்தாத தெய்துவித்தது. யாகுறிய சிறிய தீய பெரிய இதுவும் பெயராகலி னெய்திய யியைபு வல்லெழுத்து விலக்கியதாம், உண்ணா குதிரைகள் சென்னாய்கள் (செந்நாய்கள்) தகர்கள் பன்றிகள் எனவிது வெய்தியது விலக்கிற்று, செய்யா வென்னுஞ் சூத்திரத் தும்மையாற் பெற்ற வலலெழுத்தினை விலக்கலின். கேண்மியா கொற் றாசாத்தா தேவா பூதா எனவும் உண்கா கொற்றா சாத் தா தேவா பூதா எனவு மிவ்விடைச் சொற்கண் முடி யாமையி னெய்தாத தெய்து வித்தது (எய்தாத தெய்து வித்ததுமாம்) உண்கா வென்பது யானுண்கோ (யானுண் பேனா)வென்னும் பொருட்டு. இயல்பு கணத்துக்கண்ணா யின் ஞநமயவ வென்பத னான் முடிபெய்தும். (22)

225 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இது (இஃது) ஆகார வீறுவேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

[இ-ள்] வேற்றுமைக் கண்ணும் — ஆகார வீற்றுப் பெயரல்வழிக்கண்ணே யன்றி வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கண்ணும், அதனோரற்று — அகரவீற்றல் வழி யோடொருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : தாரா மூங்கா வங்கா என நிறுத்திக் கால் செவி தலை புறம் என வருவித்து வல்லெழுத்துக் கொடுத்தொட்டுக.

226 குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி

இது [இஃது] அவ்வீற்றிற் கெய்தியதன் மேற்சிறப்பு விதி கூறுகின்றது, அகரமும் வல்லெழுத்துப் பெறுதலின்.

[இ-ள்] குறியதன் முன்னரும் — குற்றெழுத்தின் முன்னின்ற வாகார வீற்றிற்கும், ஓரெழுத்து மொழிக்கும் — ஓரெழுத் தொரு மொழியாகிய வாகார வீற்றிற்கும், அகரக் கிளவி யறியத் தோன்றும் - நிலைமொழிக் கணகரமாகிய வெழுத்து விளங்கத் தோன்று மென்றவாறு.

உதாரணம் ; பலா அக் கோடு செதிள் தோல் பூ என வும் கா அக்குறை செய்கை தலைபுறம் எனவும்வரும் ஓரெழுத்தொருமொழி யகரம் பெறுதல் சிறுபான்மை யென்றததனைப்பிற்கூறினார். [யென்றற்கு அதனைப் பிற்கூறினாற்]. இது நிலை மொழிச் செய்கையாதலின் [யாதலிற்]பலா அவிலை பலா அநார் என வியல்பு கணத் துங் கொள்க. அறிய வென்றதனா னவ்வகர மீரிடத்தும் பொருந்தின வழிக்கொள்க.

இன்னு மிதனானே அண்ணா அத்தேரி திட்டா அத் துக் குளம் என அத்துக் கொடுத்தும் உவா[அ]த்து ஞான் றுக்கொண்டான்[ஞான்றுங்கொண்டான்]என அத்துஞான் றுங் கொடுத்தும் உவா[அ]த்தாற்கொண்டான் என அத்து

மானுங் கொடுத்தும் இடா(அ)வினுட் கொண்டானென பின்னும் ஏழனுருபுங் கொடுத்துஞ் செய்கை செய்துமுடிக்க

இன்னு மிதனானே மூங்காவின் கால் மூங்காவின்ற லையெனவுருபிற்குச் சென்ற சாரியைப் பொருட்கட் சென் றுழியையுபு வல்லெழுத்துக் கேடுங் கொள்க. [24]

227 இராவென் கிளவிக் ககர மில்லை

இது [இஃது] ஆகாரவீற்றுப் பெயர்க் கொருவழியெய் தியது விலக்குகின்றது.

[இ-ள்] இராவென் கிளவிக்கு இராவென்னு மாகார வீற்றுச் சொல்லிற்கு, அகரமில்லை—முற்கூறிய வகரம் பெறுதலின்றி வல்லெழுத்துப் பெற்று முடியுமென்றவாறு

உதாரணம் : இரா [அ]க் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும் இரா அக்காக்கை இரா அக்கூத்து எனப் பெயரெச்ச மறைப்பொரு டாரா திரா விடத்துக் காக்கை யிராவிடத்துக் கூத்தென வேற்றுமை கருதியவழி இராக் காக்கை, இராக்கூத்துஎன யகரம் பெறாதென்றுணர்க.

228 நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்

இது [இஃது] அகரம் விலக்கி யதிகார வல்லெழுத்தி னோட்டத்து வகுத்தலி னெய்தியதன் மேற் சிறப்புவிதிகூறு கின்றது.

(இ-ள்) நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்— நிலாவென்னுஞ்சொல்லத்துச் சாரியையோடு பொருந்தி முடியுமென்றவாறு.

உதாரணம்: நிலா(அ)த்துக் கொண்டான்சென்றான் தந்தான் போயினான் எனவரும். நிலைமொழித் தொழி

னிலை (தொழிலை) விலக்குமாதலி னத்து வகுப்ப வகரம் வீழ்ந்தது. இதற்கேழனுருபு விரிக்க. நிலா அக்கதிரென் பது வேற்றுமைக் கண்ணு மென்பதனானீற்று வல்லெழுத் துப் பெற்றது நிலாஅ முற்ற மென்ப தொட்டுதற் கொழு கிய வழக்கன்மையி னத்துப் பெறாதாயிற்று ஈண்டு வரு மொழி வரையாது கூறினமையி னிலாத்து (நில்ாஅத்து) ஞான்றானென வியல்பு கணத்துக்கண்ணு மேற்பன கொள்க. (26)

229 யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவு
மாமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே.

இது வருமொழி வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்து வகுத்தலி னெய்தியது. விலக்கிப் பிறுது விதி. (வகுக்கின் றது.)

(இ-ள்) யாமரக் கிளவியும் - யாவென்னு மரத்தை யுணரநின்ற சொல்லும், பிடாவும்-பிடாவென்னுஞ் சொல் லும்தளாவும், தளாவும்-தளாவென்னுஞ்சொல்லும், ஆமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே—ஆகிய வம்மூன்று பெய ரும் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

யாஅங் கோடு பிடா அங்கோடு தளாங்கோடு (தளா அங்கோடு) செதிள் தோள் பூ எனவரும் வருமொழித் தொழிலாகிய மெல்லெழுத்து வகுப்பவே வல்லெழுத்து விலக்கிற்றாம். இதற்கு விலக்காமையி னகரம் பெற்றது. (28)

230 வல்லெழுத்து மிகினு மான மில்லை

இது (இ-ஃது) எய்திய திகந்து படாமற் காத்தது, அக ரத்தோடு மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்தும்பெறு மென்றலின்.

(இ-ள்) வல்லெழுத்து மிகினு மானமில்லை - முற் கூறிய மூன்று பெயர்க்கும் மெல்லெழுத்தே யன்றி வல் லெழுத்து மிக்கு முடியினுங் குற்றமில்லை யென்றவாறு.

உதாரணம் : யாஅக்கோடு பிடாஅக்கோடு தளாஅக் கோடு செதிள் தோல் பூ எனவரும் மானமில்லை என்றத னானிம் மூன்றற்குச் முருபிற்குச் [சென்றுழி] சென்ற சாரியை பொருட்கட் சென்ற வழியியைபு வல்லெழுத்து வீழ்க்க. யாவின்கோடு பிடாவின்கோடு தளாவின்கோடு எனவரும். சாரியை பெறவே யகரம் வீழ்ந்தது.

இன்னுமிதனானேயாத்துக்கோடு(யாஅத்துக்கோடு) பிடாத்துக்கோடு (பிடாஅக்கோடு) தளாத்துக்கோடு.(தளா அத்துக்கோடு என அத்துப் பெறுதலுங் கொள்க. அகர மும் வல்லெழுத்தும் பெறுதலின்.

யாமரக் கிளவி யென்பதனைக் குறியதன் முன்ன ரென்ப தன் பின்வையாததனால் இராவிற் கொண்டான் நிலாவிற் கொண்டான் எனவுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க. (28)

மாமரக் கிளவியு மாவு மாவு
மாமுத பெயரு மவற்றோ ரன்ன
வகரம் வல்லெழுத் தவையவ ணிலையா
னகர மொற்று மாவு மாவும்,

இது (இஃது) எய்தியது விலக்கி யெய்தாத தெய்து வித்தது. இம்மூன்றும் வல்லெழுத்துப் பெறா வென்றலி னெய்தியது விலக்கிற்று மாமரத்திற் ககரமும் ஞநமவென்னு மொற்று மேனையவற்றிற்கு னகரவொற்று மெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) மாமரக் கிளளியு மாவும் மாவு மாமுப் பெயரு மவற்றோ ரன்ன-மாமரமாகிய சொல்லு மாவென்னுஞ் சொல்லும் மாவென்னுஞ் சொல்லுமாகிய வம்மூன்று பெய ரும் யாமர முதலிய மூன்றோடு மொருதன்மையவாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும், ஆவுமாவு மகர மவணி லையா னகர மொற்றும் - அவற்றுளாவு மாவும் புணர்ச்சி யிடத்து அகரம் நிலைபெறாவாய் னகர வொற்றுப்பெற்று முடியும், எனவே அருத்தா பத்தியான் மாமரத்திற் ககர நிலைபெற்று ஙஞநம வொற்றுமாயிற்று, (ஒற்றும் பெறு மாயிற்று, அவை வல்லெழுத் தவணிலையா-அம்மூன்று பெயரு முற்கூறிய வல்லெழுத்துப் புணர்ச்சி யிடத்து நிலைபெறாவாய் வருமென்றவாறு.

அவணிலையா வென்றதனை யிரண்டிடத்துக் கூட்டுக

உதாரணம்:மா அங்கோடு செதிள் தோல் பூ அன் கோடு மான் கோடு செவி தலை புறம் என வரும்.

ஆவு மாவு மவற்றோ ரன்ன வென (என்று) ஞாபக மாகக் கூறியவதனால் மாங் கொண்டான் (மாங் கோ டென அகரமின்றியும் வகரமின்றியும் வரும்).

இனி, அவனென்றதனால் (அவண் என்றதனாற்) காயங் கோடு நுணாங்கோடு. ஆனாங்கோடு என்றாற் போலப் பிறவு மெல்லெழுத்துப் பெறுதலும், அங்காக் கொண்டான் இங்காக் கொண்டான்உங்காக் கொண் - டான் எங்காக்கொண்டான் என விவற்று ளேழாம் வேற் றுமை இடப்பொருளுணர நின்ற விடைச் சொற்கள் வல் லெழுத்துப்பெறுதலும் ஆவின்கோடு மாவின்கோடு எனச் சிறுபான்மையின் பெறுதலும் பெற்றுழி இயைபு வல்லெ ழுத்து வீழ்வுங் கொள்க.

மாட்டேற்றான் மூன்று பெயரும் வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப் பெற்றவாறு மாமரமகரம்பெற்ற வாறு மிச்சூத்திரத்தின் கண்ணழிவாணுணர்க. [29]

232 ஆனொற் றகரமொடு நிலையிட னுடைத்தே.

இது (இஃது) அவற்று ளாவென்பதற் கெய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) ஆனொற்று- ஆவென்னுஞ் சொன்முன்னர்ப் பெற்று நின்ற னகரவொற்று, அகரமொடு நிலையிடனு டைத்தே—அகரத்தோடு கூடிநிற்றலு மிடனுடைத் தென் றவாறு. (நிற்கும் இடனும் உடைத்தென்றவாறு)

இடனுடைத் தென்ற வதனால் வன்கண மொழிந்த கணத்திம் முடிபெனக கொள்க.

உதாரணம் 'ஆனநெய் தெளித்து நான நீவி', ஆன மணி கறங்குங் கானத் தாங்கண் எனவரும். அகர மொடு மென்ற வும்மையான் அகரமின்றி வருதலே பெரும்பான் மை ஆனெய் தெளித்து ஆன்மணி ஆன்வரல் எனவரும். (30)

233 ஆன்முன் வரூஉ மீகார பகரந்
தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே

இது இஃது ஆ னென்பதற் கெய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

(இ-ள்) ஆன் முன் வரூஉ மீகார பகரம்- ஆவென் னுஞ் சொன்முன்னர் வருமொழியாய் வருகின்ற விகாரத் தோடு கூடிய பகரமாகிய மொழி, தான் மிகத் தோன்றி - அப்பகரமாகிய தான்மிக்கு நிற்ப னிலைமொழி னகரத் திற்குக் கேடு தோன்றி, குறுகலு முரித்து - ஈகாரமிகர மாகக் குறுகி நிற்றலு முரித் தென்றவாறு,

உதாரணம் : ஆப்பி என வரும்.

உம்மை யெதிர்மறை யாகலா னான்மீ (ஆன்பீ) என்று மாம். (31)

234 குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே.

இது (இஃது) ஆகார வீற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண் முடிபு கூறுகின்றது.

[இ-ள்] குறியத னிறுதிச் சினைகெட - குற்றெழுத்து னிறுதிக் கணின்ற வாகாரத்தின திரண்டு மாத்திரையிலே யொருமாத்திரை கெட்ட தஃதகரமாய் நிற்க. [குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டு மாத்திரையில் ஒரு மாத்திரை கெட்டு அகரமாய் நிற்க,] உகர மறிய வருதல் செய்யுளு ளுரித்தே—ஆண்டுகரம் புலப்பட வருதல் செய்யுளிடத் துரித் தென்றவாறு.

உதாரணம்:

'இறவுப் புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை.
'புறவுப்புறத்தன்ன புன்காயுகாய்

எனவரும் உகரம் வகுப்பவே நிலைமொழியகரங்கெட்டது அதிகார வல்லெழுத்து விலக்காமையினின்று முடிந்தது. இனி நிலைமொழித் தொழில்வரையாது கூறினமையினியல்பு கணத்திற்கு மிவ்விதி யெய்திற்றாகலி னாண்டு வருமுகரம் புலப்பட வாராமையுங் கொள்க. சுறவுயர்கொடி அரவணி கொடி முழவுற(ழ்)த்தோள் எனவிவை குறியத னிறுதிச் சினைகெட்டு வருமொரு யுயிர்முதன் மொழியாய் வருதலின் வகரவுடம்படு மெய்பெற்றுகரம் பெறாதுமுடிந்தன. இவற்றிற் கிரண்டா முருபு விரித்த [விரிக்க] மூன்றாவதுமாம்.

235 இகர விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே

இது [இஃது] இகர வீற்றுப் பெயர்க்கல்வழி முடிபு தொகைமரபிற் கூறினண்டுவேற்றுமை முடிபு கூறுகின்றது

(இ-ள்) இகர விறுதிப் பெயர்நிலைமுன்னர்-இகரவீற் றுப்பெயர்ச் சொன் முன்ன ரதிகாரத்தாற் கசதப முதன் மொழி வந்துழி, வேற்றுமையாயின் வல்லெழுத்து-மிகுமே வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயிற் றமக்குப் பொருந் தினவல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : கிளிக்கால், சிறகு, தலை, புறம் என வரும் புலி நரி என்றாற் போல்வன வுமவை.

இனிக் கிளிகுறுமை, கிளிக்குறுமை, எனக்குணம் பற்றி வந்த வுறழ்ச்சி முடிபு மேல் வல்லெழுத்து மிகினு மென் னுஞ் சூத்திரத் தொல்வழி யறித லென்றதனாற் கொள்க. (33)

236 இனி யணி யென்னுங் காலையு மிடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டு மன்ன

இது (இஃது) எய்தாத தெய்துவித்தது, இவ்வீற்றி டைச் சொற்கும் வினைச் சொற்கு முடிபு கூறுதலின்.

(இ-ள்) இனியணி யென்னுங் காலையுமிடனும்-இனி யென்று மணியென்னுஞ் சொல்லப்படுகின்ற காலத்தையு மிடத்தையு முணரநின்ற விடைச்சொல்லும், வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டு மன்ன - இவ்வீற்று வினையெச்சமாகிய சொல்லு, மிவ்வீற்றுச் சுட்டாகிய விடைச் சொல்லு முற் கூறியவாறே வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்:இனிக்கொண்டான், அணிக்கொண்டான் தேடிக்கொண்டான் சென்றான், தந்தான், போயினான் எனவும் இக் கொற்றன் சாத்தன், தேவன், பூதன் எனவும் வரும். இவ்விடைச் சொன்மூன்று மிப்பொழுது கொண்டா னணியவிடத்தே கொண்டானிவ்விடத்தே கொண்டாஉவ் விடத்துக் கொற்றனென வுருபின் பொருள்பட வந்தவேற் றுமையாதலின் வேறோதி முடித்தார். (34)

237 இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற விகர முகர மாத
றொன்றியன் மருங்கிற் செய்யுளு ளுரித்தே

இது (இஃது) அவ்வீற்று வினையெச்சத்து ளொன் றற்கு செய்யுண் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி நின்ற விகர முகர மாதல்-இன்றி யென்று சொல்லப்படும் வினை யெச்சக் குறிப்பி னிறுதிக்க ணின்ற விகர முகரமுமாய்த் திரிந்து முடிதல்.

(இன்றி யென்று சொல்லப்படும் வினையெச்சரக் குறிப்பின் இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாகத் திரிந்து முடிதல்) தொன்றியல் மருங்கிற் செய்யுளுளுரித்து - பழக நடந்த கூற்றையுடைய செய்யுளிடத் துரித் தென்றவாறு. செய்யுளுள் உரித்தென்றவாறு)

உதாரணம்: உப்பின்று புற்கை யுண்கமா கொற்கை யோனே என வரும்- நின்ற வென்றதனான் வினையெச் சத்திற்கு முன்னெய்திய வல்லெழுத்து வீழ்க்க.

தொன்றியன் மருங்கி னென்றதனா னன்றி யென்ப தூஞ் (யென்பதூஉஞ்) செய்யுளிடத்திம் முடிபெய்துதல் கொள்க. இடனன்று துறத்தல் வல்லியோரே 'வாளன்று பிடியாவன்க ணாடவர்' 'நாளன்று போகி' எனவரும். இது முற்றியலிகரந் திரிந்து குற்றிய லுகரமாய் நின்றது. (35)

238 சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.

இது (இஃது) இகரவீற்றுச் சுட்டுப் பெயரியல்பு கணத்தோடுமுடியுமாறு கூறுதலினெய்தாததெய்துவித்தது

(இ-ள்) சுட்டி னியற்கை — இகர வீற்றுச் சுட்டின் இயல்பு, முற்கிளந்தற்று - முன்னகர வீற்றுச் சுட்டிற்குக் கூறிய தன்மைத்தா மென்றவாறு.

என்றது 'சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றி' னென் பது முதலிய நான்கு சூத்திரத்தானுங் கூறிய விலக்கணங் களை அவை மென்கணத்து மெல்லெழுத்து மிகுதலு மிடைக்கணத்துமுயிர்க்கணத்தும் வகரம் பெருதலுஞ் செய் யுட்கண் வகரங்கெட்டுச் சுட்டு நீடலுமாம்.

இஞ்ஞாண் நூல் மணி யெனவும், இவ்யாழ் இவ்வட்டு எனவும், இவ்வடை இவ்வாடை இவ்விலை இவ்வீயம் இவ்வுரல் இவ்வூர்தி இவ்வெழு இவ்வேணி இவ்வையம் இவ்வொடு இவ்வோக்கம் இவ்வௌவியம் எனவும் ஈவயி னான எனவும் வரும்.

'ஈகாண் டோன்றுமெஞ் சிறுநல் லூரே'

என்றதுவும்

கள்வனோ வ்வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும்விலைப் பொருட்டாற் கொன்றாறே
யீதொன்று

என்றதுவு மிதுவென்னுஞ் சுட்டுமுத லுகர வீறாதலினது செய்யுளகத்துப் புற நடையான் முடியுமென வுணர்க.(36)

239 பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே

இது (இ-ஃது) இவ்வீற்றல்வழிகளு ளளவுப் பெயரு ளொன்றற்குத் தொகை மரபினு ளெய்திய வேயென்சாரி யை (ஏயென்சாரியை) விலக்கி வேறுமுடிபு கூறுத நுத லிற்று.

[இ-ள்] தூணிக் கிளவி முன்பதக்குவரின் - தூணியா கிய வளவுப் பெயரின் முன்னர்ப் பதக்கென்னு மளவுப் பெ யர் வருமாயின், முதற் கிளந்தெடுத்த வேற்றுமை யியற் றே - முன்பு விதந்தெடுத்த வேற்றுமை முடிபினியல் பிற் றாய் வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: தூணிப் பதக்கு எனவரும். இது [இஃது] உம்மைத் தொகை

வருமொழி முற்கூறியவதனா னடையொடு வந்துழியு மிவ்விதி கொள்க. இருதூணிப் பதக்கு முத்தூணிப்பதக்கு என வொட்டுக. கிளந்தெடுத்த வென்றதனால் தூணிக் கொள்சாமை தோரைபயறு எனப்பொருட்பெயர் முன்வந் துழியும், இருதூணிக்கொள் என அதுதானடை யடுத்த வழியும் தூணித்தூணி தொடித் தொடி காணிக் காணி பூணிப் பூணி எனத் தன்முன்னர்த் தான் வந்துழியு மிவ் விதி கொள்க.

இன்னு மிதனானே தன் முன்னர்த் தான் வந்துழியு மது தானடை யடுத்து வந்துழியு மிக்குச் சாரியை பெறு தலுங் கொள்க. தூணிக்குத் தூணி இரு தூணிக் கிரு தூணி எனவரும். இவற்றுட் பண்புத் தொகையுமுள.

240 உரிவரு காலை நாழிக் கிளவி
யிறுதி யிகர மெய்யொடுங் கெடுமே
டகர மொற்று மாவயி னான

(இதுவுமது)

(இ-ள்) உரிவருகாலை நாழிக்கிளவி- நாழிமுன்ன ருரி வரு மொழியாய் வருங்காலத் தந்தாழி யென்னுஞ் சொல், யிறுதி யிகர மெய்யொடுங் கெடுமே - தன்னிறுதி யினின்ற விகரந்தானேறிய மெய்யொடுங் கெடுமே, ஆவயினான டகர மொற்றும் - அவ்விடத்துகர (அவ்விடத்து டகர) மொற்றாய் வருமென்றவாறு.

உதாரணம் : நாடுரி எனவரும் இது எகாரம் விலக் குண்டது. (இதனான் யகாரமும் விலக்குண்டது)

வருமொழி முற்கூறியவதனான் இருநாடுரி (முந்நா டுரி) எனவு மொட்டுக.

இறுதி யிகரமென முன்னுமோ ரிகர முள்ளது போலக் கூறியவதனா னீண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழிகளாய் நின்று பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க, நாழிக்காயம் உரிக்காயம் சுக்கு தோரை பாளிதம் எனவரும். (38)

241 பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்து மின்னுஞ் சாரியை யாகும்.

இது (இஃது) இவ் வீற்று (இகர வீற்று) வேற்றுமை யுளொன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை பெறுமென வெய்தியதன் மேற்சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) பனியென வரூஉங் கால வேற்றுமைக்கு— பனியென்று சொல்ல வருகின்ற நோயன்றிக் காலத்தை யுணர வேற்றுமை முடிபுடைய பெயர்க்கு, அத்து மின் னுஞ் சாரியை யாகும் - அத்து மின்னுஞ் சாரியையாய் வருமென்றவாறு.

உதாரணம்: பனியத்துக் கொண்டான் பனியிற்கொண் டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

வேற்றுமை யென்றதனா னின்பெற்றுழி யியைபு வல் லெழுத்து வீழ்க்க. (39)

242 வளியென வரூஉம் பூதக் கிளவியு
மவ்விய னிலையல் செவ்வி தென்ப

இதுவுமது

உதாரணம் : புளியங்கோடு செதிள் தோள் பூ என வரும்.

சாரியைப்பேற்றிடைமுன்னின்ற சூத்திரத்தெழுத்துப் பேறு கூறியவதனா லம்முப் பெற்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க. [42]

245 ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே - அம்மரப்பெய ரன்றிச் சுவைப்புளி யுணர நின்ற பெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியுமென்ற வாறு.

உதாரணம் : புளிங்கூழ் சோறு (சாறு) தயிர் பாளிதம் எனவரும். பாற்சோறு (பாளிதம்) இவற்றிற் கிரண்டா முருபு விரிக்க. (43)

246 வல்லெழுத்து மிகினு மான மில்லை
யொல்வழி யறிதல் வழக்க தானத்

இது (இஃது) எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) வல்லெழுத்து மிகினு மானமில்லை—சுவைப் புளி மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியி னுங் குற்றமில்லை, ஒல்வழி யறிதல் வழக்கத்தான் -பொருந்துமிடமறிக வழக்கிடத் தென்றவாறு.

உதாரணம்: புளிக்கூழ்சாறு தயிர் பாளிதம்எனவரும்.

ஒல்வழி யென்றதனாற் புளிச்சாறு போல வேனைய வழக்குப் பயிற்சி யிலவென்று கொள்க.

வழக்கத்தான வென்றதனா னிவ்வீற்று ளெடுத்தோத்து [இவ்வீற்றுக்கண் எடுத்தோத்தும்]இலேசு மின்றி வருவன வெல்லா வற்றிற்கு மேற்குமாறு செய்கை யறிந்து முடித்துக் கொள்க. அவை யின்னினிக் கொண்டான் அண்ணணிக்கொண்டான் என்பன அடையடுத்தலி 'னினி யணி' யென்ற வழி முடியாவாய் வல்லெழுத்துப் பெற்றன. கப்பி தந்தை [சென்னி தந்தை] எனமுடிந்தது என்பனஅஃறிணை விரவுப் பெயர்] [என்பதனுள் இயல்பெய்தாதுஈண்டு வருமொழித் தகர அகரங் கெட்டுக் கப்பிந்தை சென்னிந்தை என முடிந்தது]

கூதாளி கணவிரி என்பனவற்றிற் கம்முக்கொடுத்தி கரங் கெடுத்துக்கூதாளங் கோடு கணவிரங் கோடு செதிள் தோல் பூ என முடிக்க. 'கூதள நறும்பூ' எனக் குறைந்தும் வரும்.]இனியிவை மகரவீறாகியும் வழங்கும்.அது 'வெண் கூதாளத்துத் தண்பூங் கோதையர்' என அத்துப்பெற்று மகரங் கெட்டும் 'கணவிரமாலை யிடூஉக் கழிந்தன்ன' வென மகரங் கெட்டு நிற்கும். கணவிரங் கோடென மெல்லெழுத்துப் பெற்றும் நிற்கும்.

கட்டி என நிறுத்தி இடி அகல் எனத் தந்து டகரத்தி லிகரங் கெடுத்து கட்டிடி கட்டகல் எனகுச்டிக்க. பருத்திக் சென்றான் என யீற்று வல்லெழுத்து மிக்குங் கொடுத்து முடிக்க. துளியத்துக் கொண்டான் துளியிற் கொண்டான் என அத்து மின்னுங் கொடுத்து முடிக்க. புளியங்காய் [புளிக்காய்] வேட்கைத் தன்றெனவும் புளிம்பழ மெனவு மம்முப் பெறாது மெல்லெழுத்துப் பெற்று முடிதலுங் கொள்க. இன்னுமிதனானே யுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்துக் கெடுத்துக் கிளியின் கால் புளியின் கோடு உதியின்கோடு என முடிக்க. (44)

247 ஈண்முற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக
கானிடை வருத லையமின்றே

இது (இஃது) இகர வீற்று (ஈற்று) வல்லெழுத்து விலக்கி யான் (ஆன்) சாரியை வகுக்கின்றது.

(இ-ள்) நாண் முற்றோன்றுந் தொழினிலைக் கிள விக்கு-யிகரவீற்று (இகர ஈற்று) நாட்பெயர்களின் முன் னர்த் தோன்றுந் தொழிற் சொற்கு, ஆனிடை வருதலை யமின்று - ஆன் சாரியை யிடைவந்து முடிதலையமின் றென்றவாறு.

உதாரணம் : பரணியாற் கொண்டான் சோதியாற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும் ஐயமின்றென்றதனா லியைபு வல்லெழுத்துவீழ்க்க. இதற் குக் கண்ணென்னு முருபு விரிக்க (கண்ணென் உருபு விரிக்க) (45)

248 திங்கண் முன்வரி னிக்கே சாரியை

இது (இஃது) இயல்பு வல்லெழுத்தினோடிக்கு வகுத் தலினெய்தியதன்மேற் சிறப்பு விதிவகுத்தது.

(இ-ள்) திங்கண் முன்வரி னிக்கேசாரியை—திங்களை யுணரநின்ற விகரவீற்றுப் பெயர்களின் முன்னர்த் தொழி னிலைக் கிளவிவரின் வருஞ்சாரியை இக்குச்சாரியையா மென்றவாறு.

உதாரணம் : ஆடிக்குக் கொண்டான் சென்றான் தந் தான் போயினான் என இயைபுவல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. இதற்குங் கண்ணென்னு முருபு விரிக்க. (46)

249 ஈகார விறுதி யாகார வியற்றே.

இது (இஃது) ஈகார வீற்றுப் பெயரல் வழிக்கண் முடியு மாறு கூறுகின்றது

(இ-ள்) ஈகார விறுதியாகார வியற்று—ஈகார வீற்றுப் பெயரல் வழிக்கண் ஆகார வீற்றல் வழியி னியல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி (அவ்) வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம் : ஈர்க்கடிது (ஈக்கடிது) தீக்கடிது சிறது தீது பெரிது எனவரும். (47)

250 நீயென் பெயரு மிடக்கர்ப் பெயரு
மீயென மரீஇய விடம்வரை கிளவியு
மாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்

இது (இது (இஃது) எய்தியது விலக்கலு மெய்தாத தெய்து வித்தலுங் கூறுகின்றது.

[இ-ள்] நீயென் பெயரு மிடக்கர்ப் பெயரும்-நீயென்னும் பெயரு மிடக்கர்ப் பெயருமாகிய பகரவீகார வீற்றுப் பெயரும், மீயென மரீஇய இடம்வரை கிளவியும்—மீயென்று சொல்ல மருவாய் வழங்கின வோரிடத்தினை [ஓரிடத்தை]வரைந்துணர்த்துஞ் சொல்லும், ஆவயின் வல் லெழுத்தியற்கை யாகும் புணருமிடத்து முற்கூறிய வல் லெழுத்துப் பெறாதியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : நீகுழியை சிறியை தீயை பெரியை எனவும் பீகுறிது சிறிது தீது பெரிதுஎனவும் இவையிற்றுக்கும் பொதுவானெய்திய வல்லெழுத்து விலக்குண்டன. மீகண் செவிதலை புறம் இது விலக்கணத்தோடு பொருந்திய மருவாதலி னெய்தாத தெய்துவித்தது.

நீயென்ப தஃறிணை விரவுப் பெயருளடங்காதோ வெனின் மேனின்கையெனத் திரிந்து முடிதலினடங்காதா யிற்று. மீகண்னென்பது மேலிடத்துக் கண்ணென வேற்றுமை யெனினு மியல்புபற்றி யுடன் கூறினார். [48]

251 இடம்வரைக் கிளவிமுன், வல்லெழுத்து மிகூஉ
முடனிலை மொழியு முளவென மொழிப

இது வல்லெழுத்துமிகுக வென்றலி னெய்திய திகந்து படாமற காத்தது.

[இ-ள்) இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்—இடத்தைவரைத் துணர்த்தும் மீயென்னுஞ் சொல்லின் முன்னியல்பாய் முடிதலே யன்றிவல்லெழுத்து மிக்கு முடியும், உடனிலை மொழியு முளவென மொழிப - தம்மிலோசையியையந்து நிற்றலை யுடைய மொழிகளுஞ் சிலவு முளவென்று கூறுவ ராசிரிய ரென்றவாறு.

உதாரணம் : மீக்கோள் மீப்பா [மீப்பல்] எனவரும். உடனிலை யென்றதனான் மீங்குழி மீந்தோல் என மெல்லெழுத்துப் பெற்று முடிவனவுங் கொள்க. (49)

252 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இது [இ-ள்] ஈகார வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

[இ-ள்] வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே-ஈகார விற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணு மாகார வீற்றல்வழி போல வல்லெழுத்து வந்துழி [அவ்] வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம் : ஈக்கால் சிறகு தலைபுறம். தீக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். (50)

253 நீயெ னொருபெய ருருபிய நிலையு
மாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இது [இஃது]எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தது வல்லெழுத்து விலக்கி னகரவொற்றே பெறுக வென்றலின்.

[இ-ள்]நீயெ னொருபெய ருருபிய னிலையும்-நீயென நின்ற வோரெழுத் தொருமொழி யுருபு புணர்ச்சிக் கண்ணொடு முதல் குறுகி னகர மொற்றி னின்றாற் போல

வீண்டுப்பொருட் புணர்ச்சிக்கண்ணும் முடியும், ஆவயின் வல்லெழுத்தியற்கையாகும் — அவ்வாறு முடிபுழி யியையு வல்லெழுத்து மிகாவென்றவாறு-

உதாரணம் : நின்கை செவி தலை புறம் எனவரும்.

இது ஈகாரவீறிகரவீறா யிகரவீறு னகரவீறாய்நின்று ழியும் நீயெனொருபெய ரென்றலிற் றிரிந்ததன் றிரிபது வேயாயிற்று. இயற்கையாகு மெனவே நிலைமொழித் தொழிலதிகார வல்லெழுத்தை விலக்காதாயிற்று. (57)

254 உகர விறுதி யகர வியற்றே.

இது (இஃது) உகர வீற்றுப் பெய ரல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) உகர விறுதி யகர வியற்றே—உகரவீற்றுப் பெயர் அல்வழிக்கணகர வீற்றியல் பிற்றாய் அவ்வல்லெழுத்து வந்துழி (அவ்வல்லெழுத்து) மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம் கடுக்குறுது சிறிது தீது பெரிதுஎனவரும்

255 சுட்டின் முன்னரு மத்தொழிற் றாகும்

இது (இஃது) உகர வீற்றுச் சுட்டு வன்கணத்தோடு முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டின் முன்னரு மத்தொழிற்றாகும்—உகர வீற்றுச் சுட்டின் முன்னரும் வல்லெழுத்து வந்துழி (அவ்) வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம் : உக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எளவரும். (53)

256 ஏனவை வரினே மேனிலை யியல

இது (இஃது) உகர வீற்றுச் சுட்டொழிந்த கணங்க ளோடு முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஏனவை வரினே—உகரவீற்றுச் சுட்டின் முன் வல்லெழுத் தல்லாத மென்கணம் முதலிய மூன்றும் வரின், மேனிலை இயல—அகர வீற்றுச் சுட்டு முடிந்தாற் போல ஞநமத் தோன்றி னொற்று மிக்கும் யவ்வரினும் முயிர் வரினும் வகரமொற்றியுஞ் செய்யுளி னீண்டு முடியு மென்றவாறு.

உதாரணம் : உஞ்ஞாண் நூல் மணி எனவும், உவ் யாழ் உவ்வட்டு எனவும் உவ்வடை உவ்வாடை எனவும் ஊவயினான எனவும் வரும். (54)

257 சுட்டுமுத லிறுதி யியல்பா கும்மே

இது (இஃது) அவ்வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெ ழுத்து விலக்கி யியல்பு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டுமுதலிறுதி—சுட்டெழுத்தினை முதலாக வுடைய வுகர வீற்றுப்பெயர், இயல்பாகும்—முற்கூறிய வல்லெழுத்து மிகா தியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : அதுகுறிது இதுகுறிது உதுகுறிது சிறிது தீது பெரிது எனவரும்.

முற்கூறியவை சுட்டுமாத்திரை, இவை சுட்டுப்பெய ராகவுணர்க. (55)

258 அன்றுவரு காலை யாவா குதலு
மைவரு கரலை மெய்வரைந்து கெடுதலுஞ்
செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப

இது (இஃது) இவ்வீற்றுச் சுட்டு முதற்பெயர்க்கோர் செய் யுண் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) அன்றுவருகாலை யாவாகுதலும்-அதிகாரத் தானின்ற சுட்டுமுத லுகரவீற்றின் முன்னர் அன்றென் னும் வினைக்குறிப்புச் சொல் வருங்காலத்தத் தகர வொற் றின் (வருங்காலத்து அத்தகர வொற்றின்) மேலேறி நின் ற வுகரமாகாரமாய்த் திரிந்து முடிதலும், ஐவருகாலை மெய்வரைந்து கெடுதலும்—அதன் முன்னரையென்னுஞ் (ஐயென்னுஞ்) சாரிபை வருங்காலத்து அத்தகரவொற்று நின்றேறிய (தகர வொற்று நிற்க அதன்மேல் ஏறிய) உகரங் கெடுதலும், செய்யுண் மருங்கி னுரித்தென மொழிப -செய்யுட்கண் ணுரித்தென்று கூறுவராசிரிய ரென்றவாறு

உதாரணம்: அதா அன்றம்ம இதா அன்றம்ம உதா அன்றம்ம எனவும் (அதா அன்றென்ப வெண்பா யாப்பே எனவும், அதைமற்றம்ம இதைமற்றம்ம உதைமற்றம்ம எனவும் வரும்.

மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் முடியாத தனை முட்டின்றிமுடித்த லென்பதனால் அதன்றுஇதன்று உதன்று எனவன்றென்பதன் முன்னு முகரங் கெட்டுத் தகர வொற்று நிற்றல்கொள்க. (56)

259 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இது (இஃது) இவ்வீற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணும்—உகர வீற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கண்ணும். அதனோரற்று அகர வீற்றல் வழியோ டொரு தன்மைத்தாய் வல்லெ ழுத்துவந்துழி (அவ்) வல்லெழுத்து மிக்கு முடியுமென் றவாறு.

உதாரணம்: கடுக்காய் செதிள் தோல் பூ எனவும் கடுக்கடுமை எனவும் வரும். (57)

260 எருவுஞ் செருவு மம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
யம்மின் மகரஞ் செருவயிற் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத்தியற்கை

இது (இஃது) அவ்வீற்றுளொன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை விதியு மொன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை விதியுஞ்சாரியை பெறாதவழி வல்லெழுத்து மெல் லெழுத்துப் பேறுங் கூறுகின்றது.

(இ-ள்) எருவுஞ் செருவு மம்மொடு சிவணி—எருவென் னுஞ் சொல்லுஞ் செருவென்னுஞ் சொல்லு மம்முச் சாரி யை யோடு பொருந்தி, திரிபிட னுடைய தெரியுங்காலை-அதிகார வல்லெழுத்துப் பெறாமற் றிரியுமிடனுடைய வா ராயுங் காலத்து, அம்மின் மகரஞ் செருவயிற் கெடுமே— ஆண் டம்முச் சாரியை யினதீற்றின் மகரஞ் செருவென் னுஞ் சொல்லிடத்துக் கெட்டுமுடியும், வல்லெழுத்து மிகூ உம்-ஆண்டுச் செருவின்கண்வல்லெழுத்து மிக்கு முடியும், இயற்கைத் தம்மொற்று-மிகூஉம் அம்முப்பெறாதவழி யிரண்டிற்குந் தமக்கினமாகிய மெல்லொற்றும் வல் லொற்று(வல்லொற்றும் மெல்லொற்று) மிக்குமுடியு மென் றவாறு.

உதாரணம்: எருவென நிறுத்திக்குழி சேறு தாது பூமி எனத்தந்திடை யம்முக் கொடுத்து 'அம்மி னிறுதிக் கசதக் காலை யென்பதனால் எருவங் குழி (சேறு தாது பூழி) யென முடிக்க. ஏனையவுமன்ன செருவென நிறுத்திக் களம் சேனைதானை பறை யெனத்தந்திடை யம்முக் கொடுத்து மகரங் கெடுத்து வல்லெழுத்துக் கொடுத்துச் செருவக்கள மென முடிக்க (செருவக்களம் சேனை தானை பறையென முடிக்க). ஏனையவுமன்ன இனியம்முப் பெறாதவழிஎருக் குழி எருங்குழி எனமெல்லெழுத்தும் வல்லெழுத்துங் கொ டுத்துமுடிக்க (வல்லெழுத்து மெல்லெழுத்துங் கொடுத்து முடிக்க). இனிச் செருவிற்கு ஏற்புழிக் கோடலென்பத

னாற் செருக்களமென வல்லெழுத்தே கொடுத்து முடிக்க தெரியுங்காலை யென்றதனானே எருவின் குறுமை செரு வின் கடுமை எனவுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி வல்லெழுத்து வீழ்தலு மெருவஞாற்சி (எருவ ஞாற்சி) செருவஞாற்சி யெனவியல்பு கணத்துக் கம்முப் பெறுதலுங் கொள்க) [கணத்துக்கண் அம்முப்பெருதலுங் கொள்க. மகரம் மென்மைபு மிடைமையு மென்பதனாற் கொள்க

தம்மொற்று மிகூஉமென வுடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தலி னுகரநீட [உகரம்நீட வருதலுங்] வரு தல் கொள்க. வரும் தரும் படும் [வருஉம் தருஉம் படூஉம் எனவரும் [58]

261 ழகர வுகர நீடிட னுடைத்தே
யுகரம் வருத லாவயி னான

இது [இஃது] எய்தியதன்மேற் சிறப்பு விதி வகுத்தது வல்லெழுத்தினோ டுகரம் பெறுதலின்.

[இ-ன்] ழகர வுகர நீடிட னுடைத்தே—உகரவீற்றுச் சொற்களுள் ழகரத்தோடு கூடிய உகரவீற்றுச் சொன் னீண்டு முடியு மிடனுடைத்து, ஆவயினான வுகரம் வரு தல் - அவ்விடத் துகரம் வந்துமுடியு மென்றவாறு.

உதாரணம் : எழூஉக்கதவு சிறை தானை படை என வரும்.

நீடிட னுடைத்தென்றதனா னீளாது முகரம் பெறா தும் வருமாயிற்று. குழத் தோற்றம் எனவரும்,

இன்னு மிதனாற் பழூஉக்காய் [பழக்காய்] என அல் வழிக் கண்ணு மிவ்விதி யின்றி வருதல் கொள்க.

ஆவயினானவென்றதனாற்பெரும்பான்மை செய்யுட்க ணீண்டுகரம் வருமென்று கொள்க, [நீண்டுஉகரம் பெற்று]

'எழூஉத் தாங்கிய கதவு மலைத்தவர்'
குழூஉக் களிற்றுக் குறும் புடைத்தலின்

எனவும்

பழூஉப்பல்லன்ன பருவுகிர்ப் பாவடி (59)

எனவும் வருதல்கொள்க.

262 ஒடுமரக் கிளவி யுதிமர வியற்றே

இது (இஃது) அவ்வீற்று மரப்பெயரு ளொன்றற்கு வல்லெழுத்துவிலக்கி மெல்லெழுத்து விதித்தது.

[இ-ள்] ஒடுமரக் கிளவி—ஒடுவென்னும் மரத்தினை யுணரநின்ற சொல், உதிமர வியற்றே-உதியென்னும் மரத்தினியல்பிற்றாய் மெல்லெழுத்துப்பெற்று முடியுமென் றவாறு.

உதாரணம்: ஒடுங்கோடு செதிள் தோல் பூ எனவரும் மரமென்றா ரொடு வென்னும் நோயை நீக்குதற்கு.

முன்ன ருதிமரத்தின் பின்ன ரம்முப் பெறுகின்ற புளி மரம் வைத்த விலையபானிதற் கம்முப் பேறுங் கொள்க.

ஒடுவங்கோடு எனவரும். (60)

263 சுட்டுமுத லிறுதி யுருபிய னிலையு
மொற்றிடை மிகா அ வல்லெழுத்தியற்கை.

இது(இஃது) சுட்டுப்பெயர்க்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தது.

(இ-ள்) சுட்டு முதலிறுதி யுருபிய னிலையும்—சுட் டெழுத்தினை முதலாகவுடைய வுகர வீற்றுச் சொற்கள் பொருட் புணர்ச்சிக் கண்ணு முருபு புணர்ச்சியிற் கூறிய வியல்பிலே நின்றன் சாரியை பெற்றுகரங் கெட்டு முடியும்

வல்லெழுத்தியற்கை யொற்றிடை மிகாஅ—வல்லெழுத்தி யற்கையாகிய யொற்றிடைக்கண் மிகாவென்றவாறு.

உதாரணம்: அதன்கோடு இதன்கோடு உதன்கோடு செதிள் தோல் பூ எனவரும் ஒற்றிடை மிகாவெனவே சாரி யை வகுப்ப வல்லெழுத்து வீழாவென்பது பெற்றாம்.

வல்லெழுத் தியற்கை யென்றதனா னுகரவீற்றெரு வுஞ் செருவு (உகர ஈற்றுள் எருவுஞ் செருவு) மொழித் தே னையவற்றிற் குருபிற்குச் சென்ற சாரியைப் பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க. கடிவின்குறை ஒடி வின் குறை எழுவின்புறம் கொழுவின்கூர்மை எனவரும். இன்னுமிதனானே உதுக்காணென்றவழி வல்லெழுத்து மிகுதலுங் கொள்க. (61)

264 ஊகார விறுதி யாகார வியற்றே

இது நிறுத்த முறையானே ஊகார வீற்றல் வழிக்கட் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஊகார விறுதி யாகார வியற்றே—ஊகார வீற்றுப்பெய ரல்வழிக்க ணாகாரவீற்றல் வழியினியல் பிற் றாய் வல்லெழுத்து வந்துழி (அவ்) வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: கழுக்கடிது (கழூஉக்கடிது) கொண்மூக் கடிது சிறிது தீது பெரிது எனவரும். (62)

265 வினையெஞ்சு கிளவிக்கு முன்னிலை மொழிக்கு நினையுங் காலை யவ்வகை வரையார்

இது (இஃது) இவ்வீற்று வினையெச்சத்திற்கு மிக்கு முடியு மென்றலி னெய்தாத தெய்து வித்தது எய்தாத தெய்து வித்த தூஉம்) முன்னிலை வினைக்கியல்பு முறழ் பும் மாற்றுதலி னெய்தியது விலக்கியதா (விலக்கியதூஉம்) நுதலிற்றாம்.

(இ-ள்) வினையெஞ்சு கிளவிக்கும்—ஊகார வீற்று வினையெச்சமாகிய சொற்கும், முன்னிலை மொழிக்கும் -முன்னிலை வினைச்சொற்கும், நினையுங்காலை யவ் வகை வரையார் - ஆராயுங் காலத் தவ்வல்லெழுத்து மிக் குமுடியுங் கூற்றினை நீக்கா றென்றவாறு.

உதாரணம்: உண்ணூக்கொண்டான் சென்றான் தந் தான் போயினான் எனவும், கைதூக் கொற்றா சாத்தா தேவா பூதா எனவும் வரும்.

நினையுங் காலை யென்றதனா னிவ்வீற்றுயர் திணைப் பெயர்க்கு மல்வழிக்கண் வல்லெழுத்துக் கொடுத் து முடிக்க. ஆடூஉக் குறியன் மகடூஉக்குறியள் எனவரும். உயர்திணைப் பெயரெடுத்தோதிமுடிப்பாராதலி னம்முடிபு பெறாமையி னீற்றுப் பொதுவிதியான் முடியாதிலேசான் முடித்தாம். (63)

266 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே

இது ஊகார வீறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறு கின்றது.

[இ-ள்] வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே- ஊகார வீறுவேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணு மாகாரவீற் றல்வழி போல வல்லெழுத்து வந்துழி வல்லெ ழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: கழுக் கடுமை (கழுஉக்க்டுமை) சிறுமை தீமை பெருமை கொண் மூக்குழாம் செலவு தோற்றம் பறைவு எனவரும். (64)

267 குற்றெழுத் திம்பரு மோரெழுத்து மொழிக்கு நிற்றல் வேண்டு முகரக் கிளவி.

இது (இஃது) இயைபு வல்லெழுத்தினோ டுகரம்வகுத் தலினெய்தியதன் மேற் சிறப்புவிதி. (கூறுகின்றது)

[இ-ள்] குற்றெழுத் திம்பரும்—குற்றெழுத்தின் பின் வந்த வூகார வீற்று மொழிக்கும், ஓரெழுத்து மொழிக்கும்- ஓரெழுத்தொரு மொழியாகிய வூகார வீற்று மொழிக்கும், உகரக் கிளவி நிற்றல் வேண்டும்—உகரமாகிய வெழுத்து நிற்றலை விரும்பு மாசிரியரென்றவாறு.

உதாரணம்: உடூஉக்குறை செய்கை தலை புறம்(என வும்) தூஉக்குறை செய்கை தலை புறம் எனவும் வரும்.

நிற்ற லென்றதனா னுயர்திணைப் பெயர்க்கும் வல் லெழுத்து முகரமுங் கொடுக்க. ஆடூஉக்கை மகடூஉக்கை செவி தலை புறம் என [வரும்]. இவை தொகை மரபினு ளியல்பாத லெய்தியவற்றை யீண்டிரு வழிக் கண்ணும் முடித்தா ரீற்றுப் பொது வொப்புமை கண்டு. [65]

268 பூவெ னொருபெய ராயியல் பின்றே
யாவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே

இது [இஃது ஊகார] அவ்வீற்று ளொன்றற் குகரமு மியைபு வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல் லெழுத்தும் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறுமெனவெய் தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

[இ-ள்] பூவெ னொரு பெயராயியல் பின்றே—பூ வென்னு மூகார வீற்றையுடைய வொருபெயர் முற்கூறிய உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியு மவ்வியல் பின் மையை யுடைத்து, ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித் தே-அவ்விடத்து மெல்லெழுத்து மிக்கு முடிதலே யன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலு முரித்தென்றவாறு.

உதாரணம்:பூங்கொடி சோலை தாமம் பந்து எனவும் பூக்கொடி செய்கை தாமம் பந்து எனவும் வரும்.

பூவென்பது பொலிவென்னும் வினைக் குறிப்பினை யுணர்த்தாது நிற்றற்[கொரு] பெயரென்றார். [66]

269 ஊவெ னொருபெய ராவொடு சிவணும்

இது [இஃது] எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது,உகரமும் வல்லெழுத்தும் விலக்கி னகரம் விதித்தலின்

[இ-ள்] ஊவெ னொருபெயர்—ஊவெனத் தசையை யுணர்த்தி நின்ற வோரெழுத் தொருமொழி, ஆவொடு சிவணும் - ஆகார வீற்றிலா வென்னுஞ்சொல் வல்லெழுத்துப் பெறாது னகரவொற்றுப் பெற்று முடிந்தாற் போல னகர வொற்றுப் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : ஊவென நிறுத்தி னகரவொற்றுக் கொடுத்து ஊன்குறை செய்கை தலை புறம் என முடிக்க. ஊவெனத் தசையை யுணர்த்தி நின்ற [ஊவென்பது தசையை உணர்த்தி நின்ற] வழக்காசிரியர் நூல் செய்த காலத்து வழக்கு. அன்றித் தேயவழக்கேனு முணர்க. [67]

270 அக்கென் சாரியை பெறுதலு முரித்தே
தக்கவழி யறிதல் வழக்கத் தான

இது [இஃது] எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

[இ-ள்] அக்கென் சாரியை பெறுதலு முரித்தே- அதிகாரத்தானின்ற ஊவென்னும் பெயர் முற்கூறிய னகரத்தோடக்கென்னும் சாரியைபெற்று முடிதலு முரித்து, வழக்கத்தான தக்கவழி யறிதல் - அம்முடிபு வழக்கிடத்துத் தக்கவிட மறிக வென்றவாறு.

தக்க வழி யறித லென்றதனாற் சாரியை பெற்றுழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன் மாட்டேற்றால் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலுங் கொள்க.

உதாரணம் : ஊனக்குறை செய்கை தலைபுறம் என வரும்.

வழக்கத்தான வென்றதனா லுகார வீற்றுச் சொல்விற் குருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழியியைபு வல்லெழுத்துக் கெடுக்க. கொண்மூவின் குழாம் உடூஉவின்றலை ஊவின்குறை எனவரும். [68]

271 ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கு
மின்னிடை வரினு மான மில்லை

இது 'குற்றெழுத் திம்பரு'மென்பதனுள் நிற்றலென்ற விலைசா [விலேசா] னெய்திய வல்லெழுத்தேயன்றிச் சாரியை யிடையே வரினுங் குற்றமில்லை யென்றவாறு.

[இ-ள்] ஆடூஉ மகடூஉ வாயிரு பெயர்க்கு-ஆடூஉ மகடூஉ வாகிய வுயர்திணைப் பெயரிரண்டிற்கும், இன்னிடைவரினு மானமில்லை - முன்னெய்திய வல்லெழுத்தேயன்றியின் சாரியை யிடையே வரினுங் குற்றமில்லை யென்றவாறு.

உதாரணம்: ஆடூஉவின்கை மகடூஉவின்கை செவி தலை புறம் என வரும்.

மானமில்லை யென்றதனா னின்பெற்றுழி மேலெய்திய வல்லெழுத்து வீழ்க்க. [69]

272 எகர வொகரம் பெயர்க்கீ றாக
முன்னிலை மொழிய வென்மனார் புலவர்
தேற்றமுஞ் சிறப்பு மல்வழி யான்.

இது [இஃது] எகர ஒகர மீறாமிட முணர்த்துகின்றது

(இ-ள்) தேற்றமுஞ் சிறப்பு மல்வழியான - தெளிவு பொருளுஞ் சிறப்புப் பொருளு மல்லாத வேற்றுமைப் பொருண்மையிடத் தளபெடுத்துக் கூறுதலி னுளவாகிய எகர வொகரம் பெயர்க்கீ றாக - எகர ஒகரங்கள் பெயர்க் கீறாய் வாரா, வினைக்கீறாய் வரும், முன்னிலை மொழிய வென்மனார் புலவர்-அவைதாந் தன்மையினும் படர்க்கை யினும் வாராது, முன்னிலைச் சொல்லிடத்தன வாமென்று கூறுவர் புலவரென்றவாறு.

எனவே, தெளிவு பொருளினுஞ் சிறப்புப் பொருளினும் வந்து பெயர்க்கீறா மிடைச் சொல்லாகிய எகர ஒகரம் மூன்றிடத்திற்கு முரியவா மென்றே பொருளாயிற்று. என இங்ஙன மருத்தா பத்தியாற் கொண்டதற் கிலக்கணம் மேலைச் சூத்திரத்தாற் கூறுப.

உதாரணம்: ஏ எக்கொற்றா ஓ ஒக்கொற்றா சாத்தா தேவா பூதா எனவரும்.

இவை யெனக்கொரு கருமம் பணி யெனவு மிங்ஙனஞ் செய்கின்றதனை யொழியெனவும் முன்னிலை யேவற் பொருட்டாய் வந்தன. இதற்கு வல்லெழுத்துப் பெறு மாறு மேலே கூறுப. (70)

273 தேற்ற வெகரமுஞ் சிறப்பி னொவ்வு மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா

இது (இஃது) எய்திய திகந்து படாமற் காத்தெய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) தேற்ற வெகரமுஞ் சிறப்பி னொவ்வு மேற் கூறியற்கை-முன்ன ரருத்தா பத்தியாற் பெயர்க்கண் வரு மென்ற தேற்றப் பொருண்மையி லெகரமுஞ் சிறப்புப் பொருண்மையிலொகரமும்மூன்றிடத்தும்வருமென்றவிலக் கணத்தனவாம் வல்லெழுத்து மிகா வல்லெழுத்து மிக்கு

முடியா வெனவே முன்னிலைக்கண் வருமென்றே எகர ஒகரம் (ஒகரங்கள்) வல்லெழுந்து மிக்கு முடியுமென்றவாறு

உதாரணம்: யானே எ கொண்டேன் நீயே எ கொண்டாய் அவனே எ கொண்டான் எனவும், யானோ ஒகொடியன் நீயோ ஒ கொடியை அவனோ ஒ கொடியன் எனவும் பெயர்க் கணீறாயியல்பாய் வந்தவாறுணர்க. (வந்தவாறு காண்க) இது முன்னரெய்திய விலக்கண மிகவாமற் காத்தார். முன்னின்ற சூத்திரத்தின் முன்னிலைக்கும் வல்லெழுந்து மிகுத்தெய்தாத தெய்துவித்தார். இச் சூத்திரத்திற் களபெடுத்தல் 'தெளிவினேவு' ('தெளிவினேயும்') மென்னுஞ் சூத்திரத்தாற் கொள்க. எனவே, முடிவுபெற்றுழி இங்ஙன மிடைச்சொல்லு மெடுத் தோதிப் புணர்ப்ப ரென்பதூஉம் பெற்றாம். (71)

274 ஏகார விறுதி யூகார வியற்றே.

இது (இஃது) நிறுத்த முறையானே ஏகார வீறல் வழிக்கட் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஏகார விறுதி-ஏகார வீற்றுப் பெயரல் வழிக் கண். ஊகாரவியற்று-உகார வீற்றல் வழியி னியல்பிற் றாய் வல்லெழுந்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்: ஏக்கடிது, சேக்கடிது, சிறிது, தீது, பெரி தென வரும். (72)

275 மாறுகோ ளெச்சமும் வினாவு மெண்ணுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இது (இஃது) இடைச் சொற்களியல்பாய்ப் புணர்க வென வெய்தாத தெய்து வித்தது.

(இ-ற்) மாறுகோ ளெச்சமும்-மாறுகோடலையுடைய வெச்சப் பொருண்மைக்கண் வருமேகார வீற்றிடைச்சொல்

லும், வினாவும்—வினாப் பொருண்மைக்கண் வருமேகார வீற்றிடைச் சொல்லும், எண்ணும்—பொருண்மைக் கண் வரு மேகார வீற்றிடைச் சொல்லும், கூறிய வல்லெழுத் தியற்கை யாகும் — முற்கூறிய வல்லெழுத்துப் பெறா தியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம்: யானே கொண்டேன் சென்றேன் தந் தேன் போயினேன் யென்புழி யான் கொண்டிலேனென மாறுகொண்ட வொழிபுபட நின்றது. நீயே கொண்டாய் சென்றாய் தந்தாய் போயினாய் எனவும், நிலனே நீரே தீயே வளியே கொற்றனே சாத்தனே எனவும் வரும்.

கூறிய வென்றதனாற் பிரிநிலை யேகாரமு மீற்ற சை ஏகாரமு மியல்பாய் முடிதல் கொள்க. அவருளிவனே கொண்டானெனவும், 'கழியே', சிறுகுரனெய்தலொடு பாடோவாதே-கடலே, பாடெழந் தொலிக்கும் எனவும் வரும். (73)

276 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே.

இது (இஃது) இவ்வீற்று வேற்றுமை முடிபு கூறுகின் றது.

(இ-ள்) வேற்றுமைக் கண்ணும்-ஏகாரவீற்று வேற்று மைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும், அதனோரற்று-ஊகார வீற்றல்வழி போல வல்லெழுத்து வந்துழி யவ்வல்லெ ழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் : ஏக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும், வேக்குடம் சாடி தூதை பானை யெனவும் வரும். வேக்குடம் வேதலை யுடைய குடமென விரியும். (74)

277 ஏயெ னிறுதிக் கெகரம் வருமே.

இது வல்லெழுத்தினோ டெகரம் விதித்தலி னெய்திய தன் மேற் சிறப்புவிதி (கூறுகின்றது)

(இ-ள்) ஏயெனிறுதிக் கெகரம் வருமே - அவ்வேற்று மைக்கண்ணேவென்னு மிறுதிக் கெகரம்வருமென்றவாறு.

உதாரணம் : ஏ எக்கொட்டில் சாலை துளை புழை என வரும்.

வருமொழி வரையாது கூறினமையி னியல்பு கணத்துக் கண்ணும் வருவன கொள்க. ஏ எஞெகிழ்ச்சி நெடுமை (நேர்மை) யெனவரும். உரையிற் கோடலானெகர மேற்புழிக் கொள்க. (75)

278 சேவென் மரப்பெய ரொடுமர வியற்றே

இது (இஃது) அவ்வீற்று ளொன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

(இ-ள்) சேவென்னும் மரப்பெயர் - பெற்றமன்றிச் சேவென்னும் மரத்தினை யுணரநின்றபெயர், ஒடுமரவியற்றே-ஒடுமரம் போல மெல்லெழுத்து மிக்குமுடியு மென்றவாறு.

உதாரணம் : சேங்கோடு செதிள் தோல் பூளனவரும். (76)

279 பெற்ற மாயின் முற்றவின் வேண்டும்.

இது (இஃது) இயைபு வல்லெழுத்து விலக்கி யின் வகுத்தது.

(இ-ள்) பெற்ற மாயின் - முற்கூறிய சேவென்பது பெற்றத்தினை யுணர்த்திய பொழுதாயின், முற்றவின் வேண்டும் - முடிய வின்சாரியை பெற்று முடியு மென்றவாறு.

உதாரணம்: சேவின் கோடு செவி தலை புறம் என வரும்.

முற்ற வென்றதனானே முற்கூறிய சேவென்னும் மரப்பெயர்க்கும் மே (ஏ)வென்பதற்கு முருபிற்குச் சென்ற

சாரியை பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்தல் கொள்க. சேவின் கோடு செதிள் தோல் பூ எனவும் வரும். ஏவின் கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும்.

சாரியைப்பேறு வருமொழி வரையாது கூறினமையி னியல்பு கணந்துங் கொள்க. சேவினலம் மணி வால் சேவினி மில் சேவினடை ஆட்டம் (சேவினாட்டம்) எனவரும்.

இன்னு மிதனனே யியல்பு கணத்துக்கணின் பெறாது வருதலுங் கொள்க. 'செய்யுட்கண்' தென்றற்கு வீணைக்கு செம்மணிக்கு (சேமணிக்கு) கோகுலத்திற்கு (கோகிலத்திற் கன்றிற்) கெனவரும். (77)

280 ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே

இது (இ-ஃது) ஐகாரவீறு வேற்றுமையின் கண்முடியு மாறு கூறுத னுதலிற்று. தொகைமரபினுள் 'வேற்றுமை யல்வழி' இ ஐ என்னு மென்பதன்க ணல்வழி முடித்தார்.

(இ-ள்) ஐகாரவிறுதிப் பெயர்நிலை முன்னர்—ஐகார வீற்றுச் சொன் முன்ன ரதிகாரத்தாற் கசதப முதன் மொழி வந்துழி, வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே-வேற் றுமைப் பொருட் புணர்ச்சி யாயிற் றமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்: யானைக் கோடு செவி தலை புறம் என வரும், வேற்றுமை யாயினென்றதனா னுருபு புணர்ச்சிக் கண்ணும் யானையைக் கொணர்ந்தானென வல்லெழுத்து மிகுதல் கொள்க. (78)

281 சுட்டுமுத லிறுதி யுருபிய னிலையும்.

இது வல்லெழுத்தி னோடு வற்று வகுத்தலி னெய்தி யதன் மேற் சிறப்பு விதி (கூறுகின்றது)

(இ-ள்) சுட்டு முதலிறுதி-சுட்டெழுத்தினை முதலாக வுடைய வைகார வீற்றுப்பெயர் உருபிய நிலையும்-உருபு புணர்ச்சியிற் கூறிய வியல்பு போலப் பொருட்புணர்ச்சிக் கண் வற்றுப் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம்: அவையற்றுக் கோடு இவையற்றுக்கோடு உவையற்றுக் கோடு செவி தலை புறம் எனவரும். இதனை வஃகான் மெய்கெட வென்பதனான் முடிக்க. (79)

282 விசைமரக் கிளவியு ஞெமையு நமையு
மவைமுப் பெயருஞ் சேமர வியல

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுந்து விதித்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி (வகுத்தது)

(இ-ள்) விசைமரக் கிளவியும் - விசைத்தற் றொழி லின்றி விசையென்னு மரத்தினை யுணர்நின்ற சொல்லும், ஞெமையும் - ஞெமையென்னு மரத்தினை யுணர்நின்ற சொல்லும், நமையும் - நமையென்னு மரத்தினை யுணர நின்ற சொல்லும், அவைமுப்பெயரும் - ஆகியவம்மூன்று பெயரும், சேமரவியல - வல்லெழுத்து மிகாது சேமரம் போல மெல்லெழுந்து மிக்க முடியு மென்றவாறு.

உதாரணம்: விசைங்கோடு ஞெமைங்கோடு நமைங் கோடு செதிள் தோல் பூ எனவரும். இவை கசதப முதலிய மொழிமேற்றோன்று மெல்லெழுத் தென்றுணர்க.

(80)

283 பனையு மரையு மாவிரைக் கிளவியு
நினையுங் காலை யம்மொடு சிவணு

மையெ னிறுதி யரைவரைந்து கெடுமே
மெய்யவ ணொழிய வென்மனார் புலவர்

இது (இஃது) இயைபு வல்லெழுத்து விலக்கி யம்மு வகுத்தது.

(இ-ள்) பனையு மரையு மாவிரைக் கிளவியும்—பனை யென்னும் பெயரும் அரையென்னும் பெயரும், ஆவிரை யென்னும் பெயரும், நினையுங்காலை யம்மொடு சிவணும் —ஆராயுங் காலத்து வல்லெழுத்து மிகாதம்முச் சாரியை யோடு பொருந்தி முடியும், ஐயெனிறுதி யரைவரைந்து கெடும் - அவ்விடத்தை (ஐ) யென்னுமீறரை யென்னுஞ் சொல்லை நீக்கி யேனை யிரண்டிற்குங் கெடும், மெய்யவ ணொழிய வென்மனார் புலவர் - தன்னா னுரப்பட்ட மெய்கெடா தச்சொல்லிடத்தே நிற்க வென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம் : பனை ஆவிரை என நிறுத்தி யம்முக் கொடுத்தைகாரங் கெடுத் (அ ம்மு வருவித்து ஐகாரங் கெடுத்தொற்றின் மேலே அகரமேற்றி பனங்காய் ஆவிரங் கோடு செதிள் தோள் பூ எனவும் வரும். அரையென நிறுத்தி யம்முக் கொடுத் தைகாரங் கெடாது அரையங் கோடு ,செதிள் ,தோல்,பூ என முடிக்க.வல்லெழுத்துக்கேடு மேலே 'கடிநிலை யின்று'யென்றதனாற் கூறுதும். நினை யுங்காலை யென்றதனால் தூதுணை வழுதுணை தில்லை ஓலை தாழை யெனநிறுத்தி யம்முக் கொடுத் தைகாரங் கெடுத்துத் தூதுணங்காய் வழுதுணங்காய் தில்லங்காய் ஓலம்போழ் தாழங்காய் என முடிக்க. (31)

284 பனையின் முன்ன ரட்டுவரு காலை
நிலையின் றாகு மையெ னுயிரே
யாகாரம் வருத லாவயி னான

இது நிலைமொழிச் செய்கை நோக்கி யெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) பனையின் முன்ன ரட்டுவருகாலை-முற்கூறி யவாறன்றிப்பனை யென்னுஞ் சொன்முன்னட் டென்னுஞ் சொல்வரு மொழியாய் வருங்காலத்து, நிலையின்றாகு மையெனுயிரே - நிற்றலில்லையாகு மையென்னு முயிர். ஆவயினான ஆகாரம் வந்து அம்மெய்) மேலேறி முடிகவென்றவாறு.

உதாரணம்; பனா அட்டு எனவரும். இதற்கு மூன்றாவதும் ஆறாவதும் விரியும்.

ஆவயினான வென்றதனால் ஒராநயம் விச்சாவாதி யென்னும் வேற்றுமை முடிபும் கேட்டாமூலம் பாறாங்கல் லென்னு மல்வழி முடிபுங் கொள்க. இவற்றை யல்வழி முடிபென்பாரு முளர். இவற்றுள் வடமொழிகளை மறுத்தலு மொன்று. (82)

285 கொடிமுன் வரினே யையவ ணிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி

இது மேலைகாரங் கெடுத்தம்முப் பெறுகவென்றா ரீண்டது கெடாது நிற்க வென்றலி னெய்திய திகந்து படாமற்காத்தது. அம்மு விலக்கி வல்லெழுத்து விதித்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதியுமாம் (வகுத்ததுமாம்)

(இ-ள்) முன்கொடிவரின் - பனையென்னுஞ் சொன்முன்னர்க் கொடியென்னுஞ் சொல்வரின், ஐயவணிற்ப-கேடோதிய வைகாரமாண்டுக் கெடாது நிற்ப, வல்லெழுத்து மிகுதி கடிநிலை யின்று-வல்லெழுத்து மிக்குமுடிதனிக்கு நிலை மையின் றென்றவாறு.

உதாரணம்:பனைக்கொடி எனவரும். இதற்கு இரண் டாவது மூன்றாவதும் விரியும்.

கடிநிலையின் றென்றதனா னைகாரவீற்றுப் பெயர்க ளெல்லா மெடுத் தோத்தானு மிலைசானு [மிலைசானு] மம்முச் சாரியையும் பிற சாரியையும் பெற்றுழி யதிகார வல்லெழுத்துக் கெடுததுக்கொள்க.

இன்னுமிதனானே யுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க - பனையின்குறை அரையின் கோடு ஆவிரையின் கோடு விசையின்கோடு ஞெமையின் கோடு நமையின் கோடு எனவும் தூதுணையின்காய் வழுதுணையின்காய், உழை யின்கோடு வலையின்கோடு எனவும் வரும்.

பனைத்திரள் பனைந்திரள் என்னு முறழ்ச்சி முடிபு தொகை மரபினுட்புறநடையாற் கொள்க. அல்வழியுமாத லின் அன்றி யீண்டவணென்றதனாற் கொள்வாருமுளர் (83)

286 திங்களு நாளு முந்து கிளந் தன்ன

இது (இஃது) யியைபு வல்லெழுத்தினோ டிக்குச் சாரி யையும் வல்லெழுத்து விலக்கி ஆன்சாரியையும் வகுத்தலி னெய்தியதன் மேற் சிறப்பு விதியு மெய்தியது விலக்கிப் பிறிது விதியுங் கூறுகின்றது.

இதன்பொருள் — திங்களு நாளும்—ஐகார வீற்றுத் திங்களை யுணரநின்ற பெயரும். நாளையுணர நின்ற பெயரும், முந்துகிளந்தன்ன — இகரவீற்றுத் திங்களும் நாளும் போல இக்கு மானும் பெற்று முடியு மென்றவாறு

உதாரணம்:— சித்திரைக்குக் கொண்டான் கேட்டை யாற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். சித்திரை நாளாயின் ஆன் சாரியை கொடுக்க. வல்லெழுத்துக்கேடு முன்னர்க் கடிநிலையின் றென்றத னாற் கொள்க.

திங்கள் முற்கூறிய முறையன்றிக் கூற்றினால் உழைங்கோடு அமைங்கோடு உடைங்கோடு என மெல்லெழுத்துக் கொடுத்தும், கலைங்கோடு கலைக்கோடு என வுறழ்ச்சி யெய்து வித்தும் கரியவற்றுக்கோடு நெடியவற்றுக்கோடு குறியவற்றுக்கோடு என வைகார வீற்றுப் பண்புப் பெயர்க்கு வற்றுக் கொடுத் தைகாரங்கெடுத்து வற்று மிசை யொற்றென் றொற்றுக் கெடுத்துச் செய்கை செய்தும் அவையத்துக் கொண்டான் அவையிற் கொண்டான் என அத்துமின்னுங் கொடுத்தும் பனையின் மாண்பு கேட்டையி னாட்டினான் என வியல்பு கணத்துக் கண் (இன்) சாரியை கொடுத்தும்பனையின் குறையென வின்கொடுது முடிக்க. ஐகாரவீறின் சாரியை பெறுதறொகைமரபினுட் கூறாமையி னீண்டுக் கொண்டாம். (84)

287 மழையென் கிளவி வளியிய னிலையும்

இது வல்லெழுத்தினோ டொத்து வகுத்தலி னெய்தி யதன் மேற்சிறப்பு விதியு மியைபு வல்லெழுத்து விலக்கியின் வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதியுங் கூறுகின்றது.

(இ-ள்) மழையென்கிளவி — மழையென்னு மைகார வீற்றுச் சொல், வளியியல் நிலையும் — வளியென்னுஞ் சொல்லத்து மின்னும் பெற்று முடிந்த வியல்பின் கண்ணே நின்று முடியு மென்றவாறு.

உதாரணம்: மழையத்துக் கொண்டான் மழையிற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான்எனவரும்

ஈண்டின் பெற்றுழி வல்லெழுத்துக்கேடு 'கடிநிலையின்' றென்றதனாற் கொள்க. சாரியைப் பேறு வருமொழி வரையாது கூறினமையி னியல்பு கணத்துக்கண்ணுங் கொள்க. மழையத்து ஞான்றான் நிறுத்தினான் மாட்டினான் வந்தான் அடைந்தான் என லொட்டுக. (85)

288 செய்யுண் மருங்கின் வேட்கை யென்னு
மையெ னிறுதி யவா முன் வரினே
மெய்யொடுங் கெடுத லென்மனார் புலவர்
டகார ணகார மாதல் வேண்டும்

இது வேற்றுமைக்கட் செய்யுண் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) செய்யுண் மருங்கின் வேட்கை யென்னு மை யெனிறுதி – செய்யுளிடத்து வேட்கை யென்னுமைகார வீற்றுச்சொல், அவாமுன் வரினே - அவாவென்னுஞ் சொல் முன்னர் வரின், மெய்யொடுங் கெடுத லென் மனார் புலவர் - அவ்வைகாரந் தானூர்ந்த மெய்யொடுங் கூடக் கெடுக வென்று கூறுவர் புலவர், டகார ணகார மாதல் வேண்டும் - அவ்விடத்து நின்ற டகார வொற்று ணகார வொற்றாய்த்திரிதல் வேண்டு மென்றவாறு.

உதாரணம் : வேணவா நலிய வெய்ய வுயிராவென வரும்.

வேட்கையாவது பொருள்கள் மேற் றோன்றும் பற் றுள்ளம். அவாவாவது அப்பொருள்களைப் பெற வேண்டு மென்றுமேன் மேனிகழ மாசையெனவே வேட்கையாலுண் டாகிய அவாவென மூன்றனுருபு விரிந்தது. இதனை வேட்கையும் வாவுமென அல்வழியென்பாருமுளர். இங் ஙனங் கூறுவ. பாறங்க லென்பதனை யம்முக் கொடுத் தீண்டு முடிப்பர். (86)

289 ஓகார விறுதி யேகார வியற்றே

இது (இஃது) ஓகார வீற்றல்வழி முடிபு கூறுகின்றது.

[இ-ள்] ஓகார விறுதி யேகார வியற்று ஓகார வீற்றுப் பெயர்ச் சொல் ஏகார வீற்றல் வழியினியல்பிற்றாய் வல் லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியு மென்ற வாறு.

உதாரணம்: ஓக்கடிது, சோக்கடிது சிறிதுதீது பெரிது என வரும். (87)

290 மாறுகொ ளெச்சமும் வினாவு மையமுங்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்

இது (இஃது) இடைச்சொன் முடிபு கூறலினெய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) மாறு கொளெச்சமும் — மாறுபாட்டினைக் கொண்ட வெச்சப்பொருண்மை (யை) ஒழிபாகவுடைய வோகாரமும். வினாவும்—வினாப்பொண்ருமையையுடைய வோகாரமும், ஐயமும் - ஐயப்பொருண்மை யையுடைய வோகாரமும், கூறிய வல்லெழுத்தியற்கை யாகும்-முன்னர்க் கூறிய வல்லெழுத்தின்றி யியல்பாய் முடியு மென்றவாறு.

உதாரணம்:- யானோ கொண்டேன் எனவும்.
நீயோகொண்டாய் எனவும் பத்தோ பதினொன்றோ புற்றோ புதலோ எனவும் வரும்.

கூறிய வென்றதனான் 'யானோ தேறே னவர்பொய் வழங்கலரே' யெனப்பிரி நிலையும் நன்றோ தீதோ கண்ட தெனத் தெரியு நிலையும் (தெரிநிலையும்) ஓஒகொண்டா னெனச் சிறப்புறக் 'குன்றுழந்த (குன்றுறழ்ந்த) களிறென் கோ கொய்யுளை மாவென்கோ' வென வெண்ணும் (எண்ணுநிலையும்) வல்லெழுத்து மிகா தியல்பாய் முடிதல் கொள்க. இதனானே ஈற்றசை வருமேனு முணர்க. (88)

291 ஒழிந்தத னிலையு மொழிந்தவற் றியற்றே

இதுவுமது

(இ-ள்) ஒழிந்ததனிலையு மொழிந்தவற் றியற்றே - ஒழியிசை யோகாரத்தினது நிலையுமுற்கூறிய வோகாரங் களினியல்பிற்றா யியல்பாய் முடியு மென்றவாறு.

உதாரணம் : கொளலோ கொண்டான் செலலோ சென்றான் தரலோ தந்தான் போதலோ போயினான் என வோசை வேற்றுமையா னொருசொற் றோன்றப் பொருடந்து நிற்கும். (89)

292 வேற்றுமைக் கண்ணு மதனோ ரற்றே
யொகரம் வருத லாவயி னான

இது (இஃது) ஒகார வீற்று வேற்றுமை முடிபு கூறு கின்றது.

(இ-ள்) வேற்றுமைக்கண்ணு மதனோ ரற்று-ஒகாரவீறு வேற்றுமைக்கண்ணுமவ்வோகாரவீற்றல்வழியோடொத்து வல்லெழுத்து மிக்கு முடியும், ஆவயினான வொகரம் வருதல்—அவ்விடத் தொகரம் வருக வென்றவாறு.

உதாரணம்: ஓ ஒக்கடுமை சோ ஒக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். (90)

293 இல்லொடு கிளப்பி னியற்கை யாகும்

இது (இஃது) எய்தியது விலக்கிற்று என்னை? முன்னர் வன் கணம் வந்துழி ஒகரம் பெறுகவென்று வரைந்து கூறாது நிலை மொழித் தொழில் வரையாது கூறலி னான்கு கணத்துச்சேறலின்.

(இ-ள்) இல்லொடு கிளப்பி னியற்கையாகும்—ஒகார வீற்றுக்கோவென்னு மொழியினை யில்லென்னும் வரு மொழியோடு சொல்லி னொகரமிகா தியல்பாய் முடியு மென்றவாறு.

உதாரணம்:— கோயிலெனவரும் (கோவில்எனவரும் (கோவென்றது உயர்திணைப் பெயரன்றோ வெனின்) கோவந்ததென் றஃறிணையாய் முடிதனஃறிணைப் பாற் பட்டது (முடிதலின் அஃறிணைப் பாற்பட்ட தென்க.)(91)

294 உருபியனிலையு மொழியுமா ருளவே
யாவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இது வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தலினெய் தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) உருபிய னிலையு மொழியுமா ருளவே—ஓகார வீற்றுச் சிலபொருட் புணர்ச்சிக்கண் னுருபு புணர்ச்சிய தியல்பிலே நின்றொன் சாரியை பெற்று முடியு மொழிகளு முள, ஆவயின் வல்லெழுத்தியற்கையாகும்—அவ்விடத்து வல்லெழுத்தின்றி யியல்பாய் முடியு மென்றவாறு.

உதாரணம்: கோ ஒன்கை செவி தலை புறம் என வரும். சாரியைப் பேறு வருமொழி வல்லெழுத்தை விலக் காமை. இதனானும் பெற்றாம். (92)

295 ஒளகார விறுதிப் பெயர்நிலை முன்ன
ரல்வழி யானுய் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
யவ்விறு வீற்று முகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே

இது ஒளகார வீறி நவழிக்கண்ணு முடியுமாறு கூறு கின்றது.

(இ-ள்) ஒளகார விறுதிப் பெயர்நிலை முன்னர்-ஒள காரவிறுதிப் பெயர்ச்சொன்முன் வல்லெழுத்து முதன் மொழிவரின், (வருமொழியாய்வரின்) அல்வழியானும்வேற் றுமைக்கண்ணும் - அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண் ணும், வல்லெழுத்து மிகுதல், வரைநிலை யின்றே-வல்லெ ழுந்து மிக்கு முடிதனீக்கு னிலைமை யின்று, அவ்விரு வீற்று முகரம் வருதல் செவ்விதென்ப சிறந்திசி னோரே - அவ்விரு கூற்று முடிவின்கண்ணு நிலைமொருக்கண்ணு கரம்வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோ ரென்றவாறு.

உதாரணம் :- கௌவுக்கடிது சிறுது தீது பெரிதென வும் கௌவுக்கடுமை சிறுமை தீமைபெருமை எனவும்வரும்

செவ்வி தென்றதனானே மென்கணத்து மிடைக் கணத்து முகரம் பெறுதல் கொள்க. கௌவு ஞெமிர்ந்தது. கௌவு ஞெமிர்ச்சி எனவும் வௌது வலிது வௌ வலிமை எனவும் வரும்.

நிலையென்றதனாற் (நிலைமொழி யென்றதனாற்) கௌவின் கடுமை எனவுருபிற்குச் சென்ற சாரியை பொருட் கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்வுங் கொள்க.

இன்னு மிதனானேஐகாரமும் இகரமும் வேற்றுமைக் கண்ணுருபு தொகையாயுழி யியல்பாதல் கொள்க. (93)

ஏழாவது

உயிர் மயங்கியல் முற்றும்.

எட்டாவது

புள்ளி மயங்கியல்.

296 ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்ன
ரல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே
யுகரம் வருத லாவயி னான.

என்பது சூத்திரம்.

நிறுத்த முறையானே உயிரீறு புணர்த்துப் புள்ளியீறு வன்கணத்தோடுஞ் சிறுபான்மை யேனைக்கணத்தோடும் புணருமாறு கூறுகின்றது (கூறுதலி)னிவ்வோத்துப் புள்ளி மயங்கிய லென்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரம் ஞகார வீறு வன்கணத்தோடிரு வழியும் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர் -ஞகார மீற்றின்க ணொற்றாய் நின்ற தொழிற் பெயரின் முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் - அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமையைச் சொல் லுமிடத்தும், வல்லெழுத்தியையின் வல்லெழுத்து மிகுமே (வல்லெழுத்தியையி னவ்வெழுத்து மிகுமே)-வல்லெழுத்து முதன் மொழி வருமொழியாய் வரின் (அவ்) வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்கு முடியும், ஆவயினான உகரம் வரு தல்—அவ்விடத் துகரம் வந்து புணர்க வென்றவாறு.

உதாரணம் : உரிக்கடிது (உரிஞுக்கடிது) சிறிது தீது பெரிது எனவும், உரிஞுக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும். (1)

297 ஞநமவ வியையினு முகரநிலையும்

இது (இஃது) இவ்வீறு மென்கணத் தோடு மிடைக் கணத்து வகரத்தோடு முடியுமென வெய்தாதெய்துவித்தது

(இ-ள்) ஞநமவ வியையினும்—அஞ்ஞகர வீறு வன் கணமன்றி ஞநமவ முதன்மொழி வருமொழியாய் வரினும் உகர நிலையும்—நிலைமொழிக்கண் ணுகர நிலை பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : உரிஞுஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், (ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும்) வரும்.

யகரத்தோடு முயிரோடும் புணருமாறு தொகை மரபி னுள் 'உகரமொடு புணரு' மென்பதனாற் கூறினார். [2]

298 நகார (நகர) விறுதியு மதனோ ரற்றே

இது நகரவீறு முற்கூறிய கணங்களோ டல்வழிக்கண் முடியுமாறு கூறி யெய்தாத தெய்து விக்கின்றது.

[இ-ள்] நகர விறுதியும்—நகர வீற்றுப் பெயரும் முற் கூறியகணங்களோடு புணரும் வழி, அதனோ ரற்று—அஞ் ஞகர வீற்றுத் தொழிற்பெய ரியல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி [அவ்] வல்லெழுத்து மிக்குகரம் பெற்றும் ஞநமவ வந்துழி உகரம் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : பொருநுக்கடிது வெரிநுக்கடிது சிறிது தீது பெரிது எனவும் ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வரும். முடி வொப்புமை [முடிபு ஒப்புமை] நோக்கி நகரவீ றீண்டுப் புணர்த்தார். ஈண்டு வேற்றுமை யொழிந் தது மாட்டேறு சென்ற தென்றுணர்க. [3]

299 வேற்றுமைக் குக்கெட வகர நிலையும்

இது நிலைமொழி உகரம் விலக்கி யகரம் வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி (வகுக்கின்றது)

(இ-ள்) வேற்றுமைக்கு—அந்நகர வீறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கு, உக்கெட வகரம் நிலையும்—மேலெய்திய வுகரங்கெட வகரத்தோடு நிலைபெற்றுப் புணருமென்றவாறு.

உதாரணம் :- பொருநக்கடுமை வெரிநக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். அகர நிலையு மென்னாது கரங் கெட வென்றதனா னுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி யியைபு வல்லெழுத்து வீழ்வுஞ் சிறுபான்மை யுகரப் பேறுங் கொள்க. வெரிநின்குறை பொருநின்குறை உரிஞின் குறை எனவும், 'உயவல் யானை வெரிநுச் சென்றனன் எனவும் வரும். யானையினது முதுகின்மேற் சென்றனனென விரிக்க.

பொருந் என்பது ஒருசாதிப் பெயரும் பொருந்துதலென்னும் வினைப் பெயருமாம். (4)

300 வெரிநெ னிறுதி முழுதுங் கெடு வழிய
வருமிட னுடைத்தே மெல்லெ ழுத் தியற்கை.

இது (இ-ஃது) அந்நமர வீற்றிலொரு மொழிக் (ஈற்றுள் ஒரு மொழிக்) கெய்தியது விலக்கிப் பிறிது விதி, வகுத்தது.

(இ-ள்) வெரிநெனிறுதி—வெரிநென்று சொல்லப்படு நகரவீற்றுமொழி, முழுதுங்கெடுவழி-தன்னீற்றுநகர முன் பெற்றவகரத்தோ டெஞ்சாமைக் கெட்டவிடத்து, மெல்லெழுத்தியற்கை வருமிடனுடைத்து-மெல்லெழுத்துப்பெறுமியல்பு வந்து முடியுமிடனுடைத் தென்றவாறு.

உதாரணம் : வெரிங்குறை செய்கை தலை புறம் என வரும். மெல்லெழுத்து வருமொழி நோக்கிவந்தது. (வெயில் வெரிநிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை யென்பதனான் (என்பதில்) நகரவிகர்மே யிட்டெழுதுப. (5)

301 ஆவயின் வல்லெழுத்து மிகுதலு முரித்தே

இது (இஃது) அதற் கெய்தாத தெய்து வித்தது

(இ-ள்) ஆவயின்—அவ்வெரி நென்னுஞ் சொல்லவ் வாறீறு கெடநின்ற விடத்து, வல்லெழுத்து, மிகுதலு முரித்து—மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடி தலு முரித்தென்றவாறு.

உதாரணம் : வெரிக்குறை செய்கை தலை புறம் என வரும். (6)

302 ணகார விறுதி வல்லெழுத் தியையின்
டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே

இது நிறுத்த முறையானே ணகார வீறு வேற்றுமைப் பொருட்கட் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) ணகார விறுதி - ணகார வீற்றுப்பெயர், வல் லெழுத் தியைபின் : வல்லெழுத்து முதன்மொழி (வந்து) யியையின், டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே-டகார மாய்த்திரிந்து முடியும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்க ணென்றவாறு.

உதாரணம்:- மட்குடம் சாடிதூதை யானை(பானை) யெனவரும். மண்கை புண்கை என்பன விரண்டாவதன்றி ரிபின் முடிந்தன. கவண்கால் (பரண்கால்) என்பன மேல் முடித்தும். (7)

303 ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை

இது (இஃது) அவ்வீற்று(இவ்வீற்று)விரவுப்பெயருட் சிலவற்றிற் கெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) ஆணும் பெண்ணும் - ஆணென்னும் விரவுப் பெயரும் பெண்ணென்னும் விரவுப் பெயரும், அஃறிணை

யியற்கை - தொகை மரபினுண்'மொழி முதலாகு' மென்ப தன் கணஃறினைப் பெயர் முடிந்த வியல்பு போலத்தாம் (தாமும்) வேற்றுமைக்கணியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : ஆண்கை பெண்கை செவி தலை புறம் எனவரும். இது தொகை மரபினு ணஃறிணை விரவுப்பெய ரென்பதனுண் முடிந்த வியல்பன்றோ வெனின், இவை யாண்டு முடிந்தன போலத் தத்தமரபின் வினையாற் பாலறியப்படுவன வன்றி யிருதிணைக்கண்ணு மஃறிணை யாய் முடிதலி னவ்வஃறிணைப் பெயரதியல் போடுமாட் டெறிந்துமுடித்தாரென்க. ஆண்கடிது பெண்கடிது என்னு முடிபு மொழி முதலாகு மென்பதன் கண் வருமொழி முற் கூறியவதனான் முடிக்க. (8)

304 ஆண்மரக் கிளவி யரைமர வியற்றே

இது திரிபுவிலக்கிச் சாரியை வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

[இ-ள்] ஆண்மரக் கிளவி-[ஆண்பாலையுணர்த்தாது] ஆணென்னு மரத்தை (மரத்தினை) யுணரநின்ற சொல், அரை மர வியற்றே-அரையென்னு மரமம்முப் பெற்ற வியல் பிற்றாய்த் தானுமம்முப் பெற்று முடியுமன்றவாறு

உதாரணம் : ஆணங்கோடு செதிள் தோல் பூ என வரும் ஒன்றென முடித்தலா னியல்பு கணத்துங்கொள்க ஆணநார் இலை எனவரும்,

விரவுப்பெய ரன்றென்றற்கு மரமென்றார் (9)

305 விண்ணென வருஉங் காயப் பெயர்வயி
னுண்மையு மூரித்தே யத்தென் சாரியை
செய்யுண் மருங்கிற் றொழில் வருகாலை

இது செய்யுளுட் டிரிபு விலக்கிச் சாரியை வகுத்தது.

(இ-ள்) விண்ணென வருஉங் காயப்பெயர்வயின்— விண்ணென்று சொல்ல வருகின்ற வாகாயத்தை யுணர நின்றபெயர்க்கண், அத்தென் சாரியை யுண்மையு முரித்து (அத்து என் சாரியை மிகுதலும் உரித்து) - அத்தென்னுஞ் சாரியை யுண்டாதலு முரித் தில்லையாதலு முரித்து, செய்யுண் மருங்கிற் றொழில் வருகாலை - செய்யுளிடத்துத் தொழிற் சொல் வருங்காலத் தென்றவாறு.

உதாரணம்:- 'விண்ணத்துக் கொட்கும் வண்ணத் தமரர்' 'விண்ணத்துக்கொட்கும் விரைசெல லூர்தியோய்' எனவும் விண்குத்து நீள்வரை நீள்வரை வெற்ப களைப வோ, எனவும் வரும். விண்ணென்னுங் குறிப்பு (குறிப்பி னை) நீக்குதற்கு காய மென்றார்.

விண்வத்துக் கொட்குமென வுடம்படு மெய்பெற்று (புணர்ந்து) நிற்றலுங் கொள்க அதிகார வல்லெழுத் தின் மையிற் சாரியை வல்லெழுத்துக் கொடுக்க. (10)

306 தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல

இது அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் இவ்வீற்றுட் சிலவற்றிற்கு திரிபு விலக்கி யுகர(மு)ம் வல் லெழுத்தும் வகுக்கிறது. [விதிக்கின்றது]

[இ-ள்]தொழிற் பெயரெல்லாந் தொழிற் பெயரியல- (அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும்) ஞகார வீற் றுத் தொழிற் பெயரதியல் பிற்றாய் வன்கணம் வந்துழி வல்லெழுத்து முகரமும் பெற்று மென்கணத்து மிடைக் கணத்துவகரத்து முகரம் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : மண்ணுக்கடிது [பண்ணுக்கடிது சிறிது தீதுபெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிதுஎனவும்,

மண்ணுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி (வன்மை) வலிமை எனவும் வரும்.

எல்லா மென்றதனாற் றொழிற்பெயரல்லனவு முகர மும் வல்லெழுத்தும் பெற்று மின்சாரியை பெற்றுப் புணர் வன கொள்க. வெண்ணுக்கரை 'தாழ்பெயல் கனைகுரல் கடுப்பப்பண்ணுப் பெயர்த்து' எண்ணுப்பாறு வெண்ணின் கரை என வரும். (11)

307 கிளைப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே.

இது [இஃது] இவற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக் கியியல்பு கூறுதலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி [கூறு கின்றது]

[இ-ள்] கிளைப்பெயரெல்லாம்-ணகார வீற்று ளோரி னத்தை யுணர நின்ற பெயரெல்லாம், கொளத்திரிபில - திரிபுடைவென்று கருதும்படியாகத் திரிதலின்றாயியல் பாய் முடியுமென்றவாறு.

உதாரணம்:- உமண் எனநிறிஇ[நிறுத்திக்] குடி சேரி தோட்டம் பாடி எனத்தத்து முடிக்க.

இனி யெல்லா மென்றதனாற் பிறசாரியை பெற்று முடிவனவு மியல்பாய் முடிவனவுங் கொள்க. மண்ணப்பத் தம் எண்ணசோலை [நோலை]எனவுங் கவண்கால் பரண் கால் எனவுங் கொள்க.

கொளவென்றதனால் ஏழாம் வேற்றுமைப் பொருண் மை யுணர நின்றவிடைச் சொற்கடிரிந்து முடிவன கொள்க அங்கட் கொண்டான் இங்கட் கொண்டான் உங்கட் கொண்டான் எங்கட் கொண்டான் எனவும் ஆங்கட் கொண்டான் ஈங்கட் கொண்டான் ஊங்கட் கொண்டான் யாங்கட் கொண்டான் எனவும், அவட் கொண்டான் இவட் கொண்டான் உவட்

கொண்டான் எவட் கொண்டான் எனவொட்டுக. (எனவும் ஒட்டுக) (12)

308 வேற்றுமை யல்வழி யெண்ணெ னுணவுப் பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே

இது (இஃது) அவ்வீற்று ளொன்றல் வழியுள் வேற் றுமை முடிபு போலத் திரிந்து முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமை யல்வழி - வேற்றுமை யல்லாத வழி, (யல்லாத விடத்து) எண்ணெனுணவுப் பெயர்-வரை யறைப் பொருண்மையை யுணர்த்தா தெண்ணென்று சொல்லப்படு முணவினை யுணர்த்தும் பெயர், வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே வேற்றுமையது திரிந்து முடியுமியல்பு நிற்றலு முரித்தென்றவாறு.

உதாரணம்: எட்கடிது சிறிது தீது பெரிது எனவரும் உம்மையாற் றொகை மரபினுள் 'மொழி முதலாகு' மென் பதனாற் (என்றதனாற்) கூறிய வியல்பு பெரும்பான்மை யாயிற்று.

அது (அஃது) எண்கடிது எனவரும். (13)

309 முரணென் றொழிற்பெயர் முதலிய னிலையும்

இது(இஃது)இவ்வீற்றுத் தொழிற்பெயருளொன்றற் குத் தொழிற் பெயர்க் கெய்திய உகரமும் வல்லெழுத்து விலக்கி யிவ்வீற்றல் வழிமுடிபும் வேற்றுமை முடிபு மெய்து வித்தது.

(இ-ள்) முரணென் றொழிற்பெயர் - மாறுபா டுணர்த்து முரணென்னுந் தொழிற் பெயர், முதலியனிலை யும்-தொகைமரபிற் கூறிய வல்வழிக்கட் டிரியாது முடிந்த

வியல்பின் கண்ணு மீண்டு வேற்றுமைக் கட்டிரிந்து முடிந்த வியல்பின் கண்ணு நிலைபெற்று முடியுமென்றவாறு.

உதாரணம்: முரண்கடிது சிறிது தீது பெரிதுஞெகிழ்ந்தது. நீண்டது மாண்டது வலிது எனவும் முரட்கடுமை சேனை தானை பறை எனவும், முரண் ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். இதனை 'தொழிற்பெயரெல்லா மென்றதன்பின் வையாத முறையன்றிக் கூற்றினான் முரண் கடுமை முரட் கடுமை அரண் கடுமை அரட் கடுமை என்னு முறழ்ச்சியுங் கொள்க. (14)

310 மகர விறுதி வேற்றுமை யாயிற்
றுவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே

இது முறையானே மகரவீற்றுப்பெயர் வேற்றுமைக் கட் புணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) மகரவிறுதி வேற்றுமை யாயின்-மகரவீற்றுப் பெயர் வேற்றுமை பொருட் புணர்ச்சிக் கண்ணாயின் துவரக்கெட்டு வல்லெழுத்து மிகும் - அந்நிலை மொழி மகர முறக் கெட்டு (மகரம் முற்றக் கெட்டு) வரு மொழி வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: மரக்கோடு செதிள் தோல் பூ எனவரும். முண்டகக்கோதை எனவும் வரும்.

துவர வென்றதனா லியல்பு கணத்துக் கண்ணுமுயர் திணைப் பெயர்க்கண்ணும் விரவுப் பெயர்க்கண்ணு மகரக் கேடு கொள்க. மரஞான் மரநூல் இவற்றிற்கு நான்கனுருபு விரிக்க. மரமணி யாழ் வட்டு அடை ஆடை என வொட்டுக. நுங்கை எங்கை செவி தலை புறம் எனவும் (வரும்.) தங்கை செவி தலை புறம் எனவும் வரும். ஈண்டு மகரக் கேடே கொள்க. முடிபு மேற்கூறுப. (15)

311 அகர ஆகாரம் வரூஉங் காலை
யீற்றுமிசை யகர நீடலு முரித்தே

இது (இஃது) அவ்வீற்று முடிபு வேற்றுமையுடையன கூறுகின்றது.

(இ-ள்) அகர ஆகாரம் வரூஉங் காலை - அகரமுதன் மொழியு மாகார முதன் மொழியும் வருமொழியாய் வருங் காலத்து, ஈற்றுமிசை யகரம் நீடலு முரித்தே - மகர வொற்றின் மேனின்ற வகர நீண்டு முடிதலு முரித்து நீடா மையு முரித்தென்றவாறு.

உதாரணம்:மரம் குளம் எனநிறுத்தி மகரங் கெடுத்து அடி ஆம்பலெனத் தந்து ரகர ளகரங்களி னின்ற வகர மாகார மாக்கி மரா அடி குளாம்பலென (குளா அம்பல்) முடிக்க.

மேற் 'செல்வழி யறிதல் வழக்கத்தான' வென்பத னாற் குளாஅம்ப லென்புழி யாகாரத்தை யகரமாக்குக.

உம்மையான் மரவடி குளவாம்பலென நீடாமையுங் கொள்க.

வருமொழி முற்கூறிய வதனா னிவ் வீற்றுப் பிறவும் வேறுபட முடிவன கொள்க. கோணா கோணம் கோணா வட்டம் (எனவரும்) இவ்வீற்றிற்கு (இவற்றிற்கு) உள் ளென்னு முருபு விரிக்க கோணா கோணத்திற்கு வல்லெ ழுத்துக் கேடு மேலைச் சூத்திரத்திலைசாற் (இலேசாற்) கொள்க. (16)

312 மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே
செல்வழி யறிதல் வழக்கத் தான

இது மகரங்கெட்டு வல்லெழுத்து மிகுதலோடு மெல் லெழுத்தும் உறழ்க வென்றலி னெய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) மெல்லெழுத் துறழ மொழியுமாருளவே— மகரவீற்றுள் வல்லெழுந்தினோடு மெல்லெழுந்துப்பெற்று முறழ்ந்து முடியு மொழிகளுமுள, வழக்கத்தான செல்வழி யறிதல்—வழக்கின் கண்ணும் வழங்குமிட மறிகவென்ற வாறு

உதாரணம்: குளவ்கரை குளங்கரை சேறு தாது பூழி எனவரும் இவற்றுட் குளங்கரை குளக்கரை போல வல் லனவொத்த வுறழ்ச்சியாய் வழங்கா வென்றற்கு செல்வழி யறிதலென்றார்.

(வழக்கத்தானஎன்றதனான்) குளந்துக் கொண்டான் ஈழத்துச் சென்றான் (குடத்துவாய்) பிலத்துவாய் என் றாற் போல்வன மகரங் கெட்டத்துப் பெற்றன. இவை யத்தேவற்றே யென்பதனா னொற்றுக் கெடாதாயிற் றஃதல் வழிக்கு கூறுதலின் மழகளி றென்பது மழவுங் குழவு மிளமைப் பொருள வென்ற வுரிச்சொலது, மகரவீரன்று சண்பகங் கோடென்பது வழக்கிடத்துச் சொல்லாது (செல்லாது)

இன்னு மிதனானே மகரங் கெடாது நிற்பனவுங் கொள்க 'புலம்புக் கனனே' (கலம்பெறு கண்ணுள ரொக்-கற்) கண்ணு ளொரக்கற் றலைவ எனவரும். (17)

313 இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே

இது (இஃது) இவ்வீற்று ளொன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுந்து விதித்தது.

(இ-ள்) இல்லமரப்பெயர் — புக்குறையு மில்லன்றி யில்லமென்னு மரத்தினை யுணரநின்றசொல விசைமர வியற்று—விசையென்னு மரத்தி னியல்பிற்றாய் மெல்லெ ழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்:- இல்லங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

மேலிற் (மேலைச்) சூத்திரத்து வழக்கத்தான வென்ற தனான் மகரக்கேடு கொள்க. (18)

314 அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்.

இது மகர மல்வழிக்கட்டிரிக வெனமுற் கூறாமையி னெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) அல்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும் - மகர வீறல் வழிக்க ணெல்லா மெல்லெழுத்தாய்த்திரிந்து முடியு மென்றவாறு.

உதாரணம்:மரங்குறிது சிறிது தீது பெரிது எனவரும் மரம் பெரிதென்புழி திரிபின்றென்பதாணை கூறலென்னு (உத்தி)

இனி யெல்லா மென்றதனா னல்வழிக்கண் மகரவீறு பிறவாற்றான் முடிவனவெல்லா முடிக்க. வட்டத் தடுக்கு சதுரத்தண்டு (சதுரப்பலகை) ஆய்தப்புள்ளி, வேழக்கரும்பு கலக்கொள் சுக்கு தோரை பயறு நீலக்கண் என்னும் பண்புப் பெயர்கள் மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு முடிந்தன. ஆய்தவுலக்கை, அகர முதல இவை இயல்பு கணத்து(கணத்துக்கண்) மகரங்கெட்டு முடிந்தன. எல்லா ருங்குறியர் நாளுங் குறியேம் (நாங்குறியேம்) இவையுயர் திணைப் பெயர் மகரந்திரிந்து மெல்லெழுத்தாய் முடிந்தன. கொல்லுங் கொற்றன் உண்ணுஞ் சாத்தன் கவளமாந்து மலைகெழு நாடான் பொருமாரன் தாவுபரி பறக்குநாரை ஓடுநாகம் ஆடுபோர் வருகாலம் கொல்லும் யானை பாடும் பாணன் எனவிவை மகரந் திரிந்து கெட்டு நிலைபெற்றும் வந்த பெயரெச்சம்.

இன்னு மிதனானே இயல்பு கணத்துக் கண்ணு மகரங் கெடுதலுங் கெடாமையுங் கொள்க. மரஞான்றதுநீண்டது மாண்டது எனவும் (மரம் யாது) வலிது அடைந்தது என வரும் (எனவும்வரும்) இன்னுமிதனானே பவழ (பவள வா

யென வுவமத்து நிலநீரென வெண்ணிடத்துங் கொள்க. (கேடுகொள்க) [19]

315 அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே யாசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இது மகர வீற்றல் வழிக்கணிம்மொழி யிம்முடி பெய்துக வென்றலி னெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே - அகமென்னுஞ் சொல்லிற்குக் கையென்னுஞ் சொல்முன் னேவருமாயின் முதனிலையொழிய முன்னவை கெடுதலும் - முன்னின்ற வகரங் கெடாது நிற்பவதன் முன்னின்ற ககரமு மகரவொற்றுங் கெட்டு முடிதலுங் கெடாது நின்று முடிதலும், வரைநிலை யின்றே யாசிரியர்க்க - நீக்கு நிலைமை யின்றாசிரியர்க்கு, ஆவயினான மெல்லெழுத்து மிகுதல் - அவை கெட்ட வழி மெல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு. (முடிய வென்றவாறு)

உதாரணம்: அங்கை எனவரும், அகங்கையெனக் கெடாது முடிந்தவழி (அல்வழி யெல்லாம்) யென்றதனான் மகரந் திரிந்து முடிதல் கொள்க இவை (இது) பண்புத் தொகை. அதிகாரத்தானும் பொருணோக்கானும் வேற்று ணமத் தொகை யன்மை யுணர்க. (20)

316 இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யுளான.

இது (இஃது) இலமென்பது முற்றுவினைச் சொலாகாது (சொல்லாகாது) குறிப்பாகிய உரிச்சொல்லாய் நிற்குங்கா லல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) இலமென்கிளவிக்கு - இல்லாமை யென்னுங் குறிப்பாகிய வுரிச்சொற்கு, படுவருகாலை - உண்டாத லென்னும் வினைக்குறிப்புப் பெயர் வருமொழியாய் வருங் காலத்து, செய்யுளான நிலையலுமுரித்து -செய்யுளிடத்து மகரங்கேடுந் திரிவுமின்றி நிற்றலு முரித்து (என்றவாறு)

எனவே யும்மையாற் பிற சொல் வருங்காலத்துக் கேடுந் திரிவும் பெற்று நிற்றலு முரித்தென்றவாறு.

உதாரணம் : ''இலம்படு புலவ ரேற்றகை நிறைய'' இதற்கில்லாமை யுண்டாகின்ற புலவரெனப் பொருள் கூறுக. ''இலம்பாடு நாணுத்தரு'' மென்கின்றதோ வெனின் இல்லாமை யுண்டாதனாணுத்தரு மென்று பொருள் கூறுக.இதனை நெற்பாடுபெரிதென்றாற் போலக்கொள்க பொருளிலமென முற்றுவினைச் சொல்லாமாறுணர்க. இல நின்றதெனக் கெட்டவாறும், இலங்கெட வியந்தான் இலஞ்சிறிதாக இலந்தீதென்று எனக் கசதக்கள் வரும் வழித் திரிந்தவாறு காண்க.

எல்லா மென்றதனான் இலம் வருவதுபோலும் இலம் யாவரிடத்தது (யாரிடத்தம்) என வகர யகரங்களின் முன்னர்க் கெடாது நிற்றல் கொள்க.

இதனை இலத்தாற் பற்றப்பட்ட புலவரென வேற்றுமை யென்றாரா லுரையாசிரியரெனின் பற்றப்பட்டபுலவரென்பது பெயரெச்ச மாதலிற் பற்றவென்னுந் தொழிறோற்று விலக்கின்ற முதனிலைச் சொல்லைச் சூத்திரத் தாசிரியரெடுத் தோதிற்றில ராதலானும்படுவென்பது தானும் புலவரென்னுப் பெயரோடு முடியுங்கா லிரண்டு காலமுங்காட்டு மீறுக டொக்க முதனிலைச் சொல்லாய் நிற்றலி னதனை யெடுத்தோதினா ராதலானு மாசிரியர்க் கங்ஙனங் கூறுதல் கருத்தன்மை யுணர்க.

அன்றியும் பற்றப்பட்டவென்புழி யிரண்டு முதனிலை கூடி யொன்றாய் நின்று பற்றுதலைச் செய்யப்பட்ட வெனப்பொருடாராமையானு மல்வழி யதிகாரமாதலானு மது பொருளன்மை யுணர்க. (21)

317 அத்தொடு சிவணு மாயிரத் திறுதி
யொத்த வெண்ணு முன்வரு காலை

இது (இஃது) இவ்வீற்று ளெண்ணுப் பெயரு ளொன் றற்குத் தொகை மரபினு 'ளுயிரும் புள்ளியு மியூதி யாகி' யென்பதனாலெ...ய்திய வேயென் சாரியை விலக்கி யத்து வகுக்கின்றது

(இ-ள்) ஆயிரத்திறுதி - ஆயிரமென்னு மெண்ணுப் பெயரின் மகரம், ஒத்தவெண் முன்வருகாலை-தனக்ககப் படு மொழியாய்ப் பொருந்தின வெண்ணுப் பெயர் தன் முன் வருங்காலத்து, அத்தொடு சிவனும் - தொகை மர பிற் கூறியயேயென் (ஏயென்) சாரியை யொழித்தத்துச் சாரியையோடு பொருந்தி முடியுமென்றவாறு.

உதாரணம் : ஆயிரத்தொன்று (ஆயிரத்தேழ்) ஆயிரத் தொன்பது. என ஒன்று முதல் ஒன்பதின் காறுமொட்டுக. (மகரத்தை அத்தின்மிசை யொற்றென்று கெடுத்து அத்தி னகர மகரமுனையில்லை. என்று முடிக்க. ஆயிரத்தொரு பதுஎன்றாற் போல்வனவற்றிற்தும் ஒட்டுக)

நிலைமொழி முற்கூறாததனான் ஆயிரத்துக்குறை கூறு முதல் என்பனவுங் கொள்க. இன்னு மிதனானே ஆயிரத்துப்பத்தென்புழி (ஆயிரப்பத்தென்புழி) மகரங் கெடுத்து வல்லொற்று மிகுத்து முடிக்க. (22)

318 அடையொடு தோன்றினு மதனோ ரற்றே.

இது (இஃது) 'அடையொடு தோன்றினும் புணர் நிலைக்குரிய' வென்றமையி னவ்வெண்ணுப் பெயரை யடையடுத்து முடிக்கின்றது.

(இ-ள்) அடையொடு தோன்றினும்-அவ்வாயிரமென் னுமெண்ணுப் பெயரடையடுத்த மொழியோடு வரினும், அதனோரற்று - முற்கூறியதனோ டொருதன்மைத்தா யத்துபெற்று முடியுமென்றவாறு.

உதாரணம்:பதினாயிரத்தொன்று, இரண்டு இருபதி னாயிரத்தொன்று, ஆறாயிரத்தொன்று, நூறாயிரத் தொன்று, முந்நூறாயிரத்தொன்று, ஐந்நூறாயிரத் தொன்று எனவொட்டுக. முன்ன ரிலைசினான் (ரிலே சினான்)முடிந்தவற் றையு மடையடுத் தொட்டுக. பதினா யிரத்துக்குறை புறம்கூறும், முதல் எனவும் நூறாயிரப் பத்து எனவும் வரும். [23]

319 அளவு நிறையும் வேற்றுமை யியல

இது [இஃது] அவ்வெண்ணின் முன்னரளவுப் பெயரு நிறைப் பெயரும்வந்தான் முடியுமாறு கூறுதலின் எய்தாத தெய்து வித்தது.

[இ-ள்]அளவும் நிறையும்-அதிகாரத்தா னாயிரந்தா-னே நின்றுழியு மடையெடுத்து நின்றுழியு மளவுப் பெயரு நிறைப் பெயரும் வந்தால், வேற்றுமை யியல-மகர வீற்று வேற்றுமையோடொத்து வல்லெழுத்து வந்துழி மகரங் கெட்டு வல்லெழுத்து மிக்கு மியல்புகணம் வந்துழித்துவர வென்னு மிலேசா னெய்திய மகரங் கெட்டும் புணரு மென்றவாறு.

உதாரணம் : ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம் என நிறுத்திக் கலசம்[கலம்]சாடி தூதை பானை நாழிமண்டை வட்டில் அகல் உழக்கு எனவும், கஃசு கழஞ்சு தொடி துலாம் பலம் எனவுந்தந் தொட்டுக.

வேற்றுமை யியல வெனவே தாம் வேற்றுமையன்றா யிற்று. [யல்ல வாயின] [24]

320 படர்க்கைப் பெயரு முன்னிலைப் பெயருந்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயி னுருபிய னிலையு
மெல்லெழுத்து மிகுத லாவயி னான

இது [இஃது] உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரு முருபியலுண் முடிந்தவாறே யீண்டுப் பொருட்புணர்ச்சிக் கண்ணுமுடிகவென வெய்தாத தெய்து வித்தது.

[இ-ள்) படர்க்கைப் பெயரும் - எல்லாருமென்னும் படர்க்கைப் பெயரும், முன்னிலைப் பெயரும் - எல்லீரு மென்னுமுன்னிலைப் பெயரும்,தொடக்கங் குறுகும்பெயர் நிலைக்கிளவியும்-கிளைத்தொடர்ச்சிப் பொருளவாய்நெடு முதல் குறுகி முடியுந் தாம்நாம் யா மென்னும் பெயராகிய நிலைமையையுடைய சொல்லும்,வேற்றுமையாயினுருபிய னிலையும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணாயி னுருபு புணர்ச்சிக்குக் கூறிய இயல்பின்கண்ணே நின்று முடியும், ஆவயினான மெல்லெழுத்து மிகுதல் - மேல் நெடுமுதல் குறுகு மொழிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

எல்லாரு மென்பதனை மகரவொற்று முகரமுங் கெடுத்துரகரப் புள்ளியை நிறுத்திக் கை செவி, தலை புறம் எனத்தந்திடையிலே தம்முச் சாரியையு மிறுதியிலே யும்முச்சாரியை யுங்கொடுத்து எல்லார் தங்கையும் செவி யும் தலையும் புறமும் என முடிக்க.இதற்கு அம்மெனிறுதி யென்னுஞ் சூத்திரத்துடன் மெய்யென்றதனாற் பிற சாரி யைக்கண் மகர வொற்றுத் திரிந்து ஙஞநம] வாகு மெனச் செய்கை செய்துமுடிக்க.எல்லீரு மென்பதற் கிடை யிலே நும்முச் சாரியையு மிறுதியிலே யும்முச்சாரியையுங் கொடுத்து முற்கூறிய செய்கைக ளெல்லாஞ் செய்து எல்லீர்நுங்கையும் செவியும், தலையும், புறமும் என முடிக்க. தாம் நாங் என்பனவற்றை 'யேனையிரண்டு நெடுமுதல் குறுகும்' எனக்குறுக்கி 'மகர விறுதி'

யென்பதனுள் மகரங்கெடுத்துத் தங்கை, நங்கை. செவி, தலை, புறம் என முடிக்க. யாமென்பதனை ஆகாரத்தை யெகரமாக்கி யகரவொற்றைக் கெடுத்து மகரவிறுதி யென்பதனான் மகரங் கெடுத்து எங்கை செவி, தலை, புறம் என முடிக்க. தொடக்கங் குறுகுவனவற்றிற்கு இச் சூத்திரத்தான் மெல்லெழுத்து மிகுக்க.

உருபிய னிலையு மென்பதனான் வேற்றுமையாதல் பெறா நிற்கவும் பின்னும் வேற்றுமையாயினென்ற மிகை யானே படர்க்கைப்பெயரு முன்னிலைப் பெயரு மியல்பு கணத்து ஞகாரமு நகாரமும் வந்துழித் தம்முச் சாரியை யும் நும்முச்சாரியையும் பெறுதலு மகரங் கெட்டும்முப் பெறுதலு மாவயினானவென்றதனா னொற்றிரட்டுதலுங் கொள்க. எல்லார் தஞ்ஞாணும் எல்லீர் நுஞ்ஞாணும் நூலும் எனவரும்.

இனித் தொடக்கங் குறுகுவனவற்றிற்கு மவ்விரண் டிலேசானு மகரங்கெடுதலு மொற்றிரட்டுதலுங் கொள்க. தஞ்ஞாண் நஞ்ஞாண் எஞ்ஞாண் நூல் என வரும்.

இன்னு மாவயினான வென்றதனானே எல்லார்தம் எல்லீர்நும் என நின்றவற்றின் முன்னர் ஏனைமணி யாழ் வட்டு அடை யென்பன வந்துழி மகரங் கெடாமையும் உம்முப்பெறுதலுங் கொள்க.

இன்னுமிதனானே தொடக்கங்குறுகுவன வற்றிற்-குந் தம்மணி யாழ் வட்டு அடை என மகரங் கெடாமை (கெடாமையுங்)கொள்க.

இன்னு மிதனானே தமகாணம்நமகாணம் எமகாணம் நுமகாணம் என வுருபீற்றுச் செய்கைகளுங் கொள்க.

இன்னு மிதனானே நும்மென்பதற்கு மகரத்தை மெல்லொற்றாக்கி நுங்கைசெவி தலை புறம் எனவும்(என வருதலும்), நுஞ்ஞாணென வொற்றிரட்டுதலும், நும்வலி யெனமகரங் கெடாது நிற்றலுங் கொள்க.

இன்னு மிதனானே எல்லார் கையும் எல்லீர் கையு மெனத் தம்மும் நும்மும்பெறாது நிற்றலுங் கொள்க. (25)

321 அல்லது கிளப்பி னியற்கை யாகும்

இது முற்கூறிய மூன்று (பெயர்க்கு) பெயரு மல்வழி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) அல்லது கிளப்பி னியற்கையாகும்-அம்மூன்று பெயரு மல்வழியைச் சொல்லுமிடத்தியல்பாய் முடியு மென்றவாறு.

ஈண்டியல் பென்றது (ஈண்டு இயற்கை யென்றது) சாரியை பெறாமை நோக்கி. இவற்றி னீறு திரிதல் வல்வழி யெல்லா மென்றதனுலெல்லா மென்றதனாற் கொள்க.

உதாரணம் : எல்லாருங் குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், எல்லீருங் குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் எனவும், தாங்குறியர், சிறியர், தீயர், பெரியர், எனவும், நாங்குறியம் சிறியம், தீயம், பெரியம், எனவும், யாங்குறியேம், சிறியேம், தீயேம், பெரியேம், எனவும் வரும்.

இன்னு மெல்லா மென்றதனானே யிவற்றின் முன்னர் ஞகர நகரம் (ஞகார நகாரம்) வந்தாலவை யவ்வொற்றாய்த் திரிதல் கொள்க. எல்லாருஞ் ஞான்றார் நீண்டார் எனவும், எல்லீரு ஞான்றீர் நீண்டீரெனவும், தாஞ்ஞான்றார் நீண்டாரெனவும், நாஞ்ஞான்றாம் நீண்டாம் எனவும், யாஞ்ஞான்றேம் நீண்டேம் எனவும் வரும்.

இனியெல்லாரும் வந்தார்யாத்தார் அடைந்தார், எல்லீரும் வந்தீர் யாத்தீர் அடைந்தீர் எனவும், தாம், வந்தார் யாத்தார் அடைந்தார் எனவும், நாம் வருதும் யாத்தும்

அடைதும், யாம் வருவேம் யாப்பேம் அடைவேம் என ஏனைக்கணங்களில் முன்னர் மகரந் திரியாது நிற்றலு முயிரீறாகிய வியர்திணைப் பெயரு மென்பதனான் முடியும். (26)

322 அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணு
மெல்லா மெனும்பெய ருருபிய னிலையும்
வேற்றுமை யல்வ ழிச் சாரியை நிலையாது

இது (இஃது) இவ்வீற்றுள் விரவுப்பெயரு ளொன்றற் கல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கண்ணு முருபியலோடு மாட்டெறிந் தெய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் —அல்வழிக்கட் சொல்லினும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கட் சொல்லினும், எல்லாமெனும் பெயருருபிய னிலையும்-எல்லா மென்னும் விரவுப்பெயரு நுபு புணர்ச்சியி னியல்பிலே நின்று முடியும், வேற்றுமை யல்வழிச்சாரி யை நிலையாது- அப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியல்லாத விடத்துவற்றுச் சாரியை நில்லாதாய் முடியுமென்றவாறு.

உருபிய னிலையுமென்ற மாட்டேறல் வழிக்கண்ணும் முப்பெற்று நிற்றலும் பொருட் புணர்ச்சிக்கண்வற்று மும் மும்பெற்று நிற்றலு முணர்த்திற்று.

உம்முச் சாரியை பொன்றுமேபெற்றுமுடிக்கின்ற வல் வழியினையும் வற்று மும்மும் பெற்று முடிகின்ற வேற்று மையோ டுடனோதி யதுவும் வற்றுப் பெறுமாறு போல மாட்டெறிந்த மிகையானே வன்கணத் தல்வழிக்கண் நிலைமொழி மகரங்கேடும் வருமொழி வல்லெழுத்துப் பேறும் மென்கணத்து மகரங்கெட்டும்முப்பெற்றும் பெறா தும் வருதலும் ஏனைக்கணத்து மகரங்கெட்டும் முப்-பெற்றும் மகரங்கெடாதும்முப் பெறாதும் வருதலுங் கொள்க.

உதாரணம் : எல்லாக் குறியவும்,சிறியவும், தீயவும், பெரியவும் எனவும் எல்லாஞாணும் நூலும் மணியும் எனவும் எல்லா ஞான்றன நீண்டன மாண்டன எனவும், எல்லா யாழும் வட்டும் அடையும் எனவும், எல்லாம் வாடின ஆடின எனவும் வரும். இனி வேற்றுமைக்கண் எல்லாவற்றுக் கோடும் செவியுந் தலையும் புறமும் எனவிவை வற்றுமும்மும் பெற்றன. இவற்றிற் ந மகரம்வற்றின்மிசை யொற்றென்று கெடுக்க இனி மென்கணத்துக்கண் எல்லாவற்றுஞாணும் நூலும் மணியும் எனவும் ஏனைக்கணத்துக்கண் எல்லாவற்றியாப்பும் வலியும் அடையும் எனவும் வரும் ஏனைக்கணமும் வற்று மும்மும் பெற்றன. (27)

323 மெல்லெழுத்து மிகினு மான மில்லை.

இது வல்லெழுத்தே யன்றி விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி விலக்கிற்று.

இஃது ஒருசார் வல்லெழுத்தை விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) மெல்லெழுத்து மிகினு மானமில்லை—அவ்வெலாமென்ப தல்வழிக்கண் மேலிலேசினாற் (மேல் இலேசினாற்) கூறிய வல்லெழுத்தே யன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினுங் குற்றமில்லை என்றவாறு.

எனவே வல்லெழுத்து மிகுதலே பெரும்பான்மையாயிற்று. முற்கூறிய செய்கைமேலே யிது கூறினமையின் மகரக்கேடு மும்முப் பேறுங் கொள்க.

எல்லாங் குறியவும் சிறியவும் தீயவும் பெரியவும் என வரும்.

மானமில்லை யென்றதனா னுயர்திணைக்கண் வன்கணத்து மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கிறுதி யும்மும் பெற்று முடிதலுமியல்பு கணத்துக்கண் மகரங்கெட்டும்முப்

பெற்று முடிதலுங் கொள்க. எல்லாக் கொல்லரும் சான் றாரும் தச்சரும் பார்ப்பாரும் குறியரும் சிறியரும் தீயரும் பெரியரும் எனவும், எல்லா ஞான்றாரும் நாய்கரும் மணிகாரரும்(மணியகாரரும்) வணிகரும் அரசரும் எனவும் வரும்.

இன்னு மிதனானே உயர்திணைக்கண் எல்லாங் குறி யரும் சிறியரும் தீயரும் பெரியரும் என மகரங்கெட்டு மெல்லெழுத்து மிக்கும்முப்பெறுதலும், எல்லாங் குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறியீர் குறியம் எனவும், உம்முப் பெறாது வருதலுங் கொள்க.

இன்னு மிதனானே இடைக்கணத்து முயிர்க்கணத்து மகரங் கெடாதும்மின்றி வருதலுங்கொள்க, எல்லாம் வந் தேம் அடைந்தேம் எனவரும். [28]

324 உயர்திணை யாயி னுருபிய னிலையும்,

இது [இஃது] எல்லா மென்பதற் குயர்திணை முடிபு கூறுகின்றது.

[இ-ள்] உயர்திணையாயின் - எல்லாமென்ப துயர் திணையாய் நிற்குமாயின், உருபிய னிலையும்—உருபு புணர்ச்சியினியல்பே நின்றிடைக்கண் நம்மு மிறுதிக்கண் ணும்மும் பெற்று முடியுமென்றவாறு.

உருபியலு ளெல்லா மென்னு மிறுதி முன்னர்வற்றுச் சாரியை(வற்றென் சாரியை) வகுத்ததனான் வற்றின் மிசை யொற்றென்று மகரங் கெடுத்த வதிகாரத்தா னுயர் திணையாயி னம்மிடை வருமென நம்மின் முன்னு மகரங் கெடுத்தாரதனோ டீண்டு மாட்டெறிதலினது கொண் டீண்டு மகரங் கெடுக்க 'அம்மினிறுதி' யென்புழித் 'தன் மெய்' யென்றதனான் நம்முச் சாரியையினது மகரந்திரி தல் கொள்க.

எல்லா நங்கையும் செவியும் தலையும் புறமும் என ஒட்டுக.

வருமொழி வரையாது கூறலின் எல்லாநஞ்ஞாற்சி யும் நீட்சியுமென ஏற்பனவற்றோடு முடிவறிந்தொட்டுக. [29]

325 நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே

இது மகர வீற்றிற்கு வல்லெழுந்து விலக்கி மெல்லெ ழுத்து விதித்தது.

[இ-ள்] நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகும்– நும்மென்று சொல்லப்படுகின்ற விரவுப்பெயர் பொருட் புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

நுங்கை செவி தலை புறம் எனவரும். 'மகரவிறுதி' யென்பதனான் மகரங் கெடுக்க.

ஒன்றென முடித்த லென்பதனான் உங்கை யென்ப தூங் கொள்க. [என வருவ தூஉங் கொள்க]. துவரவென் றதனான் ஞகார நகாரங்கள் [ஞகர நகரங்கள்] வந்துழி மகரங் கெடுதலு மொருபெயரென்றதனா னொற்று மிகு தலுங் கொள்க. நுஞ்ஞாண் நூல் எனவரும். இன்னு மொருபெய ரென்றதனான் நும்மணி யாழ் வட்டு அடை என மகரங் கெடாமையுங் கொள்க. [30]

326 அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
யுக்கெட நின்ற மெய்வயி னீவர
இ இடை நிலைஇ யீறுகெட ரகர
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
யப்பான் மொழிவயி னியற்கை யாகும்.

இது நும்மென்பதற் கல்வழி முடிபு கூறுகின்றது.

[இ-ள்] அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை-நும்மென் பதனை யல்வழிக்கட் கூறுமிடத்து, உகெட நின்ற மெய்

வயி னீவர — நகரத்து ஞகரங்கெட்டுப்போக வொழிந்து நின்ற நகரவொற்றிடத்தே யீகாரம் (ஈகாரம்) வந்துநிற்ப, இ இடை நிலைஇ யீறுகெட — ஓரிகரமிடையிலே வந்து நிலைபெற்று மகரமாகிய வீறு கெட்டுப்போக, புள்ளி யொடு புணர்ந்து ரகரம் நிற்றல் வேண்டும் — ஆண்டுப் புள்ளிப்பெற்றோர் ரகரம்வந்து நிற்றலை விரும்புமாசிரி யன் (புள்ளி ரகரம் நிற்றல் வேண்டும்- ஆண்டுப் புள்ளிப் பெற்றுஒரு ரகரம் வந்து நிற்றலை விரும்புமாசிரியன்). அப்பால் மொழிவயின் — அக்கூற்றினையுடைய நிலை மொழியிடத்து வருஞ்சொல், இயற்கையாகும் - (வருஞ் சொல்) இயல்பாய் முடியுமென்றவாறு.

(உ-ம்) நீயிர் குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் எனவரும் சொல்லுங்காலை யென்றதனானே நீயிர்ஞான்றீர் நீண்டீர் மாண்டீர் யாத்தீர் வாடினீர் அடைந்தீர் என ஏனைக்கணத்தினு மொட்டுக. (31)

327 தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல

இது வேற்றுமைக்கண் மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு மல்வழிக்கண் மெல்லெழுத்தாய்த் திரிந்து வருமென வெய்தியதனை விலக்கி ஞகார (ஞகர) வீற்றுத் தொழிற் பெயர் போல நிற்குமெனப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) தொழிற்பெயரெல்லாம் - மகரவீற்றுத் தொழிற் பெயரெல்லாம், தொழிற்பெயரியல - ஞகாரவீற்றுத் தொழிற் பெயர்போல வல்வழியினும் வேற்றுமையினும் வன்கணத்துகரமும் வல்லெழுத்து மியல்பு கணத்துகரமும் பெற்றுமுடியு மென்றவாறு.

உதாரணம் : 'செம்முக்கடின், சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் செம்முக் கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலி மை, எனவும் வரும். 'தும்முச் செறும்ப' வென்பது மது. இவை குறியதன் முன்னர் தன்னுருபிரட்டும் (தன்னுரு விரட்டல்)

எல்லா மென்றதனா னுகரம் பெறாது நாட்டங்கடிது ஆட்டங்கடிது எனமெல்லெழுத்தா யல்வழிக்கண் திரிதலும் நாட்டக்கடுமை ஆட்டக்கடுமையென வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலுங் கொள்க. (32)

328 ஈமுங் கம்மு முருமென் கிளவியு
மாமுப் பெயரு மவற்றோ ரன்ன

இதுபொருட்பெயருட் சிலதொழிற் பெயரோடொத்து முடிகவென வெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) ஈமுங்கம்மு முருமென் கிளவியும் ஆமுப்பெயரும்-ஈமென்னுஞ் சொல்லுங் கம்மென்னுஞ் சொல்லு முருமென்னுஞ் சொல்லுமாகிய வம்மூன்று பெயரும், அவற்றோரன்ன-முற்கூறிய தொழிற்பெயரோடொரு தன்மைய வாய் வன்கணத்துகரமும் வல்லெழுத்து மியல்புகணத்துகரமும் பெற்று முடியுமென்றவாறு.

ஈம் (என்பது) சுடுகாடு. கம்-தொழில்.

உதாரணம்: ஈமுக்கடிது கம்முக்கடிது உருமுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது' எனவும் ஈமுக்கடுமை கம்முக்கடுமை உருமுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவை மொட்டுக.

கிளவியென்றதனான் வேற்றுமைக்கண்ணு மல்வழிக் கண்ணு முயிர்வருவழி யுகரம் பெறா தீமடைவு ஈமடைந்தது என நிற்றலுங் கொள்க.

தன்னின முடித்த லென்பதனால் அம்மு தம்மு நம்மு எனச் சாரியைக் கண்ணு முகரம் வருதல் கொள்க. (33)

329 வேற்றுமை யாயி னேனை யிரண்டுங்
தோற்றம் வேண்டு மக்கென் சாரியை

இது மேன் முடிபு கூறிய மூன்றனுளிரண்டிற்கு வேற்றுமைக்கண் வேறோர் முடிபு கூறு தனுதலிற்று. [கூறுகின்றது].

[இ-ள்] வேற்றுமையாயின் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சி யாயின், ஏனை யிரண்டுந் தோற்றம் வேண்டு [அக்கென்] மக்கென் சாரியை - இறுதியி லுருமொழிந்த விரண்டு மக்கென்னுஞ் [அக்கென்னுஞ்] சாரியை தோற்றி (தோன்றி) முடிதலை வேண்டுமாசிரியன் ரென்றவாறு வேண்டும்ஆசிரியன் என்றவாறு.

உதாரணம் : ஈமக்குடம் கம்மக்குடம் சாடி தூதை பானை எனவும், ஞாற்சி நெருப்பு மாட்சி விறகு எனவு மொட்டுக.

அக்கு வகுப்பவேநிலைமொழித் தொழிலாகியஉகரங் கெட்டு முற்கூறிய வல்லெழுத்து விலக்கப்படாமையி-னின்று முடிந்தது.

வன்கணத்திற்கு முன்னின்ற சூத்திரத்துக் (சூத்திரத்திற்) கூறியது குணவேற்றுமைக்கென்று மீண்டுக்கூறியது பொருட்புணர்ச்சிக் கென்றுங் கொள்க. (34)

330 வகார மிசையு மகாரங் குறுகும்

இது முன்னரரையளபு குறுகலெனவும் (முன்னர் அரையளவு குறுகல் எனவுங்கூறிய) னகாரை முன்னரெனவுங் கூறிய மகரமிகு மொழிக்கண்ணுங் குறுகுமெனத் தன்னீற்றகத்து (குறுகுமென அதன் ஈற்றகத்து)எய்தாத தெய்துவிக்கின்றதுமரம்.

(இ-ள்) வகார மிசையு மகாரங் குறுகும்-மகாரமொரு மொழிக் கண்ணே (யன்றி) வகாரத்தின் மேலுங்குறுகு மென்றவாறு.

உதாரணம் : நிலம் வலிது என வரும்வண்ணக்கன் எனவரும். 35

331 நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
வத்து மான்மிசை வரைநிலை யின்றே
யொற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்

இது [இஃது] இவ்வீற்று நாட்பெயர்க்கு வேற்றுமை முடிபு கூறுகின்றது.

[இ-ள்] நாட்பெயர்க் கிளவி மேற்கிளந்தன்ன- மகர வீற்று நாட்பெய ரிகரவீற்றுநாட்பெயர்போல வான் ஆள் சாரியைப்பெற்று முடியும், அத்துமான்மிசை வரைநிலை யின்று-அத்துச் சாரியையான்சாரியைமேலும் பிறசாரியை மேலும் வருதனீக்கு நிலைமையின்று, ஒற்றுமெய் கெடுத லென்மனார் புலவர்-ஆண்டு நிலைமொழி மகரவொற்றுக் கெடுகவென்று கூறுவர் புலவரென்றவாறு.

உம்மையை யான்மிசையுமென மாறுக

உதாரணம் :— மகத்தாற் கொண்டான் ஓணத்தாற் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் என்றே னை [என்க ஏனை] நாட்களோடு மொட்டுக. மகரவொற் றுக்கெடுத்தத்தி னகர மகரமுனை யில்லையென அகாங் கெடுத்துக் குற்றிய லுகரமு மற்றென [என] ஆனேற்றி ஆனினகரமு மென்பதனான் [என்றதனான்] றகரமாக்கி, முடிக்க. மகத்து ஞான்று கொண்டான் சென்றான், தந் தான், போயினான் என ஞான்றென்னுஞ் சாரியை மே லத்து வந்தது.

வரையாது கூறினமையின்முடிபு நான்தகணத்துங் கொள்க. மகத்தான் ஞாற்றினான், நிறுத்தான் [நிறுத்தி னான்] மாய்ந்தான், வந்தான், அடைந்தான் எனவரும்

(36)

332 னகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே

இது நிறுத்த முறையானே னகார வீறு [னகர இறுதி] வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

[இ-ள்] னகார விறுதி வல்லெழுத் தியையின் றகார மாகும்—னகார வீற்றுப் பெயர் வல்லெழுத்துமுதன்மொழி வருமொழியாய் வந்தியையிற் றகாரமாகும், வேற்றுமைப் பொருட்கே—வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்க ணென்ற வாறு.

உதாரணம் :— பொற்குடம், சாடி, தூதை, பானை என வரும். [37]

333 மன்னுஞ் சின்னு மானு மீனும்
பின்னு முன்னும் வினையெஞ்சு கிளவியு
மன்ன வியல வென்மனார் புலவர்

இது [இஃது] அவ்வீற் றசைநிலையிடைச் சொற்களு மேழாம் வேற்றுமை யிடப்பொருளுணர நின்ற விடைச் சொற்களும் வினையெச்சமு முடியுமாறு கூறுகின்றது.

[இ-ள்] மன்னுஞ் சின்னு மானு மீனும் பின்னு முன்னுஞ் வினையெஞ்சு கிளவியும்-மன்னென்னுஞ் சொல்லுஞ் சின்னென்னுஞ் சொல்லு மானென்னுஞ் சொல்லுமீனென்னுஞ் சொல்லும்பின்னென்னுஞ் சொல்லு முன்னென்னுஞ் சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், அன்னவியல வென்மனார் புலவர்—முற்கூறிய வியல்பினை யுடைய வாய் னகரம் றகரமாய் முடியுமென்று சொல்லுவர் புலவ ரென்றவாறு.

உதாரணம் :— ''அதுமற்கொண்கன் றேரே'' ''காப்பும் பூண்டிளற் கடையும் போகல்'', எனவும், ஆற்கொண்டான், ஈற்கொண்டான், பிற்கொண்டான், முற்கொண்

டான், சென்றான், தந்தான், போயினான், எனவும், வரிற்கொள்ளும் செல்லும் தரும் போம் எனவும் வரும்.

பெயராந் தன்மைய வாகிய வானீ (ஆண்ஈன்)னென் பனவற்றை முற்கூறாததனான் ஆன்கொண்டான், ஈன் கொண்டான் எனத்திரியாமையுங் கொள்க.

பின் முன்னென்பன பெயரு முருபும் வினையெச்சமு மாம் நிற்றலிற் பெயரீண்டுக் கூறினார் ஏனைய வுருபிய லுள்ளும் வினையெஞ்சு கிளவியென்பதன் கண்ணு முடியும் அப்பெயரை முற்கூறாததனாற் பின்கொண்டான், முன் கொண்டான் எனத்திரியாமையுங் கொள்க.

இயல வென்றதனான் ஊனென்னுஞ் சுட்டு ஊன் கொண்டானென விபல்பாய் முடிதல் கொள்க. (38)

334 சுட்டுமுதல் வயினு மெகரமுதல் வயினு மப்பண்பு நிலையலு மியற்கைய வென்ப

இது (இஃது) இவ்வீற்று ளேழாம் வேற்றுமை யிடப் பொருளுணர்ந்து மிடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) சுட்டுமுதல் வயினும் - சுட்டெழுத்தினை முத லாக வுடைய வயினென்னுஞ் சொல்லும், எகரமுதல்வயி னும் எகார (எகரமாகிய) முதல் வினாவினையுடைய வயி னென்னுஞ் சொல்லும், அப்பண்பு நிலையலு மியற்கைய வென்ப - மேல்னகரம் றகரமாமென்ற தன்மை நிலை பெற்று முடியுமியல்பை யுடையவென்று கூறுவாராசிரிய ரென்றவாறு.

உதாரணம் :- அவ்வயிற் கொண்டான் இவ்வயிற் கொண்டான், உவ்வயிற் கொண்டான், எவ்வயிற் கொண் டான், சென்றான், தந்தான் போயினான் எனவரும்.

இயற்கைய வென்றதனாற் றிரியா தியல்பாய் முடி வனவுங் கொள்க. (39)

335 குயினென் கிளவியு மியற்கை யாகும்

இதுனகரந் திரியாதியல்பாக வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) குயினென் கிளவியு மியற்கையாகும் - குயி னென்னுஞ் சொற்றிரியா தியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் :- குயின்குழாம், செலவு, தோற்றம், பறைவு எனவரும். குயினென்பது மேகம். அது (அஃது) அஃறிணைப் பெயர்,

தொகை மரபினுளுயர்திணைப்பெயரும் விரவுப்பெயரு மியல்பாக வென்றார்.

குயின் வினையுமாம்.

(இயற்கை யென்றதனார் கான்கோழி கோன்குணம் வான்கரை எனவருவனவுங் கொள்க.) (40)

336 எகின்மர மாயி னாண்மர வியற்றே

இது திரிபு விலக்கியம்மு வகுத்தலி னெய்தியது விலக் கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்) எகின்மரமாயின் - எகினென்பது புள்ளன்றி மரப் பெயராயின், ஆண்மர வியற்று - ஆண்மரத்தினியல் பிற்றா யம்முப் பெற்று முடியுமென்றவாறு.

எகினங்கோடு, செதிள், தோல், (பூ)எனவரும் [41]

337 ஏனை யெகினே யகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்

இதுவுமது, திரிபு விலக்கி யகரம்[அகரம்]விதித்தலின்

[இ-ள்] ஏனை யெகினே யகரம் வருமே - மரமல்லாத வெகி னிலைமொழிக்க ணகரம் வந்து முடியும்[பெற்றுமுடி

யும்] வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும் - ஆண்டு வருமொழி வல்லெழுத்தினியல்பு மிக்கு முடிதலை வேண்டு மாசிரிய ரென்றவாறு. [ஆசிரியன் என்றவாறு]

உதாரணம் :- எகினக்கால் செவி தலை புறம் என வரும். மேலைச் சூத்திரத்தோடிதனை யொன்றாக வோ தாததனானியல்பு கணத்தும் அகரப் பேறு கொள்க. எகி னஞாற்சி,நீட்சி, மாட்சி, வலிமை, யாப்பு, அடைவு என வரும்.

இயற்கை யென்றதனான் அகரத்தோடு மெல்லெ ழுத்துப் பேறுங் கொள்க. எகினங்கால்,செவி, தலை,புறம் எனவரும்.

இனிச் சிறுபான்மை எகின் சேவல் எகினச்சேவல் பெடை என்பன ஆறனுருபு விரிவுழி யீண்டை யிலேசான் முடிக்க. பண்பு கருதியவழி யிவ்வோத்தின் புறநடை யான் முடிக்க. [42]

338 கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல

இது னகரந் திரிதலை விலக்கி யியல்பாக வென்றலீ னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

[இ-ள்]கிளைப்பெயரெல்லாம் கிளைப்பெயரியல-னக ரவிற்றுக்கிளைப் பெயரெல்லாம்-ணகர வீற்றுக் கிளைப் பெயர் போலத் திரியாதியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் :- எயின்குடி, சேரி, தோட்டம், பாடி எனவரும். எயின் வந்ததென [எயின் வந்தது என்று] வஃ றினைக்கு மெய்துதலிற் றொகை மரபினுண் முடியா வாயிற்று [முடியாதாயிற்று] ஆண்டுயர் திணைக்கே கூறு தலின்.

*இன்னுமிதனானே பார்ப்பனக் கன்னி, குமரி[சேரி], பிள்ளை. என ஆகாரங் குறுகியக்கும் [அக்கும்]வல்லெழுத்

*இனி யெல்லாமென்றதனானே, எயினக்கன்னி பிள்ளை யெனவக்கும் வல்லெழுத்தும் பெறுதலும், எயினவாழ்வென் வல் லெழுத்துப் பெறாமையுங் கொள்க.

துங் கொடுத்தும் பார்ப்பன வாக்கை (பார்ப்பன வாழ்க்கை) யென வல்லெழுத்துக் கோடாதும் முடிக்க.

இன்னு மிதனானே நான்கு கணத்துக் கண்ணும் வெள்ளாளனென நின்றதனை யன்கெடுத்துப் (அன் கெடுத்துப் பிரித்துணகரவொற்றினை ணகர வொற்றாக்கி வெள்ளாண் குமரி பிள்ளை மாதர் (மாந்தர்) வாழ்க்கை ஒழுக்கம் எனமுடிக்க.

இன்னுமிதனானே முதலெழுத்தைநீட்டி ளகர (ளகார) வொற்றினைக் கெடுத்து வேளாளனெனவு(வேளாணென) முடிக்க.

இன்னு மிதனானே பொருந வாழ்க்கையு முடிக்க.

வேட்டுவக் குமரி யென்பது மருவழக்கு (மரூஉவழக்கு) (43)

339 மீனென் கிளவி வல்லெழுத் துறழே

இதுவுமதுதன் றிரிபினோடு(திரிபுவல்லெழுத்தினோடு) உறழ்க வென்றலின்.

(இ-ள்) மீனென் கிளவி வல்லெழுத்துறழே - மீனென்னுஞ் சொற்றிரிபு வல்லெழுத்தினோ டுறழ்ந்து முடியுமென்றவாறு.

உதாரணம்:-மீன்கண் மீற்கண், மீன்சினை மீற்சினை (மீன்செவி மீற்செவி) மீன்றலை மீற்றலை மீன்புறம் மீற்புறம் எனவரும். உறழ்வே எனவும் பிரதிபேதமுண்டு.(44)

340 தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை யொத்தலும் வல்லெழுத்து மிகுதலு
மாமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை
இதுவுமது மேலதனோடு மாட்டெறிதலின்.

(இ-ள்) தேனென் கிளவி வல்லெழுத் தியை யின் — தேனென்னுஞ்சொல் வல்லெழுத்து முதன்மொழி வரு மொழியாய் வரின், மேனிலை யொத்தலும்—மீனென்பதற் குக் கூறிய திரிபுறழ்ச்சி நிலையொத்து முடிதலும், வல்லெ ழுத்து மிகுதலும் - வருமொழி வல்லெழுத்து மிக்கு முடித லுமாகிய, ஆமுறை யிரண்டு முரிமையு முடைத்தே - அம் முறைமையினையுடைய விரண்டினையு முரித்தாதலையு முடைத்து, வல்லெழுத்து மிகுவழி யிறுதியில்லை - வல் லெழுத்து மிக்கு வருமிடத்திறுதி னகரங் (இறுதியினின்ற னகரங்) கெடுமென்றவாறு.

உரிமையு மென்னு மும்மை 'மெல்லெழுத்து மிகினும்' எனமேன் வருகின்றதனை நோக்கிற்று.

உதாரணம்:-தேன்குடம், தேற்குடம், சாடி, தூதை, பானை என மேனிலை யொத்தன. தேற்குடம், சாடி, தூதை, பானை என னகரங் கெட்டு வல்லெழுத்து மிக்கன. (45)

341 மெல்லெழுத்து மிகினு மான மில்லை

இதுவுமது, உறழ்ச்சியும் வல்லெழுத்தும் விலக்கி மெல் லெழுத்து விதித்தலின்.

(இ—ள்) மெல்லெழுத்து மிகினுமான மில்லை - முற் கூறிய தேனென்கிளவி வல்லெழுத்து வந்தால்வ் வல்லெ ழுத்து மிகுதலேயன்றி மெல்லெழுத்து மிகினுங் குற்றமில் லை யென்றவாறு.

னகரக்கேடு அதிகாரத்தாற் கொள்க.

உதாரணம்:- தேங்குடம், சாடி, தூதை, பானை என வரும். (46)

342 மெல்லெழுத் தியையி னிறுதியெ ரூற்றும்

இது தொகை மரபினுள் 'வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தல்வழி' யென்பதனாற் கூறிய வியல்பை விலக்கி யுறழ மென்றலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி (வகுத்தது).

(இ-ள்) மெல்லெழுத் தியையின்-அத்தேனென்கிளவி மெல்லெழுத்து முதன்மொழி வந்தியையின், இறுதியொடுறழும்-நிலைமொழி யிறுதியி னகர வொற்றோடு (னகர வொற்றுக்) கெடுதலுங் கெடாமையு மாகிய வுறழ்ச்சியாய் முடியுமென்றவாறு.

உதாரணம்: தேன்ஞெரி தேஞெரி தேனுனி தேநுனி தேன்மொழி தேமொழி எனவரும்.

மேலாமுறை யென்றதனான் (மேல் ஆமுறை யென்ற தனான்) தேஞெரி தேஞ்ஞெரி தேநுனிதேந்நுனி தேமொழி தேம்மொழி என னகரங் கெட்டுத் தத்தமெல்லெழுத்து மிக்கும் மிகாது முடிந்தனவுங் கொள்க.

இனிமேல் மானமில்லை யென்றதனா னீறு கெட்டு மெல்லெழுத்து மிகாதே யியல்பாய (மிகாது இயல்பாய்) முடிவனவுங் கொள்க. (கொண்டு) தேஞெரி தேநுனி தேமுரி (தேமொழி) என்பன காட்டி னவை முற்கூறியவற்றுளடங்குமென்க. (47)

343 இறா அற் றோற்ற மியற்கை யாகும்.

இது(இஃது)அத் தேனென்பதற் குயிர்க் கணத்தொரு மொழிமுடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) இறா அற்றோற்றம்-தேனென்னுஞ் சொல் லிறாலென்னும் வருமொழியது தோற்றத்துக்கண், இயற் கையாகும்-நிலைமொழியி னகரங் கெடாதே நின்றியல் பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் :— தேனிறால் எனவரும். (48)

344 ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே

இதுவுமதற் கெய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

(இ-ள்) ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்து— அத்தேனென்பதிறாலோடு புணருமிடத்துப் பிறிதுமோர் தகர வொற்றுடன் மிகுந்த தகரத்தோடு நின்றுமுடிதலு முரித்துப் பிறசாரியை பெற்று முடிதலு முரித்தென்றவாறு (தகரத்தோடு நின்று முடிதலும் உரித்து என்றவாறு)

வல்லெழுத்து வருவழி (மிகுவழி) யிறுதியில்லை யென்றதனா னிலைமொழி யீறுகெடுக்க. தகர மிகுமென்னா தொற்று மிகுமென்றதனா னீரொற்றாக்குக.

உதாரணம்: தேத்திறால் (தேனிறால்) எனவரும்.

மேலைச் சூத்திரத்தோடிதனை யொன்றாக வோதாததனாற் பிறவருமொழிக் கண்ணு மிம்முடிபு கொள்க தேத்தடை தேத்தீ எனவரும்.

தோற்றமென்றதனால் தேனடை தேனீ என்னுமியல்புங் கொள்க. (49)

345 மின்னும் பின்னும் பன்னுங் கன்னு
மந்நாற் சொல்லுந் தொழிற்பெய ரியல

இது (இஃது) அல்வழிக்கணியல் பாயும் வேற்றுமைக் கட்டிரிந்தும் வருக வென் றெய்துவித்த முடிபை விலக்கித் தொழிற்பெய ரியல்பாமெனப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) மின்னும் பின்னும் பன்னுங் கன்னு மந்நாற் சொல்லும்— மின்னென்னுஞ் சொல்லும் பின்னென்னுஞ் சொல்லும் பன்னென்னுஞ் சொல்லும் கன்னென்னுஞ் சொல்லுமாகியவந்நான்கு சொல்லும், தொழிற்பெயரியல்-

அல்வழியினும் வேற்றுமையினு ஞகார வீற்றுத் தொழிற் பெயர்போல வன்கணத்துகரமும் வல்லெழுத்தும் மென் கணத்து மிடைக்கணத்து வகரத்து முகரமும் பெற்று முடி யுமென்றவாறு.

'மின்னுச்செய் விளக்கத்துப் பின்னுப்பிணி யவிழ்ந்த, எனவும், பன்னுக்கடிது கன்னுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், மின்னுக் கடுமை பின்னுக் கடுமை பன்னுக்கடுமை கன்னுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை என வும் வரும்.

தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெயரியல வென் றோதாது கிளந்தோதினாரிவை தொழினிலைக் கண் ணன்றி வேயு தம்பொரு ளுணர நின்றவழியு மிம்முடி பெய்து மென்றற்கு.

மின்னென்பது மின்னுதற்றொழிலும் 'மின்னு நிமிர்ந் தன்ன' வென மின்னெனப் படுவதோர் பொருளு முணர்த் தும் ஏனையவு மன்ன. [50]

346 வேற்றுமை யாயி னேனை யெகினொடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி

இது நிலைமொழிக்கண்ணுகரம் விலக்கியகரம் வகுத் தலினெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(அ-ள்)வேற்றுமை யாயினேனை யெகினொடு தோற் றமொக்கும்-வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயி னொ ழிந்த மரமல்லாத வெகினோடு தோற்றமொத் தகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும். கன்னென்கிளவி—கன் னென்னுஞ் சொல்லென்றவாறு.

உதாரணம் :- கன்னக்குடம் சாடி தூதை பானை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவரும். கன்னக்கடுமை யெனக் குணவேற்றுமையுஞ் சிறுபான்மை கொள்க.

தோற்ற மென்றதனா னல்வழிக்கண் வன்கணத் தக ரமு மெல்லெழுத்து மேனைக் கணத்தகரமுங் கொள்க.கன் னங் கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண் டது வலிது எனவும் வரும். கன்னங்கடுமை யெனக்குண வேற்றுமைக் கண்ணு மிவ்விதி கொள்க.

'பொன்னகர் வரைப்பிற் கன்னந் தூக்கி'யென்பதோ வெனினது மகார (மகர) வீற்றுப் பொருட் பெயராம் (பொருட்பெயர்) (51)

347 இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட வகர நிலையு
மெய்யொழித் தன்கெடு மவ்வியற் பெயரே.

இது [இஃது] அஃறிணை விரவுப்பெயரியல்யுமா ருள வேயென்றதற் கீண்டுத் திரிபுகூறுதலி னெய்தாத தெய்து வித்தது.

[இ-ள்] இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்- இவ்வீற்று விரவுப்பெயரு ளியற்பெயரின் முன்னர்த் தந் தை யென்னு முறைப்பெயர் வருமொழியாய்வரின் [வரு மாயின்],முதற்கண் மெய்கெட வகரநிலையும்-அத்தந்தை யென்பதன் முதற்கணின்ற தகரவொற்றுக் கெட வதன் மேலேறி நின்ற வகரங் [அகரங்] கெடாது நிற்கும், அவ் வியற்பெயர் மெய்யொழித் தன்கெடும் - அந்நிலைய மொழியுமாகிய வியற்பெயரன் னென்னுஞ்சொல்லி லகர மேறிநின்ற மெய்மை [மெய்யை யொழுத்தவ்வன்றான் கெட்டு முடியுமென்றவாறு.

உதாரணம் ; சாத்தந்தை கொற்றந்தை எனவரும்.

முதற்கண் மெய்யென்றதனால் சாத்தன் றந்தை கொற்றன் றந்தை யென்னுமியல்பு முடிபுங் கொள்க.[52]

348 ஆதனும் பூதனுங் கூறிய வியல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே.

இது மேலதற் கெய்தியதன் மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) ஆதனும் பூதனும்—முற்கூறிய வியற்பெயருளாதனும் பூதனுமென்னு மியற்பெயற்க டந்தை யென்னு முறைப்பெயரோடு முடியுங்கால், கூறிய வியல்பொடு-முற்கூறிய நிலைமொழி யன்கெடுதலும் வருமொழித் தகர வொற்றுக் கெடுதலுமாகிய செய்கைகளுடனே, பெயரொற்றகரந் துவரக்கெடுமே - நிலைமொழிப் பெயரி லன்கெட நின்றதகரவொற்றும் வருமொழியிற்றகர வொற்றுக்கெட நின்ற வகரமு[அகரமு]முற்றக்கெட்டு முடியுமென்றவாறு.

உதாரணம்:- ஆந்தை பூந்தை எனவரும்.

இயல்பென்றதனாற் பெயரொற்றும்அகரமுங் கெடாதே நிற்றலுங்கொள்க. ஆதந்தை பூதந்தை எனவரும்.

இனித்துவர வென்றதனான் அழான் புழான் என நிறுத்தித் தந்தையென வருவித்து நிலைமொழி னகரமும் வருமொழித் தகரமும் அகரமுங் கெடுத்து அழாந்தை, புழாந்தை எனமுடிக்க. [53]

349. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்

இது[இஃது] எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] சிறப்பொடு வருவழி—அவ்வியற் பெயர் பண்படுத்து வருவழி (வரும்வழி)இயற்கையாகும்—முற்கூறிய விருவகைச் செய்கையுந் தவிர்ந்தியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம்:- பெருஞ்சாத்தன்றந்தை பெருங்கொற்றன் றந்தை எனவரும். கொற்றங் கொற்றன் றந்தை சாத்தங் கொற்றன்றந்தை என்றாற் போல்வன பண்பன்றி யடையடுத்தன வாதலிற் புறனடையான் முடிக்க. (54)

350. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியு
நிற்றலு முரித்தே யம்மென் சாரியை
மக்கண் முறைதொகூஉ மருங்கி னான

இது மேலதற்கு வேறோர் வருமொழிக்க ணெய்தாத தெய்துவித்தது.

[இ-ள்] அப்பெயர் மக்களான முறை தொகூஉ மருங்கினும்—அவ்வியற் பெயர் முன்னர்தந்தை யன்றி மகனாகிய முறைப்பெயர் வந்து தொகுமிடத்தினும் [பிறபெயர் வந்து தொகுமிடத்தினும்] மெய் யொழித்தன்கெடு வழி [யே] யம்மென் சாரியை நிற்றலு முரித்து - அவ்வியற் பெயரிற்றானேறிய மெய்நிற்க வன்கெடுமிடத் தம்முச் சாரியை [பெயரில் தான் ஏறிய மெய்நிற்க அன்கெட்டு அம்முச்சாரியை] வந்து நிற்றலு முரித்தென்றவாறு.

ஆன வென்பதனை மக்களோடு மும்மையை மருங்கினோடுங்கூட்டுக, முறை தொகூஉ மருங்கி னென்றதுஇன்னாற்கு மகனென்னு முறைப் பெயராய்ச் சேருமிடத்தென்றவாறு.

உதாரணம்:— கொற்றங் கொற்றன், (சாத்தங்கொற்றன்] என நிலைமொழி யன்கெட்டுழி யம்மு வந்தது இவற்றிற்கு கஅதுவெ னுருபு விரியாதத னுடைமைப் பொருள் விரிக்க. இது முறைப் பெயர்.

இனிக் (உம்மையாற்) கொற்றங்குடி, சாத்தங்குடி எனப் பிறபெயர் தொக்கனவுங் கொள்க.

மெய்யொழித் தென்றதனானே கொற்றமங்கலம், சாத்தமங்கலம் என்பனவற்றின்கணம்மின் மகரங் கெடுதலும் வேட்டமங்கலம்,வேட்டங்குடி என்பனவற்றி னிலைமொழி யொற்றிரட்டுதலுங் கொள்க. (55)

- 51. தானும் பேனுங் கோனு மென்னு

மாமுறை யியற்பெயர் திரிபிட னிலவே

இது மேலதற் கொருவழி யெய்தியது விலக்கிப்பிறிது விதி [வகுத்தது]

[இ-ள்] தானும் பேனுங் கோனு மென்னு மாமுறை யியற்பெயர் - அவ்வியற் பெயருட்டானும் பேனுங்கோனு மென்னு மம்முறைமையினை யுடைய வியற்பெயர்க டந்தை யொடும் மக்கண் முறைமையொடும் புணரும்வழி, திரிபிடனிலவே—முற்கூறிய திரிபுகளின்றி யியல்பாய் முடியு மென்றவாறு.

உதாரணம் :- தான்றந்தை பேன்றந்தை கோன்றந்தை எனவும், தான்கொற்றன் பேன்கொற்றன் கோன்கொற்றன் எனவும் வரும். பேன் கோன் என்பன விக்காலத்தரிய வென்க (முற்காலத்து வழக்கு) இவைதொகை மரபினு ''ளஃறிணை விரவுப்பெய' ரென்புழி', (இயல்பாயின வேனும் யியல்பாயிற்றேனு மீண்டிவ் வீற்றிற்குத் திரிபு கூறுதலினதனையும விலக்கி யியல்பா மென்பதுங் (மென்பதூஉங்) கூறினார், (56

352 தான்யா னெனும்பெய ருருபியனிலையும்.

இது (இஃது) எய்தியது விளக்கிப் பிறிது விதி வகுத்தது. தொகை மரபினு 'ளஃறிணை விரவுப்பெய' ரென்பதனா னியல்பாய் நின்றதானென்பதனையு 'முயிரீறாகிய' வென்பதனானியல்பாய் நின்ற யானென்பதனையு மவ்வியல்பு விலக்கி யுருபியலோடு மாட்டெறிதலின்.

(இ-ள்) தான்யா னெனும் பெயர்- தானென்னும் விரவுப் பெயரும்யானென்னு முயர்திணைப்பெயரும்உருபியல் நிலையும்-உருபியலிற் கூறிய வியல்பிலே நிலைபெற்றுத் தானென்பது நெடுமுதல் குறுகித் தன்னென்றும், யானென்ப தாகார மெகரமா [ஆகாரம் எகரமா]யகரங் கெட்டென்னென்றும் முடியு மென்றவாறு,

உதாரணம் :- தன்கை என்கை செவி தலை புறம் என வரும்.

வருமொழி வரை யாது கூறினமையினியல்பு கணத்துக் கண்ணுந் தன் ஞாண் என் ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை ஆடை எனவும் வரும். (57)

353 வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலுந்
தோற்ற மில்லை யென்மனார் புலவர்

இது (இஃது) அல்வழிக் கணியல்பாக வென்றலி னெய்தாத தெய்து வித்தது.

[இ-ள்] வேற்றுமை யல்வழி - முற்கூறியதான் யா னென்பன வேற்றுமைப் புணர்ச்சியல்லாத விடத்து, குறு கலுந் திரிதலுந் தோற்றமில்லை யென்மனார் புலவர்— தானென்பது நெடுமுதல் குறுகுதலும் யானென்பதவ்வாறு திரிதலுந் தோற்றமின்றி யியல்பாய் முடியுமென்று கூறு வர் புலவரென்றவாறு.

உதாரணம் :- தான் குறியன் சிறியன் தீயன் பெரி யன்ஞான்றான் நீண்டான் மாண்டான் [வலியன்] என வும், யான்குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் ஞான் றேன் நீண்டேன்மாண்டேன் [வலியேன்] எனவும் வரும்.

தோற்ற மென்றதனான் வேற்றுக்கண்ணவ்வாறன்றி னகரந் திரிதலுங் கொள்க. தற்புகழ் தற்பாடி எற்புகழ் எற்பாடி எனவரும். [58]

354 அழனெ னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே

இது வேற்றுமைக்கண் னகரந் (அகரந்) திரியாது கெடுக வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) அழனெ னிறுதிகெட-அழனென்னுஞ் சொற் றன்னீற்று னகரங்கெட, வல்லெழுத்து மிகுமே—வல்லெ ழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம் :- அழக்குடம் சாடி தூதை பானை என வரும். அழக்குட மென்பது பிணக்குடத்தை. (59)

355 முன்னென் கிளவி முன்னர்த் தோன்று
மில்லென் கிளவிமிசை றகர மொற்ற
றொல்லியன் மருங்கின் மரீஇய மரபே.

இது ''மருவின் றொகுதி'' யென்பதனாற் கூறிய விலக்கண மருஉக்களி லொன்றற்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) முன்னென் கிளவி முன்னர்த் தோன்று மில் லென் கிளவிமிசை - முன்னென்றுஞ் சொல்லின் முன்னே வருமில்லென்றுஞ் சொல்லின் மேலே, றகரமொற்றல்-ஒரு றகர வொற்று வந்துநின்று முடிதல், தொல்லியன் மருங் கின் மரீஇய மரபே-பழையதாகிய வியல்பினையுடைய வழக்கிடத்து மருவி வந்த விலக்கண முடிபென்றவாறு.

உதாரணம்: - முன்றில் எனவரும். இல்முன்னென நிற்கற் பாலது முன்றி லென்று தலை தடுமாறுதலின் மரு வாயிற்று. (மருஉ வாயிற்று). முன்னென்பதற் கொற்றி ரட்டுத லிலக்கண மேனு மதுவன்றித் தனக் கினமாயதோர் றகர வொற்றுப் பெறுதலின் வேறு முடிபாயிற்று. (60)

356 பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ்
செய்யுண் மருங்கிற் றொடரிய லான.

இது இவ்வீற்றிற்குச் (இஃது அவ் வீற்றுப்பெய ரொன்றற்குச்) செய்யுண் முடிபு கூறுதலி னெய்தாத தெய்து வித்தது.

இதன் பொருள்:- பொன்னென் கிளவி யீறுகெட- பொன்னென்னுஞ் சொற் றன்னீறாகிய னகரங் கெடா நிற்க, முன்னர் லகார மகார முறையிற் றோன்றும்-

அதன் முன்னர் லகாரழ (லகரழம்) மகரவொற்றும் முறை யானே வந்து நிற்கும். செய்யுண் மருங்கிற்றொடரியலான அங்ஙனிற்பது (அங்ஙனம் நிற்பது) செய்யுளிடத்துச் சொற் றம்முட் டொடர்ச்சிப் படுமியல்பின் கண்ணென்றவாறு.

முறையி னென்றதனான் மகர மொற்றாதல்கொள்க.

உதாரணம்:- ''பொலம்படப் பொலிந்த கொய்சுவற் புரவி'' எனவரும்.

தொடரியலான வென்றதனானேனை வன்கணத்துக் கண்ணும் லகரம் நிற்க மகரம் வல்லெழுத்திற்கேற்ற மெல் லெழுத்தாய்த்திரிதல் கொள்க. 'பொலங்கலஞ் சுமந்த பூண்டாங்கிள முலை' 'பொலஞ்சுட ராழி பூண்டதேரே. 'பொலந் தேர்க்குட்டுவன்' எனவரும்.

இன்னு மிதனானே 'பொல நறுந் தெரியல்' பூளை பொல மலரா விரை' என்றாற்போல மகரங் கெட்டுப் பிற கணத்து முடிதலுங் கொள்க. (61)

357 யகர விறுதி வேற்றுமைப் பொருள்வயின்.
வல்லெழுத் தியையி னவ்வெழுத்து மிகுமே-

இது முறையானே யகார வீற்றிற்கு (யகர ஈற்றிற்கு) வேற்றுமை முடிபு கூறுகின்றது.

(இ-ள்) யகர விறுதி வேற்றுமைப் பொருள் வயின்- யகர வீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் வல்லெழுத்து மிகுமே-வல்லெழுத்து முதன் மொழி வந்தி யையினவ்வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்:-நாய்க்கால் செவி தலைபுறம் எனவரும். (62)

358 தாயென் கிளவி யியற்கை யாகும்.

இதுவிரவுப்பெயரு ளொன்றற் கெய்திய வல்லெழுத்து விலக்கிப் பிறிது விதி வகுத்தது. (இது விரவுப் பெயரு ளொன்றற்கு)

இதன் பொருள்: தாயென் கிளவி யியற்கை யாகும்—தாயென்னுஞ் சொல் வல்லெழுத்து மிகா தியல்பாய்முடியு மென்றவாறு.

உதாரணம்: தாய்கை செவி தலை புறம் எனவரும்.

மேலிற் (மேலைச்) சூத்திரத்தான் மிகுதியுங் கூறலி (கூறுதலி) னஃறிணை விரவுப் பெயருளடங்காதாயிற்று. (63)

359 மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே

இது (இஃது) எய்தாத தெய்து வித்தது, தாயென்ப தடையெடுத்துழி வல்லெழுத்து மிகுக வென்றலின்.

இதன் பொருள்: மகன் வினை கிளப்பின்—தாயென்னுஞ் சொற்றனக்கடையாய் முன்வந்த மகனது வினையைப் பின்னாக வொருவன் கூறுமிடத்து, முதனிலை யியற்றே—இவ்வீற்றுண் முதற்கட் கூறிய நிலைமையினியல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி. (அவ்) வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்: மகன்றாய்க் காலம் (மகன்றாய்க்கலாம்) செரு துறத்தல் பகைத்தல் எனவரும். மகன்றாயோடு கலாய்த்த கலா மென விரியும். ஏனையவற்றிற்கு மேற்கு முருபு விரிக்க. வினை யீண்டுப் பகைமேற்று. (64)

360 மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே

இது (இஃது) எய்தாத தெய்து வித்தது.

இதன் பொருள்: மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே—யகரவீற்று ளதிகார வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து மிக்கு முறழ்ந்து முடிவனவு முளவென்றவாறு.

உதாரணம்: வேய்க்குறை வேய்ங்குறை செய்கை தலை புறம் எனவரும். (65)

361 அல்வழி யெல்லா மியல்பென மொழிப

இது (இஃது) அவ் வீற்றல் வழிக் கெய்தாத தெய்து வித்தது.

இதன் பொருள்: அல்வழி யெல்லா மியல்பென மொழிப—யகர வீற்றல்வழி யெல்லா மியல்பாய் முடியு மென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம்: நாய்கடிது சிறிது தீது பெரிது எனவரும். எல்லாமென்றதனால் அவ்வாய்க் கொண்டான் இவ்வாய்க் கொண்டான் உவ்வாய்க் கொண்டான் எவ்வாய்க் கொண் டான் சென்றான் தந்தான் போயினான் என வுருபின் பொருள்பட முடிவனவும், தாய்க்கொண்டான் தூய்ப் பெய்தான் என்றாற்போல வினையெச்சமும் பொய்ச்சொல் மெய்ச்சொல் எய்ப்பன்றி என்றாற் போலும் பண்புத் தொகையும், வேய்கடிது வேய்க்கடிது என்னு மல்வழி யுறழ்ச்சி முடிபுங்கொள்க. (66)

362 ரகார விறுதி யகார வியற்றே

இது நிறுத்த முறையானே ரகார வீற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இதன் பொருள்: ரகாரவிறுதி—யகாரவீற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், யகாரவியற்று—யகார வீற்றியல் பிற்றாய் வல்லெழுத்து வந்துழியவ் வல் லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்: தேர்க்கால் செலவு தலை புறம் என வரும்.

இம்மாட்டேற்றினை(யகர)யகாரவீற்றுவேற்றுமையல் வழி யென்னுமிரண்டையுங்கருதி மாட்டெறிந்தாரென்பர்

ரல்வழி முடிபு மீண்டுக்காட்டுவர். யாமிவ்வோத்தின் புற நடையாற் காட்டுதும்

இது ழகார வீற்றிற்கு (ழகர) மொக்கும்.

இம்மாட்டேற்றா னுறழ்ச்சியுங்கொள்க. வேர்ங்குறை வேர்க்குறை எனவரும். [67]

363 ஆரும் வெதிருஞ் சாரும் பீரு
மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத் தோன்றும்

இது[இஃது] இவ்வீற்றிற் கெய்தியது விலக்கிப்பிறிது விதி வகுத்தது.

[இ-ள்] ஆரும் வெதிருஞ் சாரும் பீரும் - ஆரென்னுஞ் சொல்லும், வெதிரென்னுஞ் சொல்லுஞ் சாரென்னுஞ் சொல்லும் பீரென்னுஞ் சொல்லும், மெல்லெழுத்து மிகுதன் மெய்பெறத்தோன்றும்-மெல்லெழுத்து மிக்கு முடிதன் மெய்ம்மை பெறத்தோன்று மென்றவாறு.

உதாரணம்:ஆர்ங்கோடு வெதிர்ங்கோடு சார்ங்கோடு பீர்ங்கொடி செதிள் தோல் பூ எனவரும்.

பீர்மரமென்பார் பீர்ங்கோடென்பார். பீர்வாய்ப் பிரிந்த நீர் நிறைமுறை செய்தென்றாற் போலச் சான்றோர் பல்ருஞ் செய்யுள் செய்தவாறு காண்க.

மெய்பெற வென்றறதனா 'னாரங்கண்ணியடுபோர்ச் சோழரென' வாரம்முப் (ஆர்அம்முப்) பெறுதலும் 'மாரிப் பீரத்தலர் சிலர்க்கொண்டே' யெனப் பீரத்துப் பெறுதலுங் கொள்க. இதனை யதிகாரப் புறநடையான் முடிப்பாரு முளர்.

இன்னுமிதனானே [கூர்ங்கதிர்வேல் ஈர்ங்கோதை என்றாற் போலவுங்) குதிர்ங்கோடு விலர்ங்கோடு அவிர்ங்

கோடு [அயிர்ங்கோடு) துவர்ங்கோடு சிலிர்ங்கோடு என் றாற் போல் வனவுங் கொள்க) [என்றாற் போலவுமெல் லெழுத்து மிகுவன கொள்க.]

இதனானே [இன்னும் இதனானே] துவரங்கோடெ னவம்முப் பெறுதலுங் கொள்க. (68)

364 சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்

(இஃது) எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

[இ-ள்] : சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும் - சா ரென்பது காழென்பதனோடு புணருமிடத்துவல்லெழுத்து மிக்குப்புணரு மென்றவாறு.

உதாரணம்: சார்க்காழ் எனவரும், சாரினதுவித்தென் பதே பொருள். இதனை வயிரமெனிற் கிளந்தோது வா ரென்றுணர்க. (69)

365 பீரென் கிளவி யம்மொடுஞ் சிவணும்.

இது (இஃது) எய்தியதன் மேற் சிறப்புவிதி வகுத்தது.

இதன் பொருள்:பீரென் கிளவி யம்மொடுஞ் சிவணும் பீரென்னுஞ் சொன் மெல்லெழுத்தொன்றி (பீரென்னுஞ் சொல் மெல்லெழுத்தே யன்றி) யம்முப்பெற்றும் முடியு மென்றவாறு.

உதாரணம் பீரங்கொடி செதிள் தோல் பூ எனவரும் (எனவும்)'பொன்போற் பீரெமொடு பூத்த புதன்மலர்'என வும் வரும் உம்மை யிறந்தது தழீஇயிற்று. [70]

366 லகார விறுதி னகார வியற்றே

இது முறையானே லகார வீற்றை வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கட் புணர்க்கின்றது.

(இதன்பொருள்) லகார விறுதி னகார வியற்றே— லகார வீற்றுப்பெயர் வன்கணம் வந்துழி னகாரவீற்றியல் பிற்றாய் லகாரம் றகரமாய்த் திரிந்து முடியு மென்றாவாறு

உதாரணம்: கற்குறை சிறை தலை புறம் நெற்கதிர் சோறு தலை புறம் எனவரும். (71)

367 மெல்லெழுத் தியையி னகார மாகும்.

இது னகாரமா மென்றலி னவற்றிற் கெய்தா தெய்து வித்தது.

(இ-ள்) மெல்லெழுத்தியையின் னகாரமாகும் —அவ் வீற்று மென்கணம் வந்தியையி னகாரமாய்த்திரிந்து முடியு மென்றவாறு.

உதாரணம் : கன்ஞெரி நுனி முரி எனவரும்.

இச்சூத்திரத்தினை வேற்றுமை யிறுதிக்கணல் வழிய தெடுத்துக் கோடற்கட் சிங்க நோக்காக வைத்தமையானல் வழிக்கு மிம்முடிபு கொள்க. கன்ஞெரிந்தது நீண்டது மாண்டது எனவரும். (72)

368. அல்வழி யெல்லா முறழென மொழிப.

இது (இஃது) இவ்வீற்றல் வழி (அவ்வீற்றல் வழி) முடிவு கூறுகின்றது.

(இ—ள்) அல்வழி யெல்லா முறழென மொழிப — இவ்வீற்றல் வழி முடிபு களெல்லாந் தன்றிரிபு (தந்திரிபு) வல்லெழுத்தினோடுறழ்ந்து முடியுமென்று கூறுவர் புலவ ரென்றவாறு.

உதாரணம்: கல்குறிது கற்குறிது சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லா மென்றதனாற் கல்குறுமை கற்குறுமைசிறுமை தீமை பெருமை எனக் குணம் பற்றி வந்த வேற்றுமைக்கு முறழ்ச்சி கொள்க.

இன்று மிதனானே வினைச்சொல்லீறு திரிந்தனவு முருபு திரிந்தனவுங் கொள்க. வந்தனாற் கொற்றன் பொருவானாற் போகான். எனவும் அக்காற் கொண்டான் (அத்தாற் கொண்டான்) இக்காற் கொண்டான் (இத்தாற் கொண்டான்) உக்காற்கொண்டான் (உத்தாற் கொண்டான்) எக்காற் கொண்டான் (எத்தாற் கொண்டான்) எனவும் வரும்.

(அக்காற்கொண்டான் என்றாற் போலப்) பிறவும் முடிபுள்ளன வெல்லா மிதனான் முடித்துக்கொள்க. (73)

369 தகரம் வருவழி யாய்தம் நிலையிலும்
புகரின் றென்மனார் புலமை யோரே.

இது லகரம் றகாரமாய்த்திரிதலே யன்றி யாய்தமாய்த் திரியு மென்றலி னெய்தியதன் மேற் சிறப்பு விதி (கூறு கின்றது)

[இ-ள்] தகரம் வருவழியாய்த நிலையலும்-தகரம்முத லாகிய மொழிவந்தால் லகரம் றகரமாய்த் திரிதலேயன்றி யாய்தமாய்த் திரிந்து நிற்றலும், புகரின் றென்ம னார் புலமை யோரே - குற்றமின்றென்று சொல்லுவரா சிரிய ரென்றவாறு.

உதாரணம்: கஃறீது கற்றீது எனவரும், புகரின்றென் றதனா னெடியத னிறுதியென்பதனுள் வேறீது வேற்றீது என்னு முறழ்ச்சி முடிபுங் கொள்க. (74)

370. நெடியதனிறுதி யியல்புமா ருளவே.

இது (இஃது) அல்வழி யெல்லா முறழென்றதனை விலக்கி யியல்பாக வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இதன் பொருள் : நெடியத னிறுதி யியல்புமா ருளவே நெட்டெழுத் தீற்றினில் லகார வீறு குறியத னிறுதிக் கணின்ற லகரம் போலத் திரிந்து றழ்தலே யன்றி யியல்பாய் முடிவனவு முளவென்றவாறு.

உதாரணம் : பால் கடிது சிறிது தீது பெரிது எனவரும். இயல்பாகாது திரிந்தன வேல்கடிது வேற்கடிது என்றாற் போல்வன. (75)

371 நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லுஞ்
மல்லது கிளப்பினும் வேற்றுமை யியல

இது (இஃது) அவ்வழிக்கண்ணுறழ்ந்து முடிக வென்ற தனை வேற்றுமை (முடிபென்றலி) முடிவென்றலி னெய்தி யது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்-நெல்லென்னுஞ் சொல்லுஞ் செல்லென்னுஞ் சொல்லுங் கொல்லென்னுஞ் சொல்லுஞ் சொல்லென்னுஞ் சொல்லு மாகிய விந்நான்கு சொல்லும், அல்லது கிளப்பினும் வேற் றுமை யியல-அவ்வழியைச் சொல்லுமிடத்துந் தாம் வேற் றுமை முடிபினியல்பினவாய் (இயல்பிற்றாய்) லகரம் றகர மாய்த் திரிந்து முடியுமென்றவாறு.

உம்மை சிறப்பு.

உதாரணம் : நெற்காய்ந்தது செற்கடிது கொற்கடிது சொற்கடிது சிறிது தீது பெரிது எனவரும். (76)

372 இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலு மையிடை வருதலு
மியற்கை யாதலு மாகாரம் வருதலுங்
கொளத்தகு மரபி னாகிட னுடைத்தே

இது (இஃது) இவ்வீற்று வினைக்குறிப்புச் சொல்லொன்றற் கெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) இல்லென் கிளவி யின்மை செப்பின் - இல்லென்னுஞ் சொல்லிருப்பிடமாகிய வில்லை யுணர்த்தாதொரு பொருளின தில்லாமையை யுணர்த்துமிடத்து, வல்லெழுத்து மிகுதலும் - வல்லெழுத்து முதன்மொழி வந்துழி அவ்வல் லெழுத்து மிக்கு முடிதலும், ஐயிடை வருதலும்-ஐகார மிடையே வருதலும், இயற்கையாதலும் இரண்டும் வாராதியல்பாய் முடிதலும், ஆகாரம் வருதலும் ஆகாரம் வந்து முடிதலு மாகிய விந்நான்கு முடிபும், கொளத்தகு மரபின்-சொற்கு முடிபாகக் கொள்ளத்தகு முறையானே, ஆகிடனுடைத்தே - தன்முடிபாமிடனுடைத்தென்றவாறு.

கொளத்தகு மரபினென்றதனான் வல்லெழுத்துமுதன்மொழி வந்துழி ஐகாரம் வருதலுமைகாரம் வந்துழி வல்லெழுத்து மிகுதலு மிகாமையு, மாகாரம் (ஆகாரம்) வந்துழி வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க.

உதாரணம் :- இல்லென நிறுத்திக் கொற்றன் சாத்தன் தெளிவு பொருள் எனத்தந்து வல்லெழுந்து மைகார முங்கொடுத்தில்லைக் கொற்றனென ஏனையவற்றோடு மொட்டுக.

இன்னு மிவ்வாறே நிறுத்தி ஐகாரமே கொடுத்து இல்லை கொற்றன், சாத்தன், தெளிவு, பொருள் என வல்லெழுத்துக் (கோடா தொட்டுக) மிகாது முடிக்க.

இன்னுங் கொளத்தகு மரபி னென்றதனானேனைக் கணத்தின் முன்னுமைகாரமே கொடுத்து (இல்லை ஞான்) இல்லை ஞானம் நூல் மணி வானம் ஆடையெனவொட்டுக.

இது (இஃது) இல்லென்பதோர் முதனிலை நின்று வருமொழியோ டிங்ஙனம் புணர்ந்த தென்ப துணர்தற்கு இல்லென் கினவியென்று மியற்கையாதலு மென்றுங் கூறினார்.

இம்முடிபு வினையியலுள் விரவு வினைக்க 'ணின்மை செப்ப' லென்புழி 'யில்லை யில்' லென்றுரை கூறியவத னானு மவனில்லை யென்றாற் போல்வன வுதாரணமாக வெல்லா வாசிரியருங் காட்டியவற்றானு முணர்க.

இதனானே யிங்ஙனம் புணர்த்த சொல்லன்றி யில் லையெனவைகார வீறாய் நிற்பதோர் சொல்லின்மையு முணர்க. ஆயினின்மை முதலியனவற்றையு மிவ்வாறே யுரைக்க [புணர்க்க]வெனினவை வருமொழியின்றி யொரு சொல்லாய் நிற்றலிற் புணரா ராயினார். (புணர்க்கா ராயினார்].

இனி யியல்புவருமாறு :– எண்ணில் குணம்[செய்கை] கனை துடி பொருள் எனவும், பொய்யில் ஞானம் மையில் வாண்முகம் எனவும் வரும்.

இனி ஆகாரம் வருமாறு : இல்லாக் கொற்றன் சாத் தன் தேவன் பொருள் என வாகாரம் வல்லெழுத்துப் பெற்றன. பிற்கூறிய விரண்டு மில்லென்னும் வினைக் குறிப்பு முதனிலை யாகத் (முதனிலையடியாகத்) தோன் றிய பெயரெச்ச மறை தொக்கும் விரிந்தும் நின்றன.

இயல்பு முற் கூறாததனா னிம்முடிபிற்கு வேண்டுஞ் செய்கைகளுஞ் செய்துகொண்டு தாவி நீட்சி செய்கை செய்க. (தாவினீட்சி)என்றாற் போல வேறுபட வருவன வற்றிற்கும் வேண்டுஞ் செய்கை செய்து கொள்க. (78)

373 வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே

இது (இஃது) இருவழியுந் திரிந்து முறழ்ந்தும் வரு மென வெய்தியதனை விலக்கித் தொழிற் பெயரோடு மாட்டெறிதலிற் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்)வல்லென்கிளவி-வல்லென்னுஞ்சொலல் வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும், தொழிற் பெயரியற்றே

-ஞகார வீற்றுத் தொழிற் பெயரியல் பிற்றாய் வன்கணத் துகரமும் வல்லெழுத்தும், மென் கணத்தும் இடைக் கணத்து வகரத்து [வகாரத்து] முகரமும் [உகாரமும்] பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : வல்லுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வல்லுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை [வன்மை] எனவும் வரும். [78]

374 நாயும் பலகையும் வருஉங் காலை
யாவயி னுகரங் கெடுதலு முரித்தே
யுகரங் கெடுவழி யகர நிலையலும்

இது[இஃது]எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்ததும்.

இதன் பொருள் : நாயும் பலகையும் வருஉங்காலை. வல்வென்பதன் முன் னாயென்னுஞ் சொல்லும் பலகை யென்னுஞ் சொல்லும் வருமொழியாய் வருங்காலத்து, ஆவயி னுகரங் கெடுதலு முரித்தே - அவ்விடத் துகரங் கெடாது நிற்றலேயன்றிக் கெட்டு முடியவும் பெறும், உகரங் கெடுவழி யகர நிலையலும்-அவ்வுகரங்கெடுமிடத் தகர நிலைபெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : வல்லநாய் வல்லப் பலகை எனவரும்.

உம்மை யெதிர்மறை யாகலா னுகரங் கெடாதே நின்று வல்லுநாய்வல்லுப் பலகை எனவருதலுங் கொள்க

அகர நிலையு மென்னா துகரங்கெடு மென்றதனாற் பிறவரு மொழிக் கண்ணு மிவ் வகரப்பேறு கொள்க. வல்லக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவரும். [79]

375 பூல்வே லென்றா வாலென் கிளவியொ
டாமுப் பெயர்க்கு மம்மிடை வருமே

இது [இஃது] எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] பூல்வே லென்றா வாலென் கிளவியொடாமுப் பெயர்க்கும்-பூலென்னுஞ் சொல்லும் வேலென்னுஞ் சொல்லு மாலென்னுஞ் சொல்லுமாகிய வம்மூன்று பெயர்க்கும், அம்மிடை வருமே - வேற்றுமைக் கட்டிரி பின்றி யம்முச் சாரியையிடை வந்து முடியுமென்றவாறு.

உதாரணம்: பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங் கோடு செதிள் தோல் பூ எனவரும். (80)

376 தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல

இது [இஃது] இவ்வீற்றுத் தொழிற் பெயர்க் கல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் திரிபு முறழ்ச்சியும் விலக்கித் தொழிற் பெயரோடு மாட்டெறிதலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] தொழிற் பெயரெல்லாம் - லகார வீற்றுத் தொழிற்பெயரெல்லாம், தொழிற்பெயரியல - ஞகார வீற் றுத் தொழிற் பெயரி னியல்பினவா யிருவழியும் வன் கணத்துகரமும் வல்லெழுத்தும், மென்கணத்து மிடைக் கணத்து வகரத்து முகரமும் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : புல்லுக் கடிது கல்லுக்கடிது வல்லுக் கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், வல்லுக் கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை [வன்மை] எனவும் வரும்.

இவ்வீற்றிற்குப் [இவற்றிற்குப்] புல்லுதல் கல்லுதல் வல்லுதல் எனப்பொருளுரைக்க.

இனி யெல்லா மென்றதனாற் றொழிற்பெயர் விதி யெய்தாது பிறவிதியெய்துவனவுங்கொள்க, கன்னல்கடிது

பின்னல் கடிது கன்னற்கடுமை பின்னற்கடுமை எனவும் வரும். இதனானே மென்கணம் வந்துழிப்பின்னன் ஞான்றது நீண்டது மாண்டது பின்னன் ஞாற்சி நீட்சி மீட்சி [மாட்சி] எனவொட்டுக.

இனியாடல் பாடல் [கூடல் நீடல்] முதலியனவு மல்வழிக்கண் ணியல்பாயும் வேற்றுமைக்கட்டிரிந்து முடிதலதனாற் கொள்க. [முடிதலிதனாற் கொள்க] [81]

377 வெயிலென் கிளவி மழையிய னிலையும்

இது திரிபு விலக்கி யத்து மின்னு [அத்தும் இன்னும்] வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] வெயிலென்கிளவி மழையிய னிலையும்-வெயிலென்னுஞ்சொன் மழையென்னுஞ் சொற்போல வத்து மின்னும் [அத்தும் இன்னும்] பெற்று முடியுமென்றவாறு.

மழை யென்பதனை வளியுடனும்[வளியென வருஉம் என்பதனுடனும்] வளியென்பதனை பனியெனவரு [பனியெனவருஉ]மென்பதனோடு மாட்டெறிந்தவாறு காண்க.

உதாரணம் : வெயிலத்துக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும். இது [இஃது] அத்து மிசை யொற்றுக்கெடாது நின்றவிடம். இது [இஃது] 'அவற்று முன் வருஉம் வல்லெழுத்து'' மிக்க ததிகார வல்லெழுத்தின்மையின் இயல்பு கணத்துங் கொள்க. சாரியை வருமொழி வரையாது கூறினமையின். (82)

378 சுட்டுமுத லாகிய வகர விறுதி
முற்படக் கிளந்த வுருபிய னிலையும்.

(வுருபிய னிலையும்)

இது முறையானே வகரவீறு வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

(இதன் பொருள்) சுட்டு முத லாகிய வகர விறுதி—வகர வீற்றுப் பெயர் நான்கனுட் சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகர வீற்றுப் பெயர் மூன்றும், முற் படக் கிளந்த வுருபிய னிலையும் - முற்படக் கூறிய வுருபு புணர்ச்சியி னியல்பிற்றாய் வற்றுப் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு செவி தலை புறம் எனவரும்.

முற்படக் கிளந்த வென்றதனானே வற்றினோ டின்னும் பெறுதல் கொள்க. அவற்றின் கோடு, இவற் றின் கோடு, உவற்றின் கோடு செவி தலை புறம் எனவரும். (என ஒட்டுக)

இதனை (இஃது) ஏனைக் கணத்தோடு மொட்டுக. (83)

379. வேற்றுமை யல்வழி யாய்த மாகும்.

இது மேலனவற்றிற் கல்வழி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமை யல்வழி யாய்தமாகும்-அச்சுட்டு முதலாகிய வகரம் வன்கணத்துக்கண் வேற்றுமை யல் லாத விடத்தாய்தமாய்த் திரிந்து முடியுமென்றவாறு.

உதாரணம் : அஃகடிய இஃகடிய உஃகடிய சிறிய தீய பெரிய எனவரும். (இவ் வழக்கு இக்காலத்து அரிது) இவ்வழக் கிக்காலத் தரிய. (84)

380. மெல்லெழுத் தியையி னவ்வெழுத் தாகும்.

இது (இஃது) எய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) மெல்லெழுத் தியையி னவ்வெழுத்தாகும்-அவ்வகர வீறு மென்கணம் வந்தியையுமாயினவ் வகர வொற்றவ்வவ் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியு மென்றவாறு.

உதாரணம் : அஞ்ஞாண் இஞ்ஞாண் உஞ்ஞாண் நூல்மணி எனவரும். (85)

381 ஏனவை புணரி னியல்பென மொழிப

இதுவுமது. அவ்வீறேனைக் கணங்களோடு புணரு மாறு கூறுதலின்,

(இ-ள்) ஏனவை புணரின்—அச்சுட்டுமுதல் வகர வீற்றோடிடைக்கணமு முயிர்க் கணமும் வந்து புணரு மாயின், இயல்பென மொழிப—அவ்வகரந் திரியாதியல் பாய் முடியுமென்று கூறுவர் (புலவர்) என்றவாறு.

(உ-ம்) : (அவ்யாழ்) அவ்வியாழ் (இவ்யாழ்) இவ்வி யாழ் (உவ்யாழ்) உவ்வியாழ் வட்டு அடை ஆடை என வொட்டுக.

ஈண்டுக் (ஈண்டுக்) கூறியது நிலைமொழிக்கென்று மாண்டு 'நின்ற சொன்மு னியல்பா கு' மென்றது வரு மொழிக் கென்றுமுணர்க.

382 ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே.

இது (இஃது) எய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) ஏனைவகரம்—'வகரக்கிளவி நான்மொழி யீற்ற' தென்றதனு ளொழிந்து நின்றவுரிச் சொல்லாகிய வகரம்மிருவழியும் (இருவழியும்) தொழிற்பெய ரியற்று-ஞகார (ஞகர) வீற்றுத் தொழிற்பெய ரியல்பிற்றாய் வன் கணத் துகரமும் வல்லெழுத்து மென்கணத்து மிடைக் கணத்து வகரத்து முகரமும் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம் : தெவ்வுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், தெவ் வுக் கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.

உரையிற் கோட லென்பதனாற் றெம்முளையென வகரவொற்று மகரவொற்றாதல் கொள்க. (மகரவொற் றாகத் திரிதல்) (87)

383 ழகார விறுதி ரகார வியற்றே.

இது (இ-ள்து) நிறுத்த முறையானே ழகார வீற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இதன் பொருள்: ழகார விறுதி ரகார வியற்று—ழகார வீற்றுப்பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார வீற்றினியல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: பூழ்க்கால் சிறகு தலை புறம் எனவரும். (88)

384. தாழென் கிளவி கோலொடு புணரி
னக்கிடை வருத லுரித்து மாகும்.

இது (இ-ள்து) இவ்வீற்று ளொன்றற் கெய்தியதன் மேற் சிறப்புவிதி. (கூறுகின்றது) வல்லெழுத்தினோ டக்கு வகுத்தலின்.

இதன் பொருள்: தாழென் கிளவி கோலொடு புணரின் -தாழென்னுஞ் சொற் கோலென்னுஞ் சொல்லோடு புணரு மிடத்து, அக்கிடை வருதலு முரித்தாகும் - வல் லெழுத்து மிகுதலே யன்றி யக்குச் சாரியை யிடையே வந்து நிற்றலு முரித்தென்றவாறு.

எனவே, அக்குப் பெறாது வல்லெழுத்து மிகுதல் வலியுடைத் தாயிற்று.

உதாரணம்: தாழ்க்கோல் தாழ்க்கோல் எனவும் (வரும்) (இது) தாழைத் திறக்குங் கோலென விரியும்.

385 தமிழென் கிளவியு மதனோரற்றே.
இதுவுமது.

(இ-ள்) தமிழென் கிளவியும்—தமிழென்னுஞ் சொல்லும், அதனோரற்று வல்லெழுத்து மிக்கு முடிதலேயன்றி யக்குப் பெற்று முடியு மென்றவாறு.

(அதனோரற்றே யென்றதனால் இதற்குந் தமிழ்க் கூத்தென வல்லெழுத்து மிகுதலே வலியுடைத்து)

உதாரணம் : தமிழ்க்கூத்து சேரி தோட்டம் பள்ளி எனவரும். தமிழையுடைய கூத்தென விரிக்க. தமிழ்வரை (தமிழ வரையர்) யென்றாற் போல வல்லெழுந்து பெறாதக்குப் பெற்றன வுணரக் கூறிய வென்னும் புறநடையாற் கொள்க. தமிழநாடு தமிழ்நாடு எனவே ஏனைக் கணத்து முடி 'வெப்பெயர் முன்னரேன்பதனின் முற்ற வென்றதனான் முடித்தாம்' 90

(ஏனைக் கணத்து முடிபு 'எப் பெயர் முன்னரும் என்பதனுள்')

386. குழிழென் கிளவி மரப்பெயராயிற்
பீரென் கிளவியொ டோரியற் றாகும்.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து மம்மும் வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது. (கூறுகின்றது)

இதன் பொருள் : குமிழென் கிளவி மரப்பெய ராயின்-குமிழென்னுஞ் சொற் குமிழ்த்த லென்னுந் தொழிலன்றி மரப்பெயராயின், பீரென் கிளவியொ டோரியற் றாகும்—பீரென்னுஞ் சொல்லோ டோரியல் பிற்றா யொரு வழி மெல்லெழுத்து மொரு வழி யம்மும் பெற்று முடியுமென்ற வாறு.

உதாரணம் : குமிழ்ங்கோடு குமிழங்கோடு செதிள் தோல் பூ எனவரும்.

ஓரியற் றென்றதனாற் பிறவற்றிற்கு மிம்முடிவு (மிம் முடிபு) கொள்க. மகிழ்ங்கோடு மகிழங்கோடு என வெட்டுக. (91)

387. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.

இது வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப் பெறுக வென்றலி னெய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இதன் பொருள் : பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வு - பாழென்னுஞ் சொல்லீறு வல்லெழுத்தினோடு மெல்லெழுத்துப் பெற்றுறழ்ந்து முடியுமென்றவாறு.

உதாரணம் : பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு சேரி தோட்டம் பாடி என வொட்டுக. இது பாழட் கிணறென விரியும். பாழ்த்த கிணறெனவினைத்தொகை முடியாமையின். (92)

388 ஏழென் கிளவி யுருபிய னிலையும்.

இது (இஃது) எண்ணுப் பெயரிவ்வாறு முடிக்க வென்றலின் எய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) ஏழென் கிளவி-ஏழன்னு மெண்ணுப் பெயரினிறுதி. உருபிய னிலையும்-உருபு புணர்ச்சிக்கட் கூறிய வியல்பின் கண்ணே நிலைபெற்றன் பெற்று முடியு மென்றவாறு.

அது [அஃது] 'அன்னென் சாரியை யேழ னிறுதி' யென்பதாம்.

உதாரணம் : ஏழன்காயம் சுக்கு தோரை பயறு என வரும். இவை [இயைபுவல்லெழுத் தொத்தின் புறநடையால் வீழ்க்க. இது [இஃது] ஏழனாற் கொண்ட காயமென விரியும். [93]

389 அளவு நிறையு மெண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலு முகரம் வருதலுங்
கடிநிலை மே யாசிரி யர்க்க [யற்க].

இது மேலதற் கெய்தாத தெய்து வித்தது.

இதன்பொருள்: அளவுநிறையுமெண்ணும்வருவழி-அவ்வேழென்பதின் முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரு

மெண்ணுப் பெயரும் வருமொழியாய் வருமிடத்து, நெடு முதல் குறுகலு முகரம் வருதலுங் கடிநிலை யின்றே யாசிரியர்க்க[யற்க]-முன்னின்ற நெட்டெழுத்தின் மாத்திரை குறுக்லு மாண்டுகரம் வருதலும் நீக்கு நிலைமை யின்றா சிரியர்க்கென்றவாறு.

உதாரணம் : எழுகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், எழுகழஞ்சு தொடி பலம் எனவும், எழுமூன்று எழுநான்கு எனவும் வரும்,

நிலையென்றதனான் வன் கணத்துப் பொருட் பெயர்க்குமிம் முடிபு கொள்க. எழுகடல் சிலை திசை பிறப்பு என வரும். [94]

390. பத்தென் கிளவி யொற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டு மாய்தப் புள்ளி.

இது மேலதற் கெய்தியதன்[மேற்] சிறப்பு விதி வகுத்தது. வருமொழி நோக்கி [விதித்தலின்]

[இ-ள்] பத்தென்கிளவி யொற்றிடை கெடுவழி [பத்தென்கிளவி யிடையொற்றுக் கெடுவழி]-அவ்வேழனோடு பத்தென்பது புணருமிடத்து அப்பத்தென்கிளவி யிடையொற்றுக் கெடுவழி, ஆய்தப்புள்ளி நிற்றல் வேண்டும்-ஆய்தமாகிய புள்ளிநிற்றலை விரும்புமாசிய ரென்றவாறு [ஆசிரியன்]

உதாரணம் : எழுப்ஃது எனவரும். (95)

391. ஆயிரம் வருவழி யுகரங் கெடுமே.

இது நெடுமுதல் குறுகிநின்று சுரம்பெறா தென்றலி னெய்தியது (ஒருமருங்கு) மறுத்தது.

(இ-ள்) ஆயிரம் வருவழி - ஏழென்பதன்முன் னாயிர மென்னு மெண் (எண்ணுப்பெயர்) வருமொழியாய் வரு

மிடத்து உகரங்கெடுமே—நெடுமுதல் குறுகிநின்றுகரம் பெறாது முடியுமென்றவாறு.

உதாரணம்: ஏழாயிரம் எனவரும். (96)

392 நூறூர்ந்து வரூஉ மாயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே

இது(இஃது)எய்தியது முழுவதூஉம் விலக்கிற்று;உகரங் கெட்டு அதன்மேலே நெடுமுதல் குறுகா தென்றலின்,

(இ-ள்) நூறூர்ந்து வரூஉ மாயிரக் கிளவிக்கு-அவ்வேழென்பது நூறென்னுஞ் சொன்மேல் வருமாயிர மென்னுஞ் சொல்லிற்கு, கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே-முற்கூறிய நெடுமுதல் குறுகி யுகரம் பெறுதலின் றென்றவாறு.

உதாரணம்: ஏழ் நூறாயிரம் எனவரும்.

கூறிய வென்றதனா னெடுமுதல் குறுகி யுகரம் பெற்று எழுநூறாயிரம் எனவும் வரும்.

இதனானே ஏழாயிரமென மேன் முதனிலை நீடலுங் கொள்க.

இதனானே எழுஞாயிறு எழுநாள் எழுவகை என வியல்பு கணத்து நெடுமுதல் குறுகி யுகரம் பெறுதலுங் கொள்க. (97)

393 ஐயம் பல்லென வரூஉ மிறுதி
யல்பெய ரெண்ணினு மாயிய னிலையும்

இதுவுமது.

(இ-ள்) ஐயம் பல்லென வரூஉ மிறுதி அவ்வேழன் முன்னரை (ஐ) யென்று மம்(அம்)மென்றும் பல்லென்றும்

வருகின்ற விறுதிகளையுடைய, (அல்பெய ரெண்ணினும்) பெயரல் லெண்ணினும்-பொருட் பெயரல்லாத வெண்ணுப் பெயராகிய தாமரை வெள்ள மாம்ப லென்பன வந்தாலும் ஆயிய னிலையும்-நெடுமுதல் குறுகி யுகரம் பெறா தவ்வி யல்பின் கண்ணே நின்று முடியுமென்றவாறு.

உதாரணம்: ஏழ்தாமரை ஏழ்வெள்ளம் ஏழாம்பல் என வரும். (98

394 உயிர்முன் வரினு மாயிய நிரியாது

இதுவுமது.

இதன் பொருள்: உயிர் முன் வரினும்-அவ்வேழென்ப தன்முன்ன ரளவுப் பெயரு மெண்ணுப் பெயருமாகியவுயிர் முதன் மொழி வரினும், ஆயியறிரியாது-நெடுமுதல் குறுகி யுகரம் பெறாது முடியு மியல் பிற்றிரியாது முடியு மென்ற வாறு.

உதாரணம்: ஏழகல் ஏழுழக்கு ஏழொன்று ஏழிரண்டு எனவரும். (99)

395 கீழென் கிளவி யுறழத் தோன்றும்

இது (இஃது) இவ்வீற்று ளொன்றற்கு வேற்றுமைக் கண் ணுறழ்ச்சி கூறுகின்றது.

இதன் பொருள்: கீழென் கிளவி யுறழத் தோன்றும்-கீழென்னுஞ் சொல் லுறழ்ச்சியாய்த் தோன்றி முடியுமென் றவாறு.

தோன்று மென்றதனா னெடு முதல் குறுகாது வல் லெழுத்துப் பெற்றும் பெறாதும் வருமென்றவிரண்டு முறழ்ச்சியா மென்று கொள்க. (உறழ்ச்சியாய் வருமென்று கொள்க) இயைபு வல்லெழுத் ததிகாரத்தாற் கொள்க.

உதாரணம்: கீழ்க்குளம் கீழ்குளம் சேரி தோட்டம் பாடி எனவரும். (100)

396 ளகார விறுதி ணகார வியற்றே

இது நிறுத்த முறையானே ளகார வீற்றுச் சொல் வேற்றுமைக் கட் புணருமாறு கூறுகின்றது.

இதன் பொருள்: ளகார விறுதி ணகார வியற்றே- ளகார வீற்றுப் பெயர் ணகார வீற்றினியல் பிற்றாய் வன் கணம் வந்துழி டகாரமாய்த் திரிந்து முடியுமென்றவாறு.

உதாரணம்: முட்குறை சிறை தலை புறம் எனவரும். (101)

397 மெல்லெழுத் தியையின் ணகார மாகும்

இது மேலதற்கு (மென் கணத்து) முடிபு கூறுகின்றது.

(இ-ன்) மெல்லெழுத்தியையின் ணகாரமாகும்-ளகார வீறு மெல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்தியையின் ணகாரமாய்த் திரிந்து முடியுமென்றவாறு.

உதாரணம்: முண்ஞெரி நுனி மரம் எனவரும்,

(இதனை) வேற்றுமை யிறுதிக்கணல்வழிய தெடுத்துக் கோடற்கட் சிங்கநோக்காக வைத்தலினல் வழிக்கு மிம் முடிபு கொள்க. முண்ஞெரிந்தது நீண்டது மாண்டது எனவரும். (102)

398 அல்வழி யெல்லா முறழென மொழிப

இது மேலதற்கல்வழி முடிபு கூறுகின்றது.

(இ-ன்) அல்வழியெல்லாம் - ளகார வீற்றல் வழிக்க ணெல்லாம், உறழென மொழிப-திரியாதும் டகாரமாய்த் திரிந்து முறழ்ந்து முடியுமென்று சொல்லுவர் புலவரென்ற வாறு,

உதாரணம் : முள்கடிது முட்கடிது சிறிது தீது பெரிது எனவரும்.

எல்லா மென்றதனாற் குணவேற்றுக் கண்ணு மிவ் வுறழ்ச்சி கொள்க. முள் குறுமை முட் குறுமை சிறுமை தீமை பெருமை எனவும், கோள்கடுமை கோட்கடுமை வாள் கடுமை வாட் கடுமை எனவு மொட்டுக.

இதனாலே அதோட் கொண்டான் இதோட் கொண் டான் உதோட் கொண்டான் எதோட் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வுருபு வாரா துருபின் பொருள்படு வந்தனவுங் கொள்க. (103)

399 ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வருஉங் காலை யான.

இது மேலதற் கெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத் தது, தன்றிரிபுறழ்ச்சியே யன்றி யாய்தமாகத் திரிந்துறழ்க வென்றலின். (தகரம் வருவழி உறழ்ச்சியே யன்றி ஆய்த மாகத் திரிந்து உறழ்க என்றலின்.)

இதன் பொருள் : தகரம் வருஉங் காலையான-தகர முதன் மொழியாய் (தகர முதன் மொழி வருமொழியாய்) வருங்காலத்து, ஆய்தம் நிலையலும் வரைநிலையின்றே-ளகாரம் டகாரமாய்த் திரிந்து நிற்றலு (டகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்து நிற்றலும்) நீக்கும் நிலைமையின்றென்றவாறு.

உதாரணம் : முஃடிது முட்டிது எனவரும் (104)

400 றெடியத னிறுதி யியல்பா குவவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டு மொழியுமா ருளவே.

இது மேலதற் கெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இதன் பொருள் : நெடியத னிறுதி யியல்பா குநவும்- அவ்வீற்று நெடியத னிறுதி திரியாதியல்பாய் முடிவனவற் றையும், வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்— வேற்றுமை யல்லாதவிடத்து வேற்றுமையி னியல்பையு டைய வாய்த்திரிந்து முடிதலையும், போற்றல் வேண்டு மொழியுமாருளவே - போற்றுதல் வேண்டுஞ் சொற்களு முள வென்றவாறு.

உதாரணம் : தோள்கடிது (கோள்கடிது) வாள்கடிது சிறிது தீது பெரிது எனவும், ''புட்டேம்பப் புயன்மாறி'' எனவும் வரும்.

போற்றல் வேண்டு மென்றதனால் உதளங்காய் செதிள் தோல் பூ எனவம்முப் பெறுதலுங் கொள்க. உத ளென்பது யாட்டினை யுணர்த்துங்கால் முற்கூறிய முடிபு களி ருவழிக்கு மேற்றவாறே முடிக்க உதட்கோடு உதள் கடிது உதணன்று எனவொட்டுக. ''மோத்தையுந்தகரு முதளுமப்பரு'' மென்றார் மரபியலில். (105)

401 தொழிற்பெய ரெல்லாந் தொழிற் பெயரியல.

இது(இஃது) இவ்வீற்றுத் தொழிற்பெயர்க் கிருவழியு மெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] தொழிற்பெய ரெல்லாம்-ளகார வீற்றுத் தொழிற்பெயரெல்லா மிருவழியும், தொழிற்பெயரியல— ஞகார வீற்றுத் தொழிற்பெயர்போல வன்கணத் துகரமும் வல்லெழுத்தும், மென்கணத்து மிடைக்கணத்து வகரத்து முகரமும் பெற்று முடியுமென்றவாறு.

உதாரணம்: துள்ளுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், துள்ளுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை [வன்மை] எனவும் வரும்.

எல்லா மென்றதனானே யிருவழியுந்தொழிற்பெயர்க ளுகரமும் வல்லெழுத்தும் பெறாது திரிந்துந் திரியாதும் முடிவனவுங் கொள்க. கோள்கடிது கோட்கடிது கோள் கடுமை கோட்கடுமை என்பன போல்வன பிறவும் வரும்.

இனி வாள்கடிது வாட்கடிது (சிறிது தீது பெரிது எனவும்) வாள்கடுமை வாட்கடுமை எனவுங் [என்பனவுங்] காட்டுக. அது கொல்லுதாக்கி [வாள்-கொல்லுதல்] [106

402 இருளென் கிளவி வெயிலிய னிலையும்,

இது திரிபு விலக்கி யத்துமின்னும்[அத்தும் இன்னும்] வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

[இ-ள்] இருளென் கிளவி - இருளென்னுஞ் சொல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண், வெயிலிய னிலை யும்-வெயிலென்னுஞ் சொற்போலவத்துமின்னும்[அத்தும் இன்னும்] பெற்று முடியு மென்றவாறு.

உதாரணம் இருளத்துக் கொண்டான் இருளிற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும் சாரியை வரையாது கூறினமையி னியல்பு கணத்து மொட்டுக.[இருளத்து ஞான்றான், நீண்டான் மாண்டான் இருளின் ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவரும். [107]

403 புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல

இதுவு மெய்தியது விலக்சிப் பிறிது விதிவகுத்தது, திரிபும்இயல்பும் விலக்கித் தொழிற்பெயர் விதிவகுத்தலின்

இதன்பொருள் : புள்ளும் வள்ளும் — புள்ளென்னுஞ் சொல்லும் வள்ளென்னுஞ் சொல்லும் இருவழிக்கண்ணும். தொழிற் பெயரியல - ஞகார வீற்றுத் தொழிற் பெய போல வல்கணத்துகரமும வல்லெழுத்தும், மென்கணத்து மிடைக் கணத்து வகரத்து முகரமும் பெற்று முடியு மென் றவாறு.

உதாரணம் : புள்ளுக்கடிது வள்ளுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும். புள்ளுக்கடுமை வள்ளுக்கடுமை சிறுமை தீமை பெருமை (ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.

இதனைத் ''தொழிற்பெயரெல்லா''மென்றதன்பின் மென்பதன்பின்) வையாத்தனா லிருவழியும் வேற்றுமைத் திரிபெய்தி முடிவனவுங் கொள்க. புட்கடிது வட்கடிது சிறிது தீது பெரிது எனவும் புட்கடுமை வட்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும். புண்ஞான்றது நீண்டது மாண் டது எனவும் புண்ஞாற்சி நீட்சி மாட்சி எனவும் வரும். புள்ளு வலிது புள்வலிது புள்வலுமை (புள்ளுவன்மை புள் வன்மை) என வகரத்தின் முன்னருகரம் பெற்றும் பெறா தும் வருதலி ''னின்ற சொன்முனியல்பாகு'' மென்றத னான் முடியாமையுணர்க. இது வள்ளிற்கு மொக்கும்.

(108)

404. மக்களென்னும் பெயரச்சொ லிறுதி
தக்கவழி யறிந்து வலித்தலு முரித்தே.

இது (இ-ள்) எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்த துஞ் ''உயிரீறாகிய வுயரீதிணைப் பெய'' ரென்பதனுட் கூறியவியல்பு விலக்கித் திரிபு வகுத்தலின்.

(இ-ள்) மக்களென்னும் பெயர்ச்சொலிறுதி – மக்க ளென்னும் பெயர்ச்சொல்லிறுதி யியல்பேயன்றி தக்கவழி யறிந்து வலித்தலு முரித்தே—தக்கவிடமறிந்து வல்லொற் றாய்த் (வல்லொற்றாகத்) திரிந்து முடிதலு முரித்தென்ற வாறு.

தக்கவழி யென்றார் பெரும்பான்மை மக்களுடம்புயிர் நீங்கிக் கிடந்த காலத்திம் முடிபென்றற்கு (மக்கள்உடம்பு உயிர்நீக்கிக் கிடந்த காலத்தின் அஃது இம்முடிவு பெறும் என்றற்கு)

உதாரணம்:மக்கட் கை செவி தலை புறம் எனவரும். இக்கிடந்தது மக்கட்டலை யென்பதனா னவ்வாறாதல் கொள்க. மக்கள்கை செவி தலை புறம் எனத்திரியாது நின்ற துயிருண்மை பெற்று.

இனிச் சிறுபான்மை மக்கட்சுட்டு மக்கட் பண்பென வும் வரும். [109]

105. உணரக் கூறிய புணரியன் மருங்கிற்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே,

இது [இஃது] இவ்வோத்தின்கணெடுத் தோத்தானு [மிலேசானு] முடியாது நின்றவற்றிற் கெல்லாமிதுவே யோத்தாகக் கொண்டு சாரியை பெறுவனவற்றிற்குச் சாரியையு மெழுத்துப் பெறுவனவற்றிற்குச் சாரியையு மெழுத்துப் பெறுவனவற்றிற் கெழுத்துங் கொடுத்து முடித்துக்கொள்க வென்கின்றது.

(இ-ள்) உணரக்கூறிய புணரியன் மருங்கின்-உணரக் கூறப்பட்ட புள்ளியீறு வருமொழியோடு புணருமியல் பிடத்து, கண்டு செயற்குரியவை-மேன்முடித்த முடிவன்றி வழக்கினுட்கண்டு முடித்தற்குரியவை தோன்றியவழி, கண்ணினர்கொளலே-அவற்றையுங் கருதிக்கொண்டேற் றவாறே முடிக்க வென்றவாறு (கருதிக்கொண்டு ஏற்ற வாறே முடிக்க என்றவாறு)

உதாரணம் : (அல்வழிக்கண்) மணப்பத்தம் (மண்ணப் பத்தம்) எனவ் ணகர வீறக்குப் பெற்றது. மண்ணங்கட்டி எனவ்வம்முப் பெற்றது. பொன்னப் பதக்கமென னகர

வீறக்குப் பெற்றது. பொன்னங்கட்டி என வது வம்முப் பெற்றது. கானங்கோழி எனவது வேற்றுமைக் கணம்முப் பெற்றது. (மண்ணாங்கட்டி கானாங்கோழி என்பன மரூஉ) வேயின்றலையென வகரவீற் (யகரவீற்) றுருபிற் குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி வலலெழுத் துக் கெடுக்க நீர்குறிது என ரகரவீறல்வழிக்க ணியல்பா யிற்று. வேர்குறிது. வேர்க்குறிது இது ரகரவீற் றல்வழி யுறழ்ச்சி வடசார்க் கூரை மேல்சார்க் கூரை இவை வல லெழுத்து மிக்க மருஉ முடிபு. அம்பர்க் கொண்டான் இம் பர்க் கொண்டான் உம்பர்க்கொண்டான் எம்பர்க்கொண் டான் என (என்பன) இவ்வீறேழ னுருபின் பொருள்பட வந்தன வல்லொற்றுப் பெற்றன. தர்க்ககுட்டி புகர்ப் போத்தென்பன பண்புத்தொகை கருதிற்றேலீண்டு முடிக்க. வேற்றுமையாயின் முன்னர் முடியும். விழலென் னும் லகார வீறு (லகரஈறு) வேற்றுமைக்கண் றகரமா காது னகரமாய் முடிவன கொள்க. (முடிதல் கொள்க) விழன்காடு செறு தாள் புறம் எனவரும். கல்லம்பாறை உசிலங்கோடு எலியாலங்காய் புடோலங்காய் என விவை யவ்வீறம்முப் பெற்றது. (கல்லாம் பாறையென்பதுமரூஉ) அழலத்துக் கொண்டானென வவ்வீறத்துப் பெற்றது. அழுக்கற்போர் புழுக்கற் சோறென்பன வவ்வீற் றல்வழித் திரிபு. யாழ்குறிதென்பது ழகரவீற்றல்வழி யியல்பு. (வீழ் குறிது வீழ்க்குறிது) வேழ் குறிது வேழ்க் குறிதென்பதவ் வீறல்வழியுறழ்ச்சி. தாழப்பாவை யென்பதவ்வீற்றல் வழி யக்குப் பெற்றது யாழின் கோடு செய்கை தலை புறம் என வவ்வீற்றுருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி, வல்லெழுத்து வீழ்க்க. முன்னாளை வாழ்வு முன்னாளையரசு (முன்னாளைப்பரிசு) ஒருநாளைக் குழவி ஒரு திங்களைக் குழவி என்றாற் போல (போல்வன) ளகர வீறைகாரமும் (ளகாரஈறு ஐகாரமும்) அதனோடு வல்லெழுத்துப்(பெறுதலும்)கொள்க. பிறவுமிவ்வோத்தின் வேறுபட வருவன வெல்லாங் கொணர்ந்திதனான்

மூடிக்க. குளத்தின் புறம் மரத்தின்புற (எனஉருபிற்ற) மென வுருபிற்கெய்திய வத்தோடில் பெறுதலு மிதனாற் கொள்க.

இனிக் ''கடிசொல்லில்லை'' யென்பதனான் வழக்கின் கண்ணுஞ் செய்யுட்கண்ணும் வந்து திரிந்து முடியுஞ் சொற்களுமுள. அவற்றைக் கண்ணினர் கொளலே யென்றதனான் (யென்பதனான்) மண்ணைக்குப் போனான் பொன்னுக்கு விற்றான் பொருளுக்குப் போனான் நெல்லுக்கு விற்றான் கொள்ளுக்குக் கொண்டான் பதினேழு என்றாற் போல வழக்கின்கணுகரம் பெறுவனவும் ''விண்ணுக்குமேல்'' ''மண்ணுக்கு நாப்பண்''

''பல்லுக்குத் தோற்ற பனிமுல்லைப் பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோற்றினவா-னெல்லுக்கு
நூறோஒ நூறென்பா ணுடங்கிடைக்கும் வன்முலைக்கு
மாறோமா லன்றளந்த மண்''

என்றாற்போலச் செய்யுட் கணுகரம் பெறுவனவும் பிறவு முடிக்க.

(பற்று நெற்று என்பன முதலியனவுங் கொள்க.) இவை யுரு பின் பொருள்படவாரா துருபின்கண் வந்தனவேனு மீண்டுக் காட்டினா, மாண்டுப் ''புள்ளி யிறுதியு'' மென்னு முருபியற் சூத்திரத்திலேசு கோடற் கிடனின் றென்று கருதி இனி யச்சூத்திரத்துத் ''தேருங்காலை'' யென்றதனான் முடித்தலு மொன்று. (110)

எட்டாவது.

புள்ளி மயங்கியன் முற்றும்

ஒன்பதாவது குற்றியலுகரப் புணரியல்

406 ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்.

என்பது சூத்திரம். இவ்வோத்துக் குற்றியலுகர மென்று கூறப்பட்ட வெழுத்துப்பொருட்பெயரோடு மெண் ணுப்பெயர் முதலிவற்றோடும் புணருமுறைமை யுணர்த் தினமையிற் குற்றியலுகரப் புணரியலென்னும் பெயரா யிற்று. (பெயர்த்தாயிற்று) இது ''மெய்யே யுயிரென்ற வற்று(இது'மெய்யே யுயிரென் றாயீரியல'என்றவற்றுள்) ளுயிரினது விகாரமாய் நின்ற குற்றுகரத்தை யிருவழிக் (இருமொழிக்)கண்ணும்புணர்க்கின்றமையின் மேலோத்தி னோடியைபுடைத்தாயிற்று.

இத்தலைச் சூத்திரமொழி மரபினகத் திருவகைய வென்ற (இத்தலைச் சூத்திர மொழிமரபினகத் திருவழிய) குற்றுகர மிதனகத்தினைந்து மொழிபிறுதி வருமென்ற வற்றிற்குப் பெயருமுறைபுந் தொகையு முணர்த்துகின் றது. அப்பெயர் பெயர் அம்முறை முறை யத்தொகை தொகை ''தொடர்மொழி யீற்று'வருமென்றாண்டுக் கூறி யவதனை யீண்டைந்து வகைப்படுத்தி யதனோடு 'நெட் டெழுத் திம்ப' ரென்றதொன்றே யாதலி னதனையுங் கூட்டி யறுவகைய வென்றார் (அறுவகைத் தென்றார்)

(இ-ள்) ஈரெழுத் தொருமொழி–இரண்டெழுத்தானா கிய வொருமொழியும், உயிர்த்தொடர் - உயிர்மேல்வரும் மெய்யைத் தொடர்ந்துநின்ற சொல்லும்,இடைத்தொடர் இடையொற்று மேல்வரு மெய்யைத் தொடர்ந்து நின்ற

சொல்லும், ஆய்தந்தொடர்மொழி - ஆய்தமாகியவெழுத்து மேல்வரு மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், வன்றொடர் - வல்லொற்றுமேல் வருமெய்யைத்தொடர்ந்து நின்ற சொல்லும், மென்றொடர் - மெல்லொற்று மேல் வரு மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், ஆயிரு மூன்றே - ஆகியவாறு சொல்லுமே (ஆகிய அவ்வாறு சொல்லுமே) உகரங் குறுகிடன் - குற்றிய லுகரங் குறுகி வருமிடமென்றவாறு.

உதாரணம் : நாகு வரகு தெள்கு எஃகு கொக்கு குரங்கு எனவரும்.

இதனை யேழென்றே (ஏழென்று) கொள்வார்க்குப் பிண்ணாக்கு சுண்ணாம்பு (ஆமணக்கு முதலியன) (முடியாமை உணர்க) முடியாமையு முணர்க. (1)

407 அவற்று
ளீரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா

இது அவ்வீற்று ளொன்றற் கெய்தியது (இஃது அவ்வாறனுள் ஒன்றற் கெய்தியது) விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ள்) அவற்றுள் (அவ்வீற்றுள்) - அவ்வாறனுள் ஈரொற்றுத் தொடர்மொழி - இரண்டொற்றிடைக்கட் டொடர்ந்து நிற்குஞ் சொல்லிற்கு இடையின வொற்று முதனின்றால் இடைத் தொடராகா - மேலிடையினந் தொடர்ந்து நில்லா, வல்லினமும் மெல்லினமுந் தொடர்ந்து நிற்கு மென்றவாறு.

உதாரணம் : ஆர்க்த (ஈர்க்த) நொய்ம்பு (மொய்ம்பு) எனவரும். [2]

408 அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணு
மெல்லா விறுதியு முகர நிறையும் (நிலையும்)

இது [இஃது] இடைப்படிற் குறுகு மிடனுமாருண்டே யென்றதனாற் புணர்மொழிக்கணை மாத்திரையினுங் குறுகுமென வெய்தியதனை விலக்கி 'யவ்வியனிலையு மேனை மூன்றே' ('அவ்வியனிலையு மேனை மூன்றே') யென்ற விதியே பெறுமென்கின்றது.

[இ-ள்] அல்லது கிளப்பினும்-அல்வழியைச் சொல்லு மிடத்தும், வேற்றுமைக் கண்ணும் - வேற்றுமைப் புணர்ச் சிக் கண்ணும், எல்லா விறுதியு முகரம் நிலையும்-ஆறீற் றின் கண்ணு முகரந்தன்னை மாத்திரையைப் பெற்று நிற்கு மென்றவாறு.

வருமொழியானல்ல தல்வழியும் வேற்றுமையும் விளங்காமையி'னல்லதுகிளப் பினு மவேற்றுமைக்கண்ணுப் மெனவே யிருமொழிப் புணர்ச்சி யென்பது பெற்றாம். இவ்விரு மொழிக்கட் பழைய வரை மாத்திரை பெற்றே நிற்கு மென்றார். அன்றி யிருமொழிப் புணர்ச்சிக்கண் ணொரு மாத்திரை பெறுமென்றார்க்குப் பன்மொழிப் புணர்ச்சியாகிய செய்யு ளிலக்கணங் குற்றுகரத்தா னேர் பசை நிரைபசை (நேர்பசை நிரைபசை)கோடலுமவற்றா னறுபது வஞ்சிச்சீர் கோடலும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொரு தொடை கோடலுமின் றாய், முற்றிய லுகரமாகவே கொள்ள வேண்டுதலின் மாறு கொளக்கூறலென்னுங் குற்றந் தங்குமென்றுணர்க.

உதாரணம் : நாது கடிது (வரது கடிது) நாகு கடுமை (வரகு கடுமை) வரகு கதிர் எனவரும். இவை தம் மரை மாத்திரை பெற்றன. ஏனைபவற்றோடு மொட்டுக. இனி யது மால் யானை போந்தது கால் சுரந்து பாய்ந்தது (இனி இது 'மால் யாறு போந்து கால்சுரந்து பாய்ந்து' எனத் தொடர்மொழிக் கண்ணு மரை மாத்திரை பெற்ற தென்னாக்கால் வஞ்சிச்சீரின்றாமாறு முணர்க (வஞ்சிச் சீரின்றாமாறு உணர்க) (3)

409 வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து
வருவழித்
தொல்லை யியற்கை நிலையலு முரித்தே

இனி முன்னின்ற சூத்திரத்தி (சூத்திரத்தான்) னரை மாத்திரை பெறுமென் றெய்தியதனை விலக்கி ''யிடைப்படிற் குறுகு (மிடனு)'' மென்பதனா னரை மாத்திரையி னுங் குறுகு மென்றாண்டு விதித்த தீண்டு வல்லொற்றுத் தொடர் மொழிக் கண்ணே வருமென்கின்றது.

(இ–ள்) வல்லொற்றுத் தொடர்மொழி-வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம், வல்லெழுத்து வருவழி-வல்லெழுத்து (முதன் மொழி) வருமொழியாய் வருமிடத்து, தொல்லை யியற்கை நிலையலு முரித்தே-இடைப்படிற் குறுகு மென்பதனாற் கூறிய வரைமாத்திரையினுங்குறுகி நிற்கு மென்ற வியல்பிலே நிற்றலு முரித்தென்றவாறு. உம்மை எதிர்மறை.

உதாரணம் : கொக்குக் கடிது கொக்குக் கடுமை என வரைமாத்திரையிற் குறைந்தவாறு குரங்கு கடிதென்பது முதலிவற்றோடு படுத்துச் செவி கருவியாக உணர்க.

[இனி] முன்னின்ற சூத்திரத்துகர நிறையு மென்றற் குகர மரை மாத்திரையிற் [உகரநிறையு மென்று பாடம் ஓதி அதற்கு உகரம் அரைமாத்திரையிற்] [சிறிது மிக்கு நிற்கு மெனப் பொருள் [மென்றுபொருள்] கூறி யிச்சூத் திரத்திற்குப் பழைய வரை மாத்திரைபெற்று நிற்கு மென்று கூறுவாருமுளர். [4]

410 யகரம் வரு(ம்)வழி யிகரங் குறுகு
முகரக்கி ளவி துவரத் தோன்றாது

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்து வருமாறு கூறுகின்றது.

உதாரணம் : பதினாயிரம் எனவரும்.

உம்மை யிறந்தது தழீஇயிற்று. (30)

436 நிறையு மளவும் வரூஉங் காலையுங்
குறையா தாகு மின்னென் சாரியை.

இது எய்தாத தெய்துவித்தது. எண்ணுப் பெயரின் முன்னரளவுப் பெயரு நிறைப்பெயரு மின்பெறுகவென்ற லின்; [இஃது எண்ணுப் பெயரொடு நிறைப்பெயரும் அளவுப் பெயரும் புணர்க்கின்ற புணர்ச்சி கூறுகின்றது]

[இ-ள்] நிறையு மளவும் வரூஉங் காலையும்-முன் கூறிய பத்தன் முன்னர் நிறைப்பெயரு மளவுப் பெயரும் வருங் காலத்தும், இன்னென் சாரியை குறையாதாகும் - அவ்வின்னென்னுஞ் சாரியை குறையாது வந்து முடியு மென்றவாறு.

உதாரணம் : பதின்கழஞ்சு தொடி பலம் எனவும், பதின் கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், பதிற்றகல் பதிற்றுழக்கு எனவும் வரும்.

குறையாதாகு மென்றதனாற் பத்தின் முன்னர் பொருட் பெயரு மெண்ணுப்பெயரும் நிறைப் பெயரும் வந்துழியு மின்கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்து முடிக்க பதிற்றிதழ் வேலி (பதிற்றுவேலி) யாண்டு அடுக்கு முழம் எனவும், பதின்றிங்கள்நிறைவன் எனவும். (பதிற்றுத் தொடி) எனவும் வரும். பதிற்றொன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழ் எட்டு ஒன்பதுபத்து எனவும்பதிற் றுத்தொடி எனவு மொட்டுக. பதிற்றொன்று என்பது போல இரண்டு முதற் பத்தளவும் ஒட்டுக.

இவற்றிற்கு னகரம் றகரமாத (இவ்வீற்றின் னகரம் றகரமாத)லனபாகு மொழிமுத லென்பதனு''ணிலைஇய''

வென்றதனான் முடிக்க. இவற்றிற் கொற்றிரட்டுதலு முக -ரம் வருதலும் வல்லெழுத்துப் பெறுதலும் முற்கூறிய ''வொன்று முதலாக'' வென்பதன்கட் கூறிய ''முற்ற'' வென்றதனாற் கொள்க. (31)

437 ஒன்றுமுத லொன்பா னிறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட. வாயதம்
வந்திடை நிலையு மியற்கைத் தென்ப
கூறிய வியற்கை குற்றிய லுகர
மாற னிறுதி யல்வழி யான.

(இ-ள்) இது பத்தன வருமொழியாக்கி ஒன்றுமுத லொன்பான்களை நிலைமொழியாக்கிப்புணர்த்தலி னெய்தாத தெய்து வித்தது.

(இ-ள்து எண்ணுப் பெயரோடு பத்தென்னும் எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது)

(இ-ள்) ஒன்றுமுத லொன்பா னிறுதிமுன்னர்-ஒன்று முதலாக வொன்பதீறாகக் கூறுகின்ற வெண்ணுப் பெயர்களின் முன்னர், நின்ற பத்தனொற்றுக்கெட-வருமொழியாய் வந்துநின்ற பத்தென்னுஞ் சொல்லினது தகர வொற்றுக்கெட, ஆய்தம் வந்திடை நிலையு மியற்கைத் தென்ப—ஆய்தமானது வந்திடையே நிலைபெறு மியல்பை யுடைத்தென்று கூறுவாராசிரியர், ஆறனிறுதி யல்வழியான - அவற்றுளாறென்னு மீறல்லாத விடத்து, குற்றியலுகரங் கூறிய வியற்கை—குற்றிய லுகர முற்கூறிய வியற்கையாய் மெய்யொடுங்கெட்டு முடியுமென்றவாறு.

இங்ஙனம் வருமாறு மேல்வருகின்ற குத்திரங்களுட் காட்டுதும். வந்தென்றதனா லாய்தமாய்(க)த் திரியாது தகரவொற் றுக்கெட்டு ஒருபது என்று நிற்றலுங் கொள்க. (32)

414 வன்றொடர் மொழியு மென்றொடர் மொழியும்
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்
[றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையெழுத் தாகும்

இது ஏனை யிரண்டற்கு (இது பின்னின்ற இரண்டற்கு) முடிபு கூறுகின்றது.

(இ-ள்) வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்—வன்றொடர் மொழிக் குற்றுகர வீறும், மென்றொடர் மொழிக் குற்றுகர வீறும், வந்த வல்லெழுத் தொற்றிடை மிகும்—வருமொழியாய் வந்த வல்லெழுத்தின தொற்றிடையிலே மிக்கு முடியும், மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்-அவ்விரண்டனுண் மெல்லொற்றுத் தொடர்மொழிக்கணின்ற மெல்லொற்றெல்லாம், இறுதிவல்லொற்று — இறுதிக்கணின்ற வல்லொற்றும், (கிளையொற்றாகும்) கிளையெழுத்தாகும் - கிளையாகிய வல்லொற்றுமாய் முடியுமென்றவாறு.

இறுதி வல்லொற்று வருதலாவது குற்றுகர மேறி நின்ற வல்லொற்றுத் தானே முன்னர்வந்து நிற்றலாம். கிளைவல்லொற்று வருதலாவது ணகரத்திற்கு டகரமும் (ணகாரத்திற்குடகாரமும்) னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாமாதலினவை முன்னர் வந்து நிற்றலாம்.

உதாரணம் : கொக்குக்கால் சிறகு தலை புறம் எனவும் குரங்குக்கால் செவி தலை புறம் எனவும், எட்குக் குட்டி செவி தலை புறம் எனவும்,எற்புக்கால்(எற்புக்காடு) சுரம் தலை புறம் எனவும் வரும். அற்புத்தளை யென்பதன்பினாற் செய்ததளை யென வேற்றுமையு மன்பாகிய தளையென வல்வழியுமாம்.

வந்த வென்றதனானிவ் விரண்டற்கு முருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றவழி யியைபு வல்லெழுத்து வீழ்க்க. கொக்கின்கால் குரங்கின்கால் எனவரும்.

எல்லா மென்றதனாற் பறம்பிற் பாரி குறும்பிற் சான்றார் என மெல்லொற்றுந் திரியாமையுங் கொள்க.

ஒற்றென்ற மிகுதியானியல்பு கணத்துக்கண்ணும் குரக்கு ஞாற்சி நிணம்முகம் விரல் உகிர் என மெல்லொற்றுத்திரிந்துவருமாறுங்கொள்க.சிலப்பதிகாரமென்பதுமது.

வன்றொடர் மொழி யியல்பு கணத்துக்கண் வருதல் ''ஞ ந ம ய வ'' வென்பதனான் முடியும். (9)

(இறுதி வல்லொற்றென்றது உகரமூர்ந்த விறுதிவல்லின மெய்யை. அவ்வல்லொற்றாக விடையினின்ற மெல்லொற்றுத் திரியு மென்றவாறு. எடுத்துக்காட்டாகக் குரங்கென்பதிலுள்ள மெல்லொற்று குரக்கு என விறுதி நின்ற வல்லொற்றாய்த் திரிதல் காண்க. கிளையொற்றென்றது மெல்லொற்றுக் கணமாகிய வல்லினமெய்யை.

உதாரணமாக எண்கென்புழி ணகரம் எட்கு எனத் தனக்கினமாகிய டகரமாய்த் திரிதல் காண்க. பிறவு மனன்ன சிலப்பதிகாரம் என்புழிச் சிலம்பு சிலப்புஎனவாயிற்று)

415 மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை

இது (இஃது) எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்ற தம்மு வகுத்தலின்.

(இ-ள்) மரப்பெயர்க் கிளவிக்கம்மே சாரியை-குற்றியலுகரவீற்று (ஈற்று) மரப்பெயர்க்கு வருஞ் சாரியை யம்முச் சாரியை யென்றவாறு.

உதாரணம் : தேக்கங்கோடு செதில் தோல் பூ என வரும்.

கமுகங்காய் தெங்கங்காய் சீழ்க்கம்புல் (கம்பம்புல்) பயற்றங்காய் என்றாற்போலும் புல்லினையும் மரமென வடக்கிமாறுகொளக் கூறலெனத் தழீஇக் கொண்ட சிதை வென்பதா மிச்சூத்திர மென்றுணர்க. (மென்றொடர்க்கு மேற்கூறுப) (10)

416 மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.

இது மென்றொடர் மொழிக் கெய்தியதொரு மருங்கு மறுக்கின்றது.

(இ-ள்) மெல்லொற்று வலியா மரப்பெயருமுளவே— மெல்லொற்று வல்லொற்றாய்த் திரியாது மெல்லொற் றாய் முடியு மரப்பெயருமுள வென்றவாறு.

உதாரணம் : குருந்தங்கோடு புன்கங்கோடு செதிள் தோல் பூ எனவரும். (புன்கங்கோடு செதிள் தோல் பூ என வும், குருந்தங்கோடு செதிள் தோல் பூ எனவும் வரும்)

வலியா மரப்பெயருமுள வெனவே வலிக்கும் மரப் பெயரு முளவென்று கொள்க. வேப்பங்கோடு கடப்பமுரசு (கடப்பங்காய்) ஈச்சங்காய் (ஈச்சங்குலை) எனவரும். (11)

417 ஈரெழுத்து மொழியும் வல்லெழுத்துத் தொடரு
மம்மிடை வரற்கு முரியவை யுளவே
யம்மர பொழுகு மொழிவயி னான.

இது (இஃது) ஈரெழுத்தொரு மொழிக்கும் வன்றொ டர் மொழிக்கு மெய்தாத தெய்து வித்தது. முன்னரெய்தி யவற்றை விலக்கி யம்மு வகுத்தலின் (எய்தியதனை விலக்கி அம்மு வகுத்தலின்)

(இ-ள்) ஈரெழுத்து மொழியும் வல்லெழுத்துத் தொட ரும் (ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்— ஈரெழுத்தொரு மொழிக் குற்றிய லுகரமும் வன்றொடர்

மொழிக் குற்றிய லுகரமும் அம்மிடைவரற்கு முரியவை யுளவே - (முன் முடிந்துப் போந்த முடிபுகளன்றி யம்முச் சாரியை யிடையேவந்து முடிதற்குரியனவுமுள) முன்னர்க் கடிந்தவாறன்றி யம்முச் சாரியை யிடையே வருதற்குரிய னவுமுள; யாண்டெனின், அம்மரபொழுகு மொழிவயி னான-அவ்விலக்கண நடக்கு மொழியிடத்தென்றவாறு.

உதாரணம் : ஈறங்கோள் (ஏறங்கோள்) சூதம்போர் வட்டம்போர் புற்றம் பழஞ்சோறு எனவரும்.

உம்மை எதிர்மறை யாதலி னம்முப் பெறாதன நாகு கால் கொக்குக்கால் என முன்னர்க் காட்டினவேயாம்.

அம்மர பொழுகு மென்றதனால் அரசக்கன்னி முர சக்களிப்பு (முரசக்கடிப்பு) என அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும் அரச வாழ்க்கை முரசவாழ்க்கை என அக்குக் கொடுத்தும் முடிக்க.

இன்னுமதனானே இருட்டத்துக் கொண்டான் விளக் கத்துக் கொண்டான் என அத்தும் வல்லெழுத்துங் கொடுத்தும் மயிலாப்பிற் கொற்றன் பறம்பிற்பாரி என இன்கொடுத்தும் கரியதன்கோடு நெடியதன்கோடு என அன்கொடுத்தும் முடிக்க. (12)

418 ஒற்று நிலை திரியா தக்கொடு வரூஉ
மக்கிளை மொழியு முளவென மொழிப

இது மென்றொடர் மொழியுட் சிலவற்றிற் கெய் தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

(இ-ள்) ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்- ஒற்று முன்னின்ற நிலைதிரியாதக்குச் சாரியை யோடும் பிறசாரியையோடும் வரும், அக்கிளை மொழியு முளவென மொழிப-அக்கிளையான சொற்களுமுளவென்று சொல் லுவ ராசிரிய ரென்றவாறு.

இதற்கும்மையை முன்னர் மாறுக.

உதாரணம் : குன்றக்கூகை மன்றப்பெண்ணை என வரும். உம்வையாற் கொங்கத்துழவு வங்கத்து வாணிகம் என் அத்தும் வந்தது. (பெற்றது)

நிலையென்றதனா னொற்றுநிலை திரியா வதிகாரத் துக்கண் வருஞ்சாரியைக் கியைபு வல்லெழுத்து வீழ்க்க. அக்கிளை யென்றாரிரண்டு சாரியை தொடர்ந்து முடிவ னவு முளவென்றற்கு பார்ப்பனக்குழவி சேரி தோட்டம் பிள்ளை என அன்னும் அக்கும் வந்தன. இவற்றிற் குடைமை விரிக்க. பார்ப்பினுட் குழவி யென்றதுமாம். (யென்றுமாம்) பார்ப்பானாகிய குழவியென்றாலீண்டு மூடியாதென்றுணர்க பார்ப்பான் மகன் பார்ப்பான் வனி தை யென்பனவும் பார்ப்பான் சாதியைப் புணர்த்தின. (பார்ப்பன மகன் பார்ப்பன வனிதை என்பனவும் பார்ப் பான் சாதி உணர்த்தின.) (13)

419 எண் ணுப்பெயர்க் கிளவி யுருபிய னிலையும்

இது சாரியை பெறுமென வெய்தாத தெய்துவித்து மெல்லொற்று வல்லொற்றாகாதென வெய்தியதொரு மருங்கு மறுக்கின்றது. (இது குற்றுகர ஈற்று எண்ணுப் பெயரோடு பொருட்பெயர் முடிக்கின்றது)

(இ-ள்) எண்ணுப் பெயர்க்கிளவி—எண்ணுப் பெய ராகிய சொற்தள் பொருட்பெயரோடு புணருமிடத்து உரு பியனிலையும் - உருபுப் புணர்ச்சியி னியல்பினின் றன் பெற்றுப். புணருமென்றவாறு.

உதாரணம் : ஒன்றன் காயம் சுக்குத்தோரை பயறு யெனவொட்டுக. (ஒன்றன் காயம் இரண்டன் காயம் சுக்கு தோரை பயறு என ஒட்டுக. (ஒன்றதனாற்கொண்ட காயமென்ன விரியும்) வருமொழி வரையாது கூறினமையி னியல்பு கணத்துக் கண்ணுங் கொள்க. ஒன்றன் ஞாண்

நூல் மணி யாழ் வட்டு அடை எனவரும். மேலைச் சூத்திரத்து நிலையென்றதனா னியையு வல்லெழுத்து வீழ்க்க. (14)

420 வண்டும் பெண்டு மின்னொடு சிவணும்

இது மென்றொடர் மொழியுட் சிலவற்றிற்குப் பிறமுடிபு கூறுகின்றது.

(இ-ள்)வண்டும் பெண்டு மின்னொடு சிவணும்-வண்டென்னுஞ் சொல்லும் பெண்டென்னுஞ் சொல்லுமின் சாரியையோடு பொருந்தி முடியுமென்றவாறு.

உதாரணம்:வண்டின்கால் பெண்டின்கால் எனவரும். இதற்கு முற்கூறிய விலேசினா (இலேசினான்) னியையு வல்லெழுத்து வீழ்க்க. (15)

421 பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்

இது முன்னர்க் கூறியவற்றுக் கொன்றற் (கூறியவற்றுள் ஒன்றற்)கெய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

(இ-ள்) பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்—பெண்டென்னுஞ் சொற்கின்னேயன்றி யன்சாரியை வருதலையு நீக்காராசிரிய ரென்றவாறு.

உதாரணம் : பெண்டன்கை செவி தலை புறம் என வரும். (16)

422 யாதெ னிறுதியுஞ் சுட்டுமுத லாகிய
வாய்த விறுதியு முருபிய னிலையும்

இது (இ-ள்து) ஈரெழுத் தொருமொழிக் குற்றுகரத்து ளொன்றற்கு வல்லெழுத்துப் பெறுதலு மொற்றிடை மிகாது வருமொழி வல்லெழுத்துப் பெறாது முடிதலுமாகிய விரண்டுமாய்தத் தொடர்மொழிக் குற்றியலுகர மியல்பா கலும் விலக்கியன வகுத்தலி னெய்தியது விலக்கிப் பிறிது விதியாம். (குற்

றியலுகரத்து ளொன்றற்குஞ் சுட்டுமுதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரத்திற்கும் வேறு முடிபு கூறு கின்றது)

(இ-ள்) யாதென் கிளவியுஞ் சுட்டுமுதலாகிய வாய்த விறுதியும்-யாதென்னு மீறுஞ் சுட்டெழுத்து முதலாகிய வாய்தத் தொடர்மொழிக் குற்றுகர வீறும், உருபிய னிலையும் -உருபு புணர்ச்சியினியல்பின்கண்ணே நின்றன் பெற்றுச் சுட்டு முதலிறுதி யாய்தங்கெட்டு முடியுமென்ற வாறு.

உதாரணம் : யாதன்கோடு அதன்கோடு இதன்கோடு உதன்கோடு செவி தலை புறம் எனவரும்.

ஆய்தங் கெடாமுன்னே அன்னினகரத்தைக் குற்று கரத்தின் மேலேற்றுக-வாய்தங் கெட்டாலது முற்றுகர மாய் நிற்றலின் (17)

423 முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி மன்னல் வேண்டு மல்வழி யான.

இது எய்தாத தெய்துவித்தது. ஆய்தங்கெடாது நிற்க வென்றலின் (முற்கூறியவற்றுட் சுட்டுமுத லுகரத்திற்கு ஒரு வழி அல்வழி முடிபு கூறுகின்றது)

(இ-ள்) முன்னுயிர் வருமிடத்து - சுட்டுமுதலாகிய வாய்தத்தொடர்மொழிக் குற்றுகர வீற்றின்முன்னே யுயிர் முதன்மொழி வருமிடத்து, ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும் -ஆய்தவொற்று முன்புபோலக் கெடாது நிலை-பெற்று முடிதலை விரும்புமாசிரியன், அல்வழியான-அல் வழிக்க ணென்றவாறு.

உதாரணம்: அஃது இஃது உஃது என நிறுத்தி அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு ஏணி ஐயம் ஒடுக்கம் ஓக்கம் ஔவியம் என ஒட்டுக.

முன்னென்றதனான் வேற்றுமைக் கண்ணு மிவ்விதி கொள்க. அஃதடைவு அஃதொட்ட மெனவொட்டுக. இவற்றிற் கிரண்டாமுருபு விரிக்க. இன்னுமிதனானே யேனையிலக்கணமு முடியுமாறறிந்து முடிக்க. (18)

424 ஏனைமுன் வரினே தானிலை யின்றே.

இது மேலன (மேலனவற்றிற்குப்) பிறகணத்தோடல் வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஏனைமுன்வரின்-முற்கூறிய வீறுகளின் முன்னுயிர்க்கண மல்லன வருமாயின், தானிலையின்றே-அவ்வாய்தங்கெட்டு முடியு மென்றவாறு.

உதாரணம்: அதுகடிது இதுகடிது உதுகடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என வொட்டுக. (19)

425 அல்லது கிளப்பி னெல்லா மொழியுஞ்
சொல்லிய பண்பி னியற்கை யாகும்.

இது ஆறீற்றுக் குற்றுகரத்திற்கு மல்வழி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) அல்லதுகிளப்பின் - அல்வழியைச் சொல்லுமிடத்து, எல்லாமொழியும்-ஆறிற்றுக் குற்றுகரமும், சொல்லிய பண்பினியற்கை யாகும்-மேலாசிரியன் கூறியகுணத்தையுடைய வியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம்: நாகுகடிது வரகுகடிது தெள்குகடிது எஃகுகடிது குரங்குகடிது சிறிது பெரிது தீது எனவரும். ஏனைக் கணத்துக்கண் ''ணின்ற சொன்மு னியல்பாகு'' மென்றதனாற் கொள்க.

(எல்லா மொழியு மென்றதனால் வினைச்சொல்லும் வினைக் குறிப்புச் சொல்லும் இயல்பாய் முடிதல் கொள்க. கிடந்தது குதிரை கரிது குதிரை எனவரும்.)

எல்லா மென்றதனாற் கிடந்தது குதிரை கரிது குதிரை எனவினைச் சொல்லும் வினைக்குறிப்புச் சொல்லுமியல் பாக முடிதல் கொள்க.

சொல்லிய வென்றதனா னிருபெயரொட்டுப் பண்புத் தொகை வன்கணத்துக்க ணினவொற்று மிக்கு வல்லெழுத் துப் பெற்று முடிதலு மியல்பு கணத்துக்க ணினவொற்றே மிக்கு முடிதலுங் கொள்க. (கரட்டுக்காணம்) குருட்டுக் கோழி திருட்டுப்புலையன் கரட்டுக்காணம் களிற்றுப்பன்றி வெளிற்றுப்பனை எயிற்றுப்பல் எனவும் வறட்டாடு (வரட் டாடு) குருட்டெருது எனவும் வரும்.

பண்பி னென்றதனான் மெல்லொற்று வல்லொற்றா யைகாரம் பெற்று முடிவனவும் மெல்லொற்று வல்லொற் றா யைகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாகாது வலலெழுத்து மைகார மும் பெற்று முடிவனவுங் கொள்க. ஓர்யாட்டை யானை ஐயாட்டை எருது எனவும் (அற்றைக்கூத்தர் இற்றைக் கூத்தர்) அற்றைக் கூற்றர் இற்றைக்கூற்றர் எனவும் மன்றைத்தூதை மன்றைப் பானை பண்டைச்சான்றார் எனவும் வரும். (20)

426 வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே

இது (இ-ள்து) அவ்வாறனு ளொன்றற் கியல்பு விலக்கி வல்லெழுத்து விதித்தலி னெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

(இ-ள்து அவ்வாறு ஈற்றுள் ஒன்றற்கெய்தியது விலக் கிப்பிறிதுவிதி வகுத்தது)

(இ-ள்) வல்லொற்றுத் தொடர்மொழி - வல்லொற் றுத் தொடர்மொழிக் குற்றுகரம், வல்லெழுத்துமிகுமே—

வல்லெழுத்து வந்துழி வல்லெழுத்து மிக்கு முடியுமென்ற வாறு. (வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகும் —வல்லொற்றுத் தொடர் மொழிக் குற்றுகர ஈறு வல் லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்கு முடியுமென்றவாறு)

உதாரணம்: கொக்குக்கடிது சிறிது தீது பெரிது பாக்கு பட்டு எனவரும். (கொக்குக்கடிது பாக்குக்கடிது பட்டுக்கடிது சிறிது தீது பெரிது எனவரும்) (21)

427 சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்
யாவினா முதலிய மென்றொடர் மொழியு
மாயிய றிரியா வல்லெழுத் தியற்கை.

(இதுவு மவ்வாறீற்று ளொன்றன்கண் ணேழாம் வேற்றுமையிடப் பொருளுணர நின்ற விடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.)

(இ-ள்) சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும் சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்றொடர் மொழிக் குற்றுகர வீறும், யாவினா முதலிய மென்றொடர் மொழி யும் யாவென்னும் வினா முதலாகிய மென்றொடர் மொழிக் குற்றுகர வீறும், வல்லெழுத் தியற்கை ஆயியறிரியா— வல்லெழுத்துப் பெற்று முடியுந் தன்மையாகிய வவ்விலக் கணத்திற்றிரியா வென்றவாறு. (அவ்வியல்பிற் றிரியாது முடியும் என்றவாறு.)

உதாரணம்: ஆங்குக் கொண்டான் ஈங்குக் கொண் டான் ஊங்குக்கொண்டான் யாங்குக்கொண்டான் சென் றான் தந்தான் போயினான் எனவல்லெழுத்துக் கொடுக்க. இயற்கை யென்றதனாற் குற்றுகர வீற்று வினையெச்ச மியல்பாயு மிக்கும் முடிவனவுங்கொள்க. இருந்து கொண் டான் ஆண்டு சென்றான் தந்துதீர்ந்தான் வந்துபோயி னான் எனவும் செத்துக்கிடந்தான் செற்றுச் செய்தான் உய்த்துத் தந்தான் (உய்த்துக் கொண்டான்) நட்டுப் போனான் எனவும் வரும்.

இயற்கை யென்றதனான் மென்றொடர் மொழிக் குற்றிய லுகர வீற்று வினையெச்சம் இயல்பாயும் வன் றொடர் மொழிக் குற்றியலுகர வீற்று வினையெச்சம் மீக்கும் முடிவனகொள்க. (22)

428 யாவினா மொழியே யியல்பு மாகும்

இது மேலனவற்று ளொன்றற் கெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வல்லெழுத்து விலக்கி யியல்பாக வென்றலின் [இது மேலனவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது. வல்லெழுத்து விலக்கி இயல்பா மென்றலின்]

[இ-ள்] யாவினா மொழியே யியல்புமாகும்—அவற் றுள் யாவென்னும் வினாவையுடைய சொன் முற்கூறிய வாறன்றி யியல்பாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : யாங்குக்கொண்டான் சென்றான் தந் தான் போயினான் எனவரும். [இது இஃது] எப்படி யென் னும் வினாப்பொருளை யுணர்த்திற்று. உம்மையான் மிக்கு முடிதல் வலியுடைத்து [முடிதலே வலியுடைத்து] ஏகாரம் பிரிநிலை. [23]

429 அந்நான்கு மொழியுந் தந்நிலை திரியா

இது மேலனவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறு கின்றது.

[இ-ள்] அந்நான்கு மொழியும்-சுட்டு முதன்மூன்றும் யாமுதன் மொழியுமாகிய வந்நான்கு மொழியும், தந் நிலைதிரியா-தம்மெல்லொற்றாய் தன்மை திரிந்து வல் லொற்றாகாது முடியுமென்றவாறு.

உதாரணம் : முற்காட்டியவே தந்நிலை யென்றத னான் பிறமெல்லொற்றுத் திரியாது நின்று வல்லெழுத் துப் பெறுவனவுங் கொள்க. ஆங்குக் கொண்டான் ஈங்குக்

கொண்டான் ஊங்குக் கொண்டான் அங்குக்கொண்டான் இங்குக்கொண்டான்உங்குக் கொண்டான் எங்குக்கொண் டான் சென்றான் தந்தான் போயினார்ன் எனவரும்.

இனி முன்னர் யாமொழி எனனாது வினாவென்றத னான் ஏழாவத னிடப்பொருட்டாகியயன [இடப்பொருட் டாகிய பிறவும் இயல்பாய்] பிறவியல்பாய் முடிவனவுங் கொள்க. முந்து கொண்டான் பண்டுகொண்டான் இன்று கொண்டான் அன்று கொண்டான் என்று கொண்டான் என்வரும். [2]

430 உண்டென் கிளவி யுண்மை செப்பின்
முந்தை யிறுதி மெய்யொடுங் கெடுதலு
மேனிலை யொற்றே ளகார மாதலு
மாமுறை யிரண்டு முரிமையு முடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான

இது மென்றொடர் மொழியுள் வினைக்குறிப்பாயும் பண்பாயும் நிற்பதோர் சொல் வல்லிரண்டற்கு முடிப்பு வேறாமாறு கூறுகின்றது. [இது மென்றொடர் மொழியுள் வினைக் குறிப்பாய் நின்றதோர் சொற் பண்பை உணர்த் துங்கால் வேறு முடிபு பெறுதல் கூறுகின்றது.]

[இ-ள்] உண்டென் கிளவி உண்மைசெப்பின் - உண் டென்னுஞ்சொல் வினைக்குறிப்பை யுணர்த்தாது ஒரு பொருட்டோன்றுங்காற் றோன்றி யதுகெடுந்துணையு முண்டாய் நிற்கின்ற தன்மையாகிய பண்பை யுணர்த்தி நிற்குமாயின், முந்தையிறுதி மெய்யொடுங் கெடுதலும் - முன்னர் நின்ற வீற்றுக் குற்றுகரந் தானேறி நின்ற மெய் யோடுங் கெடுதலும், மேனிலையொற்றே ளகார மாதலும் அதற்கு மேனின்ற [ண்ணகர] ணகரவொற்று ளகார வெரிற்றாதலுமாகிய, ஆமுறை யிரண்டு முரிமையு முடைத்து - அம்முறைமையினையுடைய இரண்டு நிலையு முரித்தாதலு முரித்தம் தூரித்

தன்றி முன்னர் நின்ற நிலையிலே கேடுந் திரிவுமின்றி நிற்றலு முடைத்து, வல்லெழுத்து வருஉங் காலையான - வல்லெழுத்து முதன்மொழியாய் வருங்காலத்தென்றவாறு

வல்லெழுத் ததிகாரத்தால் வாராநிற்ப வல்லெழுத்து வருஉங்காலை யென்றதனா லிவ்விரு முடிபு முள்ளது பண்பை யுணர்த்தும் பகரம் வருமொழிக் கண்ணே யென் பதூ(யென்பதூஉ)மேனைக் க ச த க்களிலு மேனையியல்பு கணத்திலு முண்டென நின்று வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மைப்பண்பாயு நிற்கு மென்பதூங்(மென்பதூஉங்) கொள்க.

உதாரணம்:உள்பொருள் உண்டுபொருள் எனவரும். இது பொருண்மை சுட்டா துண்மைத் தன்மைப் பண்பை ஈண்டுணர்த்திற்று. இனி உண்டுகாணம் உண்டுசாக்காடு உண்டுதாமரை (உண்டுஞானம்) ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை ஆடை எனவருவன வெல்லாங் கேடுந் திரிபு மின்றி வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயு நின்றன. இவற்றின் வேறுபாடு வினையியலுள் வினைக் குறிப்போதும் வழியுணர்க,

உள்பொரு ளென்பது பண்புத்தொகை முடிபன்றோ வெனின் அஃது ஓசை ஒற்றுமைபடச் சொல்லும் வழியது போலும். இஃது ஓசை இடை யறவுபடச் சொல்லும் வழி யதென்க. (25)

431 இருதிசை புணரி னேயிடை வருமே

இது குற்றுகர வீற்றுத் திசைப்பெயர்க் கல்வழி முடிபு கூறுதலி னெய்தாத தெய்து வித்தது. (இது குற்றுகர ஈற் றுத் திசைப் பெயர்க்கு அல்வழி முடிபு கூறுகின்றது.)

(இ-ள்) இருதிசை புணரின்—இரண்டுபெருந் திசை யும்மை தொக்குத் தம்மிற் புணரின், (இரண்டு பெருந் திசையுந் தம்மிற் புணரின்) ஏ யிடை வருமே-ஏ யென்னுஞ் சாரியை யிடை நின்று புணருமென்றவாறு.

உதாரணம் : தெற்கே வடக்கு கிழக்கே மேற்கு என வரும். இவை யும்மைத் தொகை (26)

432 திரிபுவேறு கிளப்பி னொற்று முகரமுங்
கெடுதல் வேண்டு மென்மனார் புலவ
ரொற்றுமெய் திரிந்து னகரமாகுந்
தெற்கொடு புணருங் காலை யான

இது பெருந்திசைகளோடு கோணத்திசைகள் புணர்த்தலி னெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) திரிபுவேறு கிளப்பின் - அப்பெருந்திசைகளோடு கோணத்திசைகளை வேறாகப் புணர்க்குமிடத்து, ஒற்று முகரமுங் கெடுதல் வேண்டுமென்மனார் புலவர்— அவ்வுகர மேறிநின்ற வொற்றும் அவ்வீற்றுகரமுங் கெட்டு முடிதல் வேண்டுமென்று சொல்லுவர் புலவர், தெற்கொடு புணருங் காலை - அது தெற்கென்னுந் திசையோடு புணருங்காலத்து, ஆன ஒற்று மெய் திரிந்து னகாரமாகும்-அத்திசைக்குப் பொருந்தி நின்ற றகாரவொற்றுத் தன்வடிவு திரிந்து னகரவொற்றாய் நிற்குமென்றவாறு.

திரிந்தென்றதனான் வடக்கென்பதன்க ணின்ற ககரவொற்றுக் கெடுத்துக் கொள்க. (கெடுத்து முடித்துக் கொள்க)

உதாரணம் : வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு எனவரும்.

வேறென்றதனாற் றிசைப் பெயரோடு பொருட் பெயர்க்கு மிம்முடிபு கொள்க. வடகடல்வடசுரம் வடவேங்கடம் தென்குமரி தென்சுரம் (தென்னிலங்கை) எனவரும்.

மெய்யென்றதனா னுயிர்கெட்டுந் திரிந்தும்மெய்கெட்டும் முடிவனவுமுள. திசைப்பெயர் முன்னர்ப் பொருட் பெயர் வந்துழி யென்றுணர்க. கிழக்கென்பது கரை கூரை

யென்பனவற்றோடு புணருமிடத்துக் கீழ்கரை (கீழ்கூரை) என விறுதி யுகரம் [எனநிலைமொழி யிறுதியுகர] மெய் யொடுங் கெட்டதன்மேனின்ற ககரவொற்றுங் கெட்டு முகாரத்தி லகரங்கெட்டு முதலெழுத்து நீண்டு முடிந்தது [முடிந்தன] மேற்கென்பது மீகரை மிகூரை [கரை கூரை] (மீகரை மீகூரை என விறுதியுகர (என நிலைமொழி ஈற்றுஉகர] மெய்யொடுங் கெட்டுங் கெட்டதன் மேனின்ற றகரவொற்றுங் கெட்டேகார மீகாரமா யேறி முடிந்தது [முடிந்தன] இன்னுமிதனானே மேன்மாடு மேல்பால் [மே லைச்சேரி] என்றாற் போல்வனவுஞ் செய்கையறிந்து முடிக்க [27]

433 ஒன்றுமுத லாக வெட்ட னிறுதி
யெல்லா வெண்ணும் பத்தன் முன்வரிற்
குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே
முற்ற வின்வரூஉ மிரண்டலங் கடையே

இது நிறுத்த முறையானே ஆறீற்றுக் குற்றுகர மூணர்த்தி யிதுமுதலாக வெண்ணுப்பெயர் முடிக்கின்றார். ஆறீற்றுக் குற்றுகரமும் புணருமாறுணர்த்தி யினியவ்வீற் றெண்ணுப் பெயர் முடிக்கின்றார். இஃது அவற்றுட் பத் தென்னும் எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயர் வந்து புணருமாறு கூறுகின்றது.

[இ-ள்] ஒன்றுமுதலாக வெட்டனிறுதி யெல்லாவெண் ணும் - ஒன்றென்னு மெண்ணு முதலாக வெட்டென்னு மெண்ணீறாகவுள்ள வெல்லா வெண்ணுப் பெயர்களும், பத்தன்முன்வரின் - பத்தென்னு மெண்ணுப் பெயர் முன் னர் வரின், குற்றியலுகர மெய்யொடுங் கெடுமே- அப்பத் தென்னுஞ் சொல்லிற் குற்றுகரந் தானேறி நின்ற மெய் யோடுங் கெடுமே, இரண்டலங்கடையே முற்றவின் வரூ உம் - ஆண்டிரண்டல்லாத வெண்ணுப் பெயர்களிடத்து மூடியவின் சாரியை யிடைவந்து புணருமென்றவாறு.

உதாரணம் : பதினொன்று பதின்மூன்று பதினான்கு பதினைந்து பதினாறு பதினேழு பதினெட்டு எனவரும்.

நிலைமொழி முற்கூறாததனாற் பிறவெண்ணின் முன்னர்ப் பிறபெயர் வந்துழியு மின்பெறுதல் கொள்க. ஒன்பதின் கூறு ஒன்பதின்பால் எனவரும். முற்றவென்ற தனாற் பதினான்கென்புழி வந்த வின்னினிகரம் வரு மொழிக்கட் கருவிசெய்து கெடுத்து முடிக்க. (28)

434 பத்தனொற்றுக்கெட னகார மிரட்ட
லொத்த தென்ப விரண்டுவரு காலை

இது மேலின் பெறாதென்று விலக்கிய விரண்டற் கெய்தாத தெய்து வித்தது. (இதுமேல் இன்பெறாதென்று விலக்கிய இரண்டற்குப் பிறிதுவிதி கூறுகின்றது)

(இ-ள்) பத்தனொற்றுக்கெட னகார மிரட்டல் – பத்தென்னுஞ் சொல்லினின்ற தகர வொற்றுக்கெட னகர வொற்றிரட்டித்து வருதல். இரண்டுவரு காலை யொத்த தென்ப - இரண்டென்னு மெண்ணுப் பெயர் வருங்காலத்துப்(இரண்டென்னுமெண் வருங்காலத்திற்) பொருந்திற் றென்பராசிரிய ரென்றவாறு.

உதாரணம்: பன்னிரண்டென வரும். ''குற்றிய லுகர மெய்யொடுங் கெடு'' மென்ற விதி யிதற்கும் மேலனவற் றிற்குங் கொள்க. (29)

435 ஆயிரம் வரினு மாயிய றிரியாது.

இதுபத்தன் முன்னாயிர மின்பெறுக வென்றலி னெய்தாத தெய்துவித்தது. (இஃது ஆயிரமென்னும் எண்ணுப் பெயர்வரின் வரும் முடிபு கூறுகின்றது)

(இ-ள்) ஆயிரம் வரினும் - முற்கூறிய பத்தன்முன்ன ரொன்று முதலியனவே யன்றி யாயிரமென்னு மெண் வந்தாலும், ஆயியறிரியாது-ஈறு கெட்டின் பெறுமியல்பிற் றிரியாது முடியுமென்றவாறு.

(இ-ள்) யகரம் வருவழி உகரக்கிளவி நுவரத்தோன் றாது-யகர முதன்மொழி (வருமொழியாய்) வருமிடத்து நிலை மொழிக் குற்றுகர வெழுத்து முற்றத் தோன்றாது, இகரங் குறுகும்-ஆண்டோ ரிகரம் வந்தரை மாத்திரை பெற்று நிற்குமென்றவாறு.

உதாரணம்: நாகியாது வரகியாது தெள்கியாது எஃகி யாது கொக்கியாது குரங்கியாது எனவரும். துவர வென்றா ராறீற்றுக் (ஆறு ஈற்றின்) கண்ணு முகரங் கெடுமென்றற்கு. (5)

411 ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயி னொற்றிடை யினமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

இது முற்கூறிய வாறனுண் முன்னர்நின்ற விரண்டற் கும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

(இ-ள்) ஈரெழுத்து மொழியு முயிர்த்தொடர் மொழி யும்-ஈரெழுத்தொருமொழிக் குற்றுகர வீற்றிற்கு முயிர்த் தொடர் மொழிக் குற்றுகர வீற்றிற்கும், வேற்றுமையாயின் -வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், இனவொற்றி டை மிக-இனமாகிய வொற்றிடையிலேமிக, வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும்-வல்லெழுத்து மிகுதி தோன்றி முடிதலை விரும்புமாசிரியனென்றவாறு.

உதாரணம்: யாடுக்கால் [யாட்டுக்கால்] செவி தலை புறம் எனவும், முயிற்றுக்கால் சினை தலை புறம் எனவும் வரும். கயிற்றுப்புறம் வயிற்றுத்தீ என்பனவுமாம்.

தோற்றமென்றதனா னேனைக் கணத்து மிம்முடிபு கொள்க. யாட்டு ஞாற்சி நிணம் மணி வால் அதள் என வும், முயிற்று ஞாற்சி நிணம் முட்டை வலி [வலிமை] அடை (ஆட்டம்) எனவும் வரும். [6]

412 ஒற்றிடை யினமிகா அ மொழியுமா ருளவே
யத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

இது (இஃது) எய்தியதொரு மருங்கு மறுக்கின்றது.

(இ-ள்) ஒற்றிடையின மிகா அ மொழியுமாருளவே - முற்கூறிய விரண்டனு ளினவொற்றிடைமிக்கு முடியாத மொழிகளுமுள, வல்லெழுத்து மிகலத் திறத்தில்லை-வல் லெழுத்துமிக்கு முடிதலக் கூற்றுளில்லை யென்றவாறு.

உதாரணம் : நாகு கால் செவி தலை புறம் எனவும் வரகு கதிர் சினை தலை புறம் (தாள் பதர்)எனவும் வரும்.

அத்திற மென்றதனா னுருபிற் கெய்திய சாரியை பொருட் கெய்திய [பொருட்கட் சென்ற] வழியையு வல் லெழுத்து வீழ்க்க. யாட்டின்கால் முயிற்றின்கால் நாகின் கால் வரகின் கதிர் எனவரும்.

அத்திற மென்றதனா னேனைக் கணத்து மொற்றி டை மிகாமை கொள்க. [நாகு ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை என ஒட்டுக] [7]

413 இடையொற்றுத் தொடரு மாய்தத் தொடரு
நடையா யியல வென்மனார் புலவர்.

இது (இஃது) இடைநின்ற விரண்டற்ற முடிபு கூறு கின்றது.

(இ-ள்) இடையொற்றுத் தொடருமாய்தத் தொடரும் இடையொற்றுத் தொடர்மொழிக் குற்றுகர வீறு மாய்தத் தொடர்மொழிக் குற்றுகர வீறும், நடையாயியல வென்ம னார் புலவர்- நடைபெற நடக்குமிடத்து முற்கூறிய வவ் வியல்பு முடிவினையுடைய வென்று கூறுவர் புலவ ரென்றவாறு.

உதாரணம்: தெள்கு கால் சிறை தலை புறம் எனவும் எஃகு கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும். (8)

438 முதலீ ரெண்ணினொற்று ரகர மாகு
முகரம் வருத லாவயி னான

இது(மேற்)முற் கூறியவற்றுட் சிலவற்றிற்கு நிலை மொழிச் செய்கை கூறுகின்றது.

(இ-ள்)முதலீ ரெண்ணி னொற்று ரகரமாகும்-அவற் றின் முதற்கணின்ற விரண்டெண்ணி னுடைய னகர வொற்றும் ணகர வொற்றும் ரகர வொற்றாய் நிற்கும். (ரகரவொற்றா கத்திரிந்து நிற்றல்) ஆவபினான உகரம் வருதல்—அவ்விடத்துகரம் வருகவென்றவாறு.

உதாரணம் : ஒருபஃ தென்பதனைக் குற்றுகர மெய் யொடுங் கெடுத்து நின்ற னகரவொற்றினை ரகர வொற் றாக்கி யுகரமேற்றி ஒருவென நிறுத்திப் பத்தென்பதன் றகரவொற்றுக் கெடுத்தாய்தமாக்கிப் பஃதென வருவித் தொருபஃதென முடிக்க. மேல்வருவன வற்றிற்குஞ் சூத் திரங்களாற்கூறுஞ் சிறப்புவிதி யொழிந்தவற்றிற் கிதுவே முடிபாக முடிக்க.

(ஒருபஃது எனவரும்) ஒன்றென்பதன் ஈற்றுக்குற்று கரம் மெய்யொடுங் கெடுத்து னகர ஒற்றினை ரகர ஒற் றாக்கி உகர மேற்றி ஒருவென நிறுத்தி நின்ற பத்தென் பதன் தகர ஒற்றுக்கெடுத்து ஆய்தமாக்கிப் பஃதென வரு வித்து ஒருபஃது என முடிக்க. (மேல்வருவன வற்றிற்குஞ் சூத்திரங்களாற் கூறுஞ் சிறப்புவிதி ஒழிந்தவற்றிற்கு இதுவே முடிபாகக் கொள்க.) (33)

439 இடைநிலை ரகார (ரகர) மிரண்டெ னெண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

இதுவுமது.

(இ-ள்) இரண்டெனெண்ணிற் கிடைநிலை ரகரம் - இரண்டென்னு மெண்ணிற் கிடைநின்ற ரகரம், பொருள் வயினான - அம்மொழி பொருள் பெறுமிடத்து, நடைமருங் கின்றே - நடக்கு மிடமன்றிக் கெடுமென்றவாறு.

உதாரணம் : இருபஃது எனவரும். இதற்கு ரகரவு யிர் மெய் யிதனாற் கெடுத்தேனைய கூறியவாறேமுடிக்க. (கூறியவாறே கூட்டி முடிக்க)

பொருளெனவே யெண்ணல்லாப் பெயருங் கொள்க இருகடல் இருவினை இருநிறப்பு எனவரும். (34)

440 மூன்று மாறு நெடுமுதல் குறுகும்.

இதுவுமது

(இ-ள்) மூன்றுமாறு நெடுமுதல் குறுகும் — மூன் றென்னு மெண்ணு மாறென்னு மெண்ணும் நெடுமுதல் குறுகி முடியுமென்றவாறு.

அறுவெனக் குறுக்கிப் பஃதென வருவித்து அறுபஃ தென முடிக்க. [35]

441 மூன்ற னொற்றே பகார மாகும்

இதுவுமது.

[இ-ள்] மூன்ற னொற்றே பகாரமாகும்-மூன்றென்னு மெண்ணின்க ணின்ற னகர வொற்றுப் பகர ஒற்றாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : முப்பஃதெனவரும். [36]

442 நான்க னொற்றே றகார மாகும்

இதுவுமது

(இ-ள்) நான்க னொற்றே றகாரமாகும் - நான் கென்னு மெண்ணின்கணின்ற னகர வொற்றுறகரவொற் றாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : நாற்பஃதெனவரும். (37)

443 ஐந்த னொற்றே மகார மாகும்

இதுவுமது

(இ-ள்) ஐந்தனொற்றே மகார மாகும்-ஐந்தென்னு மெண்ணின்கணின்ற நகரவொற்று மகரவொற்றாய் முடி யுமென்றவாறு.

உதாரணம் : ஐம்பஃது எனவரும்.

ஏழகுற்றுகர வீறன்மை (குற்றிய லுகர ஈறன்மை) யுருபியலுட் காண்க. (38)

444 எட்ட னொற்றே ணகார மாகும்.

இதுவுமது

(இ-ள்) எட்டனொற்றே ணகாரமாகும் - எட்டென்னு மெண்ணின்க ணின்ற டகரவொற்று ணகரவொற்றாய் முடியுமென்றவாறு.

உதாரணம் : எண்பஃதென வரும் [மூன்றுமாறு நெடு முதல் குறுகுமென்பதனா மூன்றனொற்றே யெனக் குறுக்கிச் சூத்திரஞ் செய்யா ராயினார் திரிந்த தன்றிறி பதுவெனப் பற்றியேனையவற்றிற்கு மிஃதொக்கும்] (39)

445 ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
மூந்தை யொற்றே ணகார மிரட்டும்
பஃதென் கிளவி யாய்தபக ரங்கெட

நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகர மாகும்.

இது (இஃது) எய்தாத தெய்து வித்தது.

(இ-ள்) ஒன்பா னொகர மிசைத் தகரமொற்றும்—

ஒன்பதென நிறுத்திப் பஃதென வருவித்து முடிக்குங்கால், (நிலைமொழியாகிய) ஒன்பதென்னு மெண்ணினை தொகரத்திற்கு முன்னாக வொரு தகரவொற்றுத் தோன்றி நிற்கும், முந்தையொற்றே ணகார மிரட்டும்—(முன்சொன்ன) அவ்வொகரத்தின் முன்னர் நின்ற ணகரவொற்றா யிரட்டித்து நிற்கும், பஃதென் கிளவி யாய்தபகரங்கெட — வருமொழியாகிய பத்தென்னுஞ் சொற்றன்க ணாய்தமும் பகரமுங் கெட்டுப்போக, ஊகாரக்கிளவி நிற்றல் வேண்டும்—நிலைமொழியிலிரட்டிய ணகரத்தின் பின்ன ரூகாரமாகிய வுயிர் (எழுத்து) வந்து நிற்றலையு மாசிரியன் விரும்பும், ஒற்றிய தகரம் றகரமாகும்-வருமொழியாகிய பத்தென்பதனீற்றின் மேலேறிய வுகரங் கெடாது பிரிந்து நிற்பவொற்றாய் நின்ற தகரம் றகரமாய் முடியுமென்றவாறு. (ஒன்பான்ஒகர மிசைத் தகரம் ஒற்றும்-ஒன்பது என நிறுத்திப் பஃதுஎன வருவித்து முடிக்குங்கால், நிலைமொழியாகிய ஒன்பதென்னும் எண்ணினது ஒகரத்திற்கு முன்னாக ஒருதகர ஒற்றுத் தோன்றி நிற்கும், முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்-முன்சொன்ன ஒகரத்திற்கு முன்னர்நின்ற ணகரவொற்று ணகரவொற்றாய் இரட்டித்து நிற்கும், பஃதென்கிளவி ஆய்தபகரங்கெட-வருமொழியாகிய பஃதென்னுஞ் சொல் தன்கண் ஆய்தமும் பகரமுங் கெட்டுப்போக, ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் - நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர் ஊகாரமாகிய எழுத்து வந்து நிற்றலை ஆசிரியன் விரும்பும், ஒற்றிய தகரம் றகரமாகும்-வருமொழியாகிய பத்தென்பதன் ஈற்றின் மேலேறிய உகரங்கெடாது பிரிந்து நிற்ப ஒற்றாய் நின்ற தகரம் றகர ஒற்றாய் நிற்கும்) என்றவாறு.

உதாரணம் : தொண்ணூறு எனவரும். இதனை ஒற்றாய் வந்து நின்ற தகர வொற்றின் மேலே யொகர மேற்றித் தொவ்வாக்கி ணகர வொற்றிரட்டியதன் மேலே வருமொழிக்கட் பகர முமாய்தமுங் கெடவந்த ஊகார மேலேற்றித் தொண்ணூவாக்கி பகர வாய்த மென்னாத முறையன்றிக் கூற்றானிலை மொழிக்கட் பகரங் கெடுத்துக் குற்றிய லுகர மெய்யொடுங் கெடுத்து வருமொழி யிறுதித் தகரவொற்றுக் கெட வந்து திரிந்து நின்ற றகர வொற்றின் மேலே நின்ற வுகர மேற்றி முடிக்க.

(உதாரணம் : தொண்ணூறு எனவரும். இதனை ஒற்றாய் வந்து நின்ற தகரஒற்றின் மேல்நிலைமொழி ஒகரத்தை ஏற்றித் தொவ்வாக்கி ணகர ஒற்று இரட்டி அதன் மேல் வருமொழிக் கட் பகரம் ஆய்தமுங் கெட வந்த ஊகார மேற்றித் தொண்ணூ வாக்கிப் பகரவாய்த மென்னாத முறையன்றிக் கூற்றினான் நிலைமொழிக்கட் பகரமும் ஆய்தமுங் கெடுத்துக் குற்றிய லுகர மெய்யொடுங் கெடுத்து வருமொழி இறுதித்தகர ஒற்றுத் திரிந்து நின்ற றகர ஒற்றின் மேலே நின்ற உகர மேற்றித் தொண்ணூறென முடிக்க) (40)

446 அளந்தறி கிளவியு நிறையின் கிளவியுங்
கிளந்த வியல தோன்றுங் காலை

இது முற்கூறிய ஒன்றுமுத லொன்பானெண்களோடளவுப்பெயரும் நிறைப்பெயரு முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) அளந்தறி கிளவியு நிறையின் கிளவியுந் தோன்றுங்காலை — முற்கூறிய ஒன்றுமுத லொன்பான்களின் முன்னரளந்தறியப்படு மளவுப் பெயரும் நிறையென்னும் பெயரும் வந்து தோன்றுங்காலத்து) கிளந்த வியல-ஆறனீ றல்வழிக் குற்றுகர மெய்யொடுங் கெட்டு முதலீரெண்ணி னொற்று ரகாரமா யுகரம் வந்திடைநிலை ரகரங்கெட்டு மூன்று மாறு நெடுமுதல் குறுகி நான்க ளெற்று வன்கணத்து றகர மாய் யெட்டி னொற்று ணகாரமாய் முடியுமென்றவாறு.

உதாரணம் :— ஒரு கலம் இரு கலம் சாடி நூறை பானை நாழி மண்டை வட்டி எனவும், ஒரு கழஞ்சு இரு கழஞ்சு கஃசு தொடி பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன முன்னர் முடித்தும் — இவை முதலீரெண்ணின் செய்கை.

தோன்றுங்காலை யென்றதனால் இவ்வெண்ணின் முன்ன ரெடுத்தோத்தானு மிலைசானு (இலேசானும்) முடியாதுநின்ற வெண்ணும் பெயர்களெல்லா மிவ்விதியும் பிறவிதியு மெய்து வித்து முடித்துக்கொள்க. ஒரு மூன்று ஒரு நான்கு இரு மூன்று இரு நான்கு ஒரு கால் இருகால் ஒரு முந்திரிகை இரு முந்திரிகை ஒரு முக்கால் இரு முக்கால் ஒரு காணி இரு காணி என ஏற்பன (என்பன) பிறவுங் கொணர்ந்தோட்டுக. இனிப் பிறவிதி யெய்துவன ஒரொன்று ஓரிரண்டு ஓரைந்து ஓராறு ஓரேழ் ஓரெட்டு ஓரொன்பது எனவும், ஈரொன்று ஈரிரண்டு ஈரைந்து ஈரேழ்(ஈரேழு)ஈரெட்டு ஈரொன்பது எனவும், மூவொன்று மூவிரண்டு மூவைந்து மூவாறு மூவேழ் மூவெட்டு மூவொன்பது எனவும் முதலீரெண்ணின் முன்னுயிரென்னுஞ்சூத்திரத்தா னுபிர்க்கெய்திய பிறவிதியும் மூன்றன் முதனிலை நீடலு முரித்தென்ற பிறவிதியும் பெற்றுப் பிற செய்கைகளும் பெற்று முடிந்தன. நாலொன்று நாலிரண்டு நாலைந்து நாலாறு நாலேழ் நாலெட்டு நாலொன்பது என்பன நான்கனொற்றெலகாரமாகு மென்ற விதிபெற்று முடிந்தன. பிறவுமிவ்வாறே யன்றி யளவு நிறையு மன்றி வருவன வெல்லா மிவ்லேசினான் முடிக்க. (41)

447 மூன்ற னொற்றே வந்த தொக்கும்.

இது (மேல்) மாட்டேற்றோ டொவ்வா தந்த வேறு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) மூன்றனொற்றே வந்த தொக்கும்—மூன்றா மெண்ணின்க ணின்ற னகர வொற்றளவின் கண்ணு நிறைக் கண்ணு மேல்வந்த வல்லொற்றிற்கொத்த வொற்றாய்த் திரிந்து முடியுமென்றவாறு.

(னகரவொற்று வருமொழியாய் வந்த அளவுப்பெயர் நிறைப் பெயர்களின் முன்னர்வந்த வல்லொற்றோடொத்தவொற்றாய்)

உதாரணம்: முக்கலசம்(முக்கலம்)சாடி தூதை பானை எனவும் முக்கழஞ்சு கஃசு தொடி பலம் துலாம் எனவும் வரும்.

"நான்க னொற்றே றகார மாகு" மென்ற முன்னை மாட்டேற்றானே நாற்கலம் சாடி தூதை பானை கழஞ்சு கஃசு தொடி பலம் துலாம் எனவு மொட்டுக. (42)

448 ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்.

இதுவுமது.

(இ-ள்) ஐந்த னொற்றே மெல்லெழுத்தாகும்-ஐந்தவதன்கணின்ற நகரவொற்றுத் திரிந்து வருமொழி வல்லெழுத்திற் கேற்ப ஙஞநம வென்னு மொற்றா மென்ற வாறு. (ஐந்தாவதன்கண் நின்ற நகர ஒற்று வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற மெல்லெழுத்தாகத் திரிந்து முடியும் என்றவாறு)

உதாரணம்: ஐங்கலம் சாடி தூதை பானை கழஞ்சு கஃசு தொடி பலம் எனவொட்டுக. ஏகார ஈற்றசை.

(ஐங்கலம் சாடி தூதை பானை எனவும், ஐங்கழஞ்சு தொடி பலம், எனவரும்) (43)

449 கசதப முதன்மொழி வருஉங் காலை.

இது முற்கூறிய மூன்றற்த மைந்தாவதற்கும் வந மொழி வரையறுக்கின்றது.

(இ-ள்) கசதப முதன்மொழி வருஉங்காலை—மூன்ற னொற்று வந்த தொப்பதூஉ மைந்தனொற்று மெல்

லொற்றாய் வந்த தூவை மவ்வளவுப் பெயரொன்பதினும் வன்கணமாகிய கசதபக்கள் முதன் மொழியாய் வருங் காலத்தென்றவாறு. (முன்னொற்று வந்த தொப்பதூஉம் ஐந்தனொற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய கசதபக்கள் முதன்மொழி யாய் வந்த இடத்து என்றவாறு)

அது முன்னர்க் காட்டினாம் ஆறு 'நெடுமுதல் குறுக. மென்ற மாட்டேற்றானே ஆறு நெடுமுதல் குறுகி நின்றது

உதாரணம் : அறுகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், அறுகழஞ்சு தொடி பலம் என வும் வரும். அகல் உழக்கு என்பன மேற்காட்டுதும் (காட் டினாம்) ஏழ் (ஏழு) குற்றுகர வீறன்மையின் மாட்டேறே லாதாயிற்று. (44)

450 நமவ வென்னு மூன்றொடு சிவணி
யகரம் வரினு மெட்டன்மு னியல்பே

இது வேண்டாது கூறி வேண்டியது முடித்தல் (முடிக் கின்றது) 'ஞநமயவ' வென்னுஞ் சூத்திரத்துட் கூறிய வற்றைக் கூறுதலின்.

(இ-ள்) எட்டன்முன் - எட்டென்பதன் முன்னர், நமவ வென்னு மூன்றொடு சிவணி யகரம் வரினும்- அளவுப் பெயர்களின் முன்னர் நமவ வென்னு - மூன்ற னோடும் பொருந்தி யுயிர்க்கணத்தகரம் வரினும், உம்மை யானுயிர்க்கணத் துகரம் வரினுங் கூறாத வல் லெழுத்துகளும் வரினும், இயல்பு - முற்கூறியவாறே டகார ணகாரமாய்வேறோர் விகாரமின்றி யியல்பாய் முடியுமென்றவாறு.

நமவ வென்னு மூன்றும் வந்தாற்போலவகரம் வரினு மென்பது பொருள்.

உதாரணம் : எண்ணாழி மண்டை வட்டி எனவும், மென்னெல் எண்ணுழக்கு எனவும் எண்கலம் சாடி நூறை பானை எனவும் வரும்.

ஒன்றென முடித்தலான் வன்கணந்து நிறைப் பெயருங் கொள்க. எண்கழஞ்சு தொடி பலம் எனவரும்.

இவ் வேண்டா கூறலான் எண்ணாக லெனக் குற்று கர வீறாய்க் கெடுந் திரிவும் பெற்றியிர் வருமொழியான தொடர் மொழிக்கு ணொற்றிரட்டுஞ் கொள்க. (45)

451 ஐந்து மூன்று நமவருங் காலை [வருகாலை]
வந்த தொக்கு மொற்றிய னிலையே.

இதுவு முற் கூறிய (இதுவும் மேல்) மாட்டேற்றோ டொவ்வா முடிபு கூறுகின்றது.

(இ-ள்) ஐந்து மூன்று நமவ நங்காலை—ஐந்தென்னு மெண்ணும் மூன்றென்னு மெண்ணும் நகர முதன்மொழி யும் மகர முதன் மொழியும் வருமொழியாய் வருங் காலத்து, ஒற்றியல்நிலையே — நிலைமொழிக்கணின்ற வொற்று நடக்கு நிலைமை கூறின், வந்ததொக்கும்— மேற்கூறியவாறே மகரமும் பகரமுமாகாது வருமொழி முதல் வந்த வொற்றோடொத்த வொற்றாய் முடியு மென்றவாறு.

உதாரணம் : ஐந்நாழி ஐம்மண்டை மூந்நாழி மும் மண்டை எனவரும்.

மூன்று மைந்து மென்னாத முறையன்றிக் கூற்றி னால் நானாழி நான் மண்டை யென்புழி நிலைமொழி னகரம் றகரமாகாது நின்றவாறே நின்று முடிதலும் வருமொழி முதல் நின்ற நகரம் னகரமாகத் திரிய நிலை மொழி னகரம் கெடுதலுங் கொள்க. (46)

452 மூன்ற னொற்றே வகாரம் [வகரம்] வருவழித்
தோன்றிய வகரத் துருவா கும்மே

இதுவுமது.

இதன் பொருள் : மூன்ற னொற்றே—மூன்றாமெண்ணின்கணின்ற னகரவொற்று, வகரம் வருவழி—வகர முதன் மொழி வருமிடத்து, தோன்றிய வகரத் துருவாதும் அவ்வருமொழியாகத் தோன்றிய வகரத்தின் வடிவாய்த் தோன்று மென்றவாறு.

உதாரணம் : மூவ்வட்டி யெனவரும்.

தோன்றிய வென்றதனானே முதனீண்டு வகரவொற்றின்றி மூவட்டி யென்றுமாம். (47)

453 [நான்க] னொற்றே லகார மாகும்.
இதுவுமது

இதன் பொருள் : நான்க னொற்றே-நான்கா மெண்ணின்க ணின்ற னகரவொற்று, லகாரமாகும்-வகரமுதன் மொழி வந்தான் முன்னின்ற வடிவு கெட்டு லகர வொற்றா[க]ய்த் திரிந்து முடியு மென்றவாறு.

உதாரணம் : நால்வட்டி எனவரும். (48)

454 ஐந்த னொற்றே முந்தையது கெடுமே.
இதுவுமது

இதன் பொருள் : ஐந்த னொற்றே - ஐந்தாமெண்ணின்ற (ஐந்தா மெண்ணின்க ணின்ற) நகர வொற்று, முந்தையது கெடுமே—வகர முதன் மொழி வந்தான் முன்னின்ற வடிவு கெட்டு முடியுமென்றவாறு.

உதாரணம் : ஐவட்டி எனவரும்.

முந்தைய வென்றதனான் நகர வொற்றுக் கெடாதே (வகர வொற்றாய்த்)வகரமாய்த் திரிந்து ஐவ்வட்டி யெனச் சிறுபான்மை வரும். [49]

455 முதலீ ரெண்ணின்மு னுயிர்வரு காலைத்
தவலென மொழிப வுகரக் கிளவி
முதனிலை நீட லாவயி னான.

இது மாட்டேற்றா னெய்திய வுகரத்திற்குக் கேடு கூறி முதனீள்க வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது. [கூறுகின்றது]

இதன் பொருள் : முதலீ ரெண்ணின்மு னுயிர் வரு காலை-ஒரு இரு வென முடிந்து நின்ற விரண்டெண்ணின் முன்ன ரகரமும் உகரமும் வருமொழியாய் வருங்காலத்து. [முன்னர் உயிர் முதன் மொழி வருமொழியாய் வருங் காலத்து, உகரக் கிளவி தவலென மொழிப-நிலைமொழியி லுகரமாகிய வெழுத்துக் கெடுதலாமென்று சொல்லுவர் புலவர், ஆவயினான முதனிலை நீடல்- அவ்விரண்டெண்- ணின்கணின்ற முதலெழுத்துக்கணீண்டு முடிகவென்ற- வாறு. [நீண்டு முடியும்]

உதாரணம் : ஒரகல் ஒருழக்கு ஈரகல் ஈருழக்கு என வரும். [50]

456 மூன்று நான்கு மைந்தென் கிளவியுந்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

இதுவுமது

இது அகல் உழக்கென்பன வந்தால் மாட்டேற்றோ டொவ்வாதனவாகி நின்ற வெண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

(இ-ள்) மூன்று நான்கு மைந்தென் கிளவியும்-மூன்றென்னு மெண்ணு நான்கென்னு மெண்ணு மைந்தென்னு மெண்ணும், தோன்றிய வகரத்தியற்கையாகும்-முன்னர்த் தோன்றிநின்ற வகரம் வருமொழிக்குக் கூறிய வியல்பாய் மூன்றின்கண் வகர வொற்றாயும் நான்கின்கண் லகர வொற்றாயு மைந்தன்க ணொற்றுக் கெட்டும் முடியு மென்றவாறு.

உதாரணம்: முவ்வகல் முவ்வுழக்கு எனவருமிதற் கொற்றிரட்டுதல் தோன்றிய வென்றதனாற் கொள்க. நாலகல் நாலுழக்கு எனவும், ஐயகல் ஐயுழக்கு எனவும் வரும்.

இவற்றை மூன்றனொற்றே முதலிய மூன்று சூத்திரங் கொணர்ந்து முடிக்க.

(உதாரணம்: முவ்வகல் முவ்வுழக்கு என இதற்குத் தோன்றிய என்றதனால் ஒற்றிரட்டுதல் கொள்க. நாலகல் நாலுழக்கு ஐயகல் ஐயுழக்கு எனவரும்.

தோன்றிய என்றதனால் மேல் மூன்றென்பது முதல் நீண்ட இடத்து நிலைமொழி னகரவொற்றுக் கெடுத்துக் கொள்க.

இயற்கை யென்றதனால் தொடர் மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. 'மூன்றனொற்றே' முதலிய மூன்று சூத்திரமுங் கொணர்ந்து முடிக்க.) [51]

457 மூன்றன் முதனிலை நீடலு முரித்தே
யுழக்கென் கிளவி வழக்கத் தான.

இது முன்னர்க் குறுகுமென்றதனை நீண்டு முடி[க்]க வென்றலி னெய்தியது விலக்கிற்று.

[இ-ள்] மூன்றன் முதனிலை நீடலு முரித்தே-மூன்றென்னு மெண்ணின் முதனின்ற வெழுத்து நீண்டு முடிதலு முரித்தி [யஃதி] யாண்டெனின், உழக்கென் கிளவி வழக்கத்

தான-உழக்கென்னுஞ் சொல்லு முடியுமென்ற வழக்கிடத் தென்றவாறு.

உதாரணம் : மூவுழக்கு எனவரும்.

வழக்கத்தான வென்பதனா னகலென் கிளவிக்கு முத னிலை நீடலுங் கொள்க. மூவகல் எனவரும். இன்னுமித னானே நிலை மொழி னகரவொற்றுக் கெடுக்க.

மூழக்கு மூழாக்கு என்னு மருஉமுடிபுகளிவ் வோத்-தின் புறனடையான் முடிக்க. (52)

458 ஆறென் கிளவி முதனீ டும்மே.
இதுவுமது

(இ-ள்)ஆறென் கிளவி-ஆறென்னு மெண்ணுப் பெய ரகலுழக் கென்பன வரின், முதனீடும்மே - முன்னர்க்குறுகி நின்ற முதலெழுத்து நீண்டு முடியுமென்றவாறு.

அறுவென்னா தாறென்றார், திரிந்ததன் றிரிபது வென்னு நயத்தால்.

உதாரணம் : ஆறகல் ஆறுழக்கு எனவரும். (53)

459 ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.

இது குற்றுகரம் மெய்யோடுங் கெடாது நின்றின் பெறுக வென்றலி னெய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

(இ-ன்) ஒன்பா னிறுதி யுருபு நிலை திரியாது-அள வும் நிறையும் வரும் வழி யொன்பதென்னு மெண்ணி-றுதிக் குற்றுகரந் தன் வடிவுநிலை திரியாது நின்று, சாரி யை மொழியின்பெறல் வேண்டும்-சாரியைச் சொல்லாகிய வின்பெற்று முடிதலை விரும்பு மாசிரிய னென்றவாறு.

உதாரணம் : ஒன்பதின் கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும் கழஞ்சு சீரகம் தொடி பலம் எனவும் வரும்.

சாரியை மொழி யென்றதனா னின்னொடுகரமும் வல்லெழுத்துங் கொடுத்துச் செய்கை செய்து முடிக்க. ஒன்பதிற்றுக் கலம் சாடி என வெல்லாவற்றோடு மொட்டுக.

உருபென்பதனான் ஒன்பதிற்றென வொற்றிரட்டுத லெல்லாவற்றிற்குங் கொள்க.

(ஒற்றிரட்டுதல் என்றது இன்னினகரவொற்று றகர மாக விரட்டுதலை)

இன்னுமிதனானே ஒன்பதினாழி யென்புழி வந்த வின்னி னகரக் கேடுங்கொள்க. ''அளவாகு மொழி முத'' லென்பதனானும் நிலைத்தென்னு (நிலைஇய வென்னு) மிலே சானு மின்னி னகரம் றகரமாதல் கொள்க. (54)

460 நூறுமுன் வரினுங் கூறிய வியல்பே.

இது நூறென்பதனை யொன்றுமுத லொன்பான் களோடு புணர்க்கின்றது.

(இ-ள்) முன்—ஒன்று முதலொன்பான்களின் முன் னர், நூறு வரினும்—நூறென்னு மெண்ணுப் பெயர் வந் தாலும், கூறிய வியல்பே—மேற்பத்தென் பதனோடு புண ரும் வழிக் கூறிய வியல்பெய்தி முடியு மென்றவாறு.

அது குற்றுகர மெய்யொடுங் கெட்டு மூன்றுமாறு நெடு முதல் குறுகியு முதலீ ரெண்ணி னொற்று ரகரமாயு முகரம் பெற்று மிடைநிலை ரகர மிரண்டன்கட் கெட்டு முடிதலாம்.

உதாரணம்:ஒருநூறு இருநூறு அறுநூறு எண்ணூறு எனவரும். இவை விம்மாட்டேற்றான் முடிந்தன. மாட்டே றொவ்வாதன மேற்கூறி முடிப்ப. (55)

461 மூன்ற னொற்றே நகார மாகும்

இது மாட்டேற்றோ டொவ்வாததற்கு வேறு முடிபு கூறுகின்றது.

[இ-ள்] மூன்றனொற்றே நகாரமாகும் — மூன்றா மெண்ணின்கணின்ற னகர வொற்று நகர வொற்றாகு மென்றவாறு.

உதாரணம் : முன்நூறு [முந்நூறு] எனவரும். [56]

462 நான்கு மைந்து மொற்றுமெய் திரியா
இதுவுமது

[இ-ள்] நான்கு மைந்து மொற்றுமெய் திரியா-நான் கென்னு மெண்ணும் ஐந்தென்னு மெண்ணும் தம்மொற் றுக்கணிலை திரியாது முடியுமென்றவாறு.

உதாரணம் : நாணூறு ஐந்நூறு எனவரும்.

மெய்யென்றதனால் நாணூறென்புழி வருமொழி நகரத்துளுகாரம் பிரித்து 'லன என வரூஉ' மென்பத னான் னகர வொற்றாக்கி யூகார மேற்றி நிலைமொழியி னகரங் கெடுத்துக் கொள்க. (57)

463 ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே னகார மிரட்டு
நூறென் கிளவி நகார மெய்கெட
வூவா(ஊவா) வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய் கெடுத்து மகர மொற்றும்.

இதுவுமது

[இ-ள்] ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்[று]றே-ஒன்பதென்னு மெண்ணின் முதனின்ற வொகர [ஒகர] முன்ன ரொன்பா னொகரமிசைத் தகரமொற்று மென்றாற் போல வோர் தகர மொற்றியதன் மேலேறி முடியும் [ஒன்பதென்னு மெண்ணின் முதனின்ற ஒகரம் மேற்பத்தென்பதனோடு புணரும் வழிக் கூறியவாறு போல ஒரு தகரம் ஒற்றி அதன்மேல் ஏறி முடியும்], முந்தை யொற்றே ளகார மிரட்டும்—அதன் முன்னின்ற னகரவொற்று ளகர வொற்றா யிரட்டித்து நிற்கும், நூறென் கிளவி நகார மெய் கெட ஊவா [ஆ] வாகு மியற்கைத் தென்ப-வருமொழியாகிய நூறென்னு மெண்ணுப் பெயர் நகாரமாகிய மெய்கெடவதன் மேலேறிய ஊகார மாகாரமா(ஆகாரமா)மியல்பையுடைத்தென்பர் (புலவர்), ஆபிடை யிகர ரகரம் வருதல் - அம்மொழியிடை யோரிகாரமு(இகரமும்)ரகாரமும் வருக, (ஈறு) ஈறு மெய் கெடுத்து மகர மொற்றும்—(ஈறாகிய) ஈறாகிய குற்றுகரத் தினையு மஃதேறி நின்ற றகார வொற்றினையுங் கெடுத்தோர் மகரமொற்றாய் வந்து முடியுமென்றவாறு.

மெய்யென்பதனா னிலைமொழிக்கட் பகரங் கெடுக்க.

உதாரணம் : தொள்ளாயிரம் என்வரும்.

(இதனை) ஒன்பதென்னு மொகரத்தின் முன்னர் வந்த தகர வொற்றின் மேலே யொகரத்தை யேற்றிப் பகரங் கெடுத்துக் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து நின்ற னகர வொற்றினை இரண்டு ளகரவொற்றாக்கி நூறு என்பதனில் நகரங் கெடுத் தூகார மாகார மாக்கி ளகாரத்தின் மேலேற்றி இகரமும் ரகரமும் வருவித்து விகாரப்பட்ட வுயிராகியவாகாரத்தின் முன் உடம்படு மெய் யகாரம் வருவித்து நகர வுயிரைங் கெடுத்து மகர வொற்று வருவித்து முடிக்க. (58)

464 ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே.

இது (இஃது) அவ்வொன்று முத லொன்பான்களோ டாயிர முடியுமா று கூறுகின்றது.

(இ-ள்) ஆயிரக் கிளவி வருஉங் காலை-ஆயிரமென் னுஞ் சொல் லொன்று முத லொன்பான் கண் முன் வருங் காலத்து, முதலீ ரெண்ணி னுகரங் கெடுமே—ஒரு விரு வென்னு மிரண்டெண்ணின்கட் பெற்று நின்ற வுகரங் கெட்டு முடியுமென்றவாறு.

உகரங் கெடுமெனவே யேனையன முன்(னர்)னைக் கூறியவாறே நிற்றல் பெற்றாம்.

உதாரணம் : ஓராயிரம் ஈராயிரம் எனவரும். (59)

465 முதனிலை நீடினு மான மில்லை

இது எய்தியதன் மேற் சிறப்புவிதி (கூறுகின்றது).

(இ-ள்) முதனிலை நீடினும்—அம்முதலீ ரெண்ணின் முதற்க ணின்ற வொகர விகரங்க ணீண்டு முடியினும், மானமில்லை - குற்றமில்லை யென்றவாறு (முதனிலை நீடினுமானமில்லை-அம்முதலீரெண்ணின்முதற்க ணின்ற ஒகார இகாரங்கள் நீண்டு முடியினுங் குற்றமில்லை என்றவாறு).

உதாரணம் : ஓராயிரம் இராயிரம் (ஈராயிரம்) என வரும். (60)

466 மூன்ற னொற்றே வகார மாகும்

இது மூன்றென்னுமெண் ணாயிரத்தோடுபுணருமாறு கூறுகின்றது.

(இ-ள்) மூன்ற னொற்றே—மூன்றென்னு மெண்ணின்க ணின்ற னகார (னகர) வொற்று வகார (வகர) வொற்றாய்த் திரிந்து முடியு மென்றவாறு.

உதாரணம் : முவ்வாயிரம் எனவரும்.

முன்னின்ற சூத்திரத்து நிலையென்றதனா லிதனை முதனிலை நீட்டி வகரவொற்றுக் கெடுத்து மூவாயிரமென முடிக்க. (61)

467 நான்க னொற்றே லகார மாகும்

இது நான்கென்னு மெண்ணாயிரத்தோடு புணருமாறு கூறுகின்றது.[இது நான்கென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது]

[இ-ள்] நான்கனொற்றே - நான்காமெண்ணின்கணின்ற னகரவொற்று,லகாரமாகும்- லகாரவொற்றாய்த் திரிந்து முடியுமென்றவாறு. [நான்கனொற்றே லகாரமாகும் - நான்கென்னு மெண்ணின்கணின்ற னகர ஒற்று லகர ஒற்றாகத் திரிந்து முடியும் என்றவாறு]

உதாரணம் : நாலாயிரம் எனவரும். [62]

468 ஐந்த னொற்றே யகார மாகும்

இஃது ஐந்தென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

[இ-ள்] ஐந்தனொற்றே யகாரமாகும் - ஐந்தென்னு மெண்ணின்கணின்ற நகர ஒற்று யகர ஒற்றாகத் திரிந்து முடியும் என்றவாறு.

உதாரணம் : ஐயாயிரம் எனவரும். (63)

469 ஆறன் மருங்கிற் குற்றிய லுகர
மீறுமெய் யொழியக் கெடுதல் வேண்டும்.

இது ஆறென்னு மெண் ணாயிரத் தோடு புணருமாறு கூறுகின்றது[இஃது ஆறென்னு மெண் அதனோடு புணரு மாறு கூறுகின்றது.]

(இ-ள்)ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்—ஆறென்னு மெண்ணின்கணின்ற குற்றுகரம் நெடுமுதல் குறுகி யறு வென முற்றுகரமாய் நிற்றலின், மெய்யொழிய வீறு கெடு தல் வேண்டும்—அது தானேறிய மெய்யாகிய றகரவொற் றுக்கெடாது நிற்ப முற்றுகரமாகிய வீறு தான் கெட்டுப் புணர்தலை விரும்பு மாசிரிய னென்றவாறு.

உதாரணம் : ஆறாயிரம் (அறாயிரம்) எனவரும்.

முன்னர் 'நெடுமுதல் குறுகு' மென்றவழி யறுவென நின்ற முற்றுகரத்திற்கே யீண்டுக் கேடு கூறிற்றென்பது பெற்றாம், (ஈண்டுக்கேடு கூறினாரென்பது பெற்றாம்) என்னை? குற்றிய லுகரமாயி னேறி முடிதலினிது குற்று கரந் திரிந்து முற்றுகரமாய் நிற்றலி னீண்டு முடிபு கூறி னார். முற்றிய லுகரமீறு மெய்யொழியக்கெடுமெனவே குற்றுகரங் கெடாது ஏறி முடியு மென்ப தருத்தா பத்தி யாற் பெறுதும். ஆறாயிரம் எனவரும். மருங்கென்றத னாற் பிறபொருட் பெயர்கண்ணும் நெடுமுதல் குறுகாது நின்றுமுடிதல் கொள்க. ஆறாகுவதேயென வரும். [64]

470 ஒன்பா னிறுதி யுருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே

இது ஒன்பதென்னு மெண் ணாயிரத்தோடு புணரு மாறு கூறுகின்றது. (இஃது ஒன்பதென்னுமெண் அத னோடு புணருமாறு கூறுகின்றது)

(இ-ள்) ஒன்பா னிறுதி - ஒன்பதென்னு மெண்ணி னிறுதிக் குற்றுகரம், உருபுநிலை திரியாது - தன் வடிவு நிலை திரிந்து கெடாது, சாரியை மரபின் பெறல் வேண் டும்-சாரியையாகிய மரபினையுடைய வின்பெற்று முடித லை விரும்புமாசிரிய னென்றவாறு (உருபு, உருவெனவும் பாடமுண்டு)

உதாரணம் : ஒன்பதினாயிரம் எனவரும்.

உருவென்றும் நிலையென்றுஞ் சாரியை மரபென்றுங் கூறிய மிகையா லாயிர மல்லாத பிறவெண்ணும் (பிற வெண்ணின் கண்ணும்) பொருட் பெயர்களிடத்து மின்னு முகரமும் (இன்னும் உகரமும்) வல்லெழுத்தும் பெற்று (முடியும் முடிபு) முடிவில் கொள்க. (ஒன்பதிற்றுக்கோடி) ஒன்பதிற்றொன்பது ஒன்பதிற்றுத் தடக்கை ஒன்பதிற் றெழுத்து எனவரும்.

இன்னு மிவ்விலேசானே வேறோர் முடிபின்மையிற் கூறாதொழிந்த வெண்ணாயிர மென்பதற் கொற்றிரட்டு தலு மீண்டுக் கூறியவற்றிற் கொற்றிரட்டுதலுங்கொள்க. ''அளவாகு மொழி முத'' லென்பதனு ணிலைத் [நிலை இய] தென்றதனா னகரம் றகரமாதல் கொள்க [65]

471 நூறா யிரமுன் வருஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி.

இது ஒன்றுமுத லொன்பான்களோடு நூறென்னு மெண் ணடையடுத்த வாயிரம் புணருமாறு கூறுகின்றது. [இஃது] ஒன்றுமுதல் ஒன்பான்களோடு நூறென்னுமெண் அடையடுத்த ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது]

(இ-ள்) நூறாயிர முன்வருஉங்காலை - நூறா யிரமென்னு மடையடுத்த மொழியொன்று முதலொன் பான்கண் முன்வரு மொழியாய் வருங்காலத்து, முதனிலைக் கிளவி நூறனியற்கை — ஒன்றென்னு முதனிலைக்கிளவி யொன்று முன்னூறென்னு

மெண்ணொன்று முதலொன்பான்களொடு முடிந்தாற்போல விகாரமெய்தி முடியும். ஒன்றென்னும் முதனிலைக் கிளவி ஒன்றுமுன் நூறென்னு மெண்ணோடு முடிந்தாற்போல விகார மெய்தி முடியும்) எனவே வழிநிலைக் கிளவியாகிய விரண்டு முதலிய வெண்கள் விகாரமெய்தியு மெய்தா தியல்பாயும் முடியுமென்றவாறு.

உதாரணம்: ஒரு நூறாயிரம் எனவரும். ஏனையன இரு நூறாயிரம் இரண்டு நூறாயிரம் முந்நூறாயிரம் (மூன்று நூறாயிரம்) நானூறாயிரம் (நான்கு நூறாயிரம்) ஐந்நூறாயிரம் (ஐந்து நூறாயிரம்) அறுநூறாயிரம் (ஆறு நூறாயிரம்) எண்ணூறாயிரம் எட்டு நூறாயிரம் ஒன்பது நூறாயிரம் எனவரும். இவ்விகாரப்பட்டன வற்றிற்குக் குற்றுகரம் மெய்யோடுங் கெடுத்து முதலீரெண்ணி னொற்றகரமாக்கி யுகரம் வருவித்து மூன்று மாறும் நெடு-முதல்குறுக்கி மூன்றனொற்று நகாரமாக்கி நான்கும் ஐந்துமொற்று மெய் திரியாவாக்கி யெட்டனொற்று ணகர மாக்கி யிலேசுகளாற் கொண்ட செய்கைகளில் வேண்டு வனவுங் கொணர்ந்து முடிக்க.

ஏற்புழிக்கோட லென்பதனாற்றொள்ளாயித்தோ டொவ்வாமை கொள்க. (ஏற்புழிக்கோட லென்பதனால் தொள்ளாயிர மென்ற முடிபினோடு மாட்டேறு சென்ற தேனும் அவ்வாறு முடியா தென்று கொள்க) முன்னென்ப தாலின் சாரியைக்கொடுத்து ஒன்பதி நூறாயிரம் மென்று மாம். நிலையென்றதனான் மூன்றுமாறு மியல்பாய் முடிவுழி நெடுமுதல் குறுகாமை கொள்க. (66)

472 நூறென் கிளவி யொன்று முதலொன்பாற்
கீறுசினை யொழிய வினவொற்று மிகுமே.

இது நூறென்பதனோ டொன்று முதலொன்பான் களைப்புணர்க்கின்றது.

(இ-ள்) நூறென்கிளவி-யொன்றுமுத லொன்பாற்கு நூறென்னு மெண்ணுப் பெயரொன்று முதலொன்பான்க ளோடு புணருமிடத்து, ஈறுசினையொழிய-ஈறாகியகுற்று

கரந்தன்ணாற் பற்றப்பட்ட மெய்யோடுங் கெடாது நிற்ப, இனவொற்றுமிதம்-அச்சினைக் கினமாகிய றகரவொற்று மிக்கு முடியுமென்றவாறு.

உதாரணம்: நூற்றொன்று, நூற்றிரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழ் எட்டு ஒன்பது எனச்செய்கையறிந் தொட்டுக. (நூற்றொன்று எனவரும். இரண்டு முதல் ஒன்பது அளவுஞ் செய்கை அறிந்து ஒட்டுக)

ஈறுசினை யென்றோதிய மிகையா னூறென்பதனோடு பிறவெண்ணும் பிறபொருட் பெயரு மிவ்விதியும் பிறவிதியு மெய்தி முடிதல் கொள்க. (நூற்றுப்பத்து, நூற்றுக்கோடி நூற்றுத்தொண்ணூறு எனவும், நூற்றுக்குறை, நூற்றிதழ்த் தாமரை நூற்றுக்காணம் நூற்றுக்கால் மண்டபம் எனவும் இனவொற்று மிக்கன கொள்க). இன்னு மிதனானே இரு நூற்றொன்று இரண்டு (நூற்றொன்று) என நூறடை யடுத்த வழியுங்கொள்க. (67)

473 அவையூர் பத்தினு மத்தொழிற் றாகும்.

இது (இஃது) அந்நூறென்பதனோ டவ்வொன்று முதலொன்பான்க ளடையடுத்த மொழிப் புணருமாறு கூறு கின்றது. (இஃது அந்நூறென்பதனோடு ஒன்று முதல் ஒன் பான்கள் அடையடுத்த வழிப் புணருமாறு கூறுகின்றது).

(இ-ள்) அவையூர் பத்தினும் - அந்நூற்றென்பது, நின்று முற்கூறிய வொன்றுமுத லொன்பான்களை யூர்ந்து வந்த பத்தென்பதனோடு புணருமிடத்தும், அத்தொழிற் றாகும் ஈறுசினையொழிய வினவொற்று மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம்: நூற்றொருபது நூற்றொருபஃது நூற்-றிருபஃது முப்பஃது நாற்பஃது ஐம்பஃது அறுபஃது எழு-பஃது எண்பஃது எனவரும். மற்று நூற்றொன்பதவை யூரப்பட்டு வந்ததன்மை யுணர்க.

ஆதமென்றதனான் ஒரு நூற்றொருபஃது (இருநூற்-றொருபஃது) இருபஃது எனநிலைமொழி யடையடுத்து வருதலுங்கொள்க. (முடியும் முடிபுங்கொள்க) (68)

474 அளவு நிறையு மாயிய றிரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையு
முற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இது நூறென்பதனோ டளவுப் பெயரும் நிறைப்பெய ரும் முடியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) அளவும் நிறையு மாயிய றிரியாது-நூறென் பதனோ டளவுப்பெயரும் நிறைப் பெயரும் புணரு மிடத்து முற்கூறிய வியல்பிற்றிரியாதின வொற்று மிக்கு முடியும். குற்றிய லுகரமும் வல்லெழுத்தியற்கையும் அவ்விடத்துக் குற்றிய லுகரங் கெடாது நிற்றலு(கெடாமையும்) மங்ஙன மினவொற்று மிக்கு வன்றொடர் மொழியாய் நிற்றலின் வருமொழி வல்லெழுத்து மிகு மியல்பும், முற்கிளந் தன்ன வென்மனார் புலவர் 'வல்லொற்றுத் தொடர் மொழி வல்-லெழுத்து மிகுமே' யென வன்றொடர் மொழிக்குக் கூறிய தன்மையவாய் முடியுமென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம் :— நூற்றுக்கலம் சாடி தூதை பாணை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், கழஞ்சு தொடி பலம் எனவும் வரும்.

திரியா தென்றதனான் (நூறென்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க அஃது) ஒரு நூற்றுக் கலம் இரு நூற்றுக்கலம் என நிலைமொழி யடை யடுத்தலுங் கொள்க. (69)

475 ஒன்றுமுத லாகிப் பத்தூர் கிளவி
யொன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற வாய்தங் கெடுதல் வேண்டும்.

இது ஒருபஃது முதலாக வெண்பஃதுதிறுதியாக நின்ற வெண்க ளொன்றுமுத லொன்பான்களோடு புணருமாறு கூறுகின்றது.

இஃது ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்கள் அடையடுத்த பத்தனோடும் ஒன்று முதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

(இ-ள்) ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி-ஒன்றுமுத லெட்டீறாகிய பத்தென்னு மெண்ணேறி யொருசொல்லாய் நின்ற வொருபஃது முதலிய வெண்கள். (ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்தென்னும் எண் ஏறி நின்ற ஒரு பஃது முதலிய எண்கள்), ஒன்றுமுத லொன்பாற்கு-ஒன்றுமுத லொன்பான்கள் வருமொழியாய் வந்து புணரு மிடத்து, நின்ற வாய்தம் கெடுதல் வேண்டும்-பஃதென்பதன்க ணின்ற வாய்தங் கெட்டு முடிதலை விரும்பு மாசிரியன், ஒற்றிடை மிகும்-ஆண் டினவொற்றாகிய வோர் தகர வொற்றிடை மிக்கு முடியு மென்றவாறு.

உதாரணம் :- என்றது ஒரு பஃதெனவொரு சொல்லாக நிறுத்தி யொன்று முத லொன்பான்களை வருமொழியாக்கி முடித்தலாம், ஒரு பத்தொன்று இரண்டு இருபத்தொன்று இருபத்திரண்டு முப்பத்தொன்று. இரண்டு நாற்பத்தொன்று இரண்டு ஐம்பத்தொன்று இரண்டு அறுபத்தொன்று இரண்டு எழுபத்தொன்று இரண்டு எண்பத்தொன்றுஇரண்டு என வொன்பதின் காறு மொட்டுக. இவற்றுளொருபத்தொன் றொருபத் திரண் டென்னு மெண்களதிகாரத் தானின்ற நூற்றோ டடுத்தும் வரு-மென்றுணர்க.

உதாரணம் : ஒருபத்தொன்று இருபத்தொன்று ஒரு பத்திரண்டு இருபத்திரண்டு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் ஒருபத்தொன்று ஒருபத்திரண்டு என்னும் எண்கள் அதிகாரத்தால் நின்ற நூறென்பதனோடு அடுத்து வருமென்று உணர்க. (70)

476 ஆயிரம் வரினே யின்னென் சாரியை
யாவயி னொற்றிடை மிகுத லில்லை

இது [இஃது]ஒருபஃது முதலியவற்றோடாயிரத்தைப் புணர்க்கின்றது.

[இ-ள்] ஆயிரம் வரினே யின்னென் சாரியை—அவ்வொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன்னராயிரமென்பது வருமொழியாய் வரினிடை வந்து புணருஞ் சாரியையின்னாம். [அவ்வொன்று முதலாகிய பத்து ஊர்கிளவி ஆயிரத்தோடு புணரும் இடத்து இன் சாரியை பெறும்) ஆவயி னொற்றிடை மிகுதலில்லை—அவ்விடத்து முற்கூறிய தகரவொற்றிடை மிக்கு முடியாது முடியு மென்றவாறு. [அவ்விடத்துத் தகர ஒற்று இடைவந்து மிகாது என்றவாறு.]

உதாரணம் :— ஒரு பதினாயிரம் இருபதினாயிரம் என எண்பதின்காறு மொட்டுக. இவை நூற்றொரு பதினாயிரமெனவும் வரும்.

ஆவயி னென்றதனால் நூறாயிரத் தொருபத்தீராயிரமென்றாற் போல வத்துப் [அத்துப்] பெறுதலும் பிறவுங் கொள்க. [71]

477 அளவு நிறையு மாயிய றிரியா

இதுவு [இஃது] மொன்று முதலாகிய பத்தூர் கிளவி முன்ன ரளவுப் பெயரும் நிறைப்பெயரும் புணர்க்கின்றது.

[இ-ள்] அளவும் நிறையு மாயிய றிரியா-ஒரு பஃது முதலிய வெண்களின் முன்னரளவுப்பெயரும் நிறைப்பெய

ரும் வந்தாலொற்றிடை மிகாதின் சாரினையப் பெற்று முடியு மென்றவாறு.

உதாரணம்:- ஒருபதின்கலம் இருபதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு என வும், கழஞ்சு [ஒருபதின் கழஞ்சு] தொடி பலம் எனவும் வரும். இவற்றிற்கு நூறடை யடுத் தொட்டுக.

திரியா வென்றதனான் ஒருபதிற்றுக்கலம் இரு பதிற் றுக் கலம் என்னுந் தொடக்கத்தன வற்றின்கணின்னி னகரம் றகரமாகத் திரிந் திரட்டுதலு முகாரமும் வல்லெ ழுத்துப் பெறுதலுங் கொள்க. இன்னு மிதனானே யொரு பதினாழி யென்புழி [யென்ற வழி] வருமொழி நகரந் திரிந்துழி நிலைமொழி[பி] னகரக் கேடுங் கொள்க.

அளவு நிறையு மதனோ ரன்னவென்று பாடமோது வார் முன்னர்ச் சூத்திரத்தாவயி னென்றதனானு மதன் முன்னர்ச் சூத்திரத்து நின்ற வென்றதனானு மிவற்றை முடிப்பர். [7.]

478 முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினு
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை யென்மனார் புலவர்.

இது [இஃது] ஒன்று முத லொன்பான்களோடு பொருட் பெயரைப் புணர்க்கின்றது.

[இ-ள்] முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்துவரி னும்-ஒன்றென்னு மெண்ணின்முன் வல்லெழுத்து முதன் மொழி வரினும், ஞ ந ம தோன்றினும்-ஞ ந ம க்களாகிய மெல்லெழுத்து முதன்மொழி வரினும், ய வ வ ந் தியையினும் ய வக் களாகிய வி டை யெ ழு த்து முதன்மொழி வரினும், முதனிலை யியற்கை யென் மனார் புலவர்-அது முன்ன ரெய்திய முடிபுநிலை யெய்தி முடியுமென்று கூறுவர் புலவரென்றவாறு

(அவ்வொன்றுமுதல் ஒன்பான்கள் முன்னெய்திய முடிபு நிலைமைஎய்தி முடியுமென்றுகூறுவர் புலவர் என்றவாறு) எனவே வழிநிலை யெண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்மூன்று கணமும் முதன்மொழியாய் வரின் முதனிலை முடிபாகிய விகார மெய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்.

உதாரணம் : ஒருகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவொட்டுக. இருகல், இரண்டுகல் சுனை, துடி, பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டெனவு மொட்டுக. இவ்வெண்களிற் தற்றிபலுகர 'மெய்யொடுங் கெட்டு முதலிரெண்ணி னொற்று ரகாரமா யுகரம் வந்தது இருகல் முதலியவற்றிற் கிடைநிலை ரகரங் கெடுக்க. மூக்கல் மூன்றுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவொட்டுக. இதற்கு நெடுமுதல் குறுகி மூன்றனொற்றே வந்ததொக்கு மென்பதனான் முடிக்க. முன்னரெண்ணுப் பெயரும் அளவுப்பெயரும் நிறைப் பெயரும் வரு (வழிக்) மொழிக் கூறிய விகாரங்களிற் பொருட் பெயர்க்கு மேற்ன கொணர்ந்து முடித்தெல்லா வற்றிற்கு நிலையென்றதனானொற்றுந்திரித்து முடிக்க. அவை மூன்றற்கு மைந்தற்கும் ஞகரம் வரும்வழி வகரவொற்றுதலுமாம். நாற்கல் நான்குகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் ஐங்கல் ஐந்துகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் (ஐஞ்ஞாண் ஐந்துஞாண் நூல் மணி ஐயாழ் ஐந்தியாழ் ஐவட்டு ஐந்துவட்டு) அறுகல் ஆறுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் எண்கல் எட்டுக்கல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு (ஒன்பது கல் சுனை துடிபறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு) எனவு மொட்டுக. ஒன்பதின் கல்லெனச் சென்றதேனும் வழக்கின்மையினொழிக்க ஒன்பதுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவொட்டுக. இன்னுமாட்டேறின்றி வருவனவற்றிற்கெல்லா முடியு நிலையென்றதனான் முடிக்க.

479 அதனிலை யுயிர்க்கும் யாவரு காலை
முதனிலை யொகர மோவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

இது முதனிலை எண்ணுப் பிர் முதலாகிய பொருட்பெய ரோடும் யாமுதலிய பொருட் பெயரோடும் புணருமாறு கூறுகின்றது.

(இஃது ஒன்று முதல் ஒன்பான்களோடு பொருட்பெய ருள் உயிர் முதன்மொழி முடியுமாறும் மேற்கூறிய யகாரம் வேறுபட முடியுமாறுங் கூறுகின்றது)

(இ-ள்) முதனிலைக்கு — ஒன்றென்னும் எண்ணின் திரிபாகிய (ஒரு என்னும் எண்ணிற்கு) உயிரும் யாவும் வரு காலை—உயிர்முதன் மொழியும் யாமுதன் மொழியும் வரு மொழியாய் வருங்காலத்து, அதனிலை—அம்முதனிலை யின்றன்மை, யிவ்வாறாம், ஒகரமோவாகும் —ஒகரமோ காரமாய் நீளும், ரகரத்துகரந் துவரக்கெடுமே—ஆண்டு ரகரத்து மேனின்ற வுகரம் முற்றக்கெட்டு முடியுமென்ற வாறு.

நான்காவதனை முதனிலையோடு கூட்டி யதன் கணின்ற வும்மையை யுயிரோடும் யாவோடுங் கூட்டுக. (எனவே வழிநிலை யெண்கள் உயிர்முதன் மொழி வந்த இடத்து முற் கூறியவாறே இருவாற்றானும் முடியும்.)

உதாரணம் :- (ஒரடை) ஓராகம் ஓரிலை ஓரீட்டம் ஓருலை ஓருசல் ஓரெழு ஓரேடு ஓரையம் (முங்கு) ஓரொ ழுக்கம் ஓரோலை ஓரௌவியம் எனவரும். குற்றிய லுகர மெய்யொடுங் கெடுத்து முதலீரெண்ணி (முதலெண்ணி) னொற்று ரகரமாக்குக. ஓர் யாழ் ஓர் யானை எனவரும்.

துவர வென்றதனா னிரண்டென்னு மெண்ணி னிகரத்தை நீட்டி ரகரத்து ளுகரத்தைக் கெடுத்து ஈர்யானை ஈரசை எனவு மூன்றென்னு மெண்ணி னகரவொற்றுக் கெடுத்து மூவசை

மூபானை மூவிலை மூவசை என முடிக்க. இவை செய்யுண் முடிபு. இன்னு மிதனானே இங்ஙனம் வருவன பிறவு மறிந்து முடித்துக் கொள்க. (74)

480 இரண்டுமுத லொன்பா னிறுதி முன்னர்
வழங்கியன் மாவென் கிளவி தோன்றின்
மகர வளவொடு நிகரனு முரித்தே.

இஃது இரண்டு முதலொன்பான்களின் முன்ன ரள விற்கு நிறைக்கு மெண்ணிற் முரியவாய் வரு மாவென்ப தனைப்புணர்கின்றது (இஃது இரண்டு முதல் ஒன்பான் களின் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மா-வென்பது புணருமாறு கூறுகின்றது.)

(இ-ள்) இரண்டுமுத லொன்பா னிறுதி முன்னர்— இரண்டென்னு மெண் முதலாக வொன்பதென்னு மெண் ணீறாக நின்ற வெண்ணுப்பெயர்களின் முன்னர், வழங் கியன் மாவென் கிளவி தோன்றின்—வழக்கின்கண்ணே நடந்தவளவு முதலியவற்றிற்குரிய மாவென்னுஞ் சொல் வருமொழியாயுவரின், மகரவளவொடு நிகரனு முரித்து— அவ்வெண்ணுப்பெயர்களின் முன்னர்த்தந்து புணர்க்கப் படு மண்டையென்னு மளவுப்பெயரோடொத்து விகாரப் பட்டு முடிதலு முரித்தும்மையான் விகாரப்படாதியல்பாய் முடிதலு முரித்தென்றவாறு.

வழக்கியல் வழங்கியலென விகாரம். மகரவளவு மகர முதண்மொழியாகிய வளவுப்பெயரெனப் பண்புத்தொகை. அது ''அளந்தறி கிளவியு'' மென்பதனு ளொருமண்டை யென முடித்ததாம்.

உதாரணம்: இருமா மும்மா நான்மா ஐம்மா அறுமா எண்மா ஒன்பதின்மா என முன்னர்க்கூறிய சூத்திரங் களான் விகாரப்படுத்தி முடிக்க. இனியும்மையான் விகாரப் படுத்தாது இரண்டுமா, மூன்றுமா, நான்குமா, ஐந்துமா,

ஆறுமா, எட்டுமா, ஒன்பதுமா எனமுடிக்க. புள்ளிமயங் கியலுளவு நிறையு மென்னுஞ் சூத்திரத்தா னெடுமுதல் குறுகி யுகரம் - வந்து (புணருமாறு) முடியுமாறு கூறினா ரதனா னீண்டு ஏழுமாவென முடிக்க. ஏழ்மாவென வியல்பாய் முடித்தல வழக்கின்று. இரண்டுமுத லொன் பான் முன்னர்மாத் தோன்ற நிகரலு முரித்து நிகராமையு முரித்தெனவே ஒன்றென்பதற்கு நிகரவே யுரித்தாயிற்று. அது ஒருமாவென வரும். ஒன்றுமாவென வியல்பாய் வழக்கின்மையின் [வழக்கியன்மா வென்றார். விலங்குமா வை நீக்குதற்கு]

[இரண்டுமுதல் ஒன்பானென்று எடுத்தோதினமை-யின் ஒன்றற்கு ஒருமா வென்னும் முடிபேயன்றி ஒன்றுமா வென்னும் முடிபு இல்லையாமிற்று]

வழங்கியன்மா என்றார் விலங்குமாவை நீக்குதற்கு[75]

481 லனவென வருஉம் புள்ளி யிறுதிமுன்
னும்முங் கெழுவு முளப்படப் பிறவு
மன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

இது புள்ளி மயங்கியலு ளொழிந்துநின்ற செய்யுண் முடிபு கூறுகின்றது.

[இ-ள்] லனவென வருஉம் புள்ளி யிறுதிமுன்-லகார ணகார மென்றுகூற வருகின்றபுள்ளியிற்றுச் சொற்களின் முன்னர், உம்முங் கெழுவு முளப்பட—உம்மென்னுஞ்சாரி யையுங் கெழுவென்னுஞ் சாரியையு முட்பட. பிறவுமன்ன மரபின்மொழியிடைத்தொன்றி-பிறசாரியையுமப் பெற்றிப் பட்ட மரபினையுடைய சொல்லிடத்தே தோன்றி,[மொழி யிடத்தே தோன்றி], செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்-செய்யுட் சொற்களைத் தொடர்புபடுத்திக் கூறு

மிடத்துப் பொருள்பட நிற்கும், வேற்றுமை குறித்த பொருள்வயினான - வேற்றுமையைக் குறித்த பொருட் புணர்ச்சிக்கண் ணென்றவாறு.

உதாரணம் : ''வானவரி வில்லுந் திங்களும் போ லென் பதற்கும்மென்னுஞ் சாரியையின் மகரத்தையும்'' ''அம்மெனிறுதி'' யென்னுஞ் சூத்திரத்து''டன் மெய்'' யென்றதனாற் பிறசாரியையுந் திரியு மெனத் திரிந்து நகர வொற்றாக்கி நிலைமொழி லகரவொற்றின்மே லுயி- ரேற்றி முடிக்க. இதற்கு வில்லிடைத் திங்கள் போலுமென வேழனுருபு பொருளுரைக்க. ''கல்கெழு கானவர் நல்குறு மகளே?'' இதற்குக் கல்லைக் கெழீயின வெனவுரைக்க. (மாநிதிக் கிழவனும் போன்மென இதற்குக் கிழவனையும் போன்மென வுரைக்க. இவ்வும்மை சிறப்பன்று ''கான் கெழு நாடு படர்ந்தோர்க்கு'' இதற்குக் காணைக் கெழீ இய வெனவுரைக்க.

இனி அன்ன மரபின் மொழியிடை யென்றதனாற் கெழுவென்றது பிற சொல்லிடத்தே ''பணைகெழு பெருந் திறற் பல்வேள் மன்னர்'' ''துறைகெழு மாந்தை'' யென வியல்பாய்(க)வருவனவும்''வளங்கெழு திருநகர்'' ''பயங் கெழு மாமழை'' என நிலைமொழி வீற்றெழுத்துத் திரிந்து (திரிய) வருவனவுங் கொள்க.

இன்னு மிதனானே இச்சொல்லிடத்து நீண்டு வரு வனவுங் கொள்க. [இன்னும் இதனானே இச்சாரியையது உகரக் கேடும் எகர நீட்சியுங் கொள்க] ''பூக்கேழ் தொட லை நுடங்க வெழுந்து'' ''துறைகேழூரன் கொடுமை நாணி' இவற்றிற் கிரண்டாவது மேற்புழி மூன்றாவதும் விரிக்க. (''செங்கேழ் மென்கொடி'' யென்புழிக் கெழு வெனறு முரிச்சொல் ''லெழுத்துப் பிரிந்திசைத்த'' லென்

பதனா னீண்டதென்பூணர்க.மெய் யென்றதனாற் பூக்கே
மென்புழி. வலலொற்று மிகுதல் கொள்க!

இன்னுஞ் சான்றோர் செய்யுட்கட் பிறசாரியை பெற்று விகாரங்களெய்தி முடிவன்வற்றுக் (வற்றிற்)கெல் லாமிச்சூத்திரமே விதியாகமுடிக்க(முடித்துக்கொள்க)(76)

(482) உயிரும் புள்ளியு மிறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினு மிசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியு
முயர்திணை யஃறிணை யாயிரு மருங்கி
னைம்பா லறியும் பண்புதொகு மொழியுஞ்
செய்யுஞ் செய்த வென்னுங் வினையின்
செய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியுந்
தம்மியல் கிளப்பிற் றம்முற் றாம்வரூஉ
மென்ணனின் றொகுதி யுளப்படப் பிறவு
மன்னவை யெல்லா மருவின் பாத்திய
புணரிய னிலையிடை யுணரத் தோன்றா.

இது [இஃது] இவ்வதிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்களிலையென வவற்றை யெடுத்துணர்த்துகின்றது.

[இ-ள்]உயிரும்புள்ளியு மிறுதியாகி-கூறுங்காலுயிரும் புள்ளியு மீறாய் நீறிபதொரு சொல்லாகி, குறிப்பினும்பண் பினும் மிசையினுந்தோன்றி-குறிப்பினாலும் பண்பினாலு மிசையினாலும்பிறந்து, நெறிப்படவாராக் குறைச்சொற் கிளவியும் - ஒருவழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய வுரிச்சொற்களும், உயர்திணையஃறிணை யாயிரு மருங்கின்-உயர்திணையஃறிணை யென்னும் அவ் விரண்டிடத்து முளவாகிய, ஐம்பாலறியும் பண்பு தொகு

மொழியும்—ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்னு மைம்பாலினையு மறிதற்குக் காரணமாகிய 'பண்புகொள் பெயர்' தொகுந் தொகைச் சொல்லும், செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்—செய்யுஞ் செய்த வென்னும் பெய ரெச்சச் சொற்களினுடைய, மெய்யொருங்கியலுந் தொழி றொகு மொழியும்—கூலங்காட்டு மும்மு மகரமு மொரு சொற்கண்ணே சேர நடக்கும் புடை பெயர்ச்சி தொக்கு நிற்குஞ் சொற்களும் தம்மியல் கிளப்பின்-தமது தன்மை கூறுமிடத்து, தம்முற்றாம் வருஉ மெண்ணின் றொகுதி யுளப்பட-நிறுத்த(ச்) சொல்லுங் குறித்துவரு கிளவியுமாய் வாராது தம்முன்னர்த் தாமே வந்து நிற்கு மெண்ணுப் பெயரினது புணர்ச்சியு முள்ளிட்டு தொகுதியும் உளப்பட) அன்ன பிறவு மெல்லாம்-அத்தன்மை யாகிய பிறவு மெல் லாம். மருவின் பாத்திய-உலகத்து மருவிநடந்த வழக்கி னது பகுதியைத் தம்மிலக்கணமாகவுடைய,புணரியல்நிலை யிடை யுணரத் தோன்றா-ஒன்ற னோ டொன்று புணருதல் நடந்த தன்மை யிடம் விளங்கத்தோன்றா வென்றவாறு.

உதாரணம்; கண்விண்ணை விணைத்தது விண்விணைத் தது இவை குறிப்புரிச் சொல்; ஆடை வெள்ள விளர்த்தது வெள் விளர்த்தது இவை புண்புரிச் சொல்; கடலொல்ல வொலித்தது ஒல்லொலித்தது;''ஒல்லொலி நீர் பாய்வதே போலுந் துறைவன்'' என்றார். செய்யுட் கண்ணும். இவையிசை யுரிச்சொல். இவையுயிறாயும் புள்ளி யிறா யும் நிற்றலி னொன்றன்கணடக்க லாகாமையி னெறிப் பட வாரா வென்றார். விண்ணு விணைத்ததென்பது தெறிப்புத் தோன்றத் தெறித்ததென்றும், விண் விணைத் தது தெறிப்பித் தெறித்ததென்றும் ஆம்.ஏனையவற்றிற்கு மிவ்வாறே யுணர்க.இங்ஙன நிற்றலிற் றன்மை குறைந்த சொல்லாயிற்று.''வினையே குறிப்பே''யென்னுஞ் சூத்திர திற் கூறிய வென வெள்பதனை யிவற்றொடு கூட்டிய வழி யிடைச் சொல்லாதலின் விண்ணென விணைத்த தெனப் புணர்க்கப்படு மாறுணர்க.

இனிக் கரும்பார்ப்பாள் கரும்பார்ப்பினி [கரும்பார்ப் பார், கருங்குதிரை, கருங்குதிரைகள்] கரியராகிய பார்ப் பார் கரியதாகிய குதிரை கரியனவாகிய குதிரைகள் என வருமிவற்றுட் கரியனாகிய பார்ப்பான் கரியளாகிய பார்ப் பினி கரியராகிய பார்ப்பார் கரியதாகிய குதிரை கரியன வாகிய குதிரைகள் என வைம்பாலினையு முணர்த்தும். பண்புகொள் பெயர் தொக்கவாறு காண்க. இவற்றுட் கருமையென்னும் பண்புப்பெயர் தொக்கதேற் கருமை யாகிய பார்ப்பானென விரித்தல்வேண்டு மங்ஙனம் விரியா மையிற் பண்புகொள் பெயரே தொக்கதென்றுணர்க.

வெற்றிலை வெற்றுப்பிலி வெற்றடி வெற்றெனத் தொத்த லென்றாற் போல்வனவற்றுள் [வெறுவெனப் பண்பு மாத்திரையே] வெறுவிதாகிய விலையெனப் பண்- புணர்த்து மீறுதொகுதலின் மருவின் பாத்தியவாய் நின்- றொற்றடுத்தன பாக்குங் கோட்டு நூறுங் கூறாதல் ஏனையவுமன்ன குன்றலின் வேறுடுத்து மீறுகடொக்கவ வற்றியினும் வெறுவிதாகிய வுப்பிலி யென்றதுஞ் சிறிதும் உபபிலி எனநின்றது] ஏனையவுமன்ன. இங்ஙன மைம் பாலுந் தொகுத்தற்குரியமுத [னிலையாத] முதலிற் புணர் தலாகாமை கூறினார்.

வெற்றிலை வெற்றுப்பிலி வெற்றடி வெற்றெனத் தொடுத்தல என்றாற் போல்வனவற்றுள் வெறுவிதாகிய இலையென்பது பாக்குங் கோட்டு நூறுங் கூடாததாய் பண்புணர்த்தி ஈறு தொகுதலின் மருவின் பாத்தியவாய் நின்று ஒற்றடுத்தது. ஈறு குன்றலின் ஒற்றடுத்தது. வெறு விதாகிய உப்பிலியேன்றது சிறிதும் உப்பிலியென நின் றது. ஏனையவும் அன்ன. இங்ஙனம் ஐம்பாலுந் தொகுத் தற்கு உரிய முதனிலை யாதலிற் புணர்த்த லாகாமை கூறினார்.

இனி ஆடரங்கு செய்குன்று புணர்பொழுது அரிவாள் கொல்யானை செல்செலவு என நிலமுதலாகிய பெயரெச்சந்

தொக்க வினைத்தொகைகளை விரிக்குங்கால், ஆடின வரங்கு எனச் செய்த வென்னும் பெயரெச்சத் திறுதி விரிந்த வகர வீற்றிற் புணர்த்தியும், பெயரெச்சத்து ஈறு விரிந்த அகர ஈறு இறப்பு உணர்த்தியும்) ஆடாநின்ற வரங் காடுமரங்கெனச் செய்யும் மென்னும் பெயரெச்சத் திறுதி விரிந்த வும்மீறு நிகழ்வு மெதிர்வு முணர்த்தியும் (ஆடாநின்ற வாங்கு ஆடு மாங்கு எனச்செய்யு மென்னும் பெயரெச்சத்து ஈறுவிரிந்த உம்மீறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்தியும் அவற்றானாய) அவற்றுப் புடைப்பெயர்ச்சி யைத் தோற்றுவித் திரண்டு பெயரெச்சமு மொரு சொற்க ணொருங்கு தொக்கு நிற்றலினிதனையொரு பெயரெச் சத்தின் கணடக்கிப் புணர்க்கலாகாமையிற்புணர்க்கலாகா தென்றார். உம்மிறுதி நிகழ்வு மெதிர்வு முணர்த்துமாறு "வினையின் றொகுதி" யென்னு மெச்ச வியற் சூத்திரத் துட் கூறுதும். இல் வும் மீறிரண்டு காலமு மொருங் குணர்த்துதற் சிறப்புநோக்கிச் செய்த வென்பதனை யாசி ரியர் முற் கூறாராயினார்.

இனிப்பத்தென நிறுத்தி பத்தெனத் தந்து புணர்க்கப் படாது பப்பத்து எனவும் பஃபத் தெனவும் வழங்குமாறு ணர்க. ஒரோவொன்றென்பதுமது. (அதுதானே) ஒரொன் றோரொன்றாகக் கொடு வென்றாற் புணர்க்கப்படும்.

இனி அன்னபிறவு மென்றதனானே உண்டானென் புழி உண்ணென்னு முதனிலையுங் காலங்காட்டும் டகரமு மிடனும்பாலு முணர்த்து மானும் மொன்றனோ டொன்று புணர்க்கப்படாவவை நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியு மன்மையின். கரிய னென்புழிக் கருவென நிறுத்தி அன்னெனத் தந்து புணர்க்கப்படா, வது இன்னென்னும் பொரு டருதலின் ஏனை வினைச் சொற்களு மிவ்வாறே பிரித்துப் புணர்க்கலாகாமை யுணர்க. இன்னு மதனானே கொள்ளெனக் கொண்டானென் புழிக் கொள்ளென்பத

னை என வென்பதனோடு புணர்க்கப்படாமையு மூரன் வெற்பன் முதலிய வினைப்பெயர்களும் பிறவும் புணர்க்கப் படாமையுங் கொள்க. இவ்வாசிரியர் புணர்க்கப் படாவிச் சொற்களையும் வடநூற்கண் முடித்த அனக னனபாயன் (அன்கன் அனபாயன்) அகளங் முதலிய வடசொற்களை யும் பின்னுள்ளோர் முடித்தல் முதனூலோடு மாறுகொளக் கூறலா மென்றுணர்க. (77)

483 கிளந்த வல்ல செய்யுளுட் டிரிவும்
வழங்கியன் மருங்கின் மருவொடு திரிவும்
விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியன் மருங்கி னுணர்ந்தன ரொழுக்க
னன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.

(இஃது) இவ்வதிகாரத் தெடுத்தோத்தானுமிலேசானு முடியாது நின்றவற்றை யெல்லா மிதனானே முடிக்க வென வதிகாரப் புறநடை கூறுகின்றது (புறனடை)

(இ-ள்) கிளந்தவல்ல செய்யுளுட் டிரிவுழும்-முன்ன ரெடுத்தோதப் பட்டன வல்லாத சொற்கள் செய்யுளிடத் திரிந்து முடிவனவும், வழங்கியன் மருங்கின் மருவொடு திரிவும் (நால்வகை) வழக்கும் நடக்குமிடத்து மருவுத லோடு திரிந்து முடிவனவும், விளம்பிய வியற்கையின் வேறுபடத் தோன்றின் - முற்கூறிய (முன்னர்க்கூறிய) விலக்கண முறைமையினின்றும் [வேறுபட்டு] வேறுபட்டுத் தோன்றுமாயின் அவற்றை, நன்மதி நாட்டத்து - நல்ல வறிவின தாராய்ச்சியாலே, வழங்கியன் மருங்கின்-வழக்கு முடிந்து நடக்குமிடத்தே, உணர்ந்தன ரொழுக்க லென்ம னார் புலவர் முடிவு வேறுபாடுகளையறிந்து நடாத்துக வென்று கூறுவர் புலவரென்றவாறு.

உதாரணம் : 'தடவுந்நிரை' யென வுகரமும் வல்லெழுத்தும் பெற்றுந் 'தடவுநிலை' யென உகரம் பெற்று மகர வீற்றுரிச்சொல் வந்தது. அதவத்தங்கனி யன்னவின வகர வீறத்துப் பெற்றது. வேற்றுமைக்கண் கசதபத் தோன்றினென அகர வீற்றின் முன்னர்த்தகரங் கொடுக்க. (அதவத்தங்கனி என வேற்றுமைக்கண் அகர ஈறு அத்துப் பெற்றது. கசதபத் தோன்றின் என அகர ஈற்றின் முன்னர்த் தகரங் கொடுக்க).

'நறவங் கண்ணி நற்போர்ச் செம்பியன்
குரவ நீடிய கொன்றையங் கானல்'

என ஆகார விறுதி குறியதனிறுதிச் சினை கெட்டம் முப்பெற்றன விருவழியும்.

"முளவுமா தொலைச்சிய பைந்நிணப் பிளவைப்
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ (மலைபடு)

யென அவ்வீற்றல் வழிக்கண் ணம்முப்பெறாத(ம்) முடிபு பெற்றன. 'திண்வளி விசித்த(திண்வார் விசித்த)முழுவொடாகுளி' 'சுறவெறிமீன்' 'இரா (இர) வழங்கு சிறுநெறி' இவை யுகரம் பெறாமல் வந்தன. கள்ளியங் காட வென் புழி யம்முப் தம் முடிபு பெற்றன. 'புள்ளியம்பொறிக்கலை' யென இகர வீறு வேற்றுமைக்க ணம்முப்பெற்றன ('கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை'என இகரஈறு வேற்றுமைக்கண் அம்முப் பெற்றன) 'தீயி னன்னவொண் செங் காந்தளென வீகார வீறு (ஈகார ஈறு) வேற்றுமைக்கணின்பெற்றது. 'நல்லொழுக்கங் காக்குந் திருவத்தவர் என உகர வீறு வேற்றுமைக்க ணத்துப் பெற்றது. 'ஏப் பெற்றமான்பிணை போலென ஏகார வீறு வேற்றுமைக்கண் ணேகாரம் பெறாது வந்தது. 'கைத்துண்டாம்

பொழுதே'' (போழ்தே) ''கைத் தில்லர் நல்லர்'' எனவும் ''புன்னையங்கானல்'' 'முல்லையந் தொடையல்' எனவு மைகார வீறு வேற்றுமைக்கணந்து மம்மும் பெற்றன. ''அண்ணல் கோயில் வண்ணமே'' யென வோகார வீறு யகர உடம்படு மெய் பெற்றது.

இனி ''யஞ்செவி நிறைப வாலின'' வெனக் ககரமு மகரமுங் கெட்டன, வல்வழிக்கண். ''மரவம்பாவை வயி றாரப் பருகி'' ''மரவ நாகம் வணங்கி மாற்கனம்'' என விருவழியு மகரம் விகாரப்பட் டம்முப் பெற்றன. ''காரெ திர் கானம் பாடினே மாக'' ''பொன்னந் திகிரி முன்சமத் துருட்டி'' ''பொன்னங் குவட்டிற் பொலி வெய்தி'' யென னகர வீறிரு வழியு மம்முப் பெற்றன. ''வேர்பிணி வெதிரத்துக் கால் பொரு நாலிசை'' என ரகர வீறு வேற் றுமைக்க ணத்துப் பெற்றது. ''நாவலந் தண் பொழில் கானலம் பெருந்துறை'' என லகர வீறு வேற்றுமைக்க ணம்முப் பெற்றன. ''நெய்தலஞ் சிறுபறை'' இது(இஃது) அவ்வழிக்கணம்முப் பெற்றது. 'ஆயிடையிரு பேராண்மை செய்த பூசல்'(என்புழி) வாயிடை யென்ப துருபாதலி னீட வருத லென்பதனான் முடியாது நீண்டு வகரவொற்று வேறுபட முடிந்தது. தெம்முனை (எனத்) தெவ்வென்புழி வகரங் கெட்டு மகரவொற்றுப்பெற்று முடிந்தது. அ என் னுஞ் சுட்டு ''அன்றியளைத்து'' மெனத் திரிந்தது. ''முதிர் கோங்கின் முகை'' யென்ன (எனவுங்) ''காய்மாண்ட தெங்கின் பழம்'' எனக் (எனவுங்) குற்றுகரவீ றின் பெறு தலுங் கொள்க. (ஈறு இன் பெறுதலுங் கொள்க.) ''தொண்டுதலை யிட்ட பத்துக்குறை''யென ணகர மிரட் டாது தகரவொற்று டகரவொற்றாய்க் குற்றிய லுகரம் நின்றேறி முடிந்தது.

இங்ஙனஞ் செய்யுளுட் பிறவுந் திரிவன வுளவேனுமிப் புறநடையான் முடிக்க.அருமருந்தா னென்பதுரகர வுகரங் கெட்டருமந்தானெனமுடிந்தது. சோழனாடுசோணாடென

(சோணாடு என) அன்கெட்டு முடிந்தது. பாண்டி நாடு மது. தொண்டைமானாடு தொண்டைநாடென வீற்றெழுத்துச் சிலகெட்டு முடிந்தது. மலையமானாடு மலாடென முதலெழுத்தொழிந்தன பலவுங் கெட்டுமுடிந்தது. பொதுவிலென்பது பொதியிலென உகரந் திரிந்து திகரமாய் யகரவுடம்படு மெய் பெற்றுமுடிந்தது. பிறவு மிவ்வாறே திரிந்து மருவி வழங்குவன வெல்லா மிப்புற நடையானமைத்துக் கொள்க. (78)

ஒன்பதாவது

குற்றியலுகரப் புணரியன் முற்றும்,
ஆசாரியன் பாரத்துவாசி நச்சினார்க்கினியன்
செய்த வெழுத்துக் காண்டிகை முற்றும்.



(வெண்பா)

1 நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு—பாலா
முருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

2 எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லா
மொழுக்கிய வொன்பதோத் துள்ளும்-வ ழக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்று நாவலர்கண்
மேனூற்று வைத்தார் விரித்து.

3 நற்றமிழ்த்தொல் காப்பியனார் நாட்டு மியனூலே
யெற்றைக்கு நன்றா யினிதோங்க—நற்றவத்துச்
சீர்நச்சி னார்க்கினியன் செய்த விரிவுரைதான்
பேர்பெற்று வாழி பெரிது

தோல், எழுத்து, நச்சினார்க்கினியம்.

(எழுத்ததிகாரப் பின்னிணைப்பு)

பொதுப்பாயிரம் :- முகம் - உறுப்பு, பனுவல் - நூல், கொழு-கலப்பைக் கொழு, துன்னூசி-அக்கொழுவையகலப் படுத்திக்கொண்டு அதன் கீழிடத்தே கூராகவிருக்குமாம். உழும்பொழுது முன்னுள்ள கொழு வயலை உழுதுசெல்லத் துன்னூசியும் அக்கொழுச் சென்ற வழியே இடர்ப்படாது செல்லும். (அதாவது கலப்பையின் ஒரு பகுதி வாள் என்பதாகும். அவ்வாள் மரமாகும் அம்மரத்தில்இரும்பாலாகிய ஒரு துன்னூசி வைக்கப்படும். இவ்வூசியானது கொழுப் பட்டை யெனப் பெயர் பெறும். இது வாள் மரம் ஆகிய கூர் உழும் வழிந்தேயாமலிருக்கவும் மண்ணை நன்கு கிளறவும் பயன்படுவதாகும்.) அதுபோல முன்னுள்ள புறவுரை, சென்ற வுள்ளத்திலே நூலுமினிது செல்லும். இக்கருத்துக் கொண்டே நூல் கேட்கின்றான் புறவுரை கேட்கின் கொழுச் சென்றவழித் துன்னூசி யினிது செல்லுமாறு போல அந்நூலினிது விளங்குமென்றார். எனவே கொழுப் பாயிரத்திற்கும் துன்னூசி நூலிற்கும் வயல் கேட்கின்ற மாணவன் ஒருவன் உள்ளத்திற்கும் உவமையாகும். இக் கருத்தமையவே திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்து-வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்.

''இசைபடும் பருப்பொ ருட்டா
மிலக்கியம் சென்ற வாறே
வசைதவிர் நுண்பொ ருட்டா
மிலக்கணம் வயங்கிச் செல்லும்
நசையுண ரொருவன் மாட்டு
நயும்புனல் வயலின் மாட்டு
அசைவில்திண் கொழுச்செல் லாறே
துன்னூசி யழகிற் செல்லும்''

என்று கூறியுள்ளமை கவனிக்கற்பாற்றாம்.

கொழுவைப் பாயிரத்திற்கும் துன்னூசியை மாணாக்கன் அறிவிற்கும் வயலை நூலுக்கும் உவமையாகக் கொள்ளுமாறு இவ்வாக்கியம் எழுதப்பட்டிருப்பின் மிகப் பொருத்தமாகும்.

ஏனெனில், நூலுட் புகுவோன் மாணாக்கன் ஆதலானும், பின்னும் பாயிரங் கேளாக்காற் குன்று முட்டிய குரீஇப் போலவும் குறிச்சிபுக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படுமென நூலுட்புகுதலை மாணாக்கனுக்கே கூறுதலானும் என்க. எனவே, பாயிரங் கேட்ட மாணாக்கன் அவ்வறிவோடு நூலுட் புக்கால் அவ்வறிவு நூலை விளக்க அவற்கு நூலினிது விளங்கும் என்பது அதன் கருத்தாம்.

> ''புறவுரை யேயது கேட்டென்னை பயனெனின்
> மாயிரு ஞாலத் தவர்மதித் தமைத்த
> பாயிர மில்லாப் பனுவல் கேட்கிற்
> காணாக் கடலிடைக் கலைஞரில் கலத்தரின்
> மாணாக் கன்றன் மதிபெரி திடர்ப்படும்''

என மாணாக்கனறிவே நூலுட் புகுவதாக மாறனலங்காரச் சூத்திரங் கூறுமாற்றானும் இக்கருத்துப் பொருத்தமாதல் காண்க.

பருப்பொருளென்பதும் நுண்பொருளென்பதும்
முறையேபாயிரம்

நூல்என்பவற்றினியல்பை யுணர்த்தியவற்றிற்கடையாய் நின்றன.

இனி, பாயிரம் யாப்பருங்கலவிருத்திப் பாயிர வுரையுட் போல நூற்பொருளைச் சுருக்கிப் பருப்பொருட்டாக விளக்குதல் பற்றியே.

> ''பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
> நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும்''

என்றா ரெனினுமமையும். அங்ஙனேல் புறவுரையாகிய பாயிரம் நூற்பொருளைச் சுருக்கிப் பருப்பொருட்டாக எங்ஙன விளக்குமெனில் பொதுப்பாயிரம்;

''ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன் றன்மை கோடன் மரபு''

ஆகி எல்லா நூன் முகத்தும் உரைக்கப் படுதலின் அஃது ஒழித்தேனைச் சிறப்புப் பாயிரமே தன்னால் உரைக்கப்படு நூற் கின்றியமையாச் சிறப்பிற்றாய் நிற்றலின், அதுவே பருப்பொருட்டாய் நூற்பொருளைச் சுருக்கி விளக்கு மெனக்கோடும். அவற்றுள்ளும் நுதலிய பொருளே நூற் பொருளைச் சுருக்கிப் பருப்பொருட்டாய்ப் பெரிதும் விளக்கி நிற்குமென்க. நுதலிய பொருளென்றதனால் நூல் நுதலிய தேயன்றி அதிகாரம் நுதலியதூஉம், ஒத்து நுதலியதூஉம், சூத்திரத்துதவிய தூஉம் நுதலிய பொருளா யடங்கிப் பாயிரமாகக் கொள்ளப்படுமென்க. இப்பாயிரங்கள் நூற் பொருளை நன்கு விளக்குமென்க.

பேராசிரியர்,

''மேற்கிளந் தெடுத்த'' (மரபியல் 100) என்னும் மர பியற் சூத்திர வுரையுள் இனி மேற்கிளந்தெடுத்த பாயிர விலக்கணஞ் சூத்திரத்தோடு பொருந்துங்காற் பொதுப் பாயிர விலக்கணம் பொருந்தா; சிறப்புப்பாயிர விலக்கணம் எட்டுமே பொருந்துவன' என்று கூறுதலானே சிறப்புப் பாயிரம் நூற்கின்றியமையாதது என்பதூஉம், அவர் ''ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை (மர.98) என்னுஞ் சூத்திர வுரையுள்ளே'' சூத்திரவுரையுட் பாயிரவுரை மயங்கி வருவன உள, அங்ஙனம் மயங்கிவருவன எவை யெனில்?

''எழுத்தெனப் படுப'' என்னுஞ் சூத்திரத்தினை (முதலில் எடுத்து) நிறுவி என்பது சூத்திரம் எனக்கூறினா, பின் இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ வெனவும் இவ்வதிகாரம் என்னுதலிற்றோ வெனவும் வினாவிப் பின்

இன்ன பெயர்த்தெனவும் இவை நுதலிற்றெனவும் அவற்றிற்கு விடை கூறுவனவும், இவ்வதிகாரம் எனைத்துப் பகுதியால் உணர்த்தினானோ வென வினாவி இனைத்து பகுதியால் உணர்த்தினான் என விடை கூறுவதூஉம், ஓத்து முதற்கண்ணே இவ்வாறு வினாவிடை கூறுவதூஉம், சூத்திர முதற்கண் இச்சூத்திரம் என்னுதலிற்றோ-வென வினாவிடை கூறுவதூஉம் போல்வன என்க'' என்றுரைத்தலினாலே சிறப்புப்பாயிரம் நூற்பொருளைச் சுருக்கி விளக்கற்குரிய தென்பதூஉம் பெறப்படுதல் காண்க. போசிரியர் கருத்தைத் தழுவிச் சிவஞான முனிவரும் ''இனி வாய்ப்பக்காட்டல்'' என்றதனாலே இத்துணைச் சிறப்பிலவாய் அவ்வவற்றிற் கினனாய்க் கூறப்படுவனவு முளவென்பது பெற்றாம். அவைதாம் நூல்நுதலிய பொருளே யன்றிப் படல நுதலியதூஉம் ஓத்து நுதலியதூஉம் சூத்திர நுதலியதூஉம் கூறுதலும் என்றும், இவை நூன்முகத்துக் காட்டப் படுதலே யன்றிப் படலமுகத்தும். ஓத்துமுகத்தும் சூத்திர முகத்தும் காட்டவும்படும். என்றும் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியுட் காண்க. நூற்பொருளைச் சுருக்கிப் (பதிகம்) பாயிரங் கூறுதலைச் சிந்தாமணி மணிகேலை முதலிய நூல்களுள்ளுங் காண்க.

இனிக் கொழுவென்பதற்குத் துன்னூசி செல்வதற்கு முதலிற் குத்திவழியாக்குவதொருகருவி என்றும் துன்னூசி தையல் ஊசி யென்றும் இவை தோற்கருவிசெய்வோர் வைத்திருப்பவை யென்றும் காப்பையும்கால்பையும் கொழுவும் போல் ஒருங்கு சேர்ந்திருப்பனவன்றி, வேறு வேறாக இருப்பனவாதலின் இவையே பொருந்துவன என்றும் கூறுவாருமுளர், பொருந்துவது கொள்க.

தலையமைந்த யானை-யூதநாதன், வினையமைந்த பாகன் அதனைச் செலுத்துந் தொழிலிலமைந்த பாகன், இனி, தலையமைந்த யானை என்பதற்கு அரசுவா எனி - னுமாம். அது அசனி வேகம் களகிரி போன்றவை வினையமைந்த பாகன்-

சீவகன் உதயணன் போன்றான். இன்றியமையாத வேண்டியதான. அப்பாயிரம் இன்றியமையாச்சிறப்பிற்று எனக்கூட்டுக. ஒருதலைபமைந்த யானையை யடக்கிச் செலுத்தற்குப் பாகன் அதனிலுஞ் சிறப்பச் சிறியவனாயிருந்தாலும் அவனே வேண்டும். ஒரு பெரிய ஆகாயத்தை விளக்குவதற்கு ஞாயிறுந் திங்களும் அதனினுஞ் சிறப்ப சிறியனவாயினும் அவையே வேண்டும், அதுபோலவே ஒருபெரிய இலக்கணநூலை விளக்கற்குப் பாயிரம் அதனினு மிறப்பச் சிறிதாயினும் அதுவே வேண்டும். ஏனெனின், நூற்பொருளைத் தன்னுளடக்கி விளக்குமாற்றல் அதன் கணமைந்திருத்தலின், அதுபற்றியே இன்றியமையாச் சிறப்பிற்றென்றார். குன்று - மலை, பறந்துசெல்கின்ற ஒரு குருவியை அது செல்லுந் திசைக்கண் நீண்டு உயர்ந்த ஒரு மலையிருக்குமாயின் அது, அதன் செலவினைத் தடுக்கும். அதனால் அது இடர்ப்படும். அதுபோலவும், ஒரு மான் தான் வசிக்குங் காட்டைவிட்டு ஒரு குறிச்சிக்குட் புகுமாயின் அங்குள்ளார் தடைப்படுத்த அதுஅப்பாற்போக முடியாமல் இடர்ப்படும். அதுபோலவும்,பாயிரங் கேளாது ஒரு மாணாக்கன் ஒருநூலின்கட் புகுவோனாயின் அந்நூலின்கட்பல ஐயங்களிடையே தோன்றி அவனையப்பாற் செல்லவிடாது தடுப்ப அவன் இடர்ப்படுவான். ஆதலாற் பாயிரங்கேட்க வேண்டுமென்பது கருத்து.

கற்கபியருவோர்

கற்கப்படுவோர் -கற்கப்படத்தக்க நல்லாசிரியர், உலைவிலுணர்வுடையோர்-அசைவற்ற வுணர்ச்சியுடையோர், என்றது ஐயந்திரிபின்றிக் கற்றவரை.

மலை

அளக்கலாகாப்பெருமை-அளக்கப்படாத உருவின் பெருமை, அருமை-அரியபொருள்களைத் தன்னிடத்துடைமை மருங்ககலமுடைமை-பக்கம்விரிவாக வுடைமை.இனி

அளவிடப்படாத கல்வியறிவின் பெருமையும் நூல்களின் அரியபொருளை ஆராய்ந்து தன்னிடத்தே கொண்டிருத்தலும் பக்கத்திலுள்ள வர்களாலுந் தெரியப்பட்ட கல்விப் புகழுடைமையும் தருக்கஞ் செய்து பிறரால் நெருங்குதற் கருமையுமென ஆசிரியனுக்குப் பொருந்த வுரைத்துக் கொள்க. ஆசு-குற்றம், இரியன்-ஓடுமாறு செய்பவன்.

நிலம்

செய்பாங்கு-செய்தற்குரிய தொழில்கள், என்றது எருவிடல், உழுதல் முதலியன. விளைதல்வண்மை-விளைந்து பயன்படுதற்கேற்ற தன்மையுடைமை, போய்ச் சார்ந்தோர்-உழவர், இடுதல்-தன்பயனைக் கொடுத்தல், எடுத்தல்-அதனாலவரை யுயர்த்தல், இனி, மாணாக்கன் செய்த குற்றத்தைப் பொறுத்தலும், மாணாக்கன் செய்தற்குரிய வழிபாட்டின் பகுதியமைந்த பின்பு அவனுக்குத் தான் பயன்படுதற்கேற்ற தன்மை யுடையனாதலும், மாணாக்கனுக் கறிவைக் கொடுத்தலும், அதனால் அவனை யுயர்த்தலுமென, ஆசிரியனுக்குப் பொருந்த வுரைத்துக்கொள்க. ஏனைய வெளிப்படை, நிலம்-நிலைத் தசையாது நிற்பது.

பூ

நற்செயல்களுக்கேற்றதாதலும், உரியபோழ்தின் மலர்தலும், வண்டு சென்றூத அதற்குத் தேனைப் பருகுமாறு நெகிழ்ந்து கொடுத்தலும் எனவுரைக்க, விழையப்படுதல்-பிறரால் விரும்பப்படல், இனிக் கற்பிக்குங் காலத்தே முகமலர்ச்சியொடு கற்பித்தலும், மனநெகிழ்ந்து கற்பித்தலும் என வாசிரியனுக்குப் பொருந்த வுரைத்துக் கோடல் வேண்டும்.

துலாக்கோல்

மிகினுங் குறையினும் நில்லாதாகலும் - தன்கணிட்ட பொருள் துலாம் என்னும் அளவிலும்மிக்காலும் குறைந்தாலும் தன்சமநிலையினில்லாமை யுடையதாகலும் எனறது

துலாம் என்னும் அளவிற்கு மேற்படி யுயர்ந்துகாட்டும்; குறையிற்றாழ்ந்து காட்டும். எனவே பொருளின் குறை வையும் நிறைவையுங் காட்டும் என்றபடி, ஐயந்தீர்த்தல் பொருளினளவைக் காட்டி ஐயந் தீர்த்தல், நடுநிலை-கொள்வோனுக்குங் கொடுப்போனுக்கும் நடுநின்று அள வினுண்மையை யுணர்த்தல். மெய்ந்நடுநிலை-மெய்யை யுணர்த்தி நடுநிற்றலென்க. இனி யொருநூலிலேனும் வினாவப்பட்டபொருளிலேனும் குற்றமிருந்தாலும்குறைந் தாலும் அம்மிதி குறைவை யுணர்ந்தவளவில் நில்லாம-லுணர்த்தி விடுதலும், தன்பால் வினாவப் பட்ட பொருளின் ஐயத்தைத் தீர்த்தலும் வாரம் படாமற் சமமாய் நிற்றலு மென ஆசிரியனுக்குப் பொருந்த வுரைத்துக்கொள்க.

கற்கப்படாதோர்.

கற்கப்படாதோர்-கற்கப் படத்தகாத ஆசிரியர், கழல்-கழற்சிக்காய், பெய்தல்-இடுதல், குண்டிகை-குடுக்கை.

பொழிப்பு:- ''பாடங் கண்ணழி வுதாரண மென்றிவை
நாடித் திரிபில வாகுதல் பொழிப்பே''

பாடம்-மூலபாடம், கண்ணழிவு-பதப்பொருள் கூறல். மூலபாடமும், கண்ணழிவும், உதாரணமும் ஆகிய விவற் றைத்திரிபிலவாக வாராய்ந்து செய்வது பொழிப்புரை யாம், திரிபிலவாகச் செய்தல் - மூலபாடம் முதலாகிய மூன்றும் ஒன்றோடொன்றுமாறுபடாமற்செய்தல். விபரீதப் பொருளின்றி யெனினுமமையும், நாடின் எனவும் பாடம். அதற்கேற்பவும் பொருளுரைத்துக் கொள்க. பொழிப் புரைத்தல் இருவகைப்படும். ஒன்று பிண்டமாகக்கூறல், ஒன்று மூல்பாடம் கூறியும் அதற்குப் பதப் பொருளுரைத் தும் உதாரணத்தால் விளக்கியுஞ் செய்தல். அவற்றுட் பின்னையதே இச் சூத்திரத்தாற் கூறிய இலக்கணம். சிவஞான போத நூலுக்குரைக்கப்

பட்ட பொழிப்புரையும் பின்னையதேயாம். அதனை யச் சூத்திரவுரையிற் கண்டு கொள்க.

அகலம்:- ''தன்னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய வகல மென்மனார் புலவர்''.

இதன் கருத்து:-தன்னூலிடத்தும் பிறநூலிடத்துமுள்ள பொருள் விகற்பங்களை ஆட்சேபஞ் செய்து(தடைசெய்து) அதனாற்புறத்தே தோன்றும்படி அவ்விகற்பத்தைத் தெரித்துக் காட்டுவது அகலவுரை யென்பர் ஆசிரியர் என்பது.

நுட்பம்:- ''ஏதுவி னாங்கவை துடைத்தல் நுட்பம்''

இதன் கருத்து:- அங்ஙனம் ஆட்சேபித்துத் தெரித்த விகற்பப் பொருட் பொருந்தாத பொருளைக் காரணங் காட்டி மறுத்து நீக்கிவிடுவது நுட்பவுரை யென்பது.

எச்சம்:- ''துடைத்துக் கொள்பொரு ளெச்ச மாகும்''

இதன் கருத்து:- அங்ஙனம் மறுத்து இதுதான் பொருத்த மென்று கொள்ளப்பட்ட பொருள் எச்சமாகு மென்பது.

புகழ்ந்தமதி:- கல்வி தொடங்குவதற்கு நல்லதென்று புகழப்பட்ட திங்கள், ஓரை - இலக்கணம்.

கொள்வோர்:- மாணாக்கர், கற்பிக்கப்படுவோர் - கற்பிக்கப்படத் தகுந்த மாணாக்கர்.

இவர் தன்மை :-

நன்னிறம்:-எவ்வகைப்பட்ட நிறங்களுந் தன்னிடத்திலே கலத்தற்குரியது அதுபோல, நன்மாணாக்கனும்ஆசிரியர் கூறும் எவ்வகைப்பட்டவுரைகளையும் தன்கருத்திலேற்றுக் கொள்ளத் தகுந்தவனாயிருப்பன் என்றபடி ''பல்லுரை-யுங்கேட்பான்'' என்று பின்னுங் கூறுதல் காண்க.

பன்னாடைப் புறமென்றது-பன்னாடையின் மேற்புறத்தை, குஞ்சரம்-யானை. யானை தன்னினத்தோடு கூடி அவ்விற்றிற்கிடைபூறு வாராமற் காப்பதுபோல, நன்-மாணாக்கனும், தன்னொடு உடன் கற்கும் மாணாக்கர்களோடுங்கூடி அவர்கள் ஐயங்களை நீக்கிக் கல்வியில் அவர்களைப் பாதுகாத்தலுடையவன் என்றபடி.

ஆனேறு

ஆனேறு காட்டுள் மேய்வுழி அங்குத்தோன்றிய வொலியை இன்னதனொலி யிதுவெனவோர்ந்து அதன் நன்மை தீமைகளை நிச்சயித் தறிதல்போல, மாணாக்கனும் ஆசிரியன் கூறியசொற்பொருள்களை யாராய்ந்து அப்பொருள்களின் குணாகுணங்களை நிச்சயித்தறிவன் என்றபடி, குரங்கெறி விளங்காயாவது - குரங்குக்குக் கல்லெறிந்து தான் கருதிய விளங்காயைப் பெற்றுக்கொள்வோனுடைய அவ்வியல்பு, அதுபோலக் கடைமாணாக்கனும் ஆசிரியரிடம் வழிபட்டு முறைப்படி கேளாமற் சில கடாக்களை நிகழ்த்தித்தான் கருதிய பொருள்களைப் பெற்றுக்கொள்பவன் என்றபடி, எறிவிளங்காய் என்பது எறிந்து விளங்காயைக் கொள்பவன் எனக் கொள்பவன் மேல் நின்றது. இக்கருத்தை விளக்கவே

> ''கல்லா லெறிந்து கருது பயன் கொள்வோன்''
> ''குரங்கெறி விளங்கா யாமென மொழிப''

எனக் கூறினார். இங்கே

> ''கல்லா லெறிந்து கருதுபயன் கொள்வோன்''

என்பது கல்லா லெறிந்து தான் கருதிய பயனாகிய விளங்காயைக் கொள்பவனென அவனையுணர்த்தலோடு உடம்பொடு புணர்த்தலால் அவன் றன்மையையு முணர்த்தி நின்றது. நிற்கவே அவன்றன்மையாவது;கல்லாலெறிந்து கருது பயன் கோடலே கொள்பவனுடைய இயல்பு.

காரா - எருமை, (கருமை + ஆ = காரா) அதரிபம் பாவது பெருகிவரும் நீரிலே அதனைத் தடுத்து வீழ்ந்து அந்நீரை யுழக்கிக் கலக்கி யுண்ணுதலாம் அதுபோலக் கடை மாணாக்கனும் ஆசிரியனை சொல்லவிடாது தடுத்து அவனுடைய அறிவைத் தருக்கித்துக் கலக்கி யறிவன் என்றபடி அருந்தல் காரா மேற்று எனமுடிக்க: அருந்தல்-அருந்துமியல்பு. ஆட்டின் நீர்- ஆட்டின்றன்மை, ஆர உறினும்-நிறையப்பொருந்தினாலும், குளகு-விலங்கிற்குரிய உணவு தோணிநீரிடையின்றி நிலத்திற்செல்லமாட்டாதது போலக் கடை மாணாக்கனும் தான் பயின்ற நூலினன்றிப் பயிலாத நூலின்கட் செல்லமாட்டான், கலம்-கலாசாலை (கலை தெரிகழகம்)

முன்னும் பின்னும் அகலானாகி யென்றது ஆசிரியனிருக்கும்போது அவன் முன்னிடத்தையும்செல்லும்போது அவன் பின்னிடத்தையும் அகலானாகிப் படிந்தலை, ஆசுகுற்றம் என்றது ஐயந்திரிபுகளை, எத்திறம்-எவ்வகையான வழிபாடு, அறத்திற்றியாப் படர்ச்சி-அறநூலிற்சொன்ன முறையில் தவறாத வழிபாட்டொழுக்கம், வழிபாடு-எழுவாய், படர்ச்சி-பயனிலை, வழக்கு-உலகவழக்கு.

அவையென்றது:- முன்கேட்கப்பட்டவற்றை, அமைவரக் கேட்டல்-மனத்தில் நன்றாய்ப் படியக் கேட்டல். அனையன் அல்லோன்-மாணாக்கனுக்குரிய, இலக்கணமில்லாதவன். வினையினுழப்பொடு-கற்றற்றொழிலினால் வரும் வருத்தத்தோடு (பொருந்துவதன்றி) பயன்றலைப் படான்-பயனையு மடையமாட்டான். (பொருந்துவதன்றி யென்பது இசையெச்சம்) படான் என்பதில் படாமையு முடையன் என உடைமை விரித்து அதனோடு ஒடுவைமுடிப்பினும் அமையும். வினையின் உழப்பு என்பதை ''வினையிலுழப்பு'' என்று பாடமோதித் தொழிலற்ற முயற்சியெனப் பொருள் கொண்டு

தாற்பரியமாகப் ''பயனற்ற முயற்சி'' என்பாருமுளர். அம் மரபில்லோன்—அக்கோடன் மரபில்லாதவன். செவ்விதி னுரைத்தல்—நன்கு கற்பித்தல்.

சிறப்புப் பாயிரம்

அவ்விரண் டெல்லைக்குளிருந்துதமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்கையுஞ் செய்யுளையும் அடியாகக் கொள்ளுதலினாலே செந்தமிழியல்பாகப் பொருந்தியசெந் தமிழ் மொழியினைக் கூறுவாரையே நல்லாசிரிய ரென்- றா ரென்றாகும்'.

நல்லாசிரியரது வழக்கையுஞ் செய்யுளையும் அடி- யாகக் கொள்ளுகையினாலே செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய என்றது,செந்தமிழ் ஆசிரியரது வழக்கையுஞ் செய்யுள் நூல்களையும் அடியாகக் கொண்டே செந்தமிழ் நாட்டில் வழங்கி வருகின்ற தென்றபடி. எனவே தொல் காப்பியரும் செந்தமிழ் நாட்டு வழக்கோடுமுன்னை யிலக் கணங்களையுமாராய்ந்து இந்நூல்செய்தாரென்பது கருத் தாம். நல்லாசிரியர் வழக்கையடியாகக் கொள்ளுகையினா லே செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய,செந்தமிழ் நாட்டு வழக்கெனவே,நல்லாசிரியரது மரபு தவறாது வந்த செந் தமிழ்வழக்கென்பது போதரும்.செய்யுளை விதவாது செந் தமிழ் வழக்கெனப்பொதுவாகக் கூறினமையின் இரண்டுங் கொள்ளப்படும்.

எழுநிலமாவன :- பாட்டு, உரைநூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன.இவற்றைச் செய்யுளி யலில் 79-ம் சூத்திரத்திற் காண்க.

இவற்றுட் பாட்டென்றது செய்யுளை, உரையென் றது உரைநடையை. அது நான்கு வகைத்து (செய்யுளி யல் 173-ம் சூத்திரத்தின் உரையிற் காண்க) நூல்என்றது இலக்கண நூலை. இது பெரும்பாலும் சூத்திரயாப்பாற் செய்யப்படுவது, வாய்மொழி - உண்மைமொழி, என்றது நிறைமொழிமாந்தராற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப்

புலனாகாமை, மறைத்துக் கூறப்படும் தொடர்மொழி களை, இவையே மந்திரமெனப்படும்.

பிசியென்றது :- நொடியான சொற்றொடர்களை, இதனைச் செய்யுளியல் 176-ம் உரையிற் காண்க.

அங்கதம்–வசைச் செய்யுள், முதுசொல்–பழமொழி (செய்யுளில் 177 உரையிற் காண்க)

இவ்வுரையாசிரியர் கருத்து :

முற்கு-கர்ச்சனை, வீரர் போருக்கழைக்கும்ஒருவகை யொலி. இதனை யறைகூவ லென்ப. வீளை-சீழ்க்கை, இது வேட்டுவச் சாதிக்குள் வழங்கியது. இலதை இதுவும் ஓர் குறிப்பொலி. இன்னதென்று புலப்படவில்லை. வழக்கிறந் தது போலும். எனினுஞ் செருமல்போன்ற ஒரொலியாய் இருக்கவேண்டுமென்று இக்கால வழக்காற் கருதப்படு- கின்றது. முற்குவீளை இலதை யென்பன அடிநாவடியாற் காட்டப்படும் ஒலிக்குறிப் பென்பர். இராமாநுச கவிராயர் முற்கு முக்கு என்பாருளர்.

செறிப்பச் சேறல்என்பதற்கு ஒருவன் சொல்லச் செல் லுதல் என்றும், செறிப்ப வருதல் என்பதற்கு மற்றொரு வன் சொல்லத் தன்கண் வருதலென்றும் பலருஞ் சாதார- ணமாகக் கூறுவதுண்டு.

மற்றொருவன் சொல்ல வருதல் என்பது அவனுக்குச் செறிப்பச் சேறலே யாகலானும், செறிப்பச் சென்ற உரு வே மீண்டு வராமையானும், சொல்லச் செல்லலே கருத்- தாயின் செறிப்பச்சேறலென்னாதுபின் ''சொல்லப் பிறந்து சொற்குறுப்பா மோசையை இவர் எழுத்தென்று வேண்டு வர்'' எனக்கூறியதுபோல் ஈண்டும் சொல்லச் செல்லல்என வெளிப்படையாகக் கூறுவாராகலானும், ஆசிரியரும் 'எல் லா வெழுத்துஞ் சொல்லுங்காலையென்றே கூறுதலானும்

செறிப்ப என்பதற்குச் சொல்ல என்பது நேர் பொருளன் றாகலானும் அவ்வாறு பொருள் கூறல் பொருந்துமோ என்பது ஆராயத்தக்கது.

பின் வடிவு கூறியதற்கு இயைய ஈண்டுஞ் செறிப்பச் சேறல் என்பதற்குக் குழல் போன்ற ஒன்றனுட் புகுத்த அதனுள்ளே சேறல் என்றும், செறிப்ப வருதல் என்பதற் குக் குடம் போன்ற ஒன்றனுட் புகுத்த அதனுள்ளே புகுந்து உட்புறத்தே தாக்குண்டு, மீண்டும் வருதல் என்- றும் பொருள் கூறலே பொருத்தமாகுமென்பது எமது கருத்து. புகுத்தல்—(அகத்தே சொல்லிப்)புகச் செய்தல். இதுபற்றியே பின்னரும் அகத்துக் கூறல் என்றார். செல் லுதல் வருதல் என்பன உள்ளே செல்லுதலையும் வெளியே வருதலையும் குறித்து நின்றன. இவற்றால் எழுத்திற்கு உருவுடைமை எங்ஙனம் பெறப்படுமெனின், குழல் போன் றவற்றினுட்புக்கு அவற்றுளடங்கிச் செல்லுதலானும்குடம் போன்றவற்றினுட்புக்கு அவற்றினடியிற்றாக்குண்டு மீளு தலானும் பெறப்படும். என்னை? உருவுடையதே ஒன்ற- னுட் புக்குச் செல்வதும் புக்குத்தாக்குண்டுமீளுவது முடை- மையின். குழலானும் குடத்தானும் எழுத்துருவின் வரம்பு பட்ட பரிணாமமுடைமைபெறப்படுதலான் அதன்வடிவுண் மையும் பெறப்படும். செறித்தல்-உட்புகுத்தல்.“ கேள்விச் செவியிற் கிழித்து கிற்பஞ்சி-பன்னிச்செறித்து'' என்னு- மடிகளை நோக்கி யுணர்க. இனிச் சேறல் வருதலாகிய- வினையுடைமையானும் உருவுடைமை பெறப்படுமென்க.

பின்னர் (1—சூ+ம்) ''எழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறாராயினார். அவ்வடி வாராயுமிடத்துப் பெற்ற வடிவே தமக்கு வடிவாம். குழலகத்திற் கூறிற் குழல் வடிவும்,குடத்தகத்திற் கூறிற்குட வடிவும் வெள்ளி டையிற் கூறின் எல்லாத் திசையும் நீர்த்தரங்கமும்''போல என்று குழல் முதலிய மூன்றிலுமமைந்த உருவிற்கே வடிவமும் காட்டினாராதலின் அம்மூன்றிலும் வைத்தே

முன்னர் அவ்வுருவை உணர்த்திப் பின்னர் வடிவிற்கும்-அவற்றையே எடுத்துக் காட்டினாரென்று சாலப் பொருத்தமாதலின் நச்சினார்க்கினியர்க்கும் இதுவே கருத்தாதல் துணிபாம்,என்னை? உருவின் கண்ணதே வடிவமாகலின் செறித்தல் (உட்புகுதல்) என்ற சொல்லே குழலும் குடமும் போல்வனவற்றையுணர்த்தும் என்க: அன்றியும் இடையென்பது வெளியிடத்தை உணர்த்தலானும் முன்னைய விரண்டும் வெளியிடமல்லாத குழலும் குடமும் போல்வனவற்றையே யுணர்த்தி வந்தனவென்பது துணிபாகும். நூலாசிரியர் உரையாசிரியர்கள் கருத்துக்களைப் பின் முன்நோக்கிக்கொள்ளும் பொருளே பொருத்தமாம் என்க. குழல் குடம் போல்வனவற்றில் வைத்து உருவு வடிவுகள் விளக்கின் மாணாக்கர்க்கு அவை இனிது விளங்குமென்பது கருதியே அவற்றை யீண்டு நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டினார் என்க. சிறுவர் நீண்ட குழல் முதலியவற்றுட் பேசும் வழக்கம் இக்காலத்து முண்டு.

இடையெறியப்படுதலானு மென்பதில் இடை யென்பது இடத்தை யுணர்த்தி நின்றது. இடம் ஈண்டு வெளியிடம். அது பின் ''வெள்ளிடையாக் கூறின்'' என்பதனானும் உணரப்படும். எறியப்படுதல்—வீசப்படுதல். எனவே வெள்ளிடையாற் கூறின் அவ்வெள்ளிடைக்கண் எல்லாத் திசையும் நீர்த்தரங்கமும் போல் வீசப்பட்டுச் சேறலானும் என்பது பொருளாம். திரை வீசுங்கால் ஒன்றாலொன்று வீசி யெழுப்பப் படுதல்போல எழுத்தொலியும் 'ஒன்றாலொன்று வீசி யெழுப்பப்படுதலின்'எறியப்பட்டு'என்றார். அதனை 'உட்கப்பட்டார்' என்பது போலச் செய்வினையாகக் கொள்ளினும் அமையும். ஒன்றாலொன்று வீசி யெழுப்பப்படுதலின் உருவுடைமை பெறப்படும்அவ்வொலி நீர்த்தரங்கம்போல வட்டவடிவாய்ச் சேறலின் அதன் வடிவுடைமையும் பெறப்படும். எல்லாத்திசையும் என்பது கதம்ப முகுள நியாயத்தையும்,நீர்த்தரங்கம் என்பது வீசி தரங்க நியாயத்தையும் குறித்து வந்தன.

எழுத்ததிகாரம்

கதம்ப முகுள நியாயமாவது :- கடப்பம் பூவில் முத லாவதுண்டான மொட்டு ஒரே காலத்தில் நான்குபக்க மும் பல மொட்டுக்களை உண்டாக்கிக்கொண்டு தோன்று வதுபோல்வது ஒரு முறை. அது போலமுதலாவதுண்டான எழுத்தொலி தன் நாற்பக்கமும் ஒரே நேரத்திற் பல ஒலி களையுண்டாக்கிக்கொண்டு தோன்றும்.

கடம்பு பூக்குங்கால் தன் பூவைக் கதிராகப் பூக்கும். அக்கதிரின் தலையில் ஒரு சிறு மொட்டிருக்கும். இதன் மேற்பக்கங்களிற் பல மொட்டிருக்கும்.

வீசிதரங்க நியாயமாவது:- ஒரு குளத்தில் நீரிடையே ஒரு கல்லை யிட அந்த இடத்தில் முதலாவதுண்டான திரை, தன்னைச் சூழப் பின்னும் ஓர் திரையை யெழுப்ப, இப்படியே கரை சேரும் வரையும் வேறு வேறு திரைகளை யெழுப்பிச் சேறல் போல்வ தொருமுறை. அது போலவே முதலாவதுண்டான எழுத்தொலி தன் நாற்புறமும் ஒன் றையொன்று சூழ வேறு வேறு ஒலிகளை யெழுப்பிச் செல் லும் என்க. இவை முறையே தருக்க சங்கிரகத்தின் உரைக் குரையாகிய நீலகண்டீய உரையின் வியாக்கியானங் களாகிய (விரிவுரை) நிருதமப் பிரகாசிகையிலும், இராம ருத்திரீயத்திலும் கூறப்பட்டுள்ளன.

இன்ப துன்பத்தையாக்கல் .- வல்லோசையாற் றுன் பத்தையும் மெல்லோசையால் இன்பத்தையு மாக்கல்.

உருவு முருவுங் கூடிப் பிறத்தல்:-உயிர் வடிவும் மெய் வடிவும் கூடிப் பிறத்தல். உருவு முருவுங் கூடுமன்றி யுருவ, மில்லாதனகூடமாட்டா. அதனானும் உருவுடைமை பெறப் படும். நா முதலிய உருவங் கூடிப் பிறத்தல் என்று கொள் ளின் பின்னர் 'தலையும்மிடறும் நெஞ்சு மென்னும் மூன் றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவு மண்ண மும் உறப்பிறக்கும்''எனக் கூறுதலான் அது பொருந்தாது.

கூடிப் பிறத்த லென்பதன்கண் கூடுதல் என்னுஞ் சொல்லி லேயே பொருள் சிறந்து நின்றது. பிறந்த பின்பே அவற் றின் கூட்டமறியப்படுதலின் பிறத்தவானு மென்றார்.

''உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து கட்புலனாந் தன்மையின்றிச் செவிக்கட் சென்று றும் ஊறுடையானும்'' என்றதனாற் பிறப்புடைமை யானும் பரிசமுடைமையானும் உருவுடையது எழுத்தென் பது கூறப்பட்டது.

எண்வகை நிலம் : எழுத்துக்களுக்குப் பிறப்பிடமாகச் சொல்லப்பட்ட எண்வகை இடம், அவை : தலை மிடறு நெஞ்சு பல் இதழ் நா மூக்கு அண்ணம் என்பன. இவற் றை நன்னூலார் இடமும் முயற்சியுமென விருவகையாகப் பகுப்பர். இடம், தலை மிடறு நெஞ்சு மூக்குஎன்பன முயற்சி பல் இதழ் நா அண்ணம் என்பன.

விசும்பிற் பிறந்தியங்குவதோர் தன்மையுடைமையா னும் என்றதனாற் காற்று விசும்பின் கட்பிறந்து இயங்கு வது போல் இவ்வெழுத்து ஓசையும் விசும்பின்கட் பிறந்தி யங்கு மியல்புடையது என்பது இந்நூற் குரைகண்ட நச் சினார்க்கினியர் கருத்துப் போலும்.

கடையிற்கூறிய இவ் வேதுக்க ளிரண்டையும் எழுத் துக்களுக்கும் காற்றிற்கும் முறையே தனித்தனிச் சிறப் பாகவும் ஏனைய எழுத்துக்களைப் பொதுவாகவும் நச்சி னார்க்கினியர் கூறியிருக்கலாமென்பது எமது கருத்து.

இனிக் காற்றிற் கேற்பவும் குழல் போன்ற வற்றிற் புகுத்தப் புகுதலானும் குடம் போன்ற வற்றிற் புகுத்த அடிப்புறத்தே தாக்குண்டு மீண்டு வருவதலானும் வெளி நிலத்தே வீசிச் சேறலானும் மென்மையாக வீசலானே இன்பத்தையும் வன்மையாக வீசலானே துன்பத்தையும் ஆக்கலானும் இரு

திசைகளான் வருங் காற்று ஒன்றுகூடித் தோன்றலானும் உருவுடைமை அறியப்படும் எனக் கொள்க.

கந்தருவம் : இசை நூல், குறி - பெயர், இதனுட் கூறுகின்ற உரைச் சூத்திரங்களென்றது இப்பாயிரத்திற் கூறுகின்ற "யாற்ற தொழுக்கே" என்பது முதலிய சூத்திரங்களை; அரில்தப என்பது குற்றந் தீர்தலையும் தெரிந்து என்பது விடை கூறுதலையும் உணர்த்தின.

சொற்சீரடி - சொற்சீராலாகிய அடி என்பது அசையாற்சீர் செய்து சீராலடியாக்காது சொற்களையே சீராகவைத்து அடி ஆக்குவது.

கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்த சொற் சீரடியாவது :-

கட்டுரைக்கண் வருமாறுபோல் எண்ணொடு பொருந்தி வருஞ் சொற்சீரடி,

வடவேங்கடமும் தென்குமரியுமென்பது உம்மைதொக்குச் செவ்வெண்ணாய் வடவேங்கடந் தென்குமரி என நின்றது.

வழியசை புணர்ந்த சொற் சீரடியாவது; தனியசையன்றிப் பல அசை புணர்க்கப்பட்டு வருஞ் சொற்சீரடி' என்பர் நச்சினார்க்கினியர். ஆயிடை யென்பது தனியசையன்றிப் பின்னுமோரசை புணர்க்கப்பட்டவாறுகாண்க. "ஒரு சீர்க்கண்ணே பிறிதுமோர் சீர் வரத் தொடர்வதோர் அசையைத் தொடுப்பது" என்பர் இளம்பூரணர்.

முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடி யென்றது தூக்குப்பட்டு முடியுமடியின்றிச் சீர்குறைந்து வருவதை "தமிழ் கூறு நல்லுலகத்து" என்பது நாற்சீரடியாய் முடியாது குறைவு சீர்த்தாய் முடிதல் காண்க. இவற்றைக் "கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்" என்ற செய்யுளியற் பன்னிரண்டாஞ் சூத்திரத்திற்கு நச்சி

னார்க்கினியர் முதலியோர் உரைத்த வுரை நோக்கி யுணர்க.

செந்தூக்காவது:— நான்கு சீரும் நிரம்பிவரும் அடி. மூன்றுறுப்படக்கிய பிண்டம்-சூத்திரம் ஒத்து படலம் என்னும் மூன்றுறுப்பையும் அடக்கிய நூல். பிண்டம்-திரட்டப் பட்டது.

இன்னும் பாயிரத்துள் ''முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணி''. என்று பாயிரம் செய்தார் கூறுதலானே உணர்க என வியைக்க. எப்படி உணர்த லெனின்? இவ் வாசிரியர் கூறிய அதனையே ஈண்டும் (பாயிரத்துள்) ''முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணி'' எனப் பாயிரகாரர் கூறினாரெனவுணர்தல். முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணித் தொகுத்தான் என வழிநூல் இலக்கணமும் பெறப்படப்பாயிரகாரர் கூறியதற்கு விதி செய்யுளியலிலும் மரபியலிலும் தொல்காப்பியர் கூறிய விதியே யென்பதாம்.

இந்நூலாசிரியர் வழிநூல் செய்தற்கு விதியாண்டுப் பெற்றாரெனின் முதல்வன் கூறிற்றிலனேனும் அவன் நூல் செய்த முறையே தமக் கிலக்கணமா மென்று கருதிச் செய்தாரென்க. முதல்வன் செய்த முறையே தமக்கும் இலக்கணமாகக் கொண்டு நூல் செய்தா ரெனினும் ஒருவன் செய்ததை மீளவும் செய்தலாற் பயனின்றே யென்னும் ஆட்சேபத்தை (தடையை) நீக்கும் பொருட்டே முறைப்படவெண்ணி யென்றா ரென்க.

பாயிரம் முற்றிற்று.

இஃது சுன்னாகம் திரு. சி. கணேசய்யர் அவர்கள் ஆய்ந்தெழுதிய உரை விளக்கமாம்.

இவ் வெழுத்ததிகாரம் பயில்பவர்க் கொருதலையாகப் பயனுறும் என்பதுகருதியே இந்நூற் பதிப்பின் கண் பிற் சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டது.

எழுத்ததிகாரம்

ஒ

அளபெடை

பின்னிணைப்பு :- (அனுபந்தம்)

அளபெடை-அளபெடுப்பது; என்றது அளபெடுத்தலை யுடையதாய எழுத்தை, அளபெடுக்குங்கால் நெட்டெழுத் தேழும் அளபெடுக்குமென்றும், அவை இவ்வளவு மாத்திரை நீண்டன வென்பதை அவ்வவற்றிற் கினமாகிய குற்றெழுத்துக்கள் காட்டி அவற்றின் பின்னே நிற்குமென்றும் நன்னூலார் கூறுவர்.

தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணர் நச்சினார்க்கினியர் என்னு மிருவரும் நெடிலும் குறிலும் சேர்ந்து நின்று அளபெடுக்குமென்னும் பொருள்பட

> ''நீட்டம் வேண்டி னவ்வள புடைய
> கூட்டி யெழுஉத லென்மனார் புலவர்''

என்னுஞ் சூத்திரத்திற்கு முறையே நீண்டமாத்திரையை யுடைய அளபெடை யெழுத்துப் பெறவேண்டின், மேற் கூறிய ஓரளபும் இரண்டளபுமுடைய குறிலையும் நெடிலையும பிளவுபடாமற் கூட்டி யெழுஉக என்று கூறுவர் ஆசிரியர்'' என்றும், ''வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் காரணமாக இரண்டுமாத்திரைபெற்ற வெழுத்து அம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவாராயின் தாங்கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்களைக் கூட்டி அம்மாத்திரையை யெழுப்புக; என்றும் கூறுவாராசிரியர்'' என்றுங் கூறுவர். இவ்விரு கூற்றுள் எக்கூற்றுப் பொருத்த முடைத்தென்பதேயாம் ஈண்டு ஆராய்வது.

அளபெடை யென்பது குறில் நெடில் என்பதுபோல அளபெடுத்தலை யுடையதாய ஓரெழுத்தினையேயுணர்த்தி நிற்கும். ஆதலின், ஓரெழுத்தே தன்னளபினும் எழுந்

தொலிக்குமென்பது துணிபாகும். ஏனெனில் இரண்டெழுத்துக்கூடி யொலிக்குங்கால் எவ்வளவொலிக்குமென்றும் எவ்வாறொலிக்குமென்றுந் தெரிய வாராமையின்; அன்றியும், இரண்டுகூடி யொலிக்குங்கால் மூன்றுமாத்திரையின் மிக்கொலிக்குமென்பது படும். ஆதலானும் அது பொருந்தா தென்பதே துணிபாம்.

இன்னும் நீட்டம் வேண்டி யோரெழுத்தை நீட்டுங்கால் அதனையே வேண்டிய அளவு நீட்டலாமாதலின் மற்றோரெழுத்துக் கூட்டி நீட்டவேண்டுமென்னும் யாப்புறவின்மையானும் இன்னிசை யளபெடையிற் குற்றெழுத்தொன்றே நெடிலாக நீண்டு பின்னளபெடுத்தல்கண்கூடாதலானும் ஈரெழுத்துக்கூடி நீளுமென்றல் பொருந்தாமை துணிபாம். மேலும் எழுத்துக்களே சேர்ந்தொலிக்குமென்பது கருத்தாயின் நெடிலுங் குறிலுங் கூடியெழுமென விளங்கக் கூறுவர்மன்; அங்ஙனங் கூறாமையானும் ஆசிரியர்க்கது கருத்தன்மை துணியப்படும். ஆதலின் ''நீட்டம் வேண்டின்'' என்னுஞ் சூத்திரத்திற்கு அவ்விருவருரையும் பொருத்தமுடையவல்ல வென்பதே துணிபாம். அன்றேல் அச்சூத்திரத்திற்குப் பொருளியாதோ வெனிற் கூறுதும்.

அவ்வுரை வருமாறு;-நீட்டம் வேண்டின் ஓரெழுத்தே முன்னையினும் மாத்திரை மிக்கொலித்தலை விரும்பின், அவ்வளபுடைய கூட்டி-விரும்பியமாத்திரையையுடையவெழுத்துகளை (அவ்வளவின்பொருட்டு) அவ்வெழுத்தோடு கூட்டி எழுஉதல்-(அவ்வளவாக) அவ்வெழுத்தினிசையை எழுப்புக என்மனார் புலவர்-என்றுசொல்லுவர் புலவர்என்பதே.

நீட்டம்-நீளம், அஃது ''உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்'' என ஆசிரியர் பின்னுங் கூறுமாற்றான் அறியப்படும். இங்கே நீட்டம் வேண்டின் என்று கூறியதனையும், எழுஉதல் என்பதனையும் உற்றுநோக்குமிடத்து ஒன்றே தன்னிசை நீண்டு ஒலித்தலன்றி இரண்டுகூடி நீண்டிசைத்தலென்பது பொருந்தாமை பெறப்படும். பிறாண்டும் ''அளபிறந்

துயிர்த்தலும்'' எனவும் ''ஒற்றிசை நீடலும்'' எனவும் ''நீடவருதல் செய்யுளுளுரித்தே'' எனவும் ''உரைப் பொருட் கிளவி நீட்டமும் வரையார் எனவும், ''யகார வுகாரம் நீடிடனுரித்தே'' எனவும் ''ஆறன் கிளவி முதனீளும்மே'' எனவும் ''முதனிலை நீடினு மானமில்லை'' எனவும் ஆசிரியர் கூறிய சூத்திரங்களை நோக்கும்போது ஓரெழுத்தே நீளுமென்பதன்றி இரண்டெழுத்துக்கூடி நீளுமென்பது ஆசிரியர் கருத்தன்மை துணியப்படும். படவே அவ்வளபுடைய கூட்டுதல் அளவின் பொருட்டென்பது துணிபாம். துணியவே அவ்வெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வருமென்பதூஉம் பெற்றாம். அவை குறியாமாறு; வெண்பா இயற்ற விரும்பிய புலவன் ஓதல் வேண்டுமென இருசீரை யெடுத்துக்கொண்டு அச்சீரிலுள்ள தளையை நோக்கியவிடத்து ஓதல் என்பதன் இறுதியசையும் வேண்டுமென்பதன் முதலசையும் நேரசையும் நேரசையு மாயியைந்து நேரொன் றாசிரியத்தளையாக முடிந்தமை கண்டு, அதனை வெண்டளையாக்குமாறு ஓதல் என்னுஞ் சொல்லிலுள்ள ஓகாரத்தின் பின் ஒகரத்தைச் சேர்த்து அவ்வளபாக அவ்வோகாரத்தை யெழுப்பியிறுதியசையை நிரையசையாக்கி வெண்டளை கோடலானும் செறாஅ அய்வாழிய என்ற விடத்து ஈரெழுத்துக் கூட்டி அவ்வளபாக எழுப்பித் தளை செய்து கோடலானும் அறிந்துகொள்க. ஈரெழுத்தும் அளவாகக் கொள்ளப்படும் என்பதற்கே அவ்வளபுடைய எனப்பன்மையாகக்கூறினார்.

இன்னும், இசை குன்றிய மொழியினிடத்து நெட்டெழுத்துக்குப் பின்னே அதனோடொத்த குற்றெழுத்து நின்று அவ்விசையை நிறைக்குமென்னும் பொருளமைய,

''குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே''

என ஆசிரியர் கூறியதனானும், குற்றெழுத்து இசைநிறைப்பதன்றி நெட்டெழுத்தோடு கூடியளபெடாதென்பது நன்கு

போதரும், அளபெடுக்குமேல் நெட்டெழுத்திம்பர் என்னாது நெட்டெழுத்துங் குற்றெழுத்துங் கூடி இசையை நிறைக்குமென விளங்கச் சூத்திரிப்பார்மன்; அங்ஙனஞ் சூத்திரியாமையானும் அவர்க்கது கருத்தன் றென்பது. அன்றேல், குற்றெழுத்து இசைநிறைக்கு மென்றமையாற் குறியெனபது போதராதெனின், அது குறியாமாறு பின்னர்க் காட்டுதும்.

இனிக் குற்றெழுத்துக்கள் குறியாயின் ஆகாரத்துக்கு அகரமன்றி இகரமுங் குறியாயிடலாமே அகரம் ஏன் இடுவானெனின் அறியாதுகடாயினாய்என்னை? ஆகாரம் ஒரு மாத்திரை நீளுங்கால் அகர வடிவாயே நீடலின், அவ் வடிவையுங் குறித்துக் காட்டுவதற்கே அகரம் வரிவடிவில் எழுதுவதாயிற்று. நச்சினார்க்கினியர் சந்தனக்கோல் குழுகினாற் பிரப்பங்கோலாகாது? அதுபோல உயிரது குறுக்கமும் உயிரேயாம் என்று கூறிய மறுதலை யுவமையை நோக்கும்போது ஓரொலி வேறோரொலியாகக் குறுகலும் நீடலும் அடையாதென்பது பெறப்படும். அற்றேல், இரண்டு மாத்திரை நீட்சிக்கு இரண்டு மாத்திரை பெறும் எழுத்தைக் குறியாக இடாது இரண்டு குற்றெழுத்தையிடுவது என்னையோ வெனின்? ஒருமாத்திரையுடைய எழுத்து நீளுங்காற் பின்னும் ஒருமாத்திரை மிக்கு இரண்டு மாத்திரையாய் நீண்டு நெடிலாயவாறு போல நெடிலும் நீளுங்கால் ஒவ்வோர் மாத்திரை மிக்கே நீளுமாதலின் இரண்டு குறில் குறியாக இட்டு ஆளப்படு மென்க, இக்கருத்து.

"அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப"

(என்னும் சொல் 125ஆம் சூத்திரத்திற்குச் சேனாவரையரு ரைத்த வுரையானும்நன்கு புலப்படும். இன்னும்நச்சினார்க் கினியரும் ஒன்று நின்று அதனொடு பின்னரும் ஒன்றுகூடியே இரண்டாவதன்றியிரண்டென்பதுஒன்று இன்றாகலின் என்றதனானும்அஃது உணரத்தக்கது. ஆகாரம் என்னும்

எழுத்ததிகாரம்

நெட்டெழுத்து நீளுங்கால் ஒரு மாத்திரை நீண்டு அகர மாய் நின்று ஒலிக்குமென்பது பற்றியே,

> ''குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
> நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே''

என்று ஆசிரியர் கூறுவாராயினர். இச்சூத்திரத்தில் ஆசிரியர் குற்றெழுத்து இசை நிறைக்கு மென்றதனால் அக்குற்றெழுத்து எழுத்தாகக் கொள்ளப்படாதென்பதூ உம், ஒலி வடிவில் அவ்வளபெடையோசையை அவ்வவ் வினவெழுத்தாய் நீண்டொலிக்கு மென்பதூஉங் கூறி னாராயிற்று. ஆகவே குற்றெழுத்து ஒலி வடிவில் நெட் டெழுத்தின் பின் நின்று இசைநிறைக்கு மென்பதூஉம் வரி வடிவில் அது நெட்டெழுத்து அவ்வவ்வினமாய் நீண் டொலிக்கு மென்பதற்கும், மாத்திரைக்குக் குறியாய் நிற்கு மென்பதூஉம் தானே போதருதலின் இசைநிறைக்கும் என்றதூஉம், குறி என்றதூஉம் தம்முண் முரணாகாமை உணர்ந்து கொள்க.

இக்கருத்தமையவே சிவஞான முனிவரும் தாம் திருத்திய நன்னூல் விருத்தியுரையுள் ''இசைகெடின்'' என்னுஞ் சூத்திரத்து வரும் 'குறியே' என்பதற்கு வரிவடி வில் அறிகுறியாம் என்றும், ''குற்றுயிர் அளபி னீறாம்'' என்பதற்கு ஒலி வடிவினீறாம் என்றும் உற்று நோக்கிப் பொருந்தக் கூறியதூஉம் என்க.

அற்றேல், நெட்டெழுத்துக்கள் நீளுங்கால் நீண்ட அவற்றையும் ஒரெழுத்தாகக் கொள்ளலாமேயெனின், அவை மொழிக்குக் காரணமாய் வேறு எழுத்தோடு சேர்ந் தாயினும், தனித்தாயினும் பொருடராமையின் அவை யெழுத்தாகக் கொள்ளப்படா வென்க, இக்கருத்தமையவே சிவஞான முனிவரும், ''இந்நெட்டெழுத்துக்கள் மொழிக் காரணமாய் வேறு பொருடந்து நிற்றலின், அதுபற்றி வேறெடுத்தெண்ணி உயிர் பன்னீரெழுத்தெனப்பட்டன.

அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பதொன்றாயினும், மொழிக்காரணமாய் வேறு பொருடாராது இசை நிறைத்தன் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின் வேறெழுத்தென வைத் தெண்ணப்படாதாயிற் றென்பது, நுண்ணுணர் வானோர்ந் துணர்க.

''குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே''

என்றதூஉம் இக்கருத்துப் பற்றி யென்க'' எனச் சூத்திர விருத்தியிற் கூறுதல் காண்க.

இன்னும், நெடிலையுங் குறிலையுஞ் சேர்த்துச் சொல்லுங் கால் இரண்டுஞ் சேர்ந்து பிளவு பட்டொலிக்குமே யன்றிப் பிளவுபடாதொலிக்கமாட்டா. இதுபற்றியேசங்கரநமச்சிவாயரும்''இசைகெடின்''என்னும் நன்னூற் சூத்திரவுரையில் ''எழுத்துப்பலவாயினஒலி வேற்றுமையானன்றே அங்ஙனமாக நெடிலது விகாரமாய் ஒரொலியாகப் பிறக்கும் அளபெடையைஇரண்டெழுத்துக்கூடி மூன்றுமாத்திரையாயிற் றெனக்கொள்ளின் இரண்டெழுத்தொலி யங்ஙன மின்மையானும், அளபெடை யென்னும் பெயர் ஏலாமையானும் அவ்வாறு கொள்ளாது அறிகுறியே என்று கோடற்குக் குறியே என்றார்'' என்றுங் கூறினார்.

இனி நெட்டெழுத்தேயளபெடுக்குமென்பது நச்சினார்க்கினியருக்கும் கருத்தாதல் ''நீட்டம் வேண்டின்'' என்பதற்கு ''இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கு ஒலித்தலை விரும்புவாராயின்'' என்றும், ''அந்நெட்டெழுத்துக்களே யளபெடுத்தலிற் சொல்லாத லெய்தின'' என்றும் கூறுமாற்றானும் அவர்க்கது கருத்தாதல் பெறப்படும். அங்ஙனே னெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்துப் பிறந்து பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடையென்று

எழுத்ததிகாரம்

ஆசிரியர் வேண்டினாரெனக் கூறியது என்னையா வெனின், குறில் நெடிலுக்குப் பின்னே நின்று ஒலி வடிவையும், அளவையும் காட்டிக் கூடி நின்றாலன்றி அவ்வளபெடை தோன்றாமையின் அவ்வொற்றுமை பற்றி அவ்வாறு கூறினார் போலும். அவர் ''இவை கூட்டிச் சொல்லிய காலத்தல்லது பெறப்படா எள்ளாட்டிய வழியல்லது எண்ணெய் புலப்படாவாறு போல'' எனக்கூறியதூம் இக்கருத்து நோக்கிப் போலும்.

இனி, ''அவ்வளபுடைய கூட்டி'' யென்பதற்கு அவ்வளபுடைய ஓசைகளை அதிகப்படுத்தியெனப்பொருள்கூறலும் பொருந்தும். ஓசைகள் என்றது எழுத்தொலிகளை நான்குமாத் திரையுங் கோடற்குப்பன்மையாகக்கூறினார்

இங்ஙனம் இச்சூத்திரத்துக்குப் பொருள் கூறாது நெடிலுங் குறிலுமாகிய இரண்டெழுத்துங் கூடியொலிக்குமெனப் பொருள் கூறின் ஆசிரியர் கருத்தொடு முரணுவதன்றி ஆசிரிபரையும் பிழைபடுத்துவதாக முடியும். இரண்டெழுத்துங் கூடியொலிக்கு மென்றல் தமது கருத்துக்கு முரணாவதாற்றான் சிவஞான முனிவரும் ''எழுத்துப்பலணுவாயின ஒலி வேற்றுமை யானன்றே, அங்ஙனமாதலின், நெடில்து விகாரமாய் ஓரொலியாய்ப் பிறப்பதெ யளபெடையென்பார் நெடிலள பெழும் என்றும், ''அவற்றவற் றினக் குறில் குறியே'' என்றுங் கூறினார் என நன்னூலார் கருத்தை முற்கூறிப் பின், ஆசிரியர் தொல்காப்பியனாரும் நீரும் நீருஞ் சேர்ந்தாற் போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைத்தலே யளபெடையென்பார், ''குன்றிசை .....குற்றெழுத்தே'' யென்றும். நெடிலும் குறிலும் என்றும், நெடிலும் குறிலும் விரலும் விரலும் சேர நின்றார் போல இணைந்து நின்று அளபெடுக்கு மென்றல் பொருந்தாமைக்கு எழுத்தெடை யென்னாது அளபெடை யென்னுங் குறியீடே சான்றாதலறிக'' என்றும் கூறினார் இக்கருத்தை நாம் உற்று நோக்கும்பொழுது முனிவர் உரையாசிரியர்களுடைய

உரைக்கியைய அவ்வாறு கூறினாரன்றித் தமது கருத் தோடுபடக் கூறினாரல்லர் என்பது நன்கு தெளிவாம். இன்னுஞ் சூத்திர விருத்தியின் கண் வடநூலார் 'அ' என்னும் ஒரெழுத்தே யொருமாத்திரையாய் உச்சரிக்குங் கால், குற்றெழுத்தென்றும், இரண்டு மாத்திரையாய்க் கூட்டியுச்சரிக்குங்கால் நெட்டெழுத்தென்றும் மூன்றுமாத் திரையாய் யுச்சரிக்குங்கால் அளபெடையெழுத்தென்றும் மூவகைப் படுமெனக் கூறியதனாலும், இரண்டெழுத்துக் கூடியளபெடுக்கு மென்றல் தம் கருத்தொடுபட்ட உரையன்றென்பது நன்கு தெளியப்படும்.

அங்ஙனேல், ''மூவள பிசைத்தல் ஒரெழுத்தின்றே'' என்ற தனோடு மாறுபடுமேயெனில் மாறுபடாது. என்னை? அச்சூத்திரத்திற்கு நெடிலுங் குறிலும் போல இயல்பாய வோரெழுத்து மூவள பிசைத்தல் இன்று என்பது பொருளா மன்றி, ஈரெழுத்துக்கூடி யொலித்தல் பொருளன்றாமாத லின், எனவே, விகாரமாய் ஒரெழுத்து மூவளபிசைத்தலுண் டென்பது. விகாரமென்றது ஈண்டு நீடலை இந்நீடலை யநுவதித்தே பின் ''நீட்டம் வேண்டி'' னென ஆசிரியர் கூறினார். இதனாலும் ஒரெழுத்தே நீடும் என்பது தெற் றெனப்படும். எழுத்துப் பேறள பெடைகளைப் புலுதசங்கு என்று வடநூலார் கூறுவர்.

இனி, பாணினியார் கூறிய''.....''

என்னுஞ் சூத்திரவுரையில் குறிலும் நெடிலும் அளபெ டையும் முறையே ஒரு மாத்திரையும், இரண்டு மாத்திரை யும், மூன்று மாத்திரையும் உடையன என்றும், இவற் றிற்கு மாத்திரை வரையறுக்குங்கால், உ, ஊ, ஊஉ என் னும் எழுத்துக்களின் மாத்திரையே அளவாகக் கொள்ளப் படும் என்றும் இவற்றை யளவு கருவியாகக் கொண்டது (முறையே) ஒன்று இரண்டு மூன்று என்னும் மாத்திரைகளையுடைய கு, கூ, கூஉ என்னுங் கோழியினுடைய அனுகரண வோசை போலிருத்தல் பற்றி யென்றும் கூறுமாற்றானும் ஒரெழுத்தே

நீண்டொலிக்குமென்பது வடநூலார்க்குங் கருத்தாதல் காண்க.

இனிச் சேனாவரையருக்கும் நெட்டெழுத் தொன்றே நீளு மென்பது கருத்தாதல் சொல்லதிகாரத்து 152-ஆம் சூத்திரவுரையில் "அளபிறந்தன வென்றது நெட்டெழுத்து அள பெடையாயும், அளபெடை மூன்று மாத்திரையினிறந்துஞ் சேய்மைக்குத் தக்கவாறு நீண்டிசைக்குமென்றவாறு" என்பதனா லறிந்து கொள்க.

இதுகாறுங் கூறியவாற்றானே அளபெடுக்குங்கால் நெடிலுங் குறிலுங் கூடிநின்று அளபெடுக்கு மென்றல் பொருந்தா தென்பதூஉம் குற்றெழுத்துக்கள் குறியாய் வரும் என்பதூஉம் துணிபாதல் காண்க.

[செந்தமிழ் தொகுதி 26. பகுதி 7.]



போலி எழுத்து

பன்னருஞ் சிறப்பிற் பவணந்தியார் செய்த நன்னூற் ற உரையுரைத்த உரையாளருட் சிலர்

''அம்மு னிகரம் யகர மென்றிவை
எய்தி னையொத் திசைக்கு மவ்வோ
டுவ்வும் வவ்வு மெளவோ ரன்ன''

என்னுஞ் சூத்திரத்தாற் பவணந்தியார் போலி யெழத்துணர்த்தினாரல்லர் எனவும் சந்தியக்கரமே யுணர்த்தினா ரெனவும் உரைத்தனர். அவருரை பொருந்துமா? என்பதே ஈண்டு ஆராய்வது

அவருரைத்தவாறு பவணந்தியார் சந்தியக்கரமே யுணர்த்தினாராயின் ''அம்முன் யகர மிகர'' மென்றும் ''அவ்வொடு வவ்வும் உவ்வும்'' என்றும் ''ஒத்து எய்தின்'' என்றும் 'ஐயிசைக்கும்' என்றுந் தாங்குறித்த பொருள் இனிது விளங்கச் சூத்திரித்திருப்பார்மன்; அவ்வாறு சூத்திரியாமையின் அவர்க்கது கருத்தன் றென்பது பெறப படும்.

அங்ஙனமன்று; 'இவை யென்னுந் தொகைச் சொல்லானே இரண்டுங் கூடி வருமென்பது பெறப்படுதலின், ஏற்றவாறு மாற்றிப் பொருள்கோடலாமாகலானும் 'ஒத்து' என்பதை 'எய்தின்' என்பதனோடு கூட்டிப்; பொருளுரைக் கலாலானும் சந்தியக்கர மென்பதே.

ஆசிரியர் கருத்தெனின், என்முன் சாத்தன் கொற்ற னிவரும் வந்தாரென்றால், இருவரும் வந்தாரென்பது அல்லது கூடியே வந்தாரென்பது பெறப்படாமைபோல், இவை யென்னுந் தொகைச்சொல்லானும் இரண்டும் வரு மென்பது பெறப்படுமன்றிக் கூடியே வருமென்பது பெறப் படாமையின் மாற்றிப் பொருள் கோடலாமென்பது பொருந்தாமை யானும் எய்தின் என்பதனோடு ஒத்து என்பதைக் கூட்டிப் பொருள்

எழுத்ததிகாரம்

கோடல் வலிந்து கோடலாமாகலானும் அஃதவர்கருத்தா காது. ஆகுமெனில் ஆசியர் சூத்திரம் யாத்தற் கறியா ரென்பதுபடும். ஆதலின் ஆகாதென்பதே துணிபாம். ஆகையால், ஆரியமொழியிற் கூறிய சந்தியக்கரத்தைத் தமிழ் மொழிக்கண்ணும் புகுத்த வேண்டி நன்னூல்ர் போலி யுணர்த்திய சூத்திரத்தைச் சந்தியக்கர முணர்த்திய தெனக் கொண்டு வலிந்து பொருள் கோடல் உண்மைப் பொருளும் பொருத்தமுமன்றாம்.

பின் இதன் உண்மைப் பொருள் யாதெனிற் கூறுதும்:- அகரத்தின் முன் இகரமும் யகரமுமென்று சொல்லப்பட்ட இவைகள் தனித்தனி வந்தால் (அஃதாவது அ.இ எனவும், அய் எனவும் வந்தால்) ஐபோன்று ஒலிக்கும் என்பதும், அகரத்தின் முன் உகரமும் வகரமும் வந்தால் (அஃதாவது அ.உ; எனவும் அவ் எனவும் வந்தால்) ஔகாரம் போன்று ஒலிக்கும் என்பதுமே ஆசிரியர் கூறிய சூத்திர முறைக் கேற்ற உண்மைப் பொருளாம் எனவே போலி யெழுத்தே கூறினாராயிற்று. இதுவே நன்னூற் பழைய வுரையாசிரி-யர் மயிலை நாதருக்குங் கருத்தாதல் அவருரை நோக்கி யுணர்க.

அன்றியுஞ் சந்தியக்கரமே கூறினாராயின் எகரவொ கரங்களையுமுடன் கூறியிருப்பார். அங்ஙனங் கூறாமை யானும் போலியுணர்த்தினா ரென்பதே துணிபாம்.

அங்ஙனேல், இங்ஙனங் கூறிய போலியெழுத்தால் வரும் பயன் யாதோ வெனின், செய்யுளில் வரும் எதுகைக் கண் இவ்வாறு கொள்ள நிற்றலே.

அதனை, ''ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்'' என்பதன் கண்ணும், ''கையகத் ததுவது பொய்யா காதே'' என்பதன் கண்ணும்

கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்''

என்பதன் கண்ணும்

''ஒளவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்''. என்பதன் கண்ணும் வரும் எதுகைத் தொடைகளில் 'மெய்பெற' என்பதற் கியைய ''ஐயென்'' என்பதை 'அய்யென்' எனவும் 'பொய்' என்பதற் கியையக் கை என்பதைக் கய் எனவும் 'மெய்' என்பதற் கியையக் 'கை' என்பதைக் கய் எனவும் 'செவ்வியான்' என்பதற்கியைய, 'ஒளவியம்' என்பதை 'அவ்வியம்' எனவுங் கொள்ள நிற்றல் காண்க.

இவ்வாறு எதுகைக்கட் போலியாகக் கொள்ள நிற்றல் பற்றியே, ''ஆயிருதொடைக்குங் கிளையெழுத்துரிய'' என்னுஞ் சூத்திரவுரையின்கண் நச்சினார்க்கினியரும் ''ஐகார ஔகாரங்கள் போலி வகையாற் கிளையெழுத் தெனப்படு'' மென்றார்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியரும் ''அகர விகர மைகாரமாகு'' மென்றும், ''அகர வுகர மௌகார மாகும்'' என்றும் இகர வுகரங்களை முன்னர்க் கூறிப் பின்னர் ''அகரத் திம்பர் யகரப் புள்ளியு மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.''

என யகரத்தை வேறு வைத்துக் கூறியதும் போலியெழுத்தா மாற்றை நன்கு புலப்படுத்தற்கேயாம். அன்றி, நன்னூலுரையாளர் சிலர் கூறியவாறு அகர விகரங்களுக் கிடை யகரங் கலந்து ஐகாரம் ஆகுமென்பதே தொல்காப்பியர் கருத்தாயின் ''அகர டகர நடுவண் யகரங் கலந்து ஐகாரந் தோன்றும்'' என்பதமையச் சூத்திரித்திருப்பார். அங்ஙனஞ் சூத்திரியாமையின் அவர்க்கது கருத்தின்றாதல் தெள்ளிதிற் பெறப்படும். அன்றியும், யகரப்புள்ளியும் என இறந்தது தழீ இய எச்சவும்மை கொடுத்துக் கூறினமையானும் அது தெளிவாம்.

இன்னும், ''ஐயெனெடுஞ்சினை'' என்றதனானும் சந்தியக் கரமென்பார் கருத்து முழுவதும் தூரம் போய்த் துச்சமாமா றுணரலாம். எங்ஙனமெனின், அஃது அதன்

றுணரலாம். எங்ஙனமெனின், அஃது அதன் பொருள் யாராயவே பெறப்படும்.

''ஐயெ னெடுஞ் சினை'' யென்பதற் குரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் கூறிய பொருள் ஐயென்னு நெட்டெழுத்தென்பது சினையென்பது எழுத்துக்குப் பரியாயப் பெயராகாது. ஆதலால், சினையென்பது உறுப்பென்னும் பொருளையுணர்த்தி, ஆகுபெயராய் எழுத்தை யுணர்த்தும். எனவே சினை யென்பதற்குறுப் பெழுத்தென்பது பொருளாம். அது :— தொல்காப்பியர்,

''குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வருஉ மகர மூர்ந்தே'' (34) என்றும்

''சுட்டுச் சினை நீடிய வையெ னிறுதியும்''(159)என்றும்

''குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வ நதல் செய்யுளு ளுரித்தே''(234) என்றும்

''நூறென் கிளவிக் கொன்றுமுத லொன்பாற்
கீறுசினை யொழிய வினவொற்று மிகுமே'' (472)

என்றும் கூறிய சூத்திரங்களில் வரும் 'சினை' என்னும் சொற்களின் பொருளை ஆராயவே நன்கு விளங்கும்.

சுட்டுச்சினை யென்பதற்குச் சுட்டாகியசினையெழுத்தென்று நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையானும் அஃது உணரலாம். அங்கே சினையெழுத்தென்றுரைத்தவர், இங்கே எழுத்தெனப் பொருளுரைத்த தென்னையெனின், சந்தியக்கரமுணர்த்திய திதுவெனப் பிறர் கூறு

வார், என்ப துணர்த்தியதெனப் பிறருரைப்பாரென்ப துணர்ந்திராமையின் அவ்வாறு சுருக்கிக் கூறினார். உணர்ந்திருப்பாராயின் சினை யெழுத்தென்றே விரித்துரைப்பார் உரையாசிரியரும் அவ்வாறே கூறினர். சினையெழுத்தென்பதே அவர்கள் கருத்தாதல் அவர்கள் காட்டிய உதாரணங்களால் உணரலாம். ஆகையால் ''ஐயெனெடுஞ்சினை'' என்பதற்கு ஐயென்னும் நெடிய உறுப்பெழுத் தென்பதே பொருளாகி ஐயன் கையன் என்பன போன்ற சொற்களின் முதற்கண் அவற்றிற் குறுப்பாக நிற்கும் ஐயென்னும் நெட்டெழுத்தென்பது போதருமன்றித் தனி ஐ யென்பது போதராது. போதராமையின் அகரமும் யகரமுஞ் சேர்ந்து சந்தியக்கரமாமாறுணர்த்தினாரல்லர் என்பது நன்கு உணரக் கிடத்தல் காண்க.

அற்றேல், ஐ என்பது பலவெழுத்துக் கூடியதாதலின், சினை யென்பதற்கு ஐயின் சினை என்றாலென்னையெனின், அவ்வாறுரைத்தற்கு ''ஐயெனெடிலின் சினை'' என்றிருத்தல் வேண்டும். அவ்வாறின்மையின் இதன் சினையென உரைக்கலாகாதென்பது.

அற்றேல் மொழிக் குறுப்பாதல்பற்றிச் சினையெனவெழுத்தைக் கூறினாரென்றாலென்னையெனின் ''ஐ ஔ வென்னுமாயீரெழுத்திற்'' கெனவும் ''நெட்டெழுத்திம்பரொத்த குற்றெழுத்தே'' எனவும் ''வல்லெழுத் தென்ப க ச ட த ப ற'' எனவும் இவ்வாறே யாண்டும் எழுத்தென்றே ஆசிரியர் ஆளுவராதலின் அதுவும் பொருந்தாதென்பது.

இன்னும் ஆசிரியர் தொல்காப்பியர் ''இகரயகரமிறுதிவிரவும்'' என இறுதிப்போலி கூறியதனானே இது முதற்கண் வரும்போலியெழுத்தென்பது கொள்ளவைத்தமையானும்,

இது சந்தியக்கர முணர்த்தியது அன்மை தெளியலாம். ''இகர யகர மிறுதி விரவும்'' மென்ற சூத்திரம் இறுதிப் போலி யென்றல் பொருந்தாது. அது; ''அகரத்திம்பர் யகரப் புள்ளியு'' மென்புழி இம்பர் என்பது பின் எனப் பொருள்படுமேனும், காலம் பற்றிவந்த பின்னோ இடம் பற்றிவந்த பின்னோ என்பது தெளியப்படாமையின் அத னை விளக்கிய வந்ததென்றா லென்னையெனின்

''நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்'' (39) என்றும்

''நெட்டெழுத் திம்ப ரொத்த குற்றெழுத்தே'' (41) என்றும்

''நெட்டெழுத் திம்பர்'' (199)என்றும்

''குற்றெழுத் திம்பரும்'' (297)என்றும்

ஆசிரியர் கூறிய இடங்களிலெல்லாம் அவ்வாறு விளக்கல் வேண்டுமென்பதுபட்டு ஆசிரியர்மேற் குற்றம் பற்றுமாத லானும், ஆசிரியர் இம்பர் என்று கூறிய இடங்களிலெல்-லாம் அச்சொல் காலம்பற்றிய பின்னாகவே பொருள் படு தலானும் அது பொருந்தாதென்பது.

இனி, ''அகரத்திம்பர்.....தோன்றும்'' என்னுஞ் சூத்திரத்து வரும்''மெய் பெறத்தோன்றும்''என்பதனால் அகர யகரம் போல, அகர இகரம் ஐயின் வடிவு நன்கு புலப் படவாராதென்பது பெறப்படுதலினாலும், செய்யுட்-கட்பயின்று வாராமையானும், நச்சினார்க்கினியர் ''அகர

விகரமைகார மாகும்'' ''அகர வுகர மௌகார மாகும்'' என்னும் இரண்டு சூத்திரவுரையின் கண்ணும்,அது கொள்ளற்க என விலக்கி,செய்யுட்பயின்றுவருதலானே.''அகரத் திம்பர்.....நோன்றும்'' என்பதனுரையின்கண் ''அது கொள்ளற்க'' என விலக்காது பின் இறுதிப் போலி கூறும் ''இகர யகர மிறுதி விரவும்''என்னுஞ் சூத்திர வுரையின் கண் செய்யுள் வழக்கன்மையின், அது கொள்ளற்க என விலக்கினாரெனினும், ஆசிரியர் கூறியதனால் அவை யக் காலத்துப் போலியெழுத்தாகப் பயின்று வந்தன வென்பதே துணிபாம். இனி, அகர இகரம் அகர உகரம் இகரம்- என்னும் மூன்றும், முறையே ஐ ஔ ய் என்னும் மூன்றற்கும் போலியாக இக்காலத்துப் பயின்று வாராமையின் அவற்றை நச்சினார்க்கினியர் விலக்கினாரெனினு மமையும் பிரயோக விவேகநூலார்க்கு மிதுவே கடுத்தாதல், ''அஇ, அஉ, என்பனவும், இக்காலத்துப் பயன்படாமலே நின்றனவெனினு மமையும்'' எனவுரைத்தமையாறினக.

இனி, உரையாசிரியர்''அகர விகர மைகார மாகும்'' என்பதன் உரையின் கண் மாத்திரம் விலக்கி ஏனையவற்றினுரையிற் கூறாது ஒன்றற்குக் கூறியதேஏனையவற்றிற்கும் அமையுமென விடுத்தாராதலின், அவ்வாறே நச்சினார்க்கினியரும் விடுத்தாரெனல் அமையுமெனின், அங்ஙனமன்று; ''உரையாசிரியர் அது கொள்ளற்க என விலக்காமை அவருரையிற் காண்க எனப் பிரயோக விவேக நூலார் கூறினமையானே. உரையாசிரியர் அது கொள்ளற்கவெனக் கூறினாரல்லர் என்பது பெறப்படுதலினாலும்,நச்சினார்க்கினியர் முன்னும் பின்னும் விலக்கினமையாலும், அவர் அகர யகரத்தையும் அகர வகரத்தையும் செய்யுட்கண் வழங்கல் பற்றி விலக்கா தொழிந்தளர் என்பதே துணியாம். அங்ஙனனேல், உரையாசிரியருரையில் ஓரிடத்தில் காணப்படுதல் என்னையெனின், அது எழுதுவோரால் இடைச் செருகலாய் நேர்ந்த வழுவாம்.

மேலும்,முதியோர் இலர் ஐயன் என்பதற்குஅய்யன் என்றும், ஔவை யென்பதற்கு அவ்வை என்றும் எழுது தலை யாம் இக்காலத்துக் கண்கூடாகக் கண்டிருக்கின் றோம். ஆதலின் அக்காலத்தும் அவ்வாறு எழுதி வழங்கி னமைகண்டு ஆசிரியர்தொல்காப்பியர் சூத்திரஞ் செய்தார் என்பதே துணிபாம். அவர் வழி யாத்தமையின் நன்னூ-லாரும் அவ்வாறே செய்தார். நன்னூலார்வடமொழி மதத் தை மேற்கொண்டாராதலின்,இச்சூத்திரத்தையும்அவ்வா றே கொண்டு கூறினார் என்றால் என்னையெனின், அவ் வாறு கொண்டிலரென்பது யாங்கூறிய சூத்திரப் பொரு-ளானும் இது சந்தியக்கரமுணர்த்தியதெனப் பிறர் கூறுங் கூற்றையாம் மறுத்துரைத்தமையானும் இனிதுணரலா மாதலின் அது பொருந்தாதென்பது.

இனி வடமொழியில் வரும் ஏ.ஓ.ஐ ஔ. என்னும் எழுத்துக்களையும் சந்தியக்கர மென்று கூறுவதினும், அவை போல அகர விகர முதலிய எழுத்துக்கள் சேர்ந்து ஒலிக்கு மென்பதே பொருத்தம் போலும். எங்ஙனமெனில் சந்தியிலே(புணர்ச்சியிலே)பதத்தினிறுதியில் வரும் அகரத் திற்கும் பத முதலில் வரும் இகரத்திற்கும் அவ்விரண்டன் பிறப்பிடத்தையும் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ என்னும் எழுத்து ஆதேசமாக வருதலின் அவ்விரண்ட னொலியும் அமைந்தமை பெறப்படுமாதலின், ஏனையவு மிவ்வாறேயமைந்தமை வடமொழிச் சந்தியிலக்கணம் நோக்கியுணர்க.அன்றிஇரண்டெழுத்துக் கூடிய வெனில் அவற்றைத் தனி எழுத்தாக வைத்து மகேசுரர் சூத்திரஞ் செய்யார்.

அவ்வாறே தமிழிலக்கண நூலாசிரியர்களாகிய தொல்காப்பியர் முதலியோரும் ஐ ஔ என்பவைகள் சந்தியெழுத்தாயின் அவற்றைத் தனியெழுத்தாக வைத்

துச் சூத்திரஞ்செய்யார். ஆதலின், ஐ ஔ என்பவை போல், அஇ, அய்: அஉ. அவ்; என்பவை ஒலிக்குமென்ப தே அவ்வாசிரியர்கள்கருத்தென்பதுதுணிவாதல் காண்க.

["செந்தமிழ்" தொகுதி 22 பகுதி 3]

இவ்வெழுத்ததிகார வுரை பயில்வார்க்குபயோகமாகும் பொருட்டுச்செந்தமிழினின்றுவந்தனவாகியஇவற்றினைப் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப்பட்டது. நச்சினார்க்கினியருடையகொள்கையுமிவற்றுட்போதரலின் இன்றியமையாமை கருதியும் இணைக்கப் பெற்றது.

வாழ்க தமிழகம்



திருச்சிற்றம்பலம்

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்,

நூற்பா முதற்குறிப்பகராதி.

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	அகரம்	
	அ, ஆ, உ, ஊ, ...	173
	அ ஆ வென்னு ...	181
	அ இ உ அம் ...	31
	அஃறிணை விரவுப்பெயர் ...	155
	அகமென் கிளவிக்குக் ...	315
	அகர ஆகாரம் ...	311
	அகர இகர ...	54
	அகர உகர ...	55
	அகரத் திம்பர் ...	56
10	அகர விறுதிப் ...	203
	அக்கென் சாரியை ...	270
	அடையொடு தோன்றினு ...	318
	அணரி நுனிநா ...	94
	அண்ணஞ் சேர்ந்த ...	99
	அண்ண நண்ணிய ...	93
	அதனிலை வுயிர்க்கும் ...	479
	அத்தவண் வரினும் ...	219
	அத்திடை வரூஉங் ...	168
	அத்தி னகர ...	125
20	அத்தே வற்றே ...	133
	அத்தொடு சிவணு ...	317

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	அந்நான் மொழியும்	429
	அப்பெயர் மெய்யொழித் ...	350
	அம்மி னிறுதி ...	129
	அம்மூ வாறும் ...	22
	அரையளவு குறுகன் ...	13
	அரையென வரூஉம் ...	165
	அல்லது மருங்கிற் ...	326
	அல்லது கிளப்பி னியற்கை ...	321
30	அல்லது மெனும் ...	322
	அல்லது—விறுதி	408
	அல்லது—கிளப்பி னெல்லா ...	425
	அல்வழி யெல்லா மியல் ...	361
	அல்வழியெல்லா முற ...	368
	அல்வழியெல்லா முற ...	398
	அல்வழியெல்லா மெல் ...	314
	அவற்றுள் அ ஆ ஆயிரண் ...	85
	அவற்றுள் அ இ உ ...	3
	அவற்றுள் இகர விறுபெயர் ...	154
40	அவற்றுள் இன்னினிகர ...	120
	அவற்றுள் ஈறொற்றுத் ...	407
	அவற்றுள் கரமுங்கானு ...	135
	அவற்றுள் ணனஃகான் ...	26
	அவற்றுள் நிறுத்தசொல்லி ...	108
	அவற்றுள் மெய்யீறெல்லாம் ...	104
	அவற்றுள் மெல்லெழுத் ...	145
	அவற்றுள் ரகார ழகாரங் ...	49
	அவற்றுள் லளஃகான் ...	24
	அவற்றுவழி மருங்கிற் ...	118
50	அவைதாங் குற்றியலிகரங் ...	2
	அவைதாம் இயற்கைய ...	197

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	அவைதாம் - இன்னே ...	119
	அவைதான் முன்னப் ...	141
	அவைதாம் - மெய் றிறிதாதன் ...	109
	அவையூர் பத்தினும் ...	473
	அவ்வழி - பன்னீருயிருந ...	84
	அவ்வா றெழுத்து ...	62
	அவ்விய னிலையு ...	12
	அழனெ னிறுதிகெட ...	354
60	அழனே புழனே ...	193
	அளந்தறி கிளவியு ...	446
	அளபிறந் துயிர்த்தலு ...	33
	அளவாகு மொழிமுத ...	121
	அளவிற்கு நிறையிற்கு ...	170
	அளவு நிறையு மாயிய - குற் ...	474
	அளவு நிறையு மாயிய ...	477
	அளவு நிறையு மெண் ...	389
	அளவும் நிறையும் வேற் ...	319
	அன்றுவரு காலை ..	258
70	அன்ன வென்னு ...	210
	அன்னென் சாரியை ...	194

ஆகாரம்

	ஆ, ஈ, ஊ, ஏ, ஐ ...	4
	ஆ, ஈ, ஒ, எனு மூவுயிர் ...	64
	ஆ, ஏ, ஓ, அம் ...	32
	ஆகார விறுதி ...	221
	ஆடூஉ மகடூஉ ...	271
	ஆணும் பெண்ணும் ...	303

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	ஆண் மரக் கிளவி ...	304
	ஆதனும் பூதனுங் ...	348
80	ஆயிரக் கிளவி ...	464
	ஆயிரம் வரினு ...	435
	ஆயிரம் வரினே ...	476
	ஆயிரம் வருவழி ..	391
	ஆய்த நிலையலும் ...	399
	ஆரும் வெதிருஞ் ...	363
	ஆவயின் வல்லெழுத்து ...	301
	ஆவும் மாவும் ...	224
	ஆஹோ டல்லது ...	65
	ஆற னுருபி னகர ...	115
90	ஆறனு ருபினு ...	161
	ஆறன் மருங்கிற் ...	469
	ஆறென் கிளவி ...	458
	ஆனி னகரமு ...	124
	ஆனொற் றகரமொடு ...	232
	ஆன் முன் வருஉ ...	233
	இகரம்	
	இ,ஈ,எஏ,ஐயென ...	86
	இகர யகர ...	58
	இகர விறுதிப் ...	235
	இக்கி னிகர ...	126
100	இடம் வரை கிளவி ...	251
	இடைநிலை ரகர ...	439
	இடைப்படிற் குறுகு ...	37
	இடையெழுத் தென்ப ...	21
	இடை யொற்றுத் ...	413
	இதழிலைந்து பிறக்கும் ...	97

எழுத்ததிகாரம்

	நூற்பா எழுத்து நிரல்	நூற்பா எண்
	இயற்பெயர் முன்னர்	347
	இரண்டுமுத லொன்பான் ...	480
	இராவென் கிளவிக் ...	227
	இருதிசை புணரி ...	431
110	இருளென் கிளவி ...	402
	இலமென் கிளவிக்கு ...	316
	இல்ல மரப்பெயர்	313
	இல்லென் கிளவி ...	372
	இல்லொடு கிளப்பி ...	293
	இறாஅற் றோற்ற ...	343
	இனியணி யென்னுங் ...	236
	இன்றி யென்னும் ...	237
	இன்னிடை வருஉம் ...	186
	இன்னென வருஉம் ...	131
	ஈகாரம்	
120	ஈகார விறுதி ...	249
	ஈமுங் கம்மு ...	328
	ஈரெழுத்து மொழியு முயிர் ...	411
	ஈரெழுத்து மொழியும்வல் ...	417
	ஈரெழுத் தொருமொழி ...	406
	ஈறியன் மருங்கினிவை ...	171
	ஈறியன் மருங்கினு ...	39
	உகரம்	
	உ,ஊ,ஒ,ஓ வென்னு ...	63
	உ,ஊ,ஒ,ஓ,ஔவென ...	87
	உ,ஊ,கார நவவொடு ...	74
130	உகர மொடு புணரும் ...	163
	உகர விறுதி ...	254

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	உச்சகார மிரு ...	75
	உச்ச காரமொடு ..	79
	உட்பெறு புள்ளி ...	14
	உணரக் கூறிய ...	405
	உண்டென் கிளவி ...	430
	உதிமரக் கிளவி ...	243
	உந்தி முதலா ...	83
	உப்ப காரமொடு ...	80
140	உப்ப கார மொன்றென	76
	உம்மை யெஞ்சிய ...	223
	உயர்திணைப் பெயரே ...	117
	உயர்திணை யாயினம்மிடை ...	190
	உயர்திணை யாயி னுருபிய ...	324
	உயிரிறு சொன்முனுயிர் ...	107
	உயிரீறாகிய முன்னிலைக்	151
	உயரீறாகிய வுயர்திணைப் ...	153
	உயிரும் புள்ளியு மிறுதியாகி ...	164
	உயிரும் புள்ளியு மிறுதியாகி ...	482
150	உயிர் ஒள வெஞ்சிய ...	69
	உயிர்முன் வரினு மாயிய ...	394
	உயிர் முன் வரினு மாயிய ...	207
	உயிர் மெய் யல்லன ...	60
	உயிர் மெய் யீறு ...	106
	உரிவரு காலை ...	240
	உருபிய னிலையு ...	294
	உருவினு மிசையினு ...	40
	உரைப் பொருட் கிளவி ...	212
	ஊகாரம்	
	ஊகார விறுதி ...	264
160	ஊவெ னொருபெயர் ...	269

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	எகாரம்	
	எ—என வருமுயிர்	... 71
	எகர வொகரத்	... 16
	எகர வொகரம்	... 272
	ஏகின்மர மாயி	... 336
	எஞ்சிய வெல்லா	... 77
	எட்ட னொற்றே	... 444
	எண்ணி னிறுதி	... 198
	எண்ணுப் பெயர்க் கிளவி	 419
	எப்பெயர் முன்னரும்	... 128
170	எருவுஞ் செருவும்	... 260
	எல்லா மென்னு	... 189
	எல்லா மொழிக்கு	... 140
	எல்லாரு மென்னும்	... 191
	எல்லா வெழுத்தும்	... 102
	எழுத்தெனப் படுப	... 1
	எழுத்தோ ரன்ன	.. 141
	ஏகாரம்	
	ஏ, ஓ எனுமுயிர்	... 73
	ஏகார விறுதிக்	... 274
	ஏயெ னிறுதிக்	... 277
180	ஏழ னுருபிற்குத்	... 201
	ஏழென் கிளவி	... 388
	ஏனவை புணரி	... 181
	ஏனவை வரினே	... 256
	ஏனைப் புளிப் பெயர்	... 245
	ஏனைமுன் வரினே	... 424
	ஏனையெகினே	... 337

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பாஎண்
	ஏனை வகரந்	... 382
	ஏனை வகர மின்னொடு	... 184
	ஐகாரம்	
	ஐயொடு குஇன்	... 132
190	ஐயென வென்னு	... 63
	ஐகார ஔகாரங்	... 137
	ஐகார விறுதிப்	... 280
	ஐந்த னொற்றே மகார	... 463
	ஐந்த னொற்றே முந்தை	... 454
	ஐந்த னொற்றே மெல்	.. 445
	ஐந்த னொற்றே யகார	... 468
	ஐந்து மூன்று	... 451
	ஐயம் பல்லென	... 393
	ஐயின் முன்னரு	... 127
	ஒகாரம்	
200	ஒடுமரக் கிளவி	... 482
	ஒவ்வு மற்றே	... 72
	ஒழிந்தத னிலையு	... 272
	ஒற்றிடை மானமிகா	... 412
	ஒற்றுநிலை திரியா	... 418
	ஒற்றுமிகு தகரவொடு	... 344
	ஒன்பா னிறுதி—மரபே	... 470
	ஒன்பா னிறுதி—மொழி	... 459
	ஒன்பா னொகர மிசைத்	... 445
	ஒன்பான் முதனிலை	... 463
210	ஒன்றுமுத லாகப்	... 119
	ஒன்றுமுத லாக வெட்ட	... 433
	ஒன்றுமுத லாகிய	... 475
	ஒன்றுமுத லொன்பான்	... 457

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	ஓகாரம்	
	ஓகார விறுதிக் கொன்னே	... 180
	ஓகார விறுதி யேகார	... 289
	ஓரள பாகு மிடனுமா	... 57
	ஓரெழுத் தொருமொழி	... 45
	ஔகாரம்	
	ஔகார விறுதிப்	... 295
	ஔகார விறுவாய்ப்	... 8
220	ஔவென வருஉம்	... 152
	ககரம்	
	ககார ஙகார	... 89
	க ச த ப முதலிய	... 143
	கசதப முதன்மொழி	... 449
	கண்ணிமை நொடியென	... 7
	கதந பம வெனு	... 61
	கவவோ டியையி	... 70
	கா	
	காரமுங் கரமுங்	... 134
	கி	
	கிளந்த வல்ல	... 483
	கிளைப்பெய ரெல்லாங் கிளை	... 338
230	கிளைப்பெயரெல்லாங் கொ	... 307
	கீ	
	கீழென் கிளவி	... 395
	கு	
	குமிழென் கிளவி	 386
	குயினென் கிளவி	... 335

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	குறியத னிறுதிச்	.. 234
	குறியதன் முன்னரு	... 226
	குறியதன் முன்ன	... 38
	குறுமையு நெடுமையு	 50
	குறையென் கிளவி	... 116
	குற்றியலிகர	... 34
240	குற்றிய லுகரக்கின்னே	... 167
	குற்றிய லுகரத்திறுதி	 195
	குற்றியலுகர முறைப்	... 67
	குற்றியலுகரமு மற்	... 105
	குற்றெழுத் திம்பரு	.. 267
	குற்றெழுத் தைதந்து	... 44
	குன்றிசை மொழியி	... 41
	கொ	
	கொடிமுன் வரினே	... 285
	ங	
	ங ஞ ண நமன வெனும்	... 25
	ச	
	சகரக் கிளவியு	... 62
250	சகார ஞகார	... 90
	சா	
	சாரென் கிளவி	... 364
	சார்ந்துவரி னல்லது	... 101
	சாவ வென்னுஞ்	... 209
	சி	
	சிறப்பொடு வருவழி	... 359

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	சு	
	சுட்டி னியற்கை ...	238
	சுட்டின் முன்னரு ...	255
	சுட்டின் முன்னர் ...	209
	சுட்டுச்சினை நீடிய ...	127
	சுட்டுமுத லாகிய வகர ...	378
260	சுட்டுமுத லாகிய விகர ...	159
	சுட்டுமுத லாகிய வையெ ...	177
	சுட்டுமுத லிறுதி யியல் ...	257
	சுட்டுமுத லிறுதி யுருபிய ...	263
	சுட்டுமுத லிறுதி யுருபிய ...	281
	சுட்டுமுத லுகர ...	176
	சுட்டுமுதல் வகர ...	183
	சுட்டுமுதல் வயினு ...	334
	செ	
	செய்யா வென்னும் ...	222
	செய்யுண் மருங்கின் ...	288
270	செய்யு ளிறுதிப் ...	51
	சே	
	சேவென் மரப்பெய ...	278
	ஞ	
	ஞகாரை யொற்றிய ...	296
	ஞணநம னயரல ...	78
	ஞநம யவவெனு முத ...	144
	ஞநமவ வியையினு ...	297

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	ஞநமவ வென்னும்	... 27
	ஞநவென் புள்ளிக்	... 132
	ட	
	டகார ணகார	... 91
	டறலள வென்னும்	... 23
	ண	
280	ணகார விறுதி	... 302
	ணளவென் புள்ளி முன்டண	... 150
	ணனவென் புள்ளி முன்யா	... 146
	த	
	தகரம் வருவழி	... 369
	தத்தந் திரிபே	... 38
	தமிழென் கிளவியு	... 385
	தம்மியல் கிளப்பி	... 47
	தாநா மென்னு	... 188
	தாயென் கிளவி	... 358
	தாழென் கிளவி	... 384
290	தானும் பேனுங்	... 351
	தான்யா னெனும் பெயர்	.. 352
	தான்யா னென்னும்	... 192
	தி	
	திங்கண் முன்வரின்	... 248
	திங்களு நாளு	... 286
	திசிபு வேறு கிளப்பி	.. 432
	தே	
	தேற்ற வெகரமுஞ்	 273
	தேனென் கிளவி	... 340

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	தொ	
	தொடர லிறுதி ...	214
	தொழிற் பெய ரெல்லாந் ...	306
300	தொழிற் பெய ரெல்லாந் ...	327
	தொழிற் பெய ரெல்லாந் ...	376
	தொழிற் பெய ரெல்லாந் ...	401
	ந	
	நகர விறுதியு ...	298
	நமவ வென்னு ...	450
	நா	
	நாட்பெயர்க் கிளவி ...	331
	நாண் முற் றோன்றுந் ...	247
	நாயும் பலகையும் ...	374
	நாவிளிம்பு வீங்கி ...	96
	நான்க னொற்றே லகார ...	453
310	நான்க னொற்றே லகார ...	467
	நான்க னொற்றே றகார ...	442
	நான்கு மைந்து ...	462
	நி	
	நிலா வென் கிளவி ...	228
	நிறுத்த சொல்லுங் ...	110
	நிறையு மளவும் ...	436
	நீ	
	நீட வருதல் ...	208
	நீட்டம் வேண்டின் ...	6
	நீயெ னொருபெய ருருபிய ...	253
	நீயெ னொரு பெயர் ...	179
320	நீயென் பெயரு ...	250

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	நு	
	நும்மெ னிறுதி யியற்கை	... 187
	நும்மெனிறுதியு	... 162
	நும்மெ னொருபெயர்	... 325
	நுனிநா வணரி	... 95
	நூ	
	நூறாயிரமுன்	... 471
	நூறுமுன் வரினுங்	... 460
	நூறூர்ந்து வருஉம்	 392
	நூறென் கிளவி	... 472
	நெ	
	நெடியத-யியல்பா	... 400
330	நெடியத-யிலப்புமா	... 370
	நெடியதன் முன்ன	... 160
	நெட்டெழுத் திம்பருந்	... 36
	நெட்டெழுத் திம்பரொற்	... 196
	நெட்டெழுத் தேழே	... 43
	நெல்லுஞ் சொல்லுங்	... 371
	ப	
	படர்க்கைப் பெயரு	... 320
	பதக்குமுன் வரினே	... 239
	பத்த னொற்றுக்கெட	... 434
	பத்தென் கிளவி	... 390
340	பலறிதி சொன்முன்	... 172
	பலவற் றிறுதி நீடு	... 213
	பலவற் றிறுதி யுருபிய	... 220
	பல்லவை நுதலிய	... 174

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	பல்லித ழியைய	98
	பனியென வருஉங்	241
	பனையின் முன்ன	284
	பனையு மரையு	283
	பனையெனளவுங்	169
	பன்னீருயிரு	59
	பா	
350	பாழென்கிளவி	387
	பீ	
	பீரென் கிளவி	365
	பு	
	புணரிய னிலையிடை	35
	புளிமரக் கிளவிக்	244
	புள்ளி யில்லா	17
	புள்ளி யிறுதியும்-சொல்	202
	புள்ளியிறுதியும்-வல்	156
	புள்ளியீற்று முன்	138
	புன்னும் வன்னும்	403
	பூ	
	பூல்வே லென்றா	375
360	பூவெ னொருபெயர்	268
	பெ	
	பெண்டென் கிளவிக்	421
	பெயருந் தொழிலும்	132
	பெற்ற மாயின்	279
	பொ	
	பொன் னென் கிளவி	356

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பாஎண்
	ம	
	ஃகான்புள்ளி முனத்தே	... 185
	ஃகான்புள்ளிமுன் வல்	... 28
	மகப்பெயர்க் கிளவிக்	... 218
	மகரத் தொடர்மொழி	... 82
	மகர விறுதிவேற்	... 310
370	மகன்வினை கிளப்பின்	... 359
	மக்களென்னும்	... 404
	மரப்பெயர்க்—கம்	... 415
	மரப்பெயர்க் கிளவிமெல்	... 217
	மருவின் றொகுதி	... 111
	மழையென் கிளவி	... 287
	மன்னுஞ் சின்னு	... 333
	மா	
	மாமரக் கிளவியு	... 231
	மாறுகோளெ-மெண்	... 275
	மாறுகொளெ-மைய	... 290
	மி	
380	மின்னும் பின்னும்	... 345
	மீ	
	மீனென் கிளவி	... 339
	மு	
	முதலா வேன	... 66
	முதலீ ரெண்ணி னொற்யு	... 438
	முதலீரெண்ணின் முன்	... 455
	முதனிலை நீடினு	... 465

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	முதனிலை யெண்ணின்முன் ...	478
	முரணென் றொழிற் ...	309
	முற்றிய லுகரமொடு ...	68
	முன்னுயிர் வருமிடத் ..	423
390	முன்னென் கிளவி ..	355
	மூ	
	மூவள பிசைத்த ...	5
	மூன்றனொற்றே நகார ..	461
	மூன்றனொற்றே பகார ..	441
	மூன்றனொற்றே வகரம் ..	452
	மூன்றனொற்றே வகார ...	465
	மூன்றனொற்றே வந்த ...	447
	மூன்றன் முதனிலை ..	457
	மூன்றுதலை யிட்ட ..	103
	மூன்றுமாறு ...	440
400	மூன்றும் நான்கு ..	456
	மெ	
	மெய்ந்நிலை சுட்டி ...	30
	மெய்யினளவே ...	11
	மெய்யி னியக்கம் ...	46
	மெய்யி னியற்கை ...	15
	மெய்யின் வழிய ...	18
	மெய்யுயிர் நீங்கிற் ...	139
	மெய்யோடியையினும் ...	10
	மெல்லெழுத்தாறும் ...	100
	மெல்லெழுத் தியையி ...	342
410	மெல்லெழுத் தியையி	367
	மெல்லெழுத் தியையினவ் ...	380

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	மெல்லெழுத் தியையி	... 397
	மெல்லெழுத்து மிகினும்	... 329
	மெல்லெழுத்து மிகினும்	... 341
	மெல்லெழுத்து மிகுவழி	... 157
	மெல்லெழுத்துறழ-ருளவே	... 360
	மெல்லெழுத்துறழும்-வழக்	... 312
	மெல்லெழுத் தென்ப	... 20
	மெல்லொற்று வலியா	... 416
420	மென்மையு மிடைமையும்	... 130
	மொ	
	மொழிப்படுத் திசைப்பினுந்	... 53
	மொழிமுதலாகு	... 147
	ய	
	யகரம் வருவழி	... 410
	யகரவிறுதி வேற்	... 357
	யரழவென்னும் புள்ளி	... 29
	யரழவென்னும் மூன்று	... 48
	யவமுன் வரினே	... 206
	யா	
	யாதெ னிறுதியுஞ்—னான	... 200
	யாதெனிறுதி-நிலையும்	... 422
430	யாமரக் கிளவியும்	... 229
	யாவினா மொழியே	... 428
	யாவென் வினாவி	... 178
	யாவென் வினாவு	... 175
	ர	
	ரகார விறுதி	... 362

எழுத்ததிகாரம்

நூற்பா	எழுத்து நிரல்	நூற்பா எண்
	ல	
	லகார விறுதி ...	366
	லனவென வருஉம் ...	149
	லனவென வருஉம் ...	481
	வ	
	வஃகான் மெய்கெடச் ...	130
	வகரக்கிளவி ...	81
440	வகார மிசையு ...	330
	வண்டும் பெண்டு ...	421
	வரன்முறை மூன்றுங் ...	136
	வல்லென் கிளவி ...	373
	வல்லெழுத்தியற்கை ...	215
	வல்லெழுத்து—மில்லை ...	230
	வல்லெழுத்துமிகினும்—வழ ...	246
	வல்லெழுத்து முதலிய ...	114
	வல்லெழுத் தென்ப ...	19
	வல்லொற்றுத் தொடர் ...	409
450	வல்லொற்றுத்-மிகுமே ...	426
	வளியென வருஉம் ...	242
	வன்றொடர் மொழியு ...	414
	வா	
	வாழிய வென்னுஞ் ...	211
	வி	
	விசைமரக் கிளவியு ...	282
	விண்ணென வருஉங் ...	305

நூற்பா	எழுத்துநிரல்	நூற்பா எண்
	வினையெஞ்சு கிளவிக்கு ...	265
	வினையெஞ்சு கிளவியு ...	204
	வெ	
	வெயிலென் கிளவி ...	377
	வெரிநெ னிறுதி ...	300
	வே	
460	வேற்றுமை குறித்த ...	112
	வேற்றுமைக் கண் ...	216
	வேற்றுமைக் கண் ...	225
	வேற்றுமைக் கண் ...	252
	வேற்றுமைக் கண்	259
	வேற்றுமைக் கண் ..	266
	வேற்றுமைக் கண் ...	276
	வேற்றுமைக் கண்-வல் ...	148
	வேற்றுமைக் கண்-னான ...	292
	வேற்றுமைக்குக் கெட ...	299
